T.D.R.C 2415
RR.no 81-IV-1885

DIGITIZED

O-, IFKAR:g
M88
116583

ஸ்ரீ

ஸ்ரீராமாயம.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீமந்நிகமாந்தகுரவேநம:

ஸ்ரீமத்கம்பராமாயணம்

அருங்கவிவிளக்கம்.

இது

கவித்தருமம் துரைசாமிமூப்பனாரால்

செய்யப்பட்டு

சென்னை:

மிமோரியல் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சர்வதாரி ஹக்கு ஆவணி மீ.

Copy-right Registered.

ஸ்ரீ

ஸ்ரீராமமயம்.

அறிவிப்பு.

இவ்வரைகாரால்செய்த புத்தகங்கள்.

				ரூபா.	அணா.
ஸ்ரீ அபிதக்ஷிமாதகரமான்மியம்.	...	...	...	0	0
ஜானகிபரிணயம்.	...	...	...	0	0
பிரசந்நராகவம் தபாம்கூலியுட்பட	...	...	...	0	6
அபிசசந்தேசம்	சை.	...	...	0	3
ஸ்ரீகருடபுராணவசனம்	சை.	...	...	0	13
ஸ்ரீமத்கயாமான்மியம்	சை.	...	...	0	2
கங்காயாத்ராப்ரபவம்	சை.	...	...	1	
ஸ்ரீமகாபாரதச்சுருக்கம்	சை.	...	...	0	13
ஸ்ரீமத்கம்பராமாயண அருங்கவிவிளக்கம்	சை.	...	...	3	3

இவற்றில் முன்னுள்ள விரண்டும் கிடைக்கா. எனதுபுத்தகங்கள் வேண்டுவோர் சென்னை எஸ் பிளேஸ்டோ ஏ. ஐயாத்துரை ஐயங்கார் அவர்கள் கம்பேனியிலும், திண்டிவனம் காலாகர-அமிர்தநாராயணசாஸ்திரிகள்ளையவர்களிடத்திலும், கும்பகோணம் டவுன் ஐஸ்கூல் பண்டிதாசிரியர் திருவேங்கடாத்தயங்காரவர்களிடத்திலும், தஞ்சாவூர்-சகாராயகர்வித்தி 107-வது. கெ. கிருஷ்ணத்தில் முகாசா குமாஸ்தா பஞ்சாபிகேசாயரவர்களிடத்திலும், காகபட்டினம் அக்ரஹாரத்தில் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் சதாசிவ விஞ்சராயரவர்களிடத்திலும், திருச்சிராப்பள்ளியில் நிப்பன் அச்சாபீஸ் புரோப்ரைடர் T. V. வேங்கடாசலுகாருடுஅவர்களிடத்திலும், ஸ்ரீரங்கம்-மேலூர்த்தபாலாபீஸ் நம்பர் 81-வது. கெ. கிருஷ்ணத்தில் ஸ்ரீனிவாச ராகவையங்கார் அவர்களிடத்திலும், திருநெல்வேலி டில்ஸ்திரிக்ட்டு கோர்ட்டு 2-வது. கிளார்க்கு ரங்கசாமிபிள்ளையவர்களிடத்திலும், அடியிற் கையொப்பமிட்டிருக்கும் என்னிடத்திலும் பெற்றுக்கொள்க.

81
4886

என்னிடத்தில் ஒருசேர ரூ - புத்தகம் வாங்குவோர்க்கு ஒன்று தாவுகொடுக்கப்படும்.

ஸ்ரீமத் கம்பராமாயணத்தில் ஆயிரத்துச் சொச்சம் கவிகள் கொஞ்சம் லேசாகவும் மற்ற ஒன்பதினாயிரங்கவிகள்கடினமாகவும் இருக்கின்றமையாலும் முன் அச்சிட்டிருக்கின்ற பிரதியில் அச்சுப்பிழைகள் இருக்கின்றமையாலும் கையெழுத்துச்சுத்தப் பிரதியைக்கொண்டு பரிசோதித்து இப்போதெழுதியிருக்கின்றபடி சிலபாட்டுக்களுக்கு மூலமைக்கும் சிலபாட்டுக்களுக்குக் கடினபாகத்திற்குமாக மேற்படி ஒன்பதினாயிரத்திற்கும் உரை யெழுதி ஒழித்த ஆயிரத்துச்சொச்சம் செய்யுட்களோடு பதித்து மூன்று சம்புடமாக பயிண்டுசெய்து வெளிப்படுத்தவும் வடமொழி ஸ்ரீமகாபாரதம் கையெழுத்துச் சுத்தப்பிரதியன்றி இப்போதச்சிட்டிருப்பது அச்சிட்டவரது கொள்கைக்கிணங்க அசோகலோசங்கள் சேர்த்துப்பட்டும் எடுக்கப்பட்டும் திருத்தப்பட்டும் இருக்கின்றமையாலும் தமிழிலுள்ளபாரதங்களில் ஒன்றும் வடமொழிக்குச் சரியாய் மொழிபெயர்க்கப்படாமை விருப்பதன் நிமித்தம் பலராலும் செய்யுட்கள் திருத்தப்பட்டிருப்பனவாலும் தெய்வத்தன்மைபொருந்திய சங்கப்புலவராகிய பெருந்தேவனார் பொய்யாமொழியாராணைமையின் வடமொழிச்சுத்தப் பிரதிக்கிணங்கவே அவர் பாடியிருப்பராகலாலும் அவர் பாரதத்தைத் தக்க புலவர்கள் முன்னிலையில் பலபிரதிகளைக்கொண்டு பரிசோதித்து அச்சிட்டு வெளிப்படுத்தவும் இவ்வரைகாரருக்கு அபிப்பிராயமிருக்கின்றது. இல்விரண்டனுக்கும் மிகுதியாய்ப் பொருள்வேண்டியிருப்பதால் மேற்குறித்த ஒவ்வொன்றிற்கும்-உரு6-கையொப்பமும் கையொப்பம் ஒன்றிற்கு முன்னதாகக் கொடுக்கவேண்டியதாய் நான் பத்திரிகைமூலமாய்த் தெரிவிக்கும்தொகையும் கிடைக்குமாயின் அவ்விரண்டு வேலையும் தொடங்கப்படும். கவித்தலத்தில் போஸ்டாபீசிருக்கின்றது.

சர்வகாரிய ஆவணிமீ
கவித்தலம்.

இவனம்
ப. வீரவுதாதாராவ்.

ஸ்ரீ

ஸ்ரீமச்சிகமார்த்தகுரவேநம:

கவிச்சக்கிரவர்த்தி

கம்பநாட்டாழ்வார் சரித்திரச்சுருக்கம்.

—:o:—

கம்பநாட்டையாண்ட வொரு குறுநிலமன்னன் போர்க்களத்தி லுயிர்மாயக் கருவுற்றிருந்தவன்மேவி மாற்றாருக்கஞ்சி மாறுவேடம்பூண்டு திருவழுந்தூரில் வந்தோரோச்சன் மனையுட்புகும் தாங்காள் மகனையுயிர்த்தாள். உயிர்க்க வாங்குன்னாநிம்மகன் கம்பநாடுடையோனுகலின் கம்பனெனப் பெயரிட்டார். இதனை ஏளக்கியவன்றே, "சோணி சோழநாட்டுத் திருவழுந்தூருள் வாழ்வோன், காணக்கொடையரன் கம்பன் தமிழிலுற் கவிசெய்தானே" எனவும், "கம்பநாடன் கழறலியிற்கொள்வரம்" எனவும், "கம்பநாடுடையவள்ளல் கவிச்சக்கிரவர்த்தி பார்மேல்" என்னுங் கூறினாரிக்தோர்.

கம்பநாட்டாழ்வார் ஏழாட்டைப் பிராயத்தராகலு மவர் வரலாற்றை யுணர்ந்திருவெண்ணெய் நல்லூர்ச்சடையப்பிள்ளையவர்கள், தாயோடவரை யழைத்துத் தக்குமெம்பெருமைபோற்றித் தம்புதல்வர்களோடு கழகஞ்சென்று கல்விபயிலச்செய்தனர். செய்யுங் கம்பநாடர் கற்கு காளிலொருநாட்டம தரிநியதனினைப்புனத்தைக்காக்கவேண்டிய முறைகேர்க்கம்பர்செல்றப் புனத்தைச்சுற்றி நோக்கி யருவிலிருந்த காளிகோயிலைச்சார்க் தனிச்சையாப் பிராசாத்தமெவர்க்கு முண்மையாற்றுயின்ரூர். துயின்றூர்க்குக் காளிதேவி, குறினையொன்றுதினைப்புனத்தையழிப்பதாய்க் கனவுண்டாக்கக் கம்பநாடர் துண்ணென்றெழுந்து கிராமாதிபதியாகிய காளிங்கிராயன் பசுமாபுனத்தையழிப்பக்கண்டோட்டவு மதோடாமலழிக்கக் கம்பர் பாலப்பருவத்தரானமையி னழுதனர். அழுதார்க்குக் காளிதேவி யெதிர்த்தோன்றி யழாதை நின்னுவை நீட்டென்றவர் நாவிற் கலிமகள் பிசாக்கரத்தைப்பொறித்துமறைந்தாள். மறையக்கம்பநாடர்,

வாயத்த லயிரபுர மாகாளி யம்மேகேள்
காய்த்த தினைப்புனத்திற் காலைவைத்துச்—சாய்த்தக்
கதிரை மாளத்தின்ற காளிங்க னேமம்
குதிரை மாளக் கொண்டுபோ.

எனப் பாடி குதிரையைக் கொன்றார். பின்னர்க் காளிங்காய னின் மாளுக்கனொன்குதிரையைக் கொன்றனென்று முனிவ னென்றஞ்சிய கமதாகிரியருவப்பானன்காமடியை"குதிரைமீள க் கொன்றுவா"என்று மாற்றிப்பாடிப்பினையைப்பிழைப்பித்தனர். இதனைச் செவியேற்றச் சடையப்பர் கம்பராடரைப் புலியாச னென்றன்றே போற்றிவந்தோ மிவர் கவியரசனன்றியுந் தெய் வத்தன்மையும் பொருந்தி யிருக்கின்றனவென்றுவந்து முன் னிறு மதிகமாய் வழிபட்டுவந்தார். வாவே யக்காலத்தாக வீற் றிருந்த ராசேந்திர சோழன் கம்பராடாதுமகிமையைக்கேட்ட வரையழைத்துத் தனதவைத்தலைமைப்புலவராக நியமித்தான். பின்னர்க் குலோத்துங்க சோழ னும்மானென்ற முறைகொ ண்டு கம்பரைப் போற்றிவர, சடையப்பர் கம்பராடரைநோக்கி யிதிகாச சிரேட்டமாகிய ஸ்ரீமத் வான்மீகராமாயணத்தைத் தெவரீர் பாடியருளவேண்டுமெனப் பலகாலும் வேண்டினர். வேண்டினர்க்குக்கம்பர்நன்றென்றுகூறிக் காலகேட்டிருந்தார்.நீட் டிக்கச் சடையப்பர்சென்று குலோத்துங்க சோழனைப்பிரார்த்தி த்தார். பிரார்த்திக்க வச்சோழன், பெறுதற்கரிய * நான்கையும் பயக்குங் கல்விச்செல்வமுடையகம்பரை யாமென்செய்வோம். அவரைமாத்திரம் பாடச்சொல்லின்விரைவிற் பாடார்.அவரோ டின்னுஞ்சிலரையும் பாடச்சொல்லின்மற்றவர் பாடிமுடிக்குமு ன்றுமுடிக்கவேண்டுமெனப் பாடுவனெனச் சூழ்ந்து, கம்பராட ரையு மொட்டக்கூத்தர் முதலியோரையுமழைத்து ஸ்ரீமத்வான் மீகராமாயணத்தைத் தமிழாற் பாடுமினென்றான். அவரெல் லாரும் பாடவுங்கம்பராடர் பாடாதிருந்ததைச்சடையப்பிள்ளை யுணர்ந்து சோழனுக்கோத வவன் புலவரெல்லாரையுமழை த்து வினவினன். வினவ லவர் தாம்பாடிய வளவையுரைத் தார். உரைக்கக்குலோத்துங்கன் கம்பராடரைநோக்கியம்மானே நீரெம்மட்டிற் பாடினீரென்றான். என்றற்குக் கம்பர் யாஞ்சேது பந்தன்புடலிம்வரையிலும்பாடினேமெனச்சோழனிவர் பொய் த்தாரெனவுள்ளி யதனைச் சற்றேகூறுமென்றான்.எனவேயன்று காறும் பாடாதிருந்த கம்பராடர் மற்றப்புலவர்கள் பாடியதற் குத் தாமதிகமாய்ப் பாடியதாய் தாங் கூறியவாறு முன்னமே

* நான்காவன, புகழ், பொருள், கட்பு, அறன், எனவிவை.

பாடியிருந்தார் போன்றப் படலத்தைப் பாடிப் பொருள்கூறி னர். கூறவொட்டக்கூத்தர், "குமுதனிட்டகுலவரை" என்ற பாட்டிற் றமிதஞ்சான்றோர்செய்புளி லுள்ளதோ வுலகவழக்கி லுள்ளதோவென்று விளுவக் கம்பராட்டாழ்வார் கலிமகனைத் தியானித்தவ ளருள்பெற்று காணுமறியே னலருரும் பொய்கூறு வென்று கூறி யதுலகவழக்கிலுள்ளதென் றதனை யுணர்த்திய வெழுந்த சோழ னெட்டக்கூத்தர் முதலியோரோ டொருகா ளிரவின் கடையாமத்தில் விடிதற்குமுன் மருகிற்செல்லுங் கா லாங்கோயில்லத்தில் வேதமே தயிர்த்தாழியும் வேதாந்தமே தயிருஞ் சாத்திரமே மத்தும் கலிறு மிதிகாசபுராணங்களே சிறு குழந்தைகளுமாகக் காமகளோராய்ச்சியருக்கொடு தயிர்கடை யுங் காற்றுழியின்பாலெருங்கும் புதல்வர்களைத் தமிதந்தெளி க்கு மக்கா னெருங்கா நிலென்றான். ஒட்டக்கூத்த ரதுகேட் டில்விடத்தின் முன்பு விடில்லையே யிவ்வுரையுரைத்தாரென் றிவா னதனுட்புகச் சாசுவதிமாத்திரமே மறைந்தா ளவ்வி டம் மறைந்தது. மறைய வொட்டக்கூத்தர் கம்பராடரை நோக் கிச் சாரதாமூர்த்தியாகிய உம்மோ டியான்செய்வ தெனென் றது அறித்தார்.

பின்னர்ச் சின்னாளி லொட்டக்கூத்தர் முதலியோர் ஸ்ரீரா மாயணம்பாடி முடித்தலுங் கம்பராட்டாழ்வா ரிலங்குடைத் துப் புனலெளித்து பூவிட்டுத் தவிசிட்டுத் திருமகளார் மருக னாகிய தியானித்துத் தம்பாசகமூர்த்தியாகிய வணுமானையு மவ்வாணியையும், "அஞ்சிலே யொன்றுபெற்றான்," "புத்தகம் படிகமாலை," என்ற கவிகளைக் கூறி வணங்கிப் பாடத் தொடங் கினர் நாமகள் பொருக்கெனவக் தெதிரிலிட்ட பீடத்தில் வீற்றி ருந்தருளினாள். வீற்றிருக்கக்கம்பராட்டடிகளவள்சன்னிதியிலிருந் துபாடுதலு மச்சரசவதி ஞாயிறுபடுதல்கண்டு கம்பா பொழுது போயிற்றென அம்பாலிறுத்தினனென்று நிறுத்தி நாளென் லுக்கெழுநூறுகவிகள் வீதம்பாடியருளினர்.அதற்குச்செய்யுள்

கழுந்தாயனகழல்பணியாதவர்கதிர்மணிமூடிமீதே
அழுந்தவளிகொடுசிலாசலபிசவகவிநாதன்
விழுந்தாயிறெழுவதன்முன்மறைவேதியருடனாய்க்
தெழுந்தாயிபவிழுவதன்முன்கலிபாடினசெழுநூறே.

கம்பகாட்டடிகள் பாடியருளிய வழுச்சொல்லில்லை முலசவழுக் கெனப்போற்றி யமைத்தவர் பாடி முடிக்குமளவுமவர்க்கெதிர் சந்நிதிகொண்டிருந்தமையா லவர் முகமாய் ஸ்ரீராமாயணத்தை யுகாமகளே பாடினளென்க.

பிரமன் ஸ்ரீராமசரிதையை நீர் செய்யுமென்று யோகஞ் செய்த வான்மீகமகாமுனிவர்க் கருள்புரிய வந்தானல்லன். அச் சரிதையைக் கூறவேண்டி மூன்றும் நல்வான்மீகர் திருவாயிலை முற்கருளிய தன் தேவியைத்தேடி விரைந்துவந்தானென்று வடநூலார் வியந்து கூறுப. எனவே ஸ்ரீராமசரிதையைப் பலர் முகமாயுங்கூறப் பாரதிக்கோர் வேணவாவுண்டுபோலும்.

கம்பநாட்டாழ்வார் தாம்பாடியஸ்ரீராமாயணத்தையுலோக வைகுண்டமெனப் புலவரும் புலவரும் போற்றி வணங்குந் திருவரங்கம் பெரியகோயிலி லரங்கேற்றுவா னுங்குச்சென்று பரமசிரியராகிய ஸ்ரீமந்நாதமுனிகள் முதலியோரைப் பிரார்த்திக்க வவர்கள் கம்பரே தமிழ்வல்லாராகிய நில்லை மூவாயிரத்தாரு மதனூலைக் குற்றங்கூறினுங் கூறுவர். அவர் கூறுவண்ண மவரைக் கேட்பித்து வருகவென கம்பநாட்டடிகளாங்குச் சென்று தாம்பாடிய ஸ்ரீராமாயணத்தை கேட்கவேணுமென்று தலைப்பெற்ற தீக்கிதர்க்குக்கூறவர் தாமெல்லாரு மொருங்குற்றனராயின்று கேட்குதுமெனக்காலநீட்டியதைக் கம்பநாட்டரறிந்து, நிஷ்டைகூர் திருச்சித்திரக்கூடந் தன்னுளெழுந்தருளியிராகின்ற கோவிந்தராசப்பெருமான் சந்நிதிசென்று வாங்கிடப்பெனென வாங்கிடந்தார். கிடந்தார்க் கவ்விறைவன் கனவி லெழுந்தருளி நாமெயொருதீக்கிதன் மகன் விடந்தாம் சாவன், நீயவனைப் பிழைப்பித்து நின்குறை முடித்துக்கொள்க வென்ற ருளினன். அவ்விறைவ னருளியவாறு பிற்றைஞான்றொரு தீக்கி தன் மகன் கட்செவி கடித்திறக்கக் கம்பநாட்டடிகளாங்குச் சென்றபியாதார் பேரன்று தீக்கிதரைவினவி யுணர்ந்து ஸ்ரீகரு டாழ்வானைத் தியானித்து நாகபாச படலத்திற் பாடிய, "பல்லா ழிப்பான்" "வாசங்கலந்த" என்ற திருவிருத்தங்களோடு,

ழிப்பான் பள்ளி யணையே யவன்கடந்த
வாழி வலையின் மணித்தாம்பே - ழிப்பான்
பூணை புரமெரித்த பொற்சிலம்பி னூடிலன்ற
காணையகலிடம்.

மன்னகை யொருபாகன் மார்பிலணியாரமே
பொக்கு கடல்கடைந்த பொற்கயிற்ற - திக்கனையும்
சிரியதன் மேலுருத் தெய்வத் திருவாளே
ஏறியபண்பே இறங்கு.

பாரைச் சுமந்த படவ்வே பங்கயக்கண்
வீரன்கிடக்குறங்கு மெல்லணையே - சாமதிச்
செஞ்சடையன் பூணுந் திருவாபரணமே
நஞ்சுகடையாய் நாகடை.

இவற்றையும் பாடிமுன் கடித்தபாம்பே வந்துகடித்த விடத்தை யாங்க விறந்த மகனைப் பிழைப்பித்தருளித்தீக்கிதர்க விராமாயணத்திற் செய்த சிலதடைகளுக்கு விடைகூறினர். கூறினர்க்குத் தீக்கிதர்கள் கம்பநாட்டரே நீர் தெய்வப்பிறப்பென் பதற் கிறந்த பிள்ளையைப் பிழைப்பித்ததனினும் வேறு சான்று வேண்டுமோ வென்று துதித்து நீர் கூறுவதைக் கூறும். "காடி யபொருள்கைகூடும்" என்றபாட்டினீர் கூறியபடி யெங்கடிரு நறபட்டன்றே யரக்கர்சேனை யழித்ததெனப் பொருண்மாற்றி புரைத்துச் சாற்றுக்கவி கொடுத்தனர். கம்பநாட்டாழ்வா மீண்டுவர, திருவரங்கம் பெரியகோயிலார் திருநறுங்கொண்டை சைனர்களையும் மாவண்டேர் புலவனுகிய கருமாணையும் புலமகளா யை தஞ்சாவூர்தாசி வஞ்சனுக்கியையுமூமதுதிருக்குமாரன்*அம் பிகாபதியையும் கேட்டியுமெனக் கம்பநாடரம்பிகாபதியொழிய ஏனை யோரிடஞ் சென்றவர். கடாவிற்கு விடைகூறி யிவ்விதி காசத்தூட்டங்களுக் கேதேனுமாதாரமுண்டோ வென்றுர்க் தண்டென முறையே.

வில்லாள ராளுர்க் செல்லாமேலவன் விளிதலோடும்
செல்லாத விலங்கை வேந்துக்காசெனக் களித்ததேவர்
எல்லாருக் காசுகேட்டி யேறிட வார்த்தபோது
கொல்லாத விரதத்தார்தன் கடவுளர் கூட்டமொத்தார்.

இருப்புக் கம்பியர்க்கிழுதழை யூசியொன்றியற்றி
விருப்பிற் கோடாரால் விலக்கெனுத்தன்மையின் விட்டான்
கருப்புக்கார் மழைவண்ணனக் கீர்த்திசைக் களித்தின்
மருப்புக்கல்லிய தோளவன் மீளரு மாயம்.

* அம்பிகாவலன் என்னும் வழக்கு.

மெய்வரு போகமொக்க வுடனுண்டு விலியுங்கொள்ளும்
பையர வல்குலார்த முள்ளமும் பனிக்கும்போல
மையரி நெடுங்கணேச்சம் படிதலுய் கருவுவக்க
கைபுகிற் சிவந்தகாட்டுங் கற்புகம் பலவுங்கண்டார்.

இப்பாடல்களையெடுத்துக்காட்டிச் சாற்றுக்கவிபெற்றம்மிகாபதி யை யழைத் தவன் பாலப்பருவத்துக்குரிய சிலபாட்டுக்களையெடுத்துக்காட்டிச்சாற்றுக்கவி பெற்றவர்கு ஸ்ரீமன்நாதமுனிகளியமித்தருளியவர ரெருருதிருமண்டப மெடுத்தநி லாங்கேற்றத் தொடங்கலும், நம்பெருமாள் இத்தனையும் கோக்கியிருந்தருச்சகன்முகமாய் நஞ்சடகோபனைப்பாடினையோவென்றருளக் கம்பராட்டாழ்வா ரக்கணமே சடகோபாந்தாதியென்னு மாழ்வா ரந்தாதியைப் பாடினர். அதற்குச்செய்யுள்,

நஞ்சடகோபனைப் பாடினையோவென் நம்பெருமாள்
விஞ்சியவாதரத் தாற்கேட்பக்கம்பர் விரைக்கரைத்த
செஞ்சொலந்தாதிக் கவித்தனைநாமந் தெரியும்வண்ணம்
செஞ்சடியேற்கருள் வேதத்தமிழ்செய்த நின்மலனே.

பின்னுக் கம்பராட்டடிக ளரங்கேற்று கையிலூற்றுக் கொருகவியில் சடையப்பன்னோலையத் துணித்திருந்ததைக்கண்ட வைக்கனத்தோராகிய ஸ்ரீவைணவ நிவ்விதிகாசத்தி னரினைத் துணிக்கலாமோ வென்றார். என்றார்க்குக் கம்பராட்டடிகட் டமதுதிருக்குமார னம்பிகாபதிக்குத் திருமணநடந்தகாலைச் சடையப்பன்னோக்கிருக்க விடமின்றித் தரம்போராத்தில் வீற்றிருக்க வெனது மனையா.ளெங்களண்ணு வீற்றிருக்க விதுவோ விடமென்றாள், என்றுட்குங்களண்ணுவை வைக்குமிடத்தில் வைக்கின்றே னென்றேன். அல்லதூஉம், அவர் அடியேனுக்கு முலகுக்கும் பேருபகாரனென்றார். என்றார்க்கு ஸ்ரீவைணவர் நூற்றுக்கொன்று வேண்டா ஈராயிரத்துக்கொன்று வைத்துக்கொள்ளு மென்றார். என்றார்க்குக் கம்பராடர் அடியேன் சடையப்பரை நூற்றிலொருவராய்க் கொண்டேன். தேவரீராயிரத்தி லொருவராய்ச் சாதித்தருளினீர் நன்றென்று மகிழ்ந் தாயிரத்துக் கொருகவி வீதம் வைத்தார். பின்னருயுத்தகாண்டத்தி லிராணியவனைப்படலத்தைப் படிக்கும்போது ஸ்ரீவைணவர்கள் ஸ்ரீமத் வான்மீகாராமாயணத்தி லில்லாத விக்கதையை நீரொற்றுக்குப் பாடினீர். அதனை யொப்புவ தெங்ஙனமென்று மறுத்த தழகிய சிங்கர் திருக்கதை

யாயினமையி னிங்கெழுந்தருளி யிராவின்ற மோட்டழகிய சிங்கர் திருவுளம்பற்றிச் சிக்கம் பனஞ்செய்வாரே லொப்புக்கொள்வோமென்றார். எனவே ஸ்ரீமன்நாதமுனிக ளொன்றுங் கூறாதிருக்கக் கம்ப நிராணியவதைப்படலத்தைப் படித்தலுமோட்டழகிய சிங்கர் சிக்கம் பனஞ்செய்தனர். அவைக் கண்ணுள்ளோரெல்லா மதுகோக்கி வியந்துவக்க வக்கம்பராட்டாழ்வார் மும்மாரன்கேற்றினர். அதற்குச்செய்யுள்.

எண்ணிய சகாத்த மெண்ணூற் றெழின்மேற சடையன்வாழ்வு
கண்ணிய வெண்ணெய் கல்லூர் தன்னிலே கம்பராடன்
பண்ணிய ராம காதை பங்குனி யத்த நாளில்
கண்ணிய வரங்கர் முன்னே கவியாய் கேற்றினானே.

மூன்நாறுழின்மே லென்றும் பாடம். ஸ்ரீமன்நாதமுனிகள் காலமிவர்காலமானமையினிப்பாடமே பொருந்தும்.

அவைக் களத்தாரெல்லாரும் கம்பராட்டடிகளின் றெய்வத்தன்மையையு மவர்செய்த நூலின் பெருமையையு நோக்கியவரைக் கம்பராட்டாழ்வான் எனவுந் தெய்வப்புலமைக் கம்பராட்டாழ்வாரெனவுங் கவிச்சக்கிரவர்த்தியெனவுந் துதித்தனர். அதற்குச்செய்யுள்.

தராதலத்தி னுள்ள தமிழ்க்குற்றமெல்லாம்
அராவு மரமாலிம் நன்றே – இராவணன்மேல்
அம்பராட் டாழ்வா னடிபணியு மாதித்தன்
கம்பராட்டாழ்வான்கவி.

வாழ்வார் திருவெண்ணெய் நல்லூர்ச்சடையப்பன் வாழ்த்தபெற
தாழ்வாருயரப் புலவோரகவிரு டானகல
போழ்வார் கதிரி னுதித்த தெய்வப்புலமைக் கம்பராட்
டாழ்வார்ப தத்தைத் தினந்தினப்பவர்க்கியாது மனியதன்றே.
அம்பிலே சீலையை காட்டி யமரர்க்ன றமுத மீந்த
தம்பிரா னென்னத் தானுந் தமிழிலே தானே காட்டி
கம்பநாடனவுவளளல் கவிச்சக்கர வர்த்தி பார்மேல்
நம்புபா மாலை யாலே நரருக்கின் றமுத மீந்தான்.

ஸ்ரீமன்நாதமுனிகள் போர வுகந்தருளி நம்பெருமா டிருமஞ்சனங் கண்டருளச்செய்து ஸ்ரீகோசத்தைத் திருவடிகளிற் சமர்ப்பித்துக் கம்பராட்டாழ்வாருக்குச் சேவை செய்துவைத்துத் தீர்த்தப்பிரசாதந் திருமாலைத் திருப்பரிவட்டஞ் சடாரி

களைச் சாதிக்க வருளினர். கம்பநாட்டாழ்வார் பிரணவாகார மான விமானத்தை யிலம்வந்து பிரணவப்பொருளாயுயிரி ங்களாதனையுஞ் சேங்கமாயகியாரையுஞ் சேவித்து ஸ்ரீமந்நாத முனிகளியமனப்படி வீடுபேற்றிற்கு நிமித்தமாகிய தளிகைப் பிரசாதமுஞ் சுவீகரித்து தன்னியனானென்று மகிழ்ந்து ஸ்ரீமந்நாதமுனிகண் முதலியோர்க்குத் தண்டன் சமர்ப்பித்து நியமனம்பெற்றுத் திருவெண்ணெய்நல்லூர்வந்து கோயிலினிகழ்ந்ததையெல்லாஞ் சடையப்பன்னைக் குனர்ந்திச் சோழ னவேண்டுகோளுக் கினங்கி யவனவைக்கண்ணே பபுவியரசர் கவியரசர்நாப்பண் கவிச்சக்கிரவர்த்தியார் வீற்றிருந்து ஸ்ரீராமாயணத்தைப் பிரசங்கஞ்செய்து, யானை, குதிரை, ஒட்டகம், தந்தச்சிவிகை, வெண்குடை, சாமரம், முதலிய சம்மானமுமெல்லாருஞ் சூழ நகர்வலமுஞ் செய்யப் பெற்றார். பின்னர்க் கம்பநாட்டாழ்வா ரயலூருக்குச் செல்லுங்கால் வழியிலவர்சேனையாலழிந்த நிலனுக்குக் கம்பர் போனவழி கண்டு கழித்ததென்றிறைகுறைக்கும் வழக்கம் வழங்கிவந்தது.

கம்பநாடரித்தகைய சிறப்புப்பெற்று வாழுகாளி லொருநாள், சந்தனமுஞ் சண்பகமுந் தேமாவுந் தும்பலவும் ஆசினியும் அசோகுங் கோங்கும் வேங்கையுங் குரவமும் விரிந்து, நாகமுந் திலகமும் நறவும் கந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலொடு மணங்கமழ்ந்து, பாதிரியும் பாவை ஞாழலும் பைங்கொன்றையும் பிணியவிழ்ந்த பொரிப்புனகும் புன்னகமும் உருக்கொடு முகைசிறந்து, வண்டறைந்து, தேனுர்ந்து, வரிக்குயில்கள் இசைபாடத், தண்டென்றல் இடைவிராய பொழிலதருவண் குலோத்துங்கன் கம்பநாட்டாழ்வாரோ டுலாவித் தோள் குலுங்கச் சிரித்தான். சிரிக்கக் கம்பர் மருமானேயெற்றுக்கு நகைத்தீரெனச் சோழ னம்மானே யென்னன்று கூறுவேன். இத்தேயமு மிதிலுள்ள மன்பதையு மென்வயத்தனவன்றே வென்று நினைத்தேன் சிரித்தேனென்றான். கம்பநாடர் மருமானே யவையும்வயத்தனவே நீசொல்வயத்தினி னென்றார். சோழன் சினமுட்கொண்டதைத் தோற்றுவியாது பள்ளியரைசென்று பள்ளிகொண்டு தனது காதற் பரத்தையாகிய பொன்னி யென்பாட்குக் கம்பநாட ருரைத்ததையுரைத்து

வருந்தினன். வருந்தினற்கவலைம்பெருமானே! வருந்தாதிரவ ரை யென்னடிமையாக்கிப் போதருகின்றேனென்றிற்கண்ணே போதந்து வீதிவாய்ச்செல்லுங் கம்பநாடரையழைப்பித்தாடை யோரீ நின்று கண்ணோப்புணரவேண்டினன். வேண்டினுட்குக் கம்பரிதுசெய்யே னிதுவன்றி நீவேண்டுமெதுவுஞ் செய்வே னென்றார். என்றார்க்குப்பொன்னி, நீனெக்கடிமையென்றெழுதிக்கொடுமென்றான். என்றுட்குக் கம்பரெழுதிக்கொடுத்தார். பொன்னி யுதைப்பெற்றுச்சோழன் பாற்கொடுக்க வவன்பெற்றுவந்து மதநாட்டன்னவையேறி கம்பரைநோக்கி அம்மானே யிச்சீட்டிலிடப்பட்டுள்ளது உமதுகைச்சாத்தோ நீர்சிப்பொன்னிக்கடிமையோவெனக் கம்பநாடரதனைப்பார்த்து ஆம் நமது கைச்சாத்தே யாமவளுக் கடிமையே யென்றார். என்றரைச் சோழனேக்கி நீர் கவிச்சக்கிரவர்த்தி அல்லதூஉம் எம்மையு மும்வயமாயுடையீர். நீரவட்குக் கடிமையாகலாமோ வென்று நகைத்தான். நகைத்தாற்குக் கம்பநாட்டடிகள்மருமானேயதன் பொருளாயுணர்ந்தீரோ யிவ்வாறு சிரித்தற்கு. உலோகமாதாவா கிய பெரியபிராட்டியார்க் கடிமையென்று யாமெழுதிக்கொடுத்தா னிரெற்றுக்குச் சிரிக்கின்றீரென்று சாசிப்பொன்னிக் கடிமையென்றதற்குப் பொருளுமிலக்கணமுங்கூறியருளினர். அடிமைச்சீட்டைப் பார்த்துளமடங்காத வுவப்பெய்தி சோழன் அத்துணைத்துயரெய்தி,

போற்றினும்போற்றவர்பொருள்கொடாவிடில்
காற்றினுந்தூற்றவர்சொன்னசொற்களே
மாற்றினு மாற்றவர் வசைகளுளர்கள்
கூற்றினும் பாவலர் கொடியராவரே.

என்று பாடி நீரென்னுட்டை யகலுமென்றான், என்றானேநோக்கிக் கம்பநாட்டடிகள்,

காதமிருபத்தோரான்கொழியக்காவினையை
ஓதக்கடல்கொண்டொளித்ததோ—மேதினியில்
கொல்லிமலைத்தேன்சொரியுங்கொற்றவரீர்முனிக்தால்
இல்லையோவெங்கட்கிடம்.

மன்னவனுக்யோவளகாமுன்னதோ
உன்னையரிந்தோதிழையோதினம்—எம்மை
வினைக்தேற்றுக்கொள்ளாதவேல்கண்டோயுண்டோ
குவளைக்கண்ணக்கொள்ளாதகொம்பு.

என்ற பாடல்களைப்பாடித் தோட்சேரப்புமின்றி யுத்திய வாடையோடு வழிச்சென் றெல்லார்க்குக் தெவிட்டாத செவியுணவுகொடுக்கு மிவர்க்குத் தெவிட்டும் வாயுணவு கொடுப்பா ரின்மையான் வருந்தினர். ஒருநில் வேலியென்பாட்டின்மனையிற் சுவரெடுப்ப வெடுப்பவதொரு பிரமாக்கதனுல் வழுவின்றதா யிற்று. அதனையுணராத கம்பராட ரல்லூர்சார்ந்து வேலியை நோக்கிக் கூலிதரின் வேலைசெய்கின்றே னென்றவளேயிவரு சுவற்றையெடுப்ப வதுபண்டை வழக்கம்போலாகக் கம்பராட்டடிகள்,

மற்றொண்டகிண்புயத்தான்மாகவிட்டிங்குவந்தேன்
செற்றகொண்டபாவின்சுவையறிவரீக்கலியே
விற்கொண்டபிறறுதலாள்வேலிதருங்கூலி
பெற்கொண்டபோமனவுகில்லாய்பெருஞ்சுவரே.

எனப்பாடிச் சுவற்றைநிறுத்தி நெற்கூலியைக் கொண்டதை மாற்றிப்பலியைச்சிறிதுபோக்கியவ்வூரைக்கடந்து சென்றுவண ந்திருந்த வொருசெட்டியைநோக்கி வயிறுபசிக்கின்றேன் சிறித வற்றம்மிகினனவவன் வம்மின்வம்மினுமக்கோவிக்காலிக்கடை திறந்தேனென்று மறுக்கவப் புறஞ்சென்றேருரி லொருவேடி யனில் லஞ்சோர்ந்து சிறிதுண்ணீர் வேண்டலவன்சேடமாகும் போதியெனப்போய்ப்பசியாற் சோர்ந்தோலின்மேமர்ந்திருந் தார். ஆங்கொரு வேளாளனுழுதலிச்செய்ய வவனில்லா ளவ னுக்குக் கொணர்ந்தபழஞ் சோற்றையுண்ணப்புகுங்காற் கம்ப நாடர் தம்பசியை யுணர்த்தனுமவனவர்க்கிட்டுண்டு யுழுதலிச் செய்தான். கம்பர்சிறிது சோர்வுதணந்திப் பாடலிப்பாடினர்.

செட்டிமக்கள் வாசல்வழிச் செல்லுமே செக்காரப்
போட்டிமக்கள் வாசல்வழிப் போகுமே - மூட்டிபுகும்
பார்ப்பா ரகத்தையெட்டிப் பாருமே யெக்காலும்
காப்பரே வேளாளர் காண்.

பாடனுழுவனுழுத கொழுமுகத்தனம் பொதிந்த வொருகட் திற்றண்டிக்கணிசென்றெலிக்க வவன் கடத்தையெடுத்தனு!

ஆ! இப்பெரியோர் பிரானமையாலன்றே யித்தன நமக்குக் கிடைத்ததென மகிழ்ந்து கம்பராட்டாழ்வாரை யெழுந்தருள வேண்டுமென்று வேண்டியில்லஞ் சார்ந்து தெய்வமெனப்போ ற்றி யாராதித்தான். ஆராதிக்கக் கம்பர் சென்று ளாங்கிருந்தவன் முவே கொடுக்க நேர்ந்த புதையற்றனம் பாதியை யவனுக்கே கொடுத்துத் தமக்கு வேண்டிய விரண்டு முண்டுபெற்றுப் பல ஊர்களைக் கடந்து கொங்குநாடுசார்ந்து,

நீரெலாந்தேற்றுகாற்ற நிலமெலாங்கல்லுமுள்ளும்
ஊரெலாம்பட்டிதொட்டி யுண்பதோகம்பஞ்சோறு
பேரெலாம்பொம்மனம்மன் பெண்களோகாயும்பேயும்.
காருலாங்கொங்குமண்டலத்தினிங்கொணர்தே.

என்றிப்பாடலிப்பாடிச் சேரநாடுசென்றுங்கொரு சீமானிடத்தை யான் கம்பருக் கடப்பத்தொழிற் செய்து வந்தேனவர் சோழனைப் பிரிந்தகன்றமையான் வயிறுவளர்ப்பானினிருப் போந்தேன். நீரெனக்கோர் தொழிற் சுபிக்கவேண்டுமென வச்சிமான் சேரமகாராசனிடங் கம்பநாடர் கூறி யாங்குச்சேரி யவனுக் கவரை யத்தொழிற்பதித்தினன்.

ஒருநாட் சேரன்றனுத வைப்புலவர்களோக்கொண்டு ஸ்ரீமதி கம்பராமாயணத்தைப் பிரசங்கிக்கச்செய்துக்கேட்டான். கேட்க வுண்மைப்பொருளுரைக்குங்காற் கம்பநாடர் திருமுகமுவந்து மன்மைப்பொரு ளுரைக்குங்கால் வெறுத்துங் காட்டிற்று. அஃ தணர்ந்த சேரனடப்பக்காரரை நோக்கி யின்முகமுவந்தும் வெறுத்துங் காட்டக் காரணமென்னையென வடப்பக்காரர் வே ன்தே! சிலவிடத்திலுரைக்கும் பொருளாசிரியர் கருத்தாகவுஞ் சிலவிடத்திலுரைக்கும் பொருள் கருத்தன்மையாகவு மிருக் கின்றன வென்றார். என்றுரைநோக்கி யரசன், நீயவர்கருத்தை யாங்ஙன மறிகுவையென்ன வடப்பக்காரர் ஆசே! கம்பர் பிர சங்கித்த காலிகேட்டிருக்கின்றேனென வரசன் நீயும் பிரசங்கி க்கவல்லையோவென்றான். என்றற்கு அடப்பக்காரர் சிறிதுசெய் வேனென்று செய்தார். செய்யச் சேரன் மகிழ்ந்து கடப்பக்காரரை மார்புறத்தழுவிப்போற்றினான். போற்ற வவனவைக் களத்துப் புலவாழுக்காறும் நடப்பக்காரரை யலையினின்று நீக்கு

வான் சூழ்ந்தாசனுக்கு வினோபுரியு நாவிதனைக்கூய்த்தாஞ்சூழ்ந்
தருழ்ச்சியை யுணர்ந்த வம்முழுமகனுடன்பட் டொருநாளடை
ப்பக்காரரைக்கண் டண்ணுவித்தனோனாளும் யாண்டெற்ருயென்று
தழுவிக்கொண்டழுதான், அழு அடைப்பக்காராகியகம்பருமச்சூ
ஞறவையுணர்ந்து தம்பியென்றுதழுவி யவன் கண்ணினைத்து
டைத்தாருடித்தவலேழில்லஞ்சேர்த்தவணுண்ணவழைத்தகாலே
த்தம்பிநீயுதானும் பங்கிட்டுக்கொள்ளவில்லையேயுவேயன்றிநீ
எத்தனைக்காலமாசனுக்குத் தொழிற்செய்தனோரவத்தனைக்
காலம்யானுந்தொழிற்செய்யவேண்டுமென் றேதென்ருர், காவித
ன் அண்ணு எனக்குத் தடையில்லையெனக்கம்பர் தம்பியுனக்குத்
தடையில்லே யாயினு மாசனுக்குத் தடையுனதோ யிலதோவதி
வேரம் வாவென்றழைத்துவர நடப்பக்காரரைராவிதனுறவு
பாராட்டித் தழுவியதையு மவ்விருவரும் வருவதையும் வாயிற்
காப்போரா லுணர்ந்த வாசன்வருந்திய மனத்தையடப்பக்கார
ரைநோக்கி நீகாவிதனேவெனவடப்பக்காராமென்றடித்துக்
கூலைஞகளாரைத்தியாவித்தன்னுயிலுநிடனுறிருவடியின் சிலம்
பைத் தந்தருள்கவென்று வேண்டி யொருவருமியாமற் பெற்ற
தையெடுத்தேதந்தாலெங்கண்முன்னேர் நாண்முதலிருந்த சிலம்
பிரண்டி யென்னிடமுள்ளது இது. அவனிடமிருக்கு மதையும்
வாங்கி யெம்பெருமாட்டியாகிய கின்றிருத் தேவிக்காவி லணிக
வென்ருன். ஆசனுவிதனைப்பார்த்துச் சிலம்பைக் கொடுவா
வென வவனஞ்சிப் புலவர் சூழுற்றுத் தனக் குரைத்ததை
யுந் தானதற் குடன்பட்டதையுங் கூறினுன். கூற வாச
னடப்பக்காரை நோக்கி நீயிச் சிலம்பை யாங்ஙனம் பெற்
ருயென அடப்பக்காரர் தோன்ரு னுன்பெற்றவாற்றைக் கூறு
கேனே காட்டுகேனே கூறவதினுங் காட்டுதலே நன்ருமென்
றெருமண்டபத்தை யலங்காரஞ் செய்யச்சொல்லியழைத்து
சாகலதியந்தாதிப் பாடினர். பாடலு நாமகளொற்றைக் காற்
சிலம்போ டெல்லார் கண்ணுக்குந் தோன்றத் தோன்றி கம்பா
திலம்பெல்கேயென அடப்பக்காரனுகிய கம்ப ராசன்கையிலிரு
ந்ததை வாங்கி நீட்டச் சிலம்பு தானே சலமக டிருவடியிலேற்
த்தேவிமறைந்தருளினுன்.

அரசனுஞ் சூழ்ச்சிபுரிந்த புலவரு மற்றையோரும் பெரு
வியப்பும் போனந்தரு முற்றுக்கம்பராட்டாழ்வாரைத் தெரிக்
தறியாமற் பிழைத்ததைப் பொறுத்தருள்கவென்று வேண்டி
யருள்பெற்றனர். பின்னர்க்கம்பர் சோனுலதிகம்போற்றப் பட்
டாங்கிருந்தனுஞ் சோழனவைக் களங்கம்பில்லாமையாற் சந்
திரனில்லாத வானம்போலாகத் தானு முயிர்பிரிந்த வுடல்
போலப்பொலிவிழந்துவருந்திக் கம்பராட்சோனிடமிருந்தலை
யறிந்தவரை ரானுப்பவேண்டுமென்று சோனுக்கு விண்ணப்ப
முய் கம்பருக்குருத் திருமுகமும் விடுப்பக் கம்பர் சோனிடம்
விடைபெற்று சோழனெதிர்கொண்டு வப்பவந்து சோனவையி
னிகழ்ந்ததை நிகழ்த்தி முன்னினுமதிகமாய்ச்சோழனுற் போற்
றப்பட்டிருந்தார். இருக்க,

கம்பராட்டடிக டிருக்குமான் அம்பிகாவலன்றன்மகளே
களவிற்புணர்தலை யுணர்ந்த சோழன் கம்பராடருக்குரைக்க
வவனென் மகனது செய்யானென்றுர். என்றுர்க்குச் சோழனத
னைக் காட்டுவான் கம்பரையு மம்பிகாபதியையு முடனிருத்தி
யுண்ணவச்சோழன்மகள் கலத்திற்பெய்வான்கறிக்கலமெடுத்து
வந்தாள். வர, அம்பிகாவல னவளைப்பார்த்து,

இட்டவடிசோவவெடுத்தவடிகொப்புளிக்க
வட்டில்சுமந்தமருங்கையை,

என்று பாடலுஞ் சோழன் கம்பராடரைநோக்கினுன். அவர்,

—கொட்டிக்
கிழங்கோகிழங்கென்றுகூறவாளுவில்
வழங்கோசைவையம்பெறும்.

என்று பாடலு நாமகள் கிழங்குவிற்பாள் போன்று கொட்டிக்
கிழங்கோகிழங்கென்று தன்றிருவாயாலோதி வீதிவாய்ச் சென்
ருள். சோழனதனைச் செவியேற்று பிறிதொன்றும் புகலாளுகிப்
பின்போர் குற்றத்தையுண்டாக்கி யம்பிகாவலனைக்கழுவேற்றிக்
கொன்ருன். கொல்ல வதனுற் கறுவுற்றிருந்த கம்பராட் சொரு
நாள் யானைக்களிறு தந்திருமாளிகையுட்புகுந்த சோழன் மகனை
மதயானைக்களிறு கவியாளையிடம்வந்தாலது விடுமோவென்று
சிறிச் சிரிகையாற் குத்திக்கொன்ருர். கொல்லப் புத்திரசோகமுற்ற
சோழனதனைத்தேற்று வியாகொரு நாட்டாளலங்காரம்பூ

ண்டு நின்று கம்பரைநோக்கி யம்மானே யான் யார்போலிருக்கி
ன்றேனென்றான். என்றதற்குக் கம்பகாடர் மருமானே ஸ்ரீராம
பிரான்போ லிருக்கின்றீரென்றார். என்றதைச் சோழன் நீ
ராவணன்போ லிருக்கின்றீரென்றே ரம்பாலெய்யக் கம்பகாட்
டடிகள் திருமார்பி லவ்வம்புதைத்தது. தைத்தலும்,

வில்லம்புசெல்லம்புமன்னியிரண்டேயி
வில்லம்பிற்செல்லம்பேமெல்லிசம்—வில்லம்பு
பட்டிதடாவென்மார்பிற்பார்த்தாசின்னுலத்தைச்
சுட்டிதடாவென்னாயிற்சொல்.

என்ற பாடலிப்பாடிச்சபித்துச் சோழனை நீக்கிந் தாமுபுண்டு
பாண்டியகாடுசார்ந்து காட்டரசன்கோட்டையிற் சின்னாள்வதி
ந்து திருநாட்டுக் கெழுந்தருளினர். அப்போதவர் மாணாக்கர்
முதலியோரவர் விமலசரும விக்கிரகத்தை நீராட்டித் திருமண்
காப்புச்சார்த்தி யியலங்கரித்து விப்பிய விமானத்திலேற்றிச் சன
கம்பேரி தண்ணுமை முதலிய வியங்களியம்பக்கவிச் சக்கிரவர்த்
திகம்பகாட்டாழ்வார் திருநாட்டுக் கெழுந்தருளினரென்று திரு
ச்சின்னஞ்சிதத் திருப்பள்ளிப்படுத்தி பரிபாலித் தாராதித்தனர்.
கம்பகாட்டாழ்வார் திருமேனியை திருப்பள்ளிப்படுத்திய விரு
ந்தாவனத்தின் மண்ணையெடுத்து காட்டரசன் கோட்டையின்
மதனைச் சூழ்ந்த வூர்களிலும் பிறகுமன்ன குழந்தைகளுக்குச்
சிறிது கலைத்தூட்டுதலுமக் குழந்தைகள் கல்வியெய்துதலுமின்
றுகாறு நடந்தேறிவருகின்றன. காட்டரசன் கோட்டையை
மதத்தப் பிறிதோரூரையுங் கூறுப.

கம்பர் வீட்டுக்கட்டுத்தறியும் பாடுமென்று சான்றோர்
பாடினமையினவர்திருமேனிவைத்திருப்பள்ளிப்படுத்திய விருத்
தாவனத்தின் மண்ணையுண்ட பின்னர் கல்வியெய்துதலரிய
தன்று. கம்பகாட்டாழ்வார் பரமபதஞ்சேர்ந்ததை யுணர்ந்த
ஒட்டக்கூத்தர்,

இன்றைத்தேகம்பனிறக்தானிப்புவியி
லின்றுர்கோவென்கவிதைபேற்குரான்—இன்றைக்கோ
பூமடந்தைவாழப்பொறைமடந்தைவீற்றிருக்க
காமடந்தைதாழிழந்தாள்.

என்று பாடிவருந்தினர்.

தேவிற்சிறந்ததிருமாற்குத்தக்கதெய்வக்கவிஞன்
பாவிற்சிறந்ததிருவாய்மொழிபகர்பண்டிதனே
காவிற்சிறந்தவம்மைதற்குரித்தக்கன்னுலலன்
பூவிற்சிறந்தசுழ்வான்கம்பகாட்டுப்புலமைடனே.

என்று துதிக்கப்படுவராயினவர் புகழைக்கூற வல்லார்
யார். புலவனெருவனே யுயர்த்திக்கூறுங் காலுமிழிக்கக் கூறுங்
காலு நீ கம்பனே கம்பனேவென்று கூறும்வழக்குமே யதற்குச்
சான்றுயிற்று.

சில சரித்திரஞ் சிலதாயிருக்கவு மதனை பெருக்கி யுரைத்
துச் சரித்திரச்சுருக்கமென் றெழுதுவாரைப் போன்று யாமெ
முதினெம். கம்பகாட்டாழ்வார் விறகுதலியன் பாடிய பாட்டுக்
கிலக்கணமும் பொருளுங் கூறியதையு மாயிரம்பொன்கொடுத்
தோரைப் பாடி சிமாறுக்குங் கதையையுஞ் சமிசுவிகள்பாடி
யதையுஞ் சோளவர்க் கடப்பத்தொழிற் செய்ததையும்விரி
ஞ்சியீண்டுக் கூறினெம்.

கவிச்சக்கிரவர்த்தி, கம்பகாட்டாழ்வார் சரித்திரச்சுருக்கம்.

முற்றிற்று.

ஸ்ரீமத்கம்பகாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

ஸ்ரீ

ஸ்ரீமத்பரமாத்மநேநமः

முகவுரை.

இஃது

ம-ரா-ரா-ஸ்ரீ, பரங்கிப்பேட்டை இலக்குமணபிள்ளை அவர்களால் செய்யப்பட்டது.

ஸ்ரீமத்கம்பராமாயண முழுதுக்கு முரைசெய்யாம லதிலுள்ள வருங்கவிகளுக்குமாத்திரம் மூப்பனூரவர்களா லுரைசெய்திருத்தலாலிதற்கு ஸ்ரீமத்கம்பராமாயண அருங்கவி விளக்கம் எனத்திருநாமமிடப்பட்டது. இதிலெடுக்கப்பட்டுள்ள திருவிருத்தங்களோப்போன்ற வின்னு மிருநூறு கடின திருவிருத்தங்களு யுத்தகாண்டத்திலெடுக்கப்படலாம் அவை யெத்தாலெடுக்கப்படாவாயினவெனிற் பெரியபுராணத்திற் கடினமாயுள்ள விருத்தசெய்யுட்களுக்கு மிவ்வாறே யுரைசெய்யவேண்டுமென்னுங் கருத்திவ்வுரைகாரருக்கிருக்தமையாலவற்றையுஞ் சேர்ப்பிற் பெருகுமென்றஞ்சிப் புத்தகத்தை முடித்துவிட்டமையாலுமப்பெரியபுராணத்தின் முன்னமே யாயிரம் பாட்டுக்களுக்கு மிதுபோது திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் புராணத்திற்கு முரைசெய்யப்பட்டிருப்பதாய்த் தெரியவந்தமையாலுமதற்குமுன்புள்ள புராணங்களி லதிக கடினபாட்டுக்க ளில்லாமையாலுமவ்விருநூற்றுப் பாட்டுக்களு மெடுக்கப்படாவாயின.

கண்ணழித்த லருமையன் றென்னுள்ளி யிவ்வுரைகாரர் விடுத்திருக்கின்ற துணுகவிகளுக்கு மெடுத்திருக்கின்ற சில துணுகவிகளுக்குஞ் சம்பிரதாயத்தோ டுண்மைப் பொருணூலேண்டி யுபயவேதாந்தம் வல்லாரை வினவி யுணர்ந்து புலமையிற் சாட்டிலமைத்துக்கொள்க.

இவ்வுரைகாரருக் காசிரியராயிய மகாவித்துவத்ஸ்ரீனை சேகர் ஸ்ரீநிவாசபுரம் கோவிந்தபிள்ளையவர்கள் நாகபாசபடலத்தினிருபத்து நான்கு திருவிருத்தங்களுக் கருவிச்செய்துப் பதித்தபதவுரை யவர்களனுமதிபெற்றிதிற் பதிக்கப்பட்டிருக்கின்றது.

ஸ்ரீமத் கம்பராமாயணத்திற் இலக்கணந் தொல்காப்பியமென்பதைச் சான்றோருரையானன்றி யிவ்வுரையாலு முணர்க. எனவே, தொல்காப்பிய முணர்ந்தோர்க்கே சிலபாட்டுக்களி னுரை புலப்படுமென்பது.

இவ்வுரைகாரருக் கையமின்றிப் பொருளாகாத விதனடியி லுள்ளுறித்த (சு) திருவிருத்தங்களின் முதலில் * இவ்வடையாளம் போடப்பட்டிருக்கின்றது.

கவந்தன்படலம்	...	...	சசு.
பம்பைப்படலம்	...	...	க.
இராணியன்வதைப்படலம்	...	...	சுசு.
,,	...	...	எ0.
விபீடணனடைக்கலப்படலம்	...	...	அக.
களியாட்டுப்படலம்	...	...	கஉ.

உ

திருச்சிற்றம்பலம்.

பாழ்ப்பாணம்.

ஸ்ரீமத், சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் செய்த

நேரிசைவெண்பா.

கம்பரா மாயணத்தின் கட்டுரைக்கற் றொட்டுளப்பை
இம்பரா ராய விளித்தான - கும்ப
முனியேய் துரைசாமி மூப்பனர் தென்சொற்
சுனையேய் கவித்தலத்தான் சூழ்ந்த.

ஸ்ரீராமஜயம்.

கவித்தலம் கல்விச்சாலைத் தமிழ்ப்புலவர்

மு. வை. ஐயாத்துரை ஐயரவர்கள்

இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பொன்னிற்பொலியுக்காமணிபோற் புகழிற்பொலியுத்துரைசாமி
தன்னிற்பெரியும்புலமையினுற் சாலப்பொலியுத்தீஞ்சுவையிற்
கன்னித்தமிழாலிராமகதை கம்பநாடனதெள்ளமுதிற்
பன்னிப்பருகுதியவைக்குப் பகர்ந்தாலுரைதான்பாரீரே.

ஸ்ரீ

ஸ்ரீமீனாக்ஷிஸுந்தரேபரோ ஜயதி

மகாவித்வத்ஸ்ரீனசேகர

திருச்சிபுரம்.

வி. கோவிந்தபிள்ளை அவர்கள் குமாரரும்

பெங்களூர் சென்ட்ரல் காலேஜ் தமிழ்ப்புலவரும்

ஆகிய

நாராயணசாமிபிள்ளை அவர்கள்

இயற்றிய

நிலமண்டலஆசிரியப்பா.

பொன்மலிதாமரைப் பொன்னெடுமாக்கிழை
மின்மலிசெல்ல மன்னிவாவும்
அன்னம்படுபொழில் வண்ணம்படுபணை
சன்னற்காலே டின்னவளந்தழீஇப்
பொன்னிக்கரைக்கண் மன்னியுமொன்னலர்
தன்னருமிடனே டென்னலும்பெறும்
திருஞ்சோணாட்டு ளுறுமேனைத்தும்
நறுஞ்சோறுவு பெருஞ்சத்திரமுதல்
எண்ணுன்கறமு மன்னுயின்று
நன்னுவலர்முகக் கண்ணுய்நிலவியும்
பாகிலையைந்தி னிறுதியகிலுகொளும்
ஒருபெருந்தனியை யுறுவதுமான
கவித்தலநகரான் கவித்தலவன்றேன்
கவித்தலமுறவிவர் புவித்தலமுண்டமால்
தன்னடிபூத்த பொன்னுளத்தன்பன்
கன்னியருவக்கு நன்னிறமுடையான்
முத்தையவேற்றல் புத்திரிகாமணி
தத்துவம்யாவும் பொத்தறத்தெளிந்தோன்
எந்தைபால்வினவி வந்தகாரணமும்
சிந்தையாற்பிறகூ றுற்றெரிவிதரணன்
இலக்கணவிதிபல விலக்கியப்பண்டிதன்
சொலக்கணச்சுவைக்கண் ணிலக்குடையான்வெள்
வதர்மம்பாறச் சுதர்மார்ணவத்தில்
விதுவெண்டோன்றித் துதிபெறுதோன்றல்

எற்பொருமெனியோர்க் கற்பதவியும்
கற்பகக்காத்தன் மற்பொருபுயத்தன்
அரைசாமிக்கோன் உரைசாமிக்கோன்
துரைசாமிப்பெயர் பரசுதாவலவன்
மாணுறுமயோத்தி மாநகர்மான்மியம்
ஜானகிபரிணயந் தானுறுங்கங்கா
யாத்திரைப்பரபாவ மேத்துறுமம்ச
சக்தேசம்பிர சன்னராகவம்
பாரதச்சுருக்கம் சிருஷ்டியாமான்
மியமிலைதமிழா லியற்றியதுங்கன்
வாழ்வார்கம்பநாட் டாழ்வார்தெய்வக்
கவிச்சக்ரவர்த்தியார் புவிச்சக்ரவர்த்திகள்
யாவரும்போற்ற காவருசீர்த்தியர்
பல்லவங்கார மூன்றுபவருள்ளிய
இராமாயணமா மிராமாமதிமுக
ஜகதேகத்தனி யனகவைதேஹி
நாகவேணியரி யாகமேயணிதரு
தேவிகிறையின் மாவியலுரைக்கும்
காவிரித்தங்கட கேவியன்புதைபொருட்
சுத்திரப்புரியால் யாத்தபரத்தொகைகளோ
யவிழ்த்துரையாகக் குவித்துப்பொருத்த
எழுதியெழுதா வெழுத்திலையெனித்
தெம்மனோர்மயக்க மெம்மதோயகற்றி
இசையுடம்பவனி மிசைவளர்தாவே
நட்டனன்கைம்மாறற்றலென்மாதோ.

ஸ்ரீ

ஸ்ரீமத்வரவரமுநயோநம:

விலகுணகவி.

புதுவை ஏ. வே. இராமாநுஜநாவலரவர்கள்

அருளிச்செய்த

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கம்பர்கவியாம்பாற்குரவைக்கண்ணனென்னுங்கன்றூட்டி
ரும்பர்கவியார்சொல்காப்பியத்தைமதிநற்சுதைவாங்கி
இம்பர்கவிகட்டிட்டகவித்தலத்தூணரசாமிக்கவிக்கும்
உம்பர்கவிகட்கிட்டகவிக்கும்மென்வாசிபுனைகவிகாள். (க)

பலவர்குறியமுதியகோலிக்தப்பிப்பாகாவர்நப்
புலவர்சிகரப்பெருமான்பாற்பயின்றபெருஞ்சீர்ப்புலமையினால்
நலிவண்டிமாரனென்னுங்கண்டீர்நாதருயிரைத்தென்னரங்கீர்
கலிசொற்பொருளேக்கற்றெளிந்தீர்கம்பன்கவிப்பொன்காவீரோ. (உ)

செல்விமகளுறுதிருவுந்திருமாற்கடியனுந்திருவும்
கல்விமகளுறுதிருவுங்கம்பன்கவியாகிறுதிருவும்
அல்வியருட்சேர்ந்திடுதிருவுமமைட்டாணம்மாமத்திருவும்
எல்லிமணிப்பொலுரைகவித்தலத்துத்தூணரைக்கேயிருப்பாமால். (ங)

அருள்செய்கவியாழிக்குரிசிலாற்றிராமாயணக்கவிக்குப்
பொருள்செய்பொய்யாமொழிப்புலவர்புகன்றபொருளும்புவிவிவி
வருமாண்புலவர்வரைபொருநும்வளருழ்கவிமாத்தலத்தூணரைசெப்
உரையுமிடரொன்றுங்கிடக்கிறுவன்மீயூரம்யாருரைக்கிற்பார். (ச)

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நேத்திரச்செவியானீவ்குயிர்நில்லியற்றணறுயிர்ப்பச்செய்கம்பன்
சூத்திரப்பொருளேத்தருவியேதக்கதருட்கவித்தலத்தூணரசாமி
கோத்திரமண்மீச்செறிதரையாவ்வனுளனெனவமலன்கோவிருதன்
காத்திரமுழுதுமுழுதுயிராமுதகலசங்கண்டெடுத்ததைக்கடிக்கும். (ஞ)

செந்தமிழ்

சருவகலாசாலைத் தமிழ்த்தலைமைப் புலமைபூண்டுள்ள

கோ. இராஜகோபாலபிள்ளையவர்கள்

இயற்றிய

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கடல்ஞாலக்கலர்கதிரிற்றோற்றஞ்செய்த கம்பநாட்டாழ்வார்தஞ்செய்
யுளாழம், படல்சாலக்கமஞ்சுகனிபரிவிலேக்கிபளகிராமாயணத்தையுமை
பணித்த, மடல்நாலவழிசெந்தேந்தேறல்பாயுவளர்செந்நெற்பைக்கூழ்சூழ்
கவித்தலத்தில், கடனுக்கொள்ளிஞழாதரைசாமிப்பேர்கவலவன்றந்தி
ருக்கைகம்மாறின்றே.

ஸ்ரீ

பாலகாண்டம் பிழைதிருத்தல்.

பக்கம்.	வரி.	பிழை.		திருத்தல்.
ச	நஉ	,,		எனலிவர்.
கடு	ஞ	ஈண்டிகுடிகளோ	...	ஈண்டுக்குடிகளோ.
டு	நo	வழக்குபற்றி	...	வழக்குப்பற்றி.
கக	எ	யாப்புசெய்தவரே	...	யாப்புச்செய்தவரோ.
கஎ	கஞ	யெனும்	...	வெனும்.
உக	நo	ருணத்தின்	...	குணத்தின்.
நக	கநு	பென்	...	பொன்.
நஉ	கஎ	வினக்கு	...	விளக்கு.
சo	உசு	சென்	...	செண்.
சஅ	கஞ	உடைலோம்	...	உலடையோம்.
ஞச	அ	பெண்ணுடி	...	பெண்ணெடி.
ஞக	ஞ	வைறத்து	...	வெறுத்து.
ஞஉ	உக	பணி	...	மணி.
ஞங	ச	வினி	...	வரி.
எஎ	கக	ஜிலை	...	சிலை.
எஅ	நo	ஆணை	...	ஆணை.
எக	கஉ	யின	...	யிள.
அக	கச	ஆகில்	...	ஆதில்.
,,	உஉ	ஆணை	...	ஆணை.
அஉ	கஎ	சிலர்	...	சிலர்.
அச	உங	படிப்புக்கால்	...	படிபுக்கால்.
,,	உச	பக்கர்	...	புக்கர்.
அஞ	உங	ன்யெனுக்	...	யென்னுக்.
அஎ	கஅ	ஊஎனும்	...	உளஎனும்.
அங	கசு	தோறு	...	டோறு.
,,	உஅ	ாக்கர்	...	நக்கர்.
கo	க	கடக்	...	கடகக்.
,,	கக	கொ	...	கொ.
,,	நக	யொத்த	...	யொத்தத.
கக	கo	மாணைப்	...	மாணினம்.
கநு	சஉ	சொக்கர்	...	செக்கர்.
கஞ	உடு	ளொருவ்	...	ளொருகு.
,,	நக	மனிவிய	...	மனிவியர்.
கள	உ	தாமான	...	தாமான்.
,,	நo	லிடி	...	லிடி.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தல்.
ஆஅ	ரு	க்கண்டான் ...	கண்டான்.
கஅக	க	கரித்து ...	கரிக்கு.
கஅக	உஅ	சேர்கின்றுள் ...	சேர்கின்றுள்.
,,	உக	கலவித்துரியனாய் ...	கலவித்துமுரியனாய்.
கஅரு	கள	விளங்கும் ...	விளங்கும்.
ககஅ	கஉ	விடிவினை ...	வடிவினை.
ககக	கரு	எற்றுள் ...	எற்றுள்.
ககஉ	உக	தனை ...	தனை.

கள-வது பக்கம் உஅ-வது பாட்டிலையில் இதனை முன்னர்க்கூறுதும் என்பதையும் கஅ-வது பக்கம் கூ0-வது பாட்டிலையில் கலவாவதுமாயப் புணர்ச்சி என்பதையும்தன்னி கஅச-வது பாட்டிலையிலிருக்கின்ற மாயப்பு ணர்ச்சி யென்மனர் புலவர்" † என்பதனுமறிக. என்பதையும் † "கலவெ ளப்படுவ தியாதெனவினவின்-என்றபாட்டையும் மேற்படி கள-வது பக்கம் உஅ-வது பாட்டிலையிற்கொள்க.

நன்முக குருவாழ்க குருவேதுணை.

ஸ்ரீமத்கம்பராட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

தனியன்கள்.

—:o:—

கேரிசைவெண்பா.

க. காதலத்திருள்ளகமிழ்க்குற்றமெல்லாம்
காவுமரமாயிற்றன்றே - இராவணன்மேல்
கம்பராட்டாழ்வடிபணியுமாதித்தன்
கம்பராட்டாழ்வான்கலி. (க)

கலித்தாழிசை.

உ. வாழ்வார்திருவெண்ணெய்நல்லூர்ச்சடையப்பன்வாழ்த்தபெற
தாழ்வாருயர்புலவோரகவிருள்தானகலப்
போழ்வாக்கதிரிறுத்தபுலமைக்கம்பராட்
டாழ்வார்பதத்தைச்சிந்திப்பவர்க்கியாதுமரியதன்றே. (உ)

விருத்தங்கள்.

ங. கம்பாவணிசடையரனையன்முதல்
உம்பரானமுனிவரால்யோகராஜயர்
இம்பாற்பிணிக்குமிராமவேழஞ்சேர்
கம்பராம்புலவரைக்கருத்திருத்துவாம். (ங)

இ-ள். இராமவேழம் சேர் - ஸ்ரீராமரோனென்னும் யானை வந்து சேர்தற்குரிய, கம்பர் ஆம்-கட்டுத்தறியை யொக்கின்றவ ராகிய, புலவரை - (இத்தலாசிரியராகிய) பேரறிவுடையரை, கருத்து இருத்துவாம் - எமது மனத்தின்கண் நிலைபெறுத்து வாம். (ங)

கம்பு என்பது கம்பரெனப்போலியாயிற்று.

வேறு.

ச. கம்பராடனனுமைசெய்சாத்தபூவை
கொம்பராடன்கொழுனனிராமப்பேர்ப்
பம்பராடனழைக்குக்கதைபாச்செய்த
கம்பராட்டன்கழற்றலையிற்கொள்வாம். (ச)

கனியன்கள்.

இ-ள். சம்பு ஆகிய நான் தன் உமை செவிசாற்றும் - நிலவு முற்காலத்தில் தனது தேவியாகிய பார்வதியின் செவியில் உப தேசித்த,

(சு)

வே று.

டு. காரணனீயாட்டெல்லாங்காரகமுனிவன்கூற
ஆரணக்கவிதைசெய்தானறிந்தவாஞ்மீகியென்பான்
சீரணிசோழநாட்டுத்திருவழுந்தூருள்வாழ்வோன்
சாரணக்கொடையானகம்பன்தமிழ்நூற்கவிசெய்தானே. (டு)

இ-ள். ஆரணக்கவிதைசெய்தான் - வேதத்தோடொத்த கவிதையைச் செய்தான். (டு)

கூ. அம்பிலேறிலையைகாட்டியமரக்கன்றழுதமீய்ந்த
தம்பிரானென்னத்தானுந்தமிழ்சேரைகோகாட்டி
கம்பரானையவள்ளல்கவிச்சக்கரத்திபார்மேல்
நம்பராமாயிரமாலேரருஞ்சின்றழுதமீய்ந்தான். (கூ)

எ. எண்ணியசகாத்தமெண்ணூற்றெழின்மேற்சடையென்வாழ்வு
நண்ணியவெண்ணெய்நல்லூர்தன்னிலேகம்பராடன
பண்ணியவிராமகாதைபகருவியத்தகாவில்
கண்ணியவரங்கர்முனேகவிபாடிக்கேற்றிலுனே. (எ)

இ-ள். கண்ணிய அரங்கர்முன் யாவராலும் நியானிக்கப் பட்ட அரங்கநாதர் சந்நிதியில்,

மூன்றாந்தொழினமேல் வைப்பும் பாடம்.

வே று.

அ. இம்பர்நாட்டுத்தெல்லைமெல்லாமெய்தியரசர்கண்டிருந்தாலும்
உம்பர்நாட்டமுதற்பச்சாலோகஞ்சூழலிருந்தாலும்
செம்பொன்மேருவனையபுயத்திறல்சேரிராமன்றிருக்கதையில்
கம்பராடனகவிதையிற்போற்கற்றோர்க்கிதயக்கனியாதே. (அ)

வே று.

க. கழுந்தராயுளகழல்புனையாத்தவர்கதிர்மணிமுடிமேற்
அழுந்தவாளிகள்தொடுத்திலோகவவியகவிநாதன்
விழுந்தராயிறலெழுவதன்முன்மறைவேதியருடனாய்ந்
தெழுந்தரையிறிழுவதன்முன்னவிபாடினதெழுவே. (க)

பயன்:

கo. காடியபெருங்கைகூம்ஞானமும்புகழுமுண்டாம்
வீடியல்வழியதாச்சும்வேரியங்கமலசோகரும்
நீடியவரக்கர்சேனைநிறபட்டழிவவாகை
சூடியகிலிராமன்சோன்வலிகூறவோர்க்கே. (க)

வே று.

கக. கண்மையுஞ்செல்வமும்காந்தம்கல்குமே
நின்மையும்பாவமுஞ்சிதைத்தேயுமே
சென்மமுமரணமுமின்றிநீர்பிருமே
இன்மையோராமவென்நிரன்டெழுநிலுல். (உ)

கஉ. வடகலிதென்கலிவடுகுகன்னடம்
இடமுளபாடையாதொன்றிலுயிலும்
நிடமுராருருலத்திராமன்றன்கதை
அடைவுடன்கேட்பவரமராவரே. (கூ)

கஎ. வென்றிசேரிலங்கையரசனென்றமார்வீரமோத
நின்றராமாயணத்தில்நிகழ்ந்திடுகதைகடம்மில்
ஒன்றினேப்படித்தோர்தாமுமுரைத்திடக்கேட்டோர்தாமும்
நன்றிலுவெல்றேர்தாமும்ராகமதெய்திடாரே. (ச)

கஅ. நிராகவன்கதையிலொருகவிதன்னில்வகபாதத்தினையுரைப்போர்
பராகருமஸ்தோஜலவிலவனும்பன்முறைவழுத்தலீற்றிருக்க [ரு
புராதனமறையுமண்டர் பெற்பதமும்பொன்றகாதலினும்பொன்
ராவணீயமலலுலகெனும்பரமபதத்தினியனுகுவரன்றே. (ஞ)

வே று.

கடு. நிறவரம்பினிராமவென்றேரும்பர்
நிறவரென்பதநிச்சயமாதலான்
மறவின்மாத்தரைசேட்பவர்லகுந்தம்
பெறவரென்பதுபேசவும்வேண்டுமோ. (கூ)

கசு. அன்னதானமகிலநற்றானங்கள்
கன்னிதானங்கயிலையின்தானமே
சென்னதானப்பலனெனச்சொல்லுவர்
மன்னிராமகதைமறைவாய்க்கிலே. (எ)

வே று.

ஞாயிரியோராமராயணச்சிருக்கதையதிற்றனிம்பாவுலோர்
நீதியறபோதெதிலின்றவெனைகளிறிற்செதண்டமுதக்[ல்
காதிபர்களாயாச செய்துளநீக்கத்தை டைத்சருன்டொதத்தழுவி
சோதிவடிவாயதிலில் முத்திபெறுவாரென வுரைத்சருதித்தோகை

[ளே. (அ)

பயன்.

வே று.

4. இனையநற்காரணமுற்றுமெழுதினெஞ்சியற்சோர்சத்தருஞ்
அனையதன்னீசச்சொல்லோர்க்கரும்பொருள்கெளிதுக்கேட்போ
கனைகடற்புடவிமீதேகாவலர்க்காசாய்வாழ்க்க [ம்
வினையமதறத்துமேலாம்விண்ணவன்பதத்திற்சேர்வார். (க)

ஏழ்வார்தறி.

நருகைசீண்டதயரதன்முன்றரும்
இருகைவேழத்திராகலன்றன்கதை
திருகைவேலேந்தரமிசைச்செப்பிட
குருகைகாதன்குரைழல்காப்பதே. (க)

அமைவன்தறி.

அஞ்சிலேயொன்றுபெற்றருணஞ்சிலேயொன்றைத்தாயி
அஞ்சிலேயொன்றுருகவாரியற்காகவேவி
அஞ்சிலேயொன்றுபெற்றவணல்லைக்கண்டயலாருரில்
அஞ்சிலேயொன்றைவைத்தானவனெம்மையளித்தக்காப்பான். (உ)

சால்வதிறதி.

புத்தகம்படிகமாலேகுண்டிகைபொருள்சோருனை
வித்தகத்தரிகதெய்கைவிமலையமலிதன்னே
மொய்த்தகொக்தளகபாரமுவிண்முலித்தவளமேலி
வைத்தருளுகட்செல்வாயணங்கினேவணங்கல்செய்வாம். (ஈ)

கன்றுக குருவாழ்க குருவேதினை.

ஸ்ரீ

ஸர்வம்விஷ்ணுமயம்ஜகத்.

ஸ்ரீமத்கம்பராட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

ஸ்ரீமத்கம்பராமாயணம்

அருங்கவிவிளக்கம்.

முதலாவது. பாலகாண்டம்.

இதஸ்ரீராமபிரானது பாலப்பருவத்தின் சரித்திரத்தை புனைந்த இன்றமையின் அப்பெயர்த்தாயிற்று.

க-வது. சிறப்புப்பாயிரம்.

கவிதான் எடுத்துக்கொண்ட காவியம் இனிது முடிதற் பொருட்டும் அதனின்றும் நிலவுதல்வேண்டியும் வழிபடுகடவுளி யாதல் ஏற்புடைக்கடவுளி யாதல் வாழ்த்துதல் மூறைமையாக வின், ஈண்டு வழிபடுகடவுளும் ஏற்புடைக்கடவுளும் ஒருவனே யாகலால், இவ்வாசிரியரும் அவ்விறைவனை வாழ்த்துவான் றொடங்கி அவனது சொரூபம் ஐந்தையும் இத்திருவிருத்தத்தால் கூறுகின்றார்.

க. உலகம்யாவையுந்தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலுநீக்கலுநீங்கலா
அலகிலாவிளையாட்டுடையாரவர்
தலையாயனவர்க்கேசரணாகுமே. (க)

இ-ள். உலகம் யாவையும் தாம் - உலகம் யாவும் தாமே யாய், உளவாக்கலும் நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா அலகு

இலா விளையாட்டு உடையார் அவர் தேவர் - படைத்தலும், காத்தலும், அழித்தலும், நீங்கலாக எனவில்லாத லீலைகளுடையாராகிய அவரே எல்லா உலகங்களுக்கும் முதல்வர், அன்னவர்க்கே நாங்கள் சரண் - அத்தன்மையராகிய இறைவரையே அடியோங்கள் புகலடைந்தோம். எ - று.

ஐகாரம்சாரியை, எகாரம் முன்னையது புகலிடம் பிறிதின்மை யுணர்த்தி நின்றது. பின்னையது அசை. அன்னவர்க்கென்பது வேற்றுமை மயக்கு. உலகாக்கல் லீலைபெறுத்தல் நீக்கல் என்பனவற்றையே அலகிலா விளையாட்டாகக் கொண்டு பொருளுரைப்பர், அவ்விளையாட்டு முன்னென முடிந்தமையின் அலகிலாவிளையாட்டு அதனின் வேறுதலறிக. (க)

உலகம்யாவையும் தாம், எனவே அந்தர்யாமித்துவமும், உளவாக்கலும் லீலைபெறுத்தலும் நீக்கலும் எனவேவியூகமும், அலகிலாவிளையாட்டுடையார் எனவே விபவமும், தேவர் எனவே பரத்துவமும், அன்னவர் எனவே அருச்சையும், போந்தன. பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அருச்சை, என்பதே முறையாயினும் எண்டுச்செய்யுளுக்கிப் பிறழவைத்தார். அலற்றுள் பரத்துவம் - பரமாகாசவனென்ற திருநாமத்தோடு நித்தியசூரி இன்ப வீட்டில் பாயலனந்த சொரூபமாய்த்திகழ்ந்தருள்வது. வியூகம்-சங்கர்ஷண பிரத்யுமன அநிருத்தர்களோத் தோற்றுவித்து வாசுதேவனென்ற திருநாமத்தோடு பாற்கடலிற் பள்ளிகொண்டருள்வது. விபவம் - ஸ்ரீராமகிருஷ்ணாதி திருவவதாரங்கள் செய்து தொட்டதைத் தண்டித்துச் சிட்டரைக்காத்தருள்வது. அந்தர்யாமித்துவம்-சித்திலும் அசித்திலும் எள்ளுக்குள் நெய்போலவுறைந்தருள்வது. அருச்சை-திருப்பதிகளில்*"தமருகந்தவெல்வுருவம்" என்றபடிநின்ற கிடந்த இருந்திருக்கோலங்களாக உறைந்தருள்வது. இவ்வைவர்க்கு சொரூபங்களுக்கும் கருதிப்பிரமாணம் முதலிய பிரமாணங்களை வல்லார்வாயுணர்க.

---

* தமருகந்தவெல்வுருவமல்லுருவந்தானே
தமருகந்தபெற்றமற்றபேர் - தமருகந்த
வெல்வண்ணஞ்சித்திரிக்கையாதிருப்பலே
அவ்வண்ணமாதியாகும்.

இக்கருத்து விளக்கியவன்றே தாம் என்றேறி மூத்தொழிலையும் பிறலிலையையும் பிரித்து அவனென்றும் அன்னவனென்றும் சுட்டினார்.

இனியோருரை - உலக மெல்லாவற்றையும் தாமேபடைத்தலும் காத்தலும் அழித்தலும் நீங்கலாகக் கணக்கிறந்த திருவிளையாட்டுடையராகிய அவரே எல்லாவுலகங்கட்கும் முதல்வர். அத்தன்மையராகிய ஆதிபகவனையே அடியோங்கள் புகலடைந்தோம்.

*

எல்லார்க்குந் தலைவருகிய பரவாசுதேவனையும் பாடத்தொடங்கிய பிபவத்தையும்வணங்காமல் அருட்சையவணங்கியது என்னை எப்பார்க்குஞ் சொல்லியது.

உ. சித்குணத்தர்தெரிவருகன்னிலை
எற்குணத்தரிதென்னியலுன்றனுள்
முற்குணத்தவரேமுதலோரவர்
நற்குணக்கடலாதலினன்றரோ. (உ)

இ-ள். சித்குணத்தர் தெரிவு அரும் கல் நிலைஎற்கு உணர்த்த அரிது - ஞான குணத்தை யுடையோரும் உணர்தலருமையாகிய அப்பரவாசுதேவரது கல்ல நிலையை அறிந்து கூற எனக்கு அரிது, எண்ணிய மூன்றனுள் முன்குணத்தவரே முதலோர்-சாத்துவிகம், இராசதம், தாமதம், என்றெண்ணப்பட்ட மூக்குணங்களுள் சிறந்ததாகியமுதற் குணமுடையவரே ஏனை இரண்டு குண முடையோர்க்கும் முதல்வராதலால், அவர் கல்குணக்கடல் ஆதலின் அன்ப - கட்புலத்திற்குத் தோன்றும் அவரது (திவ்விய மங்கள விக்கிரகத்தைச்சேவித்து) நல்லமங்கள குணங்களாகிய கடலிலாடுதல் வீடுபேற்றிற் குரிய நிமித்தம் பலவற்றினும் தன்மையாம் எ - று.

ஆதலருளுதபவம் செயலல. உளர்த்த எண்ணும் செவ்வெனச்சத்தசரம் தொகுத்தல். உயர்வு சிறப்புமையெதிர்கது. எகாரம்பிரிநிலை. (உ)

இதனலம்முதலோரது திருநாமத்தைக் கூறினார்.

கூ. ஆதியந்தமிலெனபாவையும்
ஓதினாலகில்லனவுள்ளன
வேதமென்பனமெய்தெரிவன்மையன்
பாதமல்லதுபற்றிலர்பற்றிலார்.

இ-ன். அலகு இல்லன உள்ளன வேதம் என்பன யாவை யும் - அளவில்லாதனவாய் என்றும் உள்ளனவாகிய வேதத்தி என்று சொல்லப்பட்ட எல்லா நூல்களையும், ஆதி அந்தம் அரி என ஒன்றினர்-அரியும் என்று தொடங்கி அரியும் என்று முடித்த வர்களாகிய, பற்று இலார் - அகப்பற்றுப் புறப்பற்றற்றவர்கள், மெய்நெறி நன்மையன் பாதம் அல்லது பற்றிலர் - மெய்மார்க் கத்தை இனிய இருப்பாக வுடைய இறைவனது திருவடிகளல் லாதமற் றெப்பொருளையுந் தமக்குப் பற்றுக்கோடாகப் பற்றமாட்டார்கள். எ-று.

"பிறவிப்பெருங்கட லீந்துவர் நீந்தா-நிறைவனடி சேரா தார்." என்பவாகலின் வீட்டை விரும்பிய பற்றற்றவர் அவ் வினறவன் தாளைப் பற்றுவர்என்பது. (க)

ச. செய்திலெய்யசொன்னூற்கனுற்றேனெனே
வைதவைவின்மராமரமேழ்தொளே
எய்தவெய்தவற்கெய்தியமாக்கதை
செய்தசெய்தவன்சொன்னின்றதேயத்தே. (ங)

இ-ன். வைதவைவின் ஏழ் மராமரம் தொளைஎய்த-நிறை மொழி மாந்தர் செபித்த சாபமொழிபோ ஏழுமராமரங்களும் தொளைபட, எய்தவற்கு எய்திய மாக்கதை, அம்பால் எய்த ஸ்ரீராமபிரானுக்கு உரித்தாகிய துஷ்காவியத்தை, செய்த செய்த வன்சொல் நின்றதேயத்து-இயற்றிச்செய்து முடித்த கவிமுடை யோனாகிய வான்மீகி பகவனது சொல்லாகிய இராமாயணம் என்று மிலவும் இத்தேயத்தின் கண், நெய்யின் நெய்யசொல் நூற்கல் உற்றேன் எனை - ஆலோசியாமல் விரைவாய்ப் புன் சொல்லால் இந்நூலைச் செய்யத் தொடங்கினேனை இஃதென்ன அறிவின்மை. எ - று.

என்னை என்பது எனையெனத் தொகுத்தது. (ச)

ஞ. தேவபாடையினிக்கதைசெய்தவர்
மூவரானவர்தம்முளுமுந்திய
நாவினருளையின்படிதான்றமிழ்ப்
பாவினலிதனைத்தெரிபண்பரோ. (எ)

இ-ன். மூவரானவர் - வான்மீகனர், போதாயனர், சிவனர், சிவனரை நீக்கி வசிட்டனரைக் கூறுவாரு முளர். அவர்செய்த

வசிட்டமென்பது இராமசரிதையன்மைய அல்லதூஉம் அதனுள் ஒருசாராரன்றி எல்லாரும் ஒப்பானமையானும் அவரைக் கூறுதல் பொருந்தாது. சிவன்செய்த ராமாயணம் அந்நியரா லும் முந்தியதாயினர் - வான்மீகனர் எ-று. (எ)

ஞ. துறையடுத்தவிருத்தத்தொகைக்கவிக்
குறையடுத்தசெவிகளுக்கோதில்யாழ்
நறையடுத்தவகனகன்மாச்செவிப்
பறையடுத்ததுபோலுமென்பாவரோ. (அ)

இ-ன். துறை அடுத்த விருத்தத்தொகைக் கவிக்கு உறை அடுத்த செவிகளுக்கு பலதுறைகளையுடைய விருத்தத்தொகை யாகிய பாட்டுக்களுக்கு இடமாகப்பொருந்தியசான்றோர்செவிக ளுக்கு, என்பா ஒதில்-எனது பாட்டுக்களைச்சொல்லின், யாழ்ந றை அடுத்த கல் அகனமாச் செவிப்பறை அடுத்ததுபோலும்- கேட்டற்கினிய யாழொலியாகிய தேனையுண்ட கல்ல அகனப் புள்ளின் செவிகளில் காது பிளத்தற்குரிய பறையொலிசார்ந் ததை யொக்கும்எ-று. (அ)

ஞ. கடையினின்றுயர்காயகன்றோற்றத்தின்
இடைநிகழ்ந்தபராமாவதாரப்போத்
தொடைநிரம்பியதோம்றமாக்கதை
சடையன்வெண்ணெய்கல்லூர்வயிற்றந்ததே. (கக)

இ-ள். நடையில் நின்று உயர்காயகன் தோற்றத்தில் - நல் லொழுக்கத்தின் மிகுந்த இறைவனது பரசுராம தயரதராம பலராமாவதாரங் களுள், இடைநிகழ்ந்த இராமாவதாரப் பேர் யதோம் அறுமாக்கதை - மத்தியில் நடந்தரா மாவதாரத்தைக் குறித்த பெரியதொடுத்தல் தொடை நிரம்பிய தன்மமற்ற பெருமைபொருந்திய இதிகாசம், சடையன் வெண்ணெய் நல்லூர்வயின்தந்தது-சடையப்பிள்ளையது வெண் ணெய் நல்லூரிலிருந்து செய்யப்பட்டது. எ-று.

சென்னைவாசிகளெல்லரும் சடையப்பிள்ளையை சடை யப்பமுதலியாரென்பர் அந்தசாவழக்குபற்றி. (கக)

ஸ்ரீமத்கம்பராமாயணம்.

உ-வது. ஆற்றுப்படலம்.

சரயுநதியைக்கூற்றும்படலம்.

அ. பம்பிமேகம்பரந்தபரப்பால்
கம்பன்மாலனவெம்மைமையாண்ணிலன்
அம்பிலுட்டுதுமென்றனகுன்றின்மேல்
இம்பர்வாரியெழுந்ததுபோன்றதே. (கூ)

இ-ள். கம்பன்மாதுலன் பாலுவால வெம்மைமையை நண்ணினனுன் அம்பில் ஆட்டுதும் என்று அகன்குன்றின்மேல் இம்பர் வாரி எழுந்தது போன்றது மேகம் பம்பிபரந்தது - நிலவுக்கு மாமனுகிய இமவான் குரியனுல் வெப்பத்தை யடைந்தான், அதைத் தணித்தற் பொருட்டு நீரைட்டுவோ மென்று அகன்ற அவ்விமய மலையின்மேல் இவ்வுலகத்துள்ள கடல் எழுந்ததை யொத்தனவி மேகங்கள் நெருங்கிப் பரவியது. எ-று. (கூ)

கூ. புள்ளிமால்வரைபொன்னெனநோக்கிவான்
வெள்ளிவீழிடைவீழ்த்தெனத்தாரைகள்
உள்ளியுள்ளவெல்லாமுவக்கீயுமவ்
வள்ளியோரின்வழங்கினமேகமே. (சு)

இ-ள். புள்ளிமால்வரை பொன் என நோக்கி-உலகில் இலக்கரையுள்ள பெரிய இமயமலை பொன்னென்று நோக்க, வான் வெள்ளி வீழ் இடை வீழ்த்த என - ஆகாயம் வெள்ளிக் கம்பிகளை அம்மலைமேல் வீழ்த்தது என்னுமாறு, உள்ள எல்லாம் உவந்து ஈயும் அவ்வள்ளியோரினுகரப் [illegible] தம்பழியெல்லாம் நினைத்துத் தம்மிடத்துள்ள எல்லாவற்றையும் கொடுக்கும் அவ்வள்ளியோரைப் போல, மேகங்கின - மேகங்கள் மழைத்தாரைகளைப் பெய்தன.

நோக்குவென்னும் வினையெச்சம் நோக்கியெனத்திரிந்தது.

மலைதான் பொன்னிறமாயிருக்கவும் வெள்ளிவிழுதுகளைப் பொன்னென நோக்க வென்றது-கடுக்கோடையில்பெய்யுமழையை சுவர்ண வருஷமென்று கூறும் வழக்குபற்றி. புள்ளிமால்வரை யென்றது - இமசேது பரியந்தமென்னு மிலக்குக் கூறுகல் பற்றி. (சு)

கூ. தலையுமாகமுந்தாளுந்தழீஇயதன்
நிலைநிலாதிறை * நின்றதுபோலவே
மலையினுள்ளவெலாங்கொண்டுமண்டலால்
விலையின்மாதரைவொத்ததவ்வெள்ளமே. (சூ)

இ-ள். அவ்வெள்ளம் தலையும் ஆகமும் தாளும்தழீஇ அதன் நிலாது இறை நின்றதுபோல மலையில் உள்ள எல்லாம் கொண்டு மண்டலால்விலையின் மாதரை ஒத்தது - அவ்வெள்ளம் சிகரத்தையும் நடு இடத்தையும் அடி வாரத்தையும் தழுவி அதனிடத்தில் நில்லாது, சிறிதுநேரம் நின்றது போலக்கரணப்பட்டு மலையிலுள்ள எல்லாப் பொருள்களையும்வாரிக்கொண்டு வருதலால் பொருட்பெண்டிரை யொத்தது.

சுட்டுப் பெயர் முன்வந்தது. † "மூற்படக்கிளத்தற் செய்யுளுரித்தே" என்பவாகலின். விலை மாதரைக் குறித்துரைக்குமிடத்து, தம்மை விரும்பிவந்த காமுகரது தலையையும் மார்பையும் பாதத்தையுந் தழுவி அத்தருவிய நிலையில் நில்லாது கடனுக்கு நின்றதுபோலச் சிறிது நேரம் நின்று அக்காமுகரிடமுள்ள பொருள்களெல்லாங் கொண்டு போதலால் என்றுகொள்க. எ-று. (சூ)

கூ. மலையெடுத்தமரங்கள்பறித்துமா
டினைமுதற்பொருள்யாவையுமேந்தலால்
அலைகடற்றலையன்றனைவென்றிய
நிலையுடைத்தலித்தலுக்கீதுமே. (கூ)

இ-ள். அந்நீத்தம் - அவ்வெள்ளம், மலைகளைப்பிடுங்கிக்கொண்டும் மரங்களைப் பறித்துக்கொண்டும் பக்கங்களிலுள்ள இலை முதலாகிய பிற பொருள்யாவற்றையும் தாங்கிக்கொண்டும் வருதலால் நிலையுடையகடலில் அப்போது அனைகட்ட விரும்பிய மனநிச்சயமுடைய வானர வெள்ளமேயாகும். எ-று.

வெளளத்திற்கு, அனைவேண்டிய என்பதற்கு சமுத்திரராஜனைக் கூடஷ் விரும்பிய எனக்கூறுக. மற்றவை இரண்டற்கும் ஒக்கும். (கூ)

கூ. பணிமுகக்களியானைபன்மாக்களை
டனிவருத்தெனவீர்த்திரைத்தார்த்தலின்
மணியுடைக்கொடிதோன்றவான்றலால்
புணரிமேற்பொரப்போவதுபோன்றதே. (கஅ)

---

* இறை - சிறிது, கடன்.
† தொல்காப்பியம் இளவியாக்கம் கூ.

இ-ள். (வெள்ளம்) பருத்தமுகத்தையும் களிப்பையுமுடைய யானைகளோப் பலகாலாள்களோடு அணிவகுத்தாற்போல இழுத்து மிருந்து ஒலித்தலானும் மணிகட்டிய கொடிகளோவிளங்கக் கொண்டுவந்து காட்டுதலானும் கடலிலுறைவன்மேல் போர்செய்யப்போலதை யொத்தது. எ-று.

அதிகாரப்பட்டமையின் வெள்ளம் வருவிக்கப்பட்டது. வெள்ளத்திற்குப், பல மிருகங்களோடெனவும் அழகுடைய பூங்கொடியெனவுங் கொள்க. (சக)

கஉ. கொடிச்சியரிடித்தசுண்ணமுகுங்குமஞ்கோட்டமேலம்
நடுக்குறுசுகந்தஞ்சிந்தூரத்தொடுநாத்தகாகம்
கடுக்கையார்வேங்கைகோங்குபசும்பொன்வெண்சொல்வென்னெய்
அடுக்கலினடுத்தநிதேதனதிவொதுமன்றே. (கஉ)

இ-ள். நடுக்கு உறு சந்தம் - குளிர்ச்சி மிகுதியுடைய சந்தனம், அரைப்பின் நடுவில தேயும் சந்தனம் எனவுமாம். (கஉ)

கச. கதவினோமுட்டிமள்ளர்கையெடுத்தார்ப்பவெய்தி
முதலலியோடைபொங்குகாவிரிவண்டுகிண்டத்
தூதைமலிந்தவந்திதிறபத்தடக்கைசாய்த்து
மதமழையானையென்னமருதஞ்சென்றடைந்ததன்றே. (கச)

இ-ள். கதவினை முட்டிமள்ளர் கையெடுத்து ஆர்ப்ப எய்தி - (வெள்ளம்) மதகின் கதவைமுட்டி உழவர் கையெடுத்து ஒலிக்கச்சென்று, முதல்அனி ஓடைபொங்க - ஊருக்குமுன்புள்ள குளம் நிறைய, நகர்வரிவண்டுகிண்ட - [illegible] உண்ணும் வரியுடைய வண்டுகள் குடைய, கதைமலிந்த - நெருங்கிய அரசனுடைய சிதற, உந்திதிறி இறைத்தடம் கைசாய்த்து - ஆற்றின் கரையில் நாட்டிய மூங்கில்கள் ஒடிய அவ்வியன்னும் விசாலித்த கையால் அகழ்ந்து, மதமழையானை என்ன மருதம் சென்றடைந்தது - மதமழையுடைய யானையைப்போல மருதநிலத்தில்பேர்ச்சேர்ந்தது. எ-று.

மள்ளர் கையெடுத்தார்த்தல் புதுப்புனலைக் கண்டு மகிழ்தல். முட்டி எய்தி சாய்த்துச் சென்றடைந்ததென முடிக்க.

யானைக்கூட்டத்தின் கதவை முட்டிப்பாகரும் பயக்தோடு கையைத்தூக்கி ஆரவாரிக்கப்போய் நெற்றியிலெறிந்த பட்

டம் விளங்க மதகினையுண்ணுகின்ற வரிவண்டுகள் குடைய இருபுறத்திலும் நெருங்கிய மனிதர்கள் ஒலிக்க பெரியதுதிக்கையால் சாய்த்தெனக் கூறுக. அன்று ஏ அசைகள். (கசு)

கஙி. முல்லையைக்குறிஞ்சியாக்கிமருதத்தைமுல்லையாக்கிப்
புல்லியநெய்தன்னோப்பொருவருமருதமாக்கி
எல்லையிற்பொருள்களெல்லாமிடைதடுமாறாதீராற்
செல்லுகதியிற்செல்லும்விசையெனச்சென்றதன்றே. (கஎ)

இ-ள். முல்லையைக் குறிஞ்சி ஆக்கி - (வெள்ளம்) குறிஞ்சி நிலப்பொருள்களை முல்லைநிலத்திற் சேர்த்து அதனைக் குறிஞ்சி நிலமாகச் செய்து மருதத்தை முல்லை ஆக்கி - முல்லை நிலப்பொருள்களை மருதநிலத்திற் சேர்த்து அதனை முல்லைநிலமாகச்செய்து, புல்லிய நெய்தல் தன்னோப் பொருவ அரும் மருதம் ஆக்கி- மருதநிலப்பொருள்களை அப்பவளமுடைய நெய்தல் நிலத்திற் சேர்த்து அதனை ஒப்பற்ற மருதநிலமாகச்செய்து, எல்லையில் பொருள்கள் எல்லாம் இடைதடுமாறும் நீரால்-வரம்பில்லாமல் பொருள்களெல்லாம் தத்தம் நிலத்தை நீங்கி மயங்குந் தன்மையால், செல் உறுகதியில் செல்லும் விசையனச்சென்றது - உயிர் செல்லும் கால்வகைக் கதியினும் உடன் செல்லும் இருவினை போலப்போயிற்று. எ-று. அன்று ஏ அசைகள். (கஎ)

நான்கதியாவன, தேவகதி, மக்கட்கதி, விலங்குக்கதி, நரககதி, என்பன. இருவினை, நல்வினை தீவினை என்பன. கருத்து வினைகள் தம்மைப்பூண்ட உயிர்களைத் தக்க கதியில் செலுத்துதல் போல வெள்ளம் தான்செலும் மார்க்கத்தில் அகப்பட்ட பொருள்களைச் செல்லுமிடமெல்லாம் கொண்டு சென்றது.

கஙி. கல்லிடைப்பிறந்துபோந்து கடலிடைக்கலந்ததீதம்
எல்லையின்மறைகளோதுமியம்பருமபொருளிதென்னத்
தொல்லையினெனநேயாகத் தறைதொறும்பாதஞ்சூழ்ந்து
பல்பெருஞ்சமையஞ்சொல்லும்பொருளுமபோற்பரந்ததன்றே. (கஅ)

இ-ள். கல இடைப்பிறந்து போந்து கடல் இடைக்கலந்த நீத்தம் - இமயமலையில் உற்பத்தியாகிச் சென்று கடலிற்சேர்ந்த வெள்ளம், தொல்லையில் தன்னேயாகித் துறைதொறும் பாதத

சூழ்ச்சி - தோன்றிய ஆதிகாலத்தில் ஒன்றேயாகி நதி முதலிய வற்றில் சென்ற ஆராய்ச்சியுடையதாகி, எல்லியில் மறைகளாலும் இயம்ப அரும்பொருள் ஈது என்ன - அனவில்லாத வேதங்களாலும் இத்தன்மைத்தென்று சொல்ல அருமையாகிய ஈசுகாரணவஸ்து இதுவேயென்று, பல்பெரும் சமையம்சொல்து பொருளும்போல் பார்த்து - பலபெரிய சமையநூல்கள் தமமதத்துக்குரிய தெய்வமாகச் சொல்லும் அவ்வஸ்துவைப்போல அவ்விடங்களில் வியாபித்தது. எ-று. (கஞ)

சமையம் ஆகுபெயர்.

வெள்ளம் ஒன்றேயாகி சூழ்ச்சியுடைய தாகிப் பார்த்தது என முடிக்க. அதுசமையமேயன்றி மற்றெல்லாச் சமையங்களும் அடங்கப் பல்பெருஞ் சமையமென்றார். கருத்துருத்தாவனவஸ்து ஒன்றே பல சமையங்களில் வியாபித்தாற்போல வெள்ளம் ஒன்றே பல விடங்களிலும் வியாபித்தது.

கூ-வது. நாட்டுப்படலம்.

கோசலநாட்டின் வளத்தைக் கூறுகின்றபடலம்.

க. வாங்கரும்பாதநான்கும்வகுத்தவான்மீகியென்பான்
ஈங்கவிசெவிகளாரத்தேவரும்பருகச்செய்தான்
ஆங்கவன்புகழ்ந்தநாட்டையன்பெனுமற்வமார்தி
மூங்கையான்பேசலுற்றானென்னையான்மொழியலுற்றேன். (க)

இ-ள். வாங்க அரும்பாதம் நான்கும் வகுத்த வான்மீகி என்பான் - யாவராலும் வகுக்க அருமையான பாதம் நான்கையும் வகுத்துச்செய்த வான்மீகி என்று உயர்த்திச் சொல்லப்படுகிற மூனிபுங்கவன், நீங்கவி தேவரும் செவிகள் ஆரபருகச் செய்தான் - மதுரமாகிய கவியமுதைத் தேவர்களுஞ் செவிகளாகிய வாய்கள் நிறைய உண்ணும்படிச் செய்தருளினான், ஆங்கு அவன் புகழ்ந்த நாட்டை யான் அன்பு எனும் நறவம் மாந்தி- அவ்வாறு அவன் சிறப்பித்துரைத்த கோசல தேசவளனை அடி

யேன் அன்பென்று சொல்லப்படுகிற கள்ளைக் குடித்து, மூங்கையான் பேசல் உற்றான் என்னமொழியல் உற்றேன் - ஊமையானவன் பேசத்தொடங்கினான் போலச் சொல்லத் தொடங்கினேன். எ-று. (க)

நான்கும் என்னும் உம்மை முற்றும்மை. தேவரும் என்னும் உம்மை உயர்வு சிறப்பு. நாதி ஆகுபெயர்.

ஆதியில் வடநூலில்யாப்பு செய்தவரே வான்மீகானமையின், வாங்கரும்பாத நான்கும் வகுத்தவான்மீகியெனவும், சத்திய லோகத்தில் நூறுகோடி கிரந்தங்களால் வழங்கும் இராமாயணத்தினும் வான்மீகம் சிறப்புற்றமையின் தேவரும் பருகச் செய்தான் எனவும் கூறினர். வாங்கரும் என்பதற்கு யாவராலும் நீக்குதலுக்கு அருமையான என்றேனுமாம். எல்லாராலும் செய்ய அருமையாயினபோது இவர்செய்ததை நீக்க அருமையான என்றுரைத்தல் உரையன்மையறிக. அல்லதூஉம் பாவராலுஞ் செய்ய அரிதாகிய சுலோகத்தை வகுத்து இவர் ஸ்ரீமத்ராமாயணம் செய்தமையாலன்றே அது ஆதிகாவிய மெனப்பட்டது. இதனாலும் வாங்கரும் என்பதற்கு யாவராலும்வகுக்க அருமையானவென்றுகோடலேபொருளென்க. (க)

கக. படையுழவெழுந்தபொன்னும்பணிலங்களுயிர்த்தமுத்தும்
இடியபரம்பிற்காந்தமினமணித்தொகையுமெல்லும்
மிடைபசுங்கதிருமீறுமென்றழைக்கரும்பும்வண்டம்
கடையிரும்முகமும்போதுங்கண்மலர்ந்தொளிருமாதோ. (எ)

இ-ள். படைஉழ எழுந்தபொன்னும் பணிலங்கள் உயிர்த்தமுத்தும் இடிய பரம்பில் காந்தம் இனமணித்தொகையும் நெல்லும் மிடைபசுங்கதிரும் கண்மலர்ந்து ஒளிரும் - ஏருழுதலால் மேலெழுந்த பொன்னும், சங்கங்களீன்ற முத்துக்களும், பரம்படித்த நிலத்திற் பிரகாசிக்கின்ற கூட்டமாகிய இரத்தினத் தொகையும், நெற்களும், இவற்றில் கலந்த பசுங்கிரணங்களும், இடங்களிற் பரவிப் பிரகாசிக்கும், மீனும் கண்மலர்ந்து ஒளிரும் - மீன்களும் புனலில் கண்துஞ்சாது சஞ்சரிக்கும், மென்தழைக்கரும்பும் கண்மலர்ந்து ஒளிரும் - மெல்லிய தழையுடையகரும்புகளும் கணுக்கள் பிளந்து ஒங்கும், வண்டும் கண்மலர்

ந்து ஒளிரும் - வண்டுகளும் மகளிர் கண்போல மலர்ந்து விளங்கும், கடைசியர் முகமும் கண்மலர்ந்து ஒளிரும் - உழத்தியர் முகங்களும் விருப்பத்தோடு கணவரை கண்மலர்ந்து பார்க்கும், போதும் கள் மலர்ந்து ஒளிரும் - பூக்களும் தேனோடு விகசித்து விளங்கும். (எ)

கக. வெண்டளாக்கலைவைச்சேறுங்குமவிரைமென்சாந்தும்
குண்டலக்கோலமைந்தர்குடைந்தநீர்க்கொள்ளைச்சாற்றில்
தண்டலைப்பாப்புஞ்சாலிவேலியுந்தழீஇயவைப்பும்
வண்டலிட்டோடுமண்ணுமதரமொய்க்குமாதோ. (கஉ)

இ-ள். குண்டலக்கோலமைந்தர் குடைந்தநீர்க்கொள்ளைச் சாற்றில் - குண்டலமணிந்த அழகுடைய மைந்தர்களாடியபுனலினது மிகுதியைச் சொல்லுமிடத்தில், வெண்தளாக் கலவைச் சேறும் குங்குமவிரை மென்சாந்தும் - அம்மைந்தரணிந்த வெள்ளிய தடிப்புடைய பரிமளம் பொருந்திய திருமண்ணும், குங்குமநிறமுடைய வாசம்பொருந்திய மெல்லிய சீரூர்ண்ணும், வண்டல் இட்டு ஓடும்-வண்டலிட்டுக்கொண்டோடுகின்ற, தண்டலைப்பாப்பும் சாலிவேலியும் தழீஇய வைப்பும் மண்ணும் மதரமொய்க்கும்-சோலைப்பாப்புக்களிலும் நெல்லிலையும்வயல்களிலும் அவற்றைச் சூழ்ந்த நிலங்களிலும் வெறுமண்ணிலும் வண்டுகள் மொய்க்கும். எ-று. (கஉ)

மாது ஓ அசைகள்.

கலவைச் சேற்றை வெண்சாந்தெனவும் மென்சாந்தைச் செஞ்சாந்தெனவும் உரைப்பாருமுளர். அவ்விரண்டையும் ஒருங்கு பூசுதல் வழக்கன்மையின் அது உரையன்மையறிக. அல்லதூஉம் அரசனெவ்வழி குடியவ்வழி யென்பவாகலானும் "தன் நிருமத்தைத் தானுஞ் சாதியே" என்று கடிமணப்படலத்திலோதியபடி யாதும் இதுவேபொருளென்க.

உ0. சேஇண்டவொண்கலுரிற்றிரிகின்றசெங்காலன்னம்
மாஇண்டகளினப்பள்ளிவளர்த்தியமழலைப்பிள்ளை
காஇண்டசேற்றுமேதிகன்றுள்ளிக்கோப்பச்சோர்ந்த
பாலுண்டெயிலைப்பச்சைத்தேரைதாராட்டும்பண்ணை. (கந)

இ-ள். சேல் உண்ட ஒண்கண்ணுரில் திரிகின்ற செங்கால் அன்னம் - கயல்மீனென்ற ஒளிபொருந்திய கண்ணுடைய

கடைசியர்போல நடக்கின்ற செவ்வந்த கால்களையுடைய அன்னங்கள், மால் உண்டருளினப்பள்ளி வளர்த்தியமழலைப்பிள்ளை-பெருமைகொண்ட தாமரைப் பூக்களாகிய சேக்கையில் வளர்த்திய சிறுகுழந்தைகள், கால் உண்ட சேற்றுமேதி கன்று உள்ளிக் கூப்பச்சோர்ந்த - காலிற்படிந்த சேற்றையுடையவருமைகள் ஊரில்விட்டு வந்த கன்றைகூவி நினைத்துக் கதற அன்பால் ஒழுகிய, பால் உண்டு துயிலப் பச்சைத்தேரை - பாலேப்பருகி நித்திரைசெய்யப் பச்சைத்தவளைகள், பண்ணை - வயல்களில் திருந்து, தாராட்டும் - தாலாட்டும். எ-று. (கஙூ)

கண்ணூரில் என்ற உவமையால் அக்கடைசியரும் அவர் மக்களைப் பச்சைத்தேரை தாலாட்டக் கருமை மலர்களைப்பரப்பி அச்சேக்கையில் துயிலச்செய்து தொழில் புரிவரென்று கொள்க.

உ. குயிலினம்வதுவைசெய்யக்கொம்பிடைக்குலிக்குமஞ்ஞை
அயில்விழிமகளிராமெரக்கினுக்கழகுசெய்யப்
பயில்சிறையராசவன்னம்பன்மலர்ப்பள்ளிநின்றும்
துயிலெழுதமிகாலைச்செவ்வழிமுரல்வசோலை. (கச)

இ-ள். சோலை-சோலைகளில், குயில் இனம் கொம்பு இடைவதுவை செய்ய-குயிற்கூட்டங்கள் மரக்கிளைகளில்மணம்புரிய, அயில்விழிமகளிர் ஆமெரக்கினுக்கு அழகுசெய்ய - கூரிய விழிகளையுடைய பெண்கள் ஆமெரக்கினுக்கு அழகுசெய்ய, பயில்சிறையராசவன்னம் பன்மலர்ப்பள்ளிநின்றும் துயிலெழுதமிகாலைச்செவ்வழிமுரல்வசோலை - பயிலுகின்ற சிறகையுடைய அரசவன்னங்கள் பலமலர்களையுடைய பள்ளியிடத்தினின்றும் துயிலெழுதற்கு மிகுகாலையிற் செவ்வழிப்பண்ணைப் பாடுகின்ற சோலை.

உக. கறப்புறுமன்முலைக்கன்னிற்செவப்புறுகுட்டுக்காட்டி
உறப்புறுபடையிற்றுக்கியுபசையின்றிச்சேறி
னெறப்பிலகளிப்பின்வெம்போர்மதகையீரவாழ்க்கை
மறப்படவாவிபேணுவாணம்பொருத்துவாரும். (கஞ)

இ-ள். கறப்பு உறுமன்முலைக் கன்னில் செவப்பு உறுகுட்டும் காட்டி - சினமிகுந்த மனத்தையும் கண்போலச் செவந்த உச்சிக்கொண்டையையும் காட்டி, உறபகை இன்றிச்சேறி - உற்றபகையில்லாமலே மூண்டு, உறப்பு உறுபடையில் தாக்கி - அலையுவமாகிய கால்நீட்டிய ஆயுதத்தால் ஒன்றையொன்று தாக்கி, வெம்போர் களிப்பின் வெறுப்பு இல - வெவ்விய செருச்செய்தலில் உவப்பால் வெறுப்பில்லாதனவாய், மதகைய வீர வாழ்க்கை - வலியுடையனவாய் வெற்றிபெறும் வாழ்க்கைக்கு, மறப்பட ஆவிபேணு வாணம்பொருத்து வாரும் - குற்றம்

உண்டாக் உயிரைக்காத்தோடாத சேவல்களைப் போர்செய்யப் பொருத்திவிடுவாரும். எ-று. (கசு)

உக. முச்சமுக்கனிபிளவுமுதிரையின்முழுத்தசெய்பிற்
செச்சையிர்க்கண்டங்கண்டப்பிடையிடைசெறிந்தசோற்றில்
தக்கமிலிருக்கைதாமும்விருந்தொடுந்தமரினேடும்
அத்தனைமுதருண்டியயில்வுறமமைத்தெக்கும். (கஎ)

இ-ள். எங்கும் - அந்நாட்டில் லெவ்விடமும், மூக்குமுக்கனியின் - கனிகளுக்கெல்லாம் முற்படுகின்ற பலாவாழை தேமர என்னும் முக்கனிகளோடும், நாலுமுதிரையின்-பலவிதபருப்பொடும், முழுத்த நெய்யில் - அவற்றை யமிழ்த்தவிடுகின்ற நெயோடும், செச்சையிர்க்கண்டம் - செம்மிறமுடைய தயிர்க்கட்டிகளோடும், கண்டம் - கண்ட சர்க்கரையோடும், இடைஇடை செறிந்த சோற்றில்-இடையிடை சேர்க்கப்பட்ட சோற்றோடும், தம் தம் இல் இருந்து - தத்தம் வீடுகளிலிருந்து, அழுதூர் அந்தணர் உண்டி - தேவாராதனம் பிராமண ஆராதனஞ் செய்தெஞ்சிய உணவை, விருந்தோடும் தமரினோடும் தாமும்-விருந்தினரோடும் சுற்றத்தாரோடும் தாங்களும், அயில் உறும் அமைத்து - உண்ணுகின்ற ஒலியுடையது. எ-று. (கஎ)

அழுதூர் அந்தணர் என்பதே முறையாயினும் எண்சீர் செய்யுளுக்கிப் பிறழவைத்தார்.

உச. முறையறிந்தவாவைதீக்குமுனிவுழிமுனிந்துசெல்லும்
இறையறிந்துயிர்க்குநல்குமிசைசெலுவேந்தன்காக்கப்
பொறைதவிர்ந்துயிர்க்குந்தெய்வப்பூதலந்தன்னிற்பொன்னின்
சிறைபாஞ்சொரிந்தவங்கமெடுமுதகாற்றசெய்தல். (உ0)

இ-ள். முறைஅறிந்து அவரவைதீக்கி - அரசநீதியை யுணர்ந்து ஐசையைப்போக்கி, முனிவுழி முனிந்து - கோவிக்குமிடத்திற் கோவித்து, வெஃகும் இறை அறிந்து - தனக்குரிய குடிமிறை இவ்வளவென்றறிந்துபெற்று, உயிர்க்கு நல்கும் இசை கெழுவேந்தன்காக்க-பகையரசர் முதலியோர் கவியாவண்ணம் குடிகளோக்காத்து(அருள்செய்யும்)சேர்ந்திபொருந்திய தயாதமக ராசன் காவல்செய்ய, பொறைதவிர்ந்து உயிர்க்கும் தெய்வப் பூதலம் தன்னில் - அதனால் பாரம் நீங்கி யிளைப்பாறும் தெய்

வத்தன்மையுள்ள பூமியில், நெய்தல் பொன்னின் நிறைபாரம் சொரிந்து வங்கம் நெடுமுதுகு ஆற்றும்-நெய்தல் நிலம் பொன்னிலுல் நிறைந்த பாரத்தைச் சொரிந்து மரக்கலமாகிய தனது நெடியமுதுகைச் சிதிதாற்றிக்கொள்ளும். எ-று. (உ0)

உயிர் என்றது கண்டு குடிகளை. தயாதசக்காவர்த்தி செங்கோலோச்சுதலால் பாரநீங்கி யிளைப்பாறும் பூதலத்தில் நெய்தல் பாரத்தைச் சொரியுமென்பது கருத்து. பூதலம் தன்னில்-பூமிபோல, வங்கம் - மரக்கலங்கள், பொன்னின் நிறைபாரம் - பொன்னிலுல் நிறைந்த பாரத்தை, நெய்தல்-நெய்தல் நிலத்தில், சொரிந்து - தன்னி, நெடுமுதுகு ஆற்றும்-நெடுமுதுகை ஆற்றிக்கொள்ளும், எனினும் அமையும்.

உடு. எதிரும்மரியின்சுமையெடுத்துவாவிட்டுபோர்கள்
குதிகளும்போற்றிக்கொல்வார்கொன்றதெற்றுவைகள்செல்வார்
வதிவர்க்குதவியிக்கவிருத்தணமணியினுய்ப்பான்
தெதிகளும்புதையப்பண்டிலைத்தமண்ணெனியழுர்வார். (உக)

இ-ள், எதிரும் - அரிபப்பட்ட, கொன்ற-தடியாலடித்த, தெதிகளும் புதையப் பண்டிநிரைத்து மண்கெவிய ஊர்வார்-வெற்றிடகெரியாமல் வழிகளும் மறையப் பண்டிகளில் நிரப்பி பூமிகுழைய அப்பண்டிகளைச்செலுத்துவார்கள். (உக)

உசு. எதிர்படுவயலிலுள்ளகடிகமழ்பொழிலிலுள்ள
முதிர்பலமரத்தினுள்ளமுதிரைகள்புறவினுள்ள
பதிபடுகொடியினுள்ளபடிவளர்குழியினுள்ள
மதிவணமளவித்தொள்ளுமவனெனமன்னர்சொல்வார். (உ2)

இ-ள். பதிபடுகொடியில் உள்ள - பதிக்கப்பட்ட கொடியிலுள்ளவைகளையும், இப்பாட்டை எண்ணுமைகளை வருவித்து முடிக்க.

உஎ. வேலைவென்றமுகத்தியர்வெம்முலை
ஞாலமின்முருகிற்றிருமகட்கொர்பால்
பாலைதந்தமதப்பருகிப்பரு
வாலைமின்னமுதர்க்குமருகலாம். (உச)

இ-ள். பாலைதந்த மதுப்பருகி - அரிந்த தென்னம்பாலை சொரிந்த கள்ளை உண்டு.

உ அ. முட்டிலட்டின்முழங்குறவாக்கிய
கெட்டுலேக்கமுநீர்நெடுநீத்தம்தான்
பட்டமென்கமுகோங்குபடப்பைபோய்
கட்டசெந்கெலினுழவனர்க்குமே. (உசு)

இ-ள். முட்டி இல் அட்டில் நெடுஉலை முழங்கு உறவாக்கிய, கழுநீர் நெடும் நீத்தம் – உணவுக்குரிய பண்டங்கள் குறைவில்லாத மடைப்பள்ளியில் பெரிய உலைகளில் ஒலித்த ஓசுவர்ப்பதற்கு அரிசிகழுவிய புனலாகிய பெரியவெள்ளம், (உசு)

அடு இல் என்பது அட்டில் என டகர ஒற்றிரட்டித்து நின்றது.

உக. குற்றபாருகொழிப்பவர்கோனெறி
கற்றினாதகருங்கணுஷேச்சியர்
மூற்றினாரமுகந்தமுன்றிலிற்
சிற்றில்கோலிச்சிதறியமுத்தமே. (உக)

இ-ள். நெறிகற்று இல்லாத கரும் கண் நுஷேச்சியர்-முறைமை கல்லாத கரிய கண்களையுடைய பெண்களெல்லாம், மூற்றில் ஆரமுகந்து தம்முன்றிலில் - முச்சில் நிறையவாரித் தமது முற்றத்தில், சிறுஇல் கோலிச்சிதறிய முத்தமே - சிறுவீடுகள் கட்டி விளையாடிச் சிதறச் செய்த முத்தங்களே, குற்றபாகு கொழிப்பவர் கோள் - குறுகுதலையுடைய சருக்கரைப்பாகைப் பனையோலையிற்சேர்த்து விற்பவர் கொள்வது. எ-று. (உக)

கருத்து - பனையோலையிற் காய்ச்சிவிடுத்த சர்க்கரைப்பாகை நுஷேச்சியர் விளையாடிச் சிதறவிட்ட முத்தங்களைக் கொடுத்து வாங்குவர்.

கூ. வள்ளிகொள்பவர்கொள்வனமாமணி
துள்ளிகொள்வனதூங்கியமாங்கனி
புள்ளிகொள்வனபொன்னினிபுனைகன்
பள்ளிகொள்வனபங்கயத்தன்னமே. (கூ)

இ-ள். வள்ளிகொள்பவர் மாமணி கொள்வன - நிலத்தோண்டிக் கீழ்நெடுப்பவரால் ஆதனங்கள் கொள்ளப்படுவன, தூங்கிய மாங்கனி துள்ளிகொள்வன - மரத்தில் தொங்குகின்ற மாம்பழங்கள் ரசத்துளிகளைக்கொண்டிருப்பன, பொன்னினி புனைகள் புள்ளிகொள்வன – பொன்போல பூத்தது விரிந்த புன்னைப்பூக்கள் ரத்தப்புள்ளிகளைக்கொண்டிருப்பன, அன்னம் பங்

கயத்து பள்ளிகொள்வன – அன்னப்புட்கள் பங்கயப்பூக்களில் வந்து கொண்டிருப்பன. எ-று. (கூ)

கூக. கொன்றைவேய்ங்குழற்கோவலர்முன்றிலிற்
கன்றுறக்குங்குரலைவகடையர்
புன்றலைப்புனங்காப்புடைபோதரச்
சென்றிசைக்குநுஷேச்சியர்செவ்வழி. (கூ)

இ-ள். கடையர் குரவைகொன்றை வேய்ங்குழல் கோவலர் முன்றிலில் கன்று உறக்கும் - உழத்தியர் பாடுகின்ற குரவைப்பாட்டுக் கொன்றைக்குழலையும் வேய்ங்குழலையு முடைய இடையர்களுடைய முற்றத்திலிருக்கின்ற ஆன்கன்றுகளை உறங்கச் செய்யும், நுஷேச்சியர் செவ்வழி புன் தலைப்புனம் காப்பு உடைபோதரச்சென்று இசைக்கும் - நெய்தனிலப்பெண்கள் பாடும்செவ்வழிப்பண் சிறிய இடத்தை யுடைய சிறுதானியம் விளையும்கொல்லைக்காவல் கெட்டுப்போகப்போ யொலிக்கும். "ஆயோயெனுங்குரலேயோபுனமழிக்கின்றதே" என்பதுபோல நுஷேச்சியர் செவ்வழிப் பண் கிளி முதலியவைகளை வருவித்துக் கொல்லையை அழிக்கும் என்பது. கருத்து-மருதநிலத்திற் கடைசியர் பாடும் குரவைப் பாட்டு முல்லை நிலத்திற் கன்றுகளை உறங்கச்செய்யும் நெய்தனிலத்தில் நுஷேச்சியர்பாடும் செவ்வழிப் பண்ணுநெய்தல் நிலத்திற் புனத்தையழிக்கும். (கூ)

கூஉ. சேம்புகால்பொரச்செங்கழுநீர்க்குளத்
தூம்புகாலச்சுரிவளைமேய்வன
காம்புகால்பொரக்கண்ணகன்மால்வரைப்
பாம்புதான்றெனப்பாய்பசுந்தேறலே. (கூ)

இ-ள். கண் அகல் மால் வரை-இடமகன்ற பெரிய மலையிலுள்ள, காம்பு கால் பொர-தேனிரல் பொருந்திய மூங்கில்களில் காற்றுமோத, பாம்பு தான்று எனப்பாய் பசும்தேறல்-பாம்புதொங்குதலைபோல அம்மூங்கில்களினின்று ஒழுகும் பசுந்தேனை, சேம்புகால் பொரச் செங்கழுநீர்க்குளத் தூம்புகாலச் சுரிவளைமேய்வன - சேம்பினது அடியைப் பறிக்க செங்கழுநீர்க் குளத்தினது சலதாரைவேகமாய் விடுக்கச் சுரியுடைய சங்குகள் மேய்வன எ - று. (கூ)

தான்ரு லென்றும் வினையெச்சம் தான்றனத் நிரிந்து நின்றது.

கூடு. பிறைமுகத்தலைப்பெட்பினிரும்புபோழ்
குறைகதிர்ச்சிரல்குப்பபருப்பொடு
பிறைவெண்முத்தினிறத்தரிக்குலை
உறைகொட்பினளட்டிடத்தோறெலாம். (கஎ)

இ-ள். பிறைமுகத் தலைப்பெட்பின் இரும்பு போழ்குறைக திர்ச்சிரல் - மூன்றும்பிறைபோன்ற அரிவாள் மடிவினைத்து நறுக்கிய சுரிந்தொகைகளும், குப்பைபருப்பொடு - பருப்புக்குவியலோடு, பிறைவெண்முத்தின நிறத்து அரிசிக்குலை - நிரம்பிய வெண்மையாகிய முத்தின் நிறத்தையுடைய அரிசிக்குவியலகளும், கொட்பினளட்டிடத்தோறெலாம் உறைவு - வரிசைகளாகவுள்ள அளவுகுட்டி யிடங்கள்தோறும் கொட்டப்பட்டுக் கிடப்பன என்க. (கூன)

கருத்து, அன்னசாலைகள்தோறும் திருத்திய கறிகளும் பருப்பும் அரிசியும் இடப்பன.

கூட. இயல்படைபெயர்வனமயிலினமுயின
வெயில்படைபெயர்வனமுகிலவர்குழல்போற்
புயல்படைபெயர்வனபொழிலவர்விழிபோற்
கயல்படைபெயர்வனகடிகமழ்கழனி. (சஉ)

இ-ள். முகிலவர் - தனங்களையுடைய தருணமங்கையரது, இயல்-சாயலைப்போல, மயில் - மயில்கள், பொழில் - சோலையில், புடைபெயர்வன-சஞ்சரிப்பன, மணி நிழலின் வெயில்புடை பெயர்வன - அவரணிந்த இரத்தினபரணங்களின் ஒளிபோல வெயில் அப்பொழிலகத்தே விளக்குவன, குழல்போல் புயல்புடைபெயர்வன - அவரது கூந்தலைப்போல மேகங்கள் அப்பொழிலில் தவழ்வன, அவரிவிழிபோல் அவர் கண்களைப்போல, கடிகமழ்கழனிகயல் புடைபெயர்வன - வாசம்வீசும் வயல்களினிடத்தில் சேல்மீன்கள் சஞ்சரிப்பன என்க. (சஉ)

கூஙி. தெனமலியல்லனிரைவருதனம்
சென்மலியல்லனதொகுகடலமிர்தம்
னமலியலனதிருநியம்
பொன்மலியல்லனமணிபடுபுனம். (சஙி)

இ-ள். நெல்மலி யல்லன நிரைவரு தானம் - நெற்போர்களில்லாவரிசையாகிய முத்துக்குவியல்களாம், சொல்மலி அல்லனதொடு கடல் அமிர்தம் - சடையியாது சொற்றொகுதிகளில்லாதவிலையால் கரையைத்தொடுகின்ற பாற்கடலினுண்டாகிய அமிர்தமாம், கல்மலி அல்லன நதிதருநியமும் - கல்லமலிகளில்லாத நதிகள்தந்த நிதிக்குவியல்களாம், பொன்மலி அல்லன மணிபடுபுனம் - பொற்குவைகளில்லாத இரத்தினங்கள்பதிந்த மணற்குன்றுகளாம் என்க. (சஎ)

நெற்குவைகளாயினும் அவை நிறத்தால் வரிசையாகிய முத்துக்குவைகளோப்பேல்வன, சொற்றொகுதிகளாயினும் அவை மதுரத்தால் கடலினுண்டான அமிழ்தைப்போல்வன, நல்லமலிகளாயினும் அவை நிறப்பொலிவால் நதிகள்தந்த நிதிக்குவைகள்போல்வன, அழகிய மலிகளாயினும் அவை மணிகள் விளங்குதலால் மணல்மேடுபோல்வன என்பது கருத்தாகக் கொள்க, இனியோருரை, வரிசையாகிய முத்துக்குவைகளல்லன நெற்குவைகளாம், தொடுகடல் அமிர்தங்களல்லன சொற்றொகுதிகளாம், நதிகள்தந்த நிதிக் குவைகளல்லன நல்ல மலிகளாம், மணிபடு புனங்களல்லன பொன்மலிகளாம்.

கூசு. பத்திரையிசையர்பயிலிடமிதுர்
கந்தனையிசையர்கலிதெரிகழகம்
சந்தனவனமலசன்பகவனமாம்
கந்தனவனமலகாறையினிபுறவம். (சஅ)

இ-ள். இசையர் பத்திரை பயில் இடம் சந்தனவனம் அலசன்பகவனம் ஆம் - மங்கையர்கள் பந்து விளையாடும் இடங்கள் சந்தனவனங்களாயினும் அவையல்ல அவர்மேனி நிறத்தாலும் முகத்தாலும் சண்பகவனங்களாம், மயில் ஊர்கந்தன் அனையவர் கலிதெரி கழகம் கந்தனவனம் அல நறையினிபுறவம் - மயிலாரும் முருகனோயொப்பவர் வேதமுதலியநூல்களோப் பயிலுமிடம் கந்தனவனங்களாயினும் அவையல்ல அவரது வெருகு தபல்வரிசையால் தென்பார்த்த முல்லைவனங்களாம் என்க. (சக)

கூன. பழையர்தமனையபழனறைகமும்
உழவர்தமனையனமுதொழில்புரியும்
மழவர்தமனையமணவொலிவிசையின
மிழவர்தமனையனிசைபயில்வனையாழ். (தo)

இ-ள். பழையர்தம்மனை அன கிழோபழகறைநகரும் - கள் விற்போர்வீட்டில் கட்குடிப்பவரைப்போல் பழத்தினதுதேனை க்கிளிகள் உண்ணும், உழவர் தம்மனையன பயில்வஹோ உழுதொ ழில்புரியும் - உழவர்கள் வீடுகளுக்கு உரியனவாகிய உழுதொழி ல்களை சஞ்சரிக்கின்ற சங்கங்கள் செய்யும், மன ஒலி இசையின் கிழவர்தம் மனையன யாழ் மழவர் தம்மனையன - மங்கல ஒலியா கிய இசையினையுடைய பாடகரது வீடுகளிலுள்ளனவாகிய வீ ணைகள் இளமைந்தர் வீடுகளிலுள்ளன. எ-று.

மனை அனஎன்றுபிரித்து மங்கலஒலியாகிய இசையினையுடை ய பாடகரது மனைகளிலுள்ளனபோல வீணைகள் இளமைந்தர் வீடுகளிலுள்ளன எனவுமாம். உழவர்தம்மனையன என்றதனா ல உழவர்கட்குரியனவென்பது கருத்தாகக் கொள்க. (கூ0)

கூ-ஏ. எள்ளுமேனலுமிறைக்குஞ்சாமையும்
கொள்ளுங்கொள்ளோயிற்கொணரும்பண்டியும்
அள்ளலோங்கனத்தமுதின்பண்டியும்
தள்ளுகீர்மையிற்றஜ்மயக்குமே. (கூஏ)

இ-ள். கொள்ளும்-கொள்ளோயும், அள்ளல் ஓங்கு அளத்தி அமுதின் பண்டியும் - சேறுபடிந்திருக்கின்ற அளத்திலுண்டா கிய உப்பைக் கொண்டுவரும் பண்டிகளும், (கூஏ)

கூ-கூ. சோலைமாலிலந்தருவியாவரே
வேலைகண்டுதாமீளவல்லவர்
சாலும்வார்புனற்சாயுமும்பல
காலிலேடியுங் கண்டதில்லையே. (கூ0)

இ-ள். சோலைமாலிலம்தருவி - சோலைகள்சூழ்ந்த பெரிய கோசலதேயத்தைத் தொடர்ந்து, வேலைகண்டு மீளவல்லவர் யாவர் - எல்லையைப்பார்த்து மீளவல்லவர் எவர், சாலும் வார் புனல் சாயுமும் - நிறைந்தபெரும்புனலுடைய சாயுமாகிலும், பலகாலின் ஓடியும் கண்டது இல்லை - அனேககால்வாய்களா லோடியும் பார்த்ததில்லை எ-று. (கூ0)

சூ0. வீடுசேர்நீர்வேலிகானமடுத்
தூடுபேரினுமுலவிலாகலம்
கூடுகோசலமென்னுங்கோதிலா
நாடுகூறினுநகரங்கூறுவாம். (கூக)

இ-ள். யாவுமறியப் புனல்மிகுதியுள்ள கடல் ஊழிக் காற் றால்மோதப்பட்டு, இருப்பிடத்தினின்று பெயர்ந்து மூடிக்கொ ள்ளினும், அழிவில்லாத கன்மைகள்கூடிய, கோசலதேயமென் னுங் குற்றமில்லாத நாட்டின் வனத்தைச் சொன்னேம், இனி நகரச்சிறப்பைக் கூறுவாம் எ - று. (சூக)

சூ-வது. நகரப்படலம்.

திருவயோத்தியின்சிறப்பைக்கூறுகின்றபடலம்.

சூக. செவ்வியமதுரஞ்சேர்ந்தநற்பொருளிற்சீரியகூரியதிருச்சால்
வவ்வியகவிஞராவரும்வடநூன்முனிவரும்புகழ்த்துவரம்பில்
எவ்வுலகத்தோர்யாவருந்தவஞ்செய்தேறவாழுதற்கிசைந்த
அவ்வுலகத்தோரிழிவதற்கருத்திபுரிகின்றதயோத்திமாநகரம். (க)

இ-ள். செவ்விய மதுரம்சேர்ந்த நல்பொருளில் சீரிய கூரிய நீண்சொல் வவ்விய வடநூல் கவிஞர் அனைவரும் முனிவ ரும் புகழ்ந்தது - செவ்வியனவும் இனிமைசேர்ந்தனவும் நல்ல பொருள்விளக்குவதிற் சிறந்தனவும் நுட்பமாயினவுமாகிய ம ஹாரச்சொற்களைக் கவர்ந்த வடநூல் வல்ல புலவராணும் வான் மீகமுதலிய முனிவராணும் புகழப்பட்டதும், வரம்பு இல் எவ் வுலகத்தோர் யாவரும் தவஞ்செய்து ஏறுவான் ஆதரிக்கின்ற அவ்வுலகத்தோர் இழிவதற்கு அருத்தி புரிகின்றது அயோத்தி மாநகரம் - எல்லையில்லாத எல்லா வுலகத்தவராகிய எல்லாரும் மாதவம்புரிந்து அடைவதற்கு விரும்புகின்ற அந்தப் பரமபத வாசிகளும் வந்து வதிவதற்கு விருப்பத்தைச் செய்கின்றதும் திருவயோத்திமாநகரம். எ-று. (க)

வடநூல்முனிவர் என்றமையின் கவிஞரைத் தமிழ்ப்புல வரெனக் கூறலாகாதோவெனின் இவரிது செய்வதற்கு முன் னந் தமிழ்ப்புலவ ரொருவருஞ் செய்யாமையின்று தொகுத் தாது.

சூக. புண்ணியம்புரிந்தோர்புகுவதுதுறக்கமென்னுமீதருமறைப்பெருளே
மண்ணிடையாவரிராகவனன்றிமாதவமறந்தொடும்வளர்த்தார்
எண்ணருங்குணத்தினவனினிதிருந்திவ்வெழுலகாள்விடமென்றுல்{ல்.
ஒண்ணுமோவதனின்வேறொருபோசமுறைவிடமுண்டெனவுரைத்த

இ - ள். புண்ணியம்புரிந்தோர் புகுவது நூறக்கம் என்னும் ஈது அருமறைப் பொருளே - அறஞ்செய்தோர் வீடுபெறுவ தென்பது அருமையான வேதத்தினது துணிபே, மன் இடை இராகவன் அன்பி மாதவம் அறத்தொடும் வளர்த்தார் யாவர் - அது செய்தற்குரிய இப்புவியில் இராகவபிரானைக் குறித்தல்ல து மாதவத்தைத் தமது வருணத்துக்குரிய தருமத்தொடுஞ் செய்தார் யாவர், என்ன அரும்குணத்தின் அலவிலினிது இரு ந்து இவ் ஏழ் உலகு ஆள் இடம் என்றால் - நினைத்தற்குமரிய மல்கனகுணமுடைய அல்லிராமபிரா னினிதாக வீற்றிருந்து இந்த வேழுலகங்களையும் ஆண்டருளு மிடமானது திருவயோ த்தியாகின், அதனின் போகம் உறைவேறு இடம் உண்டு என உரைத்தல் ஒண்ணுமோ - அதுபோல சுகத்தங்கிய மற்றோரி டம் உளதென்று சொல்லுதல் கூடுமோ. கூடாது எ - று. (இ)

அறம் வீடு பயத்தலை "வீழ்நாள்படா அமை நன்றூற்றினை ஃதொருவன் - வாழ்நாள் வழியடைக்குங்கல்." என்பதனாலு மறிக.

தமது வருணத்திற்குரியதர்மத்தைத்தவிர்த்துமாதவஞ்செய்யி னவனே தண்டிப்பாலுகவின் மாதவ மறத்தொடு மென்றார். அறம் செய்தார் யாவரென்னவே யெல்லாரும் இராகவபிரானைக் குறித்தே மாதவஞ் செய்வாரென்பதன்றியார் யாரைக்குறித்துச் செய்யினு மவனையே சாருமென்பதுமாயிற்று * "கற்பாரிராம பிரானை யல்லால் மற்றுங்கற்பரோ" என்பதனாலும், † "சென் னிவந்தனை யெல்லா மிராமசந்திரனையே குறித்துச் செய்கை வந்தனை" என்பதனாலும் அறிக - கருத்து வீடு பெறுவான் தவம் யாவரைக் குறித்துச் செய்யப்படுகின்றதோ அவரைத் திரு

* கற்பாரிராமபிரானையல்லால்மற்றுங்கற்பரோ
புற்பாமுதலாபுல்லெறும்பாதியொன்றின்றியே
நற்பாலயோத்தியின்வாழுஞ்சராசரம்முற்றவும்
நற்பாலுக்குயத்தனன்றான்முகலும்பெற்றநாட்டிலே.

†என்னவோரஞ்சலைமீயெனவேத்திலங்கையிலக்கணம்கூர்வே
நன்னயத்தினையும்பதத்தொடுநாட்டிநாட்டிடமோகமென்றவச்
சென்னிவந்தனையெல்லாமிராமசந்திரனையேகுறித்துச்செய்கைவந்தனை
பன்னுசீர்புனைமையாச்சவற்கியோபதிடமோதிப்பரத்துவங்காட்டுமே.

யோத்தியி லுறைதலினதுவே வீட்டுலகமாயிற்று. இக்கருத் தச் செவ்விய மதுர மென்னும் பாட்டால் தோற்றுவாய்செய் ார்.

இஃதுணராதார் இராகவன் மாதவஞ் செய்ததாய் அசம் ாவிதமாய்ப் பொருளுரைப்பார்.

கூ. தங்குமாபொருளுந்தருமமுந் துணையார்த்தம்பகைப்புலன்களைத்தவிர்க் கும், பொங்குமாதவமுஞ்ஞானமும்புணர்ந்தோர்யாவர்க்கும்புகலிடமா ன, செங்கண்மால்பிறந்தாண்டளப்பருங்காலத்திருவின்வீற்றிருந்தமை தெரிந்தால், அங்கண்மாஞாலத்தக்கசொக்கும்பொன்னகரமரர்காட் டியாதோ. (கூ)

இ - ள். தங்குமாபொருளும் தருமமுந்துணைய-மனத்திற் ங்குகின்றபொருளாகிய வேதார்த்தமுந்தருமமாகிய அருளுஞ் காயமாக, தம்பகைப்புலன்களைத் தவிர்க்கும் பொங்கும் ஞான ம் மாதவமும் புணர்ந்தோர் யாவர்க்கும் - தம்முடைய பகை ாகிய ஐம்புலன்களையும் போக்கும் அதிகம் ஞானத்தையும் ாதவமாகிய கருமத்தையும் பொருந்தினோரெல்லார்க்கும், புக இடம் ஆன செங்கண்மால் பிறந்து - இறுதிக்காலத்திலடை டமாகிய செந்தாமரை மலர்போன்ற கண்களையுடைய திரு ல் திருவவதாரஞ்செய்து, ஆண்டு அளப்பு அரும்காலம் திரு ன வீற்று இருந்தமை தெரிந்தால் - அவ்விடத்தி லளத்தற் ய காலம் பெரியபிராட்டியோடு வீற்றிருந்ததன்மையை யுண , அம் கண் மா ஞாலத்து அந்தகர் ஒக்கும் பொன் நகர் அம காட்டு இயாது - அழகிய இடத்தையுடைய பெரிய இப்புவி ாகண்விளங்கும் அத்திருவயோத்திமாநகரையொத்த சிறந்த ம் தேவருலகத்தில்யாது இல்லை. எ-று. (கூ)

இதனால் மேலது வற்புறுத்தப்பட்டது. அமரர் காட்டியா னவே புவிக்கண்ணில்லென்று கூறவேண்டாதாயிற்று. பொ ந்தர்மமுந் துணையாக ஞானமும்மாதவமும் புணர்ந்தோ ரைக்கொள்க. பிற்கூறியஞானத்திற்கும்மாதவத்திற்கு மேற்ப கூறிய பொருளையுந் தர்மத்தையும் வேதார்த்த மாகவும் ளாகவுங் கூறினும். வேதார்த்தங்களை யுணர்ந்து ஞானத் யும் அருள் முதிர்ந்து தவத்தையும், பெறவேண்டியவா னும், வீடுபேற்றிற்கு நிமித்தமாகிய பத்தியோகத்தைப்

ஸ்ரீமத்கம்பராமாயணம்.

பெறுவதற்குக் கருமயோகமும் ஞானயோகமும் வேண்டிய வாகலானுந்தவமும் ஞானமும் புனர்ந்தோரென்றார்.

சக. அரைசெலாமவணவணியெலாமவணவரும்பெறன்மணியெலாமவண
புரசைமால்களிறும்புரவியுந்தேரும்பூதலத்தியாளையுமவண
விரசுவார்முனிவர்வீண்ணவரியக்கர்விஞ்சையர்முதலினோரெவரும்
உரைசெய்வாரானுரானபோர்த்தனுக்குவமைதானிதுரோவுளதோ. ()

இ-ள். அரைசெலாம் அவண - அரசுகளெல்லாம் அவ்விடத்திலுள்ளன, அணியெலாம் அவண - ஆபரணங்களெல்லாம் அவ்விடத்தில் உள்ளன, அரும்பெறல் மணியெலாம் அவண - பெறுதற்கரிய ரத்நங்களெல்லாம் அவ்விடத்திலுள்ளன, புரசைமால்களிறும் புரவியுந் தேரும் பூதலத்து யாவையும் அவண - கழுத்துக்கயிற்றை யுடைய பெரியயானைகளும் குதிரைகளும் தேர்களும் புவியிலுள்ள உயர்ந்த எல்லாப் பொருள்களும் அவ்விடத்திலுள்ளன, முனிவர்விண்ணவர் இயக்கர்விஞ்சையர் முதலினோர் எவரும் விரசுவார் - ஒருபொருளையும் வியந்து நோக்காத முனிவர்கள் காணிலர்தோயாத தேவர்கள் யக்ஷர்கள் வித்யாதரர்கள் முதலினோ செல்லாரும் வந்துகூடினவர்களாய், உரைசெய்வார் ஆனர் ஆனபோது அதனுக்கு உவமைஉளதோ அரிது - திருவயோத்தி மாநகரினது விரிந்திலகினைப் பார்த்துப் புகழ்ந்து பேசுவார்களாயினபோது அந்நகர்க்கு உவமை உண்டோ இல்லை. எ-று. (எ)

தானும் அரோவும் அரசைகள். உவமை அரிதரோ உளதோ - உவமை இலதோ உளதோ சொல்லீரென்று இலதென்னுங் கருத்தால் உலகோரை வினவியதுமாம்.

சஎ. அந்தமாமதிற்புறத்தகத்தெழுந்தலர்ந்தநீள்
கந்தநாறுபங்கயத்தகானமானமாதரார்
முந்துவாண்முகக்களுக்குடைந்துபோனமொய்ம்பெலாம்
வந்துபோர்மலிக்சம்மாமதில்லனைத்தமாலுமே. (கசு)

இ-ள். கந்தம் நாறும் பங்கயத்தகானம் - வாசம் வீசுகின்ற தாமரையாகிய வனம், மானம் மாதரார் - பெருமை பொருந்திய அந்நகரமாதர்களுடைய. (கசு)

சஅ. சூழ்ந்தநாஞ்சிற்சூழ்ந்தவாரைசூழ்ந்தமுந்நபாரெலாம்
போழ்ந்தமாடெனும்படைச்சிடர்த்தபொன்படைக்கைமார்
தாழ்ந்தவக்கவாரிபிற்றபிப்பொலுமதத்திலால்
ஆழ்ந்தயானைமீதெழுந்தலூன்றினபோலுமே. (கஅ)

இ-ள். சூழ்ந்த நாஞ்சில்-சுற்றிய மதிலுறுப்புக்களையுடைய, சூழ்ந்த ஆரை - நகரைச் சூழ்ந்த மதிலுள், சூழ்ந்த முந்நபார்எலாம் - சுற்றிய நான்கு பக்கத்தெல்லா நிலத்தையும், போழ்ந்த ஆமாடெனும் படைச்சிடர்த்த பொன்படைக்கை மார் - பிளந்து அப்பெரிய இடங்களிற் கிடந்து புனலுள் வந்து கொழுத்த நீர்முதலைகள், தாழ்ந்த வக்கவாரியில் தடுப்ப ஒணுமதத்தினால் ஆழ்ந்த யானை - ஆழ்ந்த மதக்கலங்களையுடைய கடலில் தடுக்கக் கூடாத மதமயக்கத்தால் அழுந்திய யானைகள், மீது எழுந்து அழுந்து இன்றபோலும் - மேலெழுந்து மீட்டும் அழுந்துகின்றனபோலும். எ-று. (கஅ)

சக. விளிம்புதெற்றிமுற்றுவித்துவெள்ளிகட்டியுள்ளுறப்
பளிக்குபொற்றலத்தகட்டடுத்தறப்படுத்தலில்
தளிக்தகற்றலத்தொடச்சலத்தினித்தனித்துறற்
தெளிந்துணர்த்துகிற்றுமென்றல்தேவராலுமாவதே. (உ0)

இ-ள். விளிம்புதெற்றி முற்று வித்து வெள்ளிகட்டி - கல்லின் ஓரத்தைத்தேய்த்து முடிப்பித்து வெள்ளியைக் கட்டி, உள் உறபொன் தலத்தகடு அடுத்து உறப்பலிங்கு படுத்தலில் - உள்ளெல்லாம் பொருந்த பொன்தலமாகிய தகட்டின்மேல் சேர்த்து பொருந்த படிகத்தைப் படுத்திருத்தலால், தளிர்தகல் தலத்தொடு அச்சலத்தினித்து உறத்தெளிந்து உணர்த துணர்த்தும் என்றல் தேவராலும் ஆவதே - கனத்த பளிங்குபடுத்திய இடத்தொடு அவ்வகழி நீரை வேறுகப்பிரித்து இதுபளிங்கு இதுபுனல் என்றறிந்துசொல்லுகின்றன மென்பதுதேவர்களாலுமாவதே ஆகாது. எ-று. (உ0)

சக. அன்னசீரகன்கிடங்குசூழ்கிடந்தவாழியைத்
தன்னிலேறுசூழ்கிடந்ததாங்குநீங்கிருட்பிழம்
பென்னலாமிறும்புசூழ்கிடந்தசோலையெண்ணிலப்
பொன்னினாமமிட்டுரைத்தலிவ்வாடையோதுமே. (உக)

இ-ள். அன்னசீர் அகன்கிடங்கு - அத்தன்மைத்தாகிய நீர்வளமுடைய அகன்ற அகழியை, சூழ்கிடந்த சோலை இறும்பு - சூழ்ந்துகிடந்த சோலையாகிய குறுங்காட்டை, சூழ்கிடந்த ஆழியைத் தன்னிலேறு சூழ்கிடந்த தாங்கு நீங்கு இருள் பிழம்பு என்னலாம் - கடல்களையும் சூழ்ந்துகிடந்த பெரும்புறக்

டலேப்பொருந்தியும் வேறுகவுங் கிடந்த மிருந்த ஒருட்குழம்பு என்று சொல்லலாகும், எண்ணில் - இன்னும் ஆராயின், அப் பொன்னின் மாமதிட்கு ஊடெந்த லே ஆடைபோலும் - பொன் னுலாகிய அப்பெரிய மதிலுக்கு உடுத்திய நீல நிறமுடைய ஆடையை யொக்கும். கருத்து அகழியைச்சுற்றியகுறுங்காட்டை பெரும் புறக்கடலிச்சுற்றிய இருளென்று கொல்லலாம். அன்றி யும் கண்ணைச்சிமிட்டாமல் அம்மதிலுக்கு உடுத்திய கறுப்பா டையை ஒக்கும் எ - று. (உக)

சுக. தாவில்பொற்றலத்தினற்றவத்திலோர்கடற்றாட்
பூவியர்த்தகற்பகப்பொதும்பர்புக்கொதுங்குமால்
மூவியொத்தவண்புசேல்கூவலத்தினேத்திடா
ஓவியப்புருவின்மாடிருக்கலுற்பேடையே. (உக)

இ-ள். ஆவி ஒத்த அன்பு சேவல் கூவலத்து அனைத்திடா ஓவியப்புருவின் மாடு இருக்க ஊடு பேடை - தன் னுயிர்போன்ற அன்புடைய சேவலைத்தான் கூப்பிட அதுவந்துசேராமல் அக்கர்க்கோபுர முதலியவற்றிலுள்ள சித்திரப் பெண்புருவி னிடமிருக்க ஊடாயிற்ற பேடை, தா இல் பொன்றலத்தில் நல்லவத்தினோர்கள் தங்குதாள் பூ உயிர்த்தகற்பகப் பொதும்பர் புக்கு ஒதுங்கும் - செதிலில்லாத பொன்னுலகில் நல்ல தவத் தினோர்கள் வதிகின்ற கரும்புடைய பூக்களைப் பூத்த கற்பகச் சோலையிற் புகுந்து பதுங்கும். எ - று.

கருத்து-பெண்புரு தனது சேவலைக்கூப்பிடவும் அதுபோ காமல் சித்திரப்புருவினிடமிருக்க ஊடுகின்ற அப்பேடை கற் பகமரச் சோலையுட் பதுங்கும். இதனுனே அயோத்திமாநகர த்திலுள்ள கோபுர முதலியவைகள் தேவலோகத்தை வளா வியிருக்கின்றன என்பது. (உஉ)

மேலுமுதல் மூன்றுபாட்டுக்களுங் கோபுரத்தைக் கூறு கின்றன.

ஙூ. மாகதத்திலம்புபோதிகைத்தலத்தவச்சிரம்
புனாதபுத்தடுக்கிமீதுபொன்குயிற்றியின்குலா
கினாமணிக்குலத்தினுளிலங்குதாவொளிர்மல்
வீரவீகைத்தலத்தியற்றமேதகத்தினுமீதரோ. (உஙூ)

இ-ள். மரகதத்து இலங்குபோதிகைத்தலத்து வச்சிரம் புனாத புத்த அடுக்கு - மரகதங்களாற் செய்யப்பட்டு விளங்கு கின்ற அப்போதிகைகளினிடத்தில்வச்சிரக்கலைப் பழுது நீக்கி உத்தரங்களாகப்பொருத்தி, மீதுபொன்குயிற்றி. அவற்றின்

மீது பொற்சன்னங்களைப் பதித்து, மின்குலாம் கினாமணிக்குல த்தின் ஆளி மீள்வருத்து ஒளிமேல்-சோதி விளங்குகின்றவரிசை யாகப்பலமணிகளால் செங்கங்களை உயர்ச்செய்த ஒழுங்கின்மேல், வீரவீ கைத்தலத்தில் உயர்ந்த மேதகத்தின்மீது - கலந்த கைம சங்களின்மேல் வைத்த கோமேதக வரிச்சல்மேல் எ - று. ()

ஙூ. ஏழ்பொழிற்குமேழ்நிலத்தலஞ்சமைத்ததென்னநூல்
ஊழுறக்குவித்தமைத்தவும்பர்செம்பொன்வேய்ந்துமீ
சூழ்சுடர்ச்சிரத்தினமணித்தசும்புதோன்றனால்
வாழ்நிலக்குலக்கொழுந்தைமெனலிருட்டியன்னவே. (உசு)

இ-ள். ஏழ்பொழி லுக்கும் ஏழ்நிலத்தலம் சமைத்தது என்ன-அவ்வவ்வுலகத்தார் இயங்குவதற்குத் தடையின்றி மே லேழுலகங்களுக்கும் ஏழுநிலைகளை இயற்றியதுபோல (ஏழு நிலைவைத்து) நால்வாழ்உறக்குவித்து அமைத்த உம்பர் செம் பொன்வேய்ந்து - சிற்பநூல்கூறும் விதிதவராமற் பொருந்த தலைகுவித்துக்கட்டிய அதன்மேல் செம்பொன்னுல் முகடுவே ய்ந்து, மீசூழ்சுடர்ச்சிரத்து நல்மணித்தசும்புதோன்றலால் வாழ் நிலக் குலக்கொழுந்தை மெனலிருட்டி அனை - அம்முகட்டின் மேல் ஒளிசூழ்ந்த சிரத்தில் நல்ல மாணிக்கங்களாற் செய்யப்ப ட்ட கலசங்கள் விளங்குதலால் (கோபுரம்) எல்லாரையும்வாழ் விக்கின்றபூப்பிராட்டிக்குமுடிசூட்டினும்பொன்றனை-று.(உசு)

மேருவைப்போலச் சந்திரசூரியருஞ் செல்ல வாயின்றித் தடுத்து நில்லாமல் அக்கோபுரம் அவரும் ஏழுலகத்தாரும்இனி துசெல்ல ஏழு வாயில்களோடு நிற்கின்றதென்பது.

ஙூ. திங்களுங்கரிதெனவெண்ணமிற்றிய
சங்கவெண்கதையுடைத்தவளமாவிகை
வெங்கடுங்கால்பொரமேக்குநோக்கிய
பொங்கிரும்பரற்கடற்றரங்கம்போலுமே. (உன)

இ-ள். வெங்கடுங்கால் பொரமேக்குநோக்கிய = மிகுதியா யெ கடிய காற்றடித்தலால் மேலோங்கிய. (உன)

ஙூ. புள்ளியம்புறவிறைபொருக்குமாளிகை
தள்ளருந்தமனியத்தகடுவேய்ந்தன
வள்ளருங்கதிரவனிளவெயிற்குழாம்
வெள்ளியங்கிரிபிசகிநிற்கபோலுமே. (உஙூ)

இ - ள். புள் இயம்பு இறைபொருந்தும் மாளிகை - பறவைகள் ஒலிக்கத் தயாதசக்கரவர்த்தி வதிகின்ற திருமாளிகை, புள்ளி அம்புறவு இறைபொருந்தும்மாளிகை-புள்ளிகளோயுடையு அழகிய புறாக்கள் அடைதலுக்குப் பொருந்திய கூட்டின்மேல், எனவுமாம். (உஅ)

நிசை. வயிரகற்காண்மிசைமாகதத்தலாம்
செயிறப்போதிகைசிந்திச்சித்திரம்
உயிர்பெறக்குயிற்றியம்பர்காட்டவர்
அயிருறவிணைப்பனவளவில்கோடியே. (உக)

இ - ள். வயிரகல்கால்மிசை - வயிரத்தக் கற்தாலாகிய தூண்களின்மேலும், மாகதத்தலாம் - மரகத உத்திரங்களின் மேலும், போதிகைசெயிர் அறஇடைந்து-போதிகைகளோ வெளிறாப்பொருந்தி, உயிர்பெறக் குயிற்றிய அளவில் கோடிசித்திரம் - அம்மூன்றிலும் உயிர்பெற்றிருப்பனபோலத் தோன்றச்செய்த எண்ணிறந்த கோடி சித்திரப்பாவைகள், உம்பர்காட்டவர் அயிர் உற இணைப்பன - தேவர்களும் உயிருள்ளனவோ இல்லனவோ வென்று ஐயப்படுமாறு விளங்குவன என - று. (உக)

இது முதல் மூன்றுபாட்டுக்களும் சித்திரங்களைக் கூறுகின்றன.

நுஎ. சக்கிரகாந்தத்தின்றலத்தசந்தனப்
பத்திசெய்தூணின்மேற்பவளப்போதிகைச்
சித்தனிமணித்தலாஞ்செறித்தபெண்சுவர்
இந்திரநீலத்தவெண்ணில்கோடியே. (ஙo)

இ - ள். இந்திரநீலத்த எண்ணில் கோடி - இந்திரநீலநிறத்தன வாயிய கணக்கில்லாத கோடி சித்திரங்கள், சக்கிரகாந்தத்தின் தலத்த சந்தனப்பந்தி செய்தூணின்மேல் - சக்கிரகாந்தக்கற்கள் படுத்திய இடத்தையுடையனவாகி விளையாக நிறுத்திய சந்தனத்தூண்களின் மேலும், பவளப் போதிகை - பவளப் போதிகைகளின் மேலும், செந்தனி மணித்தலாம் செறிந்த பெண்சுவர் - செவந்த மாணிக்க உத்திரங்கள் பொருந்திய அழகிய சுவர்களின்மேலும் உள்ளன. எ-று. ()

நுசு. பாடகக்காலடிபதுமத்தொப்பன
சேடனைத்தழீஇயனசெய்பவரன
நாடகத்தொழிலனகவுதுய்பன
வாடகத்தோற்றத்தவளவிலாதன. (ஙக)

இ - ள். அளவு இலாதன பாடகக்கால் அடி பதுமத்தி ஒப்பன - அளவில்லாதனவாகிய (சித்திரங்கள்) பாடகமணிந்த கணைக்கால்களின அடிகள் செந்தாமரைமலர்களோயொப்பனவாய், சேடனைத்தழீஇயன - பாங்கரைத்தழுவினவாய், செய்யவாயன - செவந்த வாய்களோயுடையனவாய், நாடகத் தொழிலன-நடனஞ் செய்வனவாய், கடிவு துய்யன - இடை நூல் போன்றனவாய், ஆடகத்தோற்றத்த - பொன்னால் செய்யப்பட்டதோற்றமுடையனவாயுள்ளனவாம். எ-று. (ஙக)

நுள. புக்கவர்கண்ணிணைபொருந்துறுதொனி
தொக்குடன்றயங்கிவிண்ணவரிற்றோன்றலால்
நிக்குறநிகேப்பினித்செல்லுந்தெய்வவீ
டொக்கநின்றிலைப்பனவும்பர்காட்டினும். (ஙஉ)

இ - ள். புக்கவர்கண் இணை பொருந்து உறுதொனி தொக்குடன் தயங்கி விண்ணவரில் தோன்றலால் - உள்ளேசென்றவர்கள் இரண்டு கண்களாலும் பார்க்கப்பொருந்தாமல் ஒளி சேர்ந்து கூடி விளங்கிச் (சித்திரங்கள்) தேவர்களைப்போல விளங்குதலால், நிகேப்பினில் நிக்கு உறசெல்லும் தெய்வவீடு ஒக்க உம்பர்காட்டினும் நின்று இலைப்பன - நிகேக்குமளவில் தாரத்திலுள்ள திசையைச் சாரச்செல்லுகின்ற தெய்வ விமானத்தோடொப்ப தெய்வலோகத்திலும் (மாளிகைகள்) நிலைபெற்று விளங்குவனவாம் எ - று. (ஙஉ)

நுஙி. அணியிலழமகளிருமலைக்கல்வீரரும்
தணிவனவறநெறிதவிலாதன
மணியினும்பொன்னினும்வந்தவல்லதை
பணியிறியன்றனபாங்குமில்லையே. (ஙஊ)

இ - ள். இழை அணி மகளிரும் அலங்கல் வீரரும் தணிவன-{மாளிகைகள்} ஆபரணங்களணிந்த மாதர்களோயும் வெற்றி மாலையணிந்த வீரர்களோயும் நீங்குவனவாயினும், அறநெறிதவிலாதன - தருமநெறிகளோ நீங்காதனவாகி, மணியினும் பொன்னினும் வந்த அல்லது - இரத்தினங்களாலும் பொன்னாலும் செய்யப்பட்டவைகளல்லாமல், பிறிதுபணி இயன்றன பாங்கும் இல்லை - வேறு செம்புமுதலிய லோகங்களால் தொழில்

செய்யப்பட்டனவாகிய பொருள்கள் அம்மாளிகைகளுக்குப்பக்கங்களிலுமில்லை எ - று. (கூகூ)

விரசொன்மையின் மாளிகையை நீக்க அவர்க்குப் பகைமேற் பிரிவுந் தலைவிக்குடன்போக்குங் கொள்க. தம்மாளிகையை நீங்கிச் செல்லினும் அறஞ்செய்தற்குரியாரை நாட்டிச்செல்வாகலின் அற நெறிதனிலிலாதன என்றார்.

இதனால் மாளிகைகளையும் குடிக்களையும் கூறின்றார்.

கூக. வானுறையிமிர்ந்தனவரம்பில்செல்வத்தோர்
தானுயர்புகழெனத்தயங்குசோதிய
ஊனமிலறநெறியுற்றவெண்ணிலாக்
கோனிகர்குடிகடங்கொள்ளாசான்றன. (கூச)

இ-ள். வான்உற நிமிர்ந்தன - (மாளிகைகள்) ஆகாயமளவும் உயர்ந்தனவாய், வரம்பு இல் செல்வத்தோர் உயர் புகழ் எனத் தயங்கு சோதிய - எல்லையில்லாத அதிக செல்வமுடையோர்களது உயர்ந்த புகழ்போல விளங்கும் வெண்சோதியுடையனவாய், ஊனம் இல் அறநெறி உற்ற - குறைவில்லாத தருமநெறிகளை அடைந்தனவாய், கோன் நிகர் எண் இலாக்குடிகள் கொள்ளாசான்றன - தயரதசக்கரவர்த்தியன்றி எனையாரையொத்த அளவில்லாத குடிகள் மிகுதியைப்பெற்றன. எ-று. தான் அசை, தம்சாரியை. (கூச)

கூ0. அருவியிற்றுளித்தூமுத்தலங்குதாமத்த
வீறுமுற்குலமெனக்கொடிவீராயின
பருமணிக்குவையனபசும்பொற்கோடிய
பொருமயிற்கணத்தனமலியும்போன்றன. (கூஞ)

இ-ள். அருவியில் தாழ்ந்து முத்து அலங்கு தாமத்த - (மாளிகைகள்) அருவிகளைப்போல் தாழ்ந்து அசைகின்ற முத்துமாலைகளையுடையனவாய், வீறுமுயில் குலம் எனக் கொடிவீராயின - பாந்தளென்னுங் கூட்டம்போல நீலத்துகிற்கொடிகளால் அலங்கப்பட்டனவாய், பருமணிக்குவையன - பருத்தமணிக்குவைகளையுடையனவாய், பசும்பொன் கோடிய - பசும்பொன்னாலாகிய கலசங்களையுடையனவாய், பொருமயில் கணத்தன மலியும் போன்றன - பெருக்கிய மயிற்கூட்டம்போன்ற மகளிரையுடையனவாய் மலையையும் ஒப்பனவாம் எ - று. (கூஞ)

கூக. அகிலிடுகொழும்புகையளாய்மயங்கின
முகிலொடுவேற்றுமைதெரிகலாமுழுத்
தகிலொடுகெடுக்கொடிச்சூலமின்னுவ
பகலிடுமின்னணிப்பரப்புபோன்றவே. (கூன)

இ - ள். அகில் இடுகொழும்புகை அளாய்மயங்கின - அகிற்கட்டையாலிடப்பட்ட கொழுமையாகிய புகையோடு சேர்ந்து கலந்தனவாய், முகிலொடு வேற்றுமை தெரிகலா முழுத்தகிலொடு - நீருண்ட மேகத்தோடு வேறுபாடுதெரியாத பெரியதுகிற்கொடியோடு, கெடுங்கொடிச் சூலம்மின்னுவ - நீண்டகொடிமுனையிலுள்ள சூலங்கள் மின்னுகின்றவை, பகல் இடுமின் அணிப்பரப்புப்போன்ற - ஒளிசெய்கின்ற மின்னலினுடைய வரிசையின் விரிவைஒத்தன. எ - று. (கூன)

கூஉ. பொன்னிணிமண்டபமல்லதூத்தொடர்
மன்னுகளல்லனமாடமாளிகைக்
குன்னுகளல்லனமணிசெய்குட்டிமம்
முன்னில்களல்லனமுத்தின்பந்தரே. (கூஙி)

இ-ள். பொன்னிணிமண்டபம் அல்ல முத்தின்பந்தர் - பொன்பதித்துச் செய்யப்பட்ட மண்டபங்களல்லன முத்துக்களாலலங்கரிக்கப்பட்ட பந்தராம், பூத்தொடர் மன்னுகள் அல்லன முத்தின்பந்தர் - பூக்களால் அலங்கரிக்கப்பட்ட பொதுச்சாலைகளல்லன முத்துக்களாலலங்கரிக்கப்பட்ட பந்தராம், மாடமாளிகைக் குன்னுகள் அல்லன முத்தின்பந்தர் - மாடமாளிகைகளாகிய மலைகளல்லன முத்துக்களாலலங்கரிக்கப்பட்ட பந்தராம், மணிசெய்குட்டிமம் அல்லன முத்தின்பந்தர் - இரத்தினங்களாற் செய்யப்பட்ட செய்குன்றுகளல்லன முத்துக்களாலலங்கரிக்கப்பட்ட பந்தராம், முன்னில்கள் அல்லன முத்தின்பந்தர் - முற்றங்களல்லன முத்துக்களாலலங்கரிக்கப்பட்டபந்தராம்.

இனியோருரை - பொன்னிணிமண்டபம் அல்லதூத்தொடர்-பொன்பதித்துச் செய்யப்பட்ட மண்டபங்களல்லன பூக்களாலலங்கரிக்கப்பட்டனவாம், மன்னுகள் அல்லன மாடமாளிகைபொதுச்சாலைகளல்லன மேலுக்குமேடையுமாளிகைகளாம், குன்னுகள் அல்லன மணிசெய் குட்டிமம் - மலைகளல்லன அழகு

டைய செய்குன்றுகளாம், முன்றில்கள் அல்லன முத்தின்பந்தர் - முற்றங்களல்லன முத்துக்களாலலங்கரிக்கப்பட்ட பந்தராம். (கூசு)

கூக. எழுமிடத்தகன்றிடையொன்றியெற்பதி
பொழுதிடைபோதலிற்புரிசைப்பொன்மதில்
அழன்மணிதிருத்தியவயோத்தியாளுடை
கிழலெனப்பொலியுமானேமிவான்கடர். (சக)

இ - ள். நேமிவான்சுடர் - திருவாழிபோன்ற பேரொளியுடைய சூரியன், எழும் இடத்து அகன்று - உதயமாகும்போது பேரொளியை நீங்கி, இடை ஒன்றி - அயோத்தியையணித்து மத்தியில் வரும்போது அவ்வொளியைப்பொருந்தி, எல்படி பொழுது இடைபோதலில் - பகற்காலம் நீங்கும்போது பெற்ற ஒளியை நீங்கிச் செல்லுதலின், அழல்மணி திருத்திய புரிசைப்பொன்மதில் - மாணிக்கமணிகள்பதித்த உறுப்புகளையுடைய அழகிய மதில்சூழ்ந்த, அயோத்தியாளுடை கிழல் எனப்பொலியும் - அயோத்திமாநகரமாகிய பெண்ணினது திருமேனியின் ஒளியென்று சொல்லுமாறு விளங்குவான் எ - று. (சக)

கருத்து, சூரியன் உதயமாகும்போதும் அத்தஞ்சேரும்போதும்பேரொளியைநீங்கி அயோத்தியையடுத்த மத்தியில் வரும்போது அதனைப் பெற்றதால் அவ்வயோத்தியின்சோதியென்று சொல்லும்படி அச்சூரியன் விளங்குவான்.

கூச. குழலிசைமடந்தையர்குதலைக்கோதையர்
மழலையங்குழலிசைமகரயாழிசை
எழிலிசைமடந்தையரின்சொலின்னிசை
பழையர்தஞ்சேரியிற்பொருகர்பாட்டிசை. (சக)

இ - ள். குழல் இசை மடந்தையர்குதலை - கடையொத்த அளகமுடையமாதர்களின் குதலைச்சொற்கள், அம் குழல் இசை-அழகிய பொள்ளாங்குழலிசையைப்போலாம், கோதையர் மழலை - கடைகூடிய அளகமுடைய பெண்களின் மழலைச்சொற்கள், மகரயாழிசை - மகரயாழிசையைப்போலாம், எழில் இசை மடந்தையர் இன்சொல் இன் இசை-அழகுபொருந்தியபரத்தையர தினியசொல்லாகிய இனிய இசை, பழையர்தம் சேரியில் பொருநர் பாட்டிசை - கள்விற்போருடைய சேரியிலிருக்கின்ற கூத்தருடைய பாட்டினையைப்போலாம். எ-று. (சக)

கூடு. பொழுதுணர்வரியவப்பொருவின்மாகரத்
தொழுதகைமடந்தையர்கடம்விளக்கெனப்
பழுதறுமேனியைப்பார்க்குமாசைகொல்
எழுதுசித்திரங்களுமிமைப்பிலாதவே. (கூ0)

இ-ள். (இரத்தினங்களால்) பகலிரவென்று அறிதற்கரிய ஒப்பில்லாத அப்பெரிய பட்டினத்திலுள்ள (கற்பால்) யாரும் தொழுந்தகைமையுடைய பெண்களது பிரகாசமுள்ள விளக்கையொத்தக் குற்றமற்ற சரீரத்தைப் பார்க்கவேண்டிய ஆசையாலோ சுவற்றில் தீட்டிய சித்திரங்களுங் கண்ணிமைத்தலில்லானன. எ-று. (கூ0)

பெண்களது குற்றமற்ற சரீரத்தை என்று கூட்டுக.

கூஉ. பதங்களிற்றண்ணுமைபாணிபண்ணுற
விதங்களின்விதிமுறைசதிமிதிப்பவர்
மதங்கியரச்சிவகுத்தக்காட்டுவ
சதங்கைகளல்லனபுரவித்தார்களே. (கூஉ)

இ-ள். தண்ணுமை - மிருதங்கமும், பாணி - தாளமும், பண் உற - பாட்டோடுசேர, பதங்களில் - பாதங்களால், விதங்களின் விதிமுறை சதிமிதிப்பவர் மதங்கியர் - அபிநய விதங்களோடு இசைதூல் முறைப்படி ஆடுபவர் சிறுபெண்களாம், அச்சிவகுத்துக்காட்டுவ சதங்கைகள் அல்லன புரவித்தார்களே - அவ்வாடலிலவகை செய்துகாட்டுவன யாவெனின் அப்பெண்கள் காலிலணிந்த சதங்கைகளல்லன குதிரைகளணிந்த கிண்கிணி மாலிகளேயாம். எ-று. (கூஉ)

கூஎ. இடையிடையெங்கணுங்களியுறுதன
கடையிளவன்னங்கணினீர்க்கயல்
பெடையிளவண்டுகள்பிரசமார்ந்திடும்
கடகரியல்லனமகளிர்கண்களே. (கூசு)

இ - ள். இனகடை அன்னங்கள் - மெல்லிய கடையுடைய அன்னங்களும், களினநீர்க்கயல் - தாமரைமலர்களையுடைய குளங்களிலுள்ள சேல்மீன்களும், பெடையிளவண்டுகள் - பெட்டையாகிய இளவண்டுகளும், பிரசம்மார்ந்திடும் கடகரி - செருக்குண்டாக்கும் மதப்பசையையுண்ணும் மதமுடைய யானைகளும், இடை இடை எங்கணும்களி அறுதன அல்லன - எல்லாவி

டங்களிலும் எப்போதும் களிநீங்காதனவல்லன, மச்சிர் கண்க ளே இடை இடை எங்களும் களி அறுகன - மகளிர்தம் கண்க ளே எல்லாவிடங்களிலும் எப்போதும் களி நீங்காதனவாம். எ - று. (நச)

இவ்வாறன்றி நடையிள வன்னங்கள் இடை இடை எங்க ளும் களியறுகன அல்லன என்று தனித்தனியே கூட்டி மக ளிர்கண்களே இடை இடை எங்களும் களியறுகன என்று மு டிக்கலாம். களி அறுகன அல்லன என்றமையின், அன்னங்கள் முதலியனவை பருவ வேறுபாட்டால் களிநீங்குவன வாயின. மக ளிர்கண்களுக்கு அஃதின்மையின் என்றும் களிநீங்காதனவாயி ன. அன்னங்களுக்குக் களிநீங்கும் கார்காலம்போல மற்றவைக ளுக்கும் ஏனைக்காலங்களே யமிர்தமெனக் கொள்க.

கூஅ. தழல்விழியாளியுந்தினையுந்தாழ்வனை
முழைவிழைகிரிகர்ஞிற்றின்மும்மத
மழைவிழும்விழுந்தொறுமண்ணுயிழேநக
குழைவிழுமதில்விழுப்கொடித்தின்டோர்களே. (நஞ)

இ - ள். தழல்விழி யாளியும் தினையும் - நீப்போன்ற கண் ணுடைய சிங்கமும் அதன்பேடும், விழை - விரும்புகின்ற, மு ழை - குகைகள்பொருந்திய, தாழ்வரை - அடிவாரத்தையுடை ய, கிரிகர்களிற்றின் மும்மதமழைவிழும் - மலையையொத்த யானையினுடைய மூன்று மதநீரும் மழைபோல் விழும், விழுந் தொறும் மண்ணும் கீழ் உறக்குழைவிழும் - அங்கீர் விழுந்தொ றும் பூமியும் குழையச் சேறுவிழும், அதில் கொடித்தின்தேர் கள்விழும் - அச்சேற்றில் கொடிகளையுடைய தேர்கள் புதையு ம். எ - று. (நஞ)

கக. ஆவெரார்புரவியின்குரத்தையார்ப்பன
ரூவோரிழுந்தவத்தொங்கன்மாலைகள்
ஓடுவாரிழுக்குவலுடலோறெக்
கூடுவார்வனமுலிகொழித்தசாக்தமே. (நக)

இ-ள். ஆடுவார் இழுந்த அத்தொங்கல் மாலைகள் - புதி மாலை சூடும் பெண்கள் வாடின வென்று குழலினின்று நீக்கி அத்தொங்கலாகிய மாலைகள், (நக)

எ.ம. விலக்கருங்களிமதம்வேங்கைகாறவ
குலக்கொடிமாதர்வாய்குமுதாறவ
கலக்கடைகணிப்பருங்கதிர்களுறவ
மலர்க்கடிகாறவமகளிர்கூந்தலே. (நஎ)

இ-ள். கலக்கடைகணிப்பு அரும்கதிர்கள் காறுவ - அம் மாதர்களணிந்த ஆபரணத்தினிடத்தில் அனவிடவரிய ஒளிகள் தோன்றுவனவாம். (நஅ)

எக. கோலையிக்கைகொடெண்குறிக்கலாதவத்
தேவர்தக்கரினையச்செப்புகின்றதென
யாலையும்வழங்கிடத்திகலியிக்கர்
ஆலனங்கண்டினனைகதோற்றதே. (நக)

இ-ள். இக்கைகொடு கோலை எண் குறிக்கலாத அத்தே வர் தம் ககரினையைச் செப்புகின்றது என - இத்திருவயோத்தி யாடு வரிசையில் (முனிவர்களால்) கணக்கிற் சேர்த்துப் படிக் கப்படாத தேவர்களுடைய அச்சுவர்க்கத்தை யொப்பிட்டுச் சொல்லுவது எப்படி, அனைகை இகலியாலையும் வழங்கும் இட த்து இக்கர் ஆலனம் கண்டபின் தோற்றது - அளகாபுரி (ஆங் கிருந்தபடியே) அயோத்தியினது பெருமையை அறியாமற் ப கைத்து எல்லாவற்றையும் வழங்கும் செல்வமுடைய இவ் வியாத்தியினது கடைவீதியை (வந்துபார்த்தபின்பு) தோற்றது.

முத்திகொடுக்குந் திறனிலாமையால் முனிவர்களாற் சொ ல்லப்படாமற் தேவருலகொப்பிலது. ஆலனத்தைக்கண்டு அன கைதோற்றமையால தலவு மொப்பிலது. இக்கருத்துணராதார் கோ என்னும் ஐ என்னும் பிரித்து இடர்ப்படுப.

எஉ. குளிகைமழைமுகில்தொடக்குந்தோரண
மாளிகைமலர்வனமகளிர்வாண்முகம்
வாளிகளன்னவைமலர்வம்மற்றவை
ஆளிகளன்னவர்விறத்தினுழ்பவே. (நச)

இ - ள். குளிகை மழைமுகில் தொடக்கும் தோரணமாளி கை மகளிர்வாள்முகம் மலர்வன - சிகரத்தினால் நீருண்ட மே கங்களை அளாவுகின்ற தோரணம்கட்டிய மாளிகைகள் (சாளரம் வாயிலாக) மகளிரதொளிபொருந்திய முகங்களை மலர்வன, அன்

னவை வரளிகள் மலர்வ-அம்முகங்கள் கண்களாகிய அம்புகளை மலர்வன், அவை ஆளிகள் அன்னவர் நிறத்தில் ஆழ்ப : அவ்வம்புகள் சிங்கம்போன்ற ஆடவர்களது மார்பிம் றைப்பன, எ - று. (சுச)

எசு. காடும்புனமுங்கடலன்னகிடங்குமாதர்
ஆடுங்குளனும்மருவிச்சுனைக்குன்றமும்பர்
வீடும்விரவும்மணிப்பந்தரும்வீணைவண்டு
பாடும்பொழிலும்மலர்ப்பல்லவப்பள்ளிமன்னே, (எஉ)

இ - ள். காடும் - அந்தகரைச்சூழ்ந்த சிறுவனங்களிலும், புனமும் - கொல்லைகளிலும், கடல் அன்னகிடங்கும் - கடல் போன்ற அகழிகளிலும், மாதர் ஆடும் குளனும்-மகளிர் நீராடுகின்ற குளங்களிலும், அருவிச் சுனைக் குன்றமும் - அருவிகளையுஞ் சுனைகளையுமுடைய மலைகளிலும், உம்பர்வீடும் விரவும் மணிப்பந்தரும்-மேல்வீட்டையும் அளாவுகின்றமுத்துப்பந்தர்களிலும், பொழிலும்-சோலைகளிலும், மலர்ப்பல்லவப்பள்ளி - மலர்களாலுந் தளிர்களாலுஞ் சமைத்த சயனங்களிருத்தலால், வீணை வண்டுபாடும்-அவ்விடங்களிலெல்லாம் வீணைபோல வண்டுகள் பாடும் : எ - று. (எஉ)

எக. கல்லாதநிற்பார்பிறரின்மைபிற்கல்விமுற்ற
வல்லாருமில்லையவைவல்லாரில்லை
எல்லாருமெல்லாப்பெருஞ்செல்வமுமெய்தலாலே
இல்லாருமில்லையுடையார்களுமில்லைமாதோ. (எச)

இ-ள். பிறர் இன்மையில் - தம்மிற் கற்றவராகிய பிறரில்லாமையால், கல்லாதுநிற்பார் - கலைபயிலாமலிருப்பார், கல்விமுற்ற வல்லாரும் இல்லை - கல்விகளில் முழுதும் வல்லவர்களுமில்லை, அவை வல்லார் அல்லாரும் இல்லை - அவைகளில் வல்லாரல்லாதவருமில்லை, (எச)

கல்விகளெல்லா மடங்க அவையென்று பன்மையாற் கூட்டினர்.

எடு. ஏகம்முதற்கல்வியுணர்த்தெழுந்தெண்ணில்கேள்வி
யோகமுதற்றிண்பயனேபோக்கியருந்தவத்தின்
சாகந்தழைத்தன்பரும்பித்தருமம்மலர்த்த
போகங்களியொன்றபழுத்ததுபோலுமன்றே. (எடி)

இ-ள். கல்வி (ஆயோகத்தி) கல்வியென்னும், ஏகம் முதல்-ஒருமுதலை; முளைத்து எழுந்து-முளைப்பித்து வளர்த்து, எண்ணில் கேள்வி ஆருமுதல் தின்பயனைபோக்கி - பலநூற்கேள்விகளாகிய முதன்மையும் வன்மையுமுள்ள இலைகளை ஒன்றச்செய்து, அரும் தவத்தின் சாகம்தழைத்து - அரியதவமாகிய இலைகளைத் தழையச்செய்து, அன்பு அரும்பி - தயாவென்னும் அரும்புகளை அரும்பச்செய்து, தருமம் மலர்ந்து - தருமமாகிய மலர்களை மலர்த்தி, போகம் கனி ஒன்று பழுத்ததுபோலும் - போகமாகிய ஒரு திப்பியகனியைப் பழுப்பித்ததை யொக்கும். எ-று. (எடி)

அந்சாரினை.

கனியொன்றைப் பழுப்பித்தலாவது, தயரதசக்கரவர்த்தியைத் தன்னிடம் கொண்டிருத்தல். கல்வியை முதிர்ப்பித்தது முதல் கனியைப்பழுப்பித்தது ஏறுக இடையிலுள்ளவற்றையெல்லாம் தயரதசக்கரவர்த்திக்கேற்றி யுணர்க.

இவ்வருமைத் திருவிருத்தத்தால் வருகின்ற படலத்திற் கோர் தோற்றுவாய் செய்தார்.

நி-வது. அரசியற்படலம்.

அஃதாவது இறைவனது நற்குணங்களைக் கூறுகின்றபடலம்.

எசு. அம்மாணகருக்கரசன்னசர்க்கரசன்
செம்மாண்டவிக்கோலுலகெழினுஞ்செல்லினிரண
இம்மாணகலைக்கோளிகையாலவிராமனென்னும்
மொய்ம்மாண்கழலோற்றருநல்லறமூர்த்தியன்றன். (க)

கல் அறமூர்த்தி அன்றன் - கலத்தைத் தருகின்ற அறக்கடவுளை யொத்தவன்,

உலகபாலருருவாய் நின்று உலகங்காத்தலின், இறையென்றார்; என்னும், "திருவடைமன்னரைக் காணிற்றிருமாலைக் கண்டனே யென்னும்" என்று பெரியாரும்பணித்தார், என்னும்

பரிமேலழகரோதிய வாற்ருனும், இறைவனே அவ்விறைவனென்றே கொள்க. "நாவிஷ்ணுப்ரிதிவீபதி:" என்று வடநூலார் கூறுதலானு முணர்க. இவரும் அத்துணிபு நோக்கி அறமூர்த்தி அன்ருன் என்ருர்.

எ. ஆதிம்மதியும்மருளும்மறனும்மமைவும்
எதின்மிடல்வீரமும்மீகையுமெண்ணில்யாவும்
நீதிக்கிலேயும்மிவைநேமியினோக்குகின்ற
பாதிம்முழுதும்மிவற்கேபணிகேட்பமன்னே. (உ)

இ-ள். ஆதிமதியும் அருளும் அறனும் அமைவும் - முதன்மையாகிய அறிவும் அதன்பயனுகிய கருணையும் அதன்பயனுகிய தருமமும் அதனலுண்டாகிய நிறைவும், எதில் மிடல்வீரமும் - பகையினிடத்தில் வலியோடு கூடிய வீரத்தன்மையும், ஈகையும்-வரையாது கொடுத்தலும், நீதிக்கிலேயும் - நீதியிற் பிறழாமனிற்றலும், இவை எண்ணில் யாவும்-என்னும் இவற்றையன்றி இன்னும் ஆராயின் அரசர்க்குரியதற்குணங்களெல்லாம், நேமியினோக்கு பாதி கின்ற - முன்புள்ள சக்கரவர்த்திகளுக்குப் பாதிபொருந்தின, இவற்கே முழுதும் பணிகேட்ப - இத்தயரத சக்கரவர்த்தி பொருவனுக்கே அக்குணங்களெல்லாந் தொழில்செய்வவவரம். எ-று. (உ)

எஅ. நேமிமால்வரைமதிலாகநீள்புறப்
பாமமாகடல்சேக்கைப்பண்மணி
வாமமாளிகைமலியரசமன்னற்குப்
பூமியுமயோத்திமாநகரம்போலுமே. (எ)

இ-ள். தயரதசக்கரவர்த்திக்கு சக்கரவாளகிரி மதிலாக நீண்ட பெரும்புறக்கடல் அகழியாக ப்ரசித்தங்கள்பதித்த ஒளி பொருந்திய மாளிகைகள் மலியரச இப்பூமியும் அயோத்திமாநகரத்தையொக்கும். எ-று. (எ)

இனனே புவிமுழுதும் சக்கரவர்த்தியின் சோம்கிழ்ப்பட்டதென்பது.

எக. மண்ணிடையுயிர்தொறும்வளர்த்துதேய்வின்றி
தண்ணிழல்பரப்பவுமிருசோத்தள்ளவும்
அண்ணறன்குடைமதியமைவுமாதலான்
விண்ணிடைமதியினேயிலையிதென்னவே. (ஈ)

இ-ள். வளர்த்து தேய்வு இன்றி - முன்னுளெல்லாம் வளர்ந்து பின்னுளெல்லாம் குறையாமல், மண்ணிடை உயிர்தொறும் - புவியிலுள்ள உயிர்கள்தோறும், தண்நிழல் பரப்பவும் இருசோத்தள்ளவும் ஆதலால் - இன்பமென்னும் குளிர்ந்நிழலைப் பரப்பவும் துன்பமென்னும் இருளைப்போக்கவும் ஆன்றமையால், விண்ணிடை மதிமிகை எனன - வானத்துள்ள சந்திரன் உலகுக்கு வேண்டாத அதிசமென்று சொல்லுமாறு, அண்ணல் தன்குடைமதி இது அமையும் - பெருமைபொருந்திய தயரதசக்கரவர்த்தியினது குடைமதியாகிய இது அமையும். எ-று. இன்னும் ஐயும் சாரியை. (ஈ)

கருத்து. விண்ணிடைமதி உலகுக்குவேண்டாத அதிசமென்று சொல்லுமாறு தயரதசக்கரவர்த்தியினது குடைமதியமையும், தேய்வின்றி - குறைவின்றி, மண்ணிடை உயிர்தொறும் வளர்த்து - புவியில உயிர்களையெல்லாம் வளர்த்து எனவுமாம்.

கூ-வது. திருவவதாரப்படலம்.

ஸ்ரீராமபிரானதுதிருவவதாரத்தைக்கூறுகின்றபடலம்.

உ0. ஆயவனொருபகலயனேயேகிகர்
ஆயமாமுனிசாத்திருமூதெள்குலத்
தாயருக்கன்தையருக்தவமுமளிஞல்
மேயவனகடவுளும்பிறவுமேவினுன். (க)

இ-ள். ஆயவன் ஒருபகல் அயனேயே கிகர் ஆயமாமுனிவரன் தொழுது - அத்தன்மையனுகிய தயரத சக்கரவர்த்தி ஒருதினத்தில பிரமனேயே யொத்த பரிசுத்தமாகிய பெருமை பொருந்திய முனிசிரேஷ்டனுகிய வசிட்டபகவானைத் திருவடி தொழுது, தொல்குலம் தாயரும் தந்தையும் அன்பினல் தவமும்மேயவான் கடவுளும் - அடியேனது பழமையான குலத்திற்கு சீர உதவுகின்ற சன்றதாய்முதலிய தாயமாரும் ஆசமாரிகளுகிய பிதாவும் அருளால் வருகின்ற தவமும் அத்தவத்

நிற்குப் பொருந்திய முழுமுதற் கடவுளும், பிறவும் - அறம் பொருள் இன்பமும், வேறும் - அவற்றுக்கு வேறுகிய வீடும், கீ - நீயே, எ-று. (க)

தொல்குலத்தாரும் என்பதற்கு தொல்குலத்திற் பிறந்த தாய்மாரு மென்பாருமுளர். அவன் குலத்திற் பிறந்தோர் அவனுக்குத் தாயாதலின்மையின் அஃது உண்மையன்மையறிக.

அ. எங்குலத்தலைவர்களிரவிதன்னிலும்
தங்குலம்வினைக்குறத்தளர்ந்தாங்கிலர்
மங்குனில்லெனைவரம்பில்வையகம்
இங்குனதருளிலெனிதிலும்பினேன். (உ)

இ - ள். எம் குலத்தலைவர்கள் - எமது குலத்தரசர்கள், மங்குனர் இல் என - தமமுள் கீர்த்தி குறைந்தவர்கள் ஒருவரும் இல்லை யென்று சொல்லும்படி, தம்குலம் விளங்குறை - தமது குலம் அதிகம் உயர, இரவி தன்னினும் - குலமுதல்வனுகிய சூரியனைப் பார்க்கிலும், தாணி தாங்கிலர் - உலகத்தைக் காத்தார்கள், வரம்பு இல்லையகம் - எல்லையில்லாத உலகத்தை, இங்கு உனது அருளினால் இனிதின் ஓம்பினேன் - இக்காலத்தும் அடியேனும் தேவரிருடையதிருவடியால்செவ்வையாகக்காத்தேன். ()

ஆ. பாகசாதனன்றனைப்பாசத்தார்த்தடல்
மேகநாதன்புகுந்திலங்கைமேயகால்
போகமாலிருதைபுனிதன்மீட்டமை
தோகைபாசற்குறச்சொல்லினுனரோ. (ங)

இ - ள். பாகசாதனன் தனை - இந்திரனை, அடல் மேகநாதன் - வெற்றி பொருந்திய இந்திரசித்து, பாசத்து வீர்த்து-பாசத்தாற் கட்டி, இலங்கை புகுந்து மேயகால் - இலங்கைசென்றிருந்த காலை, போகம் ஆமலர் உறை புனிதன் மீட்டமை - தாமரை மலரில் வாசம் செய்கின்ற பிரமன்தான் சென்று மீட்டுவிட்டதை, தோகை பாசற்கு உறச்சொல்லினுன - உமாதேவி பாகனுகிய சிவபிரானுக்கு மிகுதியாகச் சொல்லினான். ()

"வடவரை" என்னும்பாட்டில் இயம்பினான் என்பதையும் இப்பாட்டில்சொல்லினான் என்பதையும் இயம்பினர் சொல்லினர் என்றிருந்தித் தேவரென்ற சொல்லை வருவித்துப் பொருளுரைப்பாருமுளர். அவ்வாறு கூறின் "சுடுதொழில்" என்னும் பாட்டில்"அவரோடேகினான்" என்பதனோடு மாறு கொள்ளுமென்பதை அவரறிந்திலர்.

அ. எழுத்தனர்கறைமிடற்றிறையுச்சாமரைச்
செழுத்தவிசகத்தவத்தேவுஞ்சென்றெதிர்
விழுந்தனாடிசைவிண்ணுளோரொடும்
தொழுந்தொறுந்தொழுந்தொறுங்களிதுளங்குவார். (கந)

இ - ள். தொழும் தொறும் தொழும் தொறும் களி துளங்குவார் - தொழுந்தொழ அன்பு மிகுதியால் தேகம் அசைவார்கள். எ-று. (கஉ)

கறைமிடற்றிறையும் என்பதைக் கடகளிற்றிறையும் என்று திருத்தி இத்திரனென்று பொருள்கொள்வாருமுளர்.

அ. மசரதமனையவர்வாழும்வாழ்வுமோர்
நிசரதகணைகளானீறுசெய்யயாம்
கசரதமாகமாக்கடல்கொள்காலவன்
தசரதன்மதலையாகருதற்தாணி. (உக)

இ-ள். மசரதம் அனையவர் வாழும் - வாழ்வும் - பேய்த்தேரை யொத்தவராகிய அவ்வரக்கர்பெற்ற வரங்களையும் வாழ்வையும், பேய்த்தேரையொத்தவர் கொடுத்தவரங்களையும் அவ்வரக்கர் பெற்ற வாழ்வையும் எனவுமாம், மசரதமனைய வென்றமையின் பொய்த்தேவரென்பதாயிற்று. நிசரதகணைகளால்-சத்தியமாகிய ரசமமைந்த அம்புகளால். (உக)

அ. புத்தானகொடிவினையோடருந்தயாம் போயொளிப்பப்புவனத்தாங்கும், சத்தானகுணமுடையோன்றலையிலெந் தண்ணளியின்சாலே போல்வான், எத்தானும்வெலற்கரியானமனுகுலத்தே வந்துதித்தோனிலங்குமௌலி, உத்தானபாதனருள்ரோமபதனென்றுள விவ்வுலகையன்வோன். (ஙு)

இ - ள். புவனம்தாங்கும் சத்தானகுணம் உடையோன் - உலகத்தைக்காக்கும் சாத்துவிக குணமுடையவனும், தலையிலெடும் தண் அளியின் சாலேபோல்வான் - அருளோடாயினும் பொருந்திய அன்புக்கு உறைவிடம் போல்பவனும், எத்தானும் வெலற்கு அரியான்-பகைவரால் எவ்வித உபாயத்தானும்

வெல்லக்கூடாதவனும், மனுகுலத்துவந்து உதித்தோன்-மனுகுலத்தில் வந்து பிறந்தவனும் ஆகிய, இலங்கு மௌலி உத்தரனபாதன் - ஒளிவினங்கும் முடியையுடைய உத்தானபாதனென்னு மரசன், புத்து ஆன கொடுவினையோடு அரும்துயரம் போய் ஒளிப்ப - மறுமையில் புத்து என்னும் கொடிய நரகத்தோடு இம்மையில் அரியதுயரம்போய் நீங்க, அருள் - பெற்ற, ரோமபதனென்ற - ரோமபதனென்று சொல்லப்பட்ட, இவ்வுலகை ஆள்வான் உளன் - இவ்வுலகத்தையாளும் அரசன் ஒருவனிருக்கின்றான். எ-று. (கூடு)

புத்தான கொடுவினையோ டருந்துயரம் போயொளிப்ப அருள் எனக் கூட்டுக. புத்தென்பது புத்திரனைப் பெறுதோர் அழுந்துமோர் நரகவிசேடம். அதனாலே புத்திரனைப் பெறுதான் என்னும் பழிச்சொல்லையும் நீங்குதலின் அருந்துயரம்போ யொளிப்ப என்றார்.

அஎ. அருந்தவன்றந்தையயற்றநோக்கியே
கருந்தடங்கண்ணியர்கீயிலாளனிற்
பொருந்தினர்பொருந்துவிலன்கெறுப்புரிந்
திருந்தவரியரெனவினையசெய்தனன். (சஅ)

இ-ள். கரும் தடம் கண்ணியர்-கரியபெரிய கண்களையுடைய அந்தணிகைமாதர்கள், அருந்தவன் தந்தையை அற்றம் நோக்கி - அரியதவமுடையோனுகிய கலிக்கோட்டு முனிவனுக்குத் தந்தையாகிய பிரண்டகமாமுனிவன் இல்லாத சமயம்பார்த்து, கலிலலாளன் இல் பொருந்தினர் - சகலகலாவல்லோனுகிய கலிக்கோட்டுமுனிவனுச்சிரமத்தைச் சார்ந்தார், பொருந்துவிலங்கு எறுப்புரிந்து - அம்முனிவன் எதிர்வந்து இம்மனைபயாமுலிக்கோட்டு விலங்கென்று கினைந்து, இவர் இருந்தவர் என இனியசெய்தனன் - விலங்கல்லர் இவர் பெரியதவமுடையோர் எனறிகொண்டு இக்கடன்கஞர்செய்தான். எ-று. (அ0)

அஅ. விம்முதமுலைகள்விம்மத்தெஞ்சினார்
அம்மனிதரெனவுணராதுசீனமி
செம்மையின்முனிவரன்றெடர்ச்சென்றனர்
தம்மனமெனமுட்டையுராதரே. (அட)

இ-ள். மருள்தையலார்கள்-சோந்தவர்க்கு மயக்கத்தைக் கொடுக்கின்ற அம்மாதர்கள், விம்முறும் உலகையாவியத்தகைஞ்சினர் - அதிகம் உலகை புடையராய் முனிவரன் வருதலின் அதிசயித்த மனமுடையராய், அம்ம இது இது என அகலும் கீள் நெறி - எதிர்த்தோன்றும் அச்சிரமங்களோ யெல்லாம் என்னாச்சிரமம் இது இதுவென்று சுட்டிக்காட்டிக்கொண்டு செல்லத்தொலையாத அகன்ற கீண்ட வழியை, செம்மையின் முனிவரன் தொடர - ஐயப்படாத செவ்வையுள்ளத்தோடு முனிசிரேட்டன் தொடர்ந்துவர, தம்மனம் எனச் சென்றனர் - தம்முமனம்போல அதிவேகமாய்ப் போயினர். எ-று. (அட)

அஅ. பெரும்புனலிதழ்குளறும்பெட்பற
வரும்பொதிசெந்தெனுக்கவின்கொண்டோங்கிட
இரும்புயல்கானமீதினடவிடைசெழுந்
தரும்புனல்சொரிந்தபோதனனர்ந்தனன். (அஅ)

இ-ள். பெரும்புனல் நதிகளும் குளறும் பெட்பு அறமிகுந்த புனலைக்கொள்ளும் ஆறுகளும் குளங்களும் கீர் வேட்கைதீர்கவும், கரும்பொதி செந்தெனும் கவின்கொண்டு ஓங்கிடகரும்பொதி செஞ்செந்நெற்களும் அழகுகொண்டெரவும், இரும்புயல் கானமீது எழுந்து இடைவிடாது அரும்புனல் சொரிந்தபோது அரசு உணர்ந்தனன் - பெரியமேகங்கள் ஊரையத்தின் மேலெழுந்து இடைவிடாமல் அரிய புனலைப் பெய்தபோது அரசனுடைய சோமபாதன் கலிக்கோட்டு முனிவன் வந்தானென்று அறிந்தனன். எ-று. (அக)

கவின்கொண்டோங்கிட என்றது யாணர்மையையும் கரும்பு, குதிரைமுதலையும் செந்நெல் என்பது.

அக. அரசருமுனிவருமடைந்தவரிடை
வரமுனிவருமென்றணைத்தமாலையாய்
வெருவினர்வீழ்கைவேர்த்தனவேண்டலால்
கரைவெதிர்தீண்டலுமிசைந்தனன். (அ0)

வேறபட்டிடவிடை யொடிதசசாயத்தாய்
ஆறெனச்சென்றனவருவிபாய்கவுட்
டூறெனக்கீளனுமித்தகண்யாளையே. (உ)

இ-ள். அருவி - மலையருவியினது, தாது என - அளவுபோல, கவுள் - கதப்பினின்று, பாய் - ஒழுகுகின்ற (மதத்தையும்) உமிழ் - கன்னினின்று கக்குகின்ற, கனல் - கனற்பொறியையும், தறுகண் - அஞ்சாமையையும் உடைய, யாளை - யானைகள், மாறனைத் தடங்களைப் பொருது - பகையென்று நினைத்து

மலைகளேமோதி, மாமரம் ஊறுபட்டு இடை இடை ஒடித்து - பெரியமரங்கள் தண்டுபட நடுவிலொடித்து, சாய்த்து ஊர்ச் - சாய்த்துத் தேய்த்து, ஆறு எனச் சென்றனை - அவ்விடமே வழியாகப்போயின. எ - று. (உக)

கசஞ. தோண்மிடைந்தனதூணமிடைந்தென
வாண்மிடைந்தனவான்மிண்மிடைந்தென
தாண்மிடைந்தனதம்மின்மிடைந்தென
ஆண்மிடைந்தனஆனிமிடைந்தென. (ஈ0)

இ-ள். தம்மில் மிடைந்து என-ஒருவன் கால்களிரண்டுந் தம்முள் நெருங்கினாற்போல, தான் மிடைந்தன - ஆடவர்கால்கள் நெருங்கின, (இதனால் நெருக்கத்தையுணர்த்தியவாறு) ஆனி மிடைந்தென - நிங்கங்கள் நெருங்கினாற்போல, ஆன்மிடைந்தன - காலாட் படைகள் நெருங்கின. (உ0)

கசo. ஆணைந்தாமரைகோவத்தொடர்ச்சுடர்
வேணக்கருங்கலிஞாலீயோர்காவலன்தான
பேணத்தகும்முலைப்பாய்மதயானையை
ஆணைக்கநங்கைக்கலிடமில்லெனுரன்.

இ-ள். ஓர்காவலன் - ஓராண்மகன், ஆணைந்தாமரை நோவத்தொடர்ந்து அடர் - இரண்டாகிய தாமரை மலர்போன்ற பாதங்கள் வருந்த ஓடிவந்து நெருங்கி, கலைக்கரும் கண்ணினாலே - அம்புபோன்ற கருங்கண்ணுடைய ஒருத்தியைப் பார்த்து, பிணைத்த வெம்முலைப்பாய் மதயானையை - பருத்தவிருப்பத்தைத் தருகின்ற முலையாகிய பாய்கின்ற மதயானையை, ஆணைக்க நம்கைக்கு அகல் இடம் இல் என்னுன் - பிடிக்க நமதுகையில் அகன்ற இடம் இல்லையென்று சொல்லினான்.

முலையாகிய யானையைப் பிடிராமல் கச்சால் கட்ட இங்ஙன் கைக்கு அகன்ற மார்பில்லையென்றான் எனினும் அமையும். ()

கஙக. அரத்தநோக்கினாற்றிண்மெலியர்
பரித்தகாவினர்பய்யரசேனுர்
திருத்தகூடத்திற்றின்னயத்தெரிம்
ருத்தினேதநியமாலகலிறென்னவே. (உ)

இ-ள். திருத்து கூடத்தில் - அடக்குதற்குரிய சம்மட்டியோடு, திண்கணையத்தொடும் - தம்மைக்கட்டும் வலிய கம்பத்தோடும், எருத்தில் ஏற்றிய மால்களிறு என்ன - பிடர்மேற் சுமந்து செல்லுகின்ற பெரிய யானைகளைப்போல, அரத்தம் நோக்கினர் - இரத்தம் போன்ற கண்களுடையராய், அல்திரன் மேனியர் - இருள் திரண்டாற் போன்ற தேகமுடையராய், பரித்தகாவினர் - சுமந்த காவடியுடையராய், பய்யார் எஞ்சூர்-ப் பரர் சென்றார். (உஅ)

கஙஉ. நூட்சிலம்பியலர்த்தனதுண்டிலை
கட்சிலம்புகருங்குழலார்குழு
உட்சிலம்புசிலம்பவொதுங்கலால
புட்சிலம்பிடுபொய்கையும்போன்றதே. (ஈக)

இ-ள். துண் சிலம்பி அலர்ந்தன - நுண்ணிய சிலந்திப் பூச்சிகள் புரவினும் போன்ற, துண்முகில் - மெல்லிய வலைகள், கண் சிலம்பு - முகங்களிற் பரவுகின்ற, கரும் குழலார் குழுகிய கூந்தலையுடைய பெண்கள் கூட்டம், உள்-தம்முள், சிலம்ப சிலம்ப ஒதுங்கலால் - பாதநூபுரமொலிக்க நடத்தலால், புள் சிலம்பிடு பொய்கையும் போன்றது - பறவைகள் ஒலிக்கின்ற தடாகத்தையு மொத்தது. (ஈ ங)

குகிலும் கண்ணும் ஆருபெயர் - இக்காலை ஊணமாதர் தரிக்கும் முகவலை அக்காலத்தே உண்டென்க.

கஙங. உழைகலித்தனவெண்ணெயுயிர்த்துணை
துழைகலிக்கருங்கண்ணியர்நூபுர
இழைகலித்தனினனியமாவெழு
மழைகலித்தெனவாகிலலித்தவே (ஈஅ)

இ-ள். உழைகலித்த என்ன-மான்கள் ஒலித்தாற்போல, யிர்த்துணை துழைகலிக் கருங்கண்ணியர் நூபுரம் இழைகலித்தன - கணவரிடஞ்செல்லும் வஞ்சகமுடைய கரியகண்ணுடை மாதர்களது காற்சிலம்பிய ஆபரணங்கள் ஒலித்தன, இன்னியம் ஆ எழுமழை கலித்தென - ஆம்பத்தில் இனியவாத்திய ரகத் துடங்குகின்ற மேகங்கள் ஒலித்தாற்போல, வாசிகலித் - குறிஞைகள் ஒலித்தன. எ - று. (ஈஅ)

ககூச. எண்ணமாத்திரும்மரிதாமிடை
வண்ணமாதனவர்வாய்க்கனிவாய்ச்சியர்
திண்ணமாததொளிர்செவ்விளநீரிழி
சுண்ணமாத்தனதூளியுமாத்தவே. (இ0)

இ - ள். எண்ணமாத்திரமும் அரிதாம் இடை - நினைத்தல
வுக்கும் அரிதாகிய இடையும், வண்ணம் - நிறமும், மா -
பெருமையும் பொருந்திய, துவர்வாய் - பவளம்போன்ற வாயி
னையும், கனிவாய்ச்சியர் - கனியின் ரசம்போன்ற சொல்லையுமு
டைய பெண்கள், திண்ணம் ஆத்த ஒளிர் செவ்விளநீர் இழி -
வினைமையாக கச்சாற்கட்டப்பட்டு விளங்குகின்ற முலைகளினின்
று முதிர்ந்த, சுண்ணம் ஆத்தன - சுண்ணப்பொடிகள் நிறைந்
தன, தூளியும் ஆத்த - மண்தூளிகளும் நிறைந்தன. எ - று. ()

கடி - வது. வரைக்காட்சிப்படலம்.

சந்திரசைலத்தைப் பார்த்ததைச்சொல்லும் படலம்.

ககஞ. கோவையார்வடக்கொழுங்கவடொடிதாகிவர்ந்த
ஆவிவேட்டனவரிநிலையனக்களைமேற்கொண்ட
பூவைவாய்ச்சியர்முலைஇலர்புயத்தொடும்பூட்டத்
தேவதாரத்தஞ்சந்திரனும்பூட்டினசிலமா. (க)

இ-ள். கோவை ஆர்வடக்கொழும் கவடு ஒடிதா கிவர்ந்-
கோர்வை நிறைந்த முத்துவடத்தோடு கொழுமையுள்ள நினை
யாகிய இடை யொடியப்பருத் துயர்ந்தனவாய், ஆவிவேட்டன-
ஆடவரதுயிரை வேட்டஞ்செய்தனவாய், வரிநிலை அனங்கன்
மேற்கொண்ட - கட்டளைமைந்த கருப்புவில்லையுடைய மதன
னை முடியாகத் தலைமேற் சொள்ளப்பட்டனவாயுள்ள, பூவை
வாய்ச்சியர் - காகணவாய்ப்புள்ளின் சொல்லையொத்த சொல்லு
டைய பெண்கள், முலை இலர் புயதொடும்பூட்ட - முலைகளைத்
தமது கணவர்புயங்களோடுஞ் சேர்க்க, நிலமா - நிலயாளைகள்,
தேவதாரத்தும் சந்திரனும் பூட்டின - தேவதார மரங்களிலும்
சந்தனமரங்களிலும் கட்டப்பட்டன.

இனியோருரை. கோவை ஆர்வடக்கொழும் கவடு ஒடிதர-
காயத்தைப் பொருந்திய ஆலமரத்தினது கொழுமையான-
ளைகள் ஒடிய, நிலமா - நிலயாளைகள், நிவர்த்த - உயர்ந்தன
ாய், ஆவிவேட்டன - தடாகத்தை விரும்பினவாய், வரிநிலை
னங்கன்மேற்கொண்ட - வரிநிலை அனங்கன்போல்வாரை தம
மற்கொண்டுவந்தனவாய், பூவைவாய்ச்சியர் முலை நிலர் புயத்
காமம்பூட்ட - சேர்க்க, தேவதாரத்தும் சந்தினும் பூட்டின-
ட்டப்பட்டன. எ-று. (க)

முலைநிலர் புயத்தொடும் பூட்ட என்றது - யானைகளினின்
ம் இறங்கும் மகளிர் தமது கணவரது தோளைத்தழுவி இறங்
தலை.

ககட. மாறுகாணுமதாய்கின்றுமனமுழையெனமுழங்கும்
தாறுபாய்கரிவனகரிதண்டத்தைத்தழுவி
பாறுபின்செலக்காலனைச்செல்வதுபண்டோ
ஆறுபோயெவாறுபோமாறுபோன்றதுவே. (ஙி)

இ - ள். தாறுபாய்கரி - அங்குசத்தால் குத்தப்பட்ட அர
ன் யானை, வனகரி தண்டத்தைத் தடவி-காட்டி யானையினது
ழியை நாடி, பாறுபின்செலக் காலனைச் செல்லுவது-பருந்து
ன்பின் தொடர்ந்து காற்றைப்போலச் செல்லுதல், (ஙி)

ககள. அலகிலாளைகளனைகமும்மவற்றொடுமிடைந்த
திலகவாணுதற்பிடிகளுக்குருளையுஞ்செறிந்த
உலவைநீள்வனத்தாதமேயொத்ததவ்வுதத
தலைவனேயொத்தப்பொலிந்ததுசந்திரசைலம். (எ)

இ - ள். அலகு இல் ஆளைகள் அனைகமும் - கணக்கில்
லாத யானைகளனைகமும், அவற்றொடு மிடைந்த திலகம்வாள்
நுதல் பிடிகளும்-அவற்றோடு சேர்ந்த திலகமணிந்த ஒளிபொரு
ந்திய நெற்றியையுடைய பிடிகளும், குருளையும் - கன்றுகளும்
செறிந்த உலவை நீள்வனத்து - நெருங்கிய மரக்கொம்புகள்
நீண்ட வனத்திலுள்ள, ஆதமே ஒத்தது - யானைக்கூட்டத்தை
யேயொத்தது, சந்திரசிலம் - சந்திர சயில மென்னுமலை, அவ்
வுதத்தலைவனை ஒத்துப் பொலிந்தது - அவ்யானைக்கூட்டத்தலை
வனையே யொத்து விளங்கிற்று. எ - று. (எ)

சகசு. கொவ்வைகோக்கியவாய்ச்சோபிக்திரகோபம்
கவ்விநோக்கினவென்றுசொல்காட்டினமயில்கள்
நவ்விநோக்கியர்கலங்கொண்மேகலைபொலஞ்சாயற்
செவ்விநோக்கினதிரிவனபோல்வனதிரிக்த. (க)

இ - ள். காட்டு இனமயில்கள் - வனத்திலுள்ள கூட்டமாகிய மயில்கள், கவ்வி நோக்கியர் - மான்போன்றபார்வையுடையமகளிரது, கொவ்வை நோக்கிய வாய்களை - கொவ்வைக்கனிபோன்ற அழகுடைய வாய்களை, இந்திரகோபம் கவ்வி நோக்கின என்று கொல் - இந்திரகோபப் பூச்சியைக் கவ்வி அழகுடையன வென்றே, நலம்கொள்மேகலைபொலம்சாயல்செவ்விஅம்மகளிரது அழகைக்கொண்ட மேகலாபரணத்தின் அழகிய பொன்மயமாகிய சாயலையும் அழகையும், நோக்கின திரிவன போல் வனதிரிக்த - பார்த்துச்சூழ்வன்போல்வனவாய்த்திரிந்தன

இனியொருசார் நவ்வி நோக்கியர் - மகளிரது, கொவ்வை நோக்கியவாய்களை இந்திரகோபம்கவ்விநோக்கினவென்றுகொல்லென்று நினைத்தோ, காட்டின மயில்கள் - தாமும் அப்பூச்சியை கவ்விக்காட்டின வாகிய மயில்கள், நலம் கொள் - அம்மகளிரது அழகைக்கொண்ட, (மற்றவை இரண்டிற்கு மொக்கும்) மேகலையின் மணிகள் தம்முடைய கலாபத்தின் கண்களைப் பொன்னிருத்தலின் மயில்கள் பார்த்தனவாய்த்திரிந்தன. (கூ)

சுக. பிடிபுக்காவிடைமின்னெடும்பிறங்கியமேகம்
படிப்புக்காவெனப்படிதாப்பரிபுரம்புலம்பத்
தடிபுக்காவிடைத்திருமகடாமரைதிறந்து
குடிபுக்காவெனக்குடிபுக்கார்கொடியன்னையடையார். (உ

இ-ள். மின்னெடும் பிறங்கிய மேகம்படி புக்கால் என-மின்னல்களோடும் விளங்கிய மேகங்கள் புவியிற் படிந்தாற்போல ஆ இடை - அவ்விடத்தில், பிடிபுக்கு - பெண்யானைவந்து, படர - படுக்க, அடி புக்கா இடைத்திருமகள்-உடுக்கைஒப்பாகா, இடையை யுடைய இலக்குமி, தாமரை துறந்து குடிபுக்கா எனா - தாமரை மலரை நீத்துக் குடி புகுந்தாற்போல, கொடி அன்னமடவார் - பூங்கொடி போன்றமாதர்கள், பரிபுரம்புலம்பாத தூபுரமொலிக்க, குடி புக்கார் - குடிபுகுந்தார். (கூ

உ00. மிதிக்கநிமிர்தூளியின்விளக்கமறுமெய்யைச்
சுதைக்கணுரையைப்பொருவுதாசுகொடுதூய்தர
உதிர்த்தனிளங்குமாரோலியிரேவம்
புதைக்கினரெனத்தருணமங்கையர்பொலிக்தார். (உ

இ - ள். மிதிக்க நிமிர் தூளியின் விளக்கம் அறு மெய்யை-காலால் நடக்க மேலெழுந்த தூளியினால் மழுங்கிய தேகத்தை, சுதைக்கண் உரையைப்பொருவு தூசுகொடு தூய்தர-பாலின்கண்ணுள்ள நுரையையொத்த வெள்ளியதுகிலிக்கொண்டுபரிசுத்தமாக, ஓவியரில்-சித்திரகாரரைப்போல, ஓவம்புதுக்கினர்என்-சித்திரங்களைப் புதுக்கினரென்று செல்லுமாறு, இளம்குமரர்-இளங்குமரர், உதிர்த்தனர - துடைத்தனர், தருண மங்கையர் பொலிந்தார் - (அவர் துடைக்கவே) இளம் பெண்கள் முன் போல விளங்கினர், (கசு)

உ0க. தூசிலைஞெடுவெண்படமுடைக்குடில்கடோறும்
வாசநகைமங்கையர்முகங்கண்மழைவாவின்ற
காசின்மதியின்கதிர்வழங்குகிழலெங்கும்
வீசுதிரைவெண்புனல்விழுங்கியனபோலும். (கஅ)

இ - ள். தூசிலைஞெடு வெண்படம் உடைக்குடில்கள் தோறும் - துகிலாலாகிய வெள்ளிய திரையுடைய குடிசைகளது உள்ளிடந்தோறும், வாசநகை மங்கையர் முகங்கள்-வாசம்பொருந்திய புன்சிரிப்புடைய மடந்தையரது முகங்கள், (அரைத்து தோன்றுதல் எத்தன்மைத் தென்னில்) மழைவானில் சாரு இல் மதியின் கதிர்வழங்கு நிழல் - மேகங்கள் பரவுகின்ற ஆகாயத்தி லுள்ள குற்றமில்லாத சந்திரனது கிரணங்கள் வழங்குகின்ற பிரதி பிம்பங்களோ, எங்கும் வீசு திரைவெண்புனல் விழுங்கியன போலும் - பலவிடங்களிலும் பரவுகின்ற வெள்ளிய புனல்கள் தம்மூட்கொண்டனபோலும். (கஆ)

கருத்து - காற்றுலசையுந் திரைச்சீலை கட்டிய குடிசையுள் ளே மங்கையர் முகங்கள் அரைந்து தோன்றுதல், சந்திரனது பிரதிபிம்பங்களைப் புனல்கள் விழுங்கியன போலும். நிழல்பிரதி பிம்பமாதலை "நிழல் கூறிய பொருளினுமெனப் புகல்வாமன்

நே'' * என்பதனுடன் மறிக. படமுடைக் குடில்களென்றது இக் காலத்து வழங்கும் கூடாரத்தை. படமாடமனை புக்கார் என் பதனை முனைக்க.

உ0உ. நீவரோடொன்றியறிதருஞாலத்தோர் ..
ஆவனாயக்கினியறிக்தனர்தறந்தார்
கேவருணெடிபடிந்தடனெழுந்தோல்
பாய்பரிவினைந்தறிகின்றனபார்சே, (உ0)

இ-ள். நீவரோடு ஒன்றியறிதற்கு அரும்நலத்தோர்-அறி யாமல் நீயரைச் சேர்ந்த குணத்தாலருமையாகிய நலமு டையோர், ஆயலரை அக்கினி அறிந்தனர் துறந்தாங்கு - அக் நீயோரை அத்நீமையை யறிந்து நீக்கினும்போல, ஒன்பாப் பரி - ஒள்ளியபாய்கின்ற குதிரைகள்படுத்து, எவ்வரும் நண் பொடிபடிக்கு உடனே எழுந்து-பொருத்தவருகின்ற நண்ணிய பொடியிற் படிக்கு டனே யெழுந்து, விரைக்கு உதறிப்பாய்ந் கின்றன - விரைவு யுதறிப் பாய்கின்றன. எ - று. (உ0)

உ0ஊ. மும்மைபுரிவன்கயிறுகொய்தசெய்மொய்ம்பால்
தம்மையுமுணர்ந்துதனைகண்டுவினைகின்ற
அம்மையினுடம்மைமையறிந்துதெறிசெல்லும்
செம்மைபவரென்னனிசென்றனதாரம். (உ0)

இ-ள். செயல்மொய்ம்பால் - யோகமுதலிய செய்கை களின் வலியால், மும்மைபுரிவன் கயிறுகொய்து - மண்ணுசை பெண்ணுசை பொன்னுசை யென்னும் வலியகயிற்றையறுத்து தம்மையும் உணர்ந்து -இறைவனுடைமை யென்னுந் தமது சொருட்தை யுணர்ந்து, அம்மையினோடு இம்மையை அறிந்து- மறுமைப்பயனே டிம்மைப்பயனைத் தெரிந்து, தனைகண்டு விரை கின்ற - விட்டுல்கைத்தெரிந்து அதனையடையவிரைகின்ற, தெரி

பெரியபுராணம் பாயிரம்-ஊ.

* அருளினீர்மைத்திருத்தொண்டறிவுருக்
தெருளினீரிதசெப்புதற்காமெனின்
வெருளின்மெய்ம்மொழிவாவிழல்கூறிய
பொருளினுருமெனப்புகல்வாமன்றே.

தெல்லும் செம்மையவர் என்ன - நன்னெறியிற்செல்லுகின்ற செவ்வியோரைப்போல, துரங்கம் - குதிரைகள், மும்மைபுரி வன் கயிறு - தம்மைக்கட்டிய மூப்புரியாகிய கயிற்றை, செயல் மொய்ம்பால் - அங்கச் செய்கை வலியால், கொய்து - அறுத்து, தம்மையும் உணர்ந்து - தாம் தனிப்பட்டதையு மறிந்து, அம் மையினோடு இம்மையை அறிந்து - முன்னமேதாம்கட்டுப்பட் டிருந்ததையு மிப்போது அது நீங்கியதையு முணர்ந்து, தனை கண்டு விரைகின்ற - நிலந்தீண்டாமம் புட்போலப் பறந்துபுகி யிலிறங்கி விரைந்தோடு கின்றனவாகி, கனிசென்றன - மிகுதி யுஞ்சென்றன. எ - று. (உ0)

குதிரைகள் நிலந்தீண்டாத செலவினையுடைய வென்பதை புள்ளியல்கலிமா'' என்பதனுமறிக.

உ0ஏ. வெள்ளமெடுவாரியறவீசியுளவேறும்
கள்ளவெழுகின்றபுனல்கேளிரின்விரும்பி
தெளிதருபுனலாதரிதேயுதவுகின்ற
உள்ளமருதவுமவள்ளலியுமொத்த. (உஉ)

இ - ள். தெள்ளுபுனல் ஆறு - தெளிந்தபுனலைத் தம்முட் கொண்ட நதிகள், வெள்ளம் மெடுவாரி யறவீசி ஊ எனும் - வெள்ளமாகிய மிகுந்த புனல் தம்மிடஞ் சிறிதுமின்றி யற்றுப் போக படைகளுக்குக் கொடுத்து விட்டன வாயினும், கள்ள எழுகின்ற புனல் - தோண்ட ஊறுகின்ற நீரை, சிறிது உதவு கின்ற - சிறிது கொடுக்கின்றனவாய், கேளிரின் விரும்பி - (இரப் போரை) தமதுறவினரா யழைப்பதுபோல வழைத்து, உள்ள மருது உதவும் வள்ளலியும் ஒத்த - தன்னிடத்துள்ள பொரு ளமுக்காது கொடுக்கும் வள்ளலியுமொத்தன. எ-று. (உஉ)

உ0ஐ. வெயினிறங்குறையச்சோதிம்மின்னிழல்பரப்பமுனிவர்
துயிலுணாசெவ்வியோருங்கனியுறமுனிவிலேரும்
குயிலொடுமினிதுபேசிச்சிலம்பொடுமினிதகூவி
மயிலினந்திரிவவென்னத்திரிந்தனர்மகளிரெல்லாம். (உக)

இ - ள். முன்னர் துயில் உணர் செவ்வியோரும் - நேற் றுக்கணவரோடு ஊடல் புரியாது கூடல் புரிந்து துயின்றோ ரும், கனி உறு முனிவிலேரும் - கூடல் புரியாதூடல் புரிந்

து துயிலாத தன்பமுடையோரும், (ஆகிய) மகளீர் எல்லாம்-மடந்தைய ரெல்லாரும், சோதி - சூரியனது, வெயில் கிரம் குறைய - கிரணத்தின் கொடிய கிறந்தணிய, மின் கிழல்பரப்ப-மின்னல்போன்ற இளவெயில் யாண்டும் பரவ, குயிலொடும் இனிதுபேசி - குயில்களோடு மினிதாகப் பேசி, சிலம்பொடும் இனிது கூவி - மலைகளோடு மினிதாகக்கூவி, மயில் இனம் நிர்வ என்னத் நிரிந்தனர் - மயிற் கூட்டங்கள் நிரிவனபோல யாண்டுஞ் சஞ்சரித்தார்கள். (உசு)

உ0சு. பணமலர்ப்வளச்செல்வாய்ப்பணிமலர்குவளையன்ன
கண்மலர்க்கொடிச்சிமார்க்குக்கணித்தொழில்புரியும்வேங்கை
உண்மலர்வெறுத்தம்பிபுதியதேனுதவுதாகத்
தண்மலரென்றவானத்தாரகைதாவுமன்றே. (சுங

இ-ள். குவளை அன்னகண்மலர்க் கொடிச்சிமார்க்கு - குவளைப் பூப்போன்ற கண்களாகிய மலர்களையுடைய வேட்டுவிச்சியர்களுக்கு, வேங்கை - வேங்கை மரங்கள், கண்ணித்தொழில் புரியும் - மாலைகட்டுந் தொழிலைச்செய்யும், கணி என்பது தொகுத்தல். மாலைகட்டுந் தொழிலைச்செய்தலாவது மலரையுநிர்த்தல்.

உ0எ. செங்கயல்னேயாட்டஞ்செவியுறுமுறுவல்தோன்று
பொங்கிருங்கூந்தல்சோராபுருவங்கணெரியாபூவின்
அங்கையுமிடைந்கூட்டிநாம்பலேந்தமிர்தமூறும்
மங்கையர்பாடல்கேட்டுக்கின்னரமயங்குமாதோ. (சுக

இ-ள். செங்கயல் அனேயகாட்டம் செவி உறு - செவ்வியகயல்மீனையொத்த கண்கள் செவிகளிற் பொருந்தி, முறுவல் தோன்று - நிலவைக் கக்குகின்ற சிறுபற்கள் சிறிது வெளிப்பட்டு, பொங்கு இரும் கூந்தல்சோரா - மிகுந்தவிசாலித்த கூந்தற்செருகு பிடரியி லொருபுறஞ்சோர்ந்து, புருவங்கள் நெரியா-புருவங்கள் கடையில் சிறிது நெரிந்து, (அழகுசெய்ய) பூவின் அங்கை - தாமரைமலர்போன்ற அழகியகையால், நாம்பு அலர்ந்து - வீணைநரம்பைத் தடவி, மிடறும் கூட்டி - கண்டவோசையையுஞ் சேர்த்து, அமிர்தம் ஊறும்-அமிர்தம்போல இனிமை பெருகுகின்ற, மங்கையர் பாடல்கேட்டுக் கின்னரம் - மயங்

கும் - பெண்கள்பாடும் பாடலைக்கேட்டுக் கின்னரப் பறவைகள் தமதினத்துப் பாடலோவென்று மதிமயங்கும். எ-று. (உசு)

செங்கயல் அனேய நாட்டம் செவிஉறு-கண்பார்வை செவியைப் பொருந்தாமலும், முறுவல் தோன்று-பற்கள் வெளியிற் றோன்றுமலும், பொங்கு இரும் கூந்தல்சோரா - அளகம் அவிழாமலும், புருவங்கள் நெரியா-புருவங்கள் மேலெழாமலும், எனினுமமையும். இதனால் பாடும் லக்ஷணத்தையும் அவலக்ஷணத்தையும் கூறியவாறு.

உ0அ. ஆடவராவிசோரவஞ்சனவாரிசோர
ஊடலிற்செவ்தாட்டகம்பர்த்தம்மரம்பைமாதர்
தோடலர்கோதைநின்றுந்நிறந்தமத்தாரமாலை
வாடலதறவுறுதலியின்வயின்வயங்குமாதோ. (சக)

இ-ள். கோதை நின்றும் நிறந்த-தமது கூந்தலினின்றுகிய, தோடு அலர் - இதழ்விரிந்த, மந்தாரமாலை - மந்தாரப் மாலைகள், (சக)

உ0ஆ. சாந்தசாய்தடங்கதோறுந்தாரகத்திற்சார்ந்த
கூந்தலம்பிடிகளெல்லாங்குலுமணிச்சோதும்
காந்தினமணியின்சோதிக்கதிரொடுங்கலந்துமுசச்
சேந்தவானகமெப்போதுஞ்செக்கரையொக்குமாதோ. (சச)

இ-ள். சாந்து சாய்தடங்கள்தோறும் தாதுபாகத்தில் - சந்தமரங்கள் தழைந்து சாய்ந்த இடங்கள்தோறுமுள்ள செங்கற்களில், சார்ந்த கூந்தல் அம்பிடிகள் எல்லாம்-படிந்த தனுடைய அழகியபெண் கவரிமான்களெல்லாம், குங்குமம் ணிந்தபோலும் - குங்குமம் பூசினபோலும், (சச)

உ0இ. படிகத்தினலமென்றெண்ணிப்பட்சுசோமுடிப்புக்க
சுடிகைப்பூங்கமலமன்னசுடர்மதிமுகத்தினார்தம்
மடதைதோடுத்தனசமாகிவீர்கோப்பநோக்கி
கடகக்கையெறிதுமம்மிற்கருங்கழல்வீரர்க்கார். (சஎ)

இ-ள். சுடிகைப்பூம் கமலம் அன்ன - நெற்றிச்சுட்டியணிந்த அழகிய தாமரைமலரைப்போன்ற, சுடர்மதி முகத்தினார்தம் - ஒளியுடைய சந்திரனைப்போன்ற முகமுடைய பெண்களுடைய, சுடிகைப்பூம் கமலம் அன்ன, என்பதற்கு மகிழ்முடியை

யுடைய அழகிய சாமரைமலைப்போன்ற எளவுமாம். கடக்கை யெறிந்து-கடகமணிந்த கையைக்கொட்டி, கடகத்தை யெறிந்து என்றும் பாடமுண்டு. (சஅ)

உசச. அற்பகலாக்குஞ்சோதிப்பனிக்கறையமனிபாங்கர்
மற்பகமலர்ந்தநின்டோள்வானவர்மணக்குதசோலம்
விற்பகைறுத்தவிஞர்தங்கலியின்வெறுத்தனீத்த
கற்பகமீனறமாலைகலனெனிலிடப்பக்கண்டார். (இஉ)

இ-ள். மல்பகமலர்ந்த நின்தோள் - மல்யுத்தம் உடைந்துபோக படர்ந்த வலியதோள்களையுடைய, (நுஉ)

உஅஉ. பின்னல்களுகிர்ச்செப்பிண்டியத்தளிர்க்கைக்கொண்ட
சின்னங்கள்முலையினப்பித்தேமலர்கெய்தினரும்
வன்னங்கள்பல்வகைதோன்றமணியொளிர்மலியிலில்லா
அன்னங்களபுகுந்தென்னவகன்சுனைகுடைதின்றரும். (நு

இ-ள். கைக்கொண்ட-கையாற் பறித்துக்கொண்ட, பிண்டம் தளிர் - அசோகத்தினது அழகிய தளிர்களை, உகிரில் - நகளால், சின்னங்கள் பின்னங்கள் செய்து - கண்டங்கள் துண்டுங்களாகச்செய்து, முலையில் அப்பி - தனங்களிலப்பி, (நி

உசந. ஈனுமானமழையினத்தளிரேயொளி
ஈனுமானமழையினத்தளிரேயிடை
மானும்வேழமுங்காகமுமார்தோள்
மானும்வேழமுங்காகமுமாடலம். (நு

இ-ள். இடை - அம்மலையினிடத்தில், ஒளிசனும் மானை இளம்தளிர்-ஒளியைத் தருகின்ற பொன்னினது மெல்லியதகபோல, ஈனும் மாழை இளம் தளிர் - தளிர்க்கின்ற மாமரத்தினது இளந்தளிர்களுனள்ளன, மாடு எலாம் - அம்மலையைச்சர்ந்த விடங்களிலெல்லாம், மானும் வேழமும் காகமும் - மான்களும் யானைகளும் குரங்குகளும், மாதர்தோள் மானும் வேழமும் காகமும் - மங்கையரது தோளையொக்கும் மூங்கில்களும் புன்னைமரங்களும் உள்ளன. (நுடி)

உகச. திமிரமாவுடற்குஞ்சமச்சேதகம்
திமிரமாவொடுஞ்சந்தொடுத்தேய்க்குமால்
அமரமாதரையொத்தொளிராஞ்சொலார்
அமரமாதரையொத்தவ்வானமே. (இஅ)

இ-ள். திமிரம் மா உடல் குங்குமச்சேதகம் திமிர - இருள்போன்ற நிறமுடைய பன்னிகள் தமதுடலில் குங்குமச்சேறு நிறைய, மாவொடும் சந்தொடும் தேய்க்கும்-மாமரங்களோடுஞ் சந்தனமரங்களோடுந் தேய்க்கும், அமரமாதரை ஒத்து ஒளிர் அம் சொல்லார் அமர - தெய்வப்பெண்களை யொத்து விளங்குகின்ற அழகிய சொல்லுடைய அரசமங்கையர்கள் தங்குதலால், மாதரை அவ்வானம் ஒத்தது - பெரியமலை நிலம் அச்சுவர்க்கத்தை யொத்தது. எ-று. (நுசு)

உடுு. பேரவாவொடுமாசுணம்பேரலே
பேரவாவொடுமாசுணப்பேரலே
ஆரவாரத்தினோடுமெருவியே
ஆரவாரத்தினோடுமெருவியே. (இஎ)

இ-ள். பேர் அவாவொடு மாசுணம் பேர-இரையைவிரும்பிருந்த ஆசையோடு மலைப்பாம்பு கிடந்த விடத்தினின்றும் பெயர, வேபேர - அப்புடை பெயர்ச்சியால் முங்கில்கள்வேரற்விழ, ஆ ஓடு மாசுணம்பேர-அவ்விழுதலாலஞ்சியோடுகின்மலைப்பசுக்களால் மிருந்தகள்பெயர, அருவி - அருவியாறள், ஆர - நிறைய, ஆதினோடு - முத்தக்களோடு, மருவிலந்து, ஆரவாரத்தின் ஓடும்-பேரொலியோடு ஓடும். (நஎ)

ஏகாரம் மூன்றும் அசைகள்.

உகசு. புகலும்வாளரிக்கண்ணியர்பொற்புயம்
புகலும்வாளரிக்கண்ணியர்பூண்முலை
அகிலுமாரமுமாரவங்கோங்குமே
அகிலுமாரமுமாரவங்கோங்குமே. (இஅ)

இ-ள். புகலும் - சிறப்பித்துச் சொல்லுகின்ற, வாள் அரிக்கு அண்ணியர் பொன் புயம் - அஞ்சாமையுடைய சிங்கத்தையொத்த ஆடவர்களது அழகிய புயங்களில், வாள் அரிக்கண்ணியர் பூண்முலை - ஒளி பொருந்திய செவ்வரிபாந்த கண்களையுடைய மங்கையர்களது அணியணிந்தமுலைகள், புகலும் - அழுதலும், அகிலும் - பூசிய அகிற்றேய்வையும், ஆரமும் - சந்தனமும், ஆர - நிகளாய்ப்பரந்து நிறைய, அம்கோங்கும்- அழகிய கோங்கு மரங்களும், அகிலும் - அகில் மரங்களும், ஆர

மும் - சந்தனமரங்களும், ஆர - நிறைய, ஆங்கு ஓங்கும் - அங்கு வளரும். ஏகாரம் இரண்டும் அசைகள். (இரு)

வாளரிக்கண்ணியர் - ஒளிபொருந்திய வண்டுகளை யுடைய மாலைகளை யணிந்த எனினும் அமையும்.

உகள. துன்னரம்பைநிரம்பியதொல்வனா
தன்னரம்பையருருவிற்றுன்றுமால்
இன்னரம்பயில்கீதங்களென்னலாம்
இன்னரம்பயில்கின்றனரேழைமார். (இரு)

இ - ள். துன் - இலைகளடர்ந்த, அரம்பை - வாழைகள் நிரம்பிய தொல்வனை - நிறைந்த பழைமையாகிய அம்மலையில், துன் - வந்நிறைந்திய, அரம்பையர் ஊருவில் தோன்றும். தெய்வமகளிருடைய தொடைகளைப்போல விளங்கும், ஏழை மார் - மாதர்கள், இன்னரம் பயில்கின்றனர் - வீணையை யியம்பு கின்றனர், (அதை) இன்னரம் பயில் கீதங்கள் என்னலாம் - இன்னரப்பறவைகள் பாடுகின்ற கீதங்களென்றுசொல்லலாம். எ - று.

உகஅ. ஊறுமாகடமாவுறழுங்கெலாம்
ஊறுமாகடமாமதமோடுமே
ஆறுசேர்வனமாவனையாயுமே
ஆறுசேர்வனமாவனையாயுமே. (சுo)

இ - ள். ஊறு - தொலைசெய்கின்ற, மா - சிங்கங்களும், கடமா - ஒருசார்மிருகங்களும், ஊங்கு எல்லாம் - அம்மலையினிடங்களி லெல்லாம், உற - இருக்க, ஊறு - ஊறுகின்ற, மா - மிகுந்த, கடமாமதம் ஓடும் - யானைமதமோடும், மாவனை - பெரிய மூங்கில்கள், ஆறு - அம்மதயாற்றில், சேர்வன - படிவனவாய், ஆடும் - அசைவாதிற்கும், மா - மிருகங்களும், வனை ஆடும் - மலையாடுகளும், ஆறு - வழிகளில், சேர்வன - சஞ்சரிப்பன. எ - று. ஏகாரம் மூன்றும் அசைகள். (சுo)

உகக. கலியருகருங்குறமங்கையர்
கல்லியகுழற்காமாகிழங்கெடா
வல்லியக்கனெருங்குமருங்கெலாம்
வல்லியக்கனெருங்குமையுமே. (சுi)

இ - ள். கல் - அம்மலையில், இயங்கு - சஞ்சரிக்கின்ற, கரும் - வலிமையுடைய, குறமங்கையர் - குன்று வித்தியர், அங்கு - அவ்

விடத்தில், கல்லி - கல்லி, அகழ் - தோண்டி, காமர் - அழகிய, கிழங்கு எடா - கிழங்குகளே யெடாமல், மருங்கு எல்லாம் - பக்கமெல்லாம், வல்லியங்கள் நெருங்கும் - புலிகள் வந்து கூடும், வல் - வலிமையுடைய, இயங்கள் - பறைகள், நெருங்கி - கிட்டியொலிக்க, மயங்கும் - அப்புலிகள்மயக்கமுற்றோடும். (கூக)

உஉo. கோளிபங்கயமூழ்க்குளிர்கய்ம்
கோளிபங்கயமூழ்க்குலைந்தவால்
ஆளிபொங்குமருவரைபூடிழிந்
தாளிபொங்குமரம்பையரோதியே. (சுஉ)

இ - ள். கோள் பெருமைபொருந்திய, இபம் - யானைகள், கயம் மூழ்க - குளத்தில் முழுக, குளிர்கயம் - குளிர்ந்த அக்குளம், கோளி - கொண்டதாகிய, பங்கயம் மூழ்க்குலைந்த - தாமரைகள் முழுதும் குலைந்தன, ஆளி பொங்கும் - சிங்கம் கர்ச்சிக்கின்ற, அருவரை ஊடு இழிந்து - வளப்பத்தை முற்றும் பார்த்தற்கரிய மலையின் மத்தியினின்றிழிந்து, அரம்பையர் ஓதி - தெய்வப் பெண்களது அளகத்தில், ஆளிபொங்கும் - வண்டுகள்மொய்க்கும். எ - று. ஆளி - மீட்டல். (சுஉ)

உஉக. ஆகமாலையமாகவுளாள்பொலி
வாகமாலெனலாகியதம்மலை
மேகமாலைமிடைந்தனமேலெலாம்
மேகமாலைமிடைந்தனகீழெலாம். (சுங)

இ - ள். ஆகம் ஆலயம் ஆக உளாள் - திருமார்பைக்கோயிலாகவுள்ள திருமகள், பொலிவாக - விளங்குதலாக, அம்மலை - அச்சந்திரசைலம், மால் எனல் ஆகியது - திருமாலென்று சொல்லும்படியாகியது, மேல் எல்லாம் - அம்மலைமேலெல்லாம், மேகம் மாலை மிடைந்தன - மேகக்கூட்டங்கள் பரவின, கீழ் எல்லாம் - படிவாரத்திலெல்லாம், கம் - சிகரில், மே - பொருந்திய, மாலை மிடைந்தன - பூமாலைகள் நிறைந்தன. எ - று. (சுங)

உஉஉ. மஞ்சாமலைவாணமொத்தவானினேறிம்
வெஞ்சாயையுடைக்கதிரத்தன்மீதபரயும்
பஞ்சானனமொத்தமற்றதபாயவேறும்
செஞ்சோரியெனப்பொலிவற்றதுசொக்கர்வானம். (சுசு)

இ-ன். மஞ்சு ஆர் மலிவாரணம் ஒத்தது-மேகம் நிறைந்த அத்தகிரியானையை யொத்தது, வானின் ஓடும் வெஞ்சாயை உடைக்கதிர் - ஆகாயத்திற்செல்லுகின்ற வெவ்விய கிரணங்களையுடைய ஞாயிறு, அங்கு அதன்மீது பாயும் பஞ்சாவனம் ஒத்தது-அவ்விடத்து அவ் யானைமேற் பாய்கின்ற சிங்கத்தை யொத்தது, அதுபாய - அச்சிங்கம்பாய, ஏறும் செஞ்சோரியென-மேலே சிதறுகின்ற செவ்வந்த ராத்தம்போல, செக்கர்வானம்-செவ்வானம், பொலிவுற்றது - விளங்கிற்று. எ-று. (சுசு)

கசு-வது. பூக்கொய்படலம்.

மலர்கொய்ததைக் கூறுகின்றபடலம்.

உஉ. மீனுடையெயிற்றக்கங்குற்கனகனேவெகுண்டுவெய்ய
கானுடைக்கதிர்களெனுமாயிரக்கரக்களோச்சித்
தானுடையுதயமென்னுந்தமனியத்திரியுணின்று
மானுடமடங்கலென்னத்தோன்றினன்வயங்குவெய்யோன்.(க)

இ-ள். நகநுத்திரங்களாகிய பற்களையுடைய இரவாகிய இரணியனைக் கோவித்து, வெவ்வியகாடுபோன்ற(நெருக்கமுடைய) கிரணங்களென்னும் ஆயிரங் கைகளை நீட்டித் தானுடைத்தாயிருக்கின்ற உதயகிரியாகிய பொற்றூணினின்று சிங்கம்போல ஞாயிறு தோன்றினன். எ-று. (க)

உஉச. நஞ்சினுங்கொடியகாட்டமுறுமுன்மயக்கநோக்கிச்
செஞ்சுலேகமலக்கையாற்றீண்டலுந்தீண்டகோமள்
தஞ்சிலம்படியின்மென்பூச்சொரிந்தடன்றுழுத்தவென்றல்
வஞ்சிபோன்மருங்குலார்மாட்டியாவரேவணக்கிவலாதார். (உ)

இ-ள் மகளிர் மலர்பறிக்கவேண்டிப் பூங்கொம்புகளைப் பற்றலும் அவை அவர்பாதத்தில் மலர்களைச்சொரிந்து வணங்கின வென்றல் அம்மகளிர் மாட்டு வணங்காதவர் யாவர். (உ)

உஉ. அம்புயத்தணங்கினணரம்மலர்க்கைகள்தீண்ட
வம்பியலலக்கற்பங்கிவாளரிமருளுங்கோளார்
தம்புயவனாகள்வந்துதாழ்வனதளிர்த்தமென்பூங்
கொம்புகள்தாழுமென்றல்கூறலாந்தகைமைத்தொன்றே. (அ)

இ-ள். அம்புயத்து அணங்கின் அன்னார் - தாமரைமலரில் வைகுந் திருமகளையொத்த மகளிர், அம் மலர்க்கைகள்-அழகிய பங்கயமலர்போன்ற கரங்களால், தீண்ட - கோட்டுப்பூக்களைப் பறிக்க, வம்பு இயல் அலங்கல் பங்கி வாள் அரிமருளும் கோளார் தம்புயம் வனாகள் வந்து தாழ்வன - மணம்பொருந்திய பூமாலையணிந்த சிகையையுடைய அச்சத்தைக் கொடுக்கின்ற சிங்கங்களை மஞ்சுந்நிறமுடையஆடவர்களதுபுயங்களாகியமலைகள் குனிந்து தாழ்வனவாயின், தளிர்த்த மெல்லும் கொம்புகள் தாழும் என்றல் கூறல் ஆம் தகைமைத்து ஒன்றே - தழைத்த மெல்லிய பூத்த பூங்கொம்புகள் தாழுமென்று சொல்லுதல் ஏதுத்சொல்லலாந் தகைமைத்தாகிய ஒருபொருளோ. எ-று.(அ)

புயவனாகள் வந்து தாழ்வனவாவது அம்புயத்தணங்கினன்னார்தமக்கெட்டாதபூக்களைப்பறிக்க வாளரி மருளுங்கோளார் குனிந்து அவரைத் தோளிற் சுமப்பதென்க.

உக. நதியினுங்குளத்தும்பூவாநினைக்குவளையோடு
மதிநுதல்வல்லிபூப்பமோக்கியமாலைத்தும்பி
அதிசயமெய்திப்புக்குவீழ்ந்தனவிலக்கப்போகா
புதியனகண்டபோழ்தவிடுவரோபுணர்மைபார்ப்பார். (கூ)

இ-ள். நதியினும் குளத்தும்பூவா-நதிகளினுங் குளங்களினும்பூவாத, நினைங்கள் குவளையோடு-தாமரை மலர்களைக் குவளைமலர்களோடு, மதிநுதல் வல்லிபூப்ப-அட்டமிச்சந்திரன்போல்வறநெற்றியையுடையபூங்கொடிகள்மலர, நோக்கியமாலைத்தும்பி - பார்த்த வரிசையாகிய வண்டுகள், அதிசயம் எய்திப்புக்கு வீழ்ந்தன - அதிசயமடைந்து புகுந்து மொய்த்தனவாகி, அலைக்கப்போகா - ஓட்டப்போகா, புணர்மைபார்ப்பார் - புணர்மையைப் பார்க்கவிரும்புவோர், புதியனகண்டபோழ்து விடுவரோ-புதியவற்றைப் பார்த்தபோது முற்றும் பாராமல் விடுவரோ. விடார். எ-று. (கூ)

உஉ. செம்மாந்துதெங்கின்னிளநீரையொர்செம்மலேக்கி
அம்மாவிலைமங்கையர்கொங்கைகளாகுமென்ன
எம்மாதர்கொங்கைக்கிலையோப்பனவென்றேரேழை
விம்மாவெதும்பாவெயராமுகம்வெய்துயிர்த்தாள். (உஎ)

இ - ள். மங்கையர் கொங்கைகளுக்கு ஒப்பாகுமென்றுபொதுப்படக் கூறினமையின் இவன் நமது மூலைகளையே யன்றிப் பிறமாதர் மூலைகளையுங் கண்டறிந்தவன்போலும் என்று புலந்தாளென்பது.

உஉஅ. போரென்னவீக்கும்பொருப்பன்னபொலங்கொள்கிண்டோள்
மாரனனையான்மலர்கொய்திருந்தானிவந்தோர்
காரணகூந்தற்குயிலன்னவள்கண்புதைப்ப
ஆரென்னலோடிம்மனலென்னவயிர்த்துயிர்த்தாள். (உஅ)

இ - ள். கண்ணோடு ஆரென்று கேட்டலால் இவ்வாறு வினையாட இவன் நம்மையன்றி வேறுசிலபெண்களையுங் கொண்டிருக்கிறான் போலுமென்றுபுலந்தாளென்பது. (கஈ)

உஉக. ஊற்றுர்ந்றைநாண்மலர்மாதரொருங்குவாசச்
சேற்றுல்லினையர்தசெந்தாமரைக்கைகணீட்டி
ஏற்றுர்க்குதவானிடையேற்றினன்றெழிந்தான்
மாற்றுணுதவான்கடுவச்சையன்போலெர்மன்னன். (கஙு)

இ - ள். மாற்றான் உதவான் கடும்வச்சையன் போல் மன்னன் - கொடுப்பதில்லையென்று மறுக்காதவனுமாய்கொடாதவனுமாயுள்ள அதமனுகிய லோபனைப்போன்ற ஒருவேந்தன், ஊற்று ஊர் நறைநாள் மலர்-ஊறுதல்பொருந்தியதேனையுடைய அன்றலர்ந்த மலர்களே, ஏந்தினன் - கைகளிற்கொண்டு, மாதர் ஒருங்கு - மாதாகளொருங்குகூடி, வாசச்சேற்றுல் வினையாத செந்தாமரைக்கைகள் நீட்டி - நாற்றம்பொருந்திய சேற்றில் வினையாத செந்தாமரை மலர்போன்ற கைகளையுயர்த்துக்கி, ஏற்றுர்க்கு உதவான் - இரந்தவர்களாகிய தனது பெண்டிர்களுக்குக் கொடாதவனுகி, இடைநின்று ஒழிந்தான் - அப்பெண்டிர்கள் மத்தியில் நின்றுவிட்டான், எ - று. (கஙு)

இவனுக்கு மனையியலாகலானும் கையிற்கொண்ட மலர்கள் சிலவாகலானும் கொடாமல் நின்றான் என்பது.

உஙூ. யாழொத்தருஞ்சொற்பொன்னையாளோரிகல்மன்னன்
தாழுத்தமானதாழ்த்தமனத்தாள்தளிர்நின்றூன்
சூழுத்தள்ளுங்கள்ளம்நினைப்பாளவளின்ற
முழுக்கேசன்னிளையைபேவித்தொடர்வாரும். (உச)

இ - ள். ஓர் இகல் மன்னன் - வலிமையுடைய ஒருவேந்தன், தாழ - கூடலிலிருக்க, யாழ் ஒக்கும் சொல்பொன் அனையாள்-வீணையினிசைபோன்ற சொல்லையுடையதிருமகளையொப்பா ளொருத்தி, தாழாள் - விரும்பாளாகி, தாழ்த்தமனத்தாள்-விரும்பிய மனமுடையளாகி, தளிர்நின்றூன்-தான் கூடாவிடின் கணவன் வேறொருத்தியைக் கூடுவானே வென்று மனம்வருந்துகின்றூளாகி, சூழுத்தள்ளுங் - அவலிருபள்ளத்து விறங்கினும், கள்ளம் நினைப்பாள் - களவை நினைப்பாளாகி, அவன் நின்ற சூழற்கு தன்கிள்ளையை ஏவித்தொடர் வாரும் - அவனிருந்தவிடத்துக்குத்தலைவி தெளியைப் போக்கியதன்பின் றொடர் வாரும், எ-று. (உச)

இ - ள். களவாவது மாயப் புணர்ச்சி. இதனை முன்னாக் கூறுதும். அவன் விரும்பிய காலை தான் விரும்பாமையால் தானேசெல்லுதற்கு காணிக்கிளியைப் போக்கி யதுகாரணமா யவனிடஞ் சென்றூனென்பது.

உஙக. அந்தாரகத்தைக்கணூறுமெயிமாசச்
சித்தாகினறகிலைதையிலுன்செய்றுவதோரான்
மந்தாரன்கொண்டகுதியோமாதவியென்றேர்
சந்தார்கொங்கைத்தார்முலையள்பற்றளர்வாரும். (உஙு)

இ - ள். மாதவி - ஒருமாதவி மரத்தைப் பார்த்து, மந்தாரம் தொண்டு ஈருதியோ - மந்தாரைமலரைப் பூத்துக்கொடுக்குதியோ, என்று - என்று வினவி, (உஙு)

உஙஉ. மறலிக்கூறும்வள்கிர்வேலானிடையேவர்
நிறலிக்கோலம்பெற்றிலெனைருட்டன்வாழுவிப்
பிறலிக்கொல்லேனெனசெய்வதிப்போதியென்றேர்
விறலிக்கோதொத்திழையெல்லாம்மிலிவாரும். (உஎ)

இ - ள். மறலிக்கு ஊன் ஆம் வன் கதிர்வேலான் - யமனுக்கு உணர்வுண்டாச்குகின்ற வலிய ஒளிபொருந்திய வேலையு

டைய தன்கணவன், இடையே வந்து உற - என்னிடத்தில் வ
துசேர, இக்கோலம்பெற்றிலென் என்றால் - இவ்வலங்கார
தைப் பெற்றிலேனாயின், உடன்வாழ்வு இப்பிறவிக்ருஒல்லே
அவளோடுசேர்ந்து வாழ்தலை இப்பிறவிக்கு வேண்டேன்,

உகூக. தன்னேர்கண்டாள்மென்னடைக்கண்டாள்,தமர்போலத்
தன்னக்கண்டாளதோழமைகண்டாள்துணையென்றுள்
உன்னேக்கண்டாரெள்ளுவர்பொல்லாதுநீயென்
றன்னக்கன்னிக்காடையளிப்பானமைவாரும். (கூ

இ - ள். உன்னேக்கண்டார் எள்ளுவர் - ஆடை பூணாயா
லிருத்தலால் உன்னைப் பார்த்தவரெல்லாரு மிகழ்வர், பொல்ல
து - உனதுதுண்டத்தால் பொள்ளல்செய்யாது, நீ உடுஎன்று
நீ உடுத்திக்கொள்ளென்று,

உகூச. பொன்னேதேனேபூமகளேகாணேயென்னு
தன்னேரில்லாளங்கோருகொய்யற்றழைமுழ்கி
இன்னேயெனைக்காணுதிநீயென்றிகலீத்தன்
கன்னீலக்கண்கையின்மறைத்துகருவாரும். (கூ

இ - ள் தன்னேர் இல்லாள் - தனக்கொப்பில்லாதவ ளெ
ருத்தி, அங்கு ஒரு கொய்யல்தழை மூழ்கி - அச்சோலையி
கொய்யத்தகுந்த இலையுடைய ஒருசெடியில் மறைந்து, பொ
னே - பொன்போன்றவளே, தேனே - தேன்போன்றவளே,
மகளே - திருமகள்போன்றவளே, எனைகாண் என்னு - என்னை
பராயென்று (ஒருத்தியைக் கூவிச்சொல்ல அவள்) இன்னே
என்னைக் காணுதி என்று இகலி - இப்போதே நீ என்னைப் ப
த்தியென்று பகைத்து, தன் கல் நீலக்கண் கையின்மறைத்
நகுவாரும் - தன்னுடைய கல்ல கரியகண்களை கைகளால்மூ
த்து அவ்விருவருஞ் சிரிப்பாரும். (கூ

உகூடு. வில்லிற்கோதைநாணுறமிடைகோரிலவங்கம்
புல்லிக்கொண்டதாமரைமென்பூமலர்தாங்கி
அல்லிற்கோதைமாதர்முகப்பேரவிந்தச்
செல்வக்காளிற்செய்திருனைத்திரிவாரும். (கூ

இ - ள். வில்லில் கோதை நாண்உற - (இடதுகையிற் பிடி
த்த) வில்லில் ஒழுங்காகிய நாண்பொருந்த, மிக்க ஓர் இலவங்

கம் - மேன்மையாகிய ஒப்பற்ற இலவங்கமலர்களே, புல்லிக்கொ
ண்ட தாமரைமெல் பூ மலர்தாங்கி - சொருகிக்கொண்ட தாம
ரையாகிய மெல்லிய அழகிய மலர்களை வலக்கையிற் கொண்டி
புல்லில்கோதை மாதர்முகம் - இருள்போன்ற அளகமுடைய
மடந்தையர்களது முகங்களாகிய, செல்வம்-வளம் பொருந்திய,
பேர் - பெரிய, அரவிந்தக்காளில் - பங்கய மலர்க் காட்டில்,
செங்கதிர் என்னத்திரிவாரும் - செஞ்ஞாயிறுபோலத் திரிகின்ற
ஆடவர்களும், எ - று. (கூஉ)

உகூசு. சோலைத்தும்பிமென்குழலாகத்தொடைமேவும்
கோலைக்கொண்டமன்மதவாயன்குறியுப்ப
நீலத்தண்கண்மங்கையர்சூழநிரையாவின்
மாலைப்போதின்மால்விடையென்னவருவாரும். (கூச)

இ - ள். சோலைத்தும்பி மெல்குழல் ஆக - அச்சோலையில்
ண்டுகளிலுள்ளசை மெல்லிய பொள்ளரங்குழலாகசையாக,தொ
டைமேவும் கோலைக்கொண்ட மன்மதன் ஆயன் - மாலையணித்த
தாலைக்கொண்ட மதனனாகிய ஆதவன், குறி உப்ப - மைத்
ரையும் மாதரையும் அவர் குறித்த இடத்திற் சேர்க்க, மாலைப்
போதில - அந்திப்பொழுதில், நிரை ஆவின்-கூட்டமாகிய பசுக்
களைப போல, நீலத்து உண்கண் மங்கையர் சூழ - நீல நிறம்
பொருந்திய மை யுண்டகண்களை யுடைய மாதர்கள்சூழ, மால்
விடை என்ன வருவாரும் - பெரிய இடபங்கள்போல வருவா
ரும். எ - று. (கூச)

மேலே கூறியகுளக்கச் செய்யுட்களே யெல்லாம் இப்பாட்
டில் ஆயினார் என்று வருவித்து முடித்துக்கொள்க.

கூ-வது. நீர்விளையாட்டுப்படலம்.

நீர்விளையாட்டாடியதைக் கூறுகின்றபடலம்.

உகூஎ. மையவாங்குவளையெல்லாமாதர்கண்மலர்களூத்த
கையவாமுருவத்தார்த்தங்கண்மலர்குவளைபூத்த
செய்யதாமரைகளெல்லாநெரிகவையாம்பூத்தவன்றே. (கூ

இ-ள். மை அவாம் குவளை எல்லாம் மாதர் கண் மலர்க
பூத்த – கறுத்த மை விரும்புகின்ற கருநீலமலர்களெல்லாம் ம
தர்களது கண்மலர்களைப்போலப் பூத்தன, கை அவாம்உருவ
தார் தம் கண் மலர்குவளை பூத்த-அழகுவிரும்புகின்ற பேரழ
பொருந்திய சரீரமுடைய மகளிரது கண்மலர்கள் குவளைப் பூ
கள்போலப் பூத்தன, மை அவாம் - கருமை யுடையனவாகி
எனினும் அமையும். (சு

உசஅ. மேவலாந்தகைமைத்தல்லால்வேழவிற்றடக்கைவீரற்
கேவலங்காட்டுகின்றவிணைநெடுங்கண்ணுரேழை
பாலைமார்பயந்தகோலப்பணைமுலிற்பொலிவான்வண்ணப்
பூவெலாமலர்ந்தபொய்கைதாமரைபொலிவதொத்தாள். (க

இ-ள். வேழவில் தடக்கைவீரற்கு - கரும்புவில்லேப்பிடித்,
அகன்றகையுடைய மன்மதனுக்கு, மேவல் ஆம் தகைமைத்த
அல்லால் – விரும்பலாந் தன்மையுடையதன்றி, ஏனலாம் காட்
டுகின்ற - அம்புகளையெல்லாங் காட்டுகின்ற, (கடி

உசக. செய்யவாய்வெளுப்பக்கண்செவப்புற
நெய்யராகமழியத்துளிசெக
தொய்யின்மாமுலேமங்கையர்தோய்தலால்
பொய்கைகாற்கொழுநரும்போன்றதே. (கக

இ-ள். தொய்யில்மாமுலே மங்கையர் தோய்தலால் - சந்
தால் கோலமெழுதிய முலைகளையுடைய மங்கையர்கள் படி
லால். (கக

கஅ-வது. உண்டாட்டுப்படலம்.

(*)

உணவுண்டுவினையாடுதலைச் சொல்லும்படலம்

உசo. பூக்கமழோதியர்போதுபோக்கிய
சேக்கையின்பச்செருச்செருக்குஞ்சித்தையார்
ஆக்கியவமிர்தெனவம்பொன்வள்ளத்தா
வாக்கியசுரும்மார்தன்மேயினார். (சு

இ-ள். பூக்கமழ் ஓதியர் - மலர்கள் மணக்கின்ற அளகமு
டைய மகளிர், போதுபோக்கிய - இராக்காலத்தைக் கழிப்ப
தற்கு, சேக்கை இன்பச்செரு - பள்ளியில் இன்பத்தையுடைய
கலவிப்போரில், செருக்கும் சித்தையார் - களிக்கின்ற மனத்தை
யுடையவராகளாய், ஆக்கிய அமிர்து என - (திருப்பாற்கடலில்
கடைந்து) உண்டாக்கிய அமிர்தம்போல, (சு

உசக. புலையுலாவுகோலவேற்கணுள்ளம்வவ்வினவளைத்தெவ்வே
று

அரசஉண் ணுதலினாயர்ன் கணவன்நறவுபருகாதவனுலால் மனத்திலவனிருக்க இவள் உண்ணின் அவன்மேல் படுமென்று ஞரி உண்ணுளாயினள். உ-ம். நெஞ்சத்தார் காதலவராகவெய் தின்ட - லஞ்சுதும் வேபாக்கறிந்து. எனவரும். (உo)

உசை. செற்றமுன்புரிந்தசெம்மல்வெம்மையால்
பற்றலுமல்லவிற்பார்த்தமேகலே
சுற்றுமுமூத்தின்முன்னவனிசேர்ந்தன
பொற்றொடியொருத்திகண்பொருதுமுத்தமே. (கo)

இ-ள். முன்செற்றம் புரிந்ததோர் செம்மல் - முன் குற்றஞ் செய்தவனுகிய ஓரசன், வெம்மையால்-ஊடலால் தும் விருப்பத்தால், அல்குலில் பார்த்த மேகலே - நிதம்பத்திற் பார்த்தமேகலேயை, பற்றலும் - பிடித்தலும், அற்று உரு - அம் மேகலேயி னின்று அறுபட்டுச் சிதறிய,

உசரு. மடைகம்பற்றினளமரவீணேதன்
தோடலிழ்மலர்க்காஞ்செவிப்பதெரட்டனன்
பாடினனொருத்திதனபாங்குனர்க்னோ
டேனதுசெயாளுளத்துள்ளதே. (கூ2)

இ-ள். மாட்கம் பற்றினள்-முதுக்கானினையமுறுக்கி, (கூ2)

உசஉ. குழைத்தபூங்கொம்புளொருத்திகூடலே
இழைத்தனளல்லவனிட்டபோதெலாம்
பிழைத்தலுமனங்கவேள்விழைப்பிலம்பொடும்
உழைத்தனளுயிர்த்தனளுயிருண்டென்னவே. (கூக)

இ-ள். குழைத்த பூங்கொம்பு அன்னுள் ஒருத்தி - தளிர்த் தபூங்கொம்பை யொப்பவளாகிய ஒருத்தி, கூடலே இழைத்த னள் - தரையில் விரலால் கூடம் சுழிகளேச் சுழித்தான், அவ் அவள் இட்ட போது எல்லாம் பிழைத்தலும் - அவை அவள் சுழித்தபோதெல்லாம் கூடாமல்விலகலும், அனங்கவேள்விழை ப்பில் அம்பொடும் உழைத்தனள் - அனங்கன் விருப்பத்தோ டெய்த அம்போடும் வருந்தினளாகி, உயிர் உண்டு என்ன-உயிர் இருக்கின்ற தென்று சொல்லும்படி, உயிர்த்தனள் - மூச்சுவிட் டாள். (கூக)

பிழைப்பில் என்று பாடமாயின் - தவிராத என்றுகொள்க. சுழிபொருந்தினுல் கணவன் வருவான் அது பொருந்தாவிடின் அவன் வரான். இதுகணவனேப் பிரிந்தவள்பார்க்கும்குறி.

உசஎ. விதைத்தமென்காதலின்வித்துமெய்நிறை
இதைப்புனல்நனைத்திடமுனைத்தவேயெனப்
பதைத்தனளொருத்திமேலொருத்திபஞ்சடி
உதைத்தலும்பொடித்தனவுரோமராசியே. (கூசு)

இ-ள். ஒருத்தி - ஒருத்தி, பதைத்தனள் ஒருத்தன்மேல்-ஊடலாற் பதைத்தனளாகித் தன்னுயகன்மேல், பஞ்சு அடி உதைத்தலும் - செம்பஞ்சுட்டிய பாதங்களால் உதைத்தலும், மெய் நிறை இதை - அவனது தேகமாகிய நிறைந்தபுதுக்கொல் லேயில், விதைத்த மெல்காதல் வித்து - அவன் வித்திய மெல் லிய அன்பாகிய விதைகள், புனல் நனைத்திட முனைத்த என - (அவ்வுதையாலுண்டாகிய வின்பமாகிய) நீர் நனைக்க முளைத் தன போல, உரோமராசி - ரோமக்கூட்டங்கள், பொடித்தன - சிலிர்த்தன. இன்சாரியை, ஏகாரம் அசை. இதைப்புனல் நனைத் திட முனைத்தவேய் என - புதுக்கொல்லேயை நீரால் நனைக்கமு னைத்த மூங்கில்கள்போல, விதைத்தமெல்காதல் வித்து - அவள் வித்திய மெல்லிய அன்பாகிய விதையால், மெய்நிறை - அவன தேகத்தில் நிறைந்த, உரோமராசி - உரோமக் கூட்டங்கள், பொடித்தன - சிலிர்த்தன எனினுமாம். (கூசு)

உசஅ. அனிவருநலத்தொடுசோர்கின்றுளொரு
குனிவருறுதலிக்குக்கொழுனன்றியே
தனிவருந்தோழியுந்தாயையொத்தனள்
இனிவருதென்றலுமிரவுமென்னவே. (இo)

இ-ள். ஒருகுனிவருறுதலிக்குக் கொழுனன் இன்றி - ஒருவனேவாகிய நெற்றியையுடையாளுக்குக் கணவனில்லாமல், அனிவரு நலத்தொடு சோர்கின்றுள் - துன்பம் வருகின்ற இன் பத்தோடு களர்கின்றுள், தனிவரும் தோழியும் - (களவிற்குரி யளாய்) தனித்து வருகின்ற தோழியும், இனிவரு தென்றலும் இரவும் என்ன - இனி வருகின்ற தென்றலேயும் இரவையும் போல, தாயை ஒத்தனள் - தன்தாயாகிய செவிலியை யொத் தாள் எ - று. (இo)

தோழியென்பாள் செவிலிமகள். "தோழிதானே செவிலிமகளே, * என்பவாகலின், துன்பமுங் காமங்கண்ணிற்றே வின்பத்துளடங்குமாகலின் துனிவரு கலக்கொடு என்றும், களவுக் குரிய தோழியு மதற்குடன் படாது தடுத்தலின் தாயையொத்தனள் என்றும், களவைத்தடுத்தலே காமக்கனலை மூள்வித்தாகுமாகலின் இனிவரு தென்றலும் இரவும்போல என்றும், கூறினர் "களவாவது மாயப்புணர்ச்சி. மாயப்புணர்ச்சி யென்மனர் புலவர்" † என்பதனுளும் அறிக.

உசை. நறைகமழலங்கன்மாலைகளிர்நறக்குஞ்சிமைகதிர்
ஞாலையறிகலவிசெல்வித்தோகையர்தருவீசி
நிறையகலல்குல்புல்குங்கலன்சுழித்தலகீர்ந்தார்
அறைபறையனையகீராரருமறைக்கவரோதான். (குசு)

இ-ள். அறைபறை அனையகீரார் அருமறைக்கு ஆவரோ-தன்னைத்தீண்டினவினை ஒழித்து வெளிப்படுத்துகின்ற பறையை யொத்தவர் அரிய இரகசிய காரியத்திற்குத் தகுதியாவரோ, (ஆகாரானமையின்) தறை அறி - இன்பதுலைக்கற்றறிந்த, நறைகமழ் அலங்கல் மாலைகளிர் நறும்குஞ்சிமைந்தர் - தேன்துளிக்கின்ற பூமாலையால் குளிர்ந்த கல்ல சிகையுடைய குமரர்களும், கலவிச் செவ்வித் தோகையர் - கலவிக்குரியபக்குவத்தையுடைய பெண்களும், தூசுவீசி - தாமணிந்திருந்த ஆடைகளைப் போக்கி, நிறை அகல் அல்குல் புல்கும் கலன்கழித்து அகலகீத்தார் - நிறைந்த அகன்ற அல்குலைச் சூழ்ந்தமேகலையை வாங்கித்தூரம் எறிந்தார். எ-று. (குசு)

உஞ0. தனியுமபுலவிவைக்காதல்சூழ்சுடர்
பனியெனத்துடைத்தும்பதைக்குஞ்சிதையாள்
புனையிழையொருமயில்பொய்யுறங்குவாள்
கனவெனும்கலத்திருந்தணைவர்புல்லினள். (சுச)

* தொல்காப்பியம் பொருளதிகாரம் களவியல். கூசு.

† "களவெனப்படுவது யாதெனினவின்வலனெழுமுன்கை வளைகெழுகூந்தன் - மூவேயெயிற்றமர்நகை மடற்கலோதியோடு - தேவபணிந்தன்டார்க்கமணன்றென் - ஸ்னேபாட்டிடமென வேறமைச்சரன் - மாணின குருவியொடு கடிந்தனளாயிடை - மாயமுஞ்தோழியு மருவினனகறியா- மாயப்புணர்ச்சி யெனமனர் புலவர்."

இ-ள். கூடர் சூழ்பனி என - சூரியன் உலகிற் சூழ்ந்த பனியை ஓட்டுதல்போல, துனி உறு புலவியைக்காதல் - துன்பமிகுந்த ஊடலை ஆசை, துடைத்தலும் - நீக்குதலும்,

கக-வது. எதிர்கொள்படலம்.

சனகமகாராஜன்தயரதசக்கரவர்த்தியை எதிர்கொள்வதைக்குறித்துக் கூறும்படலம்.

உஇ. அடாநெறியறைதல்செல்லாவருமறையறைந்தநீதி
விடாநெறிப்புலமைச்செங்கோல்வெண்குடைவேந்தாவேந்தன்
படாமுகமுகிலிற்றோன்றும்பருவமொத்தருவிபல்கும்
கடாநிறையாறுபாயுங்கடலொடுங்கங்கைசேர்ந்தான். (க)

இ-ள். அடாநெறி அறைதல்செல்லா-சுகாசாரரங்களுக்கு அடுக்காத மார்க்கங்களைச் சொலலுதலிற்செல்லாத, அருமறை அறைந்தநீதிவிடா-அருமையான வேதங்கள் கூறிய நீதிகளை விடாத, நெறிப்புலமைச் செங்கோல் வெண்குடை வேந்தர் வேந்தன்-நெறியையும் புலமையையுஞ் செங்கோலையும் வெண்குடையையுமுடைய அரசர்க்கெல்லா மரசனாகிய தயரதன், முகபடாமுகிலில் தோன்றும் - முகபடாமணிந்த மேகம்போல விளங்கும் (யானைகளது,) பருவம் ஒத்து அருவி பல்கும் - பருவகாலத்தில் மலையருவியைப்போலப்பெருகுகின்ற, கடாம்நிறை ஆறு பாயும்கடலொடுங்கங்கை சேர்ந்தான் - மதநீராகியநிறைந்தநதிகள்பாய்கின்ற சேணைக்கடலோடுங் கங்கைக் கரையைச் சார்ந்தான். எ-று. (க)

உருஉ. கப்புடைநாவினைகருலகமுங்கண்ணிற்றோன்றத்
துப்புடைமணலிற்றுஞ்சுகங்கைநீர்சுருங்கிக்காட்ட
அப்புடையனீகவேலையகன்புல்முகந்துமார்ந்த
உப்புடைக்கடலுள்தெண்ணீருண்ணையுற்றதன்றே. (உ)

இ-ள். கப்பு உடைநாவின் - இருபிளவாகிய நாவையுடைய, துப்பு உடைமணலிற்று ஆகி - தூயமணலையுடையதாகி,

உருசு. கங்கைநீர்நாடன்சேனைமற்றனைகடல்களெல்லாம்
சங்கினம்ஈர்ப்பவந்தசார்வனபோலச்சார
பங்கயத்தணங்கைத்தந்தபாற்கடலெதிர்வதேபோல்
மங்கையைப்பயந்தமன்னன்வனகர்வந்ததன்றே. (கூ)

இ-ள். கங்கைநீர் நாடன்சேனை - கங்கை நீரால் வளமுடைய கோசல தேசாதிபதியாகிய சக்கரவர்த்தியின் சேனை, மற்றுள்ள கடல்கள் எல்லாம் - பரந்கடலொழிய வேறுள்ள கடல்களெல்லாம், சங்கு இனம் ஈர்ப்பவந்து சார்வனபோலச் சார - சங்குக்கூட்டங்களொலிக்கவந்து சேர்வனபோலச்சேர, பங்கயத்து அணங்கைத்தந்த பாற்கடல் எதிர்வதுபோல் - தாமரையி லெழுந்தருளிய திருமகளை ஈன்ற அத்திருப்பாற்கடல் எதிர்கொள்வதுபோல், மங்கையைப் பயந்த மன்னன் வனகர் வந்தது - தோமிராட்டியைப்பெற்ற சனகமகாராசனது வனம் பொருந்திய நகரமாக்கள் வந்தார்கள். (கூ)

"சரயுவும் பலகாலினேடியுங் கண்டதில்லையே" என்றும் ருக்கூறி, கங்கை நீர்நாடன் என்று சண்டுக்கூறிய தென்னை யெனின், சரயுவுக்கு ராம கங்கை யென்னும் பெயருண்மை பற்றி. என்க.

உருச. இலைகுலாவயிலினனிகமேழெனவுளர்
நிலைகுலாமகரநீர்நெடியமாகடலெலாம்
அலகின்மாகனிதேர்புவியாரெனவிராய்
உலகெலாநிமிர்வதேபோருவுமோருவமையே. (எ)

இ-ள். இலைகுலா அயிலினன் - வெற்றிலைபோல விளங்குகின்ற வேலாயுதங்கொண்ட சக்கரவர்த்தியின்,

உருஎ. தொங்கல்வெண்குடைதோகைப்பிச்சமுட்படவிராய்
எங்கும்விண்புதைதரப்பகல்மறைந்திருளெழப்
பங்கயஞ்செய்யகம்வெளியும்பலபடத்
தங்குதாமரையுடைத்தானமேபோலுமே. (ஏ)

இ-ள். தொங்கல் வெண்குடை - பீலிக் குஞ்சங்கள் கட்டிய வெள்ளைக்குடைகளும் செவப்புக்குடைகளும், தொகைப்பிச்சமும் - கூட்டமாகிய பீலிக்குஞ்சங்களும், உட்பட விராய் - உட்படக்கலந்து, எங்கும் விண்புதைதர - எவ்விடத்தும் - ஆகா.

யம் மறைதலால், பகல் மறைந்து இருள் எழ - சூரியன் மறைந்து இருளுண்டாக, செய்யவும் வெளியவும்-செந்நிறத்தனவும் வெண்ணிறத்தனவுமாகிய, பங்கயம்-தாமரைமலர்கள், பலபட-பலவிதமாக, தங்கு - பூத்த, தாமரை உடைத்தானம் போலும்-தாமரை மலர்களையுடைய குளத்தை அச்சேனை ஒக்கும். எ-று.

செய்யவும் என்பதற்கேற்ப செவப்புக்குடை வருவிக்கப்பட்டது.

உருஅ. மன்னெடுங்குடைமிடைந்தடையரசமரரைத்
தன்னிமிழ்முரல்வழங்குருப்பெளிதரோ
பொன்னிமிம்புவிமிம்புமணிக்கலனெலாம்
மின்னிமிம்மினல்விழிமெயிலிடுமிலவிடும். (கக)

இ-ள். மன்னெடுங்குடை மிடைந்து - அரசர்களதுநெடிய குடைகள் நெருங்கி, வான் அடைய - ஆகாய மெல்லாம், மறைதர - மறைய, தன்னிமிழ் முரல் வழங்கு இருள் - தன்னொலி முழங்குகின்ற இருளானது, எளிது - அதனுண்டாகின்ற முழங்குகின்ற இருளானது, எளிதாகும், பொன் இடும்புவி இடும் - பொன்கொடுத்தும்பூமி கொடுத்தும் பெறத்தகுந்த, புனை மணிக்கலன் எல்லாம் - அலங்கரித்தலுக்குரிய ரத்நாபரணங்களெல்லாம், மின் இடும் - மின்னலொளியை வீசும், வில் இடும் - வில்லொளியை வீசும், வெயில் இடும் - வெயிலொளியை வீசும், நிலவு இடும் - நிலவொளியை வீசும். எ - று. (கக)

மின்னில் வெயில் நிலவு என்பன இரத்தினங்களுக்குரிய ஒளிவிசேடம்.

உருஉ. யானையோவிரதமோவிவுளியோபிடிகளோ
ஆனபேருறையிலாநிறையையாரறிவார்
தானையோர்சனகனேவலினெடுத்தாரைமுன
போனபேரிருவர்தம்புடைவரும்படையினே. (உக)

இ-ள். தானை ஏர்சனகன் ஏவலின் - சேனையினழகு வாய்ந்த சனகமகாராசன தேவலால், நெடும் தாதை முன்போனபோ இருவர் தம்புடை வரும்படையின் - பெருமை பொருந்திய தந்தைக்கு முன்சென்ற இராமலக்குமண ரென்னும் பெயருடைய இருவரது பக்கத்திற் செல்லுகின்ற சேனையில், யானை

யோ இரதமோ இவுளியோ பிடிகளோ - யானைகளும் இரதங்களும் குதிரைகளும் பெண்யானைகளும், ஆனபேர் உறை இலாநிறைவை அறிகுவார் யார் - ஆகிய பெரிதாகிய உறையென்னுமிலக்கக் குறிப்பில்லாத நிறைவை முற்றுந் தெரிவார்யார். (உக)

ஓகாங்கள் எண்ணின்கண் வந்தன.

உகுஅ. கரியவன்பின்புசென்றவனருங்காதலிற்
பெரியவன்றம்பியென்றினியதோர்பெருமையப்
பொருவருங்குமரர்தம்புனைதருங்குஞ்சியால்
இருவர்பைங்கழலும்வந்திருவருஞ்சூடினர். (உஎ)

இ - ள். கரியவன் பின்புசென்றவன் - கரிய திருமேனியையுடையஸ்ரீராமபிரானைத்தொடர்ந்துசென்றவன், அரும்காதலில் பெரியவன் தம்பி - யாவர்க்குஞ் செய்ய அரிதாகிய பத்தியாற் பெரியவனாகிய பரதாழ்வானுக்குத் திருத்தம்பி, என்று இனையதோர் பெருமைய - என்று சொல்லப்பட்ட இத்தன்மைத்தாகிய ஒப்பற்ற பெருமையுடைய, அப்பொருவுஅரும்குமார் இருவரும் தம்புனை நறும் குஞ்சியால் - ஒப்பு அரிதாகிய அக்குமரர்களிருவரும் தமது அலங்கரித்த நல்ல சிரத்தால், இருவர்பைங்கழலும் வந்து வருடினர் - இராமபரதர்களாகிய இருவருடைய பசிய பாதங்களை வந்து வணங்கினர். எ-று. குஞ்சி ஆகுபெயர். (உஎ)

கரியவன் பின்பு சென்றவன் - இலக்குமணன். அருங்காதலிற் பெரியவன் தம்பி - சத்துருக்கனன்.

உகுக. சான்றெனத்தகையசெங்கோலினுயிர்கள்தாம்
ஈன்றநற்றாயெனக்கருதுபேருளினுன்
ஆன்றவிச்செல்வமித்தனையுமொய்த்தருகுறத்
தோன்றலைக்கொண்டுமுற்செல்கெனச்சொல்லினுன். (உக)

இ - ள். ஆன்ற இச்செல்வம் இத்தனையும் - மிகுதியாகிய இவ்வைபவங்கள் இவ்வளவும், மொய்த்து அருகு உறத்தோன்றலை - நெருங்கி அருகிற்சேரச் சோமனை.

உகூ. காதலோவறிகிலங்கரிகளோப்பொருவிலர்
நீதிலசவ்வகையும்சிறிதரோபெரிதரோ
கோதைசூழ்குஞ்சியக்குமரர்வந்தெய்தலும்
சாதையாதொத்தசத்ராஜினின்மன்மையே. (கூ0)

இ - ள். கரிகளைப் பெருவினர் - யானைகளோடொத்த சேனைத்தலைவர்களது, காதலோ அறிகிலம் - அன்பையோ அறிகிலோம், நீதிலோ உவகையும் சிறிதரோ பெரிதரோ - குற்றமில்லாத சந்தோஷமும் சிறியதோ பெரியதோ, கோதைசூழ் குஞ்சி அக்குமரர் வந்து எய்தலும் - பூமாலைசூழ்ந்த சிகையையுடைய அக்குமரர் கால்வருமளவுக்குச் சேரலும், அத்தானையின்தன்மை - அச்சேனையின்றன்மை, தாதையாதலுஒத்தது - தந்தையை எவ்வளவிற் ரூப் ஒத்தது என - று. உலகையில்தந்தைக்குமேற்பட்டதென்பது. (கூ0)

உகூச. சூடகம்துயல்வரக்கோதைசோர்தரமல்சப்
பாடகம்பரதரூல்பகரவெங்கடகிக்
கோடரங்கிடவெழுங்குவிதடங்கொங்கையார்
ஆடரங்கல்லவேயணியரங்கயலெலாம். (கூக)

இ - ள். அணி அரங்கு அயல் எலாம் - அலங்கரிக்கப்பட்ட மாளிகைகளின் பக்கங்களாகிய வீதிகளெல்லாம், சூடகம் துயல்வர - கைவளைகள் அசைய, கோதைசோர்தர - அகலம்சோர, மலர்ப்பாடகம் பரதநூல் பகர - பாதமாகிய மலரிலணிந்த பாடகங்கள் பரதநூலை விரித்துகூற, வெம் கடகிக்கோடு அரங்கிட எழும் குவிதடம் கொங்கையார் - வெவ்விய மதமுடையயானையின் கொம்புகள் அழுகுகுன்ற எழுந்த குவிந்த புடைபரந்த முலைகளையுடைய நாட்டியப்பெண்கள், ஆடு அரங்கு அல்லவே - ஆடுகின்ற நாட்டியசாலைகளல்லவோ. எ - று. (கூக)

வீதிகளில் நாட்டியப் பெண்கள் நடனஞ் செய்கின்றனரென்பது.

உ0-வது. உலாவியற்படலம்.

வீதிலவீதிவாய்ச்செல்லுதலைக் கூறும்படலம்.

உகூ. பள்ளத்தும்பரபுகன்னீரினையவர்பாலல்பூத்த
வெள்ளத்தும்பெரியகண்ணுர்மென்சிலம்பமைமென்பூத்
தள்ளத்தம்பினடகேணையத்தமைவலித்தவன்பாற்செல்லும்
உள்ளத்தைப்பிடித்தாரென்றேதினின்றுமொத்தார். (கூ)

இ - ள். மெல்சிலம்பு அலம்ப - மெல்லிய சிலம்புகள்ஒலிக்க, மென்பூத்தள்ள - பாதமாகிய மெல்லிய தாமரை மலர்கள் தள்ளாட,

உசுங. விற்றங்குபுருவநெற்றிவெயர்வரப்பசலிம்மச்
சுற்றெங்குமெறிப்பவுள்ளஞ்சோர்வோர்தோகைகின்றுள்
கொற்றஞ்செய்கொலோலெனைக்கூற்றெனக்கொடியகண்ணுள்
மற்றெண்ணுங்காண்கிலாதாள்தமியளேவள்ளலென்றுள். (சங)

இ - ள். பசலை சுற்று எங்கும் விம்ம எறிப்ப-பசலை நிறம் மேனியெல்லாம் மிகும்படி எறிக்க,

உசுச. தோள்கண்டார்கோலைகண்டார்தொடிழற்றமலமன்ன
தாள்கண்டார்தாளைகண்டார்தடக்கைகண்டாருமஃதே
வாள்கொண்டகண்ணுர்யாரேவிடிவினேமுடியக்கண்டார்
ஊழ்கொண்டசமயத்தன்னுருவுகொண்டானைஒத்தார். (சஉ)

இ - ள். ஊழ்கொண்ட சமயத்து - இதனிற் சிறந்ததில்லை யென்று தனித்தனியே முடிவுகொண்ட அறுவகைச் சமயத்தில், அன்னன் உருவு கொண்டாரை ஒத்தார் - ஆறுமூர்த்திகளாய் விளங்கும் அவ்விராமனது திருவுருவைத் தியானிக்கின்ற அவ்வறுவகைச்சமயிகளை யொத்தார். எ-று.

இதனானே அறுவகைச்சமயத்திற்கும் இராமனே கடவுளென்பது. அறுவகைச் சமயிகளை யொத்தாரென்றது, அச்சமயிகள் தம்மதங் கூறிய கடவுளையல்லது பிறகடவுளை நோக்காதவாறுபோலத் திருத்தாள் திருக்கரம் என்னுமவற்றைப் பார்த்தவர் அவற்றையே பார்த்தாரென்பது பற்றி. (சஙு)

உசுடு. புனங்கொள்கார்மயில்போலியொர்பொற்செறடி
மனங்கொள்காதன்மறைத்தலெண்ணினுள்
அனங்கவேளதறிந்தனன்றற்றான்
மனங்கள்போலமுகமுமறைக்குமே. (உசு)

இ - ள். அற்றம் - சமையத்தை, மனங்கள்போல முகமும் மறைக்குமே - மனங்களைப்போல முகமும் ஒளிக்குமோ, (ஒளிக்காதாகலின்) அனங்கவேள் அது அறிந்தனன்-மன்மதன் அச்சமயத்தை யறிந்தான். (உசு)

அற்றமாவது காமம் மிகுந்ததருணம். உம் "அடுத்தது காட்டும் பளிங்குபோனெஞ்சங்-கடுத்தது காட்டுமுகம்" என்பதனுமுகத்திற்கு அறிவுண்டென்று உணர்க.

உசுசு. வையம்பற்றியமங்கையரெண்ணிலர்
அவ்வன்பொதுக்களிலையாத்தலால்
எய்யும்பொதரிலைமராமுமெளசெயவான
கையம்பற்றுடைவாளினுவகைகண்டான். (உசுங)

இ - ள். வையம் பற்றிய மங்கையர் எண்ணிலர் - தோளைப் பற்றித் தொடர்ந்த பெண்கள் அளவில்லவர், கை அம்பு ஏற்றுகைபிடித்தவாளிகள் அற்றுப்போனமையின், உடைவாளினும் கைவைத்தான் - உடைவாளினுங்கையைவைத்தான். (உசுட)

உசுள. காமத்தாலழிவாரொருநன்னுதல
சேமத்தார்வில்லிதத்துதேருங்கால்
தூமத்தார்குழற்றுமொழித்தோகைபால்
காமத்தாலனறுசல்லியிலுலெற்றுள். (சஅ0)

இ-ள். காமத்தால் - சேதனரெல்லாம் சமிக்கின்றனவும் சேதனரிடத்தில் தானேசமிக்கின்றனவும், இருவகைப்பொருளுடைய ராமனென்ற திருநாமத்தால், சேமம்தார்வில் - காப்பிலிருந்த பூமாலை யணிந்தவில்லை, (சஅ0)

உசுவது. கோலங்காண்படலம்.

சீதாபிராட்டியார் திருக்கோலங் கண்டருளியதைக் கூறும்படலம்.

உசுஅ. கண்ணனதன்னிறத்தனுள்ளக்கருத்தினிலைறத்துமீதிட்
டெண்ணின்றுவ்கொடிகளோடியுலகெங்கும்பரந்ததன்ன
வண்ணஞ்செய்கூந்தற்பாரவலயத்தமழையிற்றோன்றும்
விண்ணின்றமதியினென்னுஞ்சிகழிகைக்கோதைவேய்ந்தார். (அ)

இ - ள். கண்ணன்தன்நிறம் - ஸ்ரீராமபிரானது காயாம்பூநிறம், உள்ளக்கருத்தினை நிறைத்து மீதிட்டு - தனதுள்ளக்கருத்தை நிறைத்து மேலிட்டு, உள்நின்றும் கொடிகள் ஓடி - அம்ம

னத்தினின்றுங் கொடிகளோடி, உலகுஎங்கும்பரந்தது அன்ன-
உலகமெல்லாம் பரந்தாற்போன்ற, வண்ணம் செய் கூந்தல்
பாரம் வலயத்து – அழகைச்செய்கின்ற கூந்தலாகிய கனியா
னவட்டத்தில், விண் நின்ற மழையில் தோன்றும் மதியின் -
ஆகாயத்திற் பரவிய மேகத்தில்விளங்குகின்றசந்திரனேப்போல,
மேல்பூம் சிகழிகைக் கோதை வேய்ந்தார் - மெல்லிய பூவாற்
செய்த மாலையைச் சூட்டினர். எ – று. (ச)

உசுக. விதியதுவகையால்வானமீனினம்பிறையைவக்கு
கதவுறுகின்றதென்னக்கொழுந்தொளிகளுலத்தூக்கி
மதியினேத்தந்தமேகமருங்குநாவினேப்பதென்னப்
பொதியிருளகற்றிப்பூட்டியபூட்டுமிட்டார். (ஞ)

இ - ள். விதியது வகையால் வான மீன் இனம் – ஒருங்கு
சேர்வதற்கான விதியால் ஆகாயத்து நக்ஷத்திரக் கூட்டங்கள்
வந்து பிறையை கதவுறுகின்றது என்ன - வந்து அஷ்டமிச்ச
ந்திரனைச் சூழ்வதுபோல, கொழுந்து ஒளிகளுலத்தூக்கி - முத்
துக்கோத்த கம்பியின் நுனையொளி பிரகாசிக்க (நெற்றிக்கட்டெ
ன்னும் அணியை) க்கட்டி, மதியினேத்தந்த மேகம் - பூர்ணசந்
திரனேப் பெற்ற மேகம், மருங்குநாவினேப்பது என்ன - அச்சந்
திரன் பக்கத்தில் நின்று நாவினை வினேத்துக் காட்டுவதுபோல,
பொதி இருள் அளகபந்திபூட்டிய பூட்டும் இட்டார் - பொதிந்த
இருள்போன்ற ளகபந்தியில் பூட்டக்குந்த நெற்றிச் சுட்டி
யையுஞ் சூட்டினர். எ-று. (ஞ)

உஎ0. தனேயவிழ்கோதையோதிச்சானகித்தனிச்சிகையென்னும்
முளரிவிராமன்செங்கைமுறைமையிற்றீண்டகோற்ற
அளியனசக்குற்போதங்குலியலவாகுமென்றங்
கிளவெயில்சுற்றியன்னவெரிமணிக்கடகமிட்டார். (ஞக)

இ - ள். பிராட்டியினது கரமாகிய தாமரைகள் இரவிலுங்
குவியாதன வாகுமென்று வெயில் சுற்றினும்போல அக்கரத்திற்
கடகமணிவித்தார். (ஞக)

உஎக. சில்லிபலோதிகொல்கைத்திரள்மணித்தனச்செப்பிவி
லல்லியமனங்கவிழ்ந்துமான்மதச்சாந்திற்றீட்டி
பல்லியனெறியிற்பார்க்கும்பரம்பொருளென்னபார்க்கும்
இல்லியுண்டென்னின்றவிடையினுக்கிடுக்கண்செய்தார். (ஞ2)

இ - ள். பல் இயல் நெறியில் பார்க்கும் பரம் பொருள்
என்ன – பலபருதிகளோ யுடைய மகஞ்களால் நோக்கப்படுகின்ற
பரவஸ்துவாகிய இறைவனேப்போல, இல்லே உண்டு என்னயார்
க்கும் கின்ற - உருவம் இல்லே உண்டு என்று சொல்லுமாறு
எல்லார்க்குமொரு தன்மையாய் நின்ற, இடையினுக்கு இடுக்
கண் செய்தார் - இடைக்குத்தன்பம் செய்தார் எ - று. (கஉ)

நெறி ஆருபெயர். இல்லே யுண்டென்ன நின்ற என்றது -
பரம் பொருளாகிய இறைவனுக்கு உருவமில்லேயுண்டென்பது
போல, இடைக்கு உருவமில்லே யுண்டென்பதை பற்றி. பரம்
பொருளுக்குருவம் இல்லேயுண்டென்பன அத்துவிதமும் விசிட்
டாத்துவிதமும். இனிஇவ்வாறன்றிப் பரம்பொருளாகிய இறை
வன் இல்லுளனென்பது போல, இடையிலது உளது என்பது
பற்றி எனவுமாம்.

உஎஉ. நிறஞ்செய்கோசிகணங்கேகீலிவாதவல்குற்
புறஞ்செய்மேகலேபுந்தாழ்தாரகைச்சும்மைபூட்டித்
திறஞ்செய்காளிந்திசோதிவேதசேலொளியிற்றீர்ந்த
நிறங்குபுரியபாருங்கண்ணிளக்குறுநின்றார். (கூ)

இ-ள். நிறம் செய்கோசிகம் - நல்லநிறஞ் செய்கின்ற பட்
டாலாகிய, கீலிவாத - கொய்தும் கொயாதவுமாகிய, தூண்
தாசும் - நுண்ணிய ஆடையும், அல்குல் புறம்செய் மேகலேயும்
தாழ - அல்குல்மேற் சுற்றிய மேகலாபரணம் சிற்பாதம் வரை
யிலுந் தாழ, தாரகைச் சும்மை பூட்டி - நக்ஷத்திரங்களாகிய
முத்துக்கூட்டத்தைக் கோர்த்து, திறம் செய்காளிந்தி என்ற சோதி-
மேன்மை செய்கின்ற அணிவடம் வீசிய ஒளிகள், வேதசேய்
ஒளியில் தீர்ந்த - சானகி பிராட்டியினது செவ்விய திருமேனி
யிலுளளியால் நீங்கினவாகி, நிறங்குபுரிய-பக்கங்களிலெல்லாஞ்
சுழன்று நிரிய, யாரும் கண்விளக்குறுது நின்றார் - எல்லாருங்
கண்ணெறி மழுங்கி நின்றார். எ-று. (கூ)

உஎக. ஐவரமனிச்சப்போதினதிசமுகொய்யவாடற
பையரவல்குலாடன்பஞ்சின்றிப்பழுத்தபாதம்
செய்யபூங்கமலமன்னச்சேர்த்தியசிலம்புசால
செய்யகேகொய்புதன்றேபலபடவுலவுதம்மா. (ஞ)

இ-ள். ஆடல் அரவு பை அல்குலாள் தன்-ஆதிசேஷனுடைய படத்தையொத்த அல்குலையுடைய மைதிலியாரது, பஞ்சு இன்றிப் பழுத்தபாதம் - செம்பஞ்சுகூட்டுதலின்றியே செவந்த திருவடிகள், ஐயம் அனிச்சப்போதின் அதிகமும் நொய்ய - துண்ணிய வாகிய அனிச்சப்பூவினும் மிகுதியும் நொய்மையவாயின, செய்ய பூம் கமலம் அன்ன - செந்தாமரை மலர்போன்ற அப்பாதத்தில், சேர்த்திய சிலம்பு - சார்த்திய பாதசாபுரம், பலபடுதலால்வது - பலவாறாக ஒலிப்பதாகலால், சால நொய்யவே நொய்யதன்றே - மிகுதியும் அற்பத்தினும் அற்பமல்லவா. (கச)

அற்பத்தினும் அற்பமாவது யாதினுமிலையே. அனிச்சப்போதினும் மெல்லிய சீர்பாதத்தில் லோகத்தாலாகிய சிலம்பு யாங்ஙனம் சார்த்தப்பட்ட தென்றூர்க்குப் பலபடப்பேசுவதாகலால் அற்பமென்று சொல்லளவையாற்சாதித்தார்.

நொய்யவென்றே என்று பாடமாயின், ஆடல் அரவுபை அல்குலாள் தன் - ஆதிசேஷனுடைய பரம்பின் பட்டத்தையொத்த அல்குலையுடைய மைதிலியாரது, ஐய ஆம் அனிச்சப்போதின் அதிகமும் நொய்ய - துண்ணியவாகிய அனிச்சப்பூவினும் மிகுதியும் மெல்லியவாகிய, செய்ய பூங்கமலம் அன்ன - செந்தாமரை மலர்போன்ற, பஞ்சு இன்றிப் பழுத்தபாதம் - செம்பஞ்சூட்டுதலின்றியே செவந்த திருவடிகள் சால நொய்யவே நொய்ய என்றே - மிகுதியும் நொய்மையுடையன வென்றெண்ணியோ, சேர்த்திய சிலம்பு - அப்பாதங்களிற் சார்த்திய நூபுரம் பலபடுதலால்வது - பலவாறாக வொலிப்பது, என்க.

உசை. மொய்வளர்குவளைபூத்தமுளரியின்முளைத்தமுந்நாள்
மொய்வளர்மதியிற்பணமீனுண்டேலனையசேய்ப்ப
வைகமடந்தைமார்க்கும்நாகர்கோதையர்க்கும்வானத்
தெய்வமகளிர்க்குமெல்லாந்திலகத்தைத்திலகஞ்செய்தார். (கசு)

இ-ள். மொய்வளர் குவளைபூத்த முளரியில் - இதழ்கள் நெருங்கி வளர்ந்த இரண்டு குவளைப்பூக்களைப் பூத்த ஒரு தாமரைமலரில், முளைத்த - தோன்றிய, மெய்வளர்-உடல்வளர்ந்த, மூன்றாள் மதியின் நாப்பண் - மூன்றாளாகிய பிறையின் நடுவில்,

மீன் உண்டேல் அனையது ஏப்ப - நகூத்திரம் ஒன்றுளதேல் அதனையொப்ப, வைகமடந்தை மார்க்கும் நாகர் கோதையர்க்கும் வானத்தெய்வ மங்கையர்க்கும் எல்லாம் - பூலோகத்துப் பெண்களுக்கும் நாகர்பெண்களுக்கும் வானத்திலுள்ள தெய்வப்பெண்களுக்கும் இன்னும் எல்லார்க்கும், திலகத்தைத் திலகம் செய்தார் - திலகம்போலச்சிறந்த சீதாபிராட்டியார்க்கு வெண்டிலகம் தீட்டினார். (கசு)

மீன் என்றமையின் வெண்டிலகமென்று உரைக்கப்பட்டது.

உஎடு. சின்னப்பூச்செருகுமென்பூச்சேகரப்போதகோதில்
கன்னப்பூக்களுலமீதகற்பக்கொழுந்துமான
மின்னப்பூஞ்சுரும்புண்டுமிழிரைத்தும்பிகளும்பம்பும்
புன்னைப்பூந்தாதுமானும்பொற்பொடியப்பிவிட்டார். (கஎ)

இ-ள். சின்னப்பூ - விசித்திரப்பூவும், செருகுமென்பூ - சொருகுகின்ற மெல்லியபூவும், கோதில்கன்னப்பூ - குற்றமற்ற கர்ணப்பூவும், களுல - தூளிசெய்ய, சேகரப்போது - தலையலங்காரப்பூ, மீது கற்பகக்கொழுந்துமான மின்ன - மேலே கற்பகக்கொழுந்தை ஒப்பாகப் பிரகாசிக்க, (கஎ)

கர்ணப்பூவாவது காதிலணியும்பூ சுரும்பு வண்டு மிஞிறு தும்பி என்பனவண்டு விசேடம்.

உஎசு. சங்கங்கையுடைமையாலுந்தாமரைக்கோயிலாலும்
இ-ன். வேந்தரே பெரிது என்பாரும் - அரசர் கூட்டமே பெரிதென்று சொல்லுவாரும், வீரரே பெரிது என்பாரும்-படைவீரர் கூட்டமே பெரிதென்று சொல்லுவாரும், மாந்தரே பெரிது என்பாரும் - மைந்தர் கூட்டமே பெரிதென்று சொல்லுவாரும், மகளிரே பெரிது என்பாரும் - மகளிர்கூட்டமே பெரிதென்று சொல்லுவாரும், போந்தபேபெரிது என்பாரும்-முன்பு வந்தகூட்டமே பெரிதென்று சொல்லுவாரும், புகுவதே பெரிது என்பாரும் - வருகின்ற கூட்டமே பெரிதென்று சொல்லுவாரும் - தோந்தது தேரின் அல்லால்-தாம் அறிந்ததைச்சொல்லினரல்லாமல், தெரியக்கண்டார் யாவர் - முற்றுந்தெரியப்பார்த்தவர் யார். எ-று. (சுசு)

(இசு). மூற்பயந்தெடுத்தகாதற்புதல்வனேமுறையிலேகும்
இற்பயன்சிறப்பிப்பாரினீண்டியவுவகைதூண்ட
அற்புதன்றிருவைச்சேருமருமணங்காணப்புக்கார்
நற்பயன்றவத்தினுய்க்குநான்மறைக்கிழவரெல்லாம். (எக)

இ-ள். முன்பயந்து எடுத்தகாதல் புதல்வனை-முன்பு பெற்றெடுத்த ஆசைமகனை, முறையின் ஓடும் - முறைமையோடும், இல் பயன் சிறப்பிப்பாரின் - மணஞ்செய்வித்து இல்லறவாழ்க்கையில் உடன்படுத்துவாரைப்போல, (எஉ)

(இ). விளக்கொளிமறைத்தமன்னர்மின்னெளிமருடகோடி
தாளக்கொளிவிளம்பிணருஞ்சுடையுமறைத்தசுற்ற
அளக்கர்வாய்முத்தமூரல்முதலாரணிவின்சோதி
வளக்கலைமென்றவ்வாரேஞ்சுணேயுமறைத்தவன்றே. (எடு)

இ-ன். மன்னர்மின் ஒளிமருடகோடி - அரசர்களது மின்னல்போன்ற வொளியுடைய கிரீடங்களினுமுப்புகள், விளக்கு

ஒளிமறைத்த-விளக்கினொளியை மறைத்தனவாய், ஒளிதுளக்குஒளியைச்செய்கின்ற, விசும்பின் ஊரும் - ஆகாயத்திற் செல்லுகின்ற, சுடரையும் மறைத்த - சூரியனையும் மறைத்தன. சூழ்ந்த அளக்கர்வாய் முத்தம் மூரல் - உலகைச் சூழ்ந்த கடலினுண்டாகிய முத்தங்கள்போன்ற பற்கள் பொருந்திய, முனிவலர் அணியின்சோதி - புன்சிரிப்புடைய மங்கையரது இழைகளின் சோதிகள், வளைக்கல் அம்என்று-கம்மால் வளைக்கலரகுமென்று, அவ்வாளேர் கண்ணையும் மறைத்த - அத்தேவர் கண்களையும் மறைத்தன. (எடு)

(இஅ). நீலமாமுகிலனுன்தனிரையிலேடறிவுறிக
நீலமார்க்குண்டுகெட்டேன்றேவினடங்குவானே
காலமாக்கணிக்கும்நுண்மைக்கணக்கையுங்கடந்துநின்ற
மூலமாய்முடிவிலாதமூர்த்தியிம்முனபனென்பார் (கக)

இ-ன். தேவரின் அடங்குவானே - ஒப்புச்சொல்ல தேவர்க்குன் றிற்பானே, தேவர்க்கு மேற்பட்டவனென்பது கருத்து.

(இக). ஆங்குவந்தடைந்தவண்ணல்ராசையின்கவரிவீச
பூங்குழன்மகளிருள்ளம்புதக்களியாடகோக்கி
வீங்கிருங்காதல்காட்டிவிரிமுகக்கமலபீடத்
தோங்கியமகுடஞ்சூடியுவகைவீற்றிருப்பக்கானுன். (சஅ)

இ-ன். ஆங்குவந்து அடைந்த அண்ணல் - ஆங்குவந்து சேர்ந்த ஸ்ரீராமபிரான், ஆசையின் கவரிவீச - ஆசையாகிய சாமரம் இரட்ட, பூங்குழல் மகளிர் உள்ளம் - அழகிய அளகமுடைய மாதர்கள் உள்ளத்தில், புதுக்களி ஆடகோக்கி - புதிய வுவகை நடனஞ் செய்யப்பார்த்து, வீங்கு இருங்காதல் காட்டி-ஆங்குள்ளோர்க்கு மிகுந்த அன்பைக்காட்டி, விரிமுகக் கமல பீடத்து-அலர்ந்த முகமுடைய பதுமாசனத்தில், ஓங்கிய மகுடம் சூடி - உயர்ந்தமுடிசூடி, உவகை வீற்றிருப்பக் காணன்-உவகையோடு சக்காவர்த்தி வீற்றிருக்கக்காணன். எ-று. (கஅ)

(சுo). வேத்தவைமுனிவரோடுமிருப்பவெனினிருமெயமை
ஏத்தனமிசைச்சுருஞ்சேம்பொன்னடபமினிதினெய்தான
ஓத்தனவுலகத்தெல்லாமுலனையுணர்த்தாருள்ளம்
பூத்தனவடிவைபொப்பான்பிறனவகேயிலுக்கான (சஅக)

இ-ள். விருப்பொடு - விருப்பத்தோடு, களிக்கும் - உவகின்ற, வேந்து அவை - இராசனைசேரும், முனிவரோடு மெய்

மை ஏத்து அவை இசைக்கும்-முனிவரோடு மெய்யைத் துதிக்கின்ற சபையாகச் சொல்லுகின்ற, செம்பொன்மண்டபம்-செம்பொன்னாலாகிய மண்டபத்துக்கும், இனிதின் எய்தான் - இனிதாய்ச் செல்லான்; ஒத்தவை-வேதத்திலுள்ளனவாகிய சித்ரூபங்களையும், உலகத்து எங்கும் உள்ளவை-உலகமெங்கு முள்ளனவாகிய அசித்து ரூபங்களையும், உணர்ந்தார் உள்ளம் பூத்தவை-உணர்ந்த ஞானிகளது உள்ளத்திற் பூத்தனவாகிய ஆனந்த சொரூபங்களினது, வடிவை ஒப்பான்-வடிவை யொப்பானாகிய அவ்விராமபிரான், சிற்றவை கோயில் புக்கான் - சிறியதாயாகிய கைகேசியினது மாளிகையுட் சென்றான். (கஎ)

சுக. இப்பொழுதெம்மனோரால்யம்புதற்கெளிதேயாரும்
செப்பருங்குணத்திராமன்றிருமுகச்செவ்விகோக்கில்
ஒப்பதேமுன்புபின்பவ்வாசகமுணரக்கேட்ட
அப்பொழுதலர்ந்தசெந்தாமரையினேவென்றதம்மா. (கஅ)

இ-ள். இப்பொழுது எம் மனோரால் இயம்புதற்கு எளிதே-இப்போது எம்போலியராற் சொல்லுதற் கெளிதோ, கோக்கில் - ஆராயுமளவில், யாரும் செப்ப அரும்குணத்து இராமன் - எவரும் துதிக்க அருமையாகிய மங்கள குணமுடைய ஸ்ரீராமபிரானது, திருமுகச்செவ்வி - முகத்தினதழகு, அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை - அன்றலர்ந்த செந்தாமரை மலரை, முன்பு ஒப்பது-முன்பு ஒப்பதாகும், அவ்வாசகம் உணரக் கேட்டபின்பு - அம்மொழியை யறியக்கேட்டபின்பு, வென்றது - அம்மலரைவென்றது. எ - று. (கஅ)

ச-வது. நகர்நீங்குபடலம்.

ஸ்ரீராமபிரான் திருவயோத்தியை நீங்கியதைக் கூறுகின்றபடலம்.

சுஉ. வஞ்சமோமகனேயுமேமாகிலம்
சஞ்சமாகநீதாங்கென்றவர்சகம்
நஞ்சமோவிலிநானுயிர்வாழ்வெனே
சஞ்சமஞ்சுமென்னருயிரஞ்சுமால். (கஅ)

இ-ள். அஞ்சும் - ஐம்பூதங்களும் பயப்படும், என் ஆர் உயிர் அஞ்சும் - எனது நிறைந்த உயிரும் பயப்படும். (கஅ)

சுகூ. பொற்புறுத்தனமெய்மைபொதிந்தன
சொற்புறுத்தற்குரியனசொல்லினுன்
கற்புறுத்தியகற்புடையாடனை
வற்புறுத்திமனங்கொளத்தேற்றுவான். (கஉ)

இ-ன். பொற்பு உறுத்தன - அழகு பொருந்தினவாயும், மெய்மை பொதிந்தன - பொய்யில்லாதனவாயும், சொற்புறுத்தற்கு உரியன சொல்லினுன் - சொல்லுதலுக்கு உரியனவாயுமுள்ள வார்த்தைகளைச் சொல்லி, கற்புறுத்திய கற்பு உடையாள் தனை-கற்பையுறுதிப் பொருளாகக்கொண்ட கல்வியுடைய கோசலையை, ()

சுகூ. போன்றுநீதொழுதுபுரவலன
ஆகமற்றவள்தன்னையுமாற்றியிச்
சோகந்தீர்ப்பவளென்றுசுமித்திரை
மேகந்தோய்தளிக்கோயில்மேயினுன். (உக)

இ-ள். போன்றுநீ தொழுது - செல்லுகின்ற கோசலையைத் தொழுது, புரவலன் ஆக - சக்கரவர்த்தியை ஆற்றவேண்டியதுபோல, அவள் தன்னையும் ஆற்றி - அக்கோசலையையும் ஆற்றி, இச்சோகம் தீர்ப்பவள் - இச்சோகத்தைப்போக்குபவள், சுமித்திரை எனும் - சுமித்திராதேவியென்னும், (அவளது). (உகூ)

சுகூ. மின்னினறவேயமேனிவெறிதாய்விடின்றதுபோல்
உன்னுந்தகைமைக்கடையாவுமதோயுறுதின்றுணரான்
இன்னென்றுரையானென்னையிதுதான்யாதென்றறியேன
மன்னன்றகைமைகாணவாராய்மகனேயென்னும். (உஎ)

இ-ள். மின் நின்று அனைய மேனி வெறிதாய் - மின்னல் நின்றாற்போன்ற ஒளியுடைய சரீரம் அது மழுங்கி வெறிதாக, விடம் நின்றதுபோல் - விடமேறியதுபோல, உன்னும் தகைமைக்கு அடையா - நினைக்குந் தகைமைக்கெட்டாத, உறுநோய் உறுகின்று - பொருந்திய நோய் இருக்கின்றது, உணரான் - அதையறியான், (உணர்வின்றியிருக்கின்றனென்பதுகருத்து). ()

சுகூ. இறந்தானல்லனரசன்னிறவாதொழிவானல்லன
மறந்தாணுணர்வென்றன்னுவன்கேயர்கோன்மக்கை
துறந்தாள்துயரந்தன்னேத்துறவாதொழிவாளிவளே
பிறந்தார்பெயருந்தன்மையிறராலறிதற்கெளிதோ. (உஅ)

இ-ள். வன்கேகயர் கோன்மங்கை - வலியகேகயத் தரசன் பெண்ணாகிய கைகேசி, துயரம் துறந்தாள் - துயரத்தை நீக்கினாள், தன்னைத் துறவாது ஒழிவாள் இவளே - அத்துயரத்தை நீக்காத வளிக்கோசலையே, பிறந்தார் பெயருந்தன்மை - வினை செய்யத் தலைப்பட்டவர் மனம் வேறுபடுந் தன்மையை, பிறரால் அறிதற்கு எளிதோ-அவர்சொன்னலன்றிப் பிறரால்அறிதற் கெளிதாமோ. (கூசு)

சுள. ஈதப்பனிநீரளவித்தின்காலுதவுந்தண்கால்
போதத்தளவேதவழ்வித்தின்சொற்புகலாகின்றான்
ஓதக்கடனஞ்சுமையாளுரைசாஞ்சொருவாறவியக்
காதற்புதல்வன்பெயர்போதுகல்வானுயிருங்கண்டான். (கூகு)

இ-ள். ஈதப்பனிநீர் அளவி - குளிர்ச்சியுடைய்பனிநீரைத் தெளித்து, தின்கால் உதவும் தண்கால் - வலிய காம்பைப் பிடித்து வீசுகின்ற சிறிதியுதவிய குளிர்ந்தகாற்றை, போதத்து அளவுதவழ்வித்து - (சக்கரவர்த்திவிடும்) மூச்சினளவாகத் தவழச் செய்து, (கூகூ)

இனைத்தகாலை ஒங்கிவீசும் காற்றுமூச்சை யடக்குமாகலின் போதத்தளவே யென்றார்.

சுஅ. வாயான்மன்னன்மகனேவனமேகென்னுமுன்னம்
நீயோசொன்னயவனெங்கிமிர்கானிடைவெங்கெறியில்
போயோபுகலோதவிரான்புகழோடியிரைச்சுடுவெந்
தீயோனின்போற்றீயாருளரோசெயலென்னென்றான் (சசு)

இ-ள். அவனெ நிமிர்கானிடை - இராமனே மரங்களுயர்ந்த காட்டில், வெம் கெறியில் - வெவ்வியவழியில், போய்புகல் தவிரான் - போய்ச்சேர்வதைத் தவிரான், (சசு)

ஓகாரம் இரண்டும் அசைகள்.

சுக. எனைகைக்கண்டும்ஏகாவண்ணம்இடைபூஅடையான்
உனைகைக்கண்டும்இலனெனவென்றுயர்கோசலையை
பின்னைக்கண்டானையான்பிரியக்கண்டதுயரம்
தன்னைகண்டேதவிர்வாள்தளர்வாள்நிலையிற்றளர்வான். (சஎ)

இ-ள். பின்னைக்கண்டான் - கைகேசியினிட்டத்தில் விடைபெற்ற பின்பு பார்த்தவனுயிய, அனையான் - அவ்விராமன், பிரி

யக்கண்டதுயரம்-பிரியச்செய்ததன்பத்தை,தன்னைக்கண்டுதவிர்வாள் - (சக்கரவர்த்தியாகிய) தன்னைப்பார்த்து நீக்கக் கருதிவந்த கோசலாதேவி, தளர்வாள் - சோர்வாள், நிலையில் தளர்வான் - அவள் சோரும் நிலைமையைக்கண்டு சக்கரவர்த்தி சோர்வான். (சஎ)

எ0. மாற்றுள்செயலாமென்றுங்கணவன்வரமீய்ந்தள்ளம்
ஆற்றுதயர்ந்தானென்றுமறிந்தாளவளுமவனைத்
தேற்றுகின்றுள்மகனைத்திரிவானென்றுரைசான்
தோற்றுன்மெய்யென்னுலகஞ்சொல்லும்பழிக்குஞ்சோர்வாள் (சஅ)

இ-ள். மகன் திரிவான் என்றுள் - மகன் மீண்டு வருவானென்றுள், (அவன்வரின்) அரசன் மெய்தோற்றான் என்று-சக்கரவர்த்தி மெய்க்குத் தோற்றானென்று, உலகம் சொல்லும் பழிக்கும் சோர்வாள் - உலகோர் கூறும் பழிக்கு மஞ்சுவாள்.

எக. போவாதொழியாவென்றுள்புதல்வன்றன்னைக்கணவன்
சாவாதொழியாவெனவென்றுள்ளத்தள்ளுற்றயர்வாள்
காவாயென்றுள்மகனைக்கணவன்புகழுக்கஞ்சினாள்
ஓவாவுயர்கோசலையாமன்னமென்னுற்றனளே. (சக)

இ-ள். மகனே காவாய் என்றுள் - திருமகனைக்கூவி சக்கரவர்த்தியைக் காவாயென்றுள், (பின்னும் நினைந்து) கணவன் புகழுக்கு அழிவான்-கணவனது புகழுக்கு வருந்துவான், ஆவா உயர்கோசலையாம் - ஆஆ உயர்ந்தகோசலையாகிய, அன்னம் என்னுற்றனள்-அன்னம் யாதுறுமோ. ஆஆ இரக்கக்குறிப்பு.

எஉ. சேதாம்பற்போதனையசெங்கனிவாய்வெண்டளவப்
போதாம்பற்றோனறப்புனர்முலைமேற்பூத்தசை
மாதாம்பற்றென்னமழைக்கண்ணீராலியுக
காதாம்பற்றுமழலைங்கைமாரேங்கினார். (எ0ச)

இ-ள். சேதாம்பல்போது அனையசெங்கனிவாய்-செவ்வல்லி மலரைப்போன்ற செவந்த இனிப்புடையவாயில், வெண்தளவப் போது ஆம் பல்தோன்ற-வெளிய முல்லைமலரையொத்தபற் கள்விளங்க, புனர்முலைமேல் - வெளியிற்றி நெருங்கிய முலைகள்மேல், பூமாதரை காம்பு அற்று என்ன - அழகிய பெருமை பொருந்திய முத்துவடம் அற்றுச் சிதறினாற்போல, மழைக்

கண்ணீர் ஆலிஉக - இளமைபொருந்திய கண்களினின்று நீர்த் துளிசிந்த, நாதாம்பற்றுமழலை நங்கைமார் எங்கினர்-இதழ்ரா பல் அண்ணம் என்பன திருந்தாத மழலைச்சொல்லுடைய மட மந்தையாழுதார். எ-று. (கoக)

ஆம் - உவமை யுருபு.

எக. ஞானியுமுய்கலானென்னுதேராயகனைக்
கானியுமென்றுரைத்தகைகேகியுங்கொடிய
கூனியுமல்லாற்கொடியார்பிறருளரோ
மேனியுமின்றிவெறுநீரேயாயினர். (கoங)

இ-ள். நாயகனை -ஸ்ரீராமனுக்கு, கான்நயும் என்று உரைத்த - காட்டைக்கொடுமென்று சொல்லிய, மேனியும் இன்றி-சரீரமுமில்லாமல், வெறுநீர் ஆயினர் - வெறுந் தன்மையாயினர். (கoஙூ)

எச. கேட்டாவினையோன்கொளர்ஞாலம்வரத்தினுலே
மீட்டாளளித்தாள்வனத்தம்முளின்வெம்மைமுற்றி
நீட்டாதவேற்கட்சிறுதாயெனையாவராலும்
மூட்டாதகாலக்கடைத்தீயெனமூண்டெழுந்தான். (கஉஞ)

இ-ள், இகேயோன் - இலக்குமணன், நீட்டாத வேல்கண் சிறுதாய் -நீட்டாத வேல்போன்ற கண்ணுடைய சிறுதாயாகிய கைகேசி, வரத்தினுல் கொளர்ஞாலம் மீட்டாள் - வரத்தால் இடமகன்ற புவியை மீட்டு, தம்முளின் வனம் அளித்தாள் எனதம்முனுக்குவனத்தைக் கொடுத்தாளென்று, கேட்டான்-கேட்டு, யாவராலும் மூட்டாத காலக்கடைத் தீயென - யாவராலும் மூட்டப்படாத ஊழிக்கடையின் தீயைப்போல, வெம்மைமுற்றி-வெப்பமிகுந்து, மூண்டு எழுந்தான்-முனிந்தெழுந்தான். ()

எடு. கண்ணிற்கடைத்தீயுகெற்றியிற்கற்றைகாற
விண்ணிறசுடருஞ்சுடர்தோன்றமெய்நீர்விரிப்ப
உண்ணிற்குமுயிர்ப்பெனுமூதைபிறக்கின்ற
அண்ணற்பெரியோன்றனதாதியின்மூர்த்தியொத்தான். (ககசு)

இ-ள். உள்நிற்கும் உயிர்ப்பு என்னும் - உட்புள்ளே நிற்கும் மூச்சாகிய, ஊதை பிறக்கின்ற அண்ணல் பெரியோன்-ஊழிக்காற்று தோன்றுகின்ற பெருமை பொருந்திய பெரியோன், கண்ணில் கடைத்தீஉக - கண்களினின்று ஊழித்தீ திகறவும், கெற்றியில் கற்றை நாற - நெற்றியில் சோதிவீசவும், (அதனுல்) விண்ணில் சுடரும் சுடர்தோன்ற - இறுதியிலாகாயத்தில் பிரகாசிக்குஞ் சூரியன் தோன்றவும், மெய்நீர் விரிப்ப - திருமேனியினின்று பிரளயகாலவெள்ளம் பெருகவும், தனது ஆதியின்மூர்த்தி ஒத்தான்-தனதாதியின் மூர்த்தியையொத்தான். ()

தனதாதி மூர்த்தியாவது - ஆதிசேடமூர்த்தி. ஊழிமுடிவில் ஆதிசேடனது திருமேனியினின்று அக்கினிகுந் தோன்றி உலகையழிக்குமென்க.

எசு. விண்ணுட்டவர்மண்ணவர்விஞ்சையர்நாகர்மற்றும்
எண்ணுட்டவர்யாகரும்நிற்கவேர்மூவராகி
மண்ணுட்டினர்காட்டினர்வீட்டினர்வந்தபோதும்
பெண்ணுட்டமொட்டேனிவிப்பேருலகத்தினென்னு (கஉஉ)

இ-ள், விண்நாட்டவர் - விண்ணுலகத்தாரும், மண்ணவர்-மண்ணுலகத்தாரும், விஞ்சையர் - விஞ்சையரும், நாகர் - நாகலோகத்தாரும், மற்றும் எண்நாட்டவர் யாவரும் நிற்க-வேறு எண்ணத்தகுந்த நாட்டிலுள்ளவரெல்லாரும் நிற்க, ஓர் மூவர் ஆகி - ஒரு மூவராகி, மண்காட்டினர் - புவியைப் படைக்கின்றவரும், நாட்டினர் - காக்கின்றவரும், வீட்டினர் - அழிக்கின்றவரும், வந்தபோதும்-வந்தகாலத்தும், இனிப் பேருலகத்துள்-இனி இப்பெரிய வுலகத்துள், பெண்ணுட்டம்ஒட்டேன்எலு-பெண்தோற்ற மிருக்கவைக்கேனென்று. எ-று. (கஉஉ)

எஎ. நற்றுணையும்நலனிரையனேவியற்றில்
பெற்றுயும்பேயிறனில்பிறர்க்குநல்கக்
கற்றுயிதகாணுறியினெனைச்சுமந்தான்
முற்றுமதியம்மிலைதான்முனிந்தானேயன்னன். (கஉசு)

இ-ள். முற்றுமதியம் மிலைதான - முதிராத பிறையைச் சூடிய சிவனே, முனிந்தானே அன்னன் - கோபித்தகாமனேயொத்த இலக்குமணன், (கஉசு)

எஅ. தாயாற்றுலிலாள்தனையாற்றுனைரர்களதம்பால்
தோயாற்றுலில்லாவுயிர்போலுடனுடையார்
மாயாப்பழியாள்தாவற்கலியேற்றியதார். (கஎஅ)

இ-ள். ஆற்றுகிலான்-பிரிவையாற்றுதவனாகிய, தாய்தனை-சுமித்ராதேவியை, ஆற்றுகின்றார்கள் தம்பால் - ஆறச்செய்கின்ற ஸ்ரீராமலக்குமணரிடத்தில், மாயாப்பழியாள் தர-அழிவாதபழியையுடைய கைகேசிகொடுக்க, தீ ஆற்றுகிலார்-தெருப்பைப் பொறுக்காதவருடைய, தனிச்சிந்தையின் நின்றுசெற்றமெனிந்த மனத்தினின்று தொல்லத்தக்க, நோய் ஆற்றுகில்லா உயிர்போல-நோயைப் பொறுக்காதவருடைய உயிரைப்போல, நடங்கு இடையார் - துவளும் இடையுடைய பெண்கள், வற்கலை ஏந்திவந்தார் - மரவுரியைக் கொண்டுவந்தார். (கசசு)

எக. தண்டலைக்கோசலைத்தலைவன்மாதரை
கண்டனனிரவியுங்கமலவாண்முகம்
விண்டலத்தறையும்நல்வேந்தற்காயினும்
உண்டிடருற்றபோதென்னுமுறன. (சுஅச)

இ-ள். இரவியும் - சூரியனும், தண்டலைக்கோசலைத் தலைவன்மாதரை - சோலைகளையுடைய கோசலதேயத் தரசனுடைய நயாதனுடைய மனைவிகளது, கமலம் வாள்முகம் - தாமரைமலர்போன்ற வொளியுடைய முகங்களை, கண்டனன் - பார்த்தான், (கஅச)

அ0. வலங்கடிந்தேழையர்யமன்னரை
நலங்கடிந்தறங்கெடீயக்கர்லீகள்தும்
குலங்கடிந்தான்வலிகொண்டகொண்டலை
நிலங்கடிந்தாளொடுதிகென்றார்சிலர். (ககக)

இ-ள். நும்குலம் கடிந்தான் - நுமதுகுலத்தை யழித்த பரசுராமனது, வலிகொண்ட கொண்டலை - வலியை வாங்கிய மேகமாகிய ஸ்ரீராமபிரானை, (ககக)

சாதியொப்புமை பற்றிநுங் குலங்கடிந்த என்றார்.

அக. நிறைமகவுடையவர்நெறிசெலுமம்பொறி
குறைமகருறையினுங்கொடுப்பாருயிர்
மறைமகன்வனம்புகமொழியைக்காக்கின்ற
இறைமகன்றிருமனமிரும்பெண்ணார்சிலர். (ககஉ)

இ-ள். நிறைமகவு உடையவர்-அதிகம் புத்திரருடையவர், நெறிசெல் ஐம்பொறி-நெறியிற்செல்லும் ஐம்பொறிகள், குறை

மகருறையினும்-இல்லாதமகவுசாதினும், உயிர்கொடுப்பாம்-உயிரை மீக்குவாம், (ககஉ)

அதிகம் புத்திரருடையோர் அங்கவீனமுடைய மகவுசாதினும் உயிர்கொடுப்பரென்பது கருத்து.

அஉ. ஆடினரழுதனரழுதவேழிசை
பாடினரழுதனர்பரிந்தகோதையர்
ஊடினரழுதனருயிரின்னபரைக்
கூடினரழுதனர்குழாங்குழாங்கொடே. (உகக)

இ-ள். குழாம் குழாம்கொடு - கூட்டங்கூட்டமாகநின்று, ஆடினர் அழுதனர் - ஆடினசெல்லாரும் அழுதார், (உகக)

இவ்வாறே முடித்துக்கொள்க.

அந. இக்குநோக்கியதீவினைப்பயனெனச்சிந்தை
நெக்குநோக்குவோர்நல்வினைப்பயனெனநேர்வோர்
பக்கம்நோக்கலென்பருவரலின்பமெனிரண்டும்
ஒக்கநோக்கியயோகருமருட்கையருழுதார். (உகஉ)

இ-ள். தீவினைப்பயன் - பாவத்தின் பயனுகிய துன்பங்கள், இக்கு நோக்கிய எனை - உமக்கு வந்தனவென்று சொல்ல, சிந்தைநெக்கு நோக்குவோர் - மனம்வருந்துவோர், நல்வினைப்பயன் என நேர்வோர் - புண்ணியத்தின் பயனுகிய இன்பங்கள் வந்தனவென்று சொல்ல மகிழ்வோர், பக்கம் நோக்கல் என்-அவ்விருதிறத்தார் கருத்தை நோக்குவதென்னை, பருவரல் இன்பம் என்ற இரண்டும்-துன்ப இன்பங்களென்ற இரண்டையும், ஒக்க நோக்கிய யோகரும் - ஒருதன்மையாயெண்ணிய ஞானியரும், அருமுனிவர் உழந்தார் - அரியதுன்பத்தை, யனுபவித்தார், எ-று. (உகஉ)

அச. அண்ணலன்னசொற்கேட்டனனன்றியும்
உண்ணிவர்ந்தகருத்துமுணர்ந்தனன்
கண்ணினீர்க்கடல்கைவிடநேர்கிலன்
எண்ணுகின்றனனென்செயற்பாற்றெனை. (உஉஎ)

அரு. அனையவேலையகன்மனையெய்தினள்
புனையும்சேர்த்தணிந்துபுனைந்தனள்
நினைவில்வள்ளல்பின்வந்தயல்நின்றனள்
பனையினீள்கரம்பற்றியகையினள். (உஉஅ)

இ-ள். நினைவு இல்வள்ளல் பின்-அழைத்துப்போக மனமில்லாத ஸ்ரீராமபிரானுக்குப்பின்பு, "என்செயற்பாற்றென்னு" என்றமையின் அழைத்துப்போவதோ இல்லையோ வென்னும் ஆலோசனையிலிருக்கின்ற ஸ்ரீராமபிரானுக்குப் பின்பு, எனவுமாம்.

அசு. பிறிதொர்மாற்றம்பெருத்தகைபேசலன்
மறுகிவீழ்ந்தழமைந்சருமாத்தும்
செறுவில்வீழ்ந்தநெடுந்தெருச்சென்றனன்
றெறிபெருமையரிதினினீங்குவான் (உகக)

இ-ள். செறுவில் வீழ்ந்த நெடும் தெருச்சென்றனன்-வயல்போலச் சேறுபட்ட நெடியவீதியிற் போனன், (உகக)

அள. சிரைசுற்றித்திருமகள்பின்செல
மூரிவிற்கையினேயவன்முன்செல
சாரையொத்தவன்போம்படிகண்டவ
ஊரையுற்றனர்த்தவுமொண்ணுமோ. (உகச)

இ-ள். சிரைசுற்றித் திருமகள் பின் - மாவுரியை யுடுத்துச் சென்ற சீதாபிராட்டிக்குப்பின்பு, மூரிவில்கை இளையவன்செல-வலிபொருந்திய வில்லேந்திய கையையுடைய இளையபெருமான் செல்ல, சாரை ஒத்தலன் முன்செல - மேகத்தையொத்த ஸ்ரீராமபிரான் முன்புசெல்ல, போம்படிகண்ட அவ் ஊர் - செல்லும்படி பார்த்த அந்நகரார், உற்றது உணர்த்தவும் ஒண்ணுமோ-அடைந்ததாகிய துயரத்தைச் சொல்லவுங்கூடுமோ. (உகச)

நி-வது. தைலம்மாட்டுபடலம்.

சக்கரவர்த்தியின் சரீரத்தைத் தைலத்தோணியிற் பெய்ததைக் கூறுகின்றபடலம்.

அஎ. கைசுணீர்பரந்துகால்தொடரக்கண்ணுதும்
வெய்யநீர்வெள்ளத்தும்மெள்ளச்சேறலால்
உய்யவேழுலகுமொன்றுனநீருழல்
தெய்வமீனெத்ததச்செம்பொற்றோரோ. (உ)

இ-ள். செம்பொன் தேர் - ஸ்ரீராமபிரானேறிய செம்பொன்னாலாகிய திருத்தேர், கண் உரும் - கண்ணினின்றுபெருகும், கைகள் நீர்பரந்து கால்தொடர - கைக்கின்ற புனல் பரந்துலகிற்செல்ல, வெய்யநீர் வெள்ளத்து மெள்ளச்சேறலால் - வெப்பம்பொருந்திய அந்நீர் வெள்ளத்தில் மெள்ளச்செல்லுதலால், ஏழ் உலகும் உய்ய ஒன்றுன நீர் உழல் - ஏழுலகுமுய்யவொன்றிய பெரும்புனலிற் சுழலுகின்ற, தெய்வமீன் ஒத்தது-மச்சாவதாரப்பெருமானை யொத்தது. (உ)

அக. வட்டமோரோசனைவலைவிற்றுய்நடு
எட்டினையிடவுமோரிடமிலாவகை
புட்டகுசோலையின்புறத்துப்போர்த்தென
விட்டதுகுரிசிலைவிடாதசேனையே. (அ)

இ-ள். குரிசிலை விடாதசேனை - ஸ்ரீராமபிரானை விடாதசேனை, ஓர் ஓசனை - ஒருயோசனைதூரம், வட்டம் - வட்டமாக, வலைவிற்றுய் - வலைவினையுடையதாகி, நடு எள் தனை இடவும் ஓர் இடம் இலாவகை - நடுவிலெள்ளைப் பெய்யவு மொரு சிறு இடமிலாதவிதமாய், புள் தகுசோலையின் புறத்து - பறவைகள் தங்குகின்ற சோலையினிடத்தில், போர்த்தனை - போர்த்தாற் போல, விட்டது - சூழ்ந்துவிட்டது. எ - று. (அ)

கூ0. செவ்வியகுரிசில்கூறத்தேர்வலான்செப்புவானவ்
வெவ்வியதாயில்தியவிதியினில்மேலென்போலரம்
இவ்வையினின்னீகேக்கியின்னுயிர்நிர்நின்றேகி
அவ்வையினேயகாணடற்கமைதலாலளியனென்றான். (உ0)

இ-ள். அவ்வெவ்வியதாயில் - நீக்குணமுடைய அச்சிறியதாயினும், நீயவிதியினில் - நீயவிதியினும், மேலென்போலாம்-யான்பெரிய வன் போலாம். (உ0)

கூக. ஆள்வினையாண்மையிற்றிறம்பலன்றெனுத்
தாள்முதல்வணங்கியதனித்தின்டேர்வலான்
ஊழ்வினைவசத்தையிர்நிலையென்றுன்னுவான
வாழ்வினைநோக்கியைவணங்கிநோக்கினன். (கூக)

இ-ள். ஆண்மையில் - ஆண்டாளுரைங்காலை, ஆள்வினை-யுடைமைத் தொழிலுடையோன், நிறம்பல அன்று எனு - எவியதை மறுத்தல் முறையன்றென்று,

கூஉ. மருமத்தத்தன்னினூன்றும்மறக்கொடும்பாவத்தீர்க்கும்
உருமொத்தசிலையினோனையொருப்படுத்ததுவிற்றன்ற
சருமத்தின்வினைவையெண்ணிக்களிப்பொடிகாணவந்த
சருமத்தின்வத்தனமென்னப்பொலிந்ததனிவெண்டங்கள். (ஐ0)

இ-ள். மறக்கொடும் பாவம் தீர்க்கும்-கொலைமுதலிய கொடியபாவங்களை நீக்குகின்ற, மருமத்தத் தன்னை ஊன்றும்-திருவுள்ளத்தில் தன்னை நினைக்கின்ற, உரும் ஒத்தசிலையினோனை-இடியொத்த ஒலியுடைய வில்லுடையோரை, (ஐ0)

தன்னையென்றது-தருமத்தை.

கூஊ. நோயுமின்றிநோன்கதிர்வாள்வேலிவையின்றி
மாயுஞ்செல்வம்மக்களினுலோமறமன்னன்
காயும்புள்ளிக்கற்கடம்நாகம்கனிவாழை
வேயும்போன்முனென்றுமயங்காவிழுகின்றுள். (சுஉ)

இ-ள். நோயும் இன்றி - பிணியுமின்றி, நோன்கதிர்வாள் வேல் இவை இன்றி - வலிமைபொருந்திய ஒளியுடையவாள்வேலென்று மிவையுமின்றி, மறம் மன்னன்-வெற்றியுடைய சக்கரவர்த்தி, செல்வமக்களினுலோ - தனது அருமைப்புத்திரர்களினுலோ, மாயும்-இறப்பான், கற்கடம்-ஞெண்டையும், காயும் புள்ளி நாகம் - சீறுகின்ற புள்ளியையுடைய சர்ப்பத்தையும், கனிவாழை - கனியுடைய வாழையையும், வேயும்-மூங்கிலையும், போன்றுன் என்று-என்மகன் ஒத்தானென்று, மயங்காவிழுகின்றுள்-மயங்கி விழுகின்றாள். எ-று. (சுஉ)

கூசு. வேள்விச்செல்வத்தையத்திக்கொல்மெய்மைத்துணையின்மை
சூழிச்செல்வத்தையத்திக்கொல்தோலாமனுநூலின்
வாழிச்செல்வத்தையத்திகொல்முன்னென்றனன்வானோர்
கேள்விச்செல்வத்தைக்கவயிற்றேர்ஞேதந்தான். (சுஎ)

இ-ள். வானோர் கேள்விச்செல்வம் துய்க்க-தேவர்கள் கேள்விச்செல்வத்தை யனுபவிக்க, வயிற்று ஓர் நினைதந்தான்-வயிற்றினின்று ஒப்பற்ற புத்திரனைப்பெற்ற கோசலை, (சுஎ)

கூடு. கைத்தசொல்லாலுயிரிழந்தமுதல்வற்பிரிந்தும்கடைபோட
மெய்த்தகேள்த்தன்றிருவுடம்பைப்பிரியாதாற்றிவிட்டிலரால்
பித்தமயக்காஞ்சுறவெறியும்பிறவிப்பெரியகடல்கடக்க
உய்த்தமீண்டநாவாயிற்முழும்போவாரொக்கின்றூர். (எக)

இ-ள். பித்தமயக்கு ஆம் சுறவு எறியும்-பித்தமயக்கமாகிய சுறுமீன்வீச, பிறவிப்பெரிய கடல்கடக்க - பிறவியாகிய பெரிய கடலைக்கடக்க, உய்த்து மீண்ட நாவாயில் - சக்கரவர்த்தியைச் செலுத்தி மீண்ட தோணியில், போவார் தாமும் ஒக்கின்றூர்-போவாரைத் தாமு மொக்கின்றூர். (எக)

கூசு. செய்யக்கடவசெயற்குரியசெறவரீண்டையாரல்லர்
எய்தக்கடவபொருளெய்தாதிகவாவென்னவியல்பென்ன
மையற்கொடியாள்மகனீண்டுவந்தால்முடித்தம்மற்றென்ன
தையற்கடனின்றெடுத்தவனைத்தயிலக்கடலின்றலையுய்த்தான். (எடு)

இ-ள். செய்யக்கடவ செயற்கு உரிய சிறுவர் - செய்யக்கடவதாகிய ஈமக்கடனை செய்தலுக்குரியராகிய புத்திரர், ரண்டையார் அல்லர் - இப்போது யாரிருக்கின்றூர் இலர், எய்தக்கடவ பொருள் எய்தாது - வரக்கடவதாகிய பொருள்வராமல், இகவா என்ன இயல்பு என்ன - நிறுத்தாமலென்ன முடிப்பதெப்படி,

சூ-வது. கங்கைப்படலம்.

ஸ்ரீராமபிரான் கங்கையாற்றைச்சார்ந்ததைக் கூறுகின்றபடலம்.

கூஎ. வெய்யோனொளிதன்மேனியின்விரிசோதியின்மறைய
பொய்யோவெனுமிடையாளொடுமிளையாளுடும்போனுன்
மையோமரகதமோமறிகடலோமழைமுகிலோ
அய்யோயிவன்வடிவென்பதொராழியாவழகுடையான். (க)

இ-ள். வெய்யோன் ஒளி - சூரியனதொளி, தன்மேனியின் விரிசோதியில் மறைய - தனது திருமேனியில் விரிகின்ற சோதியிலடங்க, சூரியன தொளிக்கஞ்சிய பிராட்டி ஸ்ரீராமபிரானது திருமேனியில் விரிகின்ற நிழலில் மறைய எனவுமாம். (க)

கூஅ. அஞ்சம்பையுமையன்றனதலரம்பையுமளவா
நஞ்சங்கோலவெல்வாகியநயனங்களோபுடையான்
தஞ்சுங்களிவரிவண்டினம்சூழ்ந்துபடிசுழலும்
கஞ்சங்கோமஞ்சன்கழல்தகுகின்றதுகண்டான். (உ)

இ-ள். குழலின்படி - அளகத்திற்குழ்வதுபோல, தஞ்சம் களிவரிவண்டுகள் சுழலும் - தூங்குகின்ற தேன்மயக்கமுடைய வரிபொருந்திய வண்டுகள் சுழலுகின்றனவாகிய, கஞ்சங்களே-தாமரைமலர்களே; மஞ்சன்கழல் நடுகின்றது கண்டாள்-ஸ்ரீராமபிரானது திருவடிகள் அவமதித்துச் சிரித்தலைப்பார்த்தாள். ()

கூக. மாகந்தழும்மகரந்தமும்மளகத்தரும்மதியின்
பாகந்தீருறுதலாளொடுற்றவளந்தருமிதழான்
மேகந்தனிவருகின்றதுமின்னெனவிளிர்பூண்
காகந்தனிவருகின்றதபித்யோடெனநடவா. (சு)

இ-ள். மாகந்தமும் - மிகுந்தவாசத்தையும், மகரந்தமும்-பராகத்தையும் பெர்ருந்திய, அளகம் தரும் - கூந்தலுடைய, மதியின்பாகம் தருறுதலாளொடு-சந்திரனது பாதியையொத்த நெற்றியையுடைய பிராட்டியோடு, (சு)

கூ0. தொளைகட்டியகிளைமுட்டியசுருதிச்சுவையமுதின்
கிளைகட்டியகருவிக்கிளரிசையிற்பசைநறவின்
விளைகட்டிபின்மதுரித்தெழுகிளவிக்கிளர்விழிபோல்
களைகட்டவர்தளைவிட்டெறிகுவளைத்தொகைகண்டான். (கூ)

இ-ள். தொளைகட்டிய - தொளையுண்டாக்கிய, கிளை முட்டிய - வேய்ங்குழலில் மூட்டிய, சுருதிச்சுவை அமுதின் - இராகமாகிய சுவையினையுடைய அமுதினும், கிளைகட்டிய - நாம்பைக்கட்டிய, கருவிக்கிளர் இசையில் - வீணையி லெழுந்த இசையினும், பசை நறவின்-பசையுடைய தேனினும், விளைகட்டியின்-விளைந்த கற்கண்டினும், மதுரித்து எழு - மதுரித் தெழுகின்ற, கிளவிக்கிளர்விழிபோல் - மெழிகளையுடைய பிராட்டியினது விளங்கிய கண்களைபோல, களைகட்டவர் - களை களைந்தவர், களை விட்டு எறி - வயலை விட்டெறிகின்ற, குவளைத்தொகை கண்டான் - குவளைமலர்த்தொகுதியைப்பார்த்தான். (கூ)

கூக. அருப்பேந்தியகலசத்தினையமுதேந்தியமதமா
மருப்பேந்தியவெனலாமுலைமழையேந்தியகுழலாள்
கருப்பேந்திமுதலாயினகண்டாளிடர்காணாள்
பொருப்பேந்தியதோளானெடிவினையாடினள்போனாள். (சு)

இ-ள். அரும்பு ஏந்திய எனல் ஆம் - தாமரையரும்பைத் தாங்கியதை யொக்குமென்று சொல்லலாகும், அமுது ஏந்திய கலசத்தினை எனல் ஆம்-அமிர்தங்கொண்ட இரண்டு கலசங்களென்று சொல்லலாகும், மதமா மருப்பு ஏந்திய எனல் ஆம் முலை - யானையினது கொம்புகளை யேந்தியதை யொக்குமென்று சொல்லலாகுந் தனத்தையும், மழை ஏந்திய குழலாள் - மேகம் போன்ற அளகத்தையுமுடைய பிராட்டி, (சு)

கூஉ. பன்னத்தள்தாளந்தொகுபடர்பந்திகள்படுநீர்
அன்னம்புலிவதிதண்டலையலகந்துறைபுளினம்
இன்னந்தருமலர்தந்தனசெறிதந்தனவனங்
பொன்னந்தியகதிண்மல மகிழ்தந்தனர்போனார். (எ)

இ-ள். பல நந்துகள்-பல சங்குகளீன்ற, தாளம் தொகுமுத்தங்கள்சேர்ந்து, படர்பந்திகள் படுநீர் - விசாலமான வரிசைகளுண்டாகின்ற புனலையும், அன்னம் வதிபுலி தண்டலை-அன்னங்கள் வதிந்து துயில்கின்ற சோலைகளையும், அலர்நந்து உறைபுளினம் - அதன்பக்கத்தில் சங்குகளுறைகின்ற மணற்பரப்புக்களையும், இன்னம் தரும் மலர்தந்தன-பராகத்தைத் தந்த மலர்களைத் தந்தனவாகிய, செறிதந்தனவனம்-செருங்கிய நந்தனவனங்களையும், நலபொன நந்தியநதி - நல்ல பொன் அதிகமுண்டாகிய நதிகளையும், கண்டு உளம் மகிழ்தந்தனர் போனர்-பார்த்துத் திருவுளமுவந்துபோனர். எ-று. (எ)

கூஙு. கால்பாய்வனமுதுமேதிகள்காதிர்மேய்வனகடைவாய்
பல்பாய்வனகறைபாய்வனமலர்வாயளிபடரச்
சேல்பாய்வனகயல்பாய்வனசெங்கால்மடவன்னம்
போல்பாய்புனல்மடவார்படிதெருமாடலைபோனர். (அ)

இ-ள். முதுமேதிகள் - முதிர்ந்த எருமைகள், கதிர்மேய்வன-நெற்கதிர் முதலியவற்றை மேய்வனவாகி, கடைவாய்பால் பாய்வன - கடைவாயினின்று பாலொழுகுவனவாகி, கால்பாய்வன - கால்வாய்களில் பாய்வனவும், கறைபாய்வன மலர்வாய்-தேனொழுகுவனவாகிய மலர்களில், அளிபடர் - வண்டுகள்மொய்க்க, (அம்மொய்த்தலால்) சேல்பாய்வன - சேல்மீன்கள் பாய்வனவும், கயல்பாய்வன-கயல்மீன்கள் பாய்வனவும், பாய்புனல்-

ஓடும் நீரில், செங்கால் மட அன்னம்போல் - செவந்தகால்களை யுடைய இளமைபொருந்திய அன்னங்கள்போல, மடவர்படி-மகளிர் நீராடுவனவுமாகிய, நெடுநாடவைபோலும் - நெடுநாடு களோக்கடந்துபோனார். (அ)

கoச. பெண்ணில்நோக்கும்சுவையிற்பிறர்பிறர்ச்
கெண்ணிநோக்கியம்பருமின்பதனை
பண்ணில்நோக்கும்பராவமுதைப்பகரும்
கண்ணில்நோக்கினருள்ளங்களிக்கின்றார். (உச)

இ-ள். பெண்ணில் நோக்கும் சுவையில்-காமுகர்பெண்ணை யனுபவிக்கு மின்பத்தைப்போல, பிறர் எண்ணி நோக்கி-பிறர் மனத்தா லெண்ணி கண்ணுற்பார்த்து, பிறர்க்கு இயம்ப அரும் இன்பத்தை - பிறர்க்குச்சொல்ல அருமையாகிய இன்பத்தை, பண்ணில் நோக்கும் பரா அமுதை - இசையா லுணரப்படும் பராவமுதை, (கக)

கoஞ. நறக்கமேமுதலவாயதூயவையாவையேனும்
மறக்குமாகினியலம்மாவரம்பிலதோற்றுமாக்கள்
இறக்குமாதிதவெனபான்போல்முன்னோனாளிறந்தான்பின்னுள்
பிறக்குமாறிதவென்பான்போல்பிறந்தனன்பிறவாவெய்யோன். (ஙo)

இ-ள். நறக்கம் முதலாய - சுவர்க்க முதலாகிய, தூயன யாவை எனும்-பரிசுத்த முடையவுலகங்களி லுள்ளோராயினும், (மரணத்தை) மறக்கும் ஆகினையல் - மறக்கும்விதத்தை நினைய ரலாகாது, (ஙo)

கoசு. படருறவுளும்பிசனுறைபகலெல்லாம்
இடருறுபகையாபோயினெனவுரியாய்நீ
சுடருறுவடிவேலரசேசொன்முறைகடவேல்யான்
உடனிசைவருமந்நாள்நின்னுழைவருகின்றேன். (எo)

இ-ள். சுடர் உறுவடிவேலரசே - ஒளி பொருந்திய கூர்மை யுடைய வேலாயுதமுடையாய், கான உறைபகல் எல்லாம்-யான் வனத்தில் வதியுங்கால மெல்லாம், உம்பி படர் உறஉளன்-உன் தம்பியாகிய பரதன் துன்பமடைய விருக்கின்றான், இடர் உறு பகையா-யான் துன்புறும்பகைகளெனக்கு யாவை, நீபோய்யா னென உரியாய்-(பரதனுக்குப் பகையுளதாயின்)நீசென்றுஎன னைப்போலவுதவுதி, (எo)

எ-வது. வனம்புகுபடலம்.

ஸ்ரீராமபிரான் வனத்துட்சென்றதைக் கூறுகின்றபடலம்.

கoள. பூவலர்குரவோடும்புடைதவழ்பிடவீனும்
மாவலர்சொரிகுழல்தயிலெழுமியலொன்றின்
தூவியின்மணநாறதுணைபிரிபெடைதானச்
சேவலொடறைகுடிதிரிவதனியல்காணும். (ஏ)

இ-ள். பூ அலர் குரவு ஓடும் - மலர் மலர்ந்த மருதானியோ டும், புடை தவழ்பிட - பக்கத்திற் றவழ்ந்த, ஈனும்மா அலர் சொரி குழல்-விரும்பத்தக்க மாமரத்தினதுமலர்களைச்சொரிந்த விடத்தில், துணைபிரி-பெடையைப்பிரிந்து, துயில் எழுமயில் ஒன் றின் - துயின்றெழுந்த மயிலொன்றினது, தூவியில்மணம்நாற-தோகையில் அம்மலர்களின் மணம்வீச, பெடை - அப்பெண் மயில், அச்சேவலொடு உறஊடி - அவ்வாண்மயிலோடு அதி கம் ஊடி, திரிவு அதன் இயல் காணும்-வேறுபடுகின்ற அதனது இயல்பைக் காணும். எ-று. (ஏ)

கoஅ. அருந்தியனேயாளேயமிர்திறுமினியாளே
செருந்தியின்மலர்தாங்குஞ்செறியிதழ்வனசோகம்
பொருந்தினகளிவண்டிற்பொதிவனபொன்னூசம்
இருந்தையிழைதீயொத்தெழுவனவியல்காணும். (ஐ)

இ-ள். வனம் தாங்கும் - வனங்கொண்ட, இதழ்செறிசோ கம் - இதழ்கள் நெருங்கிய அசோக மலர்களில், பொருந்தின-பொருந்தினவாகிய, செருந்தியின் மலர் - செருந்தியினது மலர் கள், களிவண்டில் பொதிவன-மயக்கமுடைய வண்டுகள்போல மொய்த்தன, பொன் - பொன்னையுருக்க, இருந்தையின் எழு-கரி யினின் றெழுகின்ற, ஊதும் - கொல்ல லூதுகின்ற, தீ ஒத்து எழுவன இயல்காணும் - (அவ்வசோக மலர்கள்) நெருப்பை யொத்து எழுகின்ற வியல்பைப் பாராய். (அ)

கை0க. ஏந்திளமுலையாளெழுதருமெழிலாளே
காந்தளின்முகைகண்ணிற்கண்டொருகளிமஞ்ஞை
பாந்தளிதெனவுன்னிக்கவ்வியபடிபாராய்
தீந்தளவுகள்செய்யுஞ்சிறுகுரகைகாணுய். (கூ)

இ-ள். தீம்தளவு உகள்செய்யும் - அப்பூப்பாம்பன்றென்று இனிய முல்லைமலர்கள் செய்கின்ற, சிறுகுரகைகாணுய் - மிகவுஞ் சிறிய சிரிப்பைப்பாராய்.

கை0. கூடியநறைவாயிற்கொண்டனவிழிகொள்ளா
மூடியகளிமன்னமுடுகினமெறிகாணு
ஆடியசிறைமாவண்டந்தரினிசைமுன்னுப்
பாடியபெடைகண்ணுவருவனபலகாணுய் (கஙு)

இ-ள். ஆடியசிறைமாபலவண்டு - அசைதல் பொருந்திய சிறையுடைய பெருமைபொருந்திய பலவண்டுகள், கூடியநறை வாயில்கொண்டன - கூட்டிய தேனைவாயிற் கொண்டனவாகி, விழிகொள்ளா மூடிய களிமன்ன-கண்கள் கொள்ளாமல் மூடிய மயக்கமேற, முடுகினமெறிகாணு - முடுகினவாகி வழிதெரியாமல், அந்தரின் - குருடனைப்போல, பெடைபாடிய-பெண்வண்டுகள் பாடிய, இசைமுன்னு - இசையைக்கொண்டு, கண்ணு-அதுவேகண்ணுக, வருவனகாணுய் - வருவனபாராய். (கஙூ)

கை0க. பூநனைகினைதுன்றிப்புள்ளிடையிடைபம்பி
நானிறகளிர்வல்லிக்கொடியளவிலமல்லி
மானினமயில்மாலைகுயிலினம்வருகானம்
தீநிகர்தொழிலாடத்திரைபொருவனபாராய். (கசு)

இ-ள். பூநனைகினைதுன்றி - மலர்களும் அரும்புகளுங் கிளைகளும் நெருங்கி, புள் இடை இடைபம்பி - பறவைகள் இடைகள்தோறும் பரவி, நால் நிற களிர்வல்லிக்கொடி - நாலுவிதநிறமுடைய குளிர்ந்தவல்லிகளும் கொடிகளும், அளவு இலமல்லி - கணக்கிலவாய் நிறைந்து, மாலை - வரிசையாக, மான் இனம் - மான்கூட்டமும், மயில் - மயிற்கூட்டமும், குயில் இனம் - குயிற்கூட்டமும், வருகானம் - வருகின்ற கானமெல்லாம், தொழில்-பூமுதலியவெல்லாம் பொறித்த, தீநிகர்-நெருப்பையொத்துச் செவந்த, திரை ஆடை பொருவனபாராய்-திரைச்சீலையை ஒப்பாவனபாராய்.

காடெல்லாம் பூமுதலிய பொறித்த திரைச்சீலையை ஒப்பாவனபாராய் என்பது கருத்து.

கஙஉ. என்றுகாதலினேயினனடிதொழுதேத்தி
கொன்றைவேய்ங்குழற்கோவலர்முல்லையங்குடியி
சென்றசெங்கதிர்ச்செல்வனுமடிவுறச்சிறுமான
கன்றுநீர்நுகர்காளிந்தியென்றுகண்டார். (கூச)

இ-ள். கொன்றை - கொன்றைக்குழலியும், வேய்ங்குழல்-வேய்ங்குழலியுமுடைய, கோவலர் முல்லை அம்குடுமி சென்று-இடையரது முல்லை நிலத்தின் கடையிற்சென்று, (கூச)

கஙகூ. ஆலிபாய்வயலயோத்தியாண்டகைக்கிளையான்
மாலிமால்வரைத்தோளனுமந்தரந்திரிய
காலிவேலையைக்கடந்ததுகழிந்தநீர்கடிதின்
மேலிவேலையிற்பாய்ந்ததுமீண்டநீர்வெள்ளம். (கூஎ)

இ-ள். கழிந்த நீர் - நீந்தும்போது இடதுகரந்துழாவக்கீழ்ந்தபுனல், காலி வேலையைக்கடந்தது-மேழைக்கடலைக்கடந்துசென்றது, மீண்டநீர் வெள்ளம்-வலதுகரந்துழாவத் திரும்பிய நீர் வெள்ளம், கடிதில் - விரைவில், மேலை வேலையில் பாய்ந்தது-மேலைக்கடலிற் பாய்ந்தது. (கூஎ)

கஙஙா. எனைத்தங்கிடமிருடிகளிருப்பிடமெய்ந்த
வனைவயின்றொறுமணிநிறக்கோபங்கள்மலர்ந்த
பயில்மரந்தொறும்பரிந்தனபேடையைப்பயிலும்
குயிலிரங்கினசிருந்தின்றரும்பினமுருந்தம். (கூடு)

இ-ள். முருந்தம் நின்று - முருந்தமரங்கள் நின்று, முருந்தம் அரும்பின - இறகினடிக் குருத்தைப்போன்ற அரும்புகளையரும்பின.

அ-வது. சித்திரகூடப்படலம்.

:o:

ஸ்ரீராமபிரான் சித்திரகூடமலைச்சிறப்பைப்பிராட்டிக்குக் காட்டுவதைக் கூறுகின்றபடலம்.

கஙடு. நினையுந்தேவர்க்குமகமகுமொத்தொருநெறிநின்ற
அனகனங்கணஞாயிறம்பெயருடையமலன்
சனகன்மாமடமயிற்கந்தச்சந்தனஞ்செறிந்த
கனகமால்வரையில்பலாந்தெரிவுறக்காட்டும். (க)

இ-ள். நினையும் தேவர்க்கும் - தியானிக்கின்ற தேவர்களுக்கும், நமக்கும் - அடியோங்களுக்கும், ஒத்து ஒரு நெறிநின்ற - வேற்றுமையின்றி ஒரு தன்மையாய் உள்ளத்தில் நின்ற, (க)

ககசு. சலந்தலைக்கொண்டசெயத்தால்தனிமதக்கதமா
உலந்துவீழ்தவிற்சிந்தினவுதிரத்தின்மடவார்
புலந்தகாலையற்றுக்கனகுங்குமப்பொதியில்
கலந்தமுத்தெனவேழமுதிமைப்பனகாணுய். (சு)

இ-ள். மகளிருடிய காலையிற்சிதறிய குங்குமக்குவியலிற்கலந்தமுத்துக்களைப்போல கோலங்கொண்ட சிங்கத்தால் யானை செத்து விழுதலால் சிதறிய இரத்தத்தில் அவ்யானை முத்துக்கள் ஒளிர்வனபாராய். (சு)

ககள. தொட்டமராசுணம்சுடரொளிமணியொடுந்தூவி
விட்டசென்றனவிடாமதமழையனவேழம்
வட்டவேங்கையின்மலரொடுந்தனதனவயங்கும்
பட்டம்நெற்றியிதசுற்றியபோல்வனபாராய். (அ)

இ-ள். தொட்டமராசுணம் - யானைகளைப்பிடித்த மலைப்பாம்புகள், சுடர்ஒளி மணி ஒடும் - சுடரொளியுடைய முடிரத்நத்தோடும், தூவிவிட்ட சென்றன - கக்கிவிட்டனவாய்ச் சென்றன, விடாமழை அன மதவேழம் - விடாமற்பெய்யும் மேகத்தையொத்த மதத்தைப் பெய்கின்ற அவ்யானைகள். (அ)

ககஅ. மஞ்சளாவியமாணிக்கப்பாறையில்மறைவ
செஞ்செவேநெடுமரகதப்பாறையிற்றெரிவ
விஞ்சைமாடியர்கொழுனரோடினர்விமலப்
பஞ்சளாவியநோடிச்சுவடுகள்பாராய். (உ0)

இ-ள். கணவரோடினவராகிய விஞ்சைமகளிரது செம்பஞ்சூட்டிய காற்சுவடுகள் மேகஞ்சூழ்ந்த செவப்பாகியமாணிக்கக் கல்லில் மறைந்தனவாய் பச்சையாகிய மரகதக்கல்லில் தெரிவனபாராய். (உ0)

ககக. மாவியதுதயமாந்தளபவானவன்
மேவியபகையிருளவுணர்வீய்ந்துக
காவியல்குடவரைக்காலநேமிமேல்
ஏவியதிகிரிபோலிரவியேகினுன். (கஅ)

இ-ள். திருமால் இருளாகிய அசுரர் மாய அத்தகிரியாகிய காலநேமியென்னும் அசுரன்மேலேவிய சக்கரம்போலச் சூரியன் சென்றுன். (கூஅ)

கஉ0. மொய்புறுதமலர்முகிழ்த்தவாம்பல
மையறுதமலர்மலர்த்தவாம்பல
ஐயனடிளவற்குமமுதனுக்கும்
கைகளும்கண்களும்கமலம்போன்றவே. (உஉ)

இ-ள். கண்மூடிக் கரங்குவித்து அந்திக்கடன் கழித்தா ரென்பது. (உஉ)

கஉக. நெடுங்கழைக்குறுந்தணிநிறுவிமேல்நிரைத்
தொடுங்கலினெடுமுகடொழுக்கியூழுற
இடுங்கலில்கைவிசித்தேற்றியெங்கணும்
முடங்கலில்வரிச்சுமேல்விரிச்சுமூட்டியே. (உச)

இ-ள். நெடுங்கழைக்குறும் தணி நிறுவி - நீண்ட மூங்கிலினது குறியதுண்டுகளை நிறுத்தி, இடுங்கல் இல் - இடுங்கலில்லாமல், கை - கைமரங்களை, மேல் - மேலே, ஏற்றி - ஏற்றி, நிரைத்து - வரிசைப்படுத்தி, விசித்து - கட்டி, ஒடுங்கல் இல்-பதுங்கலில்லாமல், ஊழ்உற - குவிய, நெடு முகடு ஒழுக்கி - நெடிய முகட்டைச் சேர்த்து, எங்கணும் - எவ்விடத்தும், முடங்கல் இல் வரிச்சு - மடங்கலில்லாமல் வரிச்சுக்களை, மேல் விரிச்சு மூட்டி - மேலே விரித்திசைத்து. (உச)

கூ-வது. பள்ளி அடைப்படலம்.



கஉஉ. எழுகசேணென்றேவினனெய்தினன்
தொழுதகேசர்கோமகன்சொல்லொடும்
தழுவுதோளிடைத்தம்பியோடேறினன்
பொழுதுநாளுங்குறித்திலன்போயினன். (அ)

இ-ள். பொழுதும் - புறப்படுதலுக்குரிய காலத்தையும், நாளும் - நக்ஷத்திரத்தையும், குறித்திலன் போயினன் - பாராது போனன். (அ)

கூஙு. கொடிநெருங்கினதொங்கல்குழுமின
வடிநெடுங்கணமடந்தையருமடப்
பிடிதுவன்றினபூஞ்ஞெள்ளிபோர்த்தன
இடிதுவன்றினமின்னெனவெங்குமே. (கo)

இ-ள். இடிதுவன்றினமின் என - மேகத்திற் றோன்றிய மின்னல்போல, எங்கும்-எவ்விடத்திலும், பூண் ஒளிபோர்த்தன-ஆபரணங்களின் ஒளிகள் விளங்கின, (கo)

இடி-ஆகுபெயர்.

கூச. தொழோமுகத்திற்சுருதிவிளம்பின
இழோமுகத்தினும்பரினேகிட
விழோமுகத்தனல்வேலியின்மிதுசெல்
வழோமுகத்தனவாசியும்வந்தவே. (கூ)

இ-ள். தொழோமுகத்தில் - பொள்ளாங்குழலில், சுருதிவிளம்பின - இராகங்கள் பாடப்பட்டன, இழோமுகத்தினன் உம்பரின் ஏகிட - இழோத்தமுகமுடைய சக்கரவர்த்தி விண்ணினேக, அனல்விழோ முகத்து - அனல்விழோகின்ற முகத்தை யுடைய, வேலையின்மீது செல் - கடலின்மேற் செல்லுகின்ற, வழோமுகத்தன - வழோந்த முகத்தையுடையனவாகிய, வாசியும் வந்த-குதிரைகளும் வந்தன. (கூ)

கூடு. ஊனழோந்தவுடற்குயிராமென
தானழோந்ததழுவினதண்ணுமை
தேனழோந்துசெவியுறவார்த்தென
வானழோந்தமாகதர்பாடலே. (கசு)

இ-ள். ஊன் அழோந்த உடற்கு - தசை கலந்த உடலுக்கு, உயிர் ஆம் என - உயிராகுமென்று சொல்லும்படி, தண்ணுமை அழோந்ததழுவின-மிருதங்கங்கள்பாட்டோடுகலந்ததழுவின,

கூஎ. காவிநீத்தருநல்வளந்தன்னிய
பூவினீத்தெனநாமம்பொலிவொடு
தேவிநீத்தருஞ்சேணெறிதர்விட
ஆவிநீத்தவுடலெனலாயதே. (எ)

இ-ள். காவி நீத்த அரும் நல்வளம் தன்னிய-வாசமிகுந்த அருமையாகிய நல்லவளம் பொருந்திய, பூவின் நீத்து என - காமனாமலரைத் துறந்தாற்போல, தேவி நீத்து அரும்சேண் நெறிதாவிட - சீதாபிராட்டி துறந்து அரிய தூரமாகிய வழிச் செல்ல, நாடுபொலிவு ஒரீஇ - கோசலநாடு அழகைப்போக்கி, ஆவிநீத்த உடல் என - ஆயது-உயிரைத்துறந்த உடலைப்போல வாயது. ()

கூஎ. செவ்வழியுருட்டியதிகிரிமன்னவ
எவ்வழிமாபினுமிரவலாளர்தம்
இவ்வழியுலகினில்லின்மைகண்டிலோர்
அவ்வழியுலகினுமுளர்கொலோவையர். (ஞ)

இ-ள். இவ்வழி உலகினில் இன்மை - இவ்வுலகில் இன்மையால், நண்டிலோர் - அவ்விரவலராகிய நட்புடையோர், (ஞ)

கூஅ. ஒன்றும்பொய்யாமன்னவோவாயலுயிர்செகும்
தின்றுறுதிராவன்பழிகொண்டுந்திருவெய்தி
என்றுமீரோவாழுவதிரவனேகக்
கன்றுந்தாயும்போவனகண்டுமீழியீரே. (எசு)

இ-ள். அவன் ஏக - அவ்விராமன் போக, கன்றும்-இலக்குமணனுடைய கன்றும், தாயும்-பிராட்டியாகிய தாயும், போவன கண்டும் கழியீர் - உடன்செல்லப் பார்த்தும் மாயீர். அவன் ஏகக்கன்றும் - அவ்விராமன் போக மனம் நையும், தாயும் போவனகண்டும் கழியீர் - பிராட்டியாகிய தாயும் உடன்போகப் பார்த்தும் மாயீர் எனவுமாம். (எசு)

கூக. தாளுறுகுளிசிலத்தாய்சொற்கேட்டலும்
கோளுறுமடங்கலிற்குமுறிவிம்முவான்
நாளுறுகல்லறாடுங்கரவினுல
சூளுறுசுட்டுரைசொல்லலமேயினான். (ஆசு)

இ-ள். கோள் உறுமடங்கலில்-பிடிபட்ட சிங்கம்போல, ()

கஙo. தூறந்தபோயினனெனவேதோன்றலீர்
பிறந்தபோதம்பிழைத்ததென்றல்போல்
இறந்தபோயினனிருந்ததாண்டது
மறந்துவேறுருமைந்தனுங்கொலாம். (கஙo)

இ-ள். தோன்றல் - தோன்றுல், நீபிறந்து - நீதோன்றி, பேர் அறம் பிழைத்தது என்றல்போல் - பெரியதருமம் தவறிற் றென்றல்போல், இறந்துபோயினன் - இறந்துசென்ற சக்கர

வர்த்தி, ஆண்டு அறந்துபோயினன் - அப்போது நீபுத்திரனுகா யென்று நீக்கிப்போனன். அது இருந்தது - அது என்மனத்தி லிருந்தது, மறந்து வேறு ஒருமைந்தன் ஆம் - சமக்கடன்நீசெ ய்வதை நிறுத்தி சத்துருக்கனன் செய்வானுவான். (கூ0)

கஎ-வது. ஆற்றுப்படலம்.

பரதாழ்வான்வழிச்செல்வதைக் கூறுகின்றபடலம்.

கூக. வெண்மதிமீச்செலமேலூர்ந்தென
அண்ணல்வெய்தியவனவில்லூர்த்தியாய்
மண்ணிடையிழிக்தொருவழிக்கொண்டாலென
எண்ணருமன்னவர்களிற்றினேகினூர். (கூக)

இ-ள். சந்திரன் மேலேசெல்ல மேகம் கீழூர்ந்தாற்போல வும், பெருமைபொருந்திய வெப்பம்பொருந்திய கிரணமுடைய சூரியன் அளவில்லாதபேர்களாய், புவியில் வந்தொரு வழியிற் சென்றுர்போலவும், கணக்கில்லாத அரசர்கள் யானைகளிலேறிப் போனர்கள். எ-று. (கூக)

கூஉ. தாவருதாள்முதலனியலால்தகை
மேவருங்கலங்களேவெறுத்தமேனியர்
தேவருமருள்கொளத்தெரியுங்காட்சியர்
பூவுறுகொம்பெனமகளிர்போலினூர். (கூஉ)

இ-ள். தாவரும் தாள்முதல் அனி அல்லால் - கெடிவந்த தாளுக்கு மூதல்தாளில்லாத அணிகளேயல்லாமல், தகைமேவ ரும் கலங்களே - மேன்மைபெர்ருந்திய ஆபரணங்களே, வெறுத்த மேனியர் - பூணுதசரீரமுடைய மகளிர்,

தாவருதாளாவது-ஸ்ரீராமபிரான் வனஞ்சென்றதாள்.

கக-வது குகப்படலம்.

பரதாழ்வான் குகப்பெருமானைக்கண்டதைக் கூறுகின்றபடலம்.

கூக. குடியெறிநெறிகளுங்குறையுஞ்சுற்றமு.
ஒடியெறியம்பிகன்யாதுமோட்டலிர்
கடியெறிகங்கையின்கரைவந்தோர்களே
பிடியெறிபடவெனுப்பெயர்த்துங்கூறுவான். (கூக)

இ-ள். குடி எறிநெறிகளும் - பறையடிக்கின்ற வழிகளி லும், குறையும் சுற்றமு-குறைகளிலுஞ் சுற்றமு, ஒடி எறி அம் பிகள் யாதும் ஓட்டலிர் - கவனெறிகின்ற நாவாய் யாதையும் ஓட்டாதிர், கடிகங்கையின் கரைவந்தோர்களே - காவல்பொருந் திய கங்கையின்கரை வந்தோர்களே, பிடி - பிடித்து, எறிபட - ஊறுபட, எறிக எறு-அடிக்கவென்று, பெயர்த்தும் கூறுவான் - மீண்டுஞ்சொல்லுவான். எ-று. (கூக)

கூஎ. தற்காணுந்திண்மையான்கைதாணுக்காதலான்
அற்சாணிற்கண்டனேயவமுகமைந்தமேனியான்
மற்காணுந்திருநெடுந்தோள்மழைதாணுமணிநிறத்தாய்
நிற்காணுமுள்ளத்தானெறியெதிர்நின்றனனென்றுன். (உஎ)

இ-ள். அல்காவில்கண்டு அனேய - இரவை அங்கங்களோடு கண்டாற்போன்ற, அழகு அமைந்த மேனியான் - அழகுகொ ண்ட மேனியுடையான், (உஎ)

கூஏ. வந்தெதிரேதொழுதானேவணங்கினனலரிருந்த
அந்தணனுந்தானவணங்குமவனுமவனடிவீழ்ந்தானே
தந்தையினுங்களிகூரத்தழுவினுன்றகவுடையோர்
சிந்தையினுஞ்சென்னியினும்வீற்றிருக்குஞ்சீர்த்தியான்.

இ-ள். வந்து எதிரேதொழுதானே - (நிசாசரோக்கித் தொ ழுகின்றுனென்றபடி) வந்து தன்நிசாசரோக்கித் தொழுத பரதாழ்வானே, வணங்கினன் - குகப்பெருமான் திருவடிதாழ்ந் தான், தகவு உடையோர் சிந்தையினும் சென்னியினும்-தகை

மையுடையோர் மனத்திலுஞ் சிரசிலும், வீற்று இருக்கும் சீர்த்தியான் - வீற்றிருக்குங் கீர்த்தியுடையானுகிய, மலர் இருந்த அந்தணனும் - தாமரைமலரை இடமாகக்கொண்ட பிரமனும், தனைவணங்கும் அவனும்-தன்னைவணங்குந் தகுதியுடைய அப்பரதாழ்வானும், அடிவீழ்ந்தான் - தன் திருவடியை வணங்கினவனுகிய குகப்பெருமானே, அவன் தந்தையினும் களிகூர்த் தழுவினன் - அவன் தந்தையினும் உவகைமிகத் தழுவினன்.

கூசு. என்புகழ்கின்றதேழையினேனிரவியென்பான்
தன்புகழ்க்கற்றைமற்றையொளிகளைத்தவிர்க்குமாபோல்
மன்புகழ்பெருமைதங்கள்மரபினோர்புகழ்களெல்லாம்
உன்புகழாக்கிக்கொண்டாயுயர்குணத்தரவுத்தோளாய். (கூசு)

இ-ள். உயர்குணத்து உரவுத்தோளாய் - உயர்ந்தகுணமுடைய வலிபொருந்திய தோளுடையாய், இரவி என்பான் தன் புகழ்க்கற்றை - சூரியனென்று சொல்லப்படுவோன் தனது புகழ் பொருந்திய ஒளியால், மற்றை ஒளிகளைத் தவிர்க்கும் ஆபோல் - மற்ற சந்திராதிகளின் ஒளிகளைப்போக்கும் விதம்போல, மன்புகழ்பெருமை - அரசர்கள் துதிக்கின்ற பெருமையையுடைய, நுங்கள் மரபினோர் புகழ்கள் எல்லாம் - உங்கள் குலமுடைய அரசர்களது கீர்த்திகளெல்லாவற்றையும், உன்புகழ் - ஆக்கிக்கொண்டாய் - உனது புகழாகச் செய்துகொண்டாய், ஏழை எயினனேன் புகழ்கின்றது என் - அறிவில்லாத வேடனுகிய அடியேன் உனது புகழைச் சொல்லுகின்றதெப்படி. எ-று. (கூசு)

கூஎ. நங்கையர்நடையினன்னம்நாணுசெலவினுவாய்
கங்கையுமிலாகமமிலைந்தனகலந்தவெங்கும்
அங்கொடிஞ்சிழித்தியேற்றமமைதியினமராவையத்
திங்கொடிங்கிழித்தியேற்றமிருவிஞையென்னலான. (சசு)

இ-ள். இங்குகொடு அங்கு இழித்து ஏற்றும் அமைதியின் - ஓடங்கள் இக்கரையிலேற்றி அக்கரையிலிறக்கிப் பின்பு ஏற்றும் அமைதியால், இங்கு கொடு - இவ்வுலகிற்கொண்டு, அமராவையத்து - சுவர்க்கத்தில், இழித்து ஏற்றும் இருவினை என்னை - இறக்கி ஏற்றும் நல்வினை தீவினைகளைப்போலாயின. (சசு)

கூஅ. அகிலிதூபமன்னவாய்மயிற்பீலியார்த்த
மூதுளிமுரண்மாத்தண்டுகூம்பெனமுகிலின்வண்ணத்
தகிலொடுதொடுத்தசெம்பொற்றகட்டிடைதொடுத்தமுத்தம்
நகுகொடிநெடியபாயினவ்வெனச்சென்றநாவாய். (கூஅ)

இ-ள். அகில் இடுதூபம் அனை-காஷ்டமிட்ட புகையைப்போல, ஆய்மயில் பீலி ஆர்த்த-ஆய்ந்தமயிலினது தோகைகள் நிறைந்தன, மூகுள இடுமுரண் மாத்தண்டு கூம்பு எனதலையிற் குவிந்த வலிமையுடைய பெரியதண்டாயுதம்பாய்மரம் போலத் தோன்ற, முகிலின்வண்ணத் தகிலொடு தொடுத்த-மேகம்போன்ற நிறமுடைய ஆடையோடுசேர்த்த, செம்பொன் தகட்டிடைதொடுத்த முத்தம்-செம்பொன்னுலாகிய தகட்டிற் கட்டிய முத்தங்கள், நகுகொடி நெடியபாயின் - விளங்குகின்ற கொடிகள் பொருந்திய நீண்டபாயினையுடைய, நாவாய் - ஓடங்கள், நல்வெனச்சென்ற - நல்வெனப்போயின். எ-று. (கூஅ)

நல்வென்பது வீசைக்குறிப்பு.

கூக. இழிந்தாயர்சிவிகையினேறத்தான்
பொழிந்தகண்ணில்புதுப்புனல்போயினன்
ஒழிந்திலன்குகனும்முடனேகினன்
கழிந்தனன்பலகாவதங்காலினே. (எஉ)

இ-ள். பொழிந்தகண்ணில் புதுப்புனல்போயினன் - பொழிந்த கண்ணினின்று புதுப்புன லொழுகப்போயினன், ஒழிந்திலன் குகனும் முடனேகினன் என்பது கன்னடமொழி. (எஉ)

கஉ-வது. கிஷ்கிண்டைநீங்கு படலம்.

பரதாழ்வான் ஸ்ரீராமபிரானைக்கண்டு மீண்டதைக் கூறுகின்றபடலம்.

கசஅ. நானம்நன்குரைத்தார்களிர்வாணிடை
ஆனகஞ்சையரும்புனலாட்டினர்
தானமாமணிக்கற்பகந்தாங்கிய
ஊனமில்மலராடையுடுத்தினர். (க)

இ-ள். தானம் மாமணிக்கற்பகம் தாங்கிய - கேட்டவை யெல்லாம் கொடுப்பனவாகிய சிந்தாமணியும் கற்பகவிருக்கமுங் கொண்ட, (சு)

கசக. கொம்பினின்றுடங்குறுகொள்கையார்
செம்பொனின்கலராசிதிருத்தினர்
அம்பரத்தினரம்பையரன்பொடும்
உம்பர்கோனுகரின்னமிர்தூட்டினர். (சு0)

இ-ள். செம்பொன்னின் கலராசி திருத்தினர்-செம்பொன் னாலாகிய உண்கலங்களைப் பரப்பினர், (சு0)

கசஉ. கோடகத்தேர்படுதிரைதாவிய
ஆடகத்தட்டிடையலகையற்றகு
கேடகத்தடக்கைகள்கவ்விக்கீதத்தின்
நாடகம்நடிப்பனகாண்டிநாதனீ. (சுஉ)

இ-ள். கோடகம் தேர்படு குதிரைதாவிய - முடியுறுப்பு டைய தேரிற்பூட்டிய குதிரைகளின்மேற் பாய்ந்த, அலகை-பிசாசுகள், ஆடகத்தட்டு இடை - பொன்னாலாகிய அத்தேர்த் தட்டினிடத்தில், அற்று உகு - என்துவாளியா லற்றுச்சிந்திய, கேடகத்தடக்கைகள் கவ்வி - கேடகத்தையுடைய விசாலித்த கைகளைக் கவ்வி, கீதத்தின் நாடகம் நடிப்பன - சங்கீதத்தோடு நாடகமாடுவதை, நாதனீகாண்டி - நாதா நீபார். எ-று. (சுஉ)

கருத்து-தேரிற்பூட்டிய குதிரைகளின்மேற் பாய்ந்த பிசாசு கள் அத்தேர்த்தட்டில் எனதுவாளியா லற்றுவிழுந்த கைகளைக் கவ்விக்கூத்தாடுவதை நீபார்.

கசஎ. அயாவுயிர்த்தழுசணீரருவிமார்பிடை
உயாவுறத்திருவுளமுருகப்புல்லினன்
நியாயமத்தனைக்குமோர்நிலயமாயினன்
தயாமுதலறத்தினைத்தழுவியென்னவே. (சுஎ)

இ-ள். முதல்தயா அறத்தினைத் தழுவி என்ன - முதலாகிய அருள் தருமத்தைத் தழுவினாற்போல, (சுஎ)

கசஅ. என்றலும்பதைத்தெழுந்துகைதொழா
நின்றதோன்றலிதெடிதுசோக்கிநீ
அன்றியாவரேயறத்துளோரதர்
பின்றவாய்கொலாமென்னப்பேசுவான். (சுஅ)

இ-ள். அதற்பின்று வாய்கொல் என்னப் பேசுவான் - அத் தருமவழியை நீங்குவாயோ வென்று பேசுவான், (சுஅ)

கசஆ. மனக்கொன்றுதனவரத்தில்நின்னேயும்
நினக்கொன்றுநிலேதுவிதேமியான்
தனக்கொன்றுன்தரும்தனேபனுதலால்
எனக்கொன்றுதவமடிப்பதென்னிலால். (சுஆ)

இ-ள். தேமியான்-சக்கிரவர்த்தி, மனக்குஒன்றுதனவரத் தில் நின்னேயும் - தன்மனத்திற்கு ஒவ்வாத வரத்தால் உன்னை யும், நினக்கு ஒன்றுநிலே நிறுவி - உனக்கடுக்காத ஆச்சிரமத் தில் நிறுத்தினைகளின், தனக்கு ஒன்றுன் தரும் தனேயன் ஆத லால் - அச்சக்கிரவர்த்திக்கு மனம் பொருந்தாதவள் பெற்ற மகன் யானுதலால, எனக்கு ஒன்றுது - அடியேனுக்கு அர சடுக்காது, அடிப்படுது என்னினால் தவம் - அடியேனுக்கு அடிப்பதை எண்ணில் தவமேயாகும். (சுஅ)

இரண்டாவது அயோத்தியாகாண்டம்.

முற்றிற்று.

காண்டம் இரண்டிற்கு ஆகிருவிருத்தம் - கசஎ.

ஸ்ரீராமசரசர்கள திருவடிகளேசரணம்.

ஸ்ரீ

அயோத்தியாகாண்டம்

செய்யுளகராதி.

செய்யுள்.	பக்கம்.
அகலிடம்	௯௯
அஞ்சம்பையும்	ந௫
அண்ணல்	ந௯
அணங்கு	௯௯
அயா	ரு0
அரக்கர்	௯௬
அருஞ்சிறப்பு	ச
அருததி	ந௯
அருப்பேந்திய	ந௬
அரைசஸர	ச0
அறுபதின்	உ
அனையவேலை	ந௯
—	
ஆங்குவந்து	உந
ஆடகந்தரு	உ0
ஆடினர்	ந௯
ஆலைபாய்	௯௯
ஆவதற்கும்	௯௯
ஆழிப்பொன்	௯அ
ஆள்வினை	ந௩
—	
இப்பொழுது	உச
இழிந்த	ச௬
இறந்தானல்லன்	உரு
இனியது	ச
—	
ஊனலைந்த	ச௪
—	
எயினர்தங்கு	ச௯
எழுகசேனை	ச௩
எனுகம்	ச௮
என்றலும்	ரு0
என்றுகாதலின்	ச௯
என்னேக்கண்டும்	உ௬
—	
ஏத்திளமுலை	ச0
ஏண்பால்	௯அ

செய்யுள்.	பக்கம்.
ஏய்ந்தெழு	௯ந
—	
ஒருத்தலே	அ
ஒலசலில்	௯௯
ஒறுப்பிறும்	௯ள
ஒன்றும்	ச௫
—	
கடிகமழ்	௯௯
கண்ணில்	உ௮
கறகாணும்	ச௭
கன்னியர்க்கு	ந
—	
கால்பாய்வன	ந௭
காலமும்	உ
—	
குலமுதல்	உ
—	
கூடியதறை	ச0
கூரமுன்னட	௯௯
—	
கேட்டான்	உ௮
—	
கைகளீர்	ந௨
கைத்தசொல்	ந௪
—	
கொடிதெருங்கின	ச௪
கொம்பில்	ரு0
—	
கோடகம்	ரு0
கோலு	௯உ
—	
சரிந்த	எ
சலந்தலே	ச௨
—	
சீதப்பனி	உ௬
சீரைசுற்றி	ந௨
—	

செய்யுள்.	பக்கம்.
செய்யக்கடவ	ந௫
செவ்வழி	ச௫
செவ்விய	ந௩
—	
சேதாம்பல்	உள
—	
ஞாளீ	உ௮
—	
தண்டலை	ந0
—	
தாயாற்று	உ௯
தாருறு	ச௫
தாவரு	ச௬
—	
திக்குநோக்கிய	ந௯
—	
நியமதரை	௯ரு
—	
நடியெறி	ச௭
நிறக்கமே	ந௮
நிறந்து	ச௫
நினியுறு	௯உ
—	
நாபமுற்றிய	உ௯
—	
தொட்டமாசுணம்	ச உ
தொலைபட்டிய	ந௬
தொலைமுக	ச ச
—	
நங்கையர்	ச௮
நவ்வி	ச௬
நற்றுதையும்	உ௯
—	
நாமவிற்கை	ச௬
நாவிரீத்த	ச ச
நாற்கடல்	ச ச
நானம்	ச௬

செய்யுள்.	பக்கம்.
நிறைமகவு நினையும்	ஈ0 சக
நீலமா	உஈ
நீளழு	எ
நெடுங்கழை	சஈ
நோயுமின்றி	ஈசா
பஞ்சி	சா
படருற	ஈஅ
பண்ணுறு	கச
பணிநிரைந்தன	சு
பன்னற்குகள்	ஈஎ
பிறிதோர்	ஈஉ
புறத்து	சா
பூகினை	சா0
பூவலர்	ஈக
பெண்ணில்	ஈஅ
பொங்கிய	உக
பொற்பு	உரு
பொன்	ரு

செய்யுள்.	பக்கம்.
போதின்ரு	உரு
போதுபெண்	கரு
போகாது	உள
மஞ்சளாவிய	சஉ
மண்ணிலும்	ரு
மண்டலம்	எ
மந்தரை	கரு
மருமத்து	ஈசா
மன்னர்	க
மனக்து	ருக
மனிதர்	சு
மாகந்தம்	ஈசு
மாவியல்	சஉ
மாற்ரூர்	உள
மின்னின்றவை	உரு
முத்தினில்	கஈ
முதிரொளி	கஉ
முற்பயந்து	உஉ
முறைமை	ஈ
மெய்யாக	ஈக
மொய்புறு	சஈ

செய்யுள்.	பக்கம்.
வண்டிபம்	உச
வஞ்சமோர	உசா
வட்டமேரர்	ஈஈ
வண்மிளர்	கள
வந்தெதிரே	சள
வலங்கடிந்து	ஈ0
வள்ளுறை	அ
வாய்தற்தேன்	சஅ
வாயாண்மன்னன்	உசு
வாரம்	ரு
வானின்று	க
விண்ணுட்டவர்	உஈ
விரும்பிய	ஈ
விளக்கொளி	உஉ
வெண்மதி	ஈசு
வெய்யோன்	ஈரு
வெயின்முறை	கரு
வெறிக்வந்தர்	க0
வேத்தவை	உஈ
வேக்தரே	உஉ
வேள்விச்செல்வம்	ஈசா
வையமேழு	உ0

செய்யுளகாதி முற்றிற்று.

ஸ்ரீ

ஆரணியகாண்டம் பிழைதிருத்தல்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தல்.
ரு	சஈ	ரின்ற ...	ரின்ற.
,,	ஈ0	அவணவ்வி ...	அவணவி.
எ	உஈ	பினை ...	பின்னம்.
உஉ	க	முதற்கும் ...	முகற்கும்.
,,	உஉ	பசிண ...	பசிண.
உஈ	கக	புவி ...	புவி.
உசு	சு	சேலை ...	சீலை.
,,	கஈ	சேலை ...	சீலை.
உரு	ஈஉ	வயின ...	வயினன்.
உக	ஈ	பொருத்தாத ...	பொருத்தாத.
,,	ரு	பார்த்தாள் ...	ப்பார்த்தாள்.

நன்மை குருவாழ்க குருவேதுணை.

ஸ்ரீ

ஸர்வம்விஷ்ணுமயம்ஜகத்.

ஸ்ரீமத்கம்பாரட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

ஸ்ரீமத்கம்பராமாயணம்

அருங்கவிவிளக்கம்.

மூன்றாவது. ஆரணியகாண்டம்.

இது ஆரணியத்தில் நடந்த சரித்திரத்தை யோதுகின்றமையின் ஆரணியகாண்டமென்னும் பெயராயிற்று.

க - வது. விராதன்வதைப்படலம்.

அயோத்தியாகாண்டக் காப்புச்செய்யுளி லக்ஷ்மியா மித்துவத்தைக் கூறியதுபோல விதுவும் முதலிய பிறவற்றையு மிதமுதலேயை காப்புச் செய்யுட்காரணம் கூறபவென்ப. அவ்வாறுணரவல்லாருணர்க.

காப்பு.

க. பேதியாதநிமிர்பேதவுருவம்பிறழ்கிலா
ஒதியோதியுணருந்தொறுமுணர்ச்சியுதவும்
வேதம்வேதியர்விரிஞ்சன்முதலோர்தெரிகிலா
ஆதிதேவரவரெம்மறிவுக்கறிவரோ. (க)

இ-ள். பேதியாது - தாம்வேறுபடாது, நிமிர்பேத உருவம் பிறழ்கிலா - நெருங்கிய வேற்றுமைப்பட்ட வுருவங்கள் தோறும் வேறுபடாத, ஓதி ஓதி உணரும் தொறும் உணர்ச்சி உதவும் - ஓதியோதி யுணருந்தொறும் மெய்யறிவைக்கொடுக்கின்ற, வேதம் வேதியர் விரிஞ்சன் முதலோர் தெரிகிலா - வேதங்களும் வேதியரும் பிரமனுமாகிய முதலோ ரின்னமுமறியாத, ஆதிதேவர் அவர் எம் அறிவினுக்கு அறிவு - ஆதிதேவராகிய அவரெமதறிவினுக்குள்ளறிவாய் விளங்குவர். எ-று. (க)

உ. முத்திருத்தியவ்விருத்தனேயமொய்ங்கையொடும்
சித்திரக்குனிசிலைக்குமரர்சென்றணுகினர்
அத்திரிப்பெயரருந்தவனிருந்தவமைதி
பத்திரப்பழுமரப்பொழில்தவன்றபழுவம். (உ)

இ-ள். அத்திரிப்பெயர் அரும்தவன் இருந்த அமைதி-அத்திரியென்னும் நாமமுடைய அரியதவத்தோன் வதிந்த மாட்சிமைபொருந்திய, பத்திரம் பழுமாம் பொழில்தவன்ற பழுவம்-இலைகளையுங் கனிகள் பழுத்த மரங்களையு முடைய சோலைநெருங்கிய வனத்தை, முத்து இருத்தி அவ் இருத்து அனையமொய்ங்கை ஒடும்-முத்தங்களை வரிசையாய்ப்பதித்து அவைகளிருக்காம்போன்ற நெருங்கிய பல்லுடைய சிதாபிராட்டியோடும், சித்திரக்குனிசிலைக் குமரர்சென்று அணுகினர். அழகுடைய வளைந்த வில்லுடைய ஸ்ரீராமலக்குமணர்போய்க் கிட்டினர்.. (உ)

பத்திரப்பழுமரப் பொழில் - இலைகளையுடைய ஆலமரச் சோலை எனினு மமையும். மொய்ங்கை - அன்மொழித்தொகை.

ங. திக்குறும்செறிப்ரம்தெரியநின்றதிரள்பொற்
கைக்குறுங்கண்மலேபோலுமரர்காமமுரலாம்
முக்குறும்பறவெரித்தவினேவான்முனிவனே
புக்கிறைஞ்சினரருந்தவனுவந்துபுகலும். (ங)

இ-ள். திக்கு உறும் செறிபரம் தெரியநின்ற - ஒரு திசை பொருந்திய செறிந்தகன மிவ்வளவிற்றென்று அறியநின்ற, திரள் பொன்கைக்குறும் கண்மலைபோல் குமரர் - திரண்ட அழகுடைய கரத்தையுஞ் சிறியகண்களையுமுடைய யானைபோல ஸ்ரீராமலக்குமணர்,

விராதனைக்கூறியது.

ச. எட்டோடெட்டுமதமாகரியிரட்டியரிமா
வட்டவெங்கண்வரையாளிபதிஞ்ஞுவகையில்
இட்டவிட்டிடைகிடந்தசெறிந்தவொருகை
தொட்டமுத்தலையயில்த்தொகையிடற்கழுவொடே. (ச)

இ-ள். மதம் - மதமுடைய, மா - பெரிய, எட்டோடு எட்டு - பதினாறு, கரி - யானைகளையும், இரட்டி அரிமா - முப்பத்திரண்டு சிங்கங்களையும், வட்டவெங்கண் பதினாறு வளை ஆளி-வட்டமாகிய வெவ்விய கண்ணுடைய பதினாறு வரையாளிகளை

யும், வகையில் இடைகிட்ட இட்டு - வகைப்படி இடைநெருங்கக் கோத்து, கிடந்தன செறிந்த - கிடந்தனவரைச் செறிந்த, ஒரு கை தொட்ட - ஒருகரம் பிடித்த, முத்தலைத் தொகை அயில்-மூன்று தலையையும் முனையில் கூர்மையையுமுடைய, மிடல் கழுவொடு - வலிமை பொருந்திய சூலத்தோடு. (சு)

இதுவுமது.

ஞ. செஞ்சுடர்ச்செறிமயிர்ச்சுருள்செறிந்தசெனியன்
நஞ்சுதட்டுருவுபெற்றிடைநடந்ததெனமா
மஞ்சுசுற்றியவயங்குகிரிபாதவிசையில்
பஞ்சுபட்டதுபடப்படியின்மேல்முகிலே. (ஞ)

இ-ள். நஞ்சுதட்டு உருவுபெற்று இடை நடந்தது என-விடம் குற்றம் பொருந்திய சரீரம் பெற்று நடந்தாற்போல, ()

இதுவுமது.

ட. குன்றுதுன்றினவெனக்குமுறுகோபமதமா
ஒன்றினென்றிடையடக்கினதடக்கையுதவ
பின்றுதின்றபிலனிற்பெரியவாயினொருபால்
மென்றினன்றவினியாதுவிரியும்பகியொடே. (ட)

இ-ள். குன்றுதுன்றின என - மலைகள் பிளந்தன என்று சொல்லும்படி, குமுறு கோப மதமா - முழக்குகின்ற கோவ முடைய யானைகளை, ஒன்றின் ஒன்று இடை அடுக்கின தடக்கை உதவ-ஒன்றின்பினொன்றாக விரலிலடுக்கிய தடக்கைகொடுக்க, பின்றுதின்ற பிலனில் பெரியவாயில் - செல்லத்தலையாத குகைபோன்ற பெரியவாயில், (ண)

இதுவுமது.

ஏ. பம்புசெக்கரொளியொக்குமயிர்ப்பக்கமெரிய
கும்பமுற்றவுயர்நெற்றியின்விசித்தொளிகுலா
உம்பருக்கரசனமால்கரியினேடையெயிறின்
இம்பரிப்பெரியதோள்வலியொடும்வளர்வே. (ஏ)

இ-ள். எரி பம்பு செக்கர் ஒக்கும் மயிர் பக்கம் எரிய - எரிந்து பரவுகின்ற செவ்வானத்தை யொத்த மயிர் இருபக்கமுமெரிய, கும்பம் உற்ற உயர் நெற்றியின் விசித்து ஒளிகுலாம்-கலசம்போன்ற உயர்ந்தநெற்றியிற்கட்டி யொளிவிளங்குகின்ற, உம்பருக்கு அரசன்மால் கரியின் ஓடை - தேவர்க்கரசனுடைய இந்திராணது பெருமை பொருந்திய ஐராவதத்தின் ஓடை, எயி

மின் கிம்புரிப் பெரியதோள்வலீ ஓடும் கிளர - (நுவ்யாணியின்)
கோட்டிலணியும் பூணுகிய பெரியதோள்வலீ யொழிய விளங்க.

இதுவுமது.

அ. தங்குதிண்கரியகாளிமைதழைந்ததவழ
பொங்குவெங்கொடுமைஎன்பதுபுழுங்கியெழம்மா
மங்குபாதகம்விடம்கனல்வயங்கிநிமிர
கங்குல்பூசிவருகின்றகலிகாலமெனவே. (கச)

இ-ள். தங்குதிண் கரிய காளிமை தழைந்து தவழ - தங்குகின்ற வலிய கருமைபொருந்திய கறுப்பு செழித்துத் தவழ, பொங்குவெம் கொடுமை என்பது புழுங்கி எழ - பொங்குகின்ற வெவ்விய கொடுமை யென்பது கோவித்தோங்க, மாமங்கு பாதகம் விடம் கனல்வயங்கி நிமிர - பெருமை குறைந்த பாவமும் விடமும் அக்கினியும் விளங்கி யோங்க, கங்குல் பூசிவருகின்ற கலிகாலம் என - இருளைப்பூசிவருகின்ற கலிகாலத்தைப் போல, (கச)

இதுவுமது.

க. செற்றவாளுழுவைவன்செறியதள்த்திருத்த
சுற்றிவாரணவுரித்தொகுதிவீதொடர
கொற்றம்மேவுதிசையானையின்மணிக்குலமுடை
கற்றைமாசுணம்விரித்துவரிகச்சொளிரவே. (கடு)

இ-ள். செற்ற - தான்கொன்ற, வாரண உரித்தொகுதி - யானையினது தோல்தொகுதியை, சுற்றி - இடையிற் சுற்றி, நீவி தொட - கொய் சகம்புரள, வாள் உழுவைவன்செறி அதள் திருத்த - அச்சங்கொடுக்கின்ற புலியினது வலிய தெருங்கிய தோலை திருப்பிக்கட்டி, கொற்றம் மேவும் திசையானையினமணிக்குலம் உடை - வெற்றி பொருந்திய திசையானைகளினது மணிகளைக்கோத்த, கற்றைமாசுணம் விரித்து வரிகச்சு ஒளிர - நிரண்டமலைப்பாம்பை விரித்துக்கட்டிய கச்சு விளங்க. எ-று. (கடு)

இதுவுமது.

கo. செங்கணங்கவரவின்பொருவில்செம்மணிவிராய்
வெங்கணங்கவலயங்களும்விலங்கவிரலி
சங்கணங்கியசலஞ்சலமலம்புதவளக்
கங்கணங்களுமிலங்கியகரம்பிறழவே. (கசு)

இ-ள். செங்கண் அங்க அரவின் - செவந்த கண்களையும் அங்கத்தினுடைய சர்ப்பங்களினது, பொருவு இல்செம்மணிவிராய் -

ஒப்பில்லாத செம்மை ரத்நங்களைக் கலந்து செய்த, வெம் கண் அங்கம் வலயங்களும் - கொடிய இலங்க - வெவ்விய கண்களையுடைய அங்கத்தினுடையும் வலயங்களும் விளங்க, விரவி சங்கு அணங்கிய சலஞ்சலம் அலம்பு - கலந்து சங்கங்கள் வருந்திய சலஞ்சலமென்னுஞ் சங்கங்களைசின்ற, தவளக்கங்கணங்களும் - வெண்ணிறமுடைய கங்கணங்களும், இலங்கிய கரம்பிறழ - விளங்கிய கைகள் பிறழ. எ-று. (கசு)

இதுவுமது.

கக. பூதமத்தனையுமோர்வடிவுகொண்டுபுதிதென
ரேதவொத்தவுருவத்தனுருமொத்தகுரலன்
காதலித்தயனளித்தகடையிட்டகணிதப்
பாதலக்கமதவெற்பிடைபடைத்தவலியான். (கஎ)

இ-ள். அயன் காதலித்து அளித்த - தவத்திற் கயன்விரும்பிக்கொடுத்த, கணிதம் கடை இட்ட - கணக்கு முடிவுசெய்த, பாதலக்கம்மத வெற்பிடைபடைத்த வலியான் - இருபத்தையாயிரம் யானைகளினின்று அடைந்த பலமுடையான். (கஎ)

கஉ. ஓமராமரையொருங்குமுணர்வோருணர்வும்
நாமராமவரைகல்லறம்நிறுத்தநுணுகி
தாமராவணைதுறந்ததரைன்றவரையோர்
மாமராமரமிறுத்ததகொடெற்றவரலும். (கஅ)

இ-ள். ஓமராமரை - பிரணவத்தை இடமாகவுடைய ஸ்ரீராமரை, ஒருங்கும் உணர்வோர் உணர்வும் நாமராம அவரை - முற்றுமுணர்ந்தோருணர்கின்ற திருநாமமுடைய அவரை, நல் அறம் நிறுத்த - நல்லதருமத்தைக்காக்க, அராவணை துறந்து - பாப்பணையை நீக்கி, நணுகி - வந்து, தரை நின்றவரை - காணிலந்தோய நின்றவரை, ஓர் மாமராமரம் இறுத்து - ஒருபெரிய மராமரத்தை யொடித்து, அதுகொடு எற்றவரலும் - அதனைக் கொண்டு ஓச்சவரலும். எ-று. (கஅ)

கஉ. சுவணவண்ணஞெடுகண்ணனுறைதோளன்விசைதோய்
அவணவ்விண்ணிடைநிமிர்ந்துபடர்கின்றவனறம்
சிவணதன்னிகரறமுன்னவரோடேகுசெலவத்
துவணனென்னுமெடுமன்னவனுமொத்தனனரோ. (கஆ)

இ-ள். சுவணவண்ணஞெடு கண்ணன் உறை தோளன் - பொன்னிறமுடைய இலக்குமனனெடு ஸ்ரீராமபிரானுறையுந்

தோளுடையாளுகி, விசைதோய் அவண் அவ்வினிடை நிமிர்ந்து படர்கின்றவன் - வேகம் பொருந்தி ஆகாயத்தில் அவ் வானத்தில் நிமிர்ந்து செல்லுகின்ற விராதன், முன் சீதாதேவியை நோக்கி செலவத்து - முன்பு ஸ்ரீகிருஷ்ணர்ச்சுனனென்னும் பிருதை சுமந்து செல்லுஞ் செலவால், அறம் சிவணத்தன்னசிறைத்தரு மத்தையொத்தத்தன்னுடையசிறைகளையுடைய, உவணன்என னும் நெடும் மன்னவனும் ஒத்தனன் - கருடனென்னும் பெரிய மன்னவனையு மொத்தான். எ-று. (சுஅ)

கச. தோளிரண்டும்வடிவாள்கொடுதணித்தவிசையால்
மீளிமொய்ம்பினர்த்தித்தலும்வெகுண்டுபருவத்
தோளிரண்டும்நெரியச்சினவுசெங்கணரவக்
கோளிரண்டுகடரும்தொடர்வதிற்குறுகலும். (சுக)

இ-ள். புருவத்தோள் இரண்டும் நெரிய - புருவமாகியதோள் ரண்டும் நெரிய, சினவு செங்கண் அரவக்கோள்-சோவங்கொண் ட செவந்த கண்ணுடைய பாம்பாகிய இராகு கேதுகள், இர ண்டு கடரும் தொடர்வதில் குறுகலும் - சந்திர சூரியரிருவரை யும் பிடிப்பதுபோல (அக்கரங்கள்) குறுகிக்கிடத்தலும். (சுங)

கஞ. புண்ணிடைப்பொழிபுயிர்ப்புனல்பொலிந்தவரவும்
விண்ணிடைப்படர்தல்விட்டுமுவிகற்பம்கினையா
எண்ணுடைக்குரிசிலெண்ணியினையோயிவனேயும்
மண்ணிடைக்கடிதுபொத்தலல்வழக்கெனலுமே. (சுச)

இ-ள். புண்ணிடைப்பொழி உயிர்ப்புனல் பொலிந்து வர வும் - புண்ணினின்று பொழிகின்ற அரத்தநீர் பொலிந்து ஒழு கவும், எண்ணுடைக்குரிசில் எண்ணி - எல்லார் மனங்களுமு டைய ஸ்ரீராமபிரான் திருவுளத்திலெண்ணி, இனையோய்-இலக் குமணு, விண்ணிடைப்படர்தல்விட்டு-ஆகாயத்திற்செல்வதைத் தவிர்த்து, எழுவிகற்பம் கினையா இவனை - எழுகின்ற பிழையை கினையாமற் கிடக்குமிவனை, இம்மண்ணிடைக்கடிது பொத்தல் வழக்கு எனலும்-இப்புவியில் விரைவிற் புதைத்தல் முறை யென்று சொல்லுதலும். எ - று. (சுசு)

கசு. மதலையாளனையனாவிலம்வகிர்த்தகுழிவாய்
கதமுலாவுகளிநீர்வயினழுத்தகைவதிர்
அதலமாய்ச்சுவெயுண்டிலகிலன்பச்சருந்திற்
சுதவுசேவடியினுலமலனுகுதலுமே. (சுஎ)

இ-ள். நிலைதீர் அதவம் ஆய் - குற்றமற்ற யாகாக்கினியில் நெய்யைச்சொரியும் அத்தியாப்பையாய், நறுநெய் உண்டி நல்ல நெய்யையுண்டு, (சுஞ)

கஎ. பட்டதன்மையுமுன்னர்த்தபடர்சாபமிடமுன்
கட்டவன்பிறவித்தகடையுரவுடல்நான்
விட்டுவிண்ணிடைவிளங்கினன்விரிஞ்சனையோர்
முட்டைதந்ததனில்வந்தமுதல்முன்னவனிலே. (சுசு)

இ-ள். விரிஞ்சன் என ஓர் முட்டைதந்து - பிரமாண்ட மென்று சொல்லப்பட்ட ஒரு முட்டையைப் படைத்து, அத னில் வந்த முதல் முன்னவனில் - அம்முட்டையுள் திருவவத ரித்த உலகுக்கு முதலாகிய பசவன் சந்நிதியில், பட்டதன்மை யும் உணர்ந்து - தானிறந்ததையு மறிந்து, முன் படர் சாபம் இட - முன்பு குபேரன் கொடியசாபங்கொடுக்க, கட்டவன் பிறவித்தகடை ஆன உடல் - (அதனால்வந்த) கஷ்டமாகிய வலிய சன்மங்கொடுத்த இழிவானவுடலை, விட்டு விண்ணிடை விளங்கினன் - நீக்கித் தேவசரீரம்பெற்று வானத்தில் விளங் கினன். (சுசு)

விராதன்கதி.

கஅ. அன்னமாயருமறைகளைந்தாய்நீயன்வயுன்னை
முன்னமாரோதவித்தாரெல்லாருமுடிந்தாரே
பின்னமாயொன்றுதல்பிறிந்தேயோபிறியாதோ
என்னமாமாயமிலையேனமாய்மண்ணிடந்தாய். (சுஅ)

இ-ள். பின்ன ஆய் ஒன்றுதல் - ஜீவர்வேறுகி யுன்னோடு ஐக்கியமாதல், பிறிந்தேயோ பிறியாதோ - பிறிந்தோ பிறியாம லோ, (சுஅ)

உ-வது. சரபங்கர் பிறப்புநீங்குபடலம்.

ஸ்ரீராமபிரானேச்சேவித்துச் சரபங்கமுனிவர் முத்தியடைந்ததைக்கூறுகின்றபடலம்.

கஉ. குரவங்குவிகோங்கலர்கொம்பிருடும்
இரவங்கணநம்பொருதேனினரால்
சரவங்கனிருந்ததவம்சருமம்
மரவங்கிளர்கோங்கொளிவாசனம். (க)

இ-ள். குரவம் அலர்கோங்கு குவிகொம்பி னெடும்-கூந்தலிற் சூடிய மருதாணிப்பூவலர்ந்த தனங்களாகிய கோங்கரும்புகள் குவிந்த கொம்பாகிய சானகி பிராட்டியோடும், (க)

இந்திரனைச்சொல்லியது.

உ0. அனையின்றுறையம்பதொடைம்பதுநூல்
வினையின்றொகைவேள்விநிரம்பியமா
முனிவன்முதுதேவரின்மூவரிலார்
புனையும்முடிதன்றபொலன்கழலான். (ங)

இ-ள். அனையின் துறை - அவ்வினிய மார்க்கமாகிய, நால் வினையின் தொகை - நூலின் செய்கைப்படி மொத்தம், ஐம்ப தொடு ஐம்பது - நூறு, வேள்வி நிரம்பிய மாமுனிவன் - வேள்வியைச்செய்த பெரியதேவன், (ங)

இதுவுமது.

உக. திசைகட்டியமால்கரிதெட்டமதப்
பசைகட்டினகிட்டினபற்பலபோர்
விசைகட்டழிதானவர்விட்டவர்பேர்
இசைகட்டியவொத்திவர்சாமரையான். (அ)

இ-ள். திசைகட்டியமால் கரிதெட்ட - திசைகளிற்கட்டிய பெரியயானைகள் தெவிட்ட, மதப்பசை கட்டின கிட்டினபற்பலபோர் - மதப்பசை பூட்டப்பட்டனவாகிக்கிட்டிய பலயுத்தங்களில், விசைகட்டழி - வேகங்கட்டழிந்து, விட்டவர் - விட்டோடினவராகிய, தானவர்பேர் - அசுரரது பெயர்களோ, இசைகட்டிய ஒத்து இவர் சாமரையான் - இசைத்துக் கட்டியதையொத்தெழுகின்ற சாமரமுடையான். (அ)

இதுவுமது.

உஉ. செற்றிக்கதிரிற்பொலிசெம்மணியின்
கற்றைச்சுடர்விட்டெரிகஞ்சியான்
வெற்றித்திருவின்குளிர்வெண்ணகைபோல்
சுற்றிக்கிளரும்சுடர்தோள்வலியான். (ச0)

இ-ள். செற்றிக்கதிரில் பொலிசெம்மணியின் - செலுக்கிரியன்போல விளங்குகின்ற செவ்வரத்தங்களினது, கற்றைச் சுடர்விட்டு எரிகஞ் சுகியான் - திரண்ட ஒளியைப் பரப்பி யெரிகின்ற கஞ்சுகமுடையான், (ச0)

இதுவுமது.

உங. கண்டாமலையாயிரமுங்கதுவ
கண்டாமரைபோல்கருநாயிறெனத்
கண்டானிமையோரிறைகாசினியின்
கண்டானருநான்மறையின்கனியை. (உச)

இ-ள். இமையோர் இறை - தேவர்க்கரசன், காசினியின் கண் - புவியினிடத்தில், கண் தாமரைபோல் - கண்களைச் செந்தாமரை மலர்போலவும், கரும்நாயிறு என திருமேனியைக் கரியசூரியன் போலவுமுடைய, அரும் நான்மறையின்கனியை- அரிய நான்குவேதங்களின் கனியை, கண் தாம் அவை ஆயிரமும்கதுவ - கண்களாகிய அவையாயிரமும் பொருந்த, கண்டான் - பார்த்தான். எ-று. (உச)

கடைசித்தான் அசை.

உச. போனவனகிலபுலமையினுணர்வான்
வானவர்தலைவனேவரவெதிர்கொண்டான்
ஆனவனடிதொழவருள்வரவழுதான்
தானடவிடவகைதழுவினனுழைவான். (கூ)

இ-ள். தான் நட இடவகை - தான் நடக்கின்ற இடவகுப்பில், தழுவினன் நுழைவான் - தழுவினனாகி ஆச்சிரமத்துட் செல்வான். (கூ)

கூ-வது. அகத்தியப்படலம்.

அகத்தியமுனிவரைக் கண்டதைக் கூறுகின்றபடலம்.

அகத்தியமுனிவரைக்கூறியது.

உடு. யோகமுறுபேருயிர்கள்தாமுலவுமல
ஏகுநெறியாதெனமிதித்தடியினேறி
மேகமெடுமாலைதவழ்விந்தையெனும்விண்தோய்
நாகமுநாகமுறநாகமெனநின்றான். (கூ)

இ-ள். நாகம் அது நாகம் உறநாகம் என நின்றான் - மலையாகிய அது பாதாளத்திலழுந்த யானைபோல நின்றான் (கூ)

இதுவுமது.

உசு. உழக்கும்மறைநாலினுமுயர்ந்தலகமோதும்
வழக்கினும்மதிக்கவினும்மரபினுடி
நிழற்பொலிகணிச்சிமணிநெற்றியுமிழ்செங்கண்
தழற்புரைசுடர்க்கடவுள்தந்ததமிழ்தந்தான். (சச)

இ-ள். உழக்கும் மறைநாலினும்-பழகுகின்ற வேதம் நான்காலும், உயர்ந்த உலகம் ஓதும் வழக்கினும் - எடுத்த உலகஞ் சொல்லும் வழக்காலும், மதிக்கவினினும் - தனது புத்தி விசேடத்தாலும், மரபின் நாடி - முறைப்படி யாராய்ந்து, (சக)

இதுவுமது.

உஎ. விண்ணினில்நிலத்தினில்விசும்பலகில்பேர்
எண்ணினிலிருக்கினிலிருக்குமெனயாரும்
உண்ணினகருத்தினையுறப்பெறுவனென்
கண்ணினிலெனக்கொடுகளிப்புடைமனத்தான். (சஉ)

இ-ள். விண்ணினில் - ஆகாயத்தில், நிலத்தினில்-பூமியில், விசும்ப உலகில் - வேறு உலகங்களில், பேர் எண்ணினில் - பெரியமனத்தில், இருக்கினில் - வேதத்தில், இருக்கும் என - மீற் றிருக்குமென்று, யாரும் உள் நினைகருத்தினை-எல்லாரும் மனத்துள் நினைக்கின்ற பொருளை, என்கண்ணினில் - எனது கண்களால், உறப்பெறுவென் - பார்க்கப்பெறுவேன், எனக்கொடு களிப்பு உறுமனத்தான் - என்றுகொண்டு களிப்புடைய மனத்தான். எ - று. (சஉ)

இதுவுமது.

உஅ. இரைத்தமறைநாலினுடியைந்தபிறயாவும்
நிரைத்தநெடுஞானநிமிர்கல்லினெடுநாளிட்
டுரைத்தமயனுமறியாதபொருணேர்ந்தின்
றரைக்குதவுமாலெனமுணர்ச்சியினுவப்பான். (சஅ)

இ-ள். அந்நெடுஞானம் நிமிர்கல்லில் - அந்த நெடியஞான மாகிய உயர்ந்த அம்மியில், இரைத்த மறைநாலினுடி - ஒலியுடைய வேதம் நான்கோடு, இயைந்த பிறயாவும் நிரைத்து இட்டு - சேர்ந்த பிறநூல்களையும் நிறைத்துவைத்து, நெடுநாள் அரைத்தும் - நெடுங்காலம் அரைத்தும், அயனுமும் அறியாத பொருள் - பிரமனும் அறியப்படாத பரம்பொருள், நேர்

நின்று உரைக்கு உதவும் எனும்-எனக்கு நேர்நின்று வார்த்தை சொல்வதற்கு அருளுகின்றது என்கின்ற, உணர்ச்சியின் உவப்பான் - உணர்வால் களிப்பான். எ-று. (சஅ)

ச்வது. சடாயுகாண்படலம்.

சடாயுவைக்கண்டதைச்சொல்லுகின்றபடலம்.

சடாயுவைச்சொல்லியது.

உக. மால்நிறவிசும்பெழில்மறையத்தன்மணிக்
கால்நிறச்சேயொளிகதுவக்கண்ணகல்
நீல்நிறவரையினில்பவளநீள்கொடி
போல்நிறம்பொலிந்தெனப்பொலிகின்றுன்றனே. (ச)

இ-ள். மால்நிற விசும்பு எழில்மறைய - கருமைநிறமுள்ள ஆகாயத்தி னெழில்மறைய, தன்மணிக்கால் நிறச்சேய் ஒளி கதுவ - தனதழகுடைய கால்களினது நிறத்தின் சிவந்த ஒளி பொருந்த, கண் அகல் நீல் நிறவரையினில் - இடமகன்ற நீல நிறமுடைய மலையில், நீள் பவளகொடி-நீண்ட பவளக்கொடி, நிறம்பொலிந்து எனப் பொலிகின்றுன் தனை-நிறத்தாற் பொலிந்தாற்போலப் பொலிகின்றவனை. எ-று. (ச)

இதுவுமது.

நக. கோளிருநாலினுடொன்றுகூடின
ஆளுமதிகிரிபோலாரத்தானறனை
நீளுமேருவினென்றிமுற்றிய
வாளிரவியிற்பொலிமெல்லியான்றனை. (எ)

இ-ள். ஆள் உறுதிகிரிபோல் ஆரத்தான் தனை - திருமாலெடுத்தாளுந் திருவாழிபோன்ற மாலைபூண்டவனை, (எ)

சடாயுசொல்லியது.

உக. பரவலருங்கொடைக்கும்நின்றன்பனிக்குடைக்கும்பொறைக்கும்நெடும்
கரவலரும்கற்பகமுமுடுபதியும்கடலிடமும்களித்தவாழ [பஞ்சு
புரவலர்தம்புரவலனேபொய்ப்பகையேமெய்க்கலியேபுகழின்வாழ்வே
நம்மல்லறமும்யானுமினியென்படரீத்தேனையோ. (உக)

இ-ள். பரவல் அரும் கொடைக்கும் - துதித்தலுக்கருமையாகிய ஈகைக்கும், நின்தன் பனிக்குடைக்கும்-உனது குளிர்ந்த குடைக்கும், பொறைக்கும் - பொறுமைக்கும், நெடும் பண்பு தோற்ற - நெடியகுணந்தோற்ற, காவல் அரும்கற்பகமும்-ஒளித்தல் செய்யாத கற்பகத்தருவும், உடுபதியும் - சந்திரனும், கடலிடமும்-புவியும், களித்துவாழ-இனித்தங்கள் குணந்தோன்று மென்று உவந்துவாழ, (உக)

கொடைக்குக் கற்பகத்தையுங் குடைக்கு உடுபதியையும் பொறைக்குப் பூமியையும் நிரனிறையாய்க்கொள்க.

இதுவுமது.

கூஉ. அலங்காரமெனவுலகுக்கமுதளிக்கும்தனிக்குடையாயாழிசூழ்ந்த
நிலங்காவலதுகிடக்கநிலையாதநிலையுடையேனையநெஞ்சின்
கலங்காணகடந்தவோயாயகனேதிவினையேன்கண்பிலின்றும்
விலங்காளனைத்தினல்விலங்கினேனின்னுமுயிர்விட்டிலேனால். (உஉ)

இ-ள். அலங்காரம் என - உனக்கு அலங்காரம்போல, உலகுக்கு அமுது அளிக்கும் - உலகங்களுக்குத் தண்ணென்ற அமுதைக் கொடுக்கின்ற, தனிக்குடையாய் - ஒப்பற்ற குடையையுடையாய், (உஉ)

கூஊ. தாயில்நீங்கருந்தந்தையில்தண்ணகர்
வாயில்நீங்கிவனம்புகுந்தெய்திய
நோயில்நீங்கினெம்நுன்னிலெனெங்களை
நீயும்நீங்குதியோநெறிநீங்கலாய். (கூ)

இ-ள். நெறி நீங்கலாய்-நெறியினின்று நீங்காதாய், தாயில்-ன்றதாயையும், நீங்க அரும்தந்தையில் - நீங்க அரிதாகிய தந்தையையும், தண்ணகர்வாயில் - குளிர்ந்த நகரத்திடத்தையும், நீங்கி வனம்புகுந்து எய்திய நோயில் - நீங்கிவனம் வந்து சேர்ந்த நோயை, நுன்னில் நீங்கினெம்-உன்னால் நீங்கினேம், நீயும் எங்களை நீங்குதியோ என் - நீயும் எங்களை நீங்குதியோ இஃதென்னை. (கூ)

கூ஋. அல்லிறத்தனதாடகையாதியா
வில்லிறத்திடையெனமேலோள்
புல்லிறத்தியாவும்புகன்றுதன்
சொல்லிறத்தனன்தோன்றல்பின்தோன்றினன். (கூ)

இ-ள். புல் இறத்தது யாவும் - சக்கரவர்த்திக்கு ஈமக்கடன் முடித்தது முதல்யாவும், (சஊ)

இ-வது. சூர்ப்பநகைப்படலம்.

சூர்ப்பநகைவந்து மூக்கறையாகிச் சென்றதைக் கூறுகின்றபடலம்.

கூடு. புவியினுக்கணியாயான்றபொருள்தந்தபுலத்திற்றுறை
அவியகத்தறைகள்தாங்கியைந்திணெறியளாவி
சவியுறத்தெளிந்தசண்ணென்றெழுக்கமும்தழுவிச்சான்றோர்
கவியெனக்கிடந்தகோதாவிரியினீவீரர்கண்டார். (க)

இ-ள். புவியினுக்கு அணி ஆய் - பூமிக்கு அலங்காரமாய், ன்ற பொருள்தந்து - மாட்சிமை யுடைய அர்த்த விசேடங்களைத் தோற்றி, புலத்திற்கு ஆகி-அறிவைக்கொண்டதாகி, அவி அகத்துறைகள் தாங்கி - அடக்குகின்ற மனோலய மார்க்கங்களையுடைத்தாகி, ஐந்திணை நெறி அளாவி - ஐந்திணைக் காமமார்க்கத்தைக் கலந்து, சவி உறத் தெளிந்து-அழகுறத் தெளிந்து,தண் என்ற ஒழுக்கமும்தழுவி-ஈரம்போல ஒழுக்கத்தையுங்கொண்டு, சான்றோர் கவி எனக்கிடந்த - சான்றோர் செய்யுட்போலக் கிடக்க, கோதாவிரியினை வீரர்கண்டார் - கோதாவிரி யாற்றை ஸ்ரீராமலக்குமணர் பார்த்தார். நதியைக் குறிக்குமிடத்து - பூமிக்கு ஆபரணமாய் மலையிலுள்ள பொருள்களைக்கொடுத்து வயல் களைக்கொண்டதாகி வெப்பத்தை யகற்கின்ற தன்னிடத்தில் நீர்த்துளிகளைத்தாங்கி, மருதம், முல்லை, குறிஞ்சி,நெய்தல், பாலை, என்னும் ஐநிலத்திலுங் கலந்து என்றுகொள்க. மற்றவை இரண்டற்கும் ஒக்கும். (க)

கூ. நீளங்கொள்கழினப்பள்ளியகங்களினியகேமி
வாளங்களுறைவகண்டுமெழுந்தைதுணிகொளுகோக்கும்
நீளங்கொள்சிலையோரணமற்றைநெரிழைதெடியகம்பி
தாளின்கண்மனம்வைத்தன்னசுடர்மணித்தடங்கள்கண்டார். (ச)

இ-ள். நீளம் கொள் நிலையோன் - நீண்டவிற்பிடித்த ஸ்ரீராமபிரான், நயனங்கள் அனையகேமி வாளங்கள் - இருகண்கள் போன்ற சக்கரவாளப் புட்கள், நாளம் கொள் நளினப்பள்ளி-கண்டைக் கொண்ட தாமரைமலர்ச்சேக்கையில், உறைவகண்டு-உறைவனவற்றைப்பார்த்து, (சு)

புள்ளிரட்டை தோன்ற நயனங்களனையவென்றார்.

ஸ்ரீப்பகையைச்சொல்லியது.

நஎ. செம்பராகம்படச்செறிந்தகூந்தலாள்
வெம்பாருத்தனிவினேந்தமெய்யினுள்
உம்பரானவர்க்குமொண்டவர்க்குமோதநீர்.
இம்பரானவர்க்குமோரிறையீட்டுவாள். (சு)

இ-ள். ராகுவெம்ப - ராகுவென்னும்பாம்புகலங்க, தனிவினேந்த மெய்யினுள் - ஒப்பின்றி வளர்ந்த சரீரமுடையார், (கூ)

நஅ. சிந்தையிறைபவற்குருவம்தீர்ந்ததால்
இந்திரற்காயிரம்நயனமீதற்கு
முந்தியமலர்க்கணேர்மூன்றுநான்குதோள்
உந்தியுலகளித்தற்கென்றன்னுவாள். (கஉ)

இ-ள். சிந்தையில் உறைபவற்கு உருவம் தீர்ந்தது - மன்தினிறையும் மன்மதனுக்கு உருவம்போயிற்று, (கஉ)

நக. எவன்செயவினியவிவ்வழகையெய்தினேன்
அவன்செயத்திருவுடம்பலசநோற்கின்றான்
எவன்செயத்தகையவிந்நளினநாட்டத்தான்
தவன்செயத்தவன்செய்ததவனென்னென்கின்றாள். (கஅ)

இ-ள். எவன் செய்ய இனிய இவ் அழகை எய்தினேன் - யாதுசெய்ய இனிதாகிய இவ்வழகைப் பெற்றேன், அவன் செய்யத் திருவுடம்பு அலசநோற்கின்றான் - அதனை வீண்செய்யத் திருமேனி வாடத்தவஞ் செய்கின்றான், எவன் செய்யத்தகைய இந்நளின நாட்டத்தான் - புதுமை செய்யத்தகைமையுடைய இந்தத்தாமரைக்கண்ணன், தவன் செய்யத்தவஞ் செய்ததவன் என் என்கின்றாள் - தவத்தைச் செய்யத்தவஞ் செய்ததம் யாதென்கின்றாள். எ-று. (நஅ)

அவன் எவன் தவன் தவன் என்பனபோலி.

ட்டியினது கற்பாகிய கடலில் ஆடுவானுக்கு, புள்ளும் சிலம்பும் - பறவைகளு மிரங்கும், பொழில் சிலம்பும் - சோலைகளு மிரங்கும், புனலும் சிலம்பும் - நீருமிரங்கும், பூங்கோலம் உள்ளும் சிலம்பும் - பிராட்டியினது அலங்கரித்த வுருவம் மனத்துள்ளுந் தோன்றும், சிலம்பாவால் - அவ்வுருவம் கண்ணுக்குத் தோன்றுதபடியால், உயிர் உண்டாகும்வகை உண்டோ - உயிர் தரிக்கும் வகையுண்டோ. எ-று. (உஅ)

கூ. இளிக்கறையினைசெலியைந்தனபூவை
இளிக்கறையும்பொழில்கிஞ்சுகவேலி
ஒளிக்கறைமண்டிலமொத்துளதாங்கோர்
பளிக்கறைகண்டில்வைகல்பயின்றார். (உஎ)

இ-ள். இவிக்கு அறைஇன்சொல் இயைந்தனபூவை-வீணை நரம்பிற்குக் கற்பிக்கின்ற இனிய சொற்களைப் பொருந்திய நாகணவாய்ப் புட்கள், இளிக்கு அறையும் கிஞ்சுகவேலி பொழில் - இவிகீஞ்சுக்கோதுகின்ற முருக்கமரவேலியை யுடைய சோலையில், ஒளிக்கறை மண்டிலம் ஒத்துளது ஆங்கு ஓர் - ஒளியையும் கறுப்பையுமுடைய சந்திரமண்டிலத்தை யொத்துள்ளதாகிய ஆங்கொரு, பளிக்கறைகண்டு அதில் வைகல் பயின்றார் - பளிங்கு மண்டபத்தைக்கண்டதிலிருவரும் வைகினர். (கூஎ)

ஆயோமுகியைச்சொல்லியது.

கூ. தடிதடவத்தலைபலதழுவத்தாள்
நெடிதடையக்குடர்கெழுமுநிணத்தூண
படிதடவப்பலபரவமிலைசக்கும்
கடிதடவத்தினளருமுகறிப்பாள். (ஙசு)

இ-ள். தடிதடவ - அளக்குங்கோலளக்கின்ற, அத்தலைபல தழுவ - அவ்விடம் பல இடையிற்கிடப்ப, தாள் நெடிது அடைய - எடுத்தகால் நெடுந்தூரஞ்செல்ல, குடர்கெழுமு நிணத்தூண் படிதடவ - குடல்பொருந்திய புலாலுணவு புவியிற்சிதற, பலபாவம் இசைக்கும் - பலபாதகங்களைச் செய்கின்ற, கடிதடவத்தினள் உருமுகறிப்பாள் - அல்குலையுடையவளாகி இடியைக் கறிப்பாள். எ-று. (ஙசு)

இலவுமது.

கூச. இலவயிறையொப்பனவென்னவிழிப்பாள்
அலைகுளிரக்கடிதழுவுமெயிற்றுள்
குவைகுலையக்கடல்குவியவுலப்பாள்
நிலையில்புவித்திருநாணடப்பாள். (சஎ)

இ-ள். இலை - இக்கண்கள், இறை ஒப்பன என்ன விழிப்பாள் - ஊழித்தீயை ஒப்பனவென்று சொல்லும்படி உருட்டிப் பார்ப்பாள், அலை குளிரக்கடிது அழலும் எயிற்றுள் - அக்கண்கள் குளிரும்படி பிரகாசிக்கின்ற பல்லுடையாள், குவை குலையக்கடல் குவிய அலைப்பாள் - மலைகள் குலையவும் கடல்களொன்று சேரவும் அலைப்பாள், நிலையில் புவித்திருநாணடப்பாள் - குற்றமில்லாத பூதேவி யிவளு மொருபெண்ணேவென்று வெட்கடப்பாள். எ-று. (சஎ)

கூடு. வெய்தாகியகானிடைமேவருநீர்
ஐதாத்தினேவையலொன்றுளதோ
நொய்தாய்வரவேகமும்நொய்திலனுல்
எய்தாதொழியாவினதுவென்னேகொலாம். (சுகூ)

இ-ள். நீர் ஐதாதலினே - புனல்நிலைக்காமையாலே, அயல் ஒன்று உளதோ-வேறொன்றுளதோ, நொய்தாய் வர-விரைவாய் வர, வேகமும் நொய்து இலன் - வேகமுஞ் சிறிதுடையனிலன் பெரிதுடையான், (சுகூ)

கo-வது. கவந்தன்வதைப்படலம்.

கூசு. ஐயந்தடுத்தயோசனையினிரட்டியடவிபுடைபடித்த
வையந்திரிந்தார்கதிரவனும்வானிலுப்பண்வக்குற்றுண்
எய்யும்நிலக்கையிருவருஞ்சென்றிருந்தேடீட்டியெவ்வுயிரும்
ஙகயின்வளைத்தவயிற்றடக்குங்கவந்தன்வனத்தைக்கண்ணுற்றார் (உ)

இ-ள். ஆர்கதிரவனும் - கிரணம் நிறைந்த சூரியனும், வையம் திரிந்து - தேரேறியுலாவி,

கவந்தனேச்சொல்லியது.

கூள. பாரிடமேயிதபரவைசுற்றுறும்
பாரிடமிதெனப்பரந்தமெய்யது
பாரிடம்வலம்வரப்பரத்தகையது
பாரிடந்தெடித்தமாவினையபாழியாய். (உகூ)

இ-ள். பார் இடந்து எடித்தமா அனைய பாழியாய் - புவியைத்தோண்டி யெடுத்த வராகாவதாரப்பெருமானேயொத்த பெருமையுடையாய், இதுபாரிடமே - இது பூதமே, பரவைசுற்றுறும் - கடல்சூழ்ந்த, பாரிடம் அரிது எனப்பரந்த மெய்யது - புவியிடமில்லையென்று சொல்லும்படி பரந்ததேகமுடையது, இடம் வலம் வரப்பரந்த கையது - உலகமுழுது மிடம் வலம் வரவீண்ட கைகளே யுடையது, பார் - பாராய். எ-று. (உகூ)

இலையபெருமான்பிராட்டிக்குச்சொல்லியது.

கூஅ. தணிக்குந்தன்மைத்தன்றெனில்லன்றித்தகைவாளால்
கணிக்குந்தன்மைத்தல்லவிடத்தின்கனல்பூதம்
பிணிக்குங்கையும்பெய்பிலவாயும்பிழையாமல்
அணிக்கும்வண்ணங்காணுதிதன்பந்துறவென்றான். (கூடு)

இ-ள். இத்தகை வாளால் - தகைமையுடைய இவ்வாளால் தணிக்கும் தன்மைத்து அன்று எனில் அன்று - நீக்குந்தன்மையுடையதன்றெனிலன்று, (நீக்குந்தன்மைத்தே) கணிக்கும் தன்மைத்து அல்ல - ஆராயுந் தன்மைத்தல்ல, விடத்தின் கனல் பூதம் - விடத்தைப்போல வெம்புகின்ற பூதத்தின்,

கவந்தன்றுதி.

கூக. மூலமேயில்லாமுதல்வனேநீமுயலும்
சோலமேயார்க்குந்தெரிவரியகொள்கையால்
ஞாலமோவாலினடையோவடைகிடந்த
பாலனேவாதிப்பரனேபகராயே. (சஎ)

கoo. ஆதிப்பிரமனும்சீரார்திப்பரமனும்நீ
ஓதியுபொருளுக்கப்பாலுண்டாகிலும்நீ
சோதிச்சுடர்ப்பிழம்பும்நீயென்றுசொல்லுகின்ற
வேதம்முறைசெய்தால்வெள்காரோவேறுள்ளார். (சுஎ)

கஅ. * எண்டிசையுந்தின்சுவராயேழ்கிலவகுத்த
அண்டப்பெருங்கோயிற்கெல்லாமழகுடைய
மண்டலங்கள்மூன்றின்மேலென்றும்மலராத
புண்டரிகமொட்டின்பொருட்டேபுரையம்மா. (கசு)

மூன்றுவது. ஆரணியகாண்டம்

முற்றிற்று.

காண்டம் மூன்றுக்கு ஆதிருவிருத்தம்-நிச்சு.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளேசரணம்.

சூர்ப்பநகையைச்சொல்லியது.

கூ0. நீத்தமும்பரவையும்குறுகநெஞ்சிடை
கோத்தவன்புணர்விடைக்குளிப்பமிக்கொள
ஏத்தவம்புரியவொன்றீலான்பொருள்
காத்தவன்புகழெனத்தேயுங்கற்பினள். (உசு)

இ-ள். நீத்தமும் பரவையும் குறுக - வெள்ளமுங்கடலுஞ் சிறிதென்று சொல்லும்படி, நெஞ்சு இடை கோத்த அன்பு-மனத்திற்பதிந்த ஆசை, உணர்வு இடைக்குளிப்ப - அறிவிலழுந்த, மீக்கொள-மேன்மைபெற, ஏத்தவம்புரிய ஒன்று ஈகலான்-எல்லாருந் துதிக்கின்ற தருமத்தைச்செய்ய ஒன்றுங்கொடாதவனுகி,பொருள் காத்தவன் புகழ் என - பொருளைக்காத்தவனது புகழைப்போல, தேயும் கற்பினள் - தேய்கின்ற கற்புடையாள் எ - று. (உசு)

இதவுமது.

கூக. பஞ்சிவெஞ்சுடர்விஞ்சுகுளிர்பல்லவமனுங்க
ளீஞ்செவியகஞ்சம்நிமிர்சீறடியளாகி
அஞ்சொலிளமஞ்ஞையெனவன்னமெனமின்னும்
வஞ்சியெனகஞ்சமெனவஞ்சமகள்வந்தாள். (கூக)

இ-ள். ஒளிர்விஞ்சு - சோதிமிகுகின்ற, பஞ்சி - செம்பஞ்சும், குளிர்பல்லவம் அனுங்க - குளிர்ந்த தளிர்களும் ஒப்பாகாமையால் வருந்த, (கூக)

இதவுமது.

கூஉ. பொன்னெழுதுபூவினுறைபூவையெழில்பூவை
பின்னெழில்கொள்வாளிணைபிறழ்ந்தொளிர்முகத்தாள்
கன்னியெழில்கொண்டகலைத்தடமணித்தேர்
மின்னிழிவதன்மையிதுவிண்ணிழிவதென்ன. (கூஉ)

இ-ள். பொன் ஒழுகுபூவின் உறை பூவை எழில் - அழகு ஒழுகுஞ் செந்தாமரைமலரிலுறைகின்ற இலக்குமியினழகு, பூவை பின் எழில் - சூர்ப்பநகையினது பின்னழகாகும், கொள் இணைவாள் பிறழ்ந்து ஒளிர்முகத்தாள்-கைக்கொள்ளுமிரண்டு கத்திகள் பிறழ்ந்து விளங்குகின்ற முகத்தையுடையாள், மின்-மின்னல், கன்னி எழில்-பெண்ணழகையும், கலைத்தடம் மணித்தேர் - மேகலையணிந்த விசாலித்த அழகுடைய தேரையும், கொண்டது - பெற்றதாகி, இழிவது அன்மை - புவியில் வருவ

தில்லை, இது - இம்மின்னல், விண் இழிவது என்ன - அவ்வாறு ஆகாயத்தினின்று வருவதென்று சொல்லும்படி எ-று. (கூ2)

இணை வாள் - கண்கள், தேர் - அல்குல்,

சகூ. விண்ணிடையிம்பர்நாகர்விரிஞ்சனேமுதலோர்க்கெல்லாம்
கண்ணிடையொளியின்பாங்கர்கடிகமழ்சாலினின்றும்
பெண்ணிடையரசிதேவர்பெற்றநல்வரத்தால்பின்னர்
மண்ணிடைமணியின்வந்தவஞ்சியேபோல்வாள்வந்தாள். (கூ1)

இ-ள். விண்ணிடை விரிஞ்சன் - வானத்திலுள்ளபிரமன், இம்பர் நாகர் - மனிதர் நாகர், முதலோர்க்கெல்லாம் - முதலாயினோர்க்கெல்லாம், கண்ணிடை ஒளியின்பாங்கர் - கண்ணிலுள்ள சோதியாகிய ஸ்ரீராமபிரான் பக்கலில், கடிகமழ்சாலினின்றும் - வாசம் வீசுகின்ற பன்னசாலையினின்றும், தேவர்பெற்றநல்வரத்தால் - தேவர்கள் பெற்ற நல்ல வரத்தால், பின்னர் மண்ணிடை மணியின்வந்த - கடலிற் றோன்றிய பின்பு மண்ணில் வித்தியரத்நவிளையால்முளைத்த, வஞ்சியேபோல்வாள் - கொடியையொத்தவளாகிய, பெண்ணிடை அரசி - பெண்ணரசி, வந்தாள் - வந்தாள். எ-று. (கூ1)

சக. ஆர்த்தானேக்கரசந்தியமரர்கணத்தெதிரெடுத்த
போர்த்தானேயிந்திரனைப்பொருதவனைப்போர்தலைத்த
வேர்த்தானையுயிர்கொண்டுமீண்டானைவெரிந்பண்டு
பார்த்தானேயரன்பட்டபழிவந்தபாராயோ. (கூ2)

இ-ள். ஆர்த்து ஆனைக்கு அரசு உந்தி - ஒலித்து ஐராவதத்தைச் செலுத்தி, அமரர்கணத்தொடும் அடர்ந்த - தேவகூட்டத்தோடும் போர்செய்த, போர்த்தானை இந்திரனைப்பொருது - வலியசேனையுடைய இந்திரனைப்பொருது, அவனைப் போர்தொலைத்து - அவனையுத்தத்தில் வெருட்டி, வேர்த்தானை உயிர்கொண்டு மீண்டானை - வேர்த்தவனுகிய உயிர்கொண்டோடிய அவ்விந்திரனது, வெரிந்பண்டு பார்த்தானே - முதுகை முன்பு பார்த்தோனே, யான்பட்ட பழிவந்து பாராயோ - யான் பட்ட பழியைவந்து காணுயோ, எ-று. (கூ2)

சகூ. மானேயும்நெடுங்கானில்மறைந்துறையுந்தாபதர்கள்
உரனேயோவடலரக்கரோய்வேயோவுற்றெதிர்ந்தார்
அரனேயோவயனேயோவரியேயோவெனுமாற்றல்
கரனேயோயான்பட்டசையறவுகாணுயோ. (கூ3)

இ-ள். உற்று எதிர்ந்தார் - எதிர்வந்து பொருதோர், அரனேயோ - இவன் உருத்திரனே, அயனேயோ - பிரமனே, அரியேயோ - திருமாலோ, என்னும் ஆற்றல் கரனேயோ - என்றையப்பட்டுச் சொல்லுகின்ற வலியுடைய கரனே, மான் ஏயும் நெடுங்கானில் - மரங்கள் பொருந்திய நெடியகாட்டில், மறைந்து உறையும் தாபதர்கள் உரனேயோ - மறைந்து வதியுந் தபசிகளது வலியையும், அடல் அரக்கர் ஒய்வேயோ - வெற்றி பொருந்திய அரக்கரது ஒய்வையும், யான் பட்டசையறவு - யான்பட்டதுன்பத்தையும், காணுயோ - நீவந்து பாராயோ எ-று. (கூ3)

சஎ. தேட்டந்தான்வாளெயிற்றில்தின்னவோதீவினையோர்
கூட்டந்தான்புறத்துளதோகுறித்தபொருளறிந்திலமால்
காட்டந்தானெரியுமிழுநல்லாள்மேல்பொல்லாதாள்
ஓட்டந்தாளரிதினிவஞ்சனென்றெழுந்தாளெனவுரைத்தான். (கூ4)

இ-ள். தேட்டந்தான் - தேடிவந்தது தான், ஓட்டந்தாள் - ஓடிவந்தாள். (கூ4)

சஏ. ஏற்றவளேவரிசிலையோனியம்பாமுனிகலரக்கி
சேற்றவளேதன்கணவனருகிருப்பினந்திருகி
சூற்றவளேநீருழக்குந்துறைசெழுநீர்வளநாடா
மாற்றவளேக்கண்டக்காலழலாதோமனமென்றாள். (கூ5)

இ-ள். ஏற்றவளே வரிசிலையோன் இயம்பாமுன் - நாணேற்றியவளைந்த வில்லுடைய இலக்குமணன் சொல்லாமுன்னம், இகல் அரக்கி - வலியுடைய சூர்ப்பநகை, சேல்-ஒருபெண்கயல், தவளே தன் கணவன் அருகு இருப்ப - தவளையின் கணவனுக்கு அணித்திருக்க, சூல் தவளை - கருப்பமுடைய அப்பெண் தவளை, சினம் திருகி - கோபங்கொண்டு, நீர் உழக்கும் துறைசெழும் நீர்வள நாடா - புனலிக்கலக்குந் துறைகளையுடைய நீர்வளம் பொருந்திய நாடுடையாய், மாற்றவளைக் கண்டக்கால் மனம் அழலாதோ என்றாள் - சகனத்தியைப்பார்த்தால் எனதுமனங் கொதிக்காதோ வென்றாள். எ-று. (கூ5)

சஅ. போச்சினீசொன்னுசிபோய்த்தென்னீர்பொறுக்குவிரோல்
ஆக்குவெனோதொடிவரையிலழகைமெனருள்கூறும்
பாக்கியமுண்டெனினதனுல்பெண்மைக்கோர்பழுதண்டோ
மேக்குயருகெடுமுக்கும்மடந்தையர்க்குமிகையன்றே. (கூ6)

இ-ள். என்நாசி போக்கினீர் - எனது மூக்கை யரிந்தீர், போய்த்து என் - அதனால்போயதென்னை, (கஉக)

எக. உளங்கோட லுனையிழைத்தா ளுளளொருத்தி யென்னுதியேல் நிருத ரோடும், களங்கோடற்குரியசெருக்கண்ணியக்காலொருமூவேம்கலந்த காலே, குளக்கோடுமென்றிதவுமுகோளேயென்றணரும் குறிக்கோ ளில்லா, இளங்கோவோ டெனையிருத்தி லிருகோளும் சிறைவைத்தாற கினையே னென்றாள். (கஉக)

இ-ள். உனை உளம்கோடல் இழைத்தாள் ஒருத்தி உளள் என்னுதியேல் - என்னைக்கூடாம் வுன்னை யுள்ளங்கோணலைச் செய்தவ ளொருத்தி யிருக்கின்ற ளென்பாயேல், நிருதரோ டும் - நிராக்கதரோடும், களம்கோடற்கு உரிய செருக்கண்ணி யக்கால் - யுத்தகளத்தை அடைவதற்குரிய போர் நேர்ந்தால், ஒரு மூவேம் கலந்தகாலை - நாம் மூவருங் கூடியபோது, குளம் கோடும் - குளம்பறித்துவிடுவோம், என்றிதவும் உறுகோளை என்று உணரும்-என்று சொல்லப்படுகின்ற தூதரும் யாமடை யத்தகுந்தமை யென்றறியும், குறிக்கோள் இல்லா-கருமமுடிக் குங் குணமில்லாத, இளங்கோவோடு எனை இருத்தில்-இலக்கு மணனெடு என்னை வாழச்செய்யின், இருகோளும் சிறைவைத் தாற்கு இனையேன் என்றாள் - சந்திர சூரியரென்று மிருகோ ளையுஞ் சிறைப்படுத்திய இராவணனுக்கு வலிகுறையமாட்டே னென்றாள். எ-று. ()

சூ - வது. கரன்வதைப்படலம்.

ருக. இருந்தமாக்கரன்தாளிணையின்மிசை
சொரிந்தசோரியள்கூந்தலள்தூம்பென
தெரிந்தமூக்கினள்வாயினள்செக்கர்மேல்
விரிந்தமேகமெனவிழுந்தாளரோ. (க)

இ-ள். தூம்பு என தெரிந்த மூக்கினள் - சலதாரையைப் போலத் தெரிந்த மூக்குடையாள், வாயினள் - வாயுடையாள், மேல்செக்கர் விரிந்த மேகம் என விழுந்தாள்-மேலே செவ்வா னம்படர்ந்த மேகம்போல விழுந்தாள். (க)

ருக. கேட்டனலுரைகண்டிலன்கேடினர்
தோட்டதுங்கில்துலையுறமூக்கினை
காட்டெனவெழுந்தானெதிர்கண்டவர்
காட்டந்தியவுலகைநடுக்குவான். (அ)

இ-ள். உரைகேட்டனன் - சொல்லைக்கேட்டான், கேடினர் தோட்டதுங்கில் - சீவுகின்றவர் தோண்டிய துங்கையொத்த, தொனை உறு மூக்கினை - தொனையுடைய மூக்கை, கண்டிலன்-பார்த்திலன், காட்டு எனஎழுந்தான் - அவரைக் காட்டென்று எழுந்தான். (அ)

ருஉ. மருப்பிறுமதகளிற்றமர்மன்னனும்
விருப்புறுமுகத்தெதிர்விழிக்கில்வெங்கிமிம்
உருப்பொறுவலியுமுலகமூன்றினும்
செருப்பெறுத்தினவுறுகரத்தோளினார். (சச)

இ-ள். உருப்பொறு வலி உறும் உலகம் மூன்றினும்- அரக் கரது உடற்பொறையைப் பொறுக்காமல் துன்புறுகின்ற உலக மூன்றினும், மருப்பு இறு மதகளிற்று அமர் மன்னனும் - தந்தம் முறிந்த மதயானைமேல் வருகின்ற அரசனும், விருப்பு உறு முகத்து எதிர் விழிக்கில் வெங்கிமிம் - விருப்பமுற்ற முகத்தை எதிரில் விழிக்கில் வெங்கிமிம், செருப்பு எறுத்தின உறுகரத்தோளினார் - போர்த்தொழிலை விரும்பிய பெரிய கைகளையுடைய தோள்களையுடையார், உரு பொறு வலியும் உலகம் மூன்றினும் - வடிவைத் தாங்கும் வலியையுடைய உலகம் மூன்றினும். (சச)

ருஎ. வந்தசேனைவெள்ளம்வள்ளியோன்மருங்குமாய
பந்தமாவினையைமாளப்பற்றறபெற்றியோர்க்கும்
உந்தருகிலியதாகிவுடனுறைந்துயிர்கள்தம்மை
அந்தகர்க்களிக்குநோய்போலரக்கிமுனுகவம்மா. (சஎ)

இ-ள். மாயபந்தமா வினையை மாள - மாயம் பொருந்திய கட்டாகிய பெரிய வினைகளை மாய்க்க, பற்று அறுபெற்றியோர்க் கும் - அகப்பற்றுப் புறப்பற்றற்ற பெரியோர்க்கும், உந்தஅரும் நிலையதாகி - நீக்க அரிய நிலையுடைத்தாகி, உடன் உறைந்து உயிர்கள் தம்மை-உடனுறைந்து உயிர்களை, அந்தகர்க்கு அளிக் கும் நோய்போல் - நமனுரிடஞ் சேர்க்கும் நோயைப்போல, சேனைவெள்ளம் - சேனைக்கடல், அரக்கிமுன்னுக- சூர்ப்பநகை யை முன்னிட்டு, வள்ளியோன் மருங்குவந்தது - ஸ்ரீராமபிரா னுக்கு முன்புவந்தது. (சஎ)

ருஅ. மால்பொத்தினமறவோருடல்மழைபொத்தினவழிசெம்
பால்பொத்தினநதியிற்கிளர்படிபொத்தினபடர்வான்
மேல்பொத்தினகுமுவிண்ணவர்விழிபொத்தினர்விரைவெங்
கால்பொத்தினர்நமன்னுவர்கடிதற்றுயிர்கவர்வார். (உ00)

இ-ள். மால்பொத்தின-மயக்கம் நிரம்பிய, மறவோர் உட்ல் மழை பொத்தினவழி - வீரரது உடலிற் சரமழை பொத்திய வழியை, செம்பால் பொத்தின - அரத்தங்கள் மூடினவாய், நதியில் நிளர்படிபொத்தின-நதிபோல நிறைந்து புவியை மறைத்தன, படர்வான்மேல் பொத்தின குழுவிண்ணவர் - அகன்ற ஆகாயத்தின்மேல் நிறைந்த கூட்டமாகிய தேவர்கள், விழிபொத்தினர் - கண்களை மூடினர்கள், நமன் தூதுவர் கடிது உற்று உயிர் கவர்வார் - யமன் தூதுவர் விரைவிற்சார்ந்து உயிர்களைப் பிடித்து, விரைவெம்கால்பொத்தினர் - விரைந்தோடும் வெவ்விய தமது கால்களை வலிதீங்கப் பிடித்தனர். எ-று. (கஅ0)

ருரு. தலைசிந்தினவிழிசிந்தினதழல்சிந்தினதரைமேல்
மலைசிந்தினபடிசிந்தினவரிசிந்தரம்மழைபோல்
சிலைசிந்தினகணைசிந்தினதிசைசிந்தினநிசையோ
டலைசிந்தினபொறிசிந்தினவுயிர்சிந்தினவுடலம். (கஅ2)

இ-ள். தலைசிந்தின - அக்கரது தலைகள் சிந்தின, விழிசிந்தின - கண்கள் சிதறின, தழல் சிந்தின-அக்கண்களின்று அக்கினிகள் சிதறின, தரைமேல் மலைசிந்தினபடி - புவிமேல் மலைகள் சிதறியபடி, வரிசிந்துரம் சிந்தின - கல்லணை கட்டிய யானைகள் சிதறின, மழைபோல் சிலைசிந்தின கணைசிந்தின-மேகம்போல வில்லுகள் சிந்திய அம்புகள் சொரிந்தன, திசைசிந்தின-திசைகளிடிந்து சிதறின, திசையோடு உலைசிந்தின பொறி சிந்தின-அத்திசைகளோடு கொல்லுலையிற் சிதறினபோல அக்கினிப்பொறிகள் சிதறின, உடலம் உயிர்சிந்தின - உடல்கள் உயிரைநீக்கின. எ-று. (கஅ2)

ருசு. அற்றனசிரமெனவறிதல்தேற்றலர்
கொற்றவெஞ்சிலைச்சரம்கோச்துவாங்குவார்
இற்றவரிருதலைமொழ்தவிண்ணினைப்
பற்றினமழையெனப்படைவழங்குவார். (கக0)

இ-ள். சிரம் இற்றவர் - தலைகளற்றுப்பட்டவர், அற்றன என அறிதல் தேற்றலர் - அவையறுபட்டன வென்றறியாது, சரம் கோத்து - வாளிகளைப்பூட்டி, கொற்றவெம் சிலை - வெற்றி பொருந்திய வெவ்விய வில்லை; வாங்குவார்-வளைப்பார், இருதலைமொழ்

ந்து-தலைகளறுபடாதவரொழுந்து, விண்ணினைப் பற்றின மழை என - ஆகாயத்தைப் பற்றிய மேகம் காரைகளை வழங்குதல் போல, படை வழங்குவார் - ஆயுதங்களை வழங்குவார். (கக0)

ருள. ஏற்றியதூதலினெரிருண்டகார்மழை
தோற்றியவில்லொடுந்தொடரமீமிசை
காற்றிடையழிந்தெனக்கார்முகத்தையும்
மாற்றரும்பசுழிபாலறத்துமாற்றினான். (கக2)

இ-ள். காற்றிடை அழிந்து என - காற்றால் மேக மழிந்காற்போல, (கக2)

ருஅ. தருவியோடினவுயிர்நிலைசுடுசரந்தரந்த
கருவியோடினகச்சையுங்கவசமுங்கழல
அருவியோடினவெனவழிருருதியாறெழுக
உருவியோடினகேடகத்தட்டொடுமுடலம். (கஉ0)

இ-ள். தூரந்தசுடுசரம் ஸ்ரீராகவபிரான்விட்டசுடுகின்றவம்புகள், உயிர்நிலை தருவி ஓடின - அரக்கர துயிர்நிலையை தூளாக்துசெல்லின, கச்சையும் கவசமும் கழல - கச்சையுங் கவசமுங்கழன்று நீங்க, அருவி ஓடின என - அருவியாறு ஓடினாற் போல், அழிருருதி ஆறு ஒழுக - அழிந்த இரத்தவாறுசெல்ல, கேடகத் தட்டு ஓடும் உடலம் - கேடகத்தட்டோடுமுடலு, கருவி - படைகள், உருவி ஓடின - தூளாத்தோடி, ஓடின-போயின. எ-று. (கஉ0)

ருக. தூரவட்டவெண்டிசைகளைத்தனித்தனிசுமக்கும்
பாரவெட்டிலேடிரண்டினிலொன்றுபார்புரக்க
பேரவிட்டவனுதலனியோடையிற்பிறழும்
வீரபட்டிகைபட்டனவிண்ணவர்வெருவ. (கஉக)

இ-ள். தூரவட்டம் எண்திசைகளை - தூரத்திலுள்ள வட்டமாகிய எட்டுத்திசைகளையும், தனித்தனி சுமக்கும் - தனித்தனியே தாங்கும், பாரம் எட்டிலோடு இரண்டினில் ஒன்று-பெரியவெட்டு யானைகளோடு சக்கிரம் ஆதிசேடன் என்னு மிரண்டில் பாதாழ்வாலுமிய திருவாழிலைய, பார்புரக்க பேரவிட்டவன்-புவியைக்காக்கத் தன்னினின்றும் நீங்கவிட்ட ஸ்ரீராமபிரானது, தூதல் அணி ஓடையில் - நெற்றியிலணிந்த பட்டம்போல, பிற

மூம் வீரபட்டிகை - விளங்கும் வீரபட்டிகையில், விண்ணவர் வெருவ - தேவர்களுமஞ்ச, பட்டன - ஆம்புகள் தைத்தன. எ - று. (கூகூ)

எ-வது. மாரீசன்வதைப்படலம்.

மானுகிவந்த மாரீசனைக்கொன்றதை யுணர்த்துகின்றபடலம்.

இராவணன் வீறழிருத்தலைச்சொல்லியது.

சுஉ. நிலையிலாவுலகினிடைநிற்பனவும்நடப்பனவுமெறியினீங்கத்
மலரின்மேல்நான்முகற்கும்வகுப்பரிதுதுணிப்பதொருவரம்பிலாற்றல்
உலகிலாவகைபழுத்தருமமெனுமினைந்தவெலாமுதவுத்தச்சன் [ஞே
புலனெலாந்தெரிப்பதொருபூமணிமண்டபமதனில்பொலியமன்

இ - ள். மலரின்மேல் நான்முகற்கும்-தாமரைமலரில் வீற்றிருக்கின்ற பிரமனுக்கும், வகுப்ப அரிது துணிப்பது ஒரு வம்பு இல் ஆற்றல் - செய்ய வரிதாகிய மதிக்கத்தக்க ஒப்பற்ற அறிவால், உலகு இலாவகை உழந்த தருமம் என - அழிவில்லாதபடி வருந்திச் செய்த தருமத்தைப்போல, நினைந்த எல்லாம் உதவும் தச்சன் - நினைந்தவற்றையெல்லாங் கொடுக்கின்ற மயனுடைய, புலன் எலாம் தெரிப்பது ஒரு - புத்திவிசேடங்களையெல்லாங் காட்டுவதாகிய ஒரு, பூமணி மண்டபம் அதனில் பொலிய-அலங்கரித்த ரத்நகசிதமான மண்டபத்தில் வீற்றிருந்து விளங்க. எ-று. (உ)

சுக. பண்டலங்கல்திசைக்களிற்றின் பணைமருப்பினிணையொடியப் படர்ந்த
பொற்றோள், விண்டலங்களுற வீங்கி யோங்குதயமால்வரையின்விளங்கமீதில், குண்டலங்கள் குலவரையை வலம்வருவானிரவிகொழுங்கதிர்சூழ்கற்றை, மண்டலங்கள் பன்னிரண்டும் சாலித்தாய் பொலிந்த
வெனவயங்கமன்னே. (க)

இ - ள்.. பண்டு அலங்கல்திசைக்களிற்றின் - முன்னம் அசைதலுடைய திசையானைகளினது, பணைமருப்பின் இணை ஒடிய-பருத்தகொம்புகளிரண்டையுமுடிய, படர்ந்த பொன்தோள்-

அகன்ற அழகிய தோள்கள், விண்தலங்கள் உறவீங்கி - ஆகாயமளாவப்பருத்து, ஓங்குமால் உதயவரையின் விளங்க-உயர்ந்த பெருமைபொருந்திய உதயகிரியைப்போல விளங்க, குலவரையை வலம் வருவான் - மேருகிரியைச் சுற்றிவருகின்ற, கற்றை-கூட்டமாக, சூழ் - சூழ்ந்த, சொழும் - கொழுமையான, கதிர்-ஒளிகளையுடைய, இரவி மண்டலங்கள் பன்னிரண்டும் - சூரிய மண்டலங்கள் பன்னிரண்டும், சாலி ஐந்தாய் பொலிந்த என - இருபதாய்ப் பொலிந்தாற் போல, மீதில் - அத்தோள்களின் மேல், குண்டலங்கள் - காதிலணிந்த குண்டலங்கள், வயங்க - விளங்க. எ-று. (ஈ)

சுஉ. புவியினதலுடையானும்பொன்னுடைபுனைந்தானும்பூவினானும்
கலியும்வலத்தாரல்லர்தேவரினிங்கியாவரினிராட்டலாவார் [தார்
மெலியுமிடைதடிக்கும்முகிலேயெளிற்றோட்சேயரிக்கண்வெண்மிரா
வலியெடும்புவியினும்வணங்காதமகுடநிரையயங்கமன்னே. ()

இ-ள். நலியும் வலத்தார் அல்லர் - இராவணனை வருத்தும் பலமுடையரல்லர். (எனின்) இனி இங்கு நாட்டல் ஆவார் தேவரில்லையாவர் - இனி இங்கு சொல்லுதற் குரியார் தேவரில்லையாவர், (சு)

சுகூ. வாளுலாம் முழுமணிகள் வயங்கொளியின் தொகைவழங்கவயிரக்குன்றந், தோளெலாம் படி சுமந்தவிட ஆவின் படநிரையில் தோன்றவூன்ற, நாளெலாம் புடைதயங்க நாமநீர் இலங்கையில்தான் வாரினிட்ட, கோளெலாம் கிடந்தெடுஞ்சிறை அன்னசிறை ஓரம்குலவமன்னே. (டு)

இ-ள். ஆன்றநாள் எல்லாம் புடைதயங்க-வானிலமைந்த நக்ஷத்திரங்களெல்லாம் விளங்க, (ஙு)

சுசு. சேணுயர்நெறிமுறைதிறம்பலின்றியே
பாணிகள்பணிசெயப்பழுதில்பண்ணிடை
வீணையினரம்பிடைவிளைத்ததேமறை
வாணியினுதன்செவியின்வார்க்கவே. (கூ)

இ-ள். சேண் உயர் நெறிமுறை திறம்பல் இன்றி – நெடுங்காலமாயுயர்ந்தவழியாகிய முறைதவிராமல், பழுது இல்பண் இடை - குற்றமில்லாத இசைப்பாட்டோடு, பாணிகள் பணி செய - கரங்கள் தாளங் கொட்ட, நாரதன்-நாரதமாமுனிவன்,

வீணையின் நரம்பு இடை விளைத்த தேம்மறை - வீணையினது நரம்பிலுண்டாக்கிய இனிமையாகிய வேதத்தை, வாணியின் - சரசுவதியைப்போல, செவியில் வார்க்க - செவியிற் பெய்ய. எ - று. (கஙு)

சுடு. சூலமேமுதலியதறந்தசுற்றிய
சேலையால்சிறியவாய்புதைத்துச்செங்கையின்
தோலுடைநெடும்பணைதுவைக்கும்தோறெலாம்
காலன்வந்திசைக்குராள்கடிக்கைகூறவே. (கச)

இ-ள் நாள் கடிகைகூற - நாளின்து நாழிகைகளைத் தெரிவிக்க, தோல் உடை நெடும்பணை துவைக்கும் தோறெலாம் - தோலைக்கட்டிய பெரியமுரசை முழக்கும்போதெல்லாம், காலன் - யமன், சூலமே முதலிய தூறந்து - சூலமுதலிய படைகளை ஏந்தி, சுற்றிய சேலையால் - சுற்றிய உத்தரியத்தோடு, செங்கையின் - செவந்த கைகளால், சிறியவாய்புதைத்து - சிறியவாயை மூடி, வந்து இசைக்கும் - வந்து செப்புவான். எ-று. (கள)

சுசு. ஊருவில்தோன்றியவுயிர்பெயோவியம்
காரினில்செருக்கியகலாபமஞ்ஞைபோல்
வார்சிலைக்கருவியோர்வகுத்தபாணியின்
காரியரூடம்நடிப்பநோக்கியே. (உஉ)

இ-ள். ஊருவில்தோன்றிய - பிரமனது தொடைகளிற் பிறந்த, காரியர் - மேனகைகள், உயிர்பெய் ஓவியம் - உயிரைப்பெய்த சித்திரங்களைப்போலவும், காரினில் செருக்கிய கலாபமஞ்ஞைபோல் - கார்காலத்திற் களிப்படைந்த தோகைகளையுடைய மயில்களைப்போலவும், வார்சிலைக்கருவியோர் வகுத்தபாணியின் - வாரால்கட்டப்பட்ட வாத்தியமுடையோர் வகுத்த தாளத்தோடு, அரும் நடம் நடிப்பநோக்கி - அரிய நடனமாடப் பார்த்து. எ - று. (உஉ)

குர்ப்பநகைமூக்கறையாகிவந்ததைப்பார்த்தஇராவணன்சொல்லியது.

சுஎ. சொற்பிறந்தார்க்கிதுணியவொண்ணுமே
இற்பிறந்தார்தமக்கிவைசெய்திலள்
கற்பிறந்தாளெனக்கரன்கொலாமிவள்
பொற்பிறந்தாக்கினன்புகன்றென்மூர்சிலர் (கூஉ)

இ-ள். சொல்பிறந்தார்க்கு இது துணிய ஒண்ணுமே - இன்னவென்று குறிப்பிட்டுச் சொல்லத்தகுந்தவர்க்கு இது செய்யக்கூடுமோ, (கூஉ)

சுஅ. நாந்தகவுழவரைநாட்டுந்தண்டத்தர்
காந்தியமனத்தினர்புலவிதைமிகச்
சேந்தகண்ணிதழுஞ்செவ்வாநீருக
வேந்தனுக்கியைவள்தாளில்வீழ்ந்தனர் (கூஅ)

இ-ள். நாந்தக உழவரை நாட்டும் தண்டத்தர் - வாள்வீரராகிய தமது கணவரை ஊடித்தண்டிப்பவர், (கூஅ)

இராவணன்சூர்ப்பநகையைவினவியது.

சுக. செய்தனர்கன்மானிடரெனத்திசையேத்தும்
எய்தருகைவத்தெரிந்தினகணெல்லாம்
செய்தவர்வலித்தொழில்துவன்றமொழியொன்றே
பொய்தவிர்பயத்தையொழிப்புகலென்முன். (கூச)

இ-ள். நொய்து அவர் வலித்தொழில் துவன்ற மொழி ஒன்றே - நொய்தாகிய அவரது வலித்தொழிலைச் சொல்லிய சொல் ஒன்றே, பொய்தவிர் பயத்தை ஒழிப்புக - பொய்யை நீக்கி மெய்யை விளைக்கும், என்முன் - என்னிடத்தில் (கூச)

சூர்ப்பநகைஇராவணனுக்குக்கூறியது.

எ0. வற்கலியர்வார்சுழலர்மார்பினணிநூலர்
விற்கலியர்வேதமுறைகரவார்நனிமெய்யர்
உற்கலியருன்னோர்துகள்த்தனியுமுன்னர்
சொற்கலியெனத்தொலிவில்தூணிகள்சுமந்தார். (கூடு)

இ-ள். உற்கு அலியர் - உனக்குத்தோலார், (கூச)

எக. ஆறுபுலனஞ்சினமரக்கரையெனச்சென்
றேறுநெறியத்தணரியம்பவுலகெல்லாம்
வேறுமெனுறங்களுலம்வேரொடுமெட்ட
கோறுமெனுமூக்கையொருசூளுறவுகொண்டார். (கூடு)

இ-ள். ஆறு புலன் - அடங்கிய இந்திரியங்களோடுடைய நாங்கள், அரக்கரை அஞ்சினம் - அரக்கரையஞ்சினேம், வேறும் - வெல்லுதும், கோறும் - கொல்லுதும்,

"அச்சக்கிளவிக் கைத்து மிரண்டு-மெச்சமிலவே பொருள்வயின்" என்ப.

இராவணன்காமத்தால்வருந்தியதைக்கூறியது.

எஉ. நூக்கலாகலாதகாதல்நூறுநூறுகோடியாய்
பூக்கவாசவாடைவீசுசீதநீர்பொதிந்தமென்
சேக்கைவீகரிக்குதிக்கயங்களெட்டைவென்றதோள்
ஆக்கையியவுள்ளம்மையவாவிவேவதாயினன். (கo)

இ-ன். நூக்கல் ஆகலாத காதல்-நீக்குவதற்காகாத ஆசை, நூறு நூறுகோடியாய் பூக்க-நூறு நூறுகோடியா யுண்டாக, ()

எக. தாவியாதுதேனுதையலாலேமெய்யுறப்
பாவியாதபோதிலாதபாவிமாழைபானல்வேல்
காவியானகண்ணிமேனிகாணுமாசையால்
ஆவிசாலகொற்றமொந்தழுங்குவானுமாயினன். (கூ)

இ-ன். தாவியாது - நிலைபெறாது, தீது எனாது - தீதென்று நினைக்காது, தையலாலே-சீதாபிராட்டியை, மெய் உறப்பாவியாதபோது - உண்மையாயுற்று நினைக்காதபோது, (கூட)

இராவணன்சென்றசேலையைச்சொல்லியது.

எச. மாணிக்கம்பனசம்வாழைமரகதம்வயிரந்தேமா
ஆணிப்பொன்வேங்கைகோங்கமரவிந்தராகம்பூகம்
சேணுய்க்குநீலஞ்சாலஞ்குருவிந்தந்தென்னம்வெள்ளி
பாணித்தென்பனிங்குராகம்பாடலம்பவளம்மன்னோ. (கூசு)

இ-ள். பனசம் - பலாமரங்கள், மாணிக்கம் - மாணிக்கரத்நத்தைப் போல்வன, வாழை மாகதம்-வாழைகள்மாகதத்தைப் போல்வன, தேமாவயிரம்-மாமரங்கள்வயிரத்தைப்போல்வன, வேங்கை ஆணிப்பொன் - வேங்கை மரங்கள் ஆணிப்பொன்னை யொத்தன, கோங்கம் அரவிந்தராகம் - கோங்கமரங்கள் அரவிந்தராகத்தைப் போன்றன, பூகம் சேண் உய்க்கும் நீலம்-கழுகுகள் நெடுந்தூரம் கதிரைச் செலுத்தும் நீலத்தை யொத்தன, சாலம் குருவிந்தம் - ஆச்சாமரங்கள் குருவிந்தத்தைப் போன்றன, தென்னம்வெள்ளி - தெங்குகள் வெள்ளியைப்போன்றன, நாகம் பனிங்கு - புன்னாக மரங்கள் பனிங்கை யொத்தன, பாடலம் பவளம்-பாடல மரங்கள் பவளத்தைப் போன்றன, பாணித்து என்-இனி நீட்டித்துச் சொல்வதால்ப்யனென்னை. எ-து. ()

கள்ளிரவில்குரியோதயமான்காலிகிழக்குதலைக்கூறியது.

எடு. புனைந்திதழுரிஞ்சுறபொழுதுபுல்லியும்
வனைந்திலைகறைமலரும்மாமலர்
நனைந்தலையமளியில்துயிலுநங்கைமார்
அனைந்தினைடுங்கணெடுத்தவாமரோ. (கஉச)

இ-ள். புனைந்து இதழ் உரிஞ்சு உறு பொழுது புல்லியும்-சேர்ந்து இதழை வீரிக்குஞ் சூரியன் பொருந்தியும், வைகறை மலரும் மாமலர் - விடியற்காலத்தில் மலர்கின்ற பெருமைபொருந்திய் மலர்கள், நனைந்தலை அமளியில் - பன்னியின் மத்தியில், துயிலும் நங்கைமார் - தூங்குகின்ற பெண்களது, அனைந்தின் நெடும் கண் ஒடு ஒத்த ஆம்-மித்திரையுடைய நீண்டகண்களோடொத்தனவாகி, வனைந்திலை-காலம்பெறுமையால் மலர்ந்திலை. ()

எஙு. நஞ்சுறபிரிவினைகாவினீளமோர்
தஞ்சுறவிடுவதோர்தயாவுதாங்கலால்
வெஞ்சிறைநீங்கியவினையினாரென
நெஞ்சறக்களித்தனநேமிப்புள்ளெலாம். (கஉசு)

இ-ள். ஓர்நாளின் நீளம் - ஒருபகல் முழுதும், நஞ்சுற-இன்பமுண்டாக, நஞ்சு உறு பிரிவினை-விடம்போன்ற பிரிவை, விடுவதோர் தயாவு தாங்கலால் - விடுவதாகிய ஒப்பற்ற கருணையைப்பெறலால், நேமிப்புள் எல்லாம் - சக்கரவாளப் பறவைகளெல்லாம், வெம் சிறை நீங்கிய வினையினர் என - வெவ்விய சிறைச்சாலையினின்று நீங்கிய குற்றவாளிகளைப்போல, நெஞ்சு உறக்களித்தன - மனமதிகமுவக்தன. (கஉசு)

எஎ. ஆண்டப்பிறைநீங்கலுமெய்தியதந்தகாரம்
நீண்டற்கெளிதாய்ப்பலதேய்ப்பனதேய்க்கலாகி
வேண்டிற்கரபத்திரத்தீர்த்தவிழுத்தலாகிக்
காண்டற்கினிதாய்ப்பலகந்துநிரட்டலாகி. (கஉஅ)

இ-ள். ஆண்டு அப்பிறை நீங்கலும் - அப்போது அவ்விளஞ் சந்திரனேகலும், அந்தகாரம்-இருள், நீண்டற்கு எளிதாய்-காத்தால் தொடுவதற் கெளிதாகி, தேய்ப்பன பலதேய்க்கலாகி-தேய்ப்பனவாகிய பலவற்றையுந் தேய்க்கலாகி, வேண்டில் கரபத்திரத்து ஈர்த்து விழுத்தலாகி-வேண்டுமாயின் வாளால் அறுத்திரத்து ஈர்த்து விழுத்தலாகி-வேண்டுமாயின் வாளால் அறு

க்கு விழுத்தலாகி, காண்டற்கு இனிதாய்ப்பலகாலும் திரட்டலாகி - பார்த்தலுக் கினிதாய் பலதூண்கள் திரட்டலாகி, எய்தியது - வந்தது. எ-று. (கஉஅ)

எஅ. முருகார்ந்தருட்டங்கெளிதென்பதெனமுற்றமுற்றிப்
பொருகாங்கில்கேள்விச்சுடர்புக்குவழங்கலின்றிக்
குருகாங்கெனக்குறிக்கொண்டுகண்ணோட்டங்குன்றி
அருகார்ந்தநெஞ்சிற்கரிதென்பதவ்வந்தகாரம். (கஉக)

இ-ள். அவ் அந்தகாரம் - அல்விருளை, முருகு நீர்ந்து உருட்டற்கு எளிது என்பது என் - முடக்கத்தை நீக்கி யுருட்டற் கெளிதென்று சொல்வதென்னை, மும்மை மும்மி - முழுதுமுற்றப்பெற்று, நீங்கு இல் - கெடுதலில்லாத, பொருள் கேள்விச் சுடர் - பொருட் கேள்வியாகியவொளி, புக்குவழங்கல் இன்றி - புகுந்து விளக்குதலின்றி, எங்கு குருடு இது என்னக்குறிக் கொண்டு - எங்கு கண்ணில்லாத குருடு இது வென்று சொல்லும்படியான குறியைக்கொண்டு, கண்ணோட்டம் குன்றி - கண்ணோட்டமின்றி, அருள் நீர்ந்த நெஞ்சில் கரிது என்பது - அருள் நீங்கிய மனத்தில் மதிக்கங்காரிதென்று சொல்லத்தகுந்தது. எ-று.

எக. காந்தமுதின்றவிகால்வனகாலமீனின்
வேந்தன்னெளியனறியுமேலொடுமேழ்மிரித்தான்
பூந்தென்றல்புகுந்துலறசாளரமும்புனைந்தான்
ஏந்தும்மணிக்கற்பகச்சிதளக்காவிழைத்தான். (கஉஎ)

இ-ள். காலம் மீனின்வேந்தன் ஒளி அவற்றியும் - நாழிகையைத் தெரிவிக்கின்ற நக்ஷத்திரங்களின் கணவனுகிய சந்திரனொளியல்லாமலும், அழுதின் துளிகால்வன - அழுதின் துளிதலோச்சொரிவனவாகிய, காந்தம் - சந்திரகாந்தக்கற்களை, மேலொடு மீழ்விரித்தான் - மேலொடு கீழிடத்திலும் பரப்பி, (கஉஎ)

அ0. உண்டாகியகேடுடையார்தூயில்வாய்
எண்டாளுமியைந்திபையாவுருவம்
கண்டாரெனலாம்வகைகண்டனளால்
பண்டாருமுருவிடர்பாடிறுவாள். (உ0ஐ)

இ-ள். பண்டு ஆரும் உரு இடர் பாடுறுவாள் - முன்னம் யாரும்படையாத துன்பத்தை யடைவாளாகிய சானகிதேரட்டி,

உண்டாகிய கேடு உடையார் - தீவினையர் உண்டாகிய கேடுடையார், எண்தானும் இயைந்து இயையா உருவம் - விழித்திருக்கையில் மனத்தில் நினைந்து பொருத்தாத வுருவத்தை, துயில்வரய்-கனவில், கண்டார் எனல் ஆம் வகைகண்டனள் - பார்த்தாரென்று சொல்லலாம் வகை அம்மானைபார்த்தாள். எ-று. (உகஐ)

அ. காணுவிதுகைதவமென்றனரான்
பேணுதகலம்கொடுபேணினளால்
வாணுனையிராவணன்மாளுதலால்
வீணுனினறம்புவிமேவுதலால். (உகசு)

இ-ள். இராவணன் வாழ்நாளை மாளுதலால் - இராவணன் ஆயுளைப்போக்கலாலும், வீண் நாளின் புவி அறம் மேவுதலால் - வீணுளின்றி பூமி தருமத்தைப் பொருந்தலாலும், (உகசு)

ஸ்ரீராமபிரான் இளையபெருமாளுக்குச்சொல்லியது.

அனனனென்னறநினைத்திழைத்தளகம்
கனனங்களின்வேறளகாணுதமால்
பொன்னின்னெளிமேனிபொருந்தியவேழ்
அனனங்களிறந்ததறிந்திலீரோ. (உஉக)

இ-ள். நம் கன்னங்களின் வேறளகாணுதும் - நமது காதுகளால் வேறுள்ளவற்றைக் கேட்குதும், எழுன்னங்களின் கதையை மகாபாரதம் வல்லார்வாயுணர்க. (உஉஈ)

அஈ. முறையும்முடிவும்மிலைமொய்யுயிரென்
றிறைவன்னினையாவெடியம்பினனுல்
பறையுந்துணையன்னதபல்நெறிபோய்
மறையும்மெனவேழைவருந்தினளால். (உஉச)

இ-ள். பறையும் துணை அன்னது - வார்த்தை சொல்லுமளவுக்குள் அம்மான்,

இளையபெருமாள் ஸ்ரீராமபிரானுக்குக்கூறியது.

அச. பின்னின்றுரியையரென்றுமுணர்கிலம்பிடித்தமாயம்
என்னென்றறந்தெளிதல்தேற்றும்பாவதிதென்றுமோராம்
முன்னின்றுர்முறையினின்றுர்முனிந்தளவேட்டைமுற்றல்
பொன்னின்றவயிரத்தோளாய்புகுமுடைத்தாமன்றென்றான். ()

இ-ள். முறையில் நின்றூர் - ஒழுக்கத்தில் நின்றவராகியும், முன்நின்றூர் - முதன்மையோர், முனிந்து உளவேட்டை முற்றல் - வெறுத்து நீக்கியுள்ள வேட்டையைச் செய்தல், (உகூ)

அ-வது. சடாயுவதைப்படலம்.

இராவணன் சடாயுவைக்கொன்றதைச் சொல்லுகின்றபடலம்.

சக்கியரதிவேடங்கொண்டஇராவணனைச்சொல்லியது.

அரு. ஊணிலவுமெனவுலர்ந்தமேனியன்
சேணைநிவந்ததோர்வருத்தச்செய்கையன்
பாணியினடத்திடைப்படிக்கின்றுனை
வீணியினிசைபடவேதம்பாடுவான். (உக)

இ-ள். பாணியின் - பரட்டினை, நடத்திடைப் படிக்கின்றுன்னை - நடனத்திற் படிக்கின்றவனைப்போல,

அசு. சேயிழையனனசொல்வதற்கியவற்சேர்தல்செய்தார்
ஆயவரல்லச்சொல்லிற்றெனனெறிதொடர்ந்தோன்றுள்
மாயவல்லரக்கர்வல்லவேண்டிருவரிக்கவென்ப
தாயவளறிதல்தேற்றுளாதகினையலொன்றெண்ணுன். (உச)

இ-ள். தொல் நெறி தொடர்ந்தோர் - பழமையாகிய மார்க்கத்தை அனுட்டித்தவரே,

இராவணன்பிராட்டியைநோக்கிக்கூறியது.

அள. மேருவைப்பறிக்கவேண்டில்விண்ணினைஇடிக்கவேண்டில்
நீரினைக்கலக்கவேண்டில்நெருப்பினையவிக்கவேண்டில்
பாரினையெடுக்கவேண்டில்பலவினைச்சிலசொல்லேழாய்
யாரெனக்கருதிச்சொன்னுயிராவணற்கறிதென்னெனுன். (உஎ)

இ-ள். ஏழாய் - பெண்ணே, மேருவைப்பறிக்க வேண்டில்-மேருகிரியை பிடுங்கவிரும்பிலும், விண்ணினை இடிக்கவேண்டில்-ஆகாயத்தையிடிக்கவிரும்பிலும், நீரினைக்கலக்கவேண்டில்-கடலைக்கலக்க விரும்பிலும், நெருப்பினை அவிக்கவேண்டில்-வடவாமுகாக்கினியை யவிக்க விரும்பிலும், பாரினை யெடுக்கவேண்டில்-புவியை யெடுக்கவிரும்பிலும், பலவினைச்சிலசொல்-இவ்வகைப்பட்ட பல அரிய செயல்களிற் சிலவற்றைச் சொல, இராவணற்கு அரிது என் - இராவணனுக்கு அவற்றிலரிது யாது, யார் எனக் கருதிச்சொன்னுய் என்னுன் - யாரென்று நினைந்து சொன்னு யென்னுன். எ-று. (உஉ)

இராவணன்சடாயுவின்மேலெறிந்தவேலைக்குறித்துச்சொல்லியது.

அஅ. பொன்னேக்கியர்தம்புலனேக்கியபுன்கணேரும்
இன்னேக்கியரில்வழியெய்கியரல்லிருக்கும்
தன்னேக்கியநெஞ்சுடையோகியர்தன்மைசார்ந்த
மென்னேக்கியர்நோக்கமுமாமெனமீண்டதுவேல். (உக)

இ-ள். அவ்வேல் - அவ்வேலாயுதம், பொன் நோக்கியர் தம்புலன் நோக்கிய புன்கணேரும் - பொருளை விரும்பிய மகளிரது அழகை விரும்பியவழிஞரையும், இல்நோக்கியர் இல்வழி யெய்தல் நல்விருந்தும் - இல்லாள் முகத்தைப்பார்த்தவள் கருத்துப்படிநடப்பவரது மனைக்கண்செய்யும் நல்லவிருந்தினரையும், தன் நோக்கியநெஞ்சு உடையோகியர் தன்மைசார்ந்த-தன்னை நோக்கிய கணவனுடைய யோகியாதது தன்மையை விரும்பிய, மென்நோக்கியர் நோக்கமும் ஆம் என மீண்டது-மெல்லிய பார்வையுடையமகளிரது பார்வையுமாமென்று சொல்லும்படி மீண்டது. எ-று. (உக)

உ-ம். இல்லாளையஞ்சுவானஞ்சுமம் றெஞ்ஞான்று - நல்லார்க்குரல்ல செயல். எனவும், நட்டார் குறைமுடியார் நன்னூற்றூர் நன்னுதலாள் - பெட்டாங் கொழுகுபவர். எனவும் வரும்.

அக. களித்தனகளித்தமேனிதாமரைக்கெழுவுசெம்பூத்
தளித்தனவனையவென்னத்தளர்ளிசோர்வெள்ளக்கண்ணன்
குளித்தனன்கொண்டலாற்றுக்குளித்தபின்கொண்டனனீர்
அளித்தனனரக்கர்ச்செற்றதீற்றத்தானவலர்தீர்ந்தான். (உஉ)

இ-ள். களித்து அன்னமேனி-களிப்பினைப் பொன்னையொத்த நிறம்பொருந்திய, களித்த - தேனுடைய, தாமரைக்கெழுவு செம்பூ-தாமரைத்தண்டிற் பொருந்திய செந்தாமரைமலர், தளி

த்து அன அஃறிணை என்ன - துளித்தனவற்றை பொப்பாயின வென்று சொல்லும்படி, தன்னிசோர் வெள்ளக்கண்ணன் - நீர் த்துளி யொழுகுகின்ற வெள்ளம் பொருந்திய கண்ணுடையவ னாகிய ஸ்ரீராமபிரான், கொண்டல் ஆற்று - மேகம்போல நதி யில், குளித்தனன் - நீராடினன், (உஉகூ)

கூ-வது. அயோமுகிப்படலம்.

இளையபெருமான் அயோமுகியை மூக்கறுத்ததை யுணர்த்துகின்றபடலம்.

கூ0. உழந்தியோகத்தொருமுதல்கோபத்தால்
இழந்தமேனியுமெண்ணியிரங்கினன்
கெழுந்தகைக்கொருவன்மைகிடைக்குமேல்
பழந்தயர்க்குப்பரிவுதம்பான்மையால். (உசு)

இ - ள். கெழுந்தகைக்கு ஒருவன் வலிமை கிடைக்குமேல் - மூன்னஞ் சேர்ந்த தளர்வுக்குப் பின்பொருவலி கிடைக்குமா யின், பழந்தயர்க்குப் பரிவுதரும் பான்மையால் - பழமையான அத்தளர்வாகிய துன்பத்திற்கு வருந்துந் தன்மையால், உழந்த யோகத்து ஒருமுதல் கோபத்தால் - வருந்திச் செய்தயோகத் தையுடைய உலகுக் கொருமுதலாகிய சிவனது கோபத்தால், இழந்த மேனியும் எண்ணி இரங்கினன் - மதனன் தானிழந்த தேகத்தையு நினைந்து வருந்தினன், எ-று. (உசு)

கூக. வெள்ளஞ்சிலம்புபாற்கடலின்விரும்புதியைவெறுத்தலின்
கள்ளுஞ்சிலம்பும்பூங்கோதைக்கதிர்கடலிற்படவாற்குப்
புள்ளுஞ்சிலம்பும்பொழில்சிலம்பும்புன லுஞ்சிலம்பும்பூமேலோலம
உள்ளுஞ்சிலம்புமிலம்பாவாலயிருண்டாகும்வகையுணடோ. (உச)

இ-ள். வெள்ளம் சிலம்பும் பாற்கடலில் - வெள்ளமொலிக் கின்ற பாற்கடலினிடத்து, விரும்பும் துயிலைவெறுத்து - விரு ம்புகின்ற யோகநித்திரையை வெறுத்து, அளியின் கள்ளும் சிலம்பும் - வண்டுகளோடு தேனும்பொலிகின்ற, பூம்கோதை கற்பின்கடலில் படிவாற்கு - அழகிய அளகத்தையுடைய பிரா

செய்யுளகராதி.

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
அலங்கா	கஉ	கண்டாம்	க	தாயில்	கஉ
அல்லிறு	கஉ	—	—	தாயினாறு	உசு
அற்றன	உ0	காற்றம்	உஅ	—	—
அன்னமா	எ	காணுவிது	உக	திக்குறும்	உ
அனையின்	அ	—	—	திசைகட்	அ
—	—	கிளித்தன	நக	—	—
ஆண்டப்	உல	—	—	தருவி	உக
ஆதிப்பி	நடு	குரவம்	எ	—	—
ஆர்த்தா	கசு	குன்று	ந	தூரவட்ட	உக
ஆறுபுலன்	உடு	—	—	—	—
—	—	கேட்டனன்	கசு	தேட்டத்தான்	கள
இருந்து	கஅ	—	—	—	—
இரத்த	கo	கோளிரு	கக	—	—
இளிக்கறை	நந	—	—	தோளிரண்டு	சு
இலையிறை	நசு	சிக்கையின்	கச	—	—
—	—	—	—	நஞ்சுறு	உள
உண்டாகிய	உஅ	சுவண	டு	—	—
உழக்கும்	கo	—	—	நாற்தகவுழவ	உடு
உழந்த	நஉ	சூலமே	உச	நாளங்கொ	கநூ
உளங்கோ	கஅ	—	—	—	—
—	—	செங்கண்	ச	நிலையிலா	உஉ
ணிலின்	நo	செஞ்சுடர்	ந	—	—
ணுருவில்	உச	செம்பரா	கச	நீத்தும்	கடு
—	—	செய்தனர்கள்	உடு	—	—
—	—	செற்றவா	ச	நூக்கலாக	உசு
ட்டொடெட்	உ	செற்றி	அ	—	—
ண்டிசை	நசு	—	—	பஞ்சியொ	கடு
வன்செய	கச	சேணுயர்	உந	பட்டதன்	எ
ன்னென்று	உசு	செயிழை	நo	பண்டலங்கல்	உஉ
—	—	—	—	பம்பு	ந
றவனை	கள	சொற்பிற	உச	பாவலரும்	கக
றிய	உக	—	—	—	—
—	—	தங்குநின்	ச	பாரிடம்	நடு
யைஅ	நச	தடிதடவு	நந	—	—
—	—	தணிக்கும்	நடு	பின்னின்ரு	உசு
ராமரை	டு	தலைசிதின	உo	—	—
—	—	—	—	புண்ணிட	ச

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
புலியினது	உக	மதால்	சு	மேருவை	நo
புலியுறுக்கு	கந	ம்ரனேயும்	கசு	—	க
புனைந்து	உள	மருப்பிரு	ககூ	யோகமும	—
—		—		—	ககூ
பூசம்	ரு	மாணிக்கம்	உசு	வந்ததுசே	உரு
—		மால்கிற	கக	வற்கலியர்	—
பேதியாது	க	மால்பொ	ககூ	—	உக
—		—		வாஞுலாம்	—
பொன்	கரு	முத்திரு	உ	—	கசு
பொன்லெக்	நக	முருடீர்ந்து	உஅ	விண்ணிடை	கo
—		முறையும்	உக	விண்ணிவில்	—
போக்கினீர்	கள	—		—	நச
போனவன்	க	மூலமே	நரு	வெய்தாகி	நஉ
—		—		வெள்ளம்	

செய்யுளகாதி முற்றிற்று.



கன்றுக குருவாழ்க குருவேதுணை.

ஸ்ரீ

லக்ஷ்மிவிஷ்ணுமயம்ஜகத்.

ஸ்ரீமத்கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

ஸ்ரீமத்கம்பராமாயண

அருங்கவிவிளக்கம்.

நான்காவது. கிட்கிந்தாகாண்டம்.

இது பெரும்பாலும் கிஷ்கிந்தையில் நடந்த சரித்திரத்தைக் கூறுகின்றமையின் அப்பெயராயிற்று.

க-வது. பம்பைப்படலம்.

பம்பாசரசின்சிறப்பைக்கூறுகின்றபடலம்.

தரியன்.

தாலரற்றுங்கவிச்சக்கரவர்த்திசெய்யுடாலுழ்முடைமைநோக்கி
யாலாற்றுமுறையின்மும்மைத்தமிழுணர்ந்தமுநியோருமற்றுளோரும்
மூலரற்றுங்கடற்பாரிற்கம்பருத்திரமுதுசொன்மொழிபவன்றேற்
தெரலாற்றுமால்சங்கமொக்குமெனின்யாம்வேறெப்பியம்பலாமால்.

தரப்பு.

க. * மூன்றுருவெனக்குணமும்மையாமுதல்
தோன்றுருவையுமிம்முதலிச்சொல்லுதற்
கேன்றருவமைந்தவரிடையினின்றவன்
சான்றருவுலகினுக்குலகந்தாயினான். (க)

ஸ்ரீமத்கம்பராமாயணம்.

உ. தேன்படிமலரது செங்கண் வெங்கைமாத்
தான்படிதினறது தெளிவுசான்றது
மீன்படிமேகமும்படிந்து வீங்குநீர்
வான்படிந்துலகிடைக்கிடந்தமான்பது. (உ)

இ-ள். தேன்படிமலரது - (பம்பை) தேன்கொண்ட மலர் சூழ்ந்துடையது, செங்கண் வெங்கைமா படிதின்றது - செவ்வக் கண்களையும் வெவ்விய துதிக்கையையுமுடைய யானைகள் படியப்பெறுகின்றது, தெளிவுசான்றது - அதனாற்கலங்காது தெளிவமைந்தது, மீன்படிமேகமும்படிந்து - மீன்களைப்போல மேகங்களுந் தோய்ந்து, வான்படிந்து - வானுலகத்தாரால் நீராடப்பட்டு, வீங்குநீர் - கடல்நீர், உலகிடைக்கிடந்த மான்பது - அவ்விடத்திற்கிடந்த மாட்சிமையுடையது. எ-று. (உ)

ஈ. ஈர்ந்தண்பளிங்கெனத்தெளிந்தவீர்ம்புனல்
போர்த்தொளிர்நவமணிபடர்ந்தபித்திகை
சேர்ந்துழிச்சேர்ந்தழிறத்தைச்சேர்தலால்
ஓர்ந்தணர்வில்லவருள்ளமொப்பது. (ஈ)

இ-ள். ஈர்ந்தண்பளிங்கு எனத் தெளிந்த ஈரம்புனல் - செதுக்கிய தண்ணியபளிங்கைப்போலத் தெளிந்த குளிர்ந்தநீர், போர்த்து ஒளிர் நவமணிபடர்ந்த பித்திகை - பெயர்ந்தொளிர்கின்ற ஒன்பதுவகைரத்நங்கள் படர்ந்த கரையில், சேர்ந்துழிச் சேர்ந்துழி நிறத்தைச்சேர்தலால் - சேரும்போதெல்லாம் (அம்மணிகளின்) நிறத்தைப்பெறுதலால், ஓர்ந்து உணர்வு இலலவர் உள்ளம் ஒப்பது - கலிகழ்ந்துணர்வில்லாதவ ரதுள்ளத்தையொப்பது. எ-று. (ஈ)

உ. குவான்மணித்தடந்தொறும்பவளக்காலிவர்
வானரசனனமும்பெடையுங்கண்டலில்
நவாதெடுவானகதையற்ழுதீண்டும்
உவாமதியுலப்பிலதித்தித்தொப்பது. (உ)

இ-ள். அன்னங்களும் பெடைகளுங் காணப்படுதலால் ஆகாயத்தில் விளங்கும் நக்ஷத்திரங்களோடும் அளவில்லாத சந்திரர்கள் உதித்தலையொப்பது. (உ)

ஊ. எற்பொருஞ்சார்ந்தமிருக்கையீதெனக்
கிற்பதோர்காட்சியதெளிவுதீமூறக்
கூற்பகமீனையக்கலிஞர்காட்டிய
சொற்பொருளாமெனத்தோன்றல்சான்றது. (ஊ)

இ-ள். பாற்காளலோகத்தை யிதுவென்று காட்டுவதாகிய ஒருதோற்றமுடையதெனினும் கற்பகவிருக்கம்போன்ற கவிஞர் ஆழத்தில்வைத்து எளிதிற்றோன்றக்காட்டிய சொல்லினது பொருளைப்போல தோன்றுதலமைந்தது. (ஊ)

எ. களைவிலன்னமேமுதலகளனகன்
தளமலர்ப்புள்ளொடுதயங்கவின்னதோர்
இளவியென்றறிவருங்கிளர்ச்சித்தாதலால்
வளகரக்கூலமேபோலுமான்பது. (எ)

இ-ள். அன்னங்கள் முதலிய பறவைகளோடு விளங்குதலினனமொழியென்று அறியவருமையான எழுச்சியையுடைத்தாகலால் வளம் பொருந்திய நகரினது கடைவீதியைப்போலுமான்பையுடையது. (எ)

ஏ. கல்விகோக்கியரிதழ்திகர்குமுதத்தகமத்தேன்
வவ்வுமாகரிற்களிமையசுரும்பனமகரம்
எவ்வநீங்கியபிறப்பிலேமடப்பிலையெனைக்
கவ்வுமீனெறிமுழுகுவெழுனகரண்டம். (ஏ)

இ-ள். கல்விகோக்கியர் இதழ் - மான்போலுங் கண்களையுடைய மகளிரது இதழை, வவ்வும் மாந்தரில் - உண்ணுகின்ற மாந்தரைப்போல, மகரம் - மகாமீன்கள், திகர்குமுதத்தகமும் தேன் - அவ்விதழை யொத்த குமுதப்பூவிலுண்டாகியதுவிய தேனையுண்டு, களிமயக்கு உறுவன - செருக்கையும் மயக்கத்தையுமுடையவன, (ஏ)

ஐ. ஏஎசீர்மிழலிடையிடையெறித்தலிற்படிரும்
பொலம்வராபுனல்புகுந்தளவாமெனப்பொங்கி
ஆலமீனகணஞ்சினகலம்மரவஞ்சிக்
கூலமாமரத்திருஞ்சிறைபுலர்த்தவகுரண்டம். (ஐ)

இ-ள். வஞ்சிக்கூல மாமரத்து - கொடிகளையுடைய கரையிலுள்ள பெரியமரத்தில், இரும் சிறை புலர்த்துவ குரண்டம்-

பெரிய சிறையைப் புலர்த்துவனவர்கியகொக்குகளினது, நிழல்-நிழலை, எலும் நீர் - கொண்ட புனலுள், இடை இடை எறித்தலில் இடங்கள் தோறுந்தோன்றுதலில், (அக்கொக்குக்கள்) படிகம்போலும் வார்புனல் – படிகம்போன்ற தெளிந்த அப்புனலுள், புகுந்துளவாம் என - புகுந்துள்ளனவாமென்று நினைந்து, ஆலும் மீன்கணம்-உலாவுகின்ற மீன்கூட்டங்கள், பொங்கிகொதித்தனவாய், வலம்வர அஞ்சின - சுழல அஞ்சின. (உ0)

கூ. அங்கொர்பாகத்திலஞ்சனமணிநிழலடையப்
பங்குபெற்றெளிர்பதுமராகத்தொளிபரப்பக்
கங்குலும்பகலும்மெனப்பொலிவெய்துகரைய
மங்கைமார்தடமுலையெனப்பொலிவனவாளம். (உக)

இ-ள். பம்பைக்கரையி லொருபாதியிற் பச்சைரத்தினத்தின்சோதியடைய, மற்றொருபக்கத்திற்பதுமராகத்தி னொளிபரவ, இரவையும் பகலையும்போலப் பொலிவடைந்த கரைகளையுடையது, அப்பச்சைரத்தினச்சோதியுடைய கரையி லுள்ளவாளங்கள் பகலைப்பெறுது தலையையுஞ் சிறகையு மொடுக்கி யிருத்தலால் மங்கைகளது முலைகளைப்போலப் பொலிவன. எ-று.(உக)

ஸ்ரீராகவபிரான்கூறியது.

உ0. வரியார்மணிக்கால்வாளமேமடவன்னக்காளைநீங்கத்
தரியாணைந்தாவில்லலேற்றளர்த்தபோதுந்தகவேயோ
எரியாகின்றவாருயிருக்கிரங்கினலீதியையன்றே
பரியாதிருந்தேற்கொருமாற்றம்பேசிற்பூசல்பெரிதாமோ. (உஉ)

இ-ள். என்னை நீங்கத்தரியாள் - என்னை நீங்கியாண்டுந் தரியாள், நடந்தாள் இல்லலேல் - நீங்கிச்சென்று என்னிடத்திலிலளாயின், தளர்ந்தபோது-அவளால் யான் மெலிந்தபோது, உம்தகவேயோ - உமது பெருமையோ காட்டுகின்றீர். (உச)

உக. அடையீரெனினுமொருமாற்றமறிந்தனையீரன்னத்தின்
பெடையீரொன்றும்பேசீரோபிழையாதாற்குப்பிழைத்தீரோ
நடைநீரழியச்செய்தாரேநடுவிலாதார்களியவரோ
டுடையீர்பகைதானுமைநோக்கியுவக்கின்றேனைமுனிவீரோ. (உஅ)

இ-ள். அன்னத்தின் பெடையீர் - அன்னத்தின் பெண்டீர், அடையீர் எனினும் - அடைகாத்துக்கொண்டிருப்பீராயினும்,

அறிந்தது ஒருமாற்றம் உரையீர் - அறிந்ததை யொருவார்த்தைசொல்லீர், (உஅ)

இதுவுமது.

உஉ. பஞ்சுபூத்தவிரற்பதுமம்பவளம்பூத்தவடிவாளென்
செஞ்சுபூத்தாமரையிலையம்பூத்தாணிறம்பூத்த
மஞ்சுபூத்தமலர்பூத்தகுழலாள்கண்போன்மணிக்குவளாய்
நஞ்சுபூத்ததாலென்னநகுவாயென்னேநலிவாயோ. (நஉ)

இ-ள். பஞ்சுபூத்த - செம்பஞ்சூட்டிய, பதுமம் - தாமரை யென்னுந் தாமரை மலர்களில், விரல் - விரல்களாகிய, பவளம் பூத்த வடிவாள் - பவளங்களுண்டாகியதை யொத்த பாதங்களினழகுடையாள், என்நெஞ்சு பூத்த தாமரையின் - எனதுஇதயமாகிய மலர்ந்த தாமரை மலரினை, நிலையம்பூத்தாள் - இருப்பிடமாகக் கொண்டவளாகிய, மலர்பூத்த-மலர்களை மலர்ந்த, நிறம் பூத்த - கருநிறத்தைக் கொண்ட, மஞ்சுபூத்த - மேகத்தைப்போல விளங்கிய, குழலாள் கண்போல் மணிக்குவளாய் - அளகத்தையுடைய சீதையினது கண்களையொத்த அழகுடைய குவளை மலரே, நஞ்சுபூத்ததால் என்ன - விடம்பரவினாற்போல, நகுவாய் என்னை நலிவாயோ-மலர்வாயாகி என்னை வருத்துவாயோ. எ - று. (நஉ)

உஎ. வாரளித்தவனமாப்பிடிவாயிடைக்
காரளிக்கலுழிக்கருங்கைம்மலை
நீரளிப்பதுநோக்கினன்றன்னன
பேரளிக்குப்பிறந்தவில்லாயினன். (நஎ)

இ-ள். பேர் அளிக்குப்பிறந்த இல்லாயினன் - பேரருளுக்கமைந்த இல்லம் போன்றவனுகிய ஸ்ரீராமபிரான், கார் அளிக்கலுழிக்கரும் கைமலை - கறுத்தவண்டுகளுக் குணவாகிய மதநீரையுடைய வலிபொருந்திய யானைகள், வார் அளித்து அழைமாப்பிடிவரய் இடை-நீண்டகுளிர்ச்சியுடைய இலைகளைத்தின்னுகின்ற பெண் யானைகளின்வாயில், நீர் அளிப்பது நோக்கினன்றனன் - தமதுகரத்தால் புனல்கொடுப்பதைப்பார்த்துகின்றனன். எ-று. (நச)

உ-வது. அனுமப்படலம்.

—:o:—

அனுமானைக்கண்டதைச் சொல்லுகின்றபடலம்.

அனுமானைக்குறித்து ஸ்ரீராகவபிரான் கூறியது.

கஅ. இல்லாதவுலகத்தெங்கும்மிகுவினைகள்கூர
கல்லாதகலையும்வேதக்கடலுமேயென்னுங்காட்சி
சொல்லாலேதோன்றிற்றன்றேயார்கொலிச்சொல்லின்செல்வன்
வில்லார்தோளினியவீரவிரிஞ்சனேவிடைவலானே. (உ0)

இ-ள். வில் ஆர் தோள் இளையவீர - வில்லணைந்த தோளையுடைய இளையவீரனே, இங்கு இசைகள் கூர - இங்குப் புகழ்கள் மிக, இவன் கல்லாதகலையும் வேதக்கடலும்-இவன் கற்காத கலைகளும் வேதக்கடல்களும், உலகத்து எங்கும் - உலகமெங்கும், இல்லாத - இல்லாதன, என்னும் காட்சி - என்னும் அற்புதம், சொல்லாலே தோன்றிற்று-அவனதுமொழியாலே தோன்றிற்று, இச்சொல்லின் செல்வன் யார்-இச்சொற்செல்வமுடையோன் யார், விரிஞ்சனே விடைவலானே - பிரமனே சிவனே என்றான். எ-று. (உ0)

—

ஊ-வது. நட்புக்கோட்படலம்.

—o—

ஸ்ரீராமபிரானும் சுக்கிரீவமகாராசனும் நட்புக் கொண்டதை யோதுகின்றபடலம்.

அனுமான் சுக்கிரீவனுக்குச் சொல்லியது.

கஉ. மண்ணுளார்விண்ணுளார்மாறுளார்வேறுளார்
எண்ணுளார்திசையுளாரியவுளாரிசையுளார்
கண்ணுளாராயினுர்பகையுளார்கழிநெடும்
புண்ணுளார்போருயிர்க்குமுதமேபோலுளார். (ஊ)

இ-ள். மண்ணுளார் விண்ணுளார் - புவியிலுள்ளவர்க்கும் வானத்திலுள்ளவர்க்கும், மாறுளார் வேறுளார்-பகையாளர்க்கும் நொதுமலாளர்க்கும், எண்ணுள் ஆர் திசையுளார்-மனத்திற் பொருந்திய திசைகளி லுள்ளவர்க்கும், இயல் உளார் - நற்குணமுள்ளவர்க்கும், இசை உளார் - கீர்த்தியுள்ளவர்க்கும், கண் உளார் ஆயினுர் - கண்களிலிருப்பவராகிய அவர், பகையுளார்-பகையுடையவராகி, கழிநெடும் புண்ணுளார் - மிகுந்த துன்பமுடையவரது, ஆருயிர்க்கு அமுதமேபோலுளார் - நிறைந்த உயிர்க்கு அமுதத்தையே யொத்தவர். எ-று. (ஊ)

இதுவுமது.

கக. நல்லுறப்பமையுகம்பியரின்முன்பவனையந
தெல்லுறப்பரியபேரொழுக்கடர்ச்சடவுடன
பல்லிறத்தவன்வலிக்கமைதிரியம்பகமெனும்
வில்லிறத்தருளினுன்மிதிலைபுக்கனையகால். (எ)

இ-ள். நல் உறுப்பு அமையும் நம்பியரில் முன்பவன்-நல்ல அங்கங்களமைந்தசிரேட்டர்களில்முத்தவனுகியஸ்ரீராமபிரான்,

இதுவுமது.

கஎ. ஆயமாநாகர்தாழாழியானையலால்
காயமானுயினுவனேகாவலர
ரீயமானேர்தியானேருமாரீசனர்
மாயமானுயினன்மாயமானுயினுன். (கக)

இ-ள். காவலா - அரசனே, ஆயமாநாகர் தாழ் ஆழியானை அலால் - ராகவபிரான் அத்தேவர் வணங்குகின்ற அப்பாகிர்த திவ்ய தேகமுடைய திருமாலே யல்லாமல், காயமான் ஆயினன் ஆவனே-ப்பாகிர்த சரீரமுடைய மானுடனுயினுவனே ஆகான், ஈ அம்மான் நோக்கி - நீவந்து அக்கடவுளைப்பார், நேரும்மாரீசனர் - முன்னெதிர்ந்த மாரீசனர், மாயம்மான் ஆயினன் - மாயம்பொருந்திய மானுருவமாயினன், மாய - அவனிறக்க, மான் ஆயினன் - மகானுயினன். எ-று. (கக)

"எனைத்துணையராயினுமென்னுந்தினைத்துணையுந்தேரான் பிறனில்புகல்" என்புழிப்போல இழிக்தற்கண்பன்மை ஒருமை மயங்கிற்று.

அனுமான் ஸ்ரீராமபிரானுக்குச் சொல்லியது.

கஅ. வெள்ளமேழுபத்துள்ளமேருவைத்
தள்ளலானதோளரிகடானேயான
உள்ளமின்றியவ்வுயிகாயுஞ்சலால்
வள்ளலேயவனவாழவாழுமால். (சசு)

இ-ள். வள்ளலே - வரையாது கொடுக்கின்றோய், மேருவைத் தள்ளல் ஆன - மேருகிரியை உருட்டலுக்குரியனவாகிய, ஏழு பத்துவெள்ளம் உள்ள - எழுபதுவெள்ளக் கணக்குடைய, தோள் அரிகள் தானையான் - புயவலியுடைய குரக்குச்சேனைகளை யுடையவன், உள்ளம் இன்றி அவ்வுயிரை அஞ்சலால்- அவ்வாலியினுடைய நிலையின்றிக் காலன் அக்குரங்குகளி னுயிர்களைப் பிடிக்க அஞ்சுதலால், அவன் வாழவாழும்-அவ்வாலிவாழ அக்குரங்குகளும் வாழும். எ-று. (சசு)

அனுமான் சுக்கிரீவனுக்குச் சொல்லியது.

கக. துன்புதோன்றியபொழுதுடன்றோன்றினனெவர்க்கும்
முன்புதோன்றலையதிதற்குமுடிவெனென்றியம்ப
அன்புசான்றெனவுரைத்தனையவெண்ணுக்கை
என்புதோன்றலவுருகினவெனிற்பிறிதெவனே. (அக)

இ-ள். எவர்க்கும் முன்புதோன்றலை-தேவர் முதலிய எல்லார்க்கும் முன்புள்ளதோன்றலை, (அக)

சூ-வது. கலன்காண்படலம்.

பிரான் பிராட்டியின் அணிகளைப்பார்த்ததைச் சொல்லுகின்றபடலம்.

சுக்கிரீவன் ஸ்ரீராமபிரானைநோக்கிச்சொல்லியது.

உ0. மூளாரிமேல்லைகுவான்முருகற்றந்தவத்
தனிரியல்பாகத்தான்றடக்கையாழியான
அளவியொன்றுவரோயன்றியையமில்
ஞெலியர்தனித்தனிக்கிடைப்பரோதானை. (சுசு)

இ-ள். பிரமனும் சிவனும்திருமாலும் சேர்ந்தொப்பாவரோ யன்றித் தனித்தனியே உனக் கொப்பாவரோ. ஆகாரென்பது.

உக. உழைபுலாகெடுங்கண்மாதரூசலூசலல்லவேல்
தழைபுலாவுசந்தலர்ந்தசார்ச்சாரலல்லவேல்
மழைபுலாவுமுன்றிலில்லமன்றனுஞ்சண்பகக்
குழைபுலாவுசோலைசோலையல்லபொன்செய்குன்றமே. (சுடு)

இ-ள். உழை உலாம் கெடுங்கண்மாதர் ஊசல்-மான்போலும் நீண்ட கண்களையுடைய மாதர்களாடுகின்ற ஊஞ்சல்களும், ஊசல் அல்லவேல் - அவ்வூசல்களில்லாத விடங்களில், தழை உலாவு சந்து அலர்ந்தசாரல் - இலைகள் பொருந்திய சந்தன மரங்கள் பூத்த சாரல்களும், சாரல் அல்லவேல் - அச்சாரல்களில்லாத விடங்களில், மழை உலாவுமுன்றில்-மேகம் படிகின்ற முற்றங்களும், அல்ல - அவையல்லாத விடங்களில், மன்றல் நாறு சண்பகக்குழை உலாவுசோலை - வாசம் வீசுகின்ற சண்பக மரத்தினது இலைகள் பொருந்திய சோலைகளும், சோலை அல்ல-அச்சோலைகளில்லாத விடங்களில், பொன் செய்குன்றம்-அழகு செய்கின்ற மலைவிளங்காகின்றது. எ-று. (சுடு)

உட. நீடுநாகமூடுமேகமோடுநீடுமோடுகோ
டாடுநாகமோடுமானையாளையோடுவாளிபோம்
மாடுநாகநீடுசாரல்வாளையோடுமம்வாவியு
டோடுநாகமோடுவேங்கையோடும்யூகமோடவே. (சுஎ)

இ-ள். யூகம் ஓட - கருங்குரங்குகளோட, (அவ்வோசையால்) மேகம் - மேகங்கள், நீடு நாகம் ஊடு ஓட - நீண்ட ஆகாயத்தினூடு மேகங்களோட, நீரும்ஓட - அவற்றினின்று புனலு மொழுக, கோ ஆடும் நாகம் ஓட - கோயாடும் சர்ப்பங்களோட, மானயானை ஓட-பெருமை பொருந்திய யானைகளோட, ஆளிபோம் - சிங்கஞ் செல்லுகின்ற, நாகம்மாடு - அம்மலையினிடத்திலுள்ள, நீடுசாரல் - நீண்டசாரலிலிருக்கின்ற, வாளைஓடும் வாவியூடு - வாளைமீன் தாவுகின்ற குளத்தில், ஓடும் நாகம்ஓட-ஓடுகின்ற நீர்ப்பாம்புகள் செல்ல, வேங்கை ஓடும் - புலிகள் செல்லும். எ-று. (சுஎ)

அவ்வோசையாலென்று எல்லாவற்றுக்குங் கூட்டுக.

உஉ. தேனிழுக்குசாரல்வாரிசெல்லமீதுசெல்லவாள்
மீனிழுக்குமன்றிவானவில்லிழுக்கும்வெண்மதிக்
கூனிழுக்குமற்றுலாவுகோளிழுக்குமென்பரால்
வானிழுக்குமேலவாயமன்றலுகுன்றமே. (சுஅ)

இ-ள். வான் இழுக்குமேலதாய மன்றல் நாறுகுன்றம்-வானைத் தாழ்த்துகின்ற உயர்ந்ததாகிய நல்ல வாசங்கமழ்கின்ற மலையில், மீதுசெல்ல - மேலேறுவதற்கு, தேன் இழுக்குசாரல் வாரிசெல்ல - தேன் வழுக்குகின்ற அம்மலைப் பக்கத்தின் வழியிற்செல்ல, நான்மீன இழுக்கும் அன்றி - நகூத்திரங்கள் வழுக்குகின்றதன்றி, வானவில் இழுக்கும்-வானவில்லும் வழுக்கும், வெண்மதிக்கூன இழுக்கும் - வெண்மதிக்கூனும் வழுக்கும், மற்று உலாவுகோள் இழுக்கும் என்பர் - வானில்வேறு உலாவுகின்ற கிரகங்களும் வழுக்கு மென்று சொல்லுவர். எ-று. (சக)

எ-வது. வாலிவதைப்படலம்.

:o:

வாலியைக்கொன்றதை யுணர்த்துகின்றபடலம்.

உச. அவ்விடத்திராமனீயழைத்துவாலியானதோர்
வெவ்விடத்தின்வந்தபோர்விலக்குமெல்லைவேறுகின்.
றெவ்விடத்துணிந்தமைத்தவெள்ளருத்திதென்றனன
தெவ்வடக்கும்வென்றியானுநன்றிதென்றுசிந்தியா. (உ)

இ-ள். இராமன்-ஸ்ரீராமபிரான் சுக்கிரீவனைப்பார்த்து, நீ-நீசென்று, வாலி யுனதோர் வெவ்விடத்தின் - வாலியானதாகிய ஒப்பற்ற கொடியவிடத்தினை, அவ்விடத்து - அந்தவிடத்தில், அழைத்துவந்து-கூட்டிவந்து, போர் விலக்கும் எல்லை - அமர்செய்யுங்காலை, வேறு நின்று - யான் தனியேநின்று, எவிட - அம்புவிட, துணிந்து அமைந்ததுஎன்கருத்து இதுஎன்றனன்-துணிந்தமைந்ததாகிய எனதுகருத் திதுவென்று சொல்லினன், தெவ் அடக்கும் வென்றியானும்-பகையைவெல்லுகின்ற வெற்றியையுடைய சுக்கிரீவனும், இது நன்று என்று சிந்தியா-இது நன்றென்று கருதி. எ-று. (க)

தாரை வாலிக்குச் சொல்லியது.

உ. கொற்றவனின்பெருங்குலவுத்தோள்வலிக்
கெற்றையதல்லகாளிருண்டேகுவான
பெற்றிலன்பிறந்திலனெயார்த்தம்போர்செயற்
குற்றபெருந்தினையுடைமையாலென்றாள். (உ)

இ-ள். கொற்றவனின் பெருங்குலவுத்தோள்வலிக்கு- அரசனேனினது பெரியகுவிந்த தோள்களின்வலிக்கு, இற்றையது அல்லநாள் ஈடு உண்டு எகுவான் - இன்றல்லது பலநாள்களிலுந் தோற்றோடுகின்றவன், பெற்றிலன்-வேறுவலிபெற்றிலன், பிறந்திலன் - மரீத்துவலியோடு பிறந்திலன், (கஉ)

இளையபெருமாள் பிராணுக்குச் சொல்லியது.

உசு. விற்றுங்குவெற்பன்னவிலங்கெழிற்றோளெய்ம்மை
உற்றுர்சிலரல்லவரோபலரென்பதண்மை
பெற்றருழைபெற்றபயன்பெறும்பெற்றியல்லால்
அற்றுர்கவையென்றலுக்காருனரார்கொலென்றன். (கூ)

இ-ள். பெற்றூர் உழை - நான் நேயஞ்செய்யப்பெற்றவர் மாட்டு, பெற்றபயன்-பெறுதலாகிய பயனை, பெறும்பெற்றி அல்லால் - கொள்ளுந்தன்மையல்லாமல், (கூ)

வாலி ஸ்ரீராமபிராணுக்குக் கூறியது.

உஎ. இருமைநோக்கிநின்றியாவர்க்குமொக்கின்ற
அருமையாற்றலனறிவதற்காக்கின்ற
பெருமையென்பதெனைபிழைநோக்கல்விட்
டொருமைநீக்கியொருவற்குதவலே. (அடு)

இ-ள். இருமைநோக்கி நின்று - நன்மை தீமைகளை யாராய்ந்து நின்று, யாவர்க்கும் ஒக்கின்ற - எல்லார்க்கு முடன்பாடாகின்ற, அருமை ஆற்றல் அன்றே - அரியவினைகளைச்செய்தலன்றே, அறம் காக்கின்ற பெருமை என்பது - அறத்தினைவழுவாதின்று உலகைக்காக்கின்ற பெருமையென்பது, பிழைநோக்கல் விட்டு - குற்றத்தை யாராய்தலை விட்டு, ஒருமைநீக்கி - ஒற்றுமையை நீக்கி, ஒருவற்கு உதவல்-ஒருவனுக்குதவிசெய்தலாகிய, இது என்-இது யாது. (இதுவுமோரறமோ வென்றன் என்க)

ஸ்ரீராமபிரான் வாலிக்குச்சொல்லியது.

உஅ. மறந்திறம்பல்வலியமெனுமனம்
புறந்திறம்பலெனியவர்ப்பொய்குதல்
அறந்திறம்பலருங்கடிமங்கையர்
திறந்திறம்பலெளியவுடையோர்க்கெலாம். (உ00)

இ-ள். தெளிவு உடையோர்க்கு எலாம் - உண்மையொத்த மனத்தெளிவுடையோர்களுக்கெல்லாம், வலியம் எனு மறம் திறம்பல் - புயவலியுடையமென்று வீரத்தினின்று வேறுபடுதலும், மனம் புறம் திறம்பல் - நீதியினின்று மனம் வேறுபடுதலும், எளியவர்ப்பொங்குதல்-எளியவரைக்கோவித்தலும், அறம் திறம்பல் - தருமத்தைப் பிழைத்தலும், அரும் கடிமங்கையர் திறம் திறம்பல் - அரியவாட்கைப்பட்ட மங்கையர் திறத்தில் கவிர்தலும் ஆகா. எ-று. (கஎ0)

உக. தறையடித்தபோற்றீராத்தகையவித்திசைகடாங்கும்
கறையடிக்கழிவுசெய்தகண்டகனெஞ்சமூன்ற
நிறையடிக்கோவைவாலினிலைமையுன்னுந்தோறும்
பறையடிக்கின்றவந்தப்பயமறப்பறந்ததன்றே. (கசஉ)

இ-ன். தறை அடித்தது போல் நீராத்தகைய இத்திசைகள் தாங்கும் - புவியில் முளையடித்தாற்போலப் பெயராமல் தகையுடைய இத்திசைகளைத் தாங்குகின்ற, கறையடிக்கு அழிவுசெய்த-யானைகளுக்குக் கேடுசெய்த; கண்டகன் நெஞ்சம் ஊன்ற-இராவணன் மனத்திற் பதிய,

---

கூ-வது. கார்காலப்படலம்.

—:o:—

மழைக்காலத்தைக்குறித்துக் கூறுகின்றபடலம்.

கூ0. அரிப்பெரும்பெயரவன்முரல்வினோரணி
விரிப்பவுமொத்தனவெற்புமீதிதி
எரிப்பவுமொத்தனவேலிலாசைகள்
சிரிப்பவுமொத்தனதெரிந்தமின்னெலாம். (எ)

இ-ள். அரிப்பெரும் பெயரவன் - இந்திரன், (எ)

கூக. பாடலமவறுமைகூரப்பகலவன்பசுமைகூரக்
கோடலுகளபெருமைகூரக்குவலயஞ்சிறுமைகூர
ஆடினமயில்களபேசாதடங்கினகுயில்களன்பர்த்
தேடுறத்தளர்ந்தார்போன்றுதிருவுறக்கிளர்ந்தார்போன்றும். (

இ-ள். அன்பர்த்தேடுறத்தளர்ந்தார்போன்று - கணவரைத் தேட மனந்தளர்ந்தவரை யொத்து, குயில்கள் பேசாது அடங்கின - குயில்கள் கூவாதொடுங்கின, திருவுறக்கிளர்ந்தார் போன்று - கணவர் வருதலாகிய செல்வம்வர உள்மகிழ்ந்தவரை யொத்து, மயில்கள் ஆடின - மயில்களாடின, (உடு)

கூஉ. பேடையுஞ்சிமிறும்பாயப்பெயர்வுழிப்பிறக்குமோசை
ஊடிறத்தாக்குந்தோறுமொல்லொலிபிறப்பக்கல்லார்
ஆடியற்பாணிக்கொக்குமாரியவமிர்தப்பாட்டம்
கோடியதாளங்கொட்டன்மலர்ந்தகூதாளமொத்த. (கூஉ)

இ-ள். பேடையும் சிமிறும் பாய-பெண்வண்டுகளும் ஆண்வண்டுகளும் பறக்க, பெயர்வுழிப்பிறக்கும் ஓசை - எழும்போதுண்டாகின்றவொலி, ஆரிய அமிர்தப்பாடல்-அமிர்தம்போன்ற தேவகானத்தையொக்கும், ஊடு உறத்தாக்கும் தோறும் - பறக்கையி லொன்றோடொன்று மோதுந்தோறும், ஒல்லொலி பிறப்ப - ஒல்லொலிகளுண்டாவன, கல்லார் ஆடு இயல்பாணிக்கு ஒக்கும் - அவை கூத்திய ராட்டுக்குப் பொருந்திய தாளத்தை யொக்கும், கொட்டல்-கொட்டுதலையுடைய, கோடியதாளம்-வளைவுடைய தாளங்கள், மலர்ந்த கூதாளமொத்த-அலர்ந்த கூதாள மலர்களையொத்தன. எ-று. (கூஉ)

கூக. பூவியற்புறவமெங்கும்பொறிவரிவண்டுபோர்ப்பத்
தீவியகளியவாகிச்செருக்கியகாமச்செவ்வி
ஓவியமரன்கடோறுமூரைத்தறவுநீஞ்சியொண்கேழ்
நாவியசெவ்விகாறக்கலியொடும்புலர்ந்தகவ்வி. (கூசு)

இ-ள். பூ இயல் புறவம் எங்கும்பொறிவரி வண்டுபோர்ப்ப-மலர்கள் பொருந்திய கானமெங்கும் புள்ளியையும் வரியையுமுடையவண்டுகள் மொய்க்க, தீவியகளிய ஆகிச் செருக்கிய காமச் செவ்வி - (கலைமான்கள்) இனிய வுவப்புடையனவாகி செருக்குடைய காமப்பக்குவத்தை, ஓவிய மரன்கள் தோறும் உரைத்து அறவுநீஞ்சி - நீக்கிய விருக்கங்கடோறுந் தாமே தேய்த்து அதிகம் உரிஞ்ச, ஒண்கேழ்-மிகுந்த ஒளியுடைய, நாவிய - ** செவ்விநாற - அப்பக்குவத்தின் மணம் வீச, கலியொடும் கவ்வி புலர்ந்த-அக்கலைமான்களோடும் பெண்மான் சூழ்ந்தன. எ-று. (கூசு)

கூச. நோக்கினுனைமநோக்கழிகண்டதுண்மருங்குல்
தாக்கணங்கருஞ்சிதைக்குத்தாங்கருந்தனபம்
ஆக்கினுமதருவிதின்றரும்பெறலுவகை
வாக்கினுரையாமெனக்களித்தனமான்கள். (கூஅ)

இ-ள். நோக்கினுல் நமை நோக்கு அழிகண்ட - கண்ணுல் நமதழகை யழிவு செய்த, (கூஅ)

கூடு. பொழிற்தமாநிலம்புற்றரக்குமட்டியபுனிற்று
எழுந்தவாம்பிகளிடறினசெறிதயிரேய்த்த
மொழிந்ததேனுடைமுஞ்முலையாய்ச்சியர்முழவிற்
பிழிந்தபால்வழிதுரையெனப்பொருவுவபிடவம். (சசு)

இ-ள். பொழிந்த மாநிலம் புல்தரக்குமட்டிய புனிற்று ஆ-மழை பெய்த பெரிய நிலத்திற் புல்லுகள் முளைக்க அவற்றைத் தின்று தெவிட்டிய பசுக்கள், எழுந்த ஆம்பிகள் இடறின-மு ளைத்த காளான்களைக் கால்களாலிடறின, செறிதயிர் ஏய்த்த - அக்காளான்கள் இறுகிய தயிரையொத்தன, பிடவம் - ஒருசார் செடிப்பூ. (சசு)

கூசு. அளவில்காரெனுமப்பெரும்பருவம்வந்தணைந்தால்
தளர்வென்பதுதவம்புரிவோர்கட்குந்தகுமால்
கிளவிதேனினுமமிர்தினுங்கிடைத்தவென்வளைத்தோள்
வளவியுண்டவன்வருந்துமென்முலையுவருந்தோ. (சஎ)

இ-ள். வெள்-வெள்ளிய, தேனினும் அமிர்தினும் கிடைத்த-தேனினுமும் அமிர்தத்தினுமு முண்டாகிய; கிளவி - மொழியையும், வளைத்தோள் - வளைகளையணிந்த தோளையும், அளவி உண்டவன் - கலந்தனுபவித்தவன், வருந்தும் என்றல் அது வருத்தோ-வருந்துகின்றுனெனில் அது வருத்தமரமோ. (சஎ)

ஸ்ரீராமபிரான் சொல்லியது.

கூஎ. மழைவாடையொடாடிவலிந்துயிர்மேல்
அழைவாய்மலர்வாய்கொடியாய்கொடியே
இழைவாணுதலாளிடைபோலிடையே
குழைவாயெனதாவிகுழைக்குதியோ. (ஞச)

இ-ள். மலர்வாய் கொடியாய்-மலராகிய வாயால் பேசாய்,

இதுவுமது.

கூஅ. விழையேன்விழைவானவைமென்மையினின்
மிழையேனுணர்வேனவையின்மையினுற்
பிழையேனுயிரோடுபிரிந்தனரால்
உழையேயவரெவ்வுழையாருரையாய். (ஞடு)

இ-ள். உழையே - மானே, உயிரோடுபிரிந்தனரால்-சீதையார் எனதுயிரோடு பிரிந்தனராகலின், விழைவானவை விழையேன் - விரும்பலானவற்றை விரும்பேன், மென்மையினின்று இழையேன் - மேம்பாட்டினின் றிழிதலைச் செய்யேன், உணர்வேன் - தகுதி தகுதியல்லாததை யறிவேன், அவையின்மையினுல் பிழையேன் - அப்படிசெய்தறிவுகள் உனக்கின்மையினுல் உன்னிடத்தில் தவறுசெய்யேன், அவர் எவ்வுழையார் உரையாய் - அச்சானகியார் யாண்டுளார் சொல்லாய். எ-று. (ஞடு)

கூக. பாழ்படுமடந்தையர்பழிப்பிலகலல்குற்
றூஉதொடருசனவிவெம்மைதொடர்வற்றே
வீழியதுவாடையெரிவெந்தலரிபுன்வீழ்
துளிலில்வாளியெனுவாசைபுரிவார்மேல். (எக)

இ-ள். பழிப்பு இல் அகல் அல்குல் தூக தொடர் ஊழல்-பழித்தலுக்கிடமில்லாத அகன்ற அல்குலைச் சுற்றிய ஆடை தொடர்கின்ற ஊழ்சலிலாடுகின்ற, பாசு இழைமடந்தையர்-பசிய ஆபரணங்களையுடைய மாதர்களிடத்தில், ஆசைபுரிவார் மேல் - ஆசையைச்செய்கின்ற ஆடவரதுமேனியில், வாடை-காற்று, எரி வெந்த விரிபுன்வீழ் ஆசு இல் அயில்வாளி எனநெருப்பால் வெந்த விரிந்தபுன்னில்லைதைக்கின்ற சூம்மையில்லாத கூர்மையுடைய அம்பைப்போல, நனிவெம்மை தொடர்வற்று வீசியது-அதிகம் வெப்பத்தால் தொடரப்பட்டு வீசிற்று, எ-று.

கூ0. வேலைநிறைவுற்றனவெயிற்கதிர்வெதும்பும்
சீலமழிவுற்றபுனலுறாருவுசெப்பிற்
காலமறிவுற்றுணர்த்தல்கண்ணலளவல்லால்
மாலைபகலுற்றதெனலோர்வரிதமாதோ. (எஉ)

இ-ள். வேலை நிறைவுற்றன - கடல்கள் நிறைந்தன, வெயில்கதிர் வெதும்பும் சீலம் அழிவுற்ற - வெயிலையுடைய சூரியன்

வெதுப்பும் வெப்பம் அழிந்தது, காலம் கன்னல் அறிவுற்று உணர்தல் - பகலிரவென்னுங் காலத்தின் காழிகையைத் தெரிந்தறிதல், புனல் உற்று உருவு செப்பின்-புனல்நிறைந்து அழுந்துகின்ற வள்ளத்தினது, அளவு அல்லால் - அளவல்லாமல், மாலைபகல் உற்றது என ஓர்வு அரிது - மாலைப்பொழுது வந்தது பகற்பொழுது வந்தது என்றறிதலில்லை. எ-று. (எஉ)

சுக. நெற்கிழியநெற்பொதிரம்பினரம்பாச்
சொற்கிழியநற்கினிகடோகையவர்தூய்மென்
பற்கிழிமணிப்படர்திரைப்பரதர்முன்றிற்
பொற்கிழிவிரித்தெனவினைப்பொதுள்வபுன்னை. (எக)

இ-ள். நிரம்பாச்சொற்கு இழியநல்கினிகள் - நிரம்பாதழிழுச் சொல்லுக்கு இழிதலையுடைய நல்ல கினிகள், நெல் கிழிய நெல்பொதி நிரம்பின - நெல்வெளிப்பட நெற்சுமையில் நிறைந்தன, தோகையவர் தூய் மென்பற்கு இழி - மாதர்களது வெள்ளிய மெல்லிய பற்களுக்கிழிந்த, மணிப்படர் திரைப்பரதர் முன்றில்—முத்தங்கள் படருகின்ற அலைகளையுடைய வலையாதில்முன், பொன்கிழிவிரித்து என - பொன்முடிச்சை விரித்தாற்போல, புன்னை சினைபொதுள்வ-புன்னை மரங்களிலரும்புகள் நெருங்குவன. எ-று. (எங)

சுஉ. கருந்தகையதண்சினையகைதைமடல்காலத்
தருந்தகையபோதுசினையிற்புடைதயங்கப்
பெருந்தகையபொற்சிறையொடுக்கியுடல்பேரா
திருந்தகுருகின்பெடைபிரிந்தவர்களென்ன. (எச)

இ-ள். கரும்தகைய் தண்சினையகைதைமடல் கால - வலிமைபொருந்திய அழகுடைய குளிர்ந்த அரும்புகளையுடைய காழைகளினது மடல்கள்விரிய, கரும்தகையபோது சினையில் புடைதயங்க - விருப்பத்தைத் தருகின்ற பெருமையுடைய தாழைமலர்கள் கிளைகளில்விளங்க, குருகின்பெடை-பறவைகளின் பெடைகள், பெருந்தகைய பொன் சிறை ஒடுக்கி-பெரியகவசம் போன்றுடைய அழகியசிறைகளை யொடுக்கி, உடல் பேராது - உடலசையாது, பிரிந்தவர்கள் என்ன - கணவரைப்பிரிந்த மகளிரைப்போல, இருந்த - தங்கித்திருந்தன. எ-று. (எஎ)

கஅ-வது. கிட்கிந்தைப்படலம்.

ஸ்ரீராமபிரான இளையபெருமாளுக்குச் சொல்லியது.

சுங. தருமமென்றருபொருடன்னையஞ்சியான்
தெருமருகின்றதுசெறுநர்தேவரோ
டருமையின்வீந்தனனென்னுமஃதலால்
உருமெனவொலிபடுமுரவிலோயென்றான். (கச)

இ-ள். உரும என ஒலிபடும் உரவிலோய்-இடிபோல ஒலியையுண்டாக்குகின்ற வலிய வில்லுடையோய், தருமம் என்ற ஒருபொருள் தன்னை அஞ்சியான் தெருமருகின்றது - தருமமென்ற ஒரு பொருளையஞ்சியான் மயங்குகின்றது, (நான் முனிந்தகாலை) அருமை இல் - அருமையில்லாமல், செறுநர் தேவரோடு வீந்தனர் என்னும் அஃது அல்லால் என்றான்- பகைவர் தேவரோடு இறந்தனரென்று சொல்லுகின்ற அதையல்லாமற் பிறிதென்னுமென்றான். எ-று. (கூச)

சுச. சொன்னிறைகேள்வியிற்றொடர்ந்தமாந்தரின்
இன்னிறப்பசலையுற்றிருந்தமாதரின்
தன்னிறம்பயப்பயநீங்கித்தன்னினும்
பொன்னிறம்பொருந்தினபூகத்தாலெலாம். (கஎ)

இ-ள். சொல்நிறை கேள்வியில் தொடர்ந்த மாந்தரின்-சொற்கள் நிறைந்த கல்வி கற்கச்சென்ற மைந்தர்களால், இன்னிறம் பசலையுற்று இருந்தமாதரின்-இனியநிறமாகிய பசலைகொண்டிருந்த மகளிர்களைப்போல, (கஎசு)

கஅ-வது. கிட்கிந்தைப்படலம்.

இளையபெருமாள் கிட்கிந்தைக்குச்சென்றதைக் கூறுகின்றபடலம்.

சுடு. அன்னகாலமகலுமளவினில்
முன்னைவீரனிளவலைமொய்ம்பினோய்
சொன்னவெல்லையினுங்குமத்தூங்கிய
மன்னன்வந்திலனென்செய்தவாறோ. (க)

இ-ள். சொன்ன எல்லையின் ஊங்கும் அத்தூங்கிய-கூறிய காலத்திற் கதிகமும் ஆங்குத்தங்கிய, மன்னன் வந்திலன்-சுக்கிரீவன் வந்திலன், (க)

சசு. இன்னுரா டுதமிங்கிவர்க்கும்வலி
தன்னினுரையெனத்தணிந்தாரெனில்
உன்னைவெல்லவுலகொருமூன்றிலும்
இன்னலாற்பிறரின்மைநிகழ்த்துவாய். (எ)

இ-ள். இவர்க்கும் வலிதுன்னினுரை-இவ்விருவர்க்கும் அதிகம் வலியுடையாரை, இங்கு இன்னும்காடுதும் - இங்குஇன்னுந்தேடுதும், எனத்துணிந்தார் எனில் - என்று துணிவுகொண்டாராயின், உன்னை வெல்ல - (இலக்குவ) உன்னை வெல்வதற்கு, உலகு ஒரு மூன்றினும்-திரிலோகத்திலும், தின் அல்லால்பிறர் இன்மைநிகழ்த்துவாய் - உன்னை யல்லாது பிறரின்மையைச் சொல்லுவாய். எ - று. (எ)

சஎ. மாடுவென்றியொர்மாதிரயாளனின்
சேடுசென்றுசெடிலொருதிக்கின்மா
நாடுகின்றதுநண்ணியகால்பிடித்
சோடுகின்றதுமொத்துளனுயினன். (கஈ)

இ - ள். வென்றி ஓர்மாடு - வெற்றிபொருந்திய ஒருபக்கத்திலுள்ள, மாதிரயாளனின் சேடுசென்று - திக்கயத்தினது கன்றுசென்று, செடுஇல் ஒருதிக்கின்மா நாடுகின்றதும் - இளமையில்லாத ஒருதிக்கினது யானையைத் தேடுகின்றதையும், நண்ணிய கால்பிடித்து ஓடுகின்றதும் - காண்பதற்கு கால்விசைத்தோடுகின்றதையும், ஒத்துளனுயினன் - ஒத்துச் செல்வானுயினன். எ - று. (கஈ)

சேடு ஆகுபெயர். சேடுஇல் என்பது செடிலெனநின்றது ஸ்ரீராமபிரானிருந்த விடத்தையும் சுக்கிரீவனிருந்த விடத்தையும் இரண்டுதிசைகளாகவும் அவ்விருவரையும் இரண்டுதிசைக்கரிகளாகவும் இலக்குமணனைக் கரிக்கன்றுகவுங்கொள்க.

சுக்கிரீவனைச் சொல்லியது.

சஅ. ஈந்துவாரத்தருநறைதேக்கில்
சந்தமாமயிற்சாயலர்தாழ்குழற்
கந்தமாமலர்க்காடுகடாவிய
மந்தமாருதம்வந்துறவைகுவான். (உ0)

இ - ள். அரும்நறைசிந்து ஆர்த்து தேக்கு அகில் - அரிய தேனைச் சிந்துகின்ற சந்தனமரத்தினதும் தேக்குமரத்தினதும்

அகில்மரத்தினதும் புகையுண்ட, சந்தமாமயில்சாயலர் - அழகிய பெருமை பொருந்திய மயில்போலுஞ் சாயலுடைய பெண்களது, காழ்குழல் - பாதம்வரையில் தாழ்ந்த அளகத்திற்சூட்டிய, கந்தம் மாமலர்க்காடு கடாவிய-வாசமுடைய மிகுந்த மலர்க்கூட்டங் கடாவிய, மந்தமாருதம் வந்துறவைகுவான்-தென்றற்காற்றுவீச வைகுவான். எ-று. (உ0)

தாரை சொல்லியது.

சஈ. மீட்டுமொன்றுவிளம்புகின்றுள்படை
கூட்டுமென்றுமைக்கொற்றவன்கூறிய
காட்டிதம்பினுங்காட்டிதம்பும்மெனக்
கேட்டிலீரினிக்காண்டிர்கைத்திரால். (உஈ)

இ-ள். மீட்டும் ஒன்று விளம்புகின்றுள்-மீண்டு மொன்று சொல்லுகின்றுள், கொற்றவன் - ஸ்ரீராமபிரான், படைகூட்டும் என்று உமை கூறிய - படைகளைக் கூட்டுமென் றுமக்குச்சொல்லிய, காள்திறம்பின் - நாளவதிகழியின், உம் நாள் திறம்பும் எனக் கேட்டிலீர் - உமது வாழ்நாள் கழியுமென்று கெரிந்திலீர் போலும், இனிக்காண்டிர் - இனிப்பார்ப்பீர், கைத்திர்-எமன்வாயிலகப்பட்டீர். எ-று. (உஈ)

இதுவுமது.

உ0. வாலியாருயிர்காலனும்வாங்கவிற்
கோலிவாலியசெல்வங்கொடுத்தவர்
போலுமாலும்புறத்திருப்பாரிதை
சாலுமாலுங்கடன்மையினோர்க்கெலாம். (ஈ0)

இ-ள். வாலி ஆருயிர்காலனும் வாங்கவில் கோலிவாலிய செல்வம் கொடுத்தவர் - வாலியினது நிறைந்த உயிரை நமனும் பிடிக்க வில்லைவளைத்து மிகுந்த செல்வத்தைக் கொடுத்தவர், உம்புறத்து இருப்பார்போலும் - சமையம்பார்த்து உமது கடைவாயிலிற் காத்திருப்பார்போலும், உங்கள் தன்மையி னோர்க்கு எல்லாம் - உங்களை யொத்தவர்களுக்கெல்லாம், இதுசாலும்-இது அமையும். எ-று. (உ0)

இதுவுமது.

உஈ. நிறம்பினீர்மெய்திதைத்திருசவிய
நிறம்பொலீருங்கடவினைதோர்ந்ததால்
மறஞ்செய்வானுறின்மாளுதிர்மற்றினிப்
புறஞ்செய்தாவதென்னென்கின்றபோதினவாய். (ஊ0)

இ-ள். நிறம்பொலீர்-நெஞ்சுகெட்டீர், உங்கள் நீவினை நேர்ந்தது - உங்களுடைய நீவினைப்பயன் வந்தது, (கூ உ)

கூஉ. கோளுறுத்தறகரியகுரக்கினம்
நீளெழுத்தொடரும்நெடுவாயிலைத்
தாளுறுத்தித்தடவரைதத்தன
மூளுறுத்தியபிக்கினமொய்ம்பினுல். (கூஊ)

இ-ள். கோள் உறுத்தற்கு அரிய குரக்கு இனம் - பிடித்தற்கரிய குரங்குக்கூட்டங்கள், நீள் எழுத்தொடரும் நெடும் வாயிலைத் தாள் உறுத்தி - நீண்ட கம்பங்கள் நின்ற பெரியவாயிலைத் தாழ்ப்பாள்போட்டு, மொய்ம்பினுல் - புயவலியால், தந்தடவரை - கொணர்ந்தனவாகிய பெரியமலைகளை, மூளுறுத்தி அடுக்கின-ஒன்றின்மேலொன்று வைத்தடுக்கின. எ-று. (கூஊ)

கூஎ. சிக்குறக்கடைசேமித்தசெய்கைய
தொக்குறுத்தமரத்தனவன்றில
புக்குறுக்கிப்புடைத்துமெனப்புறம்
மிக்குறுத்தனவெற்புமிறுத்தன. (கூச)

இ-ள். சிக்குறக்கடைசேமித்த செய்கைய - (குரங்குகள்) செல்வோர் சிக்கும்படிக் கடைவாயிலைக் காப்புச்செய்த தொழிலையுடையன, தொக்கு உறுத்தமரத்த-ஒருசேரச்சேர்த்த மரங்களையுடையன, துவன்றின - கூடினவாய், புக்கு புடைத்தும் என உறுக்கி - வந்து அடித்து மென்று அச்சங்காட்டி, புறம் மிக்கு இறுத்தன-அயலில் அதிகம் நின்றனவாய், வெற்பும் இறுத்தன - மலைகளையுஞ் சேர்த்துவைத்தன. எ-று. (கூச)

கூசு. நீரெலாமயனீங்குமினேர்ந்தியான்
வீரனுள்ளம்விளங்குவனென்றஞ்சும்
பேரின்றனர்யாவரும்பேர்கலாத்
தாரைசென்றனடார்குழலாரொடும். (கூசு)

இ-ள். யாவரும் பேரின்றனர் - எல்லாரும் அகலநின்றனர், பேர்கலாத்தாரை - அகலாது நின்றதாரை, தார்குழலாரொடும் சென்றனள்-பூமாலையணிந்த கூந்தலுடைய மடந்தையோடும் போயினள். (கூசு)

சுக்கிரீவன் சொல்லியது.

கூடு. அளித்தவரஞ்சநெஞ்சினடைத்தவரறிவுமுழுக்கக்
குளித்தவரின்பதுன்பங்குடைந்தவர்குடைந்தவேரி
ஒளித்தவருண்டுமீண்டிவ்வுலகெலாமுணர்வோடிக்
களித்தவொய்திகின்றகதியொன்றுகண்டதுண்டோ. (கூக)

இ-ள். அளித்தவர் நெஞ்சின் அஞ்ச அடைந்தவர் - பெற்றவர் மனத்தில் அஞ்சப்பிறந்தவரும், அறிவுமுழுக்கக் குளித்தவர்-அறிவில்லாதவரும், இன்பம் துன்பம் குடைந்தவர்-இன்பதுன்பங்களி லழுந்தியவரும், குடைந்த வேரி ஒளித்தவர் உண்டு-தோண்டிய தால்வடிந்த கள்ளை ஒளித்தவராயுண்டு, மீண்டு இவ்வுலகு எலாம் உணர ஓடிக்களித்தவர் - வந்து இவ்வுலகி லுள்ளவரெல்லாம் அக்கட்குடித்ததை யறியவோடிச் செருக்கியவரும், எய்திகின்ற கதிஒன்று கண்டது உண்டோ - அடைந்துகின்ற நற்கதியொன்றை யாராயினும் பார்த்ததுண்டோ. இல்லை. எ-று. (கூக)

இதுவுமது.

கூசு. வஞ்சமுங்களவும்பொய்யுமயக்கமுமரபில்கொட்புந்
தஞ்சமென்றுரைதீக்குந்தன்மையுங்களிப்புந்தாக்குங்
கஞ்சமெல்லணங்குநீருங்கள்ளினுலருந்தினுரை
நஞ்சமுங்கொல்வதல்லால்நரகினுநல்காதன்றே. (கூசு)

இ-ள். கள்ளின் அருந்தினுரை - கள்ளினைக் குடித்தவரை, வஞ்சமும் களவும் பொய்யும் மயக்கமும் - வஞ்சமுங்களவும் பொய்யும் மயக்கமும், மரபு இல் கொட்பும் தஞ்சம் என்றுரை தீக்கும் தன்மையும் களிப்பும் - முறைமையில்லாத சுழற்சியும் அபயமென்றுரைத் தறக்குந்தன்மையுஞ் செருக்கும், தாக்கும் - சேரும், கஞ்சம்மெல் அணங்கும்நீரும் - செந்தாமரை மலரில் வதிகின்ற இலக்குமியும் நீங்குவாள், நஞ்சமும் கொல்வதல்லால் நரகினு நல்காது - உண்டவரை விடமுங் கொல்வதையல்லாமல் நரகத்தைக் கொடுக்காது. எ-று. (கூசு)

எனவே கள்கொடுக்குமென்பது.

இதுவுமது.

கூஎ. ஐயகானஞ்சினேனிக்கறவினையிகேடு
லகையுலவன்றியேயுங்கருதுதல்கருமமன்றுல்
வெய்யதாமதலையினம்விரும்பினேனெனினைவீர்ன்
செய்யதாமரைகளனசேவடிநினைக்கவென்னுன். (கூஎ)

இ-ள். செய்யதாமரைகள் அன்னவீரன்சேவடி நிதைக் களன்ருன் - செந்தாமரை மலர்கோயொத்த ஸ்ரீராமபிரானது திருவடிகள் என்னைக் கெடுக்கவென்ருன். (கூஎ)

இஅ. திருவுறைமார்பனுந்தீர்ந்தசேயும்வந்
தொருவருங்சாலமுன்னரிமையோருரை
தருவினைத்தாகையிற்முழ்வித்தாகுமோ
பரதனீயினையபகாற்பாலியோ. (கஙஉ)

இ-ள். திருஉறைமார்பனும் - ஸ்ரீராமபிரானும், ஒருவு அரும் காலம் - நீங்குதலரிதாகிய மழைக்காலம், வந்து தீர்ந்த சேயும் - வந்து நீங்கியதாயினும், முன் உரிமையோர் உரை தருவினைத்து ஆகையில்-முன்புள்ள பெரியோரதுகட்டுரை செயலெல்லாஞ் செய்கின்ற வினைவயத்ததாகலின்; பரதநீ-பரதனை யொத்தநீ, தாழ்வித்தாகுமோ - தாழ்வித்ததாகுமோ, இனையன பகாற்பாலியோ - இவ்வாறு கூறற்பாலியோ.எ-று. (கஙஉ)

கஉ-வது. நாடவிட்டபடலம்.

பிராட்டியாரைத்தேடவிட்டதைக் கூறுகின்றபடலம்.

சுக்கிரீவன் ஸ்ரீராமபிரானுக்குக் கூறியது.

ருகூ. ஆறபத்தெழுகோடியனீகருக்
கேறுகொற்றத்தலைவரிவர்க்குமுன்
கூறசேனைப்பதிகொடுங்கூற்றையும்
நீறுசெய்திடுநீலனென்றுரைத்தனன். (கூ)

இ-ள். அனீகருக்கு ஏறுகொற்றத்தலைவர் - படைவீரர்களுக்குச்சிங்கம்போன்ற வெற்றியுடைய தலைவர், ஆறபத்து ஏழு கோடி - ஆறபத்தேழுகோடிபேர்களாகிய, இவர்க்குமுன் - இத் தலைவர்களுக்குமேல், நீலன்-நீலனென்பான். கூறசேனைப்பதி- சொல்லிய சேனைகளுக்குப் பதியாவான், கொடும் கூற்றையும்- அந்நீலன் கொடிய எமனையும், நீறுசெய்திடும் என்று ஓதினன்- நீறுசெய்வானென்று சொல்லினன். எ-று. (கூ)

ஸ்ரீராமபிரான் பிராட்டியின் திருமேனி யடையாளத்தை அநுமானுக்குச் சொல்லியது.

கூ0. ஆலிலைப்படிவந்தீட்டுமையுண்பலகைகொய்ய
பாலிறத்தட்டம்வட்டக்கண்ணடிபலவுமின்ன
போதுமென்றுரைத்தபோதும்புனைத்தரைபொதுமைபார்க்கின்
ஏதுமென்றிசைக்கினேலாவிதுவயிற்றியற்கையின்னும். (கூக)

இ-ள். கொய்யபால் நிறத்தட்டம்-நுட்பமானபாலாடை,()

கூக. முன்கையேயொப்பதொன்றமுண்டுமூன்றுலகத்துள்ளும்
என்கையேயிழுக்கமன்றெயியம்பினுங்காந்தளென்றல்
வன்கையாழ்மணிக்கையென்றன்மறுன்றையுணர்த்தலன்றி
நன்கையாட்டக்கைக்காமோநலத்தின்மேனலமுண்டாமோ. (சஙு)

இ-ள். முன்கை ஒப்பது - முன்கையையொப்பது, மூன்று உலகத்துள்ளும் - நிரிலோகத்திலும், ஒன்று உண்டு என்கை இழுக்கம் - ஒன்றுண்டென்று கூறுவது இழுக்கமாம், மணிக்கை - அழகிய அக்கைக்கு, இயம்பினும் - ஒப்புச்சொல்லினும், காந்தள் என்றல் - காந்தட்பூவைச்சொல்லுதலும், வன்கையாழ் என்றல் - வலிமை யென்னுஞ நிறுமையையுடைய வீணையைச் சொல்லுதலும், மற்று ஒன்றை உணர்த்தல் அன்றி-வேறொன்றை யுணர்த்தலல்லாமல், நன்கையாள்-நல்ல ஒப்பினையுடையாளது, கடம்கைக்கு ஆமோ - விசாலமுள்ள கரத்திற்கொப்பாகுமோ, நலத்தின்மேல் நலம் உண்டாமோ-அழகின்மேலழகுண்டாகுமோ. எ-று. (சஙு)

கூஉ. வெள்ளியமுறுவல்செவ்வாய்விளங்கிழையிளம்பொற்கொம்பின்
வள்ளுகிர்க்குவமைநம்மான்மயர்வுறவுரைக்கலாமோ
எள்ளுகிர்நீரேமூக்கையென்றுகொண்டிடறிப்பின்னும்
கிள்ளைகண்முருகின்பூவைகிழிக்குமேலுரைக்கலாமோ, (சஎ)

இ-ள். இளம்பொன் கொம்பில் - இளமையான அழகிய கொம்பையொத்த, வெள்ளிய முறுவல் செவ்வாய் - வெண்மையுடைய பற்களையுஞ் செவ்வந்த வாயையுமுடைய, விளங்குஇழை - சீதையினது, வள்உகிர்க்கு உவமை நம்மால் மயர்வு அறவுரைக்கல் ஆமோ - வலியநகங்களுக்கு ஒப்பு நம்மால் மயக்கந்தீரச் சொல்லலாமோ, கிள்ளைகள்-கிளிகள், மூக்கை நீரே எள்ளுகிர்

என்று கொண்டு - சீதையின் உதிரை யொவ்வாதென்று எம அமூக்கை நீரே இகழுதிரென்று நினைத்து, இவறி - முருக்கமரத்தின் மேலேறி, பின்னும் முருக்கின்பூவைக் கிழிக்குமேல் - பின்னும் அம்மரத்தினது மலரைக் கிழிக்குமாயின், உரைத்கலாமோ - அம்மூக்கை ஒப்புச்சொல்லலாமோ. எ - று. (சஎ)

விளங்கிழை - அன்மொழித்தொகை. முருக்கம் பூ வாய்க் கொப்பாகலானும் ஏசுவது அதுவாகலானும் பிராட்டியின் உதிர்களுக்குக் கிளிமூக் கொப்பாகாதென்று முருக்கம்பூ இகழ்வதாய் நினைத்து அதனைக் கிழிக்குமாயின் அம்மூக்கை யொப்புச் சொல்லலாமோ என்பது கருத்து.

சுஉ. நன்னுதலினாணுமுகத்தினோதலோடிப்
பன்னாளும்பன்னியாற்றுமதியெனும்பண்பதாகி
முன்னாளினிளவெண்டிங்ண்முறைநாளுங்குறைவேயாகி
எந்நாளும்வளர்ந்ததென்னினிறையொக்குமியல்பிற்றுமே. (நுசு)

இ - ள். நல்நாளும் நளினம்நாணும் முகத்தினோதலோடி - தனக்கு நற்காலமாகிய பகற்காலத்திலும் ஒப்பாகாமை பற்றித் தாமரைமலர் நாணுகின்ற முகத்தையும் நெற்றியையுங் குறித்து, முன்னாளில் இளவெண்திங்கள் - முன்னாளுண்டாகிய இளமையான வெள்ளியபிறை; பல்நாளும் பன்னி ஆற்றுமதி எனும் பண்பதாகி - பலநாளுந் தன்னை முகம் போலவும் நெற்றிபோலவுஞ்செய்து முடிக்காத மதியென்னுங் குணமாத்திரமுடையதாகி, முறைநாளும் குறைவேயாகி - நூதலுக் கொப்பாக வேண்டி முறையாய்த் தினமுங்குறைந்து, எந்நாளும் வளர்ந்தது என்னின் - முகத்துக் கொப்பாகவேண்டி எந்நாளும் வளர்ந்தென்று சொல்லின், இறை ஒக்கும் இயல்பிற்று ஆமே - அத்திங்கள் அவ்விரண்டற்குஞ் சிறிதொக்குந் தகுதியுடையதாமா. ஆகாது. எ - று. (நுசு)

சுஊ. வஞ்சவரில்லையன்றேவனத்தினுள்ளத்தினின்னர்
அஞ்சியனவெனினுத்தமழகுக்கோழிவுண்டாகா
வெஞ்செயக்குமுன்றவல்லரிதிசெயவினைத்தலீலம்
புனைமணிப்பலவடினும்புதுமையாமுவமைபூணு. (நுஎ)

இ - ள். நீலம் - நீலரத்நத்தை யொப்பிடின், புனைமணி - அலங்கரித்தலுக்குரிய முத்தையும், பவளம் - பவளத்தையும் அந்நீலமொக்கும், இன்னும் புதுமை ஆம்உவமை பூணு - இன்னும் புதுமையாகிய வேறுவமைபூணு. (நுஏ)

கஙூ-வது. பிலநீங்குபடலம்.

பிலத்துட்புகுந்து நீங்கியதை யோதுகின்றபடல.

:o:

சுஙி. போயினூர்போனபின்புறநெடுந்திசைகடோ
றேயினுரவிகாதலனுமேயின்பொருட்
காயினுரவரையங்கணனாளவதியிற்
றூயினுருலகினைத்தகைநெடுந்தாளோயார்.

இ - ள். போயினூர் போனபின் - தென்திசைக்கட் சென்றூர் சென்றபின்பு, இரவிகாதலனும் ஏயினபொருட்கு ஆயினரவரை - சுக்கிரீவமகாராசனும் ஏவினவினையை முடிக்கவல்லாரை, புறம் நெடும் திசைகள்தோறும் ஏயினன் - மற்ற நெடிய திசைகள்தோறும் போக்கினன், தகைநெடும் தாளோயார் - பெருமைபொருந்திய நெடிய அச்சேனையோர், அன்னாள் அவதியில் - அத்தகரட் கெடுவில்லா, உலகினைத் தாயினூர் - அத்திசைகளுக்குச் சென்றூர். எ-று. (சு)

சுஙூ. தாமகூடத்திரைத்தீர்த்தசங்கமும்
காமகூடப்பெருந்திசையாலயம்
வாமகூடச்சுடர்மணிவயங்குமம்
ஏமகூடத்தடங்கிரியையெய்தினர். (சுக)

இ-ள். தாமம் கூடம் திரைத்தீர்த்த சங்கமும் - ஒளிபொருந்திய முன்மண்டபத்தையுடைய அலைகளைப்பொருந்திய தீர்த்தகட்டத்திலும், காமம்கூடப் பெரும்திசையாலய - தீர்த்தியுண்டாகப் பெரியதிக்குக்கோக்காட்டிய, வாமம் கூடச்சுடர்-அழகுண்டாகச்சூரியனேயொத்த, மணிவயங்குமம்-ரத்நங்கள் விளங்குகின்ற, ஏமகூடத் தடங்கிரியை எய்தினர் - ஏமகூடமென்னும் மலையைச்சார்ந்தார். எ-று. (சுக)

சுஎ. இந்திரனகரமுநிகரிலாதது
மந்திரமணியினிற்பொன்னின்மண்ணினில்
அந்தரத்திழிசுடரவையின்ரூயினும்
உந்தருமிருடோர்தொளிராநின்றது. (சுச)

இ-ள். இந்திரன் நகரமும் நிகர் இலாதது - இந்திரனது பட்டினமும் ஒப்பில்லாதது, மண்ணினில் - அப்பிலத்துள், அந்தரத்து இழிசுடர் அவை இன்ரூயினும் - ஆகாயத்தினின் றிழி ரு ஒளிகளின்ரூயினும், மந்திரமணியினில் பொன்னில்-கூடாகிய முத்துக்களாலும் பொன்னாலும், உந்த அரும் தரந்து ஒளிராநின்றது-நீக்க அரிதாகிய இருளைப்போக்கி காநின்றது. எ-று. (சுச)

சுஅ. ஆயநகரத்தினியல்புள்ளுறவறிந்தார்
மாயைகொலெனக்கருதிமற்றுநினைவுற்றார்
தீயபிலனுட்பிறவிசென்றவிஃதொன்றே
தூயதுறக்கமெனநெஞ்சுதுணிவுற்றார். (சுக)

இ-ள். தீயபிலனுள் பிறவிசென்ற இஃது ஒன்றே-இத்தீய பிலனுள் நம்பிறவிபோயிற்று இது ஒன்றே, தூயது துறக்கம் என நெஞ்சு துணிவுற்றார் - தூயதாகிய சுவர்க்கமென்று துணிவுகொண்டார். (சுக)

சுயம்பிரபை அறமானுக்குச் சொல்லியது.

சுகூ. நான்முகனிசைத்தநெறிநூலுவரொய்தாய்
மேனமுகமிர்த்துவெயில்காலொடிவிழுங்கா
மான்முகலத்தவன்மயன்செய்ததவத்தால்
நான்முகனிற்றுளதிம்மாநகரன்லோய். (சுஅ)

இ-ள். நல்லோய் - பெரியோய், நான்முகம் துணிக்கநெறி-யோகநூல்சொல்லிய நுட்பமானவிதி, நொய்தாய் நூலுவர்-எளிதாய் நூலபொருந்த, மேல்முகம் நிமிர்த்து காலொடு வெயில் விழுங்கா - மேலேமுகத்தை நிமிர்த்து காலொடு வெயிலை விழுங்கி, மான்முகம் நலத்தவன் மயன்செய்த தவத்தால்-மான் முகத்தையுடைய நன்மையுடையவனாகிய மயன்செய்த தவத்தால், (அவனுக்கு) இம்மாநகரம் நான்முகன் அளித்துளது-இம்மாநகரம் பிரமன்கொடுத்துளது. எ-று. (சுஅ)

கச-வது. ஆறுசெல்படலம்.

அங்கதனுதியர் வழிச்சென்றதைக்கூறுகின்றபடலம்.

எ0. இடியுண்டாங்கஞ்ரோங்கலிற்றதொத்
தடியுண்டான்றளர்ந்தலறிவீழ்தலும்
தொடியின்ரூள்விசைத்தெழுந்தசுற்றினர்
பிடியுண்டாரெனத்தியிலும்பெற்றியார். (அ)

இ-ள். பிடி உண்டார் எனத்தியிலும் பெற்றியார் - பகைவர்கையில் அகப்பட்டவரைப்போலச் சோர்வா லொடுங்கித் தியிலுத்தன்மையார், (அ)

எக. புண்ணெவெம்முலைப்புளினமேய்தடத்
தண்ணவாம்பலின்னமிர்தமூறவாய
வண்ணவெண்ணகைத்தாளவாண்முகப்
பெண்ணேணணினர்பெண்ணேணாடுவார். (கஉ)

இ-ள். பெண்ணே நாடுவார் - சீதாபிராட்டியைத் தேடுவார், புண்ணெவெம்முலை-ஒப்பாகாமைபற்றிச் சக்கரவாகம் வருந்துகின்ற விரும்பத்தக்க முலைகளைப்போன்ற, புளினம் ஏய்தடத்து - மணற்பரப்புக்கள் பொருந்திய இடத்தையும், உண்ணஉண்ணுகின்ற, இன் அமிர்தம் ஊறுவாய் - இனிய அமிர்தமூறுகின்ற வாயைப்போன்ற, ஆம்பல் - செவ்வல்லிமலரையும், வண்ணவெண் நகைத்தாளம்- நிறம் பொருந்திய வெள்ளிய பற்கள் போன்ற முத்துக்களையும், வாள் முகம் - ஒளிபொருந்திய தாமரைமலராகிய முகத்தையுமுடைய, பெண்ணே நண்ணினர்-பெண்ணையாற்றைச் சார்ந்தார். எ-று. (கஉ)

எஉ. அணிகொழித்தவக்தெவருமாடினர்
பிணிகொழித்தவெம்பிறவிவேரின்வல்
றுணிகொழித்தறஞ்சுழிகடோறுள
மணிகொழித்திடுதுறையின்வைகினர். (கச)

இ-ள். எவரும் - எல்லாரும், அணிகொழித்தவக்து ஆடினர் - ஆற்றினழகைச் சொல்லிவந்து நீராடி, பிணிகொழித்த வெம்பிறவி வேரின் - துன்பத்தை யொருங்குசேர்த்த வெவ்வி

யசென்மத்தின் மூலத்தினது, வன்துணி கொழித்து அரும் சுழிகள் தோறும் - வலியதண்டைப் போக்கி அரிய சுழிகள் தோறும், நல்மணிகொழித்திடு துறையின் வைகினர் - நல்லரத்தங்களை யொதுக்குகின்ற நீர்த்துறையில் வைகினர். எ - று. (கச)

எஉ. தசனவப்பெயர்ச்சரளசண்பகத்
தசனவப்பிறந்தசனனுடொரீஇ
உசனவப்பெயர்க்கவியுதித்தபோ்
இசைவிதர்ப்பாடெனிதினெய்தினர். (கசு)

இ-ள். சாளசண்பகத்து - பத்தியாகிய சண்பகமரங்களோடு, அசனம் - வேங்கைமரங்கள், பிறந்த - உண்டாகிய, தசனவப்பெயர் - தசனவமென்னும் பேருடைய, அ அகன்நாடு ஒரீஇ - அந்த அகன்ற நாட்டை நீத்து, உசனவப்பெயர்க்கவி உதித்த-உசனவனென்னும் பெயரையுடைய சுக்கிரன் பிறக்க, பேர்இசை விதர்ப்பநாடி எளிதின எய்தினர் - பெரியகீர்த்தியையுடையவிதர்ப்பநாட்டை எளிதிற் சார்ந்தார். எ-று. (கசு)

எசு. உண்டகத்துளாருறையுமைம்பொறிக்
கண்டகர்க்கருங்காலனுயினர்
தண்டகத்தையுந்தடவியேகினர்
முண்டகத்துறைசுடி அமுற்றினர். (கக)

இ-ள். உண்டி அகத்துள் ஊர் உறையும்-விடயங்களையுண்டு மனத்துட்பொருந்தி வதிகின்ற, ஐம்பொறிக்கண்டகர்க்கு - ஐம்பொறிகளாகிய துட்டர்களுக்கு, அரும்காலன் ஆயினர் - அரிய கமனயினர், தண்டகத்தையும் தடவி ஏகினர் - தண்டகவனத்தையுந் தேடிச்சென்று, முண்டகத்துறை கடிது முற்றினர்- கடற்கரையை விரைவிற்சார்ந்தார். (ககஅ)

எடு. விண்ணுறநிவந்தசோதிவெள்ளியருன்றுமேவிக்
கண்ணுறநோக்கலுற்றுர்ச்சளியுறக்களித்தகாமப்
பண்ணுறஇளவிச்செவ்வாய்ப்படையுறநோக்கினுளே
எண்ணுறுதிறத்தங்காளரிடருமனத்தரெய்த்தார். (உக)

இ-ள். எண் உறுதிறத்தும் காளர்-மனத்திலும்பாரார், (

எசு. சுரும்பொடுதேனும்வண்டுமன்னமுந்தவன்றிப்புள்ளும்
கரும்பொடுசெங்கெற்சாடுங்கமலவாவிகளுமல்கிப்
பெரும்புன்னமருதஞ்சூழ்ந்தஇடக்கையின்இடக்கச்சென்றூர்
சூரும்பைநீர்முரைஞ்சுஞ்சோலைக்குலிந்தமும்புறத்துக்கொண்டார்.

இ-ள். சுரும்பைநீர் முரைஞ்சும்சோலை - தென்னங்குரும்பை யுடைந்து நீரோடுகின்ற சோலைகளையுடைய, குலிந்தமும்புறத்துக்கொண்டார் - குலிந்தநாட்டையுங் கடந்துசென்றார்.

எஎ. சூலடிப்பலவின்சுளைதுங்குதேன்
கோலடிப்பவெரீஇக்குலமள்ளர்சேர்ச்
சாலடித்தருஞ்சாலியின்வெண்முளை
தோலடிக்கிளையன்னதுவைப்பன. (சஅ)

இ-ள். குலம் மள்ளர் - கூட்டமாகிய உழவர், சூல் பலவின் அடிசுளை தூங்குதேன் - கருவுடைய பலாமரத்தினது வேரிற் பழுத்த பழத்தில் மொய்த்தவண்டுகளை, கோல்அடிப்ப - ஏரோட்டுகின்ற கோலாலோச்ச, கிளை அன்னம் - அம்மரத்தின் கிளைகளிலிருந்த அன்னங்கள், வெரீஇ - அஞ்சி, சேர்ச்சால் அடித்தரும் சாலியின் வெண்முளை - ஏர்ச்சாலடியில் முளைத்த நெல்லினது வெள்ளிய முளைகளை, தோல் அடி - தோலுடைய அடிகளால், துவைப்பன - துவைப்பன. எ-று. (சஅ)

எஏ. தேரைவன்றலைத்தெங்கிளம்பாளையை
காரையென்றினங்கெண்டைகடுங்குவ
தாரைவன்றலைத்தண்வளாவம்பலைச்
சேரையெண்ணுபுலம்புவதேரையே. (சஉ)

இ-ள். தேர் ஐவன் கலை-முதிர்ந்த அழகிய வலிய தலையையுடைய,

நான்காவது. கிட்கிந்தாகாண்டம்
முற்றிற்று.

காண்டம் நான்குக்கு ஆகிருவிருத்தம் - சுஉசு.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளேசரணம்.

ஸ்ரீ

கிட்கிந்தாகாண்டம்

செய்யுளகராதி.

செய்யுள்.	பக்கம்.
அங்கொர்	ஈ
அடையீர்	ஈ
அணிகொழித்து	உஎ
அரிப்பெரும்	எஉ
அவ்விடத்து	கo
அளவில்	கஈ
அளித்தவர்	உக
அன்னகாலம்	கள
ஆயகர	உசு
ஆயமா	எ
ஆலிலை	உங
ஆறுபத்து	உஉ
இடியுண்டி	உள
இந்திரன்	உசு
இருமை	கக
இல்லாத	சு
இன்னும்	கஅ
ஈர்ந்தூண்	உ
உண்டகத்துள்	
உழையுலாம்	ஈ
எற்பொரு	ங
எனீர்	ங
ஐயகான்	உக
கருந்தகைய	கசு
களவில்	ங
குவான்மணி	உ
கொற்றவ	சo
சொலுத்தல்	உo

செய்யுள்.	பக்கம்.
சிக்குற	உo
சிந்துவார	கஅ
சுரும்பொடு	உஅ
சூலடி	உக
சொன்னிறை	கள
தசகவ	உஅ
தாலாற்றம்	க
தீரும	கள
தூறையடித்தன	சஉ
தாமகூடம்	உஙி
திருவுறை	உஉ
திறம்பினீர்	கக
தென்பு	அ
தேரை	உக
தேனிழுக்கு	ஈ
நல்லுறப்பு	எ
நவ்வி	ஈ
நன்னரும்	உச
நீடிராகம்	ஈ
நீரெலாம்	உo
நூன்முகம்	உசு
நெறிழிய	கசு
நோக்கிலுல்	கச
பஞ்சபூத்த	ஙி

செய்யுள்.	பக்கம்.
பாசிழை	கஙி
பாடலம்	கஉ
புண்ணில	உள
பூவியல்	கங
பேடையும்	கங
பொழித்த	கச
போயினர்	உஙி
மண்ணுளார்	ங
மழைவாடை	கச
மறக்கிறம்பல்	கக
மாடிவெனறி	கஎ
மீடுமொன்று	கஙி
முளரிமேல்	அ
வேங்கை	உங
மூன்றரு	க
வஞ்சமும்	உக
வரியார்	சு
வசைபவர்	உசு
வாரளி	ஙி
வாலியார்	ககு
விண்ணுற	உஅ
விழையேன்	கஙி
விற்முங்கு	கக
வெள்ளம்	அ
வெள்ளிய	உங
வேலிகிறை	கஙி

செய்யுளகராதி முற்றிற்று.

ஸ்ரீ

கிட்கிந்தாகாண்டம் பிழைதிருத்தல்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தல்.
கச	உ0	வருத்தோ ...	வருத்தோ.

சுந்தரகாண்டம்.

உஉ	கள	புகழின ...	புகழின.
உக	கஉ	ரெடர்த்தின் ...	ரெடர்தன்.
ஙச	கச	பிடத்து ...	பிடித்து.
ஙள	ககு	திசையின ...	திசையிற்.

கனருக —குருவாழ்க குருவேதுணை.

ஸ்ரீ

ஸர்வம்விஷ்ணுமயம்ஜகத்.

ஸ்ரீமத்கம்பராட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

ஸ்ரீமத்கம்பராமாயணம்

அருங்கவிவிளக்கம்.

ஐந்தாவது. சுந்தரகாண்டம்.

பாலகாண்டமுதலிய ஏனையகாண்டங்களைப் போல
ணக்குறியாயிது இலங்காகாண்ட மெனப்பெயர் பெறுது
காண்டமெனப் பெயர்பெற்ற தென்னையேவெனின் பெரு
து திருமேனியினழகைக் கூறுகின்றமையின் சுந்தராகாண்ட
ன்னும் பெயர்த்தாயிற்று.

வடமொழிச் சதுர்வர்ணவகிண்டவசனப்படி ஆஞ்சனேய
ருக்குச் சுந்தரனென்னும் பெயருண்மையானும் இக்காண்டமு
முழும் அவர்செயலையே கூறுகின்றமையானும் இதற்குச் சுந்
தரகாண்டமென்னும் பெயராயிற் றென்பாருமுளர்.

க - வது. கடருவுபடலம்.

அனுமான்தென்கடலைத்தாவியதைக்கூறுகின்றபடலம்.

காப்பு.

க. அலங்கலிற்றோன்றும்பொய்ம்மையரெனப்பூதமைந்தும்
விலங்கியவிகாரப்பாட்டின்வேறுபாடுற்றவீக்கம்
கலங்குவதெவரைக்கண்டாலவரென்பார்கவிலேந்தி
இலங்கையிற்பொருதான்றோமறைகளுக்கிறையாவார். (க)

இ - ள். அலங்கலில் தோன்றும் பொய்மை அரவு என - பழுதையால் காணப்படுகின்ற பொய்ப் பாம்புபோல, பூதம் ஐந்தும் விலங்கிய விகாரப்பாட்டின் - ஐம்பூதங்களும் (தந்திலையினின்றும்) பௌதிகமென்று நீங்கிய * அறுவகை விகாரப் படுதலையுடைய, வேறுபாடு உற்றவீக்கம் - (தேவர் மக்கள் விலங்குதாவரமென) வேறுபாட்டைப் பொருந்திய பிறப்பின் மிகுதி, கலங்குவது எவரைக்கண்டால் - அஞ்சி நீங்குவது யாரைப்பார்த்தால், மறைகளுக்கு இறுதியாவார் - வேதங்களின் முடிவு பொருளானவராகிய, அவர் - அவர், கைவில் ஏந்தி இலங்கையில் பொருதார் என்பர் - இடது திருக்கரத்தில் தனுவேந்தி இலங்காபுரியிற் போர்புரிந்தாரென்று சொல்லுவாரிந்தோர். லங்குவதெவரைக்கண்டா லெனவே மறைகளுக் கிறுதியாவா கண்டால் கலங்குமென்பதாயிற்று. எ - று.. (க)

லங்கல் ஆகுபெயர். அன்று ஏ - அசைகள்.

ஆஞ்சநேயர்கடலைத்தாண்டியகாலநிகழ்ந்ததைக்கூறியது.

வன்றந்தவரிகொணாகம்வயங்கனலுமிழும்வாய
பொன்றந்தமுழைதோறும்புறத்தராய்ப்புரண்டுபோவ
கின்றந்தமில்லாளுனறநெரிந்துழைழுந்திலக
குன்றந்தன்வயிறுகீறிப்பிபுங்கினகுடர்கண்மான. (ச)

இ - ள். வன்றந்தவரிகொள்நாகம் வயங்கு அனல் உமிழும்வாய - வலிய பற்களையும் வரியையுமுடைய பாம்புகள் எரிகின்ற நெருப்பைக் கக்குகின்ற வாயையுடையனவாய், பொன் தந்த முழைகள் தோறும் புறத்து உராய்ப் புரண்டு-பொன்னைத்தருகின்ற குகைகள் தோறு நின்று புறப்பட்டு வெளியிடத்தைத் தேய்த்து உருண்டு, அந்தம் இல்லான் நின்று ஊனற - முடிவில்லாதவனுகிய அணுமான அம்மலை மெனின்றழுத்த, நெரிந்து கீழ் அழுந்தி நிலக்குன்றம் தன் வயிறு கீறி - உடைந்து புவியுளமுழுதிக் கறுத்தமலையினது வயிறு கிழித்து, பிறங்கின குடர்கள் மான - சரிந்த குடர்களே யொப்பாக, போவ - செல்வன. எ - று.

* ஊறுபடவொன்றிலே பிறத்தல், பிறந்தளவாதல், வேறுபடவளர்தல், வளர்ந்த லொன்றுய் வினைந்தமைதல், மாறுபட்டதேய்தல், அறமாய்தல்.

மலையின் குடலை யொப்பாகப் பாம்புகள் போவன வென்பது கருத்து.

ஈ. புறத்தறலஞ்சிவேரோரணம்புக்குறைதல்போக்கி
மறத்தொழிலரக்கர்வாழுமாநகர்மனுவின்வந்த
திறத்தகையிராமனென்னுஞ்சேவகற்பற்றிச்செல்லும்
அறத்தகையரசன்றின்போராழியுமனையனனன். (ஈ0)

இ - ள். அறத்தகை அரசன் - நின்போர் ஆழியும் அனையன் ஆனன் - அறத்தைக் கரப்பதில் தகுதியுடைய தயரதச்சக்கிரவர்த்தியின் மிக்கவலியுடைய சக்ராயுதத்தையும் அணுமானைப் பார்யினன். (ஈ0)

உ. நாலிஞெலைசூன்றடுக்குறவடுக்கிரகர்
மேலின்மேனின்றகாலுஞ்சென்றகூலத்தினவிண்டு
காலினுலளந்தவானமுகட்டையுங்கடக்கச்சால
வாலினுலளந்தானென்றுவானவர்மருளச்சென்றன். (ஊஊ)

இ - ள். விண்டு காலினுல் அளந்த - நிருமால் சீர்பாதத்தாலளந்த, நாலிஞெடி உலக மூன்றும் நடுக்குற அடுக்கி - நாலிஞெடி மூன்றுகிய மேலேழு லோகங்கள் தத்தமிடத்திற் பொருந்த அடுக்கப்பட்டு, நாகர்மேலின் மேல் நின்ற காலும் சென்ற கூலத்தின்-தேவர்களது மேலுலகங்களுக்கு மேலுள்ளவரையிலுமுயர்ந்த எல்லை யினையுடைய, வானமுகட்டையும்-அண்டமுகட்டையும், கடக்க - கடந்துசெல்ல, காலவாலினுல் அளந்தான் என்று வானவர் மருளச்சென்றன் - காலபாசத்தை யொத்த வாலினுலளந்தானென்று தேவர்கள் மயங்கப் போயினன். எ - று. (ஊஊ)

ஊ. விளித்தப்பின்வேலைதாவும்வீரன்வாலியைதமெய்க்கும்
அளித்தப்பினுமனென்னுமநத்தாயும்பெற்றதாயும்
களித்தப்புன்றொழினிமேலின்றவரக்காகண்ணுறுவராமென்
றெளித்தப்பின்செல்லுங்காலபாசத்தையொத்தன்றே. (ஊச)

இ - ள். விளித்து - ஒலித்து, பின்வேலைதாவும் வீரன் வால் - பின்பு கடலைத் தாண்டுகின்ற அணுமானுடையவால், வேதம் மெய்க்கும் - வேதமுண்மையாய்ச் சொல்லுகின்ற, அவி - இராகவ பிரானருளாகிய, துப்பின் அனுமன் என்னும் அறம் துணைபெற்ற தாயும் - வலியினையுடைய அனுமனென்று சொல்

லப்படுகின்ற தருமத்தைத் (தனக்குத்) துணையாகப் பெற்றதாயி
ருந்தும், களித்து - கள்ளுண்டு, புன் தொழில் மேல் நின்ற அ
ரக்கர் கண்ணுறுவர் என்று - ஈனச்செய்கையினிடத்தில் நிலை
பெற்ற இராக்கதர் கண்டு கொள்ளுவரென்று, ஒளித்துப் பின்
செல்லும் காலபாசத்தை ஒத்தது - மறைந்து அவ்வனுமானுக்
குப் பின்செல்லுங் காலபாசத்தை யொப்பாயிற்று. எ-று. (சஎ)

சு. இங்ஙாகமன்னுனெறிகாலெனவேகும்வேலே
இங்ஙாகமாவிற்செறிஞீட்டிசைக்காவல்செய்யும்
கைங்ஙாகமன்னுள்கடல்வத்தொர்காட்சிதோன்ற
மைங்ஙாகமென்னும்மலேவானுறவந்ததன்றே. (சஅ)

இ-ள். இம்மலேயையொத்த அனுமான் வீசுகின்ற காற்
றைப்போலச் செல்லுங்காலே, திக்கயங்களில் நெருங்கிய கீட்டி
சையைச் சுமந்து நிற்பதாகிய, துதிக்கையுடைய வெள் யானை
(கடைந்த) அந்காளில் கடலினின்று வந்ததாகிய ஒரு தோற்றந்
தோன்ற, மைநாக மென்னும் மலே ஆகாயத்தைப் பொருந்த
வந்தது. எ-று. (சஅ)

எ. நூலேந்துகேள்வினுகாப்புலஞ்சேக்கநுரைபோர்
போலேந்துகின்றவனிபரண்மெய்பொருதுநீங்கக்
காலாழ்ந்தழுந்திக்கடல்புக்குழீஇக்கச்சமாகி
மாலேந்தவோங்குதெடுமந்தரமேயுமான. (சஉ)

இ-ள். நூல் ஏந்து கேள்வி நுகாராப்புலன் நோக்கல் உற்
றூர்போல்-நூல்சொன்ன பொருட் கேள்வியைக் கேளாமல் வி
ஷயங்களே யனுபவிப்பதில் தலைப்பட்ட சிறுவரைப்போல, அவ
னியாள ஏந்துகின்று மெய் பொருது நீங்க - பூதேவி முன்பே
ந்நினின்று பின்பு தாங்க சரீரம் பொறுக்காமல் விலக, கால -
(சந்திரனுகிய) தூணும், ஆழ்ந்து - அமிழ்ந்து, அழுந்தி - (மத
காகிய மலேயும்) அமிழ்ந்து, கடல்புக் குழிக்கச்சமாகி - கடலு
முள்ளழுந்தியபோது கூர்மாவதாரஞ்செய்து, மால் ஏந்த
ஓங்கு நெடுமந்தரமேயுமான - திருமாலேந்த மேலெழுந்த நெ
டியமந்தரகிரியையு மொப்பாக. எ-று. (சஉ)

அ. நிறங்குங்குமமொப்பனநீனிறம்வாய்த்தநீரின்
நிறங்கும்பவளக்கொடிசுற்றினசெம்பொனேய்ந்த
பிறங்குஞ்சிகரப்பட்டமுன்றிறைமுறும்பிணவோ
டுறங்குமம்மகரங்களுயிர்ப்பொடுணர்ந்துலாவ. (சஏ)

இ-ள். குங்கும நிறம் ஒப்பன - குங்கும நிறத்தை யொ
ப்பனவாயும், நீல்நிறம்வாய்த்த - நீலநிறத்தைப் பொருந்தின
வாயும், நீரில் இறங்கும் பவளக்கொடி சுற்றின - புனலி லிறங்
குகின்ற பவளக்கொடிகள் சுற்றினவாயும், செம்பொன் ஏய்ந்த-
செம்பொன்னேப் பொருந்தின வாயுமுள்ள, பிறங்கும் சிகரப்ப
டர் முன்றில்தொறும் - விளங்குகின்ற அம்மலேச் சிகரங்களாகி
ய படர்ந்த முற்றங்கள் தோறும், பிணேயோடி உறங்கும் மகரங்
கள் உயிர்ப்பொடு உணர்ந்து உலாவ - பெண் மீன்களோடு தூ
ங்குவனவாகிய மகரமீன்கள் மூச்சோடு நித்திரை தெளிந்து ச
ஞ்சரிக்க. எ - று. (சஎ)

கூ. கூன்சூன்முதிர்பிறைகுரைக்கநிரைத்தபாசி
வான்சூழ்மழையொப்பவயங்குபளிங்குமுன்றி
ன்சூலநாளிற்றகைமுத்தமுயிர்த்தசங்கம்
மீன்சூழ்வருமம்முழுவெண்மதிவீறுகிற. (சஅ)

இ-ள். கூன் சூல் முதிர் இப்பிகுரைக்க - வடிவுடையகரு
ப்பமுதிர்ந்த இப்பிகள் ஒலிக்க, நிரைத்த பாசிவான் சூழ்மழை
ஒப்ப - நிரைந்த பாசிகள் ஆகாயத்தைச் சூழ்ந்த மேகங்களே
யொப்பாக, வயங்கு பளிங்கு முன்றில் - விளங்குகின்ற பளிங்
குப் பாறை முன்றிலில், சூலநாளில் தகைமுத்தம் உயிர்த்த சங்
கம் தான் - கருப்பத்தைப் பெறுகின்ற காலத்தில் பெருமை
பொருந்திய முத்துக்களே யீன்ற சங்கமானது, மீன் சூழ்வரும்
அம்முழுவெண்மதி வீறுகிற - நக்ஷத்திரங்கள் சூழ்ந்து வருகி
ன்ற அவ்வெள்ளிய பூரணச் சந்திரனது பெருமையைக்குலைக்க.
எ - று. (சஅ)

இப்பி ஒலி - மேகவொலி, பாசி - மேகம், பளிங்கு முன்
றில் - ஆகாயம், முத்து - நக்ஷத்திரம், சங்கம் - சந்திரன்.

கo. பல்லாயிரமாயிரங்காசினம்பாடிமைக்கும்
கல்லார்சிமயத்தடங்கைத்தலநீண்டுகோட்டத்
தொல்லார்கலியுட்புகமூழ்கிவயங்குதோற்றத்
தெல்லாமணியீட்டமுகந்தெழுகின்றதென்ன. (சக)

இ-ள். பல் ஆயிரம் ஆயிரம் காசு இனம்பாடு இமைக்கும்-
அனேகவாயிரத்தக் கூட்டம் பக்கங்களில் மின்னுகின்ற, கல்

ஆர் சிமயத்தடங்கைத் தலம் நீண்டுகாட்ட - அம்மலையனதுசை
ரங்களாகிய விசாலித்தகைத்தலங்கள் நீண்டு தோன்ற, தொல்
ஆர்கலி உள்புக மூழ்கிவயங்கு தோற்றத்து-பழைய கடலில் அ
ழுந்தமுழுகி அங்கு விளங்குகின்றஒளியையுடைய,எல்லாமணி
யிட்டம் முகந்து எழுகின்றது என்ன - எல்லா இரத்தினக்கூட்
டங்களையும் வாரி (முத்துக்குளித் தெழுகின்றவனைப்போல)
வருகின்றதென்று சொல்லும்படி. எ-று. (சுசு)

அனுமான் மைந்நாகமலைக்குச்சொல்லியது.

கக. முன்பிற்சிறந்தாரிடையுள்ளவர்காதன்முற்றப்
பின்பிற்சிறந்தார்குணநன்றிதுபெற்றயாக்கைக்
கென்பிற்சிறந்தாயதொருற்றமுண்டென்னலாமே
அன்பிற்சிறந்தாய்தொர்பூசனையார்கணுண்டே. (சுக)

இ-ள். காதல்முற்ற - ஆசை நிரம்பக் கொடுப்பதில், முன்
பில் சிறந்தார் - முற்காலத்திற் சிறந்தமுதல் வள்ளல்களும்,
இடை உள்ளவர் - நடுவிலுள்ள நடுவள்ளல்களும், பின்பிற்சிற
ந்தார் - பின்புள்ள கடைவள்ளல்களும், குணம்நன்று - கொண்
டகுணம் நன்று; இது பெற்றயாக்கைக்கு - இக்குணத்தைக்
கொண்ட சரீரத்திற்கு, என்பில் - ததீசி மகாமுனி கொடுத்த
முதுகெலும்பிலும், சிறந்தாயது ஓர் ஊற்றம் உண்டு என்ன
லாமே - சிறந்துள்ளதாகிய வோருறுதிப் பொருளுண்டென்று
சொல்லுதல்கூடுமோ, (கூடாது) அன்பில் - அவ்வாறெனைபைக்
கொடுத்தது மன்பாலாதலால், சிறந்தாயது ஓர் பூசனையார் கண்
உண்டு - சிறந்துள்ளதாகிய அவ்வன்பிலுமிக்க வொரு பூசனை
யாரிடத்திலுள்ளது, இல்லை. எ-று. (சுச)

வேண்டாது வலியத்தா மேகொடுப்பவர் - முதல்வள்ளல்
கள், வேண்டக்கொடுப்பவர் - இடைவள்ளல்கள், புகழ்க் கொடு
ப்பவர் - கடைவள்ளல்கள்.

கஉ. செவ்வான்கதிருங்குளிர்திங்களுந்தேவர்வைகும்
வெவ்வேறுவிமானமுமீண்டுமேகமற்றும்
எவ்வாயுலகத்தவுமீண்டியிருந்ததம்மின்
ஒவ்வாதனவொத்திடுழிவெங்காலுமொத்தான். (சுஙு)

இ-ள். செவ்வான் கதிரும் குளிர்திங்களும் - செவந்த
பெருமையுடைய சூரியனும் குளிர்ந்த சந்திரனும், தேவர் வை

கும் வெவ்வேறு விமானமும் - தேவர்களுருகின்ற வெவ்வேறு
விமானங்களும், மீண்டு மேகமற்றும் - நக்ஷத்திரங்களோடு
மேகமுதல் மற்றும், எவ்வாய் உலகத்தவும் - எல்லாவிடங்களி
லுள்ளனவும், ஈண்டி இருந்ததம்மில் ஒவ்வாதன ஒத்திட - சேர்
ந்திருந்த தம்முள் ஒன்றுடொன்று சேராதவைக ளெல்லா
மொருங்கு சேர, வெம்ஊழிகாலும் ஒத்தான் - வெவ்விய ஊழி
க்காற்றையும் போன்றான். எ-று. (சுஙூ)

ஈண்டி இருத்தலாவது ஆகாயத்திற் சேர்ந்திருத்தல். ஒவ்
வாதனவாவது அதனுள் பலவேறுமண்டலங்களில் தனித்தனி
யே யிருத்தல். அனுமான் சென்ற வேகத்தால் அவை யெல்லாம்
ஒரிடத்தனவாயின வென்பது கருத்து.

கஙு. வாளொத்தொளிர்வாலெயிறூழின்மருங்கிமைப்ப
நீளொத்தயர்வால்வின்விசும்புநிரம்புமெய்யன்
கோளொத்தவன்மேனிவிசும்பிருகூறுசெய்த
காளொத்தமேலோளிமிழிருஞ்சுடர்ஞாலம். (சுஙு)

இ-ள். வாள் ஒத்த ஒளிர்வால் எயிறு ஊழின் மருங்கு
இமைப்ப - வாளாயுதத்தை யொத்து விளங்குகின்றவெள்ளைப்
பற்கள் வரிசையாகவாயினிருபுறத்திலும் விளங்க, (அதனால்)
மேல் ஒளிஉற்ற-ஆகாயமெல்லாம் பிரகாசமுற்றன, நீளம்ஒத்த-
சூரியமண்டலத்தளவு நீளஞ்சரியாய், உயர்வாலின்-உயர்ந்தவா
லால், விசும்பு நிரம்பு மெய்யன் - வானத்தில் (ஒளியை) பரப்பு
கின்ற மேனியுடையவனாகிய சூரியனை, கோள் - இராகுவைப்
போல விழுங்குதலில், ஒத்த அவன் மேனி - ஒப்பாகிய அவ்வனு
மானது திருமேனியால், விசும்பு இருகூறு செய்தகாள் ஒத்
தது - விண்ணைஇரண்டுபங்கு செய்த காலத்தை யொத்ததாய்,
கீழ்-வானத்தின் கீழ், ஞாலம் இருள் உற்ற - பூமியெல்லா மிரு
ளடைந்தன. எ-று. (சுஙு)

அனுமானது திருமேனியினீளத்தாலும் பருமத்தாலும்
ஆகாயமிரண்டுபங்கு செய்தாற்போலாகிப் புவியெல்லா மிரு
ளாயின. தந்தவரிசையால் ஆகாயமெல்லாமொளியாயினவென்
பது கருத்து.

கச. பேழ்வாயொராரக்கியருக்கொடுபெட்பிலேங்கிக்
கோழ்வாயரியின்குலத்தாய்கொடுங்கூற்றமுட்க
வாழ்வாயெனக்காமிசமாய்வருவாய்கொலென்னு
நீழ்வாய்விசும்பின்றனதச்சிநெருங்கினளுள். (சுஎ)

இ-ள். (சுரசையென்பாள்) அகன்ற வாயையுடைய ஒரு அரக்கியுருவைக்கொண்டு அனுமானைத் தின்ன ஆசையாலே ங்கி, கொழுப்பு வாய்ந்த வானரகுலத்தாய், கொடியயமனுமஞ் சவாழ்வாய், எனக்காகிய மாமிசமாய் (எனதுவாய்க்குள்) வரு வாயோவென்று, நெடுமைகொண்ட ஆகாயத்தைத் தனதுச்சி யால் முட்டி நின்றுள். எ-று. (சுஎ)

கடு. அக்காலெயரக்கியுமண்டமனந்தமாகப்
புக்காணிறையாதபுழைப்பெருவாய்திறந்து
விக்காதவிழுங்கதின்முளதுகோக்கிவீரன்
திக்காரவள்வாய்சிறிதாம்வகைசேணினீண்டான். (எக)

இ-ள். அப்போது அவ்வரக்கியு மநந்தமாக அண்டங்கள், புகுந்தாலு நிரம்பாத குகையை யொத்த பெரியவாயைத் திறந்து, விக்காமல் விழுங்கின்றுள், அனுமான் அதைப்பார்த்துத் திக்குக்களைப் பொருந்தநிற்கின்ற அச்சுரசையினதுவாய் சிறி தாகும் விதம் அகலத்துடனுயர்ந்தான். எ-று. (எக)

கசு. நீண்டானுடனேசுருங்காநிமிர்வாள்வயிற்றின்
ஊண்டானெனவுற்றெருயிர்ப்புயிராதமுன்னர்
மீண்டானதுகண்டனர்விண்ணுறைவோர்களெம்மை
யாண்டானவலனென்றலர்தூஉய்நெடிதாசிசொன்னர். (எஉ)

இ-ள். அவ்வாறுயர்ந்த அனுமான் சுருங்கி, நிமிர்வாளாகிய அச்சுரசை வயிற்றில், உணவாகின்றே னென்று புகுந்து ஒரு மூச்சு விடுவதற்கு முன்பு, (அவள்மார்பைப்பிளந்து) வந் தான், அதனைப்பார்த்த விண்ணுறைவோர்களாகிய தேவர்கள், எம்மை யடிமைகொண்ட அனுமான வல்லனென்று மலர்களை த்தூவி வாழ்த்தினர். எ-று. (எஉ)

கள. வெங்கார்நிறப்புணரிவேறேயுமொன்றைப்
பொங்கார்கலிப்புணரப்பொலிவதேபோல்
இங்கார்கடத்திரோனென்னுவெழுந்தாள்
அங்காரதாரைபெரிதாலாலமன்னுள். (எசு)

இ-ள். பொங்கு ஆர்கலிப்புனல் - பொங்குகின்ற கடல் நீர், வேறேயும் - தனக்கு வேறுகவும், வெங்கார் நிறப்புணரி ஒன்றை - வெவ்விய கறுப்பு நிறமுடைய கடலொன்றை, தரப் பொலிவதுபோல் - பெற்றுவிட அக்கடலுக்குமேல் விளங்குத ல்போல, பெரிது ஆலாலம் அன்னுள் - மிகுந்த விடத்தையொ த்த, அங்காரதாரை - அங்காரதாரை யென்பாள்கின்று, இங்கு என்னே ஆர்கட்டத்திர் என்னு எழுந்தாள் - இவ்விடத்தி லென் னே யார் கடந்து செல்லுகின்றீரென் றெழுந்தாள். எ-று.

கட்டத்திரோனவென்று பாடமாயின் யாது காரணத்தால் என்று கூறுக.

கஎ. காதக்கடும்குறிகணக்கிறுதிகண்ணுள்
பாதச்சிலம்பினலிவேலையொலிப்ப
வேதக்கொழுஞ்சுடரைநாடிவெறிமேலுள்
ஓதத்தின்மேவுமதுகைடவரையொத்தாள். (எஎ)

இ-ள். காதக்கடும்குறி - காதவழித்தூரமாகிய கடுமை யான குறியைத் தெரிந்தறிகின்ற, கணக்கு இறுதி கண்ணுள் - அளவே முடிவாகப் பெற்ற கண்களையுடைய அங்காரதாரை, பாதச்சிலம்பின் ஒலி - தனது பாதபுரத்தினொலி, வேலை ஒலிப்ப - கடலோசைபோ லொலிக்க, வேதக்கொழும் சுடரை - வேதத்திலுறைகின்ற பரஞ்சுடராகிய திருமாலைப் பொருத, நெறி காடிமேல் நாள் - வழிதேடி மூன்றுவில், ஓதத்தின்மேவு மது கைடவரை ஒத்தாள் - கடலிற் சென்றமது கைடவரை அவ் வங்காரதாரை யொத்தாள். எ-று. (எஎ)

கஅ. நின்றுணிமிர்ந்தலைநெடுங்கடலினீர்தன்
வன்றுளலம்பமுடிவான்முகடுவவ்வ
அன்றுய்திறத்தவனறத்தையருளோடும்
தின்றுளொருத்தியிவளென்பதுதெரிந்தான். (எக)

இ-ள். அலைநெடும் கடலின் நீர் - அலையையுடைய நெடி யகடலினது புனல், தன்வன்தாள் அலம்ப - தனது வலியகாலை யலம்பவும், முடிவான்முகடுவவ்வ - தலையண்டமுகட்டையளாவ, நிமிர்ந்து நின்றுள் - நிமிர்ந்து நின்றுள், அன்று ஆய்திறத்தவ ன் - அப்போது ஆய்ந்தறியுந் திறத்தையுடைய அனுமான்,

அறத்தை அருளோடும் - தருமத்தை இரக்கத்தோடும், இவள் ஒருத்தி - இவளொருத்தியே, தின்றாள் என்பது தெரிந்தான் - கெடுத்தாளென்பதை யறிந்தான். எ - று. (எசு)

உo. சாகாவரத்தலிவரிற்றிலசமன்னன்
ஏகாவரக்கிருடர்கொண்டுடனெழுந்தான்
மாகாலசைப்பவடமண்ணினுறவாலோ
டாகாயமுற்றகதலிக்குவமையாஞன். (அடி)

இ - ள். சாகாவரத் தலிவரில் திலகம் அன்னன் - சிரஞ்சீவியாகச் சாகாதவரத்தைப்பெற்ற தலைமை பெற்றோர்களில் திலகத்தையொத்த அனுமான், ஏகா - வயிற்றுட்புகுந்து, அரக்கி குடர்கொண்டு உடன் எழுந்தான் - அரக்கியினது குடலைப் பிடுங்கிக்கொண் டுடனே யெழுந்து, மாகால் அசைப்ப - பெருங் காற்றுவீச, வடம் மண்ணில் உறவரலோடு - கயிறு மண்ணில் விழ வாலோடு, ஆகாயம் உற்றகதலிக்கு உவமை ஆனன் - ஆகாயத்திற் பறக்கின்ற காற்றாடிக் கொப்பாயினன். எ - று. (அடி)

உ - வது - ஊர்தேடுபடலம்.

இலங்காபுரியில் பிராட்டியைத் தேடியதைக் கூறுகின்றபடலம்.

உக. பொன்கொண்டிழைத்தமணியைக்கொடுபொதிந்த
மின்கொண்டமைத்தவெயிலைக்கொடுசமைத்த
என்கொண்டியற்றியவெனத்தெரிகிலாத
வன்கொண்டல்விட்டுமதிமுட்டுவனமாடம். (க)

இ - ள். வன்கொண்டல்விட்டு மதிமுட்டுவனமாடம் - வலிமையுடைய மேகமண்டலத்தைக் கடந்து சந்திரமண்டலத்தைத் தீண்டுவனவாகிய (அவ்விலங்காபுரியிலுள்ள) மாளிகைகள், பொன்கொண்டு இழைத்து - பொன்னைக்கொண்டு செய்து, மணியைக் கொடுபொதிந்த - இரத்தினங்களைக் கொண்டு பதித்தனபோல, மின்கொண்டு அமைத்த - மின்னலைக்கொண்டு செய்தனபோல, வெயிலைக் கொடுசமைத்த - வெயிலைக்கொண்டு

செய்தனபோல, என் கொண்டு இயற்றிய எனத்தெரிகிலாத - (ஒளிமிகுதியால்) யாதைக்கொண்டு செய்யப்பட்டன வென்று தெரியாதனவாயுள்ளன. எ - று. (க)

உஉ. நாகாலயங்களொடுநாகருலகுத்தம்
பாகார்மருங்குதுயில்வெண்ணவுயர்பண்பு
ஆகாயமஞ்சவகன்மேருவையணுக்கும்
மாகால்வழங்குசிறுதென்றலவரின்ற. (உ)

இ - ள். நாகர் ஆலயங்களொடு நாகர் உலகும் - தேவர்களது கோயில்களும் அத்தேவருலகும், தம்பாகு ஆர் மருங்குதுயில்வு என்ன - தம்தொருபங்காகப் பொருந்திய வோரிட மாகத்தங்குதலையுடையவென்று சொல்லும்படி, உயர்பண்ப - (அம்மாளிகைகள்) மிகுந்த அழகுடையனவாய், ஆகாயம் அஞ்ச அகல்மேருவை அணுக்கும் - ஆகாயமஞ்சும்படி யுயர்ந்த மேருகிரியையும் வருத்தும், மாகால - பெருங்காற்று, வழங்கு சிறு தென்றல்வரின்ற - இனிதாய்வீசுகின்ற இளந்தென்றற்காற்றுப் போலவர அசையாதுநின்றன. எ - று. (உ)

தேவர்கோயிலும் அவருலகும் மாளிகைகளின் ஒருபாகமாகிய விடமென்றுசொல்லும்படி அம்மாளிகைகள் உயர்ந்தனவென்பது கருத்து.

உங. மாகாரின்மின்கொடிமடக்கினரடுக்கி
மீகாரமெய்கணுறுத்தகள்விளக்கி
ஆகாயகங்கையினையங்கையினள்ளிப்
பாகாயசெஞ்சொலவர்வீசுபசுகாரம். (ங)

இ - ள். பாகு ஆயசெஞ்சொலவர் - தேன்பாகாகிய செவ்விய சொல்லையுடைய சிலரியர், மாகாரின்மின்கொடி மடக்கினர் அடுக்கி - கறுப்புடைய மேகங்களிலுள்ள மின்னற்கொடிகளை மடக்கினராய்த் (தொடைப்பம்போலச்) சேர்த்தடுக்கி, மீகாரம் எங்கணும் நறும்புகை விளக்கி - மேலிடங்களெல்லாம் அகாரம் எங்கணும் நறும்புகை விளக்கி - மேலிடங்களெல்லாம் நறுமணமுள்ள புகையை விளக்கி, மாடத்திலுஞ் சிதறியகளபப்புழுகினைக் கூட்டியொதுக்கி, ஆகாயகங்கையினை அங்கையினள்ளி - ஆகாயகங்கையை அழகிய கையால்வாரி, வீசுபசுகாரம் - தெளிக்கின்ற தெளிநீர் என்க. எ - று. காரம் - முதற்குறை. (ங)

உச. பஞ்சியூட்டியபாட்டிசைக்கிண்கிணிப்பதமச்
செஞ்செவிச்செழும்பவளத்தின்கொழுஞ்சுடர்சிதறி
மஞ்சினஞ்சனநிறமறைத்தரக்கியர்வடித்த
அஞ்சிலோதியோடுவமையவர்க்குறமுவமை. (உ)

இ - ள். பஞ்சி ஊட்டியபாட்டு இசைக்கிண்கிணி - செம்பஞ்சுக்குழம்பூட்டிய பாடலுக்கிசைந்த சதங்கை களையணிந்த, பதுமச்செம் செவிச்செழும் பவளத்தின்கொழும்சுடர்சிதறி - கால்களிலுள்ள செவ்வையாகிய அழகுடைய செவந்தவிரல் களினது கொழுமையான சோதிசிதறி, மஞ்சின் ஆஞ்சனநிற மறைத்து - மேகங்களினது கருமை நிறமறைக்கப்பட்டு, அவர்க்கு உறும் உவமை-அரக்கியர்களுக் குவமையான அம்மேகங்கள், அரக்கியர்வடித்த அம்சில் ஓதியோடு உவமைய - அவ்வரக்கியரது சீவிவிட்ட அழகிய சடைப்பில்லை யணிந்த செம்மயிரோடொப்பாயின. எ - று. (ச)

அரக்கியர் சரீரத்திற்குவமையான மேகங்கள் செம்பஞ்சுக்குழம்பு சிதறித்தமது கருமைநிறம் மறைக்கப்பட்டு அவ்வரக்கியரது செவந்த மயிரோடொப்பாயின வென்பதுகருத்து.

(உரு) தூழலும்வீணையும்யாழுமென்றிவையனகுழைய
மழலைமென்மொழிகிளிக்கிருந்தளிக்கின்றமகளிர்
சுழலுகனகெடுத்தடமணிச்சுவர்தொறுந்துவன்றும்
நிழலுந்தம்மையுமெய்ம்மைகின்றறிவருகிலைய (சு)

இ-ள். (மாடங்கள்) பொள்ளாங்குழலும் வீணையும் யாழுமென்று சொல்லப்படுகின்ற இவைகள் தோற்க, மழலையாகிய மெல்லிய சொற்களைக் கிளிப்பிள்ளைகளுக்கு அவற்றின் பக்கத்திலிருந்து சொல்லிக்கொடுக்கின்ற மாதர்களுடைய, சுழலுகின்ற நல்லநெடிய விசாலமுள்ள இரத்தினத்தாற் செய்த சுவர்களிலெல்லாம் பதிந்து தோன்றுகின்ற, பிரதிபிம்பத்தையும் அம்மகளிரையும் உண்மைபார்த்து அறிவதற்கரிதான நிலைமையையுடையன. எ-று. (சு)

உசு. இனையமாடங்களிந்திரற்கமைவரவெடுத்த
மனையின்மாட்சியவென்னினச்சொல்லுமாசுண்ணும்
அனையதாமெனினரக்கர்தந்திருவுக்குமளவை
நினையலாமன்றியுவமையுமன்னதாநிற்கும். (எ)

இ-ள். இனைய மாடங்கள் - இத்தன்மையவாகிய மாளிகைகள், இந்திரற்கு அமைவர எடுத்த மனையின் - இந்திரனுக்குப் பொருந்தக்கட்டிய மாளிகையைப்போல, மாட்சிய எனின் அச்சொல்லும் மாசுஉண்ணும் - பெருமை யுடையனவென்று சொல்லின் அச்சொல்லுங்குற்றப்படும், அனையது ஆம் எனின் - அவ்வாறு சொல்லுவ தமையுமென்றால், அரக்கர்தம் திருவுக்கும் அளவை நினையலாம் - அரக்கரது செல்வத்துக்கு மெல்லியை நினைக்கலாம், (நினைக்கலாகாதாகலின்) அன்றி உவமையும் அன்னதாகிற்கும் - அன்றியுவமையு மந்நினைத்தலளவாய் நிற்கும். எ-று. (எ)

இந்திரனது செல்வத்திற்களவை நினையலாம் அரக்கரது செல்வத்திற் களவை நினையலாகாதென்பது கருத்து.

உஎ. மணிகளெத்துணைபெரியவுமாதிருமார்பின்
அணியுங்காசினுக்ககன்றனவுளவெனலரிதால்
திணியுநன்னகர்த்திருமனைதெய்வமாத்தச்சன்
துணிவின்வந்தனனெரூட்டழகிழைத்தவதொழில்கள். (அ)

இ-ள். மணிகள் எத்துணை பெரியவும்மால் திருமார்பில் - எவ்வளவு பெரியாத்தங்களுந் திருமாலினது திருமார்பில், அணியும் காசினுக்கு அகன்றன உளவெனல் அரிது - தங்கின்றகளத்துவமணிக்கதிகமானவைகளாக வுள்ளனவென்றுசொல்லுதலில்லை, (அதுபோல) நலநகர்த்திணியும் திருமனை தெய்வமாத்தச்சன் - இந்தநல்லநகரில் நெருங்குகின்ற அழகிய வீடுகளுக்குத் தெய்வத்தன்மை பொருந்திய பெருமையுடைய தச்சனுமிய விச்சுவகன்மா, துணிவின் வந்தனன் தொட்டு அழகு இழைத்த அத்தொழில்கள் - (இராவணன் மகிழச் செய்யலா மென்னும்) துணிவோடுவந்து தன்கையாற் ரூட்டழகுபெறச் செய்தவத் தொழில்களெங்குமில்லை. எ-று. (அ)

உஅ. வாழுமன்னுயிர்யாவையுமொருவழிவாழ
ஊழிகாயகன்றிருவயிறுத்தளிவ்வூர்
ஆழியண்டத்தினருக்கனைலங்குதேர்ப்புரவி
ஏழுமல்லனவீண்டிளகுதிரையுமெல்லாம். (கூ)

இ-ள். வாழும்மன்னுயிர்யாவும் ஒருவழிவாழ - வாழுகின்ற நிலைபெற்ற உயிர்களெல்லா மொருமுறையாக வோரிடத்

தில் வாழ்வதற்கு, இவ்வூர்-இந்நகரம், ஊழிகாயகன் திருவயிறு ஒத்துஉள்ளது - அழியாமுதல் வனுயிய திருமாலினது திருவுதரத்தை யொத்துள்ளது, சுண்டஉள்ள குதிரையும் எல்லாம் - இங்குள்ள வெல்லாக்குதிரைகளும், ஆழி அண்டத்தின் அருக்கன்தன் அலங்குதேர்ப்புரவி ஏழும் - வட்டவடிவாகிய ஆகாயத்திற் சூரியனது சஞ்சரிக்கின்ற தேர்க்குதிரைக ளேழையும் போல் வனவாயினும், அல்லன - அவைகளல்லன. எ-று. (கூ)

உகூ. மரமடங்கலுங்கற்பகமேயெலாங்கனகம்
அரமடந்தையர்சிலதியரரக்கியர்க்கமரர்
உரமடங்கிவக்துழையராயுழல்பவரொருவர்
தரமடங்குவதன்றிதவஞ்செய்ததவமால். (உ0)

இ-ள். (ஆகலின்) இது - இச்செல்வம், ஒருவர்தரம் அடங்குவது அன்று தவம் செய்ததவம் - ஒருவர்வசமாய்க் கூடியிருப்பதன்று தவஞ்செய்த தவத்தாலென்பது. (க0)

கூ0. போரினையந்தனதோற்றவென்றிகழ்ந்தலிற்புறம்போய்
நேரியன்றவனறிசைதொறுநின்றமாநிற்க
ஆரியந்தனியைங்கரக்களிறுமோராழிச்
சூரியன்றனித்தேருமேயிந்நகர்தொகாத. (கஉ)

இ-ள். போரினையந்தன தோற்ற என்று இகழ்தலில் புறம்போய் - யுக்தத்திற் குடன்பட்டனவாய்ப் பின்பு தோற்றனவென்று இராவணனிகழ்தலால் தூரம்போய்; நேரியனறவன் திசைதொறும் நின்ற மாநிற்க - தமக்குச்சரியா யமைந்த பலமுடைய எட்டுத்திக்குக்களிலும் நின்ற யானைகளிற்க, ஆரியம் - அழகும், தனி - ஒப்பின்மையுமுடைய, ஐங்காக்களிறும்-ஐந்து கரங்களையுடைய கணபதியாகிய யானையும், ஓராழிச்சூரியன் தனித்தேருமே - ஒற்றையுருளையையுடைய ஒப்பில்லாத சூரியன் தேருமே, இந்நகர் தொகாத - இப்பட்டினத்தி லில்லாதன. ஏனை யானைகளும் தேர்களும் இந்நகரிலுள்ளன வென்பது கருத்து, எ-று. (கக)

கூ. மரகதத்தினுமறுளமணியினும்வேங்கை
சுரகதத்தடந்தேனமலையில்கொட்டில்
இரவிவெள்கின்றிமைக்கின்றவியற்கையவெண்முல்
லரகமொக்குமானனனெடுந்தறக்கண்ணிங்கர்க்கு. (கச)

இ-ள், இந்நகர்க்கு இத்தப் பட்டினத்திற்கு, நல்நெடும் தறக்கம் - நல்லஇன்பம் நீடியசுவர்க்கம், நரகம்ஒக்கும் - நரகத்தையொக்கும். (கச)

கூ. திருகுஞ்சினத்தரக்கருங்கருநிறந்தீர்ந்தார்
அருகுபோன்றதிங்களுமறவற்றதழகைப்
பருகுமிருகர்த்தனெளிபாய்தலிற்பசும்பொன்
உருகுகின்றதுபோன்றுளதுலகுசூழ்வளி. (சஞ)

இ-ள். அழகைப்பருகும் இந்நகர்த்துன் ஒளிபாய்தலின் - அழகைக் கொள்ளுகின்ற இத்தப்பட்டினத்தினது நெருங்கிய வொளிபாவுதலால், திருகுஞ்சினத்து அரக்கரும் கருநிறம் தீர்ந்தார்-முறுகுகின்ற கோவத்தையுடைய இராக்கதருந்தமது கரிய நிறத்தை நீங்கினர், அருகுபோன்ற திங்களும் மறவு அற்றது - அந்நகருக்கருகு செல்லுகின்ற மதியுங் கறுப்பை நீங்கிற்று, உலகுசூழ்வளி - உலகைச்சூழ்ந்தகடல், பசும்பொன் உருகுகின்றது போன்று உளது - பசியபொன் உருகுகின்ற தையொத்துள்ளது. எ-று. (கஞ)

கூக. அண்டமுற்றவும்வீங்கிருளகற்றுங்கின்றலரி
கண்டவாற்றினிக்கடிநகர்நெடுமனைக்கதிர்கள்
உண்டவாற்றினெனவுரைப்பரிதெரிப்பிடிற்றன்முன்
விண்டவாய்ச்சிறுமின்மினியெனவும்விளங்கான. (கசு)

இ-ள். அண்டமுற்றவும் வீங்கு இருள்-அண்டமுழுதும் நிரம்புகின்ற விருளை, கின்று - நிலைபெற்று, அகற்றும் அலரி - ஓட்டுகின்ற சூரியன், கண்ட ஆற்றின்-செய்கின்றமுறையேபோடு, இக்கடிநகர் நெடுமனைக்கதிர்கள் உண்ட ஆற்றின் - காவல்பொருந்திய இந்நகரிலுள்ள வுயர்ந்தவீடுகளி னெளிகள் போகிய முறையினை, ஒன்று உரைப்பு அரிது - ஒருபடியாகவுஞ் சொல்லுதலுக்கரிது, ஒப்புஇடில்-உவமை சொன்னால், தன்முன்விண்டவாய்ச்சிறு மின் மினி என்னவும் விளங்கான்-(அச்சூரியன்) தனக்குமுன் ஒளியை விடுகின்ற வாயையுடைய சிறியமின்மினியென்று சொல்லவும் விளங்காஞயினன். எ-று (கசு)

கூச. நீரும்வையமுநெருப்புமேனிமிர்நெடுங்காலும்
வாரிவானமுமவழங்கலவாகுதம்வளர்ச்சி
ஊரினிற்றெய்வகோபுரத்துயர்ச்சிதெண்ணிணர்ந்தால்
மேருவெங்ஙனம்விளர்க்குமோமுழுமுற்றும்வெளி. (உ0)

இ-ள். நீரும் - அப்பும், வையமும்-பிருதிவும், நெருப்பும்-தேயுவும், மேல் நிமிர் நெடும் காலும் - மேல் நிமிர்ந்து உலாவுகின்ற நெடியகாற்றும், வாரி-வருதற் கிடமாகிய, வானமும்-ஆகாயமும், தம்வளர்ச்சி - தமதுயர்வால், வழங்கல ஆகும்-விளங்குவன வல்லவாகிய தன்மையால், மேரு - மேருமலை, ஊரின் இந்நெடும் கோபுரத்து உயர்ச்சிகண்டு-இப்பட்டினத்திலுள்ள வுயர்ந்த இந்தக்கோபுரத்தினுயர்வைப் பார்த்து, உணர்ந்தால் - தன்னுயர்வையும் பார்த்தால், முழுமுற்றும் வெள்கி-மிகவும் நாணி, எங்ஙனம் விளர்க்குமோ-உடம்பெல்லா மெவ்வாறு விளர்க்குமோ. எ-று. (உ0)

கூடு. பாடுவார்பலரென்னின்மற்றவரினும்பலரால்
ஆடுவார்கண்மற்றவரினும்பலருளாமைதி
கூடுவாரிடையினியங்கொட்டுவார்முட்டில்
வீடுகாண்குறுக்தேவரால்விழுநடங்காண்பார். (உடு)

இ-ள். பாடுவார் பலர் என்னில் - இசை பாடுவார்கள் பலரென்றால், அவரினும்-அப்பாடுவார்களினும், ஆடுவார்கள்பலர்-ஆடுவார்கள் பலராவர், அனைதி கூடுவார் இடை - சமையமுளதாகிப் பார்க்கவந்த அரக்கர்முன்பு, இன் இயம் கொட்டுவார்-இனியவாத்தியங்களை யியம்புவோர்கள், அவரினும்பலர் உளர்-அவ்வாடுவார்களினும் பலருள்ளார், விழுநடம் காண்பார்-சிறந்த நடனத்தைப் பார்க்கிறவர்கள், முட்டு இல் - குறைவில்லாமல் தமது தொழிலைச்செய்து, வீடுகாண்குறும் தேவர் - விடுதலைப்பெற்ற தேவராவார்கள். எ-று. (உடு)

கூசு. இழையுமாலையுமாடையுஞ்சாத்தமுமேந்தி
உழையரென்னினுமதுவுகந்தியங்களொருவர்
விழையும்போகமேயிங்கிதுவாய்கொண்டுவிளம்பின்
குழையுநெஞ்சிலுவினையினுமாசென்றுகொள்ளும். (உஎ)

இ-ள். ஒருவர் விழையும் போகமே - ஒருவர்விரும்பும்போகமேர், இங்கு இதுவாய் கொண்டுவிளம்பில் - இவ்வூரிலுள்ள இப்போகத்தை வாயிற்கொண்டு சொல்லின், குழையும் - அவ்வாயருழைந்துபோகும், நெஞ்சிலுல் கினையினுமாசு என்று கொள்ளும் - மனத்தால்நினைப்பினும் அம்மனந் தனக்குக்குற்றமுண்டாமென்று கொள்ளும். (உஎ)

கூஎ. பொன்னின்மால்வரைமேன்மணிபொழிந்தனன்பொருத்தி
உன்னுநான்முகத்தொருவனின்றுழ்முறையுரைக்கப்
பன்னிநாள்பலபணியுழன்றரிதினிற்படைத்தான்
சொன்னவானவர்தச்சனுமிங்கிதுப்பான். (உஅ)

இ-ள். சொன்ன வானவர் தச்சன் - சிறப்பித்துச்சொல்லப்பட்ட தேவர் தச்சனாகிய விச்சுவகன்மா, நாம் இங்கர்துதிப்பான் - நாமிங்ஙனந்துதிக்கும் பொருட்டு, பொன்னின் மால்வரைமேல் - பொன்னுலாகிய பெரிய மேருகிரிமேல், மணிபொழிந்தனன் - இரத்தினங்களைப் பதித்தவன்போல, பொருத்தி-பொன்னுலாகிய மாளிகைகளின்மேல் இரத்தினங்களைப்பதித்து, உன்னு நான்முகத்து ஒருவன் நின்று ஊழ்முறை உரைக்க-எல்லாரும் நினைக்கின்ற நான்கு முகங்களையுடைய பிரமன் நின்று வரிசைக்கிரமங்களைச் சொல்ல, பன்னி - இராவணனுலேவப்பட்டு, பலநாள் பணி உழன்று அரிதினில் படைத்தான்-அனேகாலமித்தொழிலில் வருந்தியரிதாய்ச் செய்தான். எ-று.(உஅ)

கூஅ. எழுந்தனர்நிரித்தவைகுமிடத்தாயின்முகாறும்
ஒழிந்திலதண்டமென்னுமிதனேயேளைப்பதல்லால்
அழுந்தினமுவதென்னையலருளோஞாயிற
ஒழிந்தபேருயிர்களெல்லாமரக்கருக்குறையும்பேரா. (கூச)

இ-ள். அழுந்தி நின்று ஆவது என்னை- உய்த்துணர்தலாலாவது யாது, அலருளோன் ஆகியாக - காமனை மலரில்வடியும் பிரமன் முதலாக, ஒழிந்தபேர் உயிர்களெல்லாம் - மற்றிருந்த வுயிர்களெல்லாம், அரக்கருக்கு உறையும் பேராக-இராக்கதர்களுக்கு உறையென்னுங் கணக்கிடவும்பற்று, (கூச)

கூசு. காயத்தாற்பெரியர்வீரங்கணக்கிலருலகங்கல்லும்
ஆயத்தார்வரத்தின்றனமையளவற்றுராதிதேற்று
மாயத்தார்கர்க்கெங்கேனும்வரம்புமுண்டாமேமற்றோர்
தேயத்தார்தேயஞ்சேறலதெருவிலோர்செருவின்சேறல். (கூடு)

இ-ள். காயத்தால் பெரியர்-சரீரத்தாலும் பெரியர், வீரம் கணக்கிலர் - வீரத்தாலு மளவில்லாதவர், உலகம் கல்லும் -ஆயத்தார்-உலகத்தைத் தோண்டும்படியான உயரமுடையார், வரத்தின்தன்மை அளவற்றுர் - வரத்தின் சன்மையாலளவில்

லாதவர், அறிதல் தேற்றுமாயத்தார்-எவரும் அறியாதமாயை யுடையார், நகர்க்கு எங்கேனும் வரம்பும் உண்டாமே - இத்தன்மையார் வதியும் நகர்க்கு எவ்வகையாலாயினு மெல்லையுமுண்டாமோ, (உண்டாகாதாயினும்) தெருவிலோர் தெருவின் சேறல் - இவ்வூரிலுள்ள ஒருவீதியிலுள்ளோர் மற்றொரு வீதிக்குச் செல்லுதல், தேயத்தார்மற்றோர் தேயம்சேறல் - ஒருதேயத்திலுள்ளார் மற்றொரு தேயத்திற்குச் செல்லுதலே யொக்கும் எ - று. (கூடு)

கூ0. வள்ளிதுணமருங்குல்வானவர்மகளிருள்ளம்
தள்ளுறப்பாணிதள்ளாநடம்புரிதடங்கண்மாதர்
வெள்ளிவெண்முறுவற்றேன்றமட்டையர்வெள்குகின்றார்
கள்ளிசையரக்கர்மாதர்களியிடுகுரவைகாண்பார். (கூஅ)

இ - ள். வள்ளிஅன்னதுண் மருங்குல் வானவர் மகளிர்-கொடிபோன்றதுண்ணிய இடையை யுடையதெய்வப்பெண்கள், பாணிதள்ளாநடம்--இசைப்பாட்டிற்குத் தவிராத நடனத்தைப் பார்க்க, உள்ளம் தள்ளுற - மனந்தள்ளவந்து, புரிதடங்கண் - விருப்பத்தைச்செய்கின்ற விசாலமுடைய கண்களும், மாதர் - அழகிய, வெள்ளி வெண்முறுவல் - வெள்ளிபோன்ற வெண்மையுடைய பற்களும், தேன்றற - விளங்க, மடந்தையர் - சிறுபெண்களாகிய, கள் இசை அரக்கர் மாதர் - பொய்சொல்லுகின்ற இராக்கதர் மகளிர், களி இடுகுரவை காண்பார் - கள்மயக்கத்தாலாடுகின்ற கூரவைக்கூத்தைப்பார்த்து, வெள்குகின்றார் - நாணுகின்றார். எ - று. (கூஅ)

கூக. எல்லியினிமிரிருட்குறையுமவ்விருள்
கல்லியகிலவின்வெண்முறியுங்கள்வன
புல்லியபடையெனப்பொருவபோன்றன
மல்லிகைமலர்தொறும்பொதிந்தவண்டெலாம் (கூஆ)

இ - ள். மல்லிகைப்பூக்கள் தோறும் நெருங்கிய வண்டுகளெல்லாம், அவ்விராத்திரியில் நெருங்கிய விருளின் துண்டங்களும், அவ்விருளைப்போக்கிய சந்திரனது வெண்மையான துண்டங்களும், கள்ளப்படிவங் கொண்டனவாய், தமக்கடுத்தபகையுடையன போலப் போர்செய்வன போன்றன. எ - று. (கூஆ)

கூஉ. ஏழுலகின்வாழுமுயிர்யாவையுமெதிர்ந்தால்
ஊழின்முறையன்றியுடனேபுகுதலுண்டே
வாழிபரியுங்குவழியீதெனவகுத்தால்
ஆழியுளவேழினளவன்றுபகையென்றான். (கூஇ)

இ-ள். ஏழ் உலகில்வாழும் உயிர் யாவையும் எதிர்ந்தால்-ஏழுலகங்களிலும் வாழுகின்ற வுயிர்களெல்லா மொருசேரவந்தாலும், ஊழின்முறை அன்றி உடனே புகுதல் உண்டு-முறையினையுடைய வரிசையாலன்றி எல்லாரு மொருசேரச் செல்லுதலுக்கு வாயிலகலமுண்டு, வாழியர் இயங்கு வழிஈது எனவகுத்தால் - வாழுமவர்கள் சஞ்சரிக்கின்ற வழியின் தன்மை யிதுவென்று சொன்னால், பகை - நமக்குப்பகை, உள - உள்ளனவாகிய, ஆழி ஏழின் அளவு அன்று என்றான் - கடல்களேழினளவன் றென்று நினைந்தான், அநுமான். எ-று. (கூஇ)

இலங்கைமாதேவியைச்சொல்லியது.

கூங. அஞ்சுவணத்தினுடையுடுத்தாளர்வெல்லாம்
அஞ்சுவணத்தினுவேகமிகுத்தாளருவில்லாள்
அஞ்சுவணத்தினுத்தரியத்தாளலையாரும்
அஞ்சுவணத்தினமுதொளிராரத்தனிகொண்டாள். (எக)

இ-ள். அஞ்சுவண்ணத்தின ஆடை உடுத்தாள் - ஐந்துநிறமுள்ள ஆடை தரித்தாள், அரவு எல்லாம் அஞ்சு உவணத்தின் வேகம் மிகுத்தாள் - சர்ப்பங்களெல்லாமஞ்சும்படியான கருடனைப்போல் வேகத்தில் மேம்பட்டாள், அருள் இல்லாள்-இரக்கமில்லாள், அம்சுவணத்தின் உத்தரியத்தாள் - அழகிய சுவர்ணத்தாலாகிய உத்தரியமுடையாள், அலை ஆரும் - அலைகள் நிறைந்த, அம் - அழகிய, சு - நல்ல, வள் - வலிய, நத்தின்முத்து ஒளிர் ஆரத்து அணிகொண்டாள் - சங்கத்தினது முத்துக்களைக்கோத்த விளங்குகின்ற மாலையை யணிந்தாள். எ-று. ()

கூச. சிந்தாரத்தின்செச்சையணிந்தாள்தெளிநூலயாழ்
அந்தாரத்தினேர்வுசொல்லாளைதும்பி
கந்தாரத்தினினிசைபாடிக்களிகூரும்
மந்தாரத்தினமாலையலம்புமகுடத்தாள். (அ0)

இ-ள். சிந்து ஆரத்தின் செச்சை அணிந்தாள் - மணம் வீசுகின்ற சந்தனத்தினது குழம்பைப்பூசினாள், தெளிநூல் யாழ்

அம்தாரத்தின் நேர்வரு சொல்லாள் - தெளிந்த இசைநூலின் படியாகிய வீணையினதழகிய தாரமென்னு ரம்பினை யொத்த சொல்லுடையாள், அறைதும்பி கந்தாரத்தின் இன் இசைபாடிக்களிகூரும் - சிறப்பித்துச் சொல்லுகின்ற வண்டுகள் இசைப் பாட்டுபோல வின்னிசையைப் பாடியுவக்கின்ற, மந்தாரத்தின் மாலை அலம்பு மகுடத்தாள் - மந்தாரப்பூவாலாகிய மாலையசைகின்ற முடியுடையாள். எ - று. (அ0)

சரு. வஞ்சங்கொண்டான்வானரனல்லன்வருகாலன்
அஞ்சுங்கண்டாலென்னையிவண்சூழ்திரையாழி
நஞ்சங்கொண்டகண்ணுதலிப்போனகுகின்றான்
நெஞ்சங்கண்டேகல்லெனநின்றேநினைவுற்றான். (அசு)

இ-ள். இவன் வஞ்சம் கொண்டான் - இவன் வஞ்சனை கொண்டிருக்கின்றான், வானரன் அல்லன் - வானரனல்லன், வருகாலன் - இயமனும், என்னை - என்னை, கண்டால் அஞ்சும் - பார்த்தாலிறப்பான், சூழ்திரை ஆழி நஞ்சம் கொண்ட கண்ணுதலிப்போல் நகுகின்றான் - உலகைச் சூழ்ந்த அலையையுடைய கடலிலுண்டாகிய விடத்தைக் கண்டத்திற் கொண்ட சிவனைப்போல விளங்குகின்றானென்று, நெஞ்சம் கண்டு கல்லென நின்று நினைவுற்றாள் - அனுமானுடைய மனவலியைப்பார்த்து மலைபோல நின்று நினைந்தாள். எ-று. (அசு)

சரு. கடிதத்தாமென்னத்தன்னெதிர்செல்லுந்தழல்வேலைக்
கடித்தானுகம்விண்ணின்முரிக்குங்கருளன்போல்
ஒடித்தான்கையாலும்பருவப்பவுயர்காலம்
பிடித்தானெஞ்சத்தண்ணெனவெண்ணம்பிழையாதாள். (அஅ)

இ-ள். கடிதத்து ஆம் என்னத்தன் எதிர் செல்லும் தழல் வேலை - மின்னலொப்பாமென்று சொல்லும்படி தனக்கெதிர் வருகின்ற நெருப்புமயமான அச்சூலத்தை, நாகம்-சர்ப்பத்தை, கடித்தான்-வாயாற் கவ்வி, விண்ணில் முரிக்கும்கருளன்போல்-ஆகாயத்திற் சென்று காலால் முரிக்கின்ற கருடனைப்போல், உம்பர் உவப்ப - தேவருவப்ப, கையால் ஒடித்தான் - தனதுகையாலொடித்தான், உயர்காலம் பிடித்தாள் - அச்சூலத்தை நெடுங்

காலங் கைக்கொண்டிருந்தவவள், நெஞ்சம்தண்ணென - மனந்திடுக்கென்று நடுங்கவும், எண்ணம் பிழையாதாள் - தன்னினைவு பிழையாது. எ-று. (அஅ)

சஎ. மொய்ம்மணிமாடமூதூர்முழுதிருளகற்றுந்தானே
மெய்ம்மையேயுணரிஞ்ஞமிகையெனவிலங்கிப்போனன்
இம்மதிலிலங்கைகாப்பனெய்தமேற்றன்பாலெய்து
பின்மினியல்லனெவ்வெயிற்கதிர்வேந்தனென்றான். (கஅ)

இ-ள். மொய்மணிமாடமூதூர்தானே-ஒளிமொய்த்தஇரத்தினம் பதித்தமாடங்களையுடைய இம்மூதூர்தானே, முழுதும் இருள் அகற்றும் - இருள்களையெல்லாம் போக்குகின்ற, மெய்மை உணரின் - உண்மையையறியின், நான் ஆம்மிகை எனவிலங்கிப் போனன் - வெட்கமாகுமென்றுந் தான் இலங்கைக்கு வேண்டாதமிகையென்றுமொதுங்கிச் சென்ற, அவ்வெயில் கதிர் வேந்தன் - அக்கிரணங்களையுடைய சூரியன், இம்மதில் இலங்கைகாப்பன் எய்துமேல் - மதிலையுடைய இவ்விலங்கை மதிலில் வருவானாயின், தன்பால்எய்து மின்மினி அல்லனென்றான் - தனக்கு முன்பு வருகின்ற மின்மினியல்லனென்றான் அனுமான். எ-று. (கஅ)

சஅ. பெரியகொளிகொணவிதமணிப்பித்திப்பத்தி
சொரியுமாநிழல்களாங்குச்சுற்றலாற்காலின்றோன்றல்
கரியனுயெளியனுகிச்செய்யனுய்க்காட்டுங்காண்டற்
கரியனுயெளியனுய்த்தன்னகத்துறையழகனேபோல். (கஉ)

இ-ள். பெரியநாள் ஒளிகொள்நாணவித மணிப்பித்திப்பத்தி - பெரியநக்ஷத்திரம்போல வொளியைக் கொண்டபலவிதரத்நங்களைப் பதித்த சுவர்வரிசை, சொரியும் மாநிழல்கள் ஆங்குச் சுற்றலால் காலின் தோன்றல் - வீசுகின்ற பெருமைபொருந்திய நிழல்கள் அவ்விடமெல்லாஞ் சுழலுதலால் வாயு புத்திரனுகிய அனுமான், காண்டற்கு அரியனுய் - பிரதி கூலர் பார்த்தலுக் கரியனுய், எளியனுய் - அனுகூலர் பார்த்தலுக்கெளியனுய், தன் அகத்து உறை அழகன்போல் - தனதகத்துறைகின்ற சீராமபிரான் முத்தொழிலுக்குஞ் செவப்புக் கறுப்பு வெளுப்பு என்னுமூன்றுநிறங் கொள்ளுதல்போல, கரியனுய் - மரகதத்தின்

சோதி படுமிடத்திற் கருநிறமுடையவனுகி, வெளியனுகி - வயிரத்தின் சோதிபடுமிடத்தில் வெண்ணிறமுடையனுகி, செய்யனுய் - மாணிக்கத்தின்சோதி படுமிடத்திற் செந்நிறமுடையனுகி, காட்டும் - தன்னைத்தோன்றச்செய்வான். எ-று. (கஉ)

நாணுவிதமணியாவன - மரகதமுதலியாதங்கள்.

கும்பகருணனைக்கூறியது.

சசு. தடைபுகுமந்திரந்தகைத்தநாகம்போல்
இடைபுகலரியதோருறக்கமெய்திஞன்
கடையுழிமுடிவெனுங்காலம்பார்த்தயல்
புடைபெயராதெடுக்கடலும்போலவே. (உஉக)

இ-ள். தடை புகுமந்திரம் தகைந்த நாகம்போல் - தடை செய்வதாகிய மந்திரத்தாற் கட்டுப்பட்ட சர்ப்பத்தைப்போல, இடை புக அரியது ஓர் உறக்கம் எய்திஞன் - நடுவே விழித்துவருதலில்லாதஒப்பில்லாதநித்திரையையடைந்தான். (கஉசு)

ருo. அவித்தநின்றெவனுயினுமாகவென்றங்கை
கவித்துக்கிடச்சிலபகலென்பதுகருதாச்
செவிக்குரத்தேனெனவிராகவன்புகழினித்திருத்தம்
கவிக்குநாயகனேயலனுறையுலகுக்கட்டந்தான். (கஉஎ)

இ-ள். அவித்து நின்று எவன் ஆயினும் தகனன்று-கோவத்தை யடக்கி நின்று எவனுயினுமாகவென்று, அங்கைகவித்து-தனதழகிய கையை யமைத்து, நீங்கிடச் சிலபகல் என்பது கருதா - இவன் மரிக்கவினலுஞ் சிலநாளேயுள்ளன வென்பதை நினைந்து, (கஉஅ)

ருக. மணிகொள்வாயிலுட்சாளரத்தான்களின்மலரில்
கணிகொணைத்திற்காலினும்புகையினுங்கலக்கும்
துணுகுமவீங்குமற்றவனிலையாவதோவலவர்
கணுவின்மேருவினுழிபாணைசெலுமுலமன். (கஉச)

இ-ள். ஆழியான் என - திருவாழியையுடைய திருமாலைப்போல, அணுவின்மேருவின் செல்லும் அணுமன்-அணுவினைப்போலச்சிறுத்தும் மேருவினைப்போலப் பருத்துயர்ந்தும் செல்லுகின்ற அனுமான், மணி கொள்வாயிலுள் - மணி கட்டிய வாயில்களுள்ளும், சாளரத்தான்களில் - சாளரப் பூட்டுக்களிலும், கண்ணிகொள்-மாலைகட்டிய, மலரின் - பூக்களினது, நாளத்தில் - தண்டுகளிலும், காலினும்புகையினும் கலக்கும்-காற்றினைப்போலவும் புகையினைப்போலவுஞ் சேர்வான், துணுகும் வீங்கும் அவன் நிலையாவர் தவல்வார் - ஓரிடத்தில் நுண்மையராகின்ற ஓரிடத்தில் பருக்கின்ற அவ்வனுமான் றன்மையை யாவரறிந்துசொல்லுவர். எ-று. (கஉச)

விபீடணழ்வான்திருமாளிகையிற்சென்றனைச்சொல்லியது.

ருஉ. ஏத்தலிவ்வகையெவ்வழிமருங்கினுமெய்திக்
காந்தண்மெல்விரனமந்தையர்யாரையுங்காண்பான்
வேந்தர்வேதியர்மேலுளோர்கீழுளோர்விரும்பப்
போந்தபுண்ணியனண்ணைகன்கோயிலுட்புக்கான். (கஉடு)

இ-ள். மேலுளோர் கீழுளோர் விரும்ப-மேலுலகத்தாருங் கீழுலகத்தாரும் வேண்ட, போந்த புண்ணியன் கண் அகன் கோயிலுள் புக்கான்-பிறந்த புண்ணியனுகிய விபீடணனுடைய இடமகன்றமனையுட்போனன். (கஉடு)

விபீடணழ்வானைக்கண்டதைக்கூறியது.

ருக. பளிக்குவேதிகைப்பவளதாதினுகூடத்திற்பசுந்தேன்
துளிக்குங்கற்பகப்பந்தரிற்கருநிறத்தோகை
வெளித்துவைகுவதரிதெனவ்வருமேலி
ஒளித்துவாழ்கின்றதருமமன்னனைநோக்குற்றான். (கஉசு)

இ-ள். பளிக்கு வேதிகை - பளிங்குக்கற்களாற் செய்தினனகளிலும், பவளத்தின் கூடத்தில் - பவளத்தாலாகிய கூடங்களிலும், பசுந்தேன் துளிக்கும் கற்பகப் பந்தரில் - பசியதேனைத் துளிக்கின்ற கற்பகப்பந்தல்களிலும் வதிக்கின்ற, கருநிறத்தோகை - கரியநிறத்தையுடைய அரக்கர்களுள், வெளித்து வைகுவது அரிதனன அவர் உருமேவி - வெண்ணிறங்கொண்டு வைகுவது கூடாதென்று கருதி அவ்வரக்கரது கரியநிறத்தைக்கொண்டு,ஒளித்து வாழ்கின்ற தருமம் அன்னனதனை உற்றான்-மறைந்துவதிகின்ற தருமத்தையொத்தவிபீடணனைக்கண்டான். எ - று. (கஉசு)

ருச. தனிக்கடற்களிறெனவொருதனியிலான்முய
பனிக்கடற்பெருங்கடவுடன்பரிபவந்துடைப்பான்
இனிக்கடப்பதன்றேழ்கடலிடைத்தென்றிசைத்தான்
கனிக்கடற்கதிர்தொடர்ந்தனகழியைக்கண்டான். (கஉசு)

இ - ள். தனிக்கடக்கவிறுவன ஒருதுணைஇல்லான் - ஒப்பற்ற மதயானையையொத்த வொருதுணையுமில்லாது, கடல்கதிர்-கடலிற்றோன்றுகின்ற சூரியனே, கனி - பழமென்று நினைத்து, தொடர்ந்தவன் - பாய்ந்த அனுமான், அகழியைக்கண்டான் - அகழியைப்பார்த்து, தாய - முன்புகாண்டிவந்த, பனிக்கடல் பெரும் கடவுள்தன் பரிபவம் துடைப்பான் - குளிர்ந்தகடலாகிய பெருமைபொருந்திய வருணனதிறமைவைப் போக்குதற்கு, இனிக்கடப்பது அன்றுவழக்கடல் கிடந்ததென்று இசைத்தான் - இனி இக்கிடங்கு நம்மால் தாண்டப்படுவதன்று வழக்கடல்களு மொரு சேர்க்கிடந்தாற்போல விருக்கின்றதென்று சொன்னான். எ - று. (கசசு)

கடவுள் தன் பரிபவமென்றது அனுமான் கடலைத்தாண்டியதை. அப்பெருமான் இலங்கையினகழியைத்தாண்டின் வருணனுக்கு வந்த இழிவைப் போக்கியதாகு மென்பதுகருத்து.

நடு. மேக்குநால்வகைமேகமுங்கீழ்விழுத்
தாக்கினுலன்னதோயத்ததாய்த்துயர்
ஆக்கினுன்படையன்னவகழியை
வாக்கினுலுரைவைக்கலுமாகுமோ. (கசக)

இ - ள். மேக்குநால்வகை மேகமும் - ஆகாயத்தின்மேலுள்ள நான்குவகை மேகங்களும், கீழ்விழுத்தாக்கினுல் அன்னதோயத்தது ஆய் - (அகழியின்) அடித்தரை தோன்ற நீர்மொண்டெழுந்தர் லவ்வளவுள்ள நீருடையதாகி, துயர் ஆக்கினுன் படை அன்ன அகழியை - உலகுக்கெல்லாந் துன்பமுண்டாக்கிய இராவணனது சேனையையொத்த அகழியைக்குறித்து, வாக்கினுல் உரைவைக்கலும் ஆகுமோ - நமதுவாயினுல்சொற்களைச் சொல்லுதலுங் கூடுமோ. எ - று. (கசசு)

நசு. இளக்கரிழுதெஞ்சவிழுமெண்ணருவிளக்கைத்
திளக்கிய திறென்றல்பகைசோரவுயர்வோரின்
அளக்கரொடளக்கரியவர்சையுறவீசா
விளக்கினமவிளக்குமணிமெய்யுறுவிள்க்கம். (கசச)

இ - ள். பகைசோர உயர்வோரின் - பகைதளர்ந்தபோது வெற்றிபெறுவோரைப் போல, இளக்கர் இழுது எஞ்சவிழும்

எண்ண அருவிளக்கை - இளகுதலையுடைய நெய்குறைய வவிகின்ற எண்ணக்கூடாத தீபங்களை, தென்றல் துளக்கியது - தென்றற் காற்று அசைத்தது, அளக்கரொடு அளக்க அரிய ஆசை உற - கடலோடொப்புச் சொல்லவரிய ஆசையுண்டாகும்படியான, மெய்உறு - (அரக்கியர்) சரீரத்திலணிந்த, மணிவிளக்கம் - மணியணிகளின்சோதி, வீசா-வீசி, விளக்கு இனம் விளக்கும் - விளக்குக் கூட்டம்போல விருளைப்போக்கும் எ-று. ()

நடவது. காட்சிப்படலம்.

அனுமான் சானகிபிராட்டியாரைப் பார்த்ததைக் கூறுகின்றபடலம்.

—:o:—

சீதாபிராட்டியாரைக்கூறியது.

நஎ. ஆயிடைதனிலபுணவதொன்றன்றிவேறறியாள்
தூயவன்னமென்புனலிடைத்தோய்திலாமெய்யாள்
தேவுதென்கடலமிழ்தங்கொண்டனங்கவேள்செய்த
ஓவியம்புகையுண்டதேயொக்கின்றவுருவாள். (கக)

இ-ள். மென்தூவி அன்னம் - மெல்லிய சிறகையுடைய அன்னத்தைப்போல் வாள், ஆவி - தனக்குயிரொன்றுபோல, புணவது - உடுத்திக் கொள்வதாகிய, அம்துகில் ஒன்று அன்றி வேறு அறியாள் - அழகிய சீலை முன்னுடுத்திய வொன்றேயன்றிவேறில்லாது, புனலிடைத்தோய்திலாமெய்யாள் - நீரில் குளிக்காத சரீரமுடையாள்,

அரக்கியரைச்சொல்லியது.

நஅ. சூலம்வாட்சக்கரத்தோட்டிதோமரம்
காலவேல்கற்பணங்கற்றகையினர்
ஆலமேயுருவுகொண்டனையமேனியர்
வாலமேதரித்தவன்வெருவும்வண்மையர். (நஅ)

இ-ள். வால் அம் தரித்தவன் வெருவும் வண்மையர் - வெண்மையுள்ள கங்காசலத்தைத் தரித்த உருத்திரனு மஞ்சுகின்ற வலிவளப்பத்தை யுடையார்,

வல்அம் - சுத்தசலம் என்றமையால் கங்காசல மென்பது பெற்றும். அதற்கு வெண்மை "ஆறெலாங்கங்கையேயாய" என்பதனானு முணர்க.

சு-வது. நிந்தனைப்படலம்.

மைதிலியார் இராவணனை நிந்தித்ததைக் கூறுகின்றபடலம்.

இராவணனைச்சொல்லியது.

கூக. நீலநிறக்குன்றினெடிதினிற்றாழ்ந்தநீத்தவெள்ளருவியினியிர்ந்த
பாலிறப்பட்டின்மாலையுத்தரியம்பண்புறப்பசும்பொனுரத்தின்
மாலிறப்புடனியுடையுறப்பரந்தவளர்கதிரினவெயில்பொருவச்
சூலிறக்கொண்மூக்கிழித்திடைதடிக்குமின்னெனமார்பினூளங்க.

இ - ள். நீலநிறக்குன்றின் நெடிதினில் தாழ்ந்தநீத்த வெள்ளருவியின் - கருநிறத்தையுடைய மலையினின்று நீளமாய் விழுகின்ற பிரவாகமாகிய வெள்ளிய அருவியைப் போல, நிமிர்ந்த பால் நிறப்பட்டின் மாலை உத்தரியம் பண்புற - உயர்ந்தபால் நிறமுடைய பட்டினாலாகிய வொழுங்காகிய உத்தரியம் அழகு பொருந்தவும், பசும்பொன் ஆரத்தின் மால்நிறம் - பசும்பொன்னாலாகிய மாலையினது பெருமை பொருந்தியசோதி, புடவி - புவிக்கு, உடை - ஆடையாகியகடலில், உறப்பரந்த வளர்கதிர் இளவெயில் பொருவ - மிகவும் பரவிய வுயர்கின்ற சூரியனது இளவெயிலை யொப்பாகவும், சூல் நிறக்கொண்மூக்கிழித்து இடைதடிக்கும் மின் எனமார்பின் நூல்துளங்க - கருப்பத்தால் கருநிறமுடைய மேகத்தைக் கிழித்ததனிடத்திற்றுவருகின்ற மின்னலைப்போல மார்பில் பூணூல்விளங்கவும். எ-று. (இ)

இதுவுமது.

கூ0. தன்னிறத்தோடுமாறுதந்திமைக்குநீலியந்தழைபடவுதித்த
பொன்னிறத்துருகருவனரமருங்கிற்றழுவியபுதுவெயில்பொருவ
மின்னிறக்கதிரிற்சுற்றியபசும்பொன்வீரற்றலையவிரொளிச்சாயின
கன்னிறக்கற்றைநெடுநிழல்பூத்தகற்பகமுழுவனங்கவின. (ஈ)

இ - ள். தன்நிறத்தோடு மாறுதந்து இமைக்கும்-தனதொளியோடு வேறுபாடுசெய்து விளங்குகின்ற, (கரையையுடைய) நீலி அந்தழைபட உடுத்த பொன்நிறத்துரு-கொய்சகத்தினது அழகுதழைவு தோன்றஅவணுடுத்திய பொன்மயமானவாடை, கருவரை மருங்கில் தழுவிய புதுவெயில் பொருவ - கரியமலையினிடத்திற் சூழ்ந்த விளவெயிலை யொப்பாகவும், விரல்தலை - அவனதுகைவிரல்களில், மின்நிறக்கதிரில் சுற்றிய பசும்பொன் - மின்னுகின்ற ஒளியையுடைய செஞ்சுடர்போலச் சூழ்ந்தபசும் பொன்னாலாகிய மோதிரங்களின், அவிர் ஒளிக்கதிர் கல் நிறக் கற்றை-ஒளியுடைய இரத்தினக்கற்களி னொளித்தொகுதி, நெடு நிழல்பூத்த கற்பக முழுவனம் கவின - நீண்டவொளியோடு மலர்ந்தகற்பக முழுவனம்போல அழகுசெய்யவும். எ-று. (ஈ)

திரிசடைபிராட்டியாருக்குச்சொல்லியது.

கூக. இன்னோரன்னவெய்தியகாலத்திடைநின்முள்
முன்னேசொன்னேனைகண்டகனவின்முடிவம்மா
பின்னேவாளாபேதுறவீரேற்பிழையென்முள்
அன்னேகனமென்னுரவரெல்லாமறிவுற்றார். (அக)

இ-ள். இன்னோர் அன்ன எய்திய காலத்து - இவ்வகையாக்கியர் அவ்வாறு வந்தபோது, இடை நின்முள் - நடுவில்நின்ற திரிசடை, கண்டகனவின் முடிவு-யான்கண்ட சொப்பனத்தின் முடிவை, முன்னே சொன்னேன்-முன்பே கூறினேன், பின்னே வாளா பேதுறவீரேல பிழை என்முள் - இப்போது வீணாய் மயங்குவீரேல் குற்றமாமென்று(பிராட்டியைநோக்கிச்)சொன்னாள், அவரெல்லாம் - அவ்வரக்கிய ரெல்லாரும், (திரிசடையைப் பார்த்து) அன்னே நன்று என்முர் அறிவுற்றார் - தாயே நீகண்ட கனவின் நிற நன்றென்று தெரிந்தார். எ-று. (அக)

நு-வது. உருக்காட்டுப்படலம்.

அனுமான் தனது விசுவரூபத்தைப் பிராட்டிக்குக் காட்டியதைக் கூறுகின்றபடலம்.

ஸ்ரீராமபிரான அதிருவடிகளைக்கூறியது.

சுஉ. சேயிழைத்தாமரையென்றசேணுளோர்
ஏயினரதன்றனையெளியதில்லையால்
காயகன்றிருவடிகுறித்தநாட்டுறின்
பாய்திரைப்பவளமுங்குவளைப்பண்பினும். (நக)

இ-ள். பாய்திரைப் பவளமும் குவளைப்பண்பின் ஆம் - பரவுகின்ற அலையில் மிதக்கின்ற பவளமும் குவளைமலரினதுபண்புடையதாம்,

திருவடியின் செவப்பை நோக்கின் பவளம் குவளையாகுமென்பது கருத்து. (நக)

பெருமாளதுயரத்தைப் பிராட்டிக்ருஞ்சகேயர்சொல்லியது.

சுஙு. போதாயினபோதனதண்புனலாடல்பொய்யோ
சீதாபவளக்கொடியன்னவட்டேடியென்கண்
நீதாதருநிற்றிலையேனெருப்பாதியென்னக்
கோதாவிரியைச்சினஞ்கொண்டனல்கொண்டலொப்பான். (அடு)

இ-ள். போது ஆயினபோது-குரிப்புதயமானகாலை, சீதாசீதை வந்து, உனதண்புனல் ஆடல் பொய்யோ-உனது குளிர்ந்த புனலில் தீர்த்த மாடல் பொய்யோ, பவளக்கொடி அன்னவள் தேடி என்கண் நீதா-பவளக் கொடியையொத்த அச்சீதையை நாடி யென்னிடத்தில் நீகொடு, தருநிற்றிலையேல் நெருப்பு ஆதி என்ன - கொடுத்திலையேல் எனது வாளியால் நெருப்பாதியென்று. (அடு)

இதுவுமது.

சுஎ. உண்டாயதுமுற்றதுமுற்றமுணர்த்தியுள்ளம்
புண்டானெனநோயுறவிம்முறுகின்றபோழ்தின்
எண்டாளிழந்திட்டனனேற்றிழையாங்கள்காட்டக்
கண்டானுயர்வேதமும்போதமுங்கான்கிலாதான். (கூ0)

இ-ள். உயர்வேதமும் போதமும் கான்கிலாதான் - பெருமைபொருந்திய வேதங்களாலும் ஞானத்தாலுங்காணக்கூடாத எம்பெருமான், உண்டாயதும்-திருவயோத்தியில் கைகேயியால் வந்ததையும், உற்றதும் - வனத்தில் மானுல் வந்ததையும், முற்றும் உணர்த்தி - முழுதுஞ் சொல்லி, உள்ளம் புண்தான் என நோய் உற விம்முறுகின்ற போழ்தின்-மனம் புண்தானே யென்று சொல்லும்படி வருத்த மிகுதியாகத் துக்கப்படுகிற காலை, என் இழந்திட்டனன்-நினைவையிழந்து, ஏந்து இழையாங்கள் காட்டக்கண்டான்-நீபூண்டிருந்த ஆபரணங்களை யாங்களெடுத்துக் காட்டப்பார்த்தான். (கூ0)

இதுவுமது.

சுரு. தணிகின்றநஞ்சொற்செருட்தன்மையத்தன்மைதன்னைத்
துணிகொண்டிலங்குஞ்சுடர்வேலவன்றூயநின்கண்
அணிகண்டுழியேயமுதந்தெளித்தாலுமாறும்
பிணிகொண்டதண்டதண்டாயினும்பேர்ப்பதன்றால். (கூக)

இ-ள். தணிகின்ற நம்சொல் தொடர்தன்மை - தாழ்ந்து சொல்லுகின்ற எங்கள் சொல்லைக்கேட்கின்றமையால், அத்தன்மை தன்னைத் துணிகொண்டு - அத்துக்கத்தைப் போக்கிக்கொண்டு, இலங்குஞ் சுடர்வேலவன் - விளங்குகின்ற வொளியையுடைய வேலாயுதத்தை யுடைய பிரான், தூயநின்கண் அணிகண்டுழி - பரிசுத்தமாகிய வுன்னிடத்திருந்த ஆபரணங்களைப் பார்த்தபோது, அமுதம் தெளித்தாலும் ஆறு - சீமுதத்தைத் தெளித்தாலுந் தீராத, கொண்டது - கொண்டதாகிய, பிணி-நோய், பண்டது உண்டாயினும் பேர்ப்பது அன்று-பழையதாயுண்டாயினும் போக்கத்தக்கதன்று. எ-று. (கூக)

கூ-வது. சூடாமணிப்படலம்.

பிராட்டி தான் வைத்திருந்த சூடாமணியை அனுமானிடம் கொடுத்ததைக் கூறுகின்ற படலம்.

பிராட்டியனுமானுக்கடையாளங்கூறியது.

சுக. வந்தெனக்காமபற்றியவைகல்வாய்
இந்தவிப்பிறவிக்கிருமாதரைச்
சிந்தையாலுந்தொடேனென்றசெவ்வரம்
தந்தவார்த்தைதிருச்செவிசாற்றுவாய். (கூச)

இ-ள். வந்து என்னைக்கரம்பற்றியவை கல்வாய்-மிதிலாபுரி வந்து என்னை மணம்புரிந்தநாளில், இந்த இப்பிறவிக்கு இருமாதரை - இந்த அவதாரத்திற்கு இன்னையன்றி மிரண்டாவது பெண்ணை, இந்த வவதாரத்திற்கு இன்னை யன்றி பெரியபிராட்டிபூப்பிராட்டி என்று மிரண்டு பெண்களை .என்பாருமுளர். பெரியபிராட்டியே யிவளாகவின் அதுபொருந்தாது. (கூ9)

இதன்மதி.

கூ௮. எந்தைகின்சரணஞ்சரணென்றவித்தன்னல்
மூந்துகின்குறையும்பொறைதந்தனமுன்னே
சந்தமொன்றுகொடித்திரள்கண்கடமக்கே
வந்தொர்கன்மணிகிற்கென்னைத்தமைப்பாய். (அ0)

இ-ன். எந்தை கின்சரணம் - எனதையனே யுனதுபாதமே, சரண் என்ற இதனால் - புகலிட மென்றவிந்தச் சொல்லால், முந்துகின் குறையும் பொறைதந்தனம் - முன்பு நீசெய்த உனகுற்றத்தையும் பொறுத்தோம், முந்த - நீ இக்குற்றத்தைச் செய்ததற்கு முன்பு; உன சந்தம் ஒன்றுகொடித்திரள் கண்கள் தமக்கு-உனது வடிவைப்பொருந்திய காக்கைக்கூட்டங்களினிரண்டு கண்களுக்கும், ஓர் நல்மணி வந்து கிற்கென வைத்தும் வைப்பாய் - ஒருநில்ல கன்மணி வந்து கிற்கவென்று நியமித்ததையுஞ் சொல்லுவாய். (அ0)

எ-வது. பொழிலிறுத்தபடலம்.

அனுமான் அசோகவனத்தை யழித்ததைச் சொல்லுகின்றபடலம்.

:o:

கூ௮. பாடலம்படர்கோங்கொடும்பன்னிசைப்
பாடலம்பனிவண்டொடுபேரிசை
பாடலம்புயர்வேலையிற்பாய்ந்தன
பாடலம்பெறப்புள்ளினம்பாறவே. (கூ0)

இ-ள். படர் கோங்கொடும் - படர்ந்த கோங்க மரங்களோடும், பன் இசைப்பாடல் அம் பனி வண்டொடு - பாடுகின்ற

இசைப்பாடலும் அழகுங் குளிர்ச்சியு முள்ள வண்டுகளோடும், பாடலம் - பாதிரி மரங்கள், பாடலம் பெற - (கடல்நீர்) சிவந்த நிறத்தைப் பெறவும், புள் இனம் பாற - தம்மிடத்துள்ள பறவைக் கூட்டங்களோடவும், பல் திரைப்பாடு அலம்பு உயர் வேலையில் பாய்ந்தன - பல அலைகள் பக்கமெல்லாந் தும்புகின்ற வுயர்ந்த கடலில் விழுந்தன. எ-று. (கூக)

கூக. வண்டலம்புனலாற்றின்மராமரம்
வண்டலம்புனலாற்றினமடிந்தன
விண்டலம்புகீங்கியவெண்புனல்
விண்டலம்புகீண்மரமவீழ்ந்தவே. (கூ௨)

இ-ள். வண்டு அலம்பு நல் ஆற்றின் மராமரம் - வண்டுகளொலிக்கின்ற நல்லொழுக்கினை யுடைய கடப்ப மரங்கள், வண்டல அம் புனல் ஆற்றில் மடிந்தன - சேற்றையுடைய வழியை நீராற்றில் விழுந்து மடிந்தன, விண்தலம்புகீள் மரம் - ஆகாயத்தை யணுகவளர்ந்த மரங்கள், விண்டு - திருமாலினது திருவடியை, அலம்பு - மஞ்சன மாட்டிய, உகம் நீங்கிய வெண்புனல் - பலயுகங்களைக் கடந்த ஆகாயகங்கையில், விழ்ந்த - விழுந்தன. எ-று. (கூ௨)

எ0. தாமரைத்தடம்பொய்கைசெஞ்சந்தனம்
தாமரைத்தனவொத்திகைத்தலின்
காமரக்களிவண்டொடுங்கள்ளொடும்
காமரக்கடல்பூக்கடல்கண்டவே. (கூ௩)

இ-ள். தடம் - பெரிய, தாமரைப் பொய்கை - தாமரைக் குளங்கள், செம் சந்தனம் தாம் அரைத்தன ஒத்த-சிவந்தசந்தனங்களை யரைத்துக் குழப்பின போலாயின, துகைத்தலின்-அனுமான் திருவடிகளாற்றுகைத்தலால், கா - அசோலியிலன, மரக்கடல் - மரங்களாகிய கடல்கள், காமரக்களிவண்டொடும் கள்ளொடும் - இசைப்பாட்டையும் மயக்கத்தையு முடைய வண்டுகளோடுந் தேனோடும், பூக்கடல்கண்ட - மலர்க்கடலைச் செய்தன. (கூ௩)

எ௪. சிந்துவாரந்திசைதொழுஞ்சென்றன
சிந்துவாரம்புரைதிரைசேர்ந்தன
தந்துவாரம்புதவொடுதாளறத்
தந்துவாரந்தகள்படச்சாய்ந்தவே. (கூ௪)

இ-ள். திசை தொறும் சென்றன - அச்சோலையினின்று திசைகள்தோறு நீண்டனவாகிய, சிந்துவாரம் - நொச்சிமரங்கள், சிந்து - கடலினது, வாரம் - கரையிலும், புரதிரை - உயர்ச்சியுடைய அலைகளிலும், சேர்ந்தன - சார்ந்தன, தந்து - அணுமாறு லெறியப்பட்டு, வார் அம்புத வொடி தாள் அம - நீண்ட அழகியகதவொடு தாளற்று, தம்முவாரம் துகள் படச்சாய்ந்த - அவ்வரக்கருடைய வாயில்கள் துகளாக அழிந்தன. எ-று.(நூ)

எஉ. நந்தவானத்தநாண்மலர்நாறின
நந்தவானத்தநாண்மலர்நாறில
சிந்தவாநந்திரிந்ததிரைக்கடல்.
சிந்தவானந்திரிந்ததிரைக்கடல். (நூ)

இ-ள். நந்தவானத்து - அவ்வசோக வனத்தில், நாள்-தினந்தோறும், நாறின - பூத்த, மலர் - மலர்கள், நந்த-அதிகமாக, வானத்து - ஆகாயத்திற் சென்று, மலர்-அங்கு விளங்குகின்ற, நாள் - நக்ஷத்திரங்களைப்போல, நாறின - விளங்கின, சிந்த - நீரைப்பெய்கின்ற, அவ்வானம் - அம்மேகங்கள், திரிந்த உக - காற்றுச் சுழன்று சிதற, செம்மணி சிந்த - செவ்வையானமுத்துக்களைப் பெறுவதற்கு, வால் நந்து - வெள்ளிய சங்குகள், திரைக்கடல் திரிந்த - அலையையுடைய கடலுள் அஞ்சியோடின: எ-று. (நூ)

கo-வது. பஞ்சசேனபதிகள்வதைப்படலம்.

:o:

படையெழுந்ததைச்சொல்லியது.

எக. பண்மணிக்குலம்யானையின்புடைதொறும்பரந்த
ஒண்மணிக்குலமழையிடையுருமெனவொலிப்பக்
கண்மணிக்குலங்கனலெனக்காற்றுகதுப்பின
தண்மணிக்குலமழையெழுகிளனெனத்தழைப்ப. (கூ)

இ-ள். யானையின் - யானைகளின் கழுத்திலணிந்த, பண்மணிக்குலம் - கருநிறமுடைய மணிக்கூட்டமும், புடைதொறும் பரந்த ஒண்மணிக்குலம் - இருபுறத்திலும் பரந்த வொள்ளிய மணிக்கூட்டமும், மழை இடை உரும் என ஒலிப்ப - மேகத்தி

னிடத்து மிடியைப்போல வொலிக்க, கண்மணிக் குலம் கனல் எனக்காந்துவ - அவ்யானைகளின் கண்மணிக் கூட்டங்கள் நெருப்பைப்போலக் காந்துவனவாய், கதுப்பின் தண்மணிக்குலம் - இருகவுள்களிலும் ஆபரணமாயணிந்த குளிர்ந்த இரத்தினக் கூட்டங்கள், மண்மழ எழுகதிர் எனத்தழைப்ப - மேகத்தி லெழுகின்ற சூரியனைப்போல வொளிசெய்ய. எ-று. (கூ)

படைவீரரைக்கூறியது.

எச. இந்திரனிசையிழந்தேகுவானிகற்
றந்திமுன்கட்டாவினன்மூடுகத்தாமதன
மந்தரவாலடிபிடித்தவல்லியேல்
உந்துதிரெனவலித்தவுற்றத்தார். (உக)

இ-ள். இந்திரன் இசை இழந்து ஏகுவான் - இந்திரன்றனது புகழை யிழந்து செல்வானாகி, இகல் தந்திமுன் கடாவினன் மூடுக - வலியுடைய ஐராவதத்தை முன்னே செலுத்தி விசைந்து பேரக, மத்தரம் - மந்தரமலைபோன்ற, அதன் - அவ்யானையினது, அடிவால் பிடித்து - அடிவாலைப்பற்றி, வல்லியேல் - வல்லையாயின், நீ உந்தி என வலித்த வுற்றத்தார் - நீசெலுத்துதியென்று காய்ந்த வலியுடையார். எ-று. (உக)

இதுவுமது.

எஙி. பானிறத்தந்தணன்பணியனுகினின்
கோவினைத்திலனெனவுலகங்கூறலும்
நீனிறத்திராவணனுணிவுநீக்குவான்
காலனைக்காலினிற்கையிற்கட்டினுர். (உஉ)

இ-ள். பால் நிறத்து அந்தணன் பணியனுகி - முறையே உயிர்களைப் படைக்கின்ற பிரமனுடைய ஆணைபெற்றவனுய், நின்கோல் நினைத்திலன் என உலகம் கூறலும் - (நமன்) உனது தத்தாரைக் கொண்டிலனென்று இலங்கைகாரார் சொல்லுதலும், நீல்நிறத்து இராவணன் முனிவு நீக்குவான் - கறுப்பு நிறத்தையுடைய இராவணனது கோவத்தைப்போக்குவதற்கு, காலனைக்காலினில் கையில் கட்டினுர் - யமனைக்காலிலுங் கையிலுங் கட்டிக்கொணர்ந்தார். எ-று, (உஉ)

கக-வது. அட்சகுமாரன் வதைப்படலம்.

அட்சன் இராவணனுக்குச்சொல்லியது.

எகூ. தண்டத்தூணதனிற்றோன்றுங்கோளரிசுடர்வெண்கோட்டு
மண்டொத்தமிராண்சேழலாயினுமலைதலாற்றீர்
தண்டத்தைக்கடந்துபொங்கியப்புறத்தகலினென்பால்
தண்டத்தையிடுதியன்றேலின்னயிற்றந்திலேனால். (நு)

இ-ள். தண்டத்தூண் அதனில் தோன்றும் கோளரி-மரத்தின் தண்டாகிய தூணிலவதரித்த நரசிங்கமும், சுடர் வெண்கோட்டு மண்தொத்த நிமிர் ஆண்கேழல் ஆயினும்-ஒளியுடைய வெள்ளிய கொம்பில் பூமி தங்கியிருக்க உயர்ந்த (திருமாலவதாரமாகிய) ஆண்பன்றியாயினும், மலைதல் ஆற்றீர் - என்னுடு பொருதலைச்செய்யார்,தண்டத்தைக்கடந்துபொங்கி அப்புறத்து அகலின் - இந்நாட்டைக்கடந்தோங்கியப்பாலக்குரங்கு செல்லினும், இன்வயின் தந்திலேனேல்-(அதைப்பிடித்து) இன்விடங்கொண்டுவந்திலேனாயினும், என்பால் தண்டத்தைஇடுதி-எனக்குத்தண்டம் விதிப்பாய். எ-று. (நு)

எஎ. நீத்தாயோடினவுதிரப்பெருநிரைக்கிலேபாராகப் [காமுன்
போய்த்தாழ்செறிதசை யரிந்தினபடிபொங்கப்பொருமுயிர்போ
மீத்தானிமிர்சுடர்வயிரக்கைகொடுபிடியாவின்னெடுமண்காணத்
தேய்த்தாணுநியினுலசேழ் தேயினுமொருதன்புகழ்றைதேயாதான்.

இ-ள். ஊழியின்உலகு எழ்தேயினும் ஒருதன்புகழ் இறைதேயாதான் - யுகமுடிவிலேழுலகங்களுந் தேயினு மொப்பற்றதனதுபுகழ் சிறிதுந் தேயாத அனுமான், நீத்தாய்ஓடின உதிரப்பெருநதி நீராக - நீத்தாயோடிய வுதிரமாகிய பெரியநதி புனலாகவும், சிலேபாராக - அம்மிக்கல் புவியாகவும், போய்த்தாழ் செறிதசை அரிந்தினபடி பொங்க - நீண்டு தங்கிய அட்சகுமாரனது) தசை அரிசிகளாவைத்தபடி மேன்மேற்கு வியவும், பொரும்உயிர் போகாமுன்-போர்புரிந்தவுயிர் போகாமுன், மீத்தானிமிர்சுடர் வயிரக்கை கொடுபிடியா - மேலேதாவுகின்ற அதிககாந்தியுள்ள வலியுடைய கைகளால் அவ்வட்சனைப்பிடித்து, விண்ணெடு மண்காணத் தேய்த்தான் - விண்ணுலகத்தாெடு மண்ணுலகத்தார்காணத் தேய்த்தான். எ-று. (நூஅ)

எஅ. கதிரெழுந்தனையசெந்திருமுகக்கணவர்மா
டெதிரெழுந்தடிவிழுந்தழுதுசோரிளநலார்
அதிரலங்கோதைசேரோதியோடன்றவூர்
உதிரமுந்தெரிகிலாதிடைபரந்தொழுகியே. (சஅ)

இ-ள். சூரியன்உதயமானற்பேர்லிருக்கின்ற(இரத்தத்தால்) சிவந்தழகுள்ளமுகங்களே யுடைய நாயகரிடத்தில், முன்சென்று அந்நாயகர் காலின்மேல் விழுந்து அழுது சோர்கின்ற இளம்பெண்க ளுடைய, மிகுந்த வழகுள்ள பூமாலைசூட்டிய கூந்தலோடு, அன்று அவ்வூரிற் சிதறிய் இரத்தமு மிடங்களிற் பாவி நீண்டு (வேற்றுமை) தெரியாது. எ-று. (சஅ)

எக. ஒடினருயிர்க்கணுடல்கள்போலுதவியால்
வீடினர்வீடினர்மிடையுடற்குவைகள்வாய்
நாடினர்மடநலார்நலையிலாரண்பரைக்
கூடினருடினரும்பர்வாழ்கொம்பனர். (சடு)

இ-ள். உயிர்கள் நாடு உடல்கள்போல் - உயிர்களைத்தேடுகின்ற உடம்புகளைப்போல, வீடினர் மிடை உடல் குவைகள் வாய் - இறந்தவீரர்களுடைய நெருங்கிய வுடற் குப்பைகளினிடத்து, ஒடினர்-அரக்கிகளோடி, உதவியால்-வீடினர் - அவ்வீரர்கள் செய்த பேருதவியை யெண்ணிக் காமு மிறந்தார், மடநலார்-அவ்வாறிறந்த விளம்பெண்கள், நலையிலாரண்பரை-வீரத்திற்குற்றமில்லாத தந்நாயகரை, நாடினர் கூடினர் - விண்ணிற் றேடிக்கூடினர், உம்பர் வாழ்-கொம்பனர் ஊடினர் - அவ்விண்புக்கவீரரொடுவாழ்கின்றதெய்வமகளிர் அவ்விளம்பெண்களோடுபிணங்கினர். எ-று. (சடு)

அ0. ஏந்திளஃலயையோரெழுதருங்கொம்பனள்
காந்தனின்முடிவானுயர்கவந்தத்தினே
வேந்தனியலசினஞ்விடுதியானடமெனப்
பூந்தளிர்க்கைகளான்மெய்யுறப்புல்லினள். (சஎ)

இ-ள். எழுத அரும் ஓர் கொம்பு அன்னாள் - எழுதப்படாத பூங்கொம்பைப் போன்ற வொருத்தி, தலையை ஏந்திளஃ-அற்றதலையைக் கையிற்கொண்டு, நின்று ஆடுவான் - நின்றுகின்ற, காந்தன் - தன்கணவனுடைய, உயர்கவந்தத்தினை-நீண்

டவுடலைப்பார்த்து, வேந்தன் நீ அலசினுய் விடுதி நடம் எனு-
அரசனே நீயோடியினைத்தா யினியாடுதலே விடுதியென்று, பூந்த
ளிர்க்கைகளால் மெய்உறப்புல்லினுள் - அழகிய தளிர்போன்ற
கைகளால் அந்தலையை யவனுடலிற் பொருந்தச் சேர்த்தாள்.
எ - று. (சஎ)

கஉ - வது. பாசப்படலம்.

—:o:—

இந்திரசித்து அனுமானைப் பாசத்தாற் கட்டியதைக் கூறுகின்றபடலம்.

அ. குரக்குநல்வலங்துறைந்தென்றுவலங்கொட்டி
இரைக்குமாகரெறிகடலொத்தெம்மருங்கும்
திரைக்குமாசுணம்வரசுயொத்தறதேவர்
அரக்கரொத்தனர்மந்தாமொத்தனனுமன். (சுச)

இ-ள். இந்தக்குரங்கு மிகுந்தவலி நீங்கிற்றென்று கருவத்தால்தோள்களைக்கொட்டி, ஒலிக்கின்ற இலங்காபுரி அலையை வீசுகின்ற கடலையொத்தது, எவ்விடத்திலுஞ் சூழ்ந்திருக்கின்ற அம்பாகிய பாம்பு வாசுகியென்னும் பாம்பையொத்தது, அரக்கர் தேவரை யொத்தார் அநுமான் மந்தரகிரியை யொத்தான். எ - று. (சுக)

ஆ. கறத்தமாசுணங்கனகமாமேனிபைக்கட்ட
அறத்தச்சாங்கொருதனித்தனேயாகின்றவனுமன்
மறத்தமாருதம்பொருதகால்வாளராவரசு
புறத்தச்சுற்றியமேருமால்வரையையும்போன்றான். (சுஉ)

இ-ள். கருநிறமுள்ள அப்பாம்பு பொன்மயமான பெருமை பொருந்திய திருமேனியைக்கட்ட, தருமத்துக்குங்கொரு ஒப்பற்ற துணையாய் நின்ற அநுமான், உறுதியோடு பெருங் காற்று வீசியபோது ஓலியுடைய ஆதிசேடன், சுற்றிலுஞ் சுற்றிய மேருவாகிய பெரிய மலையையு மொத்தான். (சுஉ)

கஊ-வது. பிணிவீட்டுபடலம்.

—:o:—

அனுமானைக் கட்டுநீக்கியதை யோதுகின்றபடலம்.

இராவணனைக்கூறியது.

அஊ. குவித்தபன்மணிக்குப்பைகள்கலையொடுங்கொழிப்பச்
சுவிச்சுடர்க்கலனணிந்தபொற்றோளொடுதயங்கப்
புவித்தடம்படர்மேருவைப்பொன்முடியென்னக்
கவித்தமாலிருங்கருங்கடலிருந்ததகடுப்ப. (சஎ)

இ-ள். குவித்த பல்மணிக்குப்பைகள் - கூட்டியமைத்திருக்கின்ற பலவித ரத்நக்கூட்டங்கள், கலையொடும் கொழிப்ப-உத்தரியத்தொடு மொளியை வீச, சுவிச்சுடர்க்கலன் அணிந்த பொன் தோள் தயங்க-சூரியப்பிரகாசமான ஆபரணங்களை யணிந்த வழகிய தோள்கள் விளங்க, புவித்தடம் படர் மேருவைப் பொன்முடி என்ன - புவியில் விசாலமாய்ப் பாவிய மேருமலையை யழகிய மகுடமாக, கவித்து மால் இரும் கருங்கடல் இருந்தது கடுப்ப - சூட்டிக்கொண்டு மிகப்பெரிதான கரியகடல் வீற்றிருந்ததை யொப்பாக. எ-று. ஓடுஇசைகிறை. (சஎ)

இதவுமது.

அஏ. வண்மைக்குந்திருமறைகட்கும்வானினும்பெரிய
திண்மைக்குந்தனியுறையுளாமுழுமுகத்திசையின்
கண்வைக்குந்தொறுங்களிற்றெருமாதிரங்காக்கும்
எண்மர்க்கும்மற்றையிருவர்க்கும்பெரும்பயமியற்ற. (சஅ)

இ-ள். வண்மைக்கும் - புகழ்க்கும், திருமறைகட்கும்-சிறந்த வேதங்களுக்கும், வானினும் பெரிய திண்மைக்கும் - ஆகாயத்தினும் பெரியவலிக்கும், தனி உறையுள் ஆம் முழுமுகம்-ஒப்பில்லாத விருப்பிடமாகிய நிலவுள்ளமுகம், திசையில்கண் வைக்கும் தொறும் - திசைகளைப் பார்க்குந் தொறும், (சஅ)

இதவுமது.

அடு. திங்கள்வாளுதன்மடந்தையர்சேயிரிக்கிடந்த
அங்கயற்றடந்தாமரைக்கலரியோஞ்சி
வெங்கண்வானவர்தானவரென்றிவர்விரியாப்
பொங்குகைகளாந்தாமரைக்கிந்தவேபோன்ற. (இச)

இ-ள். பிறைபோன்ற ஒளி பொருந்திய நெற்றியையுடைய மகளிரது செவ்வரிகள் தங்கிய, அழகுடைய கண்ணிய கெண்டைமீன்களுள்ள முகமாகிய தாமரைமலர்களுக்குச் சூரியனாகி, தன்மேல் கொடுமையுள்ள தேவர்களும் தானவர்களுமென்று சொல்லப்படுகின்ற இவர்களதுவிரியாமற் குவிந்துகொண்டிருக்கின்ற, மிருதுவான கைகளாகிய தாமரைமலர்களுக்குச் சந்திரனொத்து, எ-று. (இச)

அனுமான்நீனைத்ததைக்கூறியது,

அசு. மாடிருந்தமற்றிவன்புணர்ம்ங்கையர்மையல்கி
ஊடிநிற்பமுடித்தலைநினைதொறுமுருட்டி
ஓடல்கொண்டுநின்றுர்க்கின்றதுகொடிதம்மா
தேடிவந்ததோர்குரங்கெனும்வாசகஞ்சிறிதோ. (இசு)

இ-ள். தேடி ஓர் குரங்குவந்தது என்னும் வாசகம் சிறிதோ-பிராட்டியைத்தேடி யொருகுரங்குவந்ததென்று சொல்லுகின்ற வார்த்தை சிறிதாமோ, பெரிதேயாம், (இஅ)

இராவணன்அனுமானுக்குச்சொல்லியது.

அஎ. உங்குலத்தலைவன்றன்னேடொப்பிலாவுயர்ச்சியோனை
வெங்கொலைம்பிற்கொன்குற்காட்டெழிலைமேற்கொண்டீரேல்
எங்குலப்புதுநஞ்சீர்த்திநம்மொடியைபதென்னுல்
மங்குலிற்பொலிந்தருலமாதுமையுடைத்தமாதோ. (அஅ)

இ-ள். நும் சீர்த்தி எங்கு உலப்புறும்-உமதுகீர்த்தி எங்கு முடிவுபெறும், நும்மொடும் இயைந்தது என்றுல் - இப்பழிச் செய்கை உம்மோடு கூடிற்றென்றுல், (அஅ)

அனுமான்இராவணனுக்குச்சொல்லியது.

அஅ. பாரைஞ்ஞாறவபற்பலபொற்புயம்
ஈரைஞ்ஞாதலையுளவெண்ணினும்
ஊரைஞ்ஞாறுங்கடிக்கனலுட்பொதி
சீரைஞ்ஞாறவைசேமஞ்செலுத்துமோ. (அஅ)

இ-ள். ஊரைஞாறும் கடுங்கனல் உள்பொதி-ஊரையழிக்கின்ற கடியநெருப்பை யுள்ளேகொண்ட, சீரைஞாறு - நாறு சீலையாயினும், அவைசேமம் செலுத்துமோ-அச்சீலைகள் வெந்தொழியாமல் தம்மைக்காத்துக்கொள்ளுமோ (அவ்வாறு) பா

ரை ஞாறவ பற்பலபொன்புயம் - புவியையழிப் பன்வாகிய அனேக தோள்களும், ஈர் ஐஞ்ஞாறுதலை உளவென்னினும் - ஆயிரந்தலைகளுமுள்ளவாயினும், அவையென்செய்யும். எ-று. (கஅ)

அசு. தன்னிறைக்குறுகண்வெய்யோர்தாமியற்றலுங்கேட்டின்னே
அன்னவர்க்கிறுதியாகவணிகரழிப்பலென்னுச்
செஞ்சிறச்சினையவெம்போர்மழுப்பின்னர்ச்சேறலொக்கும்
அஞ்சிறத்தண்ணுதனனல்செழுகொற்றவீள்வால். (கசு)

இ-ள். தன் இறைக்கு உறுகண் வெய்யோர் இயற்றலும் கேட்டு - தன்னிறையாகிய சிவனுக்குக் கைலையைப் பிடுங்குதல் முதலிய துன்பங்களை யரக்கர்கள் செய்ததுங்கேட்டு, இன்னே அன்னவர்க்கு இறுதி ஆக அணிகர் அழிப்பல் என்னு - இப்போதே அவ்வரக்கர்களுக்கு முடிவுண்டாக வழிய விலங்கையை யழிப்பேனென்று, செஞ்சிறச்சினைய வெம்போர் மழுப்பின்னர்ச் சேறல் ஒக்கும் - சிவந்தநிறமுடைய சுவரிலைபொருந்திய வெவ்விய வலியுடைய மழுவாயுதம் அவ்வண்ணமானுக்குப் பின்னர்ச் செல்வதிலையொக்கும். எ-று. (கசு)

கச-வது. இலங்கையெரியூட்டுபடலம்.

இலங்கையைக்கொளுத்தியதைக் கூறுகின்றபடலம்.

கூ0. பேயமன்றினின்றபிறங்கெரி
மாயருண்டகறவுமதித்ததால
தூயரென்றவர்வைகிடத்தன்னிலுல்
நீயரன்றியுந்திமையுஞ்செய்வால். (கச)

இ-ள். பேய - பசாசுகள் சூழ்ந்துள்ள, மன்றினில் நின்று பிறங்கு எரி - பொதுச்சாலைகளில் நிலைகொண்டு எரிகின்ற நெருப்பு, மாயர்-மாயையையுடைய வரக்கர், உண்ட கறவும் மதித்தது - உண்ட மிச்சிலாகிய கள்ளையுங்குடித்தது, தூயரென்றவர் - தூய்மையுடையோர், வைகு இடம் தன்னிலுல் - நீயர் வதியுமிடத்தைச் சார்ந்தால், நீயர் அன்றியும் நிமையும் செய்

வர் - (அவர்போல) நீயராவரன்றியுங் கொடியபாபங்களையுஞ் செய்வர். எ-று. (கச)

கூச. பரிதிபற்றிநிமிர்ந்தெழுபைங்கனல்
கருகிமுற்றுமெரிக்தெழுகார்மழை
அருகுசுற்றுமிருந்தையதாயதின்
உருகுபொற்றிரளொத்தனவெண்கதிர். (உட)

இ-ள். பரிதிபற்றி நிமிர்ந்து எழுபைங்கனல் - சூரியனைத் தொடர்ந்து துயர்ந்தெழுகின்ற பசுமையான நெருப்பால், கருகி முற்றும் எரிந்து எழுகார்மழை-தீய்ந்து முழுதும் வெந்தெழுகின்ற கரியமேகங்கள், அருகுசுற்றுமிருந்தையதாய் - பக்கமெல்லாஞ் சூழ்ந்திருக்கின்ற கரிகளாக, அதின் - அக்கரியுள், உருகு பொன்திரள் - உருகுகின்ற பொற்கட்டியை, ஒன்கதிர் ஒத்தனன்-ஒளியுடைய சூரியனொத்தனன். எ-று. (உட)

கூட. தனைகொளுத்தியதாவெரிதாமணி
முனைகொளுத்திமுகத்திடைமொய்த்தபோ
லுனைகொளுத்தவுலந்துலிவுற்றன
வனைகுளப்பின்மணிநிறவாசியே. (உக)

இ-ள். தனை கொளுத்திய தா எரி - பின்காற் கயிற்றைக் கொளுத்திய தாவுகின்ற நெருப்பு, தாமணி முனைகொளுத்தி-கழுத்துக்கயிற்றையுங் கட்டுமுனையையுங் கொளுத்தி, முகத்திடை மொய்த்தபோ லுனைகொளுத்த - முகத்தில் நெருங்கிய மிகுந்த பிடரி மயிரைக்கொளுத்த, வனைகுளம்பின் மணி நிறவாசி-வனைந்த குளம்பினையுடைய வழுகிய நிறமுள்ளகுதிரைகள், உலந்து உலிவுற்றன - வருந்திச் செத்தன. (உக)

கூட. அகருமஞ்சுமஞ்சாந்தமுமுதலியவகேகம்
புகரின்மரத்தறவெறியுலகெலாம்போர்ப்பப்
பகருழியிற்காலவெங்கடுங்கனல்பருகும்
மகரவேலையின்வெந்தனநந்தனவனங்கள். (உஎ)

இ-ள். அகரும் அஞ்சுமும் சாந்தமும் முதலிய அனேகம்-அகில் மரங்களும் அந்த நலலவாசமுள்ள சந்தன மரங்களும் முதலிய பலவகைகளாகிய, புகரில் நல்மரத்து உறுவெறி உலகு எல்லாம் போர்ப்ப - குற்றமில்லாத நல்லமரங்களிற்பொருந்திய வாசம் உலகமுழுதுங் கமிய, பசரும் ஊழியில் காலவெங்கடும்

கனல்பருகும் - சொல்லுகின்ற யுகமுடிவில் வெவ்விய காலாக்கினியால் குடிக்கப்படுகிற, மகரவேலையில்-மகரமீன்களுள்ள கடலைப்போல, நந்தனவனங்கள் வெந்தன - சோலைகள் வெந்தன.

கூட. வெருளும்வெம்புகைப்படலியின்மேற்செலவெருவி
இருளும்வெங்கடல்விழுந்தனவெழுந்திலபறவை
மருளின்மீன்கணம்விழுங்கிடவுலந்தனமனத்தோர்
அருளில்வஞ்சரைத்தஞ்சமென்றடைந்தவரனைய. (உஅ)

இ-ள். வெருளும் வெம்புகைப்படலியின் - பயப்படத்தக்க வெவ்விய புகைப்படர்ச்சியால், மேற்செல வெருவி - ஆகாயத்திற்செல்ல வஞ்சி, இருளும் வெங்கடல் விழுந்தன எழுந்திலபறவை - இருண்டிருக்கின்ற வெவ்வியகடலில் விழுந்தெழுந்திலவாகிய பறவைகள், மனத்து ஓர் அருள் இல் வஞ்சரைத் தஞ்சமென்று அடைந்தவர் அனைய - மனத்தி லொருவகையிரக்கமில்லாத வஞ்சர்களைத் தமக்காதாரமென்று சார்ந்தவர்களையொப்பாக, மருள் இல் மீன் கணம் விழுங்கிட உலந்தன-மயக்கமில்லாத மீன் கூட்டங்கள் விழுங்கமாய்ந்தன. எ-று. (உக)

கடி-வது. திருவடிதொழுதபடலம்.

அனுமான் ஸ்ரீராகவப்பிரானது திருவடிகளைத் தொழுதலைச் சொல்லுகின்றபடலம்.

கஎ. எம்நாதமென்னகின்றருண்மையுமரபினெய்திக்
கைந்நாகமனையோனுற்றவினைத்தினன்கணத்தினாலெப்
பைந்நாகநிற்கும்வீரர்தன்னெடிவரவுபார்க்கும்
கொய்ந்நாகநறுந்தேனிசைதுங்குன்றிடைக்குதியுங்கொண்டான். ()

இ-ள். பைநாகம் நிற்கும் வீரர் - படமெடுத்து நிற்குஞ் சர்ப்பம்போலத் தலையெடுத்துப் பார்த்து நிற்கின்ற அங்கதன் முதலியோர், (உ)

கூட. கண்டனனன்பிறுக்கணியைக்கண்களால்
தெண்டிரையமுதகடலிலங்கைத்தென்னகர்
அண்டர்நாயகவினித்திறத்தினையும்
பண்டைதையருமென்றனமன்பன்னுவான். (உஅ)

இ-ள். தெண்திரை அலைகடல் இலங்கைத் தென் நகர்-தெள்ளிய அலைகளையுடைய கடல் சூழ்ந்த இலங்கையாகிய மழகிய நகரில், கற்பினுக்கு அணியை- கற்பினுக் காபரணமாகிய எம்பிராட்டியை, கண்களால் கண்டனென் - அடியேன் கண்களாற் பார்த்தேன், அண்டர் நாயக - தெய்வநாயக, ஐயமும் பண்டு உள்ளதயரும் - சந்தேகத்தையும் முன்புகொண்டுள்ள துன்பத்தையும், இனித்துறந்தி என்று அனுமன் பன்னுவான் - இனிப்போக்குதியென்று அனுமான்சொல்லுவான். எ-று. (இரி)

ஐயமாவது பிரட்டி உயிரோடிருக்கின்றாளோ இலளோ வென்றுசங்கித்திருத்தல்.

க்ள. உன்குலமுன்னதாக்கியுயர்ந்தகேருச்சியாய
தன்குலந்தன்னதாக்கித்தன்னையித்தனிமைசெய்தான்
வன்குலங்கூற்றுக்கிந்தவ்வானவர்குலத்தைவாழ்வித்
தென்குலமெனக்குத்தந்தாளென்னினிச்செய்வதெம்மோய். (கூக)

இ-ள். என் கூலம் எனக்குத்தந்தாள் - என்று வாலியை எனக்குக்கொடுத்தாள், கூலம்-குலம் என விகாரமாயிற்று. (கூக)

தன்வாலி பிரட்டிதந்தாளென்றது வாலி லெரியூட்டிய காலே "எரியே யவனைச்சுடல்" என்ற பிரட்டி மொழியால் வாலழியாணமைபற்றி.

ஐந்தாவது. சுந்தரகாண்டம்

முற்றிற்று.

கண்டம் ஐந்துக்கு கூடுதிருத்தம் - ஒருக.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளேசரணம்.

நன்றுக - குருவாழ்க குருவேதுணை.

ஸ்ரீ

ஸர்வம்விஷ்ணுமயம்ஜகத்.

ஸ்ரீமத்கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

ஸ்ரீமத்கம்பராமாயணம்

அருங்கவிவிளக்கம்.

ஆருவது. உயுத்தகாண்டம்.

க - வது. கடல்காண்படலம்.

ஸ்ரீராகவபிரான் கடலைப்பார்த்ததைக் கூறுகின்றபடலம்.

தனியன்.

மகிழ்மாறனேவழுதிவாயென்றனக்கு
நெகிழ்மாறனேநினைக்குநேயம் - முகிழ்மா
முலிக்கமலியேற்றமொழிகாவியத்தால்
நிலிக்கமலிலேகவருணீ.

கரப்பு.

க. ஒன்றேயென்னிலொன்றேயாம்பலவென்றுரைக்கிற்பலவேயாம்
அன்றேயென்னினன்றேயாமாமேயென்னிலுமேயாம்.
இன்றேயென்னினின்றேயாமிலதென்றுரைக்கினிலதேயாம்
நன்றேநம்பிகுடிவாழ்க்கைநமக்கிங்கென்னேபிழைப்பம்மா. (க)

உ. பொங்கிப்பரந்தபெருஞ்சேனபுறத்தமகத்தம்புடைசுற்றச்
சங்கிற்பொலிந்ததகையாவேப்பிரித்தபின்புதமக்கினமாய்
கொங்கிற்பொலிந்ததாமரையின்குழுவுந்துயில்வுற்றிதழ்குவிக்குங்
கங்குற்பொழுதுந்துயிலாதகண்ணன்கடலைக்கணனுற்றான். (உ)

இ-ள். மிருந்து பரந்த பெரியசேனை வெளியிலும் (கணக்கால்) மனத்திலுஞ் சுற்ற, வானையல்களால் விளங்கிய கையுடைய பிராட்டியைப் பிரிந்தபின்பு கண்களான தமக்குமுவாகிய, வாசத்தோடு விளங்கிய செந்தாமரை மலர்க்கூட்டமும் நித்திரையடைந்து இதழ்களைக் குவிக்கின்ற, ஓராப்பொழுதிலுங் கண்வளராத ஸ்ரீராமபிரான் கடலைக்கண்டான். எ-று. (கூ)

கூ. சேயகாலம்பிரிந்தகலத்திரிந்தான்மீண்டுஞ்சேக்கையின்பால்
மாயன்வந்தாளிவளர்வானென்றுகருதிவருந்தென்றல்
ஆயமலர்ப்பேரிரைத்தொகையுமுத்தஞ்சிந்திப்படைசுருட்டிப்
பாயலுதறிப்படுப்பதேயெத்தனிரையின்பரப்பம்மா. (ச)

இ-ள். மாயன், நெடுங்காலம்பிரிந்தகன்று யாண்டுந்நிரிந்து பதிக்கையின்பத்தால், மீண்டும்வந்தான் இனி நம்மிடத்திற் கண்வளர்வானென்று கட்டல் நினைந்து வீசுகின்ற தென்றலால், பரிசுத்தமாகிய மலர்களே யெத்த நிரைத்தொகையையும் முத்துக்களையுஞ் சிந்தி, பாயலை யுதறிச் சுருட்டி, விரிப்பதைத்திரையின் தொகுதிக்கொத்தன. எ-று. (ஏ)

ச. சென்றற்கண்டதிருமேனியின்றுபிரிதாய்நிலைதளர்வான்
றன்னைக்கண்டுயிரற்காதனியேததுந்தடங்கடல்வாய்ப்
பின்னற்றிரைமேற்றவழ்கின்றபிள்ளைத்தென்றல்கள்ளுயிர்க்கும்
புன்னைக்குரம்பூமலருண்ணம்பூசாதொருசாற்போகாதே. (சு)

இ-ள். நேற்றுப்பார்த்த திருமேனி இன்று வேறுநிலையினின்று தளர்வாகிய, ஸ்ரீராமபிரானைப் பார்த்தும் அவனிடம் வந்து நின்னருமைத திருத்தேவியை நீங்கினையோ வென்று அழாது தனியே கதறுகின்ற பெரிய கடலினிடத்துண்டாகிய. பின்னுதலை யுடைய அலைகளின்மேல் தவழுகின்ற இளந்தென்றல் தேனைச்சொரிகின்ற, புன்னையினது சிறிய மலர்களின் உயிரதாகிய வொருகாற் பூசாது போகாதோ. எ-று. (ஐ)

பிராட்டி கடலிற்றோன்றினவளாகலின் அதை ஸ்ரீராகவபிரானுக்கு மாமி யெனவும் தென்றலை மைத்துனனென்னுங் கொண்டு கம்பர் கூறியதாயுள்ள விசேஷார்த்தமுமுண்டு.

ஸ்ரீ

உபரித்தகாண்டம் பிழைதிருத்தல்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தல்.
கூ	ஏ	யெற்ற ...	பெற்ற.
உஉ	உக	வேலைப் ...	வேலை.
உஎ	உள	பொய்கைப் ...	பொய்கை.
இஎ	உசு	கோகும் ...	கோக்கும்.

ஸ்ரீ

சுந்தரகாண்டம்

செய்யுளகராதி.

செய்யுள்.	பக்கம்.
அகரும்	ஈ0
அக்காலை	அ
அருகவ	கஈ
அண்டரும்	கஙு
அலக்கலி	க
அவிந்து	உஉ
—	
ஆலியம்	உங
—	
இந்திர	ஙங
இராக	ஈ
இழையும்	கசு
இளக்கர்	உஈ
இனைய	கஉ
இன்னோர்	உள்
—	
உங்குல	ஙஅ
உண்டாய	உஅ
ன்குல	ஈஉ
—	
எந்தைதன	ஙஏ
எல்லி	கஅ
எழுந்தனர்	கள
—	
	உங
ள	ஙங
ன்	கஈ
—	
	ஙங
—	
	கக
	ஙங
	ஙச
	ஙஈ
	ஙச
	ஙச
	ஙச

கு. இக்கவண்ணமுதற்பேதையிருந்தாணீங்காவிடர்கொடியேன்
றந்தபாவைதவப்பாவைதன்மைமதகலோவெனத்தளர்ந்து
சிந்துகின்றநறுந்தாரளக்கண்ணீர்தழும்பித்திரைத்தெழுந்து
வந்துவள்ளன்மலர்த்தாளின்வீழ்வதேய்க்குமறிகடலே. (கூ)

இ-ள். அலைமறிகின்ற கடல், பிறையையொத்த நெற்றியை யுடைய சீதாபிராட்டி நீங்காத துன்பத்திலிருக்கின்றாள், கொடியேனுகிய யான்பெற்ற அப்பெண்ணுகிய தவப்பெண் தனிமையிலிருப்பது தகுதியோவென்று மனந்தளர்ந்து, சிந்துகின்ற நல்லமுத்துக்களாகிய கண்ணீர் தழும்பித் திரைத்தெழுந்து, வந்து ஸ்ரீராமபிரானது மலர்போன்ற திருவடிகளில் விழுவதை யொக்கும். எ-று. (கூ)

கூ. பள்ளியாவித்பேருலகம்பசுங்கல்லாகப்பனிக்கற்றை
துள்ளுநறுமென்புனலெளிப்பத்துமீர்ச்சுழலிமுறைசுற்றி
வெள்ளிவண்ணநிரைக்கலவைவெதும்புமண்ணைதிருமேனிக்
கள்ளியப்பத்திரைக்கரத்தாலரைப்பதேய்க்குமவ்வாழி. (கo)

இ-ள். இரத்தினங்களையுடைய கடல், ஆதிசேடன்மேலிருக்கின்ற பெரியபூமி அம்மியாக, பனிக்கற்றை துள்ளுகின்ற நறுவிய மெல்லிய நீரைத் தெளிக்க, புனலாகிய சுழலியால் முறை சுற்றி, வெள்ளி நிறமுடைய நிரையாகிய கலனைச் சார்ந்தை, வெதும்புகின்ற ஸ்ரீராமபிரானது திருமேனியிலள்ளிப் பூசத்திரையாகிய கரத்தாலரைப்பதை யொக்கும். எ-று. (கo)

உ-வது. மந்திரப்படலம்.

—:o:—

அனுமான் இலங்கையைக்கொளுத்திவந்தபின்பு இராவண னதனை முன்போலச்செய்து மந்திரியரோ டாலோசித்ததைக்கூறுகின்றபடலம்.

எ. பூவருமயனெடும்புருத்தபொன்னகர்
மூவகையுலகினுமழகுமுற்றற
வேவெனவியற்றினன்கனத்தினென்பரார்
நேவருமருள்கொளத்தெய்வத்தச்சனே. (க)

இ-ள். பூவரும் அயனெடும் புகுந்து - திருமா லுந்தித்தா மரையிற் ரோன்றிய பிரமனோடும் இராவணன் இலங்கைவந்து, பொன்னகர் - அழகிய அவ்விலங்காபுரியை, மூவகைஉலகினும் அழகுமுற்றுற - மூன்றுலகினு மில்லையென்று அழகதிகரிக்கும் படி, எவு என-(இராவணன் பிரமனைப்பார்த்து) ஏவுதியென்று சொல்ல, தெய்வதத்தச்சன் தேவரும் மருள்கொள்ள - மயன் தேவர்களும் அதிசயிக்கும்படி, கணத்தின் இயற்றினன் என்பர் - கணப்பொழுதிற் செய்தனனென்று சொல்லுவர் அறிந்தோர். எ-று. (க)

அ. பொன்னினுமணியினுமமைந்தபொற்புடை
வன்னைகார்நோக்கினுநகர்நோக்கினுன்
முன்னையினழகுடைத்தென்றமொய்கழன்
மன்னனுமுவந்தன்முனிவுமாறினுன். (உ)

இ-ள். நகரம் நோக்கினுன் - தெய்வலோகத்தைப்பார்த்து, பொன்னினும் மணியினும் அமைந்த பொற்பு உடை - பொன்னுலு மிரத்தினங்களாலுஞ்செய்த வழகுடைய, நல்நகர் நோக்கினுன் - நல்ல இலங்கையைப்பார்த்து, மொய்கழல் மன்னனும் - மொய்த்த வீரகண்டாமணி யணிந்த இராவணனும், முன்னையின் அழகு உடைத்து என்று - (இலங்கை) முன்னினு மழகுடையதென்று, உவந்து தன் முனிவு மாறினுன் - மனமுவந்து தனது கோவ மாறினுன். எ-று. கோவமும் என்னும் உம்மையை முன்னையினுமென்று மாற்றுக.

நாகநோக்கினுன் நன்னகர் நோக்கினுன் எனவே தேவருலகும் இலங்காபுரியும் முன்பு ஒத்த அழகுடையவாயின. முன்னையினழகுடைத்தெனவே அத்தேவருலகினும் இலங்கையிப்போது சிறந்ததாயிற்று.

கூ. இச்சிரத்தவனுரைத்திறுக்குமெல்லையில்
வச்சிரத்தெயிற்றவன்வல்லைகூறினுன்
அச்சிரத்தைக்கொருபொருளன்றியும்
பச்சிரத்தம்பொழிபருதிக்கண்ணினுன். (உஅ)

இ-ள். இச்சிரத்தவன்-இத்தலைமையானமகோதரன்,(உஅ)

இச்சிரத்தனிராவணனுக்குச்சொல்லியது.

சஅ. குரங்குபட்டமேதினிகுறைத்தலைபட்டபோ
ரரங்குபடமானிடரலக்கலைபட்டபே
ரிரங்குபட்டசேதைபடவின்றிருவர்நின்ரூர்
சிரந்துவடனக்கொணர்தல்காணுதிசினத்தோய். (சுக)

இ-ள். சினத்தோய் - கோவமுடையாய், குரங்குபட - குரங்குகள் சாக, மேதினி குறைத்தலைபட - புவியில் கவந்தங்கள் கிடக்க, போர் அரங்குபட - போர்க்களம் யாண்டு முண்டாக, மானிடர் அலந்தலைபட - மானிடரெல்லாருந் துன்பப்பட, சேதை இரங்குபேர் படர்பட - சீதை வருந்துகின்ற மிகுந்த துன்பத்திலழுந்த, இருவர் நின்ரூர் சிரம் குவடு என - இராமலக்குமனரென்று இருவராய் நின்றவரது தலைகளே மலையைப் போல, இன்று கொணர்தல் காணுதி - இன்றே யான் கொணர்தலைப் பார்த்தி. எ-று. (சுக)

விபீடணன்வான்இராவணனுக்குச்சொல்லியது.

கக. மிடல்படைத்தெரிவலயமார்கோன்விடையதாய்வெரிந்மேலாய்
உடல்பதைத்தபுனராயினரெலாமடியவாருருவினும்
அடல்படைத்தவனியைப்பெருவளநிருகவென்றருளினும்
கடல்படைத்தவனெங்கைகைத்தவனவழிக்கடவுண்மன்னன். ()

இ-ள். வாள் உருவினன்-வாளோயுருவிய காருத்தன், வளம் தருக என்று அருளினன் - வளநாதந் தருகவென்றருளிய பிருதுசக்ரவர்த்தி, கடல்படைத்தவன் - சகரன், நெடும் கங்கை தந்தவன் - பகீரதன், வழிக்கடவுள் மன்னன் - என்று மிவர் குலத்திற் ரோன்றிய தெய்வத் தன்மையுடைய சுபாதசக்ரவர்த்தி. உம்மை இரண்டும்சாரிய. (அங)

இதுவுமது.

கஉ. பேருமோவொருவரால்வலர்களாலல்லநீபெரியவேலும்
காருரீயுமருமம்முடைச்சிலைகள்போனலியனமோ
தாருவாவெலுறுவோதானுவயுலகினைத்தருவித்தும்
மேருவோமால்வரைக்குலமதோவல்லவோவில்துமன்னே. (அக)

இ-ள். வில்லும் - அவரவருடைத்தாகிலும், அவர்களால் அல்லது ஒருவரால் பேருமோ - நாசமடைக்குமணவென்று மவ்வீருவர்களாலல்லாமல் வேறொருவரா லிடம்பிட்டழுமோ, நம்

முடைச்சிலைகள்போல் நாரும் மூரியும் அறு-நம்முடையதனுக் கஞ்சாபோல அச்சாபங்கள் நாணையும் வலியையுமறு, இஃபெ ரியவேனும் - நம்முடைய விற்கள் பெரியவாயினும், நலியலா மோ - அவற்றை யழிக்கலாமோ, தாருவோ - மரமும், வேறு வோ - மூங்கிலும், தாணுவாய் உலகினைத் தழுவிநிற்கும் மேரு வோ - தூணுகிப் புவியினைத்தழுவி நிற்கின்ற மேருகிரியும், மால் வரைக் குலமதோ - பெரியமலைக்குலமும், அல்லவோ - அவரது விற்களல்லவோ. எ-று. (அசு)

இதனுனே அவரது விற்கள் அவற்றின் வலியைப் படைத் தனவென்பது.

இதுவுமது.

கசு. புகன்மதித்தனர்கிலாமையினமக்கெளிமைசால்பொறமைகூர
கனன்மதிக்கிலமதுப்பொலியவாளொளியிழந்ததயநண்ணும்
பகன்மதிக்குவமையாம்விபுதராமிரவுகால்பருவநாளி
னகன்மதிக்குவமையாயினதபோதனருளார்வதனமம்மா. (கசு)

இ-ள். புகல் மதித்து உணர்கிலாமையின் - யாம் சாரன மடையுமிடத்தை யெண்ணி யுணராமையால், எளிமைசால் பொறமை நமக்குகூர - எளிமையமைந்த பொறுத்தல்நமக்கதி கமுண்டாகவும், நகல்மதிக்கிலம்-சிரித்தலே யெண்ணிலம்,மதுப் பொலியவர் ஒளி இழந்து - மாசுவிளங்க வொளியை யிழந்து, பகல் - பகற்பொழுதில், உதயம் நண்ணும் - உதயமாகின்ற,மதி க்கு உவமையாம் - சந்திரனுக் கொப்பாகிய, விபுதர் - தேவர் கள், தபோதனர் - தவத்தோர்கள், ஆம் - ஆகிய, உள்ளார்வதி னம் - உள்ளவாது முகங்கள், பருவநாளில் - பௌர்ணமியில், இரவுகால் - இரவுகான்ற, அகல்மதிக்கு உவமை ஆயின - அக ன்ற சந்திரனுக் கொப்பாயின. எ-று. (கூசு)

இராவணன்விபீடணுழ்வானுக்குச்சொல்லியது.

கச. சொல்லுமாற்றங்கடெரிந்திலேபன்முறைதோற்றும்
வெல்லுமாற்றலுமொருமுறைபொறுத்தனன்விண்ணேக்
கல்லுமாற்றலெனிலேயையுமென்னையுங்களத்திற்
கொல்லுமாற்றலருளெனக்கோடலுங்கொண்டாய். (கஎச)

இ-ள். சொல்லும் மாற்றங்கள் தெரிந்திலே-சொல்லுகின்ற வார்த்தைகளே யறிந்திலே, ஒருமுறை தோற்றும் - ஒருமுறை

தோல்வியடைந்தும், வெல்லும் ஆற்றலும் பல்முறை பெறுத் தனன் - வெல்லும் வலியையும் பலமுறைகொண்டேன். (கஎச)

இதுவுமது.

கடு. பித்தனுகியவீசனுமாலுமென்பெயர்கேட்
டெய்த்தசிந்தையரேகுழியேகுழியெல்லாங்
கைத்தவேற்றினுங்கடலியபுள்ளினுமுதுகிற்
றைத்தவாளிகணின்றுளதுன்றின்வீழ்தடித்தின். (கஅசு)

இ-ள். பித்தன் ஆகிய ஈசனும் மாலும் என்பெயர் கேட்டு- உன்மத்தமுடையவனுகிய சிவனுந் திருமாலு மெனது பெய ரைக்கேட்டு, எய்த்த சிந்தையர் ஏகுழி ஏகுழி எல்லாம் - தள ர்ந்த மனமுடையராகி யோடு மிடங்களிலெல்லாம், கைத்தவேற் றினும் கடலிய புள்ளினும் முதுகில் - வெறுத்த இடபத்தினுஞ் செலுத்திய புள்ளரசினும் முதுகில், தைத்தவாளிகள் - தைத்த அம்புகள், குன்றின்வீழ் தடித்தின்-மலைமேல் விழுந்த இடியைப் போல, இன்று உள - இன்று முள்ளன. (கஅசு)

பெயர்கேட்டலாவது - இராவணன் வருகின்று னென்று சொல்லக்கேட்டல். கைத்தலாவது - ஏகுழி யேகுழி யெல்லாம் அவனடித்தலால் இவரைச் சுமந்தன்றே இவ்வுதைப்பட வேண் டியதாயிற்றென்று வெறுத்தல்.

நடவது. இரணியன்வதைப்படலம்.

விபீடணுழ்வான்இராவணனுக்குச்சொல்லியது.

கசு. பாழிவன்றடந்திசைசுமந்தோங்கியபணைக்கைப்
பூழிவன்கரியிரண்டிருகைகொடுபொருத்த
மாழங்காணுதற்கரியவாயகன்றபோராழி
யேழுந்தனிருதாளவெனக்கடந்தேறும். (ந)

இ-ள், பெரியவலிய விசாலமுள்ள திசைகளைச் சுமந்தோங் கிய பருத்தகரத்தையுடைய, புழுதிபடிந்த வலிபொருந்திய இர ண்டு யானைகளைத் தன திரண்டுகரங்களைக்கொண்டு முட்டவிடு வான், ஆழம்பார்த்தலுக்கரியவாயாழ்ந்த பெரியகடல்களேழை

யும், தன் திருகாலளவென்று சொல்லும்படிக் கடந்தேறுவான்.
எ - று. (கூ)

இதுவுமது.

கஎ. மண்டலத்தருகதிரவன்வந்துபோய்மறையு
மெண்டலந்தொடற்கரியனதடவரையிரண்டும்
கண்டலம்பசும்பொன்விறத்தவற்கிளங்காலை
குண்டலங்கணமற்றென்விம்பெருவிறல்கூறின். (கக)

இ-ள். இனிப்பெருவிறல் கூறின் - இனி அவனது மிகுந்த வலியைச் சொல்லின், மண்டலம் தருகதிரவன் வந்து போய் மறையும்-வட்டமாகிய சூரியபதயமாகிச் சென்று மறைகின்ற, எண் தலம் தொடற்கு அரியனதடவரை இரண்டும் - மனந் தொடர்தலுக்கரியனவாகிய பெரியமலைகளிரண்டும், கண்தலம் பசும் பொன் நிறத்தவற்கு இளம் காலை-இரணியாக்கனுக்கிளைய அவ்விரணியனுக்கு, குண்டலங்கள்-குண்டலங்களாயின், மற்று என் - வேறுயாது. (கக)

இதுவுமது.

கஅ. மருக்கொடாமரைநான்முகன்முதலியவானோர்
குருக்களோடுகற்றேதவதவண்பெருங்கொற்றம்
சுருக்கமான்மறைதொண்ணூறுதொட்டுரைதொறுத்தோன்று
திருக்குத்தெய்வமுமிரணியவேகமென்னும். (கஉ)

இ-ள். நான்மறை சுருக்கம் - நான்குவேதங்களின் சுருக்கமாகிய பிரணவத்தில், தொன்னூறுதொட்டு உரைதொறும் தோன்றுது இருக்கும் தெய்வமும் - பழமையாக வார்த்தைகள்தோறுந் தோன்றுமலிருக்குந் தெய்வமும், (கஉ)

பிரகலாதாழ்வானுக்குச்சுக்கிராசாரிசொல்லியது.

கக. முந்தைவானவர்யாவர்க்குமுதல்வற்குமுதலோ
னுந்தைமற்றவன்றிருப்பெயருரைசெயற்குரிய
வந்தணாளனெனின்னைமதியோலவயா
விந்தவிப்பெயருரைத்தெனக்கெடுத்திடென்றான். (உங)

இ-ன். முந்தைவானவர் யாவர்க்கும்முதல்வற்கும் - உலகுக்கு முற்பட்ட தேவர்களெல்லார்க்கும் முதற்கடவுளுக்கும், உந்தைமுதலோன் - உனது தந்தை முதலோன், அவன் திருப்

பெயர் உரைசெயற்கு உரிய - அவனது திருநாமத்தை யோதுதற்குரிய, அந்தணாளனேன் என்னினும் ஐயா அறிதியோ - அந்தணாளனாகிய என்னைக் காட்டிலும் ஐயா அறிதியோ, இந்த இப் பெயர் உரைத்து என்னைக்கெடுத்திடல் என்றான் - இந்த இப் பெயரைச் சொல்லி யென்னைக் கெடுக்காதியென்றுசொன்னான். (உசு)
எ - று.

அவன் திருப்பெயராவது இரணியவே தம் என்றல்.

இப்பெயராவது உகூ - வது, பாட்டில் ஓதமோதாராயணனை என்றல் - தான் அந்தத்தை யணவுவோனென்பான் அந்தணாளனென்றான். அந்தமாவது வேதாந்தம்.

பிரகலாதாழ்வான்சுக்கிராசாரிக்குச்சொல்லியது.

உ0. எனக்குநான்முத்தொருவற்கும்யாரினுமுயர்ந்த
தனக்குமேதுளசராசரமனைத்திற்குந்தலைவன்
மனக்குவந்தனன்வந்தனயாவையுமறையோ
புனக்குமின்னதினல்லதொன்றில்லெனவுரைத்தான். (கூஙு)

இ-ள். யாரினும் உயர்ந்த தனக்கும்- எல்லாரினு முயர்ந்த இரணியனாகிய தனக்கும்,

இரணியன்பிரகலாதாழ்வானுக்குச்சொல்லியது.

உக. தேவர்செய்கையனங்கனமுரைசெயத்தீயோன்
முவில்வேதியன்றக்கதேயுரையெனத்தக்கோ
னுவதாகுகவன்றெனிலதிகுவமன்றே
யேவதவ்வுரையியம்புதியம்புதியென்றான். (ஙக)

இ-ள். தீயோன் - இரணியன், தாஇல்வேதியன் - குற்றமில்லாத சுக்கிராசாரி, தக்கதே உரை எனத்தக்கோன்-ஒதத்தகுந்ததையே யோதென்று சொல்லத்தகுந்தவன்,

பிரகலாதாழ்வான்இரணியனுக்குச்சொல்லியது.

உஉ. முக்கட்டேவனுநான்முகத்தொருவனுமுதலா
மக்கட்காமுமம்மந்திரமறந்தவர்மறந்தார்
புக்குக்காட்டுவதரிதுபொதுவுறக்காண்பா
ரொக்கநோக்கினரல்லவரதனிலையுணரார். (ஙச)

இ-ள். இம்மந்திரம் மறந்தவர் மறந்தார் - இம்மந்திரத்தை மறந்தவர் தம்மை மறந்தாராவர், புக்குக்காட்டுவது அரிது-

சொல்லிக்காட்டுவ தரிதாகலின், இது பொதுவுறக் காண்பார்-இதனை நடுவுநிலைமை பொருந்த வுணர்வாரோடு, ஒக்க நோக்கினர் அல்லவர் அதன் நிலைஉணராார் – கூட ஆராய்ந்தவரையல்லாதவர் அம்மந்திரத்தினிலையை யுணரார். (சச)

இரணியன்பிரகலாதாழ்வானுக்குச்சொல்லியது.

உசு. முனிவர்வானவர்முதலினர்மூன்றுலகத்து
மெனையருள்ளவர்யாவருமென்விருகழலே
நினைவதேத்துவதென்பெயர்நினக்கிதுகேள்
வனையரஞ்சுவர்மைந்தநீயாரிடையறிந்தாய். (சஅ)

இ-ள். மைந்த - குமாரா, முனிவர் வானவர்முதலினர்மூன்று உலகத்தும் எனையர் உள்ளவர்யாவரும் – முனிவர் தேவர்முதலினரும் மூன்றுலோகத்திலு மெல்வகைப்பட்டவரா யுள்ளவரெல்லாரும், என் இருகழலே நினைவது - எனதிரண்டு பாதங்களையே தியானிப்பதும், என்பெயர் எத்துவது-எனது பெயரையே துதிப்பதுமா யிருக்க, நினக்கு இது கோ அனைவர் அஞ்சுவர் - உனக்கு இதைச்சொல்ல அம்முனிவர் முதலியோரஞ்சுவர், நீ ஆரிடை அறிந்தாய் - நீயாரிடத்திற் கற்றாய். எ-று. ()

பிரகலாதாழ்வான்சொல்லியது.

உஅ. கருமமுங்கருமத்தின்பயனுங்கண்ணிய
தருமுதற்றலைவனுந்தானுந்தானவ
னருமையும்பெருமையுமறிவரேலவ
நிருமையென்றுரைசெயுங்கடனின்றேறுவார். (சக)

இ-ள். கருமமும் கருமத்தின் பயனும் - வேள்விமுதலிய கருமங்களும் அக்கருமங்களின் பயனும், கண்ணிய தருமுதல் தலைவனும் - நினைத்தவற்றைக் கொடுக்கின்ற ஆதிபகவனும், தானும் - பெறுகின்ற சீவனும், தான் - தானே யாவன், (சக)

இதுவுமது.

உடு. * பகுதியினுட்பயன்பயந்ததன்னதின்
மிகுதியின்மிகுதிகளெவையுமேலவாம்
வகுதியின்வசத்ததுவ்வுபோக்கத
புகுதியில்லாதவர்புலத்திற்றருகுமோ. (சுக)

இதுவுமது.

உசு. * எழுத்தியலுரைத்தினெண்ணிலாவகை
முழுத்தனிநான்முகன்முதலுமற்றுயிர்
வழுத்தரும்பொருட்டதோரொளியின்வைகுமால்
விழுத்தனிப்பல்லிதழ்விரையிலாமுகிழ். (எ0)

இதுவுமது.

உஎ. சிந்தையிற்செய்கையிற்சொல்லிற்சேர்ந்தனன்
இந்தியத்தொழுமுளனுற்றதெண்ணினன்
முந்தையோரெழுத்தெனவந்தமும்மூறைச்
சந்தியும்பதமுமாய்த்தழைத்ததன்மையான். (எ

இ-ள். முந்தை ஓர் எழுத்து என வந்து - பழமையொப்பற்ற அக்கரமெனவந்து, மும்மூறைச் சந்தியும் பதமுமாய்த் தழைத்த தன்மையான் - மூன்றுவிகாரங்களையுடையயும் பதமுமாகித் தழைத்த தன்மையையுடையான். (எ

முந்தையோரெழுத்தாவது பணவம். அதனுள் மூன்றெழுத்துள்ளனவென்றும் அவற்றுக்குப் பத்துப்பிரகாரமாய்ப் பொருளுள்ளனவென்றும் * "மூன்றெழுத்தனே மூன்றெழுத்தனுல் மூன்றெழுத்தாக்கி" என்ற பாசுரம் அப்பொருளைக் கொண்டதென்றுங் கூறுப.

உஅ. வெண்கோடிற்றனமெய்யிலர்செய்யுங்
கண்கோடற்பொறியிற்கடிதேகி
யெண்கோடற்கரிதென்னவெருண்டான்
றிண்கோடைக்கதிரிற்றெறுகண்ணன். (கஅ)

இ-ள். வெண்கோடு இற்றன - வெள்ளிய கொம்புகளொடிந்தன, மெய்யிலர் செய்யும் கண் - மெய்யிலர் துன்பஞ் செய்யுமிடத்து, திண்கோடைக் கதிரில் தெறுகண்ணன் - முதிர்ந்த கோடைக்காலத்துச் சூரியனைப்போல அழிக்கின்ற கண்களையுடைய இரணியன், கோடல் பொறியில் கடிது எதி-பார்த்தலைச் செய்கின்ற இந்திரியமாகிய கண்போல விரைவிலேகி, எண்

* மூன்றெழுத்தனேமூன்றெழுத்தனுல்மூன்றெழுத்தாக்கிமூன்றெழுத்தை
என்றகொண்டிருப்பார்க்கிரக்கனன்குடையவெம்புருடோத்தமனிருக்கை
மூன்றடிநிமிர்த்தமூன்றினிற்றேன்றிமூன்றினின்மூன்றருவானன்
கான்றடம்பொழில்சூழ்கங்கையின்கரைமேற்கண்டமென்னுங்கடிநகரே.

கோடற்கு அரிது என்ன \ வெகுண்டான் - இவனது வலியை வாங்குதலுக்கு அரிதென்னவென்று கோவித்தான். எ-று. ()

உக. அத்தன்மையறிந்தவருந்திறலோ
ஐத்தையம்மியினன்முன்னெனவுய்த்தனரால்
பித்தண்டமுபோர்வுண்மாபெறுதங்
கைத்தங்கடுஞ்சினனைக்கனலா. (ககச)

இ-ள். அத்தன்மை அறிந்த அரும்திறலோன் - அத்தன்மையைத் தெரிந்த அரிய வலியுடைய இரணியன், என்முன்னக்கு முன், உய்த்து உய்மின் என உய்த்தனர் - (பிரகலாதனைக் கொண்டு வாருமென்று சொல்லக்கொண்டுவந்தனர், பித்தமும் அதுபோர்உறும் ஆபெறுதும்-(அப்பிரகலாதனை)பித்துத் தெத்தண்டு அப்பித்து நீக்கும் விதத்தைச் செய்வோம், - என்று கருதி, கைத்தும் கடும் சினன் கனலா - கைக்கின்ற கடியவிடம்போலக் கோவித்து. எ-று. (ககச)

ஊ. இட்டார்கடிவல்விடமெண்ணுடையான்
முட்டாதுகாத்தொகைவன்கசையிற்
கட்டார்கடுமத்திகைகள்கொடியான்
விட்டானவன்மேலவர்வீசினரால். (ககடு)

இ-ள். கடுவன் விடம் இட்டார் - கடிய வலிய விடத்தைக் கலத்திலிட்டார், என்றுடையான் - தியானமுடையான், முகாரத்தொட்டான் - உண்ண அவ்விடத்தை யெடுத்தான், கொடியான் - இரணியன், தொகைவன் கசையில்-கூட்டமாகிய வலிய முறுக்கிய கம்பிசேர்ப்போன்ற, கட்டு ஆர் கடுமத்திகைகள் விட்டான் - கட்டமைந்த கடிய குதிரைச் சம்மட்டிகளை யெடுத்தெறிந்தான், அவர் அவன்மேல் வீசினர் - அவர் அப்பிரகலாதாழ்வான்மேல் வீசினர். எ-று. (ககடு)

ஈ. குயிற்றியவண்டமுருஞ்சையிட்டிலாமுட்டைமுட்டப்
பயிற்றியபருவமொத்தகாலத்துளமுதுபல்லும்
எயிற்றுவன்பருவாயுள்புக்கிருக்குனவிருக்கையெய்தி
வயிற்றின்வந்தன்னுளின்னுள்வாழுமன்னுயிர்க்கன்மன்னே. (ககஎ)

இ-ள். குயிற்றிய அண்டம் குஞ்சை இட்டிலா முட்டை முட்ட - தான்படைத்த அண்டமாகிய குஞ்சைப் பொறிக்காத

முட்டையுள் மோத, பயிற்றிய பருவம் ஒத்த காலத்துள்-(குஞ்சைப்பொறிக்க) அனைத்தகால மொத்தகாலத்தில், வயிற்றின் வந்து - உதரத்தினின்றுவந்து, அந்நாள்-இரணியனைக்கொன்ற அக்காலத்திலும், இந்நாள் - இக்காலத்திலும், வாழும் மன்னுயிர்கள் - வாழுகின்ற நிலைபெற்ற வுயிர்கள், அமுது பல்கும் வன்எயிற்று பகுவாய் உள்புக்கு - அமுதூறுகின்ற வலிய பற்களையுடைய பெரியவாயுட் புகுந்து, இருக்கை எய்தி இருக்குனதாமிருக்குமிடத்தையடைந்து இருந்தன. எ-று. (கஙடு)

ஊ. வகிர்ப்படுத்தரக்கும்பற்றிவாய்கூர்ப்பிளக்கும்வன்மேல்
தகிற்படுத்தரிக்குஞ்செந்தீக்கண்கனத்தோண்டுஞ்சுற்றிப்
பகிர்ப்படக்குடரைக்கொய்யும்பசையறப்பிசையும்பல்கா
லுகிர்ப்புரைபுக்கோர்தம்மையுகிர்களாலுறக்குமூன்றி. (கஙஎ)

இ-ள். உகிர்ப்புரைபுக்கோர் தம்மை உகிர்களால் ஊன்றி உறக்கும் - நகங்களினுட்புகுந்த அசுரர்களை நகங்களாலூன்றிப் பிதிக்கும்,

பிரமன்தன்

ஊ. தன்னைப்படைத்தவுரத்தானேயெனுந்தன்மை
பின்னைப்படைத்தவேகாட்டும்பெரும்பெருமை
யுன்னைப்படைத்தாய்நீயென்றுலகீர்படைப்பா
னென்னைப்படைத்தாயெனுமிதுவுமேதாமோ. (கஙஏ)

இ-ள். தன்னைப் படைத்ததுவும் தானே எனும் தன்மை பின்னைப் படைத்ததுவேகாட்டும் - தன்னை யுண்டாக்கியதுந்தானே யென்னுந் தன்மையை (எல்லாரையும் படைத்தயென்னை) பின்புண்டாக்கியதுவே சொல்லும், பெரும் பெருமை - பெரிய பெருமையுடைய, (கஙஏ)

இதுவுமது.

ஊ. பேரையொருபொருட்கேபல்வகையாற்பேர்த்தெண்ணுந்
தாரைநிலையதனியைபிறரில்லை
யாரைப்படைக்கின்றதியாரையளிக்கின்ற
தியாரைத்தடைக்கின்றதையாவதியேமால். (கஙக)

இ-ள். பேரை - எல்லாப் பேர்களையுமுடையை, ஒருபொருட்கே பல்வகையால் பேர்த்து எண்ணும் - (நீயாகிய) ஒருபொருளையே பலவகையால் வேறுபடுத்தெண்ணுகின்ற, தாரை நிலை

யை - ஒழுங்குடைய நிலைமையுடையை, தனியை - தனிமையுடையை, பிறர் இல்லை - இவ்வாறு நீயன்றிப்பிறரில்லை, (கடுக)

சவது. விபீடணனடைக்கலப்படலம்.

விபீடணழ்வான் சரணுகதஞ் செய்ததைச் சொல்லும்படலம்.

——:o:——

இராவணன்விபீடணழ்வானுக்குச்சொல்லியது.

கூடு. இரணியனென்பவனெம்மனோரினும்
முரணியனவன்றனமுருக்கிமுற்றினன்
அரணியனென்றவற்கன்புபூண்டனை
மரணமென்றொருபொருண்மாற்றம்வண்மையோ. (உ)

இ-ள். இரணியன் என்பவன் எம்மனோரினும் முரணியன்-இரணியனென்று சொல்லப்படுபவன் எம்போலியரினும் வலியுடையவன், அவன்தன்னைமுருக்கி முற்றினன்-அவனைக்கோவித்தழுடித்தநிருமால், அரணியன் என்று-காப்பவனுவானென்று, மரணமென்று ஒருபொருள் மாற்றும் வண்மையோ-சாவென்று சொல்லப்படுகின்ற வொரு பொருளைப் போக்கும் வண்மையாலோ, அவற்கு அன்பு பூண்டனை - அத்திருமாலுக் கன்பு செய்தனை. (உ)

கூசு. மின்னுமணிவிரற்றேயவீழ்கணீர்
அன்னரும்பெருஞ்சுழியழிப்பச்சோர்விலை
டினனைகதுஞ்சிலையிளைக்குமாழிசால்
புன்னையம்பொதும்பரும்புக்குநோக்கினன். (உஅ)

இ-ள். மின் நகுமணி விரல்தேய - ஒளிவிளங்குகின்ற இரத்தினம் பதித்தவிரல் தேயும்படி சுழித்த, துன் அரும்பெரும் சுழி - கூட வரிதாகிய பெரிய சுழியை, வீழ்கண்ணீர் அழிப்பச் சோர்விலை - விழுகின்ற கண்ணீர் அழிக்கச் சோர்வோடு, இன் நகை நுனைச்சிலை இளைக்கும் ஆழிசால் - இனிய பற்களையுடைய நெய்தனிலப்பெண்கள் (மீண்டும்) செய்கின்ற வட்டங்

களமைத்த, புன்னை அம்பொதும்பரும்புக்குநோக்கினன் - புன்னைமரங்கள் நிறைந்த அழகிய சோலையையும் புகுந்து பார்த்தான். எ-று. (உஅ)

சுழிக்குஞ் சுழிகளையெல்லாங் கண்ணீரழிப்பதால் சோர்வினோடிழைக்கு மென்றார். சுழியின்னதென்று பரலகாண்டத்திற் கூறினும்.

கூஎ. கூதிர்நண்குரும்பனித்திவலைக்கோவைகான்
மோதிவெண்டிரைவரமுடவெண்டாழைமேற்
பாதியஞ்சிறையிடைப்பெடையைப்பரிணைத்
தோதிமஞ்சுயில்வகண்டுயிர்ப்புவீங்கினன். (உக)

இ-ள். வெண்திரைமோதிவர - கடலினது வெள்ளிய அலைகள் மோதி வீச, கூதிர் நண்குரும்பனித்திவலைக்கோவைகால்-காற்றால் நுண்ணிய சிறிய குளிர்ச்சியுடைய திவலை வரிசைகளைத்துளிக்கின்ற, முடவெண்தாழைமேல்-கோணலுடைய வெண்டாழை மரத்தின்மேலிருந்து, (உக)

கூஅ. மற்றொருபொருளுளதென்னின்மாதிலாக்
கொற்றவசரணெனக்கூயதோருரை
உற்றசெவித்தலத்தனதயலெல்லைனை
நற்றுணைவரைமுகமயங்கநோக்குமே. (கூடு)

இ-ள். மற்று ஒருபொருள் உளது என்னில் - இன்னையன்றிவொருபரம்பொருளுள்ளதென்று சொல்லின், மாதிலாக் கொற்றவ-அதினின்றும் வேற்படாத இறைவ, சரண்எனக் கூயதுஓர் உரை - சரணமென்று இன்னைக்கூவியதாகிய வொருவார்த்தை, செவித்தலத்து உற்றது - செவியிற் பட்டதென்று சொல்ல, ஐயன் ஒல்லென நல்துணைவரை முகம் மயங்கு நோக்குமே-ஸ்ரீராகவபிரான் விரைவாய் நல்லதுணைவராகிய சுக்கிரீவன்முதலியோரது முகங்களை விரும்பிப்பார்த்து, (கூடு)

மயிந்தன்ஸ்ரீராகவபிரானுக்குச்சொல்லியது

கூக. முரண்புகுதிவினைமுடித்தமுன்னவன்
சரண்புகுசூழலேசூழக்காண்பதோ
ரரண்பிறிதில்லெனவருணனேவலையை
சரண்புகுத்தனனெனமுன்னஞ்சாற்றினன். (கூஉ)

இ-ள். முரண்புகு திவினை முடித்த முன்னவன் - வலியுடைய நீவினைகளைச் செய்த தமையன், கரண்புகு சூழலே சூழ்மனஞ் சென்ற வழியிலே செல்ல, காண்பது ஓர் அரண் பிறிது இல் என-தான்பெறுவதாகிய வேர்காப்புவேறில்லையென்று, ()

சுo. * அடித்தாட்டாரியல்புடையவாணையாற்
படித்தலர்பட்டவர்பகைருரோடொரு
மடக்கொடிபயந்தவர்மைந்தராயினு
முடற்கொளத்தகையர்நம்மூழைவர்தொன்றிலுல். (அச)

அநுமான்சொல்லியது.

சுக. பகைப்புலத்தோர்துணையல்ல ரென்றிவரைப்பற்றுமேலறிஞர்பார்க்கி
னகைப்புலத்ததாமன்றேற்றுயமுளதாயபற்றுண்மிக்க
தகைப்புலத்ததந்தையர்கடம்பியர்கடமையரிவர்தாமேயன்றே
யிகைப்புலத்தவினைகின்றதொரு பொருளீக்காதலிக்கின்விளிஞராவார்

இ-ள். பகைப்புலத்தோர்துணையல்லர் என்று இவரைப்பற்றுமேல்-பகையிடத்தோர் நமக்குத் துணையாகாரென்றிவரைக்கொள்ளேமாயின், அறிஞர் பார்க்கின் நகைப்புலத்தது -ஆம்-அறிவுடையோர் கேட்பின் அது சிரிப்பிடத்ததாகும், மிகைப்புலத்து விழைகின்றது ஒருபொருளைக் காதலிக்கின்-மிகுதியான அறிவினிடத்திலுண்டாகிய ஒருபொருளை விரும்பின், நல்தாயம் உளதாய பற்றுல்-மிக்க-நல்லவுறவுளதாகிய அன்பால் மிகுந்த, தகைப்புலத்த தந்தையர்கள் தம்பியர்கள் தமையர் இவர்தாமே விளைஞர் ஆவார் - மேன்மைபொருந்திய அறிவுடைய தந்தையர்களுந் தம்பியர்களுந் தமையர்களுமாகிய விவர்தாமே ஏகோவமுடையோராவார், (சoக)

ஸ்ரீராம்பிரான்சொல்லியது.

சுஉ. பிறந்தநாட்டொடங்கியாருந்துலிபுக்கபெரியோன்பெற்றி
மறந்தநாளுண்டோவென்னைச்சரணெனவாழ்கின்றவீடண
னிறந்தநாட்டின்றவர்ததன்னினுன்சூழ்ச்சியாலே
யிறந்தநாளன்றேவென்றமிருந்தநாளாவதென்றுன். (கoக)

இ-ள். துலிபுக்க பெரியோன்பெற்றி - ஒருபுறவின் பொருட்டாகத் துலையிலேறிய சிவிசக்ரவர்த்தியின் குணத்தை, யாரும் பிறந்தநாள் தொடங்கி - எல்லாருக் தாம் பிறந்தநாள் முதல், மறந்தநாள் உண்டோ - மறந்தநாளுமுண்டோ, என்னைச் சரண் என வாழ்கின்றனை - எனக்கபயங்கூறி வாழ்கின்ற வீடணனை, துறந்தநாட்டு - நானபயஞ்செய்யாமல் நீக்கியநாளுக்கு, இன்றுவந்து துன்னினுன் சூழ்ச்சியாலே-இன்றுவந்து சேர்ந்த அவ்வீடணன் செய்யுந் தந்திரத்தாலே, இறந்தநாள் அன்றே என்றும் இருந்தநாள் ஆவது என்றுன் - மரித்தநாளன்றே என்று மிருந்த நாளாவதென்று சொல்லினன். எ-று. (கoக)

எதிர்மறை உம்மை வருவிக்கப்பட்டது.

இதுவுமது.

சுக. மன்றுயிரெல்லாந்தானேவருவித்தவளர்க்குமாயன்
தன்னளவுலகமெல்லாந்தருமமுமெனவுயர்ந்தானே
யென்னினுமடைந்தார்தம்மையேமுறவினிதினெம்பிப்
பின்னும்வீடளிக்குமென்முலென்னினிப்பிறிதுபேசில். (கoக)

இ-ள். நிலைபெற்ற வுயிர்களெல்லாவற்றையுந்தானேபடைத்துக் காக்கின்ற திருமால், தன்னுடைமையனவாகிய எல்லாவுலகங்களுந் தருமமுதலிய யாவுந்தானே யாயினும், அடியார்களை உவக்க இனிது காத்துப்பின்பு நிரதிசயவின்பவீட்டையும் அருளுவா னென்றல் பேசில் (அபயஞ்செய்ய வேண்டியதேயன்றி)வேறினியாதுளது. (கoக)

சுஎ. மாற்கடஞ்சூழ்ந்தவைப்பினங்கதன்மருங்குகாப்ப
நாற்கடலுடுத்தபாரினையன்புதல்வனுமப்
பாற்கடல்சுற்றவிறைவடவரைபாங்குநிற்கக்
கார்க்கடல்கமலம்பூத்தெனப்பொலிவானேக்கண்டான். (கoக)

இ-ள். அங்கதன் மருங்கு காப்ப - அங்கதனொருமருங்கு நின்றுகாக்க, வில்கை வடவரை பாங்குநிற்க - வில்லைக் கையிலுடைய மேருகிரியை யொத்த இளையபெருமான் ஒருபக்கநிற்க, நாமப்பால் கடல்சுற்ற - அழகிய பாற்கடல் சூழ, கார்க்கடல் கமலம் பூத்தது எனப்பொலிவான் - கருமையுடைய கடல்தாமரைமலர்களே மலர்ந்ததைப்போல விளங்குகின்ற, நாலல்கடல் உடுத்த பாரின் நாயகன் புதல்வன் - அசைதலையுடைய கடலாடையுடுத்திய புவிக்கு நாயகனுகிய சக்ரவர்த்தித் திருக்குமரனை, மற்கடம் சூழ்ந்தவைப்பில் - குரங்குகள் சூழ்ந்த நிலத்தில், கண்டான் - விபீடணன்வான் பார்த்தான். எ-று. (கoக)

மற்கடம் - மாற்கடமென விகாரப்பட்டது.

சுடு. அள்ளிமீ லலகைவீசுமரிக்குலச்சேனைநாப்பண்
டெள்ளுதண்டிரையிற்றுகிப்பிறிதொருதிறனுஞ்சாரா
வெள்ளியகடலின்மேனள்விண்ணவர்தொழுதவேண்டப்
பள்ளிதீர்ந்திருந்தானென்னப்பொலிதரும்பண்பினனே. (கஉ)

இ - ள். தெள்ளுதண்டிரையிற்று ஆகிப்பிறிது ஒருதிறனும் சாரா-தெள்ளிய குளிர்ச்சியுடைய அலைகளையுடையதாகிவேறொருதிறனுஞ் சாராத, வெள்ளியகடலில் மேல்நான் விண்ணவர் தொழுது வேண்ட - திருப்பாற்கடலில் முன்னாளில் தேவர்கள் தொழுது பிரார்த்திக்க, பள்ளிதீர்த்து இருந்தான் என்ன-யோகநித்திரை நீங்கி வீற்றிருந்தவனைப்போல, உலகை அள்ளி மீது விசும் அரிக்குலச்சேனை நாப்பண் - உலகைப் பிடுங்கி மேலெறிகின்ற வலியுடைய குரங்குச் சேனையினிடையில், பொலிதரும்பண்பினனே - பொலிகின்ற அழகுடையானே. எ-று. (கஉ)

சஙு. கோணுதற்கமைந்தகோலப்புருவம்போற்றிரையுங்கூடப்
பூணுதற்கினியமுத்தின்பொலிமணல்பரந்தவைப்பிற்
காணுதற்கினியநீளவெண்மையிற்கருமைகாட்டி
வாணுதற்சிதைகண்ணின்மணியெனவயங்குவானே. (சஉங)

இ-ள். கோணுதலுக்கமைந்த அழகுடைய புருவங்களைப்போல அலைகளுஞ்சேர, அணிதலுக்கினியமுத்துக்களைப்போலப் பொலிகின்ற மணல் பரந்த விடத்தில், பார்த்தலுக்கினிய நீண்ட வெண்மையிற் கருமையைத் தோற்றி, ஒளிபொருந்திய நெற்றியையுடையசிதாப்பிராட்டியினது கண்ணினது மணியைப்போல விளங்குவானே. எ-று. (கஉங)

கோள்ளுதற்கு அமைந்த - பெருமைபொருந்திய நெற்றிக்கமைந்த எனவுமாம்.

சஎ. படர்மழைசுமந்தகாலைப்பகர்வுமமரர்கோமா
னடர்சிலைதிறந்தசென்னவாரந்தீர்மார்பினுக்கக்
கடல்கடைமத்திற்பம்புகழுற்றியதென்னக்காசின்
சுடரொளிவலயஞ்சீத்தசுந்தரத்தோளினானே. (கஉச)

இ - ள். (மேகங்கள்)படர்ந்த புனலைக்கொண்ட காலை தனித்தலுக்கரிய இந்திரனது, வலியுடையவில்லை நீக்கியதென்று சொல்லும்படி இரத்தினமாலை நீங்கியமார்புடையானே, கடலைக்

கடைந்த மந்தரகிரியாகிய மத்திற் சுற்றியகயிறுகிய வாசுகியைக் கழற்றியதென்று சொல்லும்படிக்குற்றமில்லாத, மிகுந்தஒளியையுடைய தோள்வலயங்களை நீக்த வழகிய தோளுடையானே. எ - று. (கஉச)

சஅ. மின்மினிபொலிமின்மாயும்பிறவியைவேரின்வாங்கச்
செம்மணிமகுடநீக்கித்திருவடிபுனைந்தசெல்வன்
தம்முனுர்கமலத்தண்ணருதையார்சரணந்தாழ
வெம்முனுரெனக்குச்செய்தவுதவியென்றேம்பலுற்றான். (கஉஎ)

இ - ள். மின்மினிப் பூச்சியினதொளியைப்போலக் கணப்பொழுதில் மாய்கின்ற பிறவியை வேரொடும்பறிக்க, செவந்த இரத்தினங்கள் பதித்த கிரீடத்தைநீக்கிப் பாதுகங்களைத் தரித்த செல்வனுகிய பரதாழ்வானுக்கு, மூத்தோராகிய தாமரைமலரில் வதிகின்ற பிரமனுக்குத் தந்தையாரது திருவடிகளை வணங்க, எனது கமையனுராகிய இராவணனுரெனக்குச் செய்தவுதவியென்று விபீடணழ்வான் மகிழ்வுற்றான். எ-று. (கஉஎ)

ருவது. இலங்கைகேள்விப்படலம்.

:o:

இலங்கையின்சிறப்பை விபீடணழ்வான்சொல்ல ஸ்ரீராகவபிரான்கேட்டதைக்கூறுகின்றபடலம்.

விபீடணழ்வான்சொல்லியது.

சஙு. விண்ணிடைவிழித்தனர்நிற்கும்வெய்யவ
ரெண்ணிருகோடியினிராட்டியென்பரான்
மண்ணிடைவானவர்வருவரென்றலர்
கண்ணிலர்கரையிலர்கரந்துபோயினர். (உடு)

இ-ள். கரையிலர்-அளவில்லாதவர், மண்ணிடை வானவர் வருவர்என்று - புவியில் தேவர் வருவரென்று, அவர் கண்ணிலர் கரந்துபோயினர் - அத்தேவர் கண்ணுக்குத் தோன்றுராகி மொளித்து போயிருக்கின்றனர், (உடு)

இதவுமது.

இ0. தேவருந்தக்கமுனிவருந்திசைமுகன்முதலா
மூவரும்பக்கநோக்கியேமொழிதரமுனிவான்
மூவரும்பக்கமெண்ணிருகோடியின்றலைவன்
மாபெரும்பக்கனென்னுனன்குன்றினும்வலியான். (கூ)

இ-ள். தேவர்களும் தக்கமுனிவர்களும் பிரமன் முதலிய, மூவர்களும் (அச்சத்தால்) பக்கம் பார்த்துப் பேசும்படி கோவிப்பான், கெடுதலில்லாத சேனை பதினறுகோடிக்குத் தலைவன், மாபெரும்பக்க னென்றொருவ னுள்ளானவன் மலையினும் வலியுடையான். எ-று. (கூ)

இதவுமது.

இக. உச்சிரத்தெரிகதிரெனவுருத்தெரிமுகத்த
னச்சிரப்படைநாலிருகோடிக்குரார்தன்
மூச்சிரத்தயிற்றலைவற்கும்வெற்கருமொய்ம்பன்
வச்சிரத்தெயிற்றவனுளன்கூற்றுவன்மாற்றுன். (ச0)

இ-ள். உச்சிரதத்து எரிகதிர் என உருத்து எரிமுகத்தன், உச்சிப்பொழுதில் ரதத்தினின் றெரிக்கின்ற சூரியனைப்போலக் கோவித்தெரிகின்ற முகத்தையுடையான், அச்சிரப்படை - அத் தலைமையான படை, (ச0)

கூ-வது. வருணனைவழிவேண்டுபடலம்.

இதவுமது.

இஉ. காந்துகின்றதின்றன்மையையதுசெலக்கருதும்
பாந்தளன்றிருக்குலமுதற்றலைவராற்பரிவாய்
வாந்தரும்மிந்தமாக்கடல்படைசெலவழிவே
நிரந்துவேண்டுதியெறிதிரைப்பரவையையென்றுன். (உ)

இ-ள். காந்து நின்ற நின்தன்மையை செல்லக் கருதும்-ஒளிந்துநின்ற உனது தன்மையைக் கடக்கக் கருதுகின்ற, அது-அக் கடல், உன் திருக்குலமுதல் தலைவரால் பரந்தது-உனது திருக்குலத்திற்கு முதலாகிய தலைவர்களால் தோண்டப்பட்ட தாகலின், இந்த மாக்கடல் பரிவாய் வரம் தரும்-இந்தப்பெரியகடல்

அன்பாய் வரங்கொடுக்கும், படைசெல - சேனைசெல்ல, எறிதிரைப்பரவையை-வீசுகின்ற அலையையுடைய அக்கடலை, இரந்து வேறுவழி வேண்டுதி என்றான் - இரந்து வேறுவழியை வேண்டுவாயென்று சொன்னான். எ-று. (உ)

ஸ்ரீராகவபிரான்சொல்லியது.

உ. மறுமைகண்டமெஞ்ஞாலியர்ஞாலத்துவரினும்
வெறுமைகண்டபின்யாவரும்யாரெனவிரும்பார்
குறுமைகண்டவர்கொழுங்கனலென்னிறுங்கூசார்
சிறுமைகண்டவர்பெருமைகண்டல்லததேரார். (ச)

இ-ள். வெறுமைகண்டபின் யாவரும் யார் என விரும்பார்-அவரிடத்தில் ஒருபொருளுமில்லாமையைப் பார்த்தபின்பு எல்லாரு மிவர் யாரோவென்று விரும்பார், (ச)

உ. மீனரகமும்விண்டொடுமலைகளும்விறகா
யேனமிற்பனயாவையுமேலெரியெய்தப்
பேனநீர்கெடுநெய்யெனப்பெய்கணைகெருப்பாற்
கூனலங்கியின்குண்டமொத்தனகடற்குட்டம். (க)

இ-ள். மீன்களும் பாம்புகளும் ஆகாயத்தைத் தொடுகின்ற மலைகளும் விறகாக, ஏனையுள்ளனவெல்லாம் (வெந்து) மேலெரியாக, நுரையுடைய நெடும்புனல் நெய்போலாக, ஸ்ரீராகவபிரான் எய்த வம்புகளின் கெருப்பால், கடலாகிய குட்டம்வளைவான அழகுடைய வக்கினிகுண்டத்தை யொத்தது. எ-று. (க)

கூன் ஐ என்று பிரிக்க.

உஉ. செப்பின்மேலவர்சிறுமைதன்சிறப்பாத
றப்புமேதகண்டனமுவரியிற்றணியா
வுப்புவேலையென்றலகுறபெரும்பழிசிறந்தி
யப்புவேலையாய்நிறைந்ததுகுறைந்ததோவளக்கர். (கூ)

இ-ள். அம்பு வேலையாய் நிறைந்தது அளக்கர் குறைந்ததோ-அம்பு வேலையாய் நிறைந்தது கடல் குறைவடைந்ததோ.

அம்பு அப்பு எனவிகாரப்பட்டது.

உஎ. ஆழியிற்புனலமணிகளட்டிய
பேழையிற்பொலிந்தனபரவைபெறற்
பூழையிற்பொருகணையுருவப்புக்கன
மூழையிற்பொலிந்தனமுரலும்வெள்ளே. (உஉ)

இ-ள். ஆழியில் புனல் அற - கடல்களில் நீரற்றுப்போக, பரவை - அக்கடல்கள், மணிகள் அட்டிய பேழையில் பொலிந்தன - இரத்தினங்களை நிறைத்துவைத்த பெட்டியைப்போல விளங்கின, பேறு உற பூழையில் பொருகணை உருவப்புக்கன-வாய்ப்புறத் துவாரத்திற் பொருந்திய அம்புகள் உருவதுழைய, மூறும் வெள்வளை முழையில் பொலிந்தன-ஒலிக்கின்ற வெள்ளிய சங்கங்கள் அகப்பையைப்போல விளங்கின. எ-று. (நஉ)

நிள. நன்றிதுபுரிதுமன்றேகளிர்கடற்பெருமைகம்பா
லின்றிதுநீருமென்னிலெளிவரும்பூதமெல்லாம்
குன்றுகொண்டடுக்கிச்சேதகுபிற்றதிரென்றகூறிச்
சென்றனவிருக்கைதோக்கிவருணனுமருளிற்சென்றான். (அடு)

இ-ள். நன்று இது புரிதும்-நன்றிதனைச் செய்வோம், களிர் கடல் பெருமை இது - குளிர்ச்சியுடைய கடலின் பெருமையாகிய இது, இன்று நம்பால் நீரும் என்னில் - இன்று நம்மிடத்திலடங்குமாயின், பூதம் எல்லாம் எளிவரும் - மற்றைய பூதங்களெல்லா மெளிதாயடங்குமென்று சொல்ல, (அடு)

எ-வது. சேதுபந்தனப்படலம்.

நிஅ. அசும்புபாய்தேனும்பூவுமார்மும்மதமும்
விசும்பெலாமுதவுந்தெய்வவேரியின்மிடைந்துவிம்மத்
தசும்பெலாம்வாசமூட்டிச்சார்ந்தியதண்ணீரென்னப்
பசும்புலானறும்வேலைப்பரிமளங்கமழ்ந்ததன்றே. (கஎ)

இ-ள். தசும்பு எல்லாம்வாசம் ஊட்டிச் சார்ந்திய தண்நீர் என்ன-குடங்களிலெல்லாம் வாசத்தையூட்டி வார்த்த குளிர்ச்சியுடைய நீரைப்போல, பசும்புலால் நாறும் வேலை பரிமளம் கமழ்ந்தது - பசியபுலால் நாறுகின்ற கடல் மிகுந்த மணத்தை வீசிற்று. (கஎ)

நிக. மூசெரிபிறக்கமீக்கொண்டிறக்கியமுடுக்கந்தன்னுற்
கோசொரிகறவமென்னத்தண்புனலுகுக்குந்தன்றின்
வேய்சொரிமுத்தக்கம்மாவிருத்தசெய்திருத்தவீண்ட
வாய்சொரிபிப்பியோடும்வலம்புரியுமிழ்ந்தமுத்தம். (உடு)

இ - ள். மூசு எரிபிறக்க மீக்கொண்டு இறக்கிய முடுக்கம் தன்னுல் - மொய்க்கின்ற அக்கினியுண்டாகமேலே கொண்டு இறக்கிய முடுக்கத்தால், கோசொரி கறவம் என்னத் தண்புனல் உகுக்கும் குன்றின் - ஆகாயஞ்சொரிகின்ற தேனைப்போலக் குளிர்ந்த நீரைச்சிந்துகின்ற மலையிலுள்ள, வேய் சொரிமுத்தக்கு - மூங்கில்கள் சொரிந்த முத்துக்களுக்கு, ஈண்டவாய்சொரி இப்பிசேரும் வலம்புரி உமிழ்ந்த முத்தம் - சேர்ந்த வாய்கள் சொரிந்த இப்பியின் முத்துக்களோடுஞ் சங்கங்களின்ற முத்துக்கள், விருந்து செய்து இருந்த - விருந்தாக வந்திருந்தன. (உடு)
எ - று.

நிஎ. யாளுரைதனவிங்கிவையென்னவே
நீளுரைதனவெண்ணிதுசெய்யுமே
மாளுரைதிரைக்கடல்வாழ்தரு
மீளுரைதனவில்லிலவிலங்கரோ. (உஅ)

இ-ள். இங்கு இவை யரன் உண்ணுதன என்ன-இக்கடலிலுள்ள இவைகள் யாதுண்ணுதலைவ என்று, நீன் உண்ணுதன இது என்செய்யும் - நீனியை புண்ணுதன இதுவன்றியாது செய்யும், மான் உண்ணுத திரைக்கடல் வாழ்தரு- மான்களுண்ண இல்லாத அலையையுடைய கடலில் வாழ்கின்ற, மீன் உண்ணுதன விலங்கு இல்லை - நீன்களுண்ணுதனவாகிய விலங்குகளில்லை. எ-று. (உஅ)

நிக. வவ்விலங்குவளர்த்தவர்மாட்டருள்
செவ்விலங்கலில்சிந்தையிற்றீருமோ
வெவ்விலக்கல்வீடோமினியென்பபோ
லெவ்விலங்கும்வந்தெய்தினவேலையே. (உக)

இ - ள். வவ்விலங்கு வளர்த்தவர்மாட்டு - பிடிக்கப்பட்ட மிருகங்கள் தன்னை வளர்த்தவரிடத்தில், செவ் அருள்விலங்கல் இல் சிந்தையில் நீருமோ - செவ்வையான அன்பு நீங்கலில்லாத மனத்தாற் பிரியுமோ, இவ்விலங்கல் - இம்மலையை. (உக)

நிஉ. அருணச்செம்மணிக்குன்றயலேசில
விருணற்குன்றமடுக்கினவெய்தன
கருணைக்கொண்டல்வறியன்கழுதென
வருணற்கீந்தவருணசரத்தையே. (உடு)

இ-ள். அருணச்செம்மணிக்குன்று அ்யலே - சிவப்புடைய செவ்விய அழகுடைய மலைகளுக்குப் பக்கத்தில், இருள்நல் சிலகுன்றம் அடுக்கின - இருள்போன்ற நிறமுடைய நல்லசிலமலைகளடுக்கப்பட்டன, கழுத்துவலியன் என - (வருணன்) கழுத்துவலியனிருக்கின்று னென்று, கருணைக்கொண்டல் - அருளுடைய மேகம்போன்ற ஸ்ரீராமபிரான், வருணற்கு ஈந்தவருணசாத்தை - அவ்வருணனுக்குக் கொடுத்தபல நிறங்களையுடைய மாலையை, எய்தன - அம்மலைகளொப்பாயின. எ-று. (க-ஓ)

அ-வது. ஒற்றுக்கேள்விப்படலம்.

இராவணன் ஒற்றுக்கேட்டதைக் கூறுகின்றபடலம்.

சுக. ஊழிமுதனுயகன்வியப்பிலைவேந்தர
ஏழமுரைசெய்யுமளவேயினியதொன்றே
வாழியினிலங்கைபெரிதத்திசையதாமே
லேழுகடலுங்கடிதடைப்பனிவனென்றான். (ச)

இ-ள். ஆழியின் இலங்கை பெரிது அத்திசையது ஆமேல்-இக்கடலிலிருக்கின்ற இலங்கைதூரமாகிய அத்திசையி லிருப்பதாயின், இவன்-இந்தவன், ஏழுகடலும் கடிது அடைப்பன்என்றான்-ஏழுகடலையும்விரைவிலடைப்பானென்றுசொல்லினான்.()

அத்திசையென்றது - ஏழுகடலுக்கு மப்புறத்திடத்தை.

சுஎ. மெய்யிடைசெருக்கவிசையுற்றவயல்வீழும்
பொய்யிடமிலாதபுனலிற்புகலிலாத
வுய்விடமளிக்குமருளாளர்முறையுய்த்தார்
கையினிடைசென்றகரைகண்டகரையில்லே. (எ0)

இ-ள். மெய் இடை செருங்க விசை உற்ற அயல் வீழும்-சரீரங்கள் நடுவில் செருங்க வேகம்பொருந்திய குரங்குகள் பக்கத்தில் விழும், பொய் இடம் இல்லாத புனலில் புகல் இல்லாத-வெற்றிடமில்லாத நீருட் செல்லாதனவாய், உய்வுஇடம் அளிக்கும் அருளாளர் முறை உய்த்தார் - பிழைப்புக் கிடஞ்செய்யும் அருளுடையார் முறையாய்ச் செலுத்தினர், கையின் இடைசென்று கரைகண்ட கரை இல்லை - (அவ்வாறு) கைபற்றிச்சென்று கரையைச்சார்ந்த குரங்குகளுக்களவில்லை. எ-று. (க0)

சுஅ. இழைத்தனையவெங்கதிரின்வெஞ்சுடரிராமன்
மழைத்தமுகிலன்னமணிமேனிவருடாமற்
றழைத்தநிழலுற்றகுளிர்சந்தனமுயர்ந்த
வழைத்தவையெடுத்தருகுசென்றனரனேகர். (கக)

இ-ள். இழைத்து அனைய வெங்கதிரின் வெஞ்சுடர் - ஆகாயத்தில்பதித்து இழைத்ததை யொத்த வெவ்விய சூரியனதுவெப்பமுடைய கிரணம், இராமன் மழைத்த முகில் அன்னமணி மேனி வருடாமல்-ஸ்ரீராமபிரானது நீருடைய மேகம்போன்ற அழகிய திருமேனியை வருடாமல், அனேகர் - அனேகவானரர், தழைத்த நிழல் உற்ற-தளிர்களால் தழைத்த நிழல்பொருந்தி, உயர்ந்த குளிர் சந்தனம் - வளர்ந்த குளிர்ந்த சந்தனமரங்களை, அழைத்து - பிடுங்கி, அவை எடுத்து அருகுசென்றனர் - அம்மரங்களை யெடுத்தருகிற்சென்றனர். எ-று. (கக)

சுஉ. செயிர்ப்பிலமழகுசெய்யுந்திருமுகத்தணிவிலைத்தீர்த்த
தயிர்ச்சுவைமறந்தான்றேளிற்றாய்நிலாத்தழுவுந்தோற்ற
மயிற்குலம்பிரிந்ததென்னமாகதமலைமேன்மெள்ள
வுயிர்ப்புடைவெள்ளைப்பிள்ளைவாளராலூர்வபோன்ற. (உ)

இ-ள். கோவிப்பினும் விகாரமின்றியழகைச்செய்கின்ற திருமுகத்தையுடையசானகிபிராட்டியைப்பிரிந்து, துயிலின்பத்தை மறந்தஸ்ரீராமபிரானது தோளில் பரிசுத்தமாகிய நிலாத்தழுவுகின்றதோற்றங்கள், மயிற்கூட்டம் பிரிந்ததென்று மரகதமலைமேல், மூச்சுடைய வெள்ளைநிறம்பொருந்திய பாம்புக்குட்டிகள் ஊர்வதையொத்தன. (உஉ)

சுஎ. பெருமையுஞ்சிறுமைதானுமுற்றறபெற்றியாற்ற
வருமையினகன்றுநீண்டவிஞ்சையுளடங்கித்தாமு
முருவமுந்தெரியாவண்ணமொளித்தனருறையுமாயத்
திருவரையொருங்குகாணும்வேகியுமென்னலானன். (உசு)

இ-ள். பெருமையும் சிறுமைதானும் உற்றறு பெற்றி ஆற்ற-பெருமையுஞ் சிறுமையும் பொருந்திய தன்மை மிகுந்த, அருமையின் அகன்று நீண்ட விஞ்சையுள் அடங்கி - அருமை

யோடு பரந்து நீண்ட விக்தையுளடங்கி, தாம் உருவமும்தெரி யாவண்ணம் ஒளித்தனர் - தமதிருவமுக் தெரியாத விதமாய் (அரக்கரிருவரும்) ஒளித்தனர், மாயத்து உறையும் இருவரை ஒருவ்குகாணும் யோகியும் என்னல் ஆனன்-மாயத்தால் மறைக் துறைகின்ற சிவேசுவரரென்னு மிருவரை யொக்கப்பார்க்கின்ற யோகியுமென்று சொல்லும்படி விபீடணழ்வானனன். எ-று.()

சுஅ. கள்ளரேகாண்டியென்னுமக்திரங்கருத்தட்கொண்டான்
தெள்ளியதெரிக்குந்தெவ்வர்தீர்வினேசேர்த்தலோடும்
தள்ளிவினிரத்தோய்ந்துதொன்னிற்கின்றிருவேருப்
வெள்ளியோடிருந்தசெம்புமாமெனவேறுபட்டார். (சுக)

இ-ள். கள்ளரே காண்டி என்ன - இவரரக்கரே பார்த்தி யென்று, தெள்ளிய தெரிக்கும் - தெள்ளியவற்றைத் தெரிவிக் கின்ற, மந்திரம் கருத்துள் கொண்டான்-மந்திரத்தை மனத்து வெண்ணினன், தெவ்வர் தீர்வினே சேர்த்தலோடும் - பகைவர் கொண்ட குரங்குருவம் நீங்கும்படியான அம்மந்திரஞ் சேர்த் லோடும்,

ஒற்றர்கூறியது.

சுக. தாய்தெரிந்துலகுகாத்ததவத்தினையத்தன்னேக்கொல்லும்
நோய்தெரிந்தணரான்றேடிக்கொண்டனனுலவென்னு
வாய்தெரிந்தணராவண்ணங்கழறுவார்வணக்கினாய
வேய்தெரிந்தரைக்கவந்தோம்விணையினுல்வீரவென்றார். (சுக)

இ-ள். வாய்தெரிந்து உணராவண்ணம் கழறுவார் - வாக் கால் பிறரறிந்துணராவண்ணமாய்ச் சொல்லுவார், வணக்கி-நிரு வடியைப் பணிந்து, வீர - வீரனே, தாய்-தாயை, தெரிந்துலகு காத்த தவத்தினை-அறிந்துலகைக்காக்கின்ற தவமுடையானை, தன்னேக்கொல்லும் நோய் - தன்னேக்கொல்லும் பிணியை, தெரி ந்து உணரான் தேடிக்கொண்டனன்-அறிந்துணராதனிக் கேடு தேடிக்கொண்ட இராவணன், உவல என்ன-ஒற்றிவாரு மென் றுசொல்ல, வினையினுல் - கள்ளப்படிவத்தால், மாய வேய்தெரி ந்து உரைக்க வந்தோம் என்றார் - வஞ்சகமா யொற்றறிந்து (அவ்விராவணனுக்கு) சொல்லவந்தோ மென்று சொன்னர் எ - று. (சுக)

மாலியவான்சொல்லியது.

எ0. கிழிபடக்கடல்கீண்டதமாண்டது
மொழிபடைத்தவலியெனமூண்டதோர்
பழிபடைத்தபெரும்பயத்தன்னவன்
வழிகொடுத்தென்னுள்ளம்வருத்துமால். (சுரு)

இ-ள். கடல் கிழிபடக்கீண்டதும் - கடல் கீற்றுப்படக்கீண் டதும், ஆண்டதும் - இராமன் அதனேயாண்டதும், வலிமொழி படைத்த எனமூண்டது - வலிமொழியைப் படைத்தென்று உலகெங்கும் பரவிய, ஓர் பழிபடைத்த பெரும்பயத்த அன்ன வன் - ஒப்பற்ற பழிச்சொல்லைக்கொண்ட மிகுந்த அச்சத்தை யுடைய அக்கடலிறைவன், வழிகொடுத்தது என்னுள்ளம் வரு த்தும் - வழிகொடுத்தது மெனது மனத்தை வருத்துகின்றது. எ - று. (சுரு)

ஒற்றர்இராவணனுக்குச்சொல்லியது.

எக. அடியமக்நெடுஞ்சேனையாசையால்
முடியநோக்கலுற்றேமுதவேலியின்
படையைநோக்கியபாரம்படர்குற்ற
கடியவேகக்கலுழனிற்கண்டிலம். (இஎ)

இ-ள். முது வேலியின் படியை - பழைய கடலின் நிலத் தினது, பாரம் - முடிவை, நோக்கிய-பார்ப்பதற்கு, படர்குற்ற-சென்ற, கடிய வேகக்கலுழனில் - கடியவேகத்தை யுடைய கரு டனேப்போல, அடியம் - அடியோங்கள், ஆசையால் - விருப்பத் தால், அந்நெடும்சேனை முடியநோக்கலுற்றேம்-அந்நெடிய சேனையை முற்றும் பார்க்கலுற்றேம், கண்டிலம் - முற்றும்பார் த்திலம். எ - று, (இஎ)

இதுவுமது.

எஉ. துவலயாமவர்வேண்டியநோக்கதோ
கவலிவேலியெனுங்கரைகண்டிலா
தவலமெய்தியடைத்தழியார்த்தெழுந்
தவலியேவந்துசொல்லியதில்லையோ. (இஅ)

இ-ள். அவர் நோக்கு அது யரம் துவலவேண்டிய,

கூ-வது. இலங்கைகாண்படலம்.

ஸ்ரீராகவபிரான் இலங்கையைப்பார்த்ததைக் கூறுகின்றபடலம்.

இராவணனுக்குமாலியவான்சொல்லியது.

எங. பூசற்குமுயன்றம்பாற்பொருதிரைப்புனரிவேலித்
தேசத்துக்கிறைவனுனதரதன்சிறுவன்றன்னோ
மாசற்றசோதிவெள்ளத்துச்சியின்வரம்பிற்றோன்று
மீசற்குமீசன்வந்தானென்பதோர்வார்த்தையிட்டார். (எ)

இ-ள். நம்பால் பூசற்கு முயன்று - நம்மிடத்திற் பொருதலுக் கெத்தனித்துவந்த, (என)

எச. உள்ளமேதூதுசெல்லவுயிரன்றுரையுளூடுங்
கள்ளமாமகளிர்ச்சேருநேமிப்புட்கவற்கிங்கம்
கொள்ளாபூண்டமார்வகுன்றையுங்கோட்டிற்கொண்ட
வெள்ளநீர்வடிந்ததென்னவீங்கிருள்கெடித்தன்றே. (உக)

இ-ள். உள்ளமே தூதுசெல்ல உயிர் அன்றிர் உறையுள் நாடும் - நீ துள்ளமே தூதுபோக உயிரையொத்த அன்பரதிருக்கையைத் தேடிச் செல்லுகின்ற, கள்ளமாமகளிர்ச்சேரும் நேமிப்புள் கவற்சி நீங்க - கள்ளமுடைய பெருமைபொருந்திய மாதரைச் சாருகின்ற சக்காவாகப் பறவைகளின் வருத்தம் போக,

கள்ளமாமகளிரைச்சேருதல் - அவர் முகத்தைச் சந்திரனென்று கருதி.

ஸ்ரீராமபிரான்இளையபெருமானோக்கிச்சொல்லியது.

எடு. மாசடைபரந்தமானமரகதத்தலத்தவைத்த
காசடைசமைந்தமாடங்கதிர்தழைக்கறைசுற்ற
வாசடைகுன்றவெள்ளியன்மகீயன்னமாகப்
பாசடைப்பொய்கைப்பூத்தபங்கயநிகர்ப்பபாராய். (ஊச)

இ-ள். மாசு அடைபரந்தமான மரகதத்தலத்தவைத்த கருமையான இலைகள் பரந்ததற் கொப்பான மரகதமேடையிற் பதிக்கப்பட்ட, காசு அடைசமைந்த கதிர் தழை கற்றைசுற்ற-

இரத்தினங்கள் தடுக்கலிற் பொருந்திய ஒளிகள் தழைத்து கூடமாய் யாண்டுஞ் சூழல, ஆசு அடைகுன்றவெள்ளி அகன்மலை அன்னம் ஆக - மங்கலாகிய குற்றமிகுதி குறைய வெண்ணிற முடைய பெரிய விடுகள் அன்னங்களாக, பாசு அடைப் பொய்கை பூத்த பங்கயம் - பசிய இலைகளையுடைய குளங்கள் பூத்த தாமரை மலர்களே, மாடம்-மாளிகைகள், நிகர்ப்பபாராய் - ஒப்பாவன/நோக்காய் என்று. (கூச)

இதுவுமது.

எசு. கோனிறக்குவிவிற்செவ்வைக்குமானேகொழுவெண்டிங்கட்
கானிறக்கதிர்வெண்டிங்கட்கெற்றியவரயகாட்சி
வானிறத்தரளப்பக்கர்மரகதவெண்ணைவைத்த
பானிறப்பரவைவைகும்பரமனேநிகர்ப்பபாராய். (சக)

இ-ள். கோல் நிறக்குளிவில் செவ்வைக்குமரனே-அம்பைக் கொண்ட ஒளி பொருந்திய வலிந்த வில்லைப்பற்றிய சிவந்த கரமுடைய குமரனே, கொழுவெண்திங்கள்-கொழுமையான வெள்ளிய சந்திரனுக்கு, கால் நிறக்கதிர் வெண்திங்கள்-புனலிக்கக்குகின்ற குணமுடைய ஒளி பொருந்திய வெள்ளிய சந்திரகாந்தக் கற்களின், கடவன - கடுவில், வான் நிறத்தரளப்பக்கர்மரகதம் வைத்த - வெண்ணிறமுடைய முத்துப் பக்கத்தின்கீழ் மாகதங்கள் பதிக்கப்பட்டனவாய், தெற்றிய ஆயகாட்சி-இழைத்தவாயிலதோற்றங்கள், பால் நிறப்பரவை வைகும் பரமனே நிகர்ப்பபாராய் - திருப்பாற்கடலில் வைகும் பரமனையொப்பாவனபாராய். என்று, (சக)

திங்கள் ஆகுபெயர். சந்திரகாந்தம் திருப்பாற் கடலுக்கும் மாகதம் பரமனுக்கும் உவமை. திண்ணைகளின் விளிம்பில் சந்திரகாந்தக்கற்களைப்படுத்து கடுவில் மாகதக்கற்களைப் படுத்திருக்குந் தோற்றங்கள் திருப்பாற் கடலில் வைகும் பரமனையொப்பாவன என்பது கருத்து.

இதுவுமது.

எள. கோளவாவுரியேறன்னகுருசிலேகொள்ளநோக்காய்
நாளவாமின்ரேயமாடத்தம்பரோர்நாகர்பாவை
காளவாவுறையின்வாய்குங்கண்ணடிவிசும்பிற்கவ்வி
வாளராவிழுங்கிக்காலுமதியினிநிகர்ப்பபாராய். (சஉ)

இ-ள். காளவாவுறையின்வாங்கும் கண்ணடி-கருமையான வுறையினின் றெடுத்த கண்ணடிகள், வாள் அரா-அச்சத்தைக் கொடுக்கின்ற பாம்பு, விசும்பில்கவ்வி-ஆகாயத்திற்கவ்வி,விழுங் கிக் காலும் மதியினை நிகர்ப்பாராய்-விழுங்கிக் கக்குகின்ற சந் திரனையொப்பாவன பாராய். (சஉ)

கo-வது. இராவணன்றானைகாண்படலம்.

இராவணன் வானரசேனையைப்பார்த்ததைக் கூறுகின்றபடலம்.

இராவணன்ஸ்ரீராமபிரானைப்பார்த்ததைச்சொல்லியது.

எஅ. தோரணத்தின்மணிவாயின்மிசைச்சு
னீரினைத்தமுகில்போலென்றன்
ஆரணத்தையரியைமறைதேடும்
காரணத்தைநிகர்கண்கொடுகண்டான். (கஎ)

இ-ள். தோரணத்தின் மணிவாயின்மிசை - கோபுரவாயி லின் அழகுபொருந்திய இடத்தின்மேல், சுல் ஈரம் அணைத்த முகில் ஆம் என நின்றான் - கருப்பமுடைய குளிர்ச்சிகொண்ட மேகமாமென்று சொல்லும்படி நின்றான், (கஎ)

ஈர் - கடைக்குறை.

இதுவுமது.

எக. ஆகாகவனையவ்வழிகண்டான்
மாகாகநிறைவாளொளியோனை
யேகாகியினெய்தவெதிர்க்கும்
வேகாகுவெனவெம்பிவெகுண்டான். (கக)

இ-ள். ஆக - அவ்வாறுக, ராகவனை அவ்வழிகண்டான்- இராகவபிரானை அப்போது பார்த்தான், மாகம் நிறை ராகம் வாள் ஒளியோனை-ஆகாயத்தில் நிறைந்த சிவப்புடைய வொளி பொருந்திய சூரியனை, ஏகாசியினின் - அமாவாசையில், (கக)

சாரன்இராவணனுக்குச்சொல்லியது.

அo. மூரபன்னகுதோளவன்மூரிமடங்கலென்னச்
சூரபன்னகமன்னவையின்றுகக்காத்தின்றான்
வாரபன்னகத்தவனியும்வேரொடுவேண்டின்வாங்குஞ்
சாரபன்னவனிவன்சதவலியாயதக்கோன். (கூ)

இ-ள். மூரபன் - வலியுடையவனும், நகுதோளவன் - விள ங்குகின்ற தோளுடையவனும், மூரி மடங்கல் என்ன - பெரிய சிங்கத்தைப்போல, கரம்பல் நகம் அன்னவை மின்னுக காந்து கின்றான் - கைகளும் பற்களும் உகிர்களுமாகிய அவைகளொ ளிர விளங்குகின்றவனுமாகிய, வேண்டின் - விரும்பின், வரம் பன்னகம் தன்னையும் வேரொடுவாங்கும் - மேன்மை பொருந் திய ஆதிசேடனையும் வேரொடுபிடுங்குகின்ற, சரபன் அவன்- சரபனென்பானவன், இவன் சதவலி ஆயதக்கோன் - இவன் சதவலியாகிய தக்கோன். எ-று. (கூக)

கச-வது. முதற்போர்ப்படலம்.

அ:. இறக்கவேண்டுவதில்லையெண்ணர்மணி
வெறக்கையோய்யெமேருவிழுக்கலா
லிறக்கநேர்வருவீரர்நெருக்கலாற்
பொறுக்கலாமதில்தரைபுக்கதால். (கஎ)

இ-ள். கணக்கில்லாத இரத்தினங்களு முயர்ந்த பொருள்க ளும் மிகுந்துள்ள மேருவாகிய பெரியமலையோடு (துலாத்தில் வைத்து) நிறுக்க ஒத்தவருகின்ற வீரர்களேறி நெருக்கலால், மதில் அவ்வீரர்களைத் தாங்காது புவியுளழுந்தினமையால், அம் மதிலை யுடைக்கவேண்டுவதில்லை. எ - று. (கஎ)

வீரரொவ்வொருவரும் மேருகிரியையொத்த கனமுடை யவ ரென்பது கருத்து.

அஉ. அறைந்தமாமுரசாணப்பதாகையான்
மறைந்தவானெடுவானகமாதிரம்
குறைந்தகாளிகுமிவிண்ணூடுபுக்
குறைந்ததாங்கவர்போர்க்கெழுமோதையே. (கஉ)

இ-ள். அறைந்தமாமுரசு ஆணப்பதாகையால் - அடித்த பெருமைபொருந்திய முரசைச்சுமந்த யானைமேற் பிடித்த கொ டிகளால், மறைந்தவான் நெடுவானகம்மாதிரம்-மறைந்தபெரிய வானிடவனைமுந் திசைகளும், காளிகுமி குறைந்த-துகள்கள் நெருங்கித் தூளாங்குறைந்தன, ஆங்கு அவர் போர்க்கு எழும்

ஓதை - அப்போதவர் யுத்தத்திற் கெழுமோரை, விண்ணூடு புக்கு உறைந்தது - விண்ணுலகிற் சென்று தங்கிற்று. (கசு)

அரு. ஆனைபட்டவழிபுனலாறெலாம்
பானல்பட்டபலகணைமாரியின்
சோனைபட்டதுசொல்லரும்வானரச்
சேனைபட்டதுபட்டதுசெம்புனீர். (கூ0)

இ - ள். ஆனைபட்ட அழிபுனல் ஆறு எல்லாம் பானல்பட்ட - யானைகளினிடத்திலுண்டாகிய வழிந்தமதனீராகிய கதிர் னெல்லாங்கடலிற் சார்ந்தன, பலகணை மாரியின் சோனைபட்டது - பல அம்புமாரியின் சொரிதலுண்டாயிற்று, (அதுண்டாகவே) சொல்ல அரும்வானரச் சேனைபட்டது - கணக்கிட்டுச் சொல்ல அருமையான வானரச் சேனை மரித்தது, (அதுமரிக்கவே) செம்புனீர் பட்டது - இரத்தம் பெருகிற்று. எ-று. ()

இராவணன்சொல்லியது.

அசு. கருப்பைபோற்குரங்கெற்றக்கதிர்சுழல்
பொருப்பையொப்பவர்தாமின்னபொன்றினர்
கருப்பைமென்பயகையுமாழை
னெருப்பையுமிகழ்ந்தாலுநீதியோ. (கூக)

இ-ள். குரங்கு எற்ற - குரங்குகள் புடைக்க, கதிர் சுழல் பொருப்பை ஒப்பவர்-சூரியன் சுற்றுகின்ற மேருகிரியையொத்த வீரர்கள், கருப்பைபோல் - எலியைப்போல், இன்று பொன்றினர் - இன்று மரித்தார். (கூஉ)

அடு. உறுபகைமனிதனின்றெம்மிறைவனையுடற்பானேல்
வெதிர்முகந்தம்வீரமென்றொருமேன்மைதோன்ற
வெறிபடையரக்கரேற்றுரேற்றதமாற்றுனென்ன
வறியவனொருவன்வண்மைபூண்டவன்மேற்சென்றென்ன. (கசஎ)

இ - ள். வறியவன் ஒருவன் - தரித்திரனொருவன், எற்றது மாற்றான் என்ன - விரும்பியதை மறுக்கானென்றெண்ணி, வண்மை பூண்டவன்மேல் சென்று என்ன - ஈகையைக் கொண்டவனிடத்திற் சென்றாற்போல, அரக்கர் எறிபடை ஏற்றார் - இராக்கதர்களெதிர்சென்று எறிகின்ற படைகளைத் தமது மார்பிற் றாங்கினர். (கசஎ)

அசு. அயிருக்கனெடுமால்வரையனலுக்கனவிழிக
டயிருக்கள்முழுமூளைகடலியுக்கனதரியா
உயிருக்கணிருதக்குலமுயர்வானரமெவையு
மயிருக்கனவெயிறுக்கமனமுழுக்கனவானம். (கஎச)

இ - ள். நெடுமால்வரை - நெடிய பெரியமலைகள், அயிர் - நுண்மணலைப்போல, உக்கன-சிதறின, விழிகள் அனல் உக்கன - கண்கள் அக்கினியைப்போலச் சிதறின, முழுமூளைகள் தயிர் உக்கன-முழுமூளைகள் தயிரைப்போலச் சிதறின, (கஎச)

அஎ. கற்றங்கியினெடுவாயுவினிலைகண்டவர்கதியால்
மற்றங்கொருவடிவுற்றதுமாறுடனுகலி
பற்றங்கொருமையிலின்னதுபயில்கின்றதொர்செயலா
லுற்றங்கதுபுதம்போயுடல்புருந்தாரெனவுணர்ந்தான். (கஎக)

இ-ள். அங்கியின் நிலைகற்று - அக்கினியின் குணத்தைக் கற்று, நெடுவாயுவின் நிலைகண்டவர் - நெடியவாயுவின் குணத்தையறிந்தவர், கதிரால் மற்று அங்கு ஒருவடிவு உற்று-விரைவோடு வேறங்கொரு உருவத்திற் புகுந்து, அதுமாறுடனுகலி-அவ்வுருவந் தடுமாறும்போது, அங்கு பற்று ஒருமையில் - அங்கு பற்றியிருந்த வொருபிறப்பில், அன்னது பயில்கின்ற தொர்செயலால் - அப்பரகாயப் பிரவேசத்தைச் செய்கின்றதாகிய வொருசெய்கையால், உற்று அங்கு அதுபுறம்போய் உடல் புருந்தார் என உணர்ந்தான் - பொருந்தியப்போது அச்சரீரம் புறம்போகத் தமதுடலிற் புகுந்தாரைப்போல இராவணனுணர்ந்தான். எ-று. (கஎக)

இராவணன்அனுமானைநோக்கிச்சொல்லியது.

அஅ. வலியென்பதமுனதேயதனின்பாலதுமறவோ
யலியென்பனபுறின்றனவலசெழிலுமடைத்தாய்
சலியென்றெதிர்மலரோனுரைதந்தாலிறைசலியேன்
மெலிவென்பதுமுணர்ந்தேனெனவென்றியினிவிறலோய். (கஎக)

இ-ள். மறவோய்-வீரமுடையோய், வலியென்பதும் உளதே - உலகில் வலியென்று சொல்லப்படுவது மிருக்கின்றதே, அது நின்பாலது - அவ்வலி நின்னிடத்திலுள்ளது, புறம் நின்றன அலி என்பன - வேறாய் நின்றனவாகிய வீரமுதலியவற்

றை அவியென்று சொல்லப்படுவனவாக, உலகு ஏழினும் அடைத்தாய் - உலகேழினும் பரவச்செய்தாய், (கஅக)

அசு. உற்றவாறென்றுமொன்றுறுயிரமுருவா
யிற்றவாறென்றுமிடிப்புண்டுபொடிப்பொடியாகி
யற்றவாறென்றுமரக்கனையடுதிலைக்கொடியோன்
கற்றவாறென்றும்வானவர்கைத்தலங்குலைத்தார். (கஉச)

இ-ள். உற்ற ஆறு என்றும் - மலைகள் வந்தவிதமென்றும், ஒன்று நூறு ஆயிரம் உருவாய் இற்ற ஆறு என்றும் - அம்மலைகளி லொன்று நூறுயிர முருவாகி யுடைந்த விதமென்றும், இடிப்பு உண்டு பொடிப்பொடி ஆகி அற்ற ஆறு என்றும் - இடித்தலையுண்டு பொடிப்பொடியாகி யுடைந்தவிதமென்றும் தெரியாதவிதம், அடுசிலைக்கொடியோன் கற்ற ஆறு என்றும் - கொல்லுகின்றவில்லுடைய இராவணன்தனது நூல் கற்றவிதமென்றும், அரக்கனை - அவ்விராவணனைப் பார்த்து, வானவர் கைத்தலம் குலைத்தார் - தேவர் கரங்களைக் குலைத்தார்.* எ-று. (கஉச)

கூ. அடலடைத்துமென்றரிக்குலவீரன்றெறிந்த
திடலடைத்தனதசமுகன்சாமவைதிசைசுழும்
கடலடைத்தனகளத்தினின்றுயர்தரும்பூழி
யுடலடைத்தனவுதிரமுக்கடைத்தனதொண்புடவி. (கஉடு)

இ - ள். அடல் துடைத்தும் என்று அரிக்குலவீரர் அன்று எறிந்தபகையைப்போக்குது மென்று வானரக்குலவீரர் அன்றெடுத்து வீசிய, திடல்துடைத்தன தசமுகன் சாம்அவை - மலைகளைப்போக்கிய இராவணனது வாளிகளாகிய அவை, திசை சூழ்கடல் துடைத்தன - திசைகளைச் சூழ்ந்த கடல்நீரைக் குடித்தன, களத்தினின்று உயர் தரும்பூழி உடல் துடைத்தன - உயர்த்தகளத்தினின்று மேலெழுந்ததுகள்கள் உயிர்துறந்தவுடல்களை மூடின, உதிரமும் ஒண்புடவி துடைத்த - உதிரங்களு மொள்ளியபுவியை மூடின. எ-று. (கஉடு)

கூக. தருதியாய்நின்றவென்றிமாருதிதனிமைசார்ந்த
மிருதியையேறுநோக்கிவெவ்வண்ணம்விளம்புந்தன்மை
புருதிகூர்ந்துள்ளார்வேதம்பொதுவுறப்புலத்துநோக்கும்
பருதியையொத்தான்வீரன்மேலைத்தன்பதமேயொத்தான். (உஉக)

இ-ள். தருதியாய் நின்ற வென்றிமாருதி தனிமைசார்ந்த - உரிமையாய் நிலைபெற்ற வெற்றியுடைய அனுமான் ஒப்பில்லாமையை யடைந்துள்ள, மிருதியை வேறுநோக்கின் - பெருமையை வேறு யாராயின், விளம்பும் தன்மை எவ்வண்ணம் - யாமெடுத்துச் சொல்லுந் தன்மை யெவ்விதம், புரு - புருத்த, நி-அறிவு, கூர்ந்துள்ளார் வேதம் பொதுவுறப் புலத்துநோக்கும் - மிகுந்துள்ளவர் வேதங்கருவியாய்ப் பொதுவகைத் தம்மிலவாரா யாப்படுகின்ற, பருதியை ஒத்தான் - அவ்வனுமான்மூலப் பிரகிருதியை யொத்தான், வீரன் மேலைத்தன் பதமே ஒத்தான் - ஸ்ரீராமபிரான் மேன்மையாகிய பரமபதத்திலுள்ளநிலைமையை யே யொத்தான். எ-று. (உஉக)

ஸ்ரீராமபிரான்இராவணனுக்குச்சொல்லியது.

கூஉ. ஆலையாயனக்கமைத்தனமாருதமறைந்த
பூலையாணதுகண்டனையின்றுபோய்ப்போர்க்கு
நாலைவாவெனநல்கினனுகிளங்கமுகின்
வாலைநாவுறுகோசலநாடுடைவள்ளல். (உருடு)

இ - ள். ஆல் - அரக்கரையாளுகின்ற, ஐ - அரசனே, உனக்கு அமைந்தன மாருதம் அறைந்த பூலைபூனது கண்டனை - உனக்கமைந்தன வாகிய சேனைகள் பெருங்காற்றால் வீசப்பட்ட பூலைப்பூப்போ லானதைப் பார்த்தனை. ய-அசை (உருடு)

கடு - வது. கும்பகருணப்படலம்.

:o:

கூடு. நாளொத்தநளினமன்னமுகத்தியர்கயனமெல்லாம்
வாளொத்தமக்கள்வார்த்தையிராகவன்வாளியொத்த
கோளொத்தசிறைவைத்தாண்டகொற்றவற்கற்றைநாட்டன்
தோளொத்ததுணைமென்கொங்கைநோக்கங்குத்தடர்கிலாமை. (ச)

இ-ள். கோள்ஒத்த சிறைவைத்து ஆண்ட கொற்றவற்கு - திரசங்களைப் பொருந்திய சிறைப்படுத்தி யாண்ட இராவணனுக்கு, அற்றைநாள்தன்தோள்ஒத்ததுணைமென்கொங்கைநோக்கு அங்குத்தடர்கிலாமை - தனதுதோள்களில் வதிகின்ற இரட்டையாகிய மெல்லிய முலைகளையுடைய வெற்றித்திருமகளினது பார்வை யவனிடத்திற் செல்லாமையால், (ச)

இராவணன்மாலியவானுக்குச்சொல்லியது.

கூச. சங்கம்வந்துற்றகொற்றத்தாபதர்தம்மோடெம்மோ
டங்கம்வந்துற்றதாகவமர்வந்துற்றதாற்றூர்
கங்கம்வந்துற்றசெய்யகளத்தங்குலத்துக்கொவ்வாப்
பங்கம்வந்துற்றதன்றிப்பழியும்வந்துற்றதென்றான். (கடு)

இ-ள். சங்கம்வந்து உற்றகொற்றத் தாபதர் தம்மோடு - சேனையோடு வந்து சேர்ந்த வெற்றிபொருந்திய இராமலக்குமணரோடும், எம்மோடு அங்கம்வந்து உற்றது ஆக-எம்மோடும் யுத்த அங்கம் வந்ததாக, அமர்வந்து உற்றது ஆற்றூர் - தேவர்கள்வந்து பார்க்க வந்ததை நம்மனோர் பொறுக்கார் (அவ்வாறாக) (கடு)

இதுவுமது.

கூடு. கல்லியற்கலிஞர்நாவிற்பொருள்குறித்தமர்ந்தாமச்
சொல்லெனச்செய்புட்கொண்டதொடையெனத்தொடையைநீக்கி
யெல்லியில்செல்வந்தீராவிசையெனப்பழுதிலாத
பல்லலங்காரப்பண்பேகாருத்தன்பகழிமாதோ. (உஉ)

இ-ள். காகுத்தனது அம்புகள், கல்லலிலக்கண மமைந்த புலவர்களது நாவினின்று பொருளைக் கொண்டமர்ந்த அழகுடைய, சொற்களைப்போலவும் அவரது செய்புட்கள் கொண்ட எதுகைத்தொடை மோனைத் தொடைபோலவும் அத்தொடையைநீக்கி, எல்லையில்லாத சிறப்பினின்று நீங்காத இசையைப் போலவும் குற்றமில்லாத, பலஅலங்காரத்தின் குணங்களே யாகும். எ-று. (உஉ)

இதுவுமது.

கூஎ. உற்பத்தியயனேயொக்குமோடும்போதரியேயொக்குங்
கற்பத்தினானேயொக்கும்பகைகருதைக்கலந்தகாலைச்
சிற்பத்தினம்மாற்பேசச்சிறியவோவென்னைத்தீராத்
தற்பத்தைத்துணடத்தவெற்றுப்பிரிதொருசான்றமுண்டோ. (உஎ)

இ-ள். அவ்வாளிகள் தோன்றும்போதே பலவாய்த்தோன்றுதலின் படைப்புத் தொழிலையுடைய பிரமனை யொக்குமென்றும், பகைவர் புறந்தந்தோடும்போது அறம்கோக்கிக் கொல்லாது விடுதலின் காத்தற்றொழிலையுடைய திருமாலை யொக்குமென்றும், எதிர்நின்று போர்செய்யும் பகைவரைக் கூடியகாலை

யொருங்கு வீட்டுதலின் பிரளயகால வுருத்திரனை யொக்குமென்றும், அறிதற்கரிய செயலினுண்மையால் நம்மாற்பேசச்சிறிய வோவென்றும், கான் பிடித்திருந்தவில்லை அவ்வாளிகள் மேலுங்கீழுந்துணித்து விலங்குவைப் பிடித்திருந்த கையிலடித்தலும் அப்போது இராவணன் வலிபொறுக்காமல் இராமன் அறப்போர் செய்கின்றவனென் றெல்லாருஞ் சொல்லினரே, நிராயுதனாயிருக்கின்ற வென்னையவனம்புகள் கொல்லுகின்றனவே யென்றெண்ணிப் பிடித்திருந்த அவ்விற்றுணியை விட்டெறிந்தான். அவனதை யெறியவே அம்புகள் பிரானது துணைசேர்ந்தன வாகலின் என்னைவிட்டுநீங்காத தனது பற்றைப்போக்கினவென்றல் வேறொரு சான்றுமுண்டோ வென்றுங் கூறினன்.

தனதுபற்றுவது - வில்லின்துண்டு, பத்து - போலி.

கும்பகருணனைச்சொல்லியது.

கஎ. உதிரவாரியோடெஞ்சுடலும்புதோ
லுதிரவாரிதுகர்வதோருளினன்
கதிரவாள்வயிரப்பணைக்கையினன்
கதிரவாள்வயிரக்கழற்காலினன். (கூட)

இ-ள். காளமேகத்தைச் செக்கர் கலந்து எனகரியமேகத்தைச் செவ்வானங்கலந்தாற்போலவும், கரியகுன்றகாள்வெயில் பரந்தது என்ன - கரியமலைமேல் சூரியனது வெயில் பரந்தது போலவும், தம்பிதன் தம்பிமார்பில் தோளின்மேல் உதிரச்செங் கேழ்க் கவடு - ஸ்ரீராமபிரானது தம்பியாகிய இலக்குமனனது மார்பின்மேலுந் தோளின்மேலுமுள்ள உதிரத்தினது சிவந்த நிறமுடைய குறி, தன் உருவில்தோன்ற - தனது திருமேனியில் விளங்க, தனித்து ஒன்று இல்லான் - தன்னையன்றி வேறொன் றில்லாதவனாகிய ஸ்ரீராமபிரான், தாளின்மேல் வணங்கிஞாலந் தழுவினன் - தன்திருவடியினிடத்தில் வணங்கிய அவ்விலக்கு மணனைத் தழுவினன், எ-று. (சுஅ)

உஅ-வது. இராவணன்சோகப்படலம்.

இந்திரசித்திறந்தமையாலிராவணன்சோகமடைந் ததை யோதுகின்றபடலம்.

—:o:—

உகக. ஓதரோதனவேலைகடந்தாரையப்
பூதரோதரம்புக்கெனப்போர்த்திழி
சீதரோதக்குருதித்திரையொரீஇத்
தூதரோடினர்தாதையிற்சொல்லுவார். (அ)

இ-ள். தாதையிற் சொல்லுவார் - இந்திரசித் திறந்தசெய்தியை இராவணனுக்குச்சொல்ல, தூதர் - தூதுவர், ஓதம் - கடலோசையையொத்த, ரோதனவேலைகடந்து - அழுகைவேலையைக்கடந்து, ஒருவரோடொருவருராய்ந்து சென்று, போர்த்து

இழி-புண்வாயை நிறைத்திழிகின்ற, சீதரோதக் குருதித்திரை ஒரீஇ - குளிர்ந்த கரையையுடைய இரத்தக்கடலைநீங்கி, பூதர உதரம் புக்குள என - மலையின் துவாரத்திற் சென்றும்போல, (கோபுரவாயுட்சென்று) ஓடினர் - ஓடினர். எ-று. (க)

உசo. சுடர்க்கொழும்புகைதிவிழிதாண்டிடத்
தடக்கைவாளுருவித்தருந்தூதரை
மிடற்றுவீசலுமுருவிழுந்தானரோ
கடற்பெருந்திரைபோற்கரஞ்சோரவே. (ஙி)

இ-ள். தரும்தூதரை - இந்திரசித்துமரித்தானென்று சொன்னதூதரது, மிடற்றுவீசல்உரு-கழுத்தை வீசலும்று, கடல் பெரும்திரைபோல் கரம்சோர - கடலினது பெரிய அலையைப் போலக் கை புவியிற்சோர, விழுந்தான் - இராவணன்விழுந் தான். (ஙி)

இராவணன் வாளுருவிவீசத் தூதரஞ்சி யகன்றமையின் கரம்புவியில் விழும்படி யவன்விழுந்தானென்பதுகருத்து.

உசக. அப்புமாரியழுத்தியமார்பைத்த
னப்புமாரியழுத்தியவாக்கையி
னப்புமாரினணைக்குமரற்றுமா
லப்புமானுற்றதியாவருற்றாரரோ. (ஙo)

இ-ள். அம்புமாரி அழுத்தியமார்பை-அம்புவருடந்தைத்த இந்திரசித்தினுடைய மார்பை, தன் அப்புமாரி அழுத்திய ஆக்கையின் அப்பும் - தனது கண்ணீர் மழையழுந்திய தேகத்தி லொற்றுவான், மார்பில் அணைக்கும் - மார்பிலணைப்பான், அரற்றும் - கதறுவான், அப்புமான்உற்றது யாவர் உற்றார் - ஆண் மகனாகிய அவ்விராவணனடைந்த துன்பத்தை யாவரடைந் தார். எ-று. (ஙo)

அம்பு-அப்பு என விகாரமாயிற்று-மார்கடைக்குறை.

உகூ-வது. படைக்காட்சிப்படலம்.

—:o:—

உகூ. வாட்டனின்வயங்கமின்னுமழையதினிருளமாட்டா
வீட்டியமுரசினுர்ப்பையிடிப்பொடுமுழக்கமாட்டா
மீட்டினியவமையில்லேலேலிமீச்சென்றதென்னிற்
றீட்டியபடையுமாவுமியாவையுந்தேருஞ்செல்ல. (க)

இ-ள். மழை வாள் தனின்வயங்கமின்னு - மேகங்கள் வாளாயுதத்தைப்போல மின்னலாலொளிரவிளங்கா, அதின் இருளமாட்டா-அம்மேகங்கள் அக்காலாட்படையைப்போலக் கருக்கமாட்டா, வீட்டிய முரசின் ஆர்ப்பை இடிப்பொடுமுழக்க மாட்டா - அம்மேகங்கள் ஒருங்கு சேர்த்தபேரிகை யொலியை யிடிமுழக்கத்தால் முழக்கமாட்டா, தீட்டிய படையும் மாவும் யானையும் தேரும் செல்ல - தீட்டிய ஆயுதமுடைய தாலாட்படைகளுங் குதிரைகளும் யானைகளுந் தேர்களுஞ் செல்ல, வேலைமீச் சென்றது என்னில்-கடல் புவிமேற்சென்ற தென்றலல்லாமல், இனி மீட்டு உவமையில்லை-இனி வேறுவமையில்லை. எ-று. (க)

உகூ. உலகினுக்குலகுபோய்ப்போயொன்றினொன்றுதுங்கலுற்ற
தலைவருந்தானைமேன்மேலெழுந்தததிடர்த்துசுற்ற
நிலவினுக்கிறையுமீனுநீக்கினநிமிர்ந்துநின்ரு
ரலரியுமுந்துசெல்லுமாறுநீத்தஞ்சிவப்பால். (ச)

இ-ள். தலைவு அரும்தானை மேல் மேல் எழுந்தது குடர்ந்து சுற்ற - ஒழிதலரிதாகிய சேனை மேன்மேலெழுந்ததாய்த் தொடர்ந்து சுற்றலும், அலரியும் முந்துசெல்லும் ஆறுநீத்து அஞ்சி - சூரியனும் முன்னஞ் செல்லும்படியான வழியைநீத்துப் படைசெல்லுதலா லஞ்ச, அப்பால்-அப்பால், உலகினுக்கு உலகு பேர்ப்பேர்ய் ஒன்றின் ஒன்று ஒதுங்கல்உற்ற - இவ்வுலகினுக்கு மேலுள்ள வுலகங்க ளொன்றின்பி ஞொன்று சென்று சேர்ந்தொன்றுகிப் பதுங்கலுற்றன, நிலவினுக்கு இறையும் மீனும் நீங்கின - நிலவரசாகிய மதியும் நக்ஷத்திரங்களும் போயின, நிமிர்ந்துநின்ரு-இராக்கதர் நிமிர்ந்துநின்ரு. எ-று. (ச)

—

கூ0-வது. மூலபலவதைப்படலம்.

—:o:—

உசஎ. அடங்குவேலைகளண்டத்தினகத்தனமலியு
மடங்குமன்னுயிரனைத்துமவ்வரைப்பிடைவைபோ
லடக்குமேமற்றப்பெரும்படையிரும்படையாக்கை
யடங்குமாயவன்குறளுருத்தன்மையினவரால். (ஞ)

இ-ள். அண்டத்தின் அகத்தன - அண்டத்திலுள்ளனவாகிய, அடங்கு வேலைகள்-தையுளடங்குகின்ற கடல்களும், மலையும்-மலைகளும், மன்னுயிர் அனைத்தும் அவ்வரைப்பிடை அடங்கும் - நிலைபெற்ற வுயிர்களனைத்தும் அவ்வுச்ச பூமியிலடங்காநிற்கும், அவைபோல் - அவற்றைப்போல, அப்பெரும்படை இரும்படையாக்கை அடங்குமே - அப்பெரிய ஆயுதங்களையுடைய மிகுத்த சேனையிலுள்ள இராக்கதர் சரீரங்களடங்குமா, (அடங்காதாயினும்) மாயவன்குறள் உருத்தன்மையினவரால் அடங்கும்-அவ்விராக்கதர் மாயோனது வாமனவுருத்தன்மையினையுடைய ரானமையால் அவர் சரீரங்களடங்கும். எ-று. (ஞ)

உசஅ. மால்வரைக்குலம்பரிவின்மனமுகுலுஞ்சிலம்பத்
தால்வரைத்தலஞ்சிலம்புகொண்டசைத்தபைஞ்சுழலார்
மேல்வரைப்படர்கலுழனவன்காற்றெனும்விசையோர்
நால்வரைக்கொணர்ந்துடனபிணித்தாலன்னதடையார். (அ)

இ-ள். மழைக்குலம் சிலம்ப - மேகக்கூட்டங்க ளொலிக்க, மால்வரைக்குலம் பரிவின்ன - பெரிய மலைக்கூட்டங்களைப் பருக்கைக்கற் போலப்பெய்த, குலம்சிலம்பு - சிரேட்டமானசிலம்பை, தாலவரைகொண்டு அசைத்த பைங்கழலார் - காலினிடத்திற் கொண்டு கட்டிய வீரக்கழலுடையார், மேல்வரைப்படர் கலுழன்வன்காற்று என்னும் விசையோர் - மேலெழவுவரையிலுஞ் செல்லுகின்ற கருடன் வலியவாயுவென்னும் விசையுடையோர்களில், தால்வரைக் கொணர்ந்து உடன்பிணித்தால் அன்னதடையார் - தாள்குபோக்களையுடன் கொணர்ந்து கரங்களிட்டுறுத்போன்ற நடையையுடையார். எ-று. (அ)

உசக. வழங்குபல்படைமீனமகரிமகர
முழக்குகினறமுரிதிரைப்பரியதமுரசந்
தழங்குபேரொலிக்கலியதுதகனமாகிருதர்
புழுங்குவெஞ்சினச்சுறவதனிறபடைப்புணரி. (உ0)

இ-ள். நிறைபடைப்புணரி - நிறைந்த சேனையாகியகடல், வழங்கு பல்படைமீனது - வீசுகின்ற பலஆயுதங்களாகிய மீன்களையுடையது, மதகரி மகரம் முழங்குகின்றது - மதமுடையயானைகளாகிய மகரமீன்கள் முழங்குகின்றது, முரிதிரைப்பரியது-தோன்றியழிகின்ற அலையாகியகுதிரைகளையுடையது, முரசம் தழங்குபேர் ஒலிகளியது - முரசொலியாகிய மிகுந்த வொலியையுடையது, தறுகண் மாவிருதர் புழுங்கு வெம்சினச்சுறவது - அஞ்சாமையுடைய (யாக்கையால்) பெரியஇராக்கதராகிய புழுங்குகின்ற வெவ்விய கோபமுடைய சுறாமீன்களையுடையது. எ - று. (உo)

உசஎ. சாம்பனேவதனநோக்கிவாலிசேயறிவுசான்றேய்
பாம்பணையமலனம்றிவ்விராமனென்றெமக்குப்பண்டே
யேம்பல்வஞ்செய்தச்சொல்லித்தேற்றினுயல்லியோரீ
யாம்பலம்பலைகளுன்றன்னோடியிந்திரமைந்தோனன்றுய். (சடு)

இ-ள். அம் ஆம்பல்பகைஞன் தன்னோடு ஐந்திரம் அமைந்தோன்அன்றுய்-அழகியஅல்லிமலர்க்குப்பகைஞனாகியசூரியனுலேஐந்திரியாகாணத்தைக்கற்றமைந்த அணுமனேயொப்பாய், உசஅ. அஞ்சினேம்பழியும்பூண்டோமம்புயாண்டுமாவி
அஞ்சுமாறன்றிவாழவொண்ணுமோகாண்மேற்றேன்றி
நஞ்சுவாயிட்டாலன்னதமிர்தன்றேநம்மையம்மா
தஞ்சமென்றுணர்ந்தவீரர்தனிமையிற்சாதனன்றே. (சஎ)

இ - ள். நஞ்சுவாய்இட்டால் அன்னது அமிர்தமன்றே - விடத்தை வாயிலிட்டா லன்னது அமுதமன்றே, நம்மைத்தஞ்சமென்று உணர்ந்தவீரர் தனிமையில் - நம்மையாதாரமென்றுகொண்ட வீரர்களைத்தனிமையில் விடுவதிலும், சாதல்நன்று - நாமிறத்தல் நன்று. (சஎ)

உசக. காணத்தாற்சிறிதுபோதுகல்கினனிருந்துபின்னும்
வேணுத்திரோளவீரதோன்றியவாக்காவீரன்
காணத்தானிற்கத்தானக்கரைமிடற்றவர்க்குமாமோ
கோணற்பூவுண்ணும்வாட்கைக்குரங்கின்மேற்குற்றமுண்டோ.(ஙo)

இ-ள். காணத்தால் சிறிதுபோது கல்கினன் இருந்து - வெட்கத்தால் சிறிதுநேரம் பேசாதிருந்தனன் அவ்வாறிருந்து, கோணற்பூவுக்கு இடக்காடக்கலாய்ப் பொருளுரைப்பார்.

உஙo. அம்பரங்கட்டோடுக்கொடியாடையு
மம்பரங்களொடுங்களியானைக
ளம்பரங்கவழுந்தினசோரியி
னம்பரங்கமருங்கலமாழ்ந்தென. (கசக)

இ-ள். அரங்கம் - திட்டிலைரத்திலுள்ள, அம்பு-புனலில், அரும்கலம் ஆழ்ந்துஎன - அரியமரக்கலம் ஆழ்ந்தாற்போல, அம்புஅரங்க - அம்புகள்தைக்க, களியானைகள்-செருக்குடையயானைகள், அம்பரங்கள் தொடும் கொடி ஆடையும் - ஆகாயங்களைத்தொடுகின்ற கொடிச்சீலைகளோடும், அம்பரங்களோடும் - அழகிய மேற்பாரங்களோடும், சோரியின் அழுந்தின - உதிரத்திலழுந்தின. (ககக)

உஙக. கேடகங்கணவங்கையொடுங்கின
கேடகங்கடுணித்தகிடந்தன
கேடகங்களர்கின்றகளத்தெனக்
கேடகங்கண்மறித்தகிடந்தன. (கஉக)

இ-ள். கங்கண அம்கை ஒடுங்கின கேடகங்கள் துணிந்துகங்கணமணிந்த அழகிய கையிலொடுங்கினவாகிய கேடகங்கள் துணியப்பட்டு, கேடம் - கிளியாற்றில், கிடந்தன - கிடந்தன, கேடு அகம் களர்கின்ற களத்துஎன - கேடுதன்னுள்ளே அதிகரிக்கின்ற யுத்தகளத்தைப்போல, கேடம் கம்கள் மறிந்துகிடந்தன-மலைசெறிந்த வூர்களில்தலைகளுருண்டுகிடந்தன. எ-று.()

உஙஉ. அங்கவெங்களத்தற்றழிதேரொடு
மங்கவெங்களத்தற்றலியுற்றவாற்
புங்கவன்கணைப்புட்டில்பொருந்திய
புங்கவன்கணைப்புற்றரவம்போர. (கஉஉ)

இ-ள். புங்கம்வன்கணைப்புட்டில் பொருந்திய - குதையையுடைய வலியசரக்கூட்டிற் பொருந்திய, புங்கவன்கணைப்புற்று அரவம் - ஸ்ரீராமபிரானெய்த அம்பாகிய புற்றில் வதிகின்ற சர்ப்பம், அங்கம்வெம்களத்து - அங்கமாகிய வெவ்விய கழுத்துக்களே, பொர - தின்ன, அங்கு அவ்வெம்களத்து அற்று அழிதேரொடும் - அவ்விடத்து அவ்வெவ்விய யுத்தகளத்தி லொடிந்தழிந்த தேர்களோடும், அற்று அவி உற்ற-குதிரைகள் அக்கழுத்துக்களற்றவிந்தன. எ - று. (கஉஉ)

உருக. தினகரனேயனேயகொடிக்டிசைகளொடு
மனகசனியில்குவயிரமுளவனுக
வனகனெமமரின்மூடுகியெதிரெழு
கனகவரைபொருவுகடியபரியிரதம். (கசுக)

இ-ள். அனகனெடும் அமரில் மூடுகி எதிரெழு - ஸ்ரீராம பிரானெடும் போரில் முடிகியெதிர வெழுகின்ற, கனகவரை பொருவு கடியபரி இரதம் - மேருகிரியை யொப்பாகின்ற வேகத்தையுடைய குதிரைபூண்டதேர்கள், தினகரனேயனேய - (ஒவியால்) குரியனே யொத்தனவாய், திசைகளோடு மன் அகம்சனி இலகு - திக்குகளோடு கிலெபெற்ற இடமுடைய சனிமண்டலத்திலும் விளங்குகின்ற, கொடிகள்-கொடிகளோயுடையனவாய், வயிரம் உள்ள அனுக - கோவமுள்ளனவாய்வர. எ-று. (கசுக)

உருச. பாறுபடுகிறகழுமுபகழிபட
நீறுபடுமிரதகரையீடறவிர
வேறுபட்டர்படரவிசுடர்வலேய
மாறுபடவுலகின்மலேகளளறுபட. (சசுஉ)

இ-ள். பாறுபடுகிறகு கழுமுபகழிபட - பருந்திரண்டாகிய இறகுகளேக்கட்டிய கணேகள்தைக்க, நீறுபடும் இரதகரையின் - சாம்பராகின்ற தேர்வரிசைகளி லிருந்தோரது, உடல் தவிர-உடல்களொழிய, ஏறுபட்டர்படர - சிங்கம்போன்ற வீரர்கள்வர, இரவிசுடர் வலேயம்மாறுபட - சூரியனுகிய ஒளிபொருந்திய வட்டம் வேறுபட, உலகில் மலேகள் அளறுபட - உலகிலுள்ள மலேகள் குகளாகிச் சேறுண்டாக. எ-று. (கசுஉ)

உருஙி. விட்டியழுங்கியவெம்பகையிற்
சுட்டியநிமிர்ந்தசுடர்ச்சுடரும்
கட்டியுமொருங்குகலந்தெழலா
லட்டியுறவெந்தனவேழுலகும். (சகூஉ)

இ-ள். விண்தீய வழுங்கிய வெம்பகையில் - ஆகாயந்தீயும்படி வழுங்கிய வெவ்விய ஆயுதங்களால், சுட்டு ஈயம் திமிர்ந்த சுடர்ச்சுடரும் - சுடப்பட்டருக்கிய ஈயம்போல மிருந்த வெள்ளியுடைய அக்கினியும், கண்தீயும் ஒருங்குகலந்து எழலால்-விழித்தீயுமொன்றுக் கலந்தெழுதலால், உள்தீ உற ஏழ் உலகும்

வெந்தன - உள்ளே நெருப்போங்க மேலேழுலகங்களும் வெந்தன. எ-று. (சகூஉ)

அனுமானேச்சொல்லியது.

உருசு. நின்முருடனின்றுகிமிர்ந்தயலே
சென்முரெதிர்சென்றுகிகைதத்திடலாற்
றன்முதையையோர்வுறுதன்மகனே
கொன்முனவனேயிவனென்றுகொளா. (உoஅ)

இ-ள். தன் தாதையை - தனது தந்தையாகிய பிரமனே, ஓர் உறு - அறிந்து, கொன்முன் - கொன்ற, தன்மகன் - தன்மகனுகிய, அவனே - அவ்வுருத்திரனே, இவன் என்று கொளா - இவனுவனென்றுகொண்டு, (உoஅ)

உருள. ஊனேறுபடைக்கைவீரரெதிரெதிரூர்ந்தோறங்
கூனேறுசிலேயுந்தானுங்குதிக்கின்றகடுப்பின்கொட்பால்
வானேறினர்க்டேருமலேன்றவயவர்தேரும்
தானேறிவந்ததேரேயாக்கினுன்றனியேறன்னுன். (உகடு)

இ-ள். தனி ஏறு அன்னுன் - ஒப்பற்ற சிங்கத்தையொத்த ஸ்ரீராமபிரான், ஊன் ஏறு படைக்கைவீரர் எதிர் எதிர் ஊரும்தோறும் - தசைபொருந்திய படைகளேக் கையிலுடைய வீரர்கள் தனக்கெதிரெதிர்த்து வருந்தோறும், கூன் ஏறு சிலேயும் தானும் குதிக்கின்ற கடுப்பின் கொட்பால் - வளேந்த வில்லும் தானும் குதிக்கின்ற வேகத்தின் சுழற்சியால், வான் ஏறினர்கள் தேரும் மலேன்ற வயவர்தேரும் - இறந்து விண்ணேறிய வீரரது தேர்களேயும் பொருகின்ற வீரரது தேர்களேயும், தான் ஏறிவந்த தேர் ஆக்கினுன் - தானேறிவந்த தேராகச்செய்தான். எ-று. (உகடு)

தானேறிவந்த தேராவது பூமி. அரக்கர் தேர்களேப் புவியோடு வேற்றுமைதெரியாது குகளாக்கினுனென்பது கருத்து.

உருஅ. தீமொய்த்தவனேயசெங்கணரக்கரைமுழுதுஞ்சிந்திப்
பூமொய்த்தகாத்தாகிவிண்ணவர்போற்றநின்முன்
பேய்மொய்த்துநரிகளீண்டிப்பெரும்பிணம்பிறங்கித்தோன்று
மீமத்தட்டமியனின்றகறைமிடற்றிறைவனெத்தான். (உஉசு)

இ-ள். விண்ணவர் பூமொய்த்தகாத்தாகிபோற்ற நின்ரு ன் - தேவர்கள் மலர்களைக்கொண்ட கையுடையராகி துதிக்க நின்ற ஸ்ரீராமபிரான், (உஉகூ)

உருகூ. அண்டமர்க்களமும்வீய்ந்தவரக்கரெவ்வுயிருமாகக்
கொண்டதோருருவந்தன்னுலிறதிகாள்வந்தகூட
மண்டிகொண்மறித்துங்காட்டமன்னுயிரனைத்தும்வாரி
யுண்டவன்ருனேயானதன்னெருமூர்த்தியொத்தான். (உகo)

இ-ள். அமர்க்களம் - யுத்தபூமி, அண்டமும் - அண்டங்களும், வீய்ந்த அரக்கர் எவ்வுயிரும் ஆக-மரித்த இராக்கத ரெல்லாவுயிர்களுமாக,

---

நகவது. வேலேற்றபடலம்.

இராவணன் விபீடணுழ்வான்மேலெறிந்த வேலாயுதத்தை இளையபெருமாள் தானேற்றுக்கொண்டதைக் கூறுகின்றபடலம்.

உகo. தூவியம்பெடையரியினமரிதரச்சூழ்ந்
தூவியம்பெடைசேர்ந்தெனச்சொரிபுடல்சுரிப்ப
மேவியம்படைபடப்படக்குருதியின்வீழ்ந்த
மேவியம்படைக்கடலிடைக்குடரொடுமிதந்த (அ)

இ-ள், அம் - அழகிய, படைக்கடல் இடை - சேனைக்கடலில், மேவி - யானைகள் சேர்ந்து, அம்பு எடை-ஸ்ரீராமபிரான் அம்பையெடுக்கையில், தூவி - சிறகுகளையுடைய, அம் - அழகிய, பெடை இனம் - பெண்வண்டுக்கூட்டமும், அரி இனம்-ஆண்வண்டுக்கூட்டமும், மரிதர-சாக, சூழ்-அவ்யானைகள் தாமணிந்த முகபடாத்தை, தூவி-எறிந்து, சேர்ந்தன - சேர்ந்து, வியம் - பெருமை, மே - பொருந்திய, படைபடப்பட - அவ்வம்புகள் தைக்கத்தைக்க, குருதியில் - உதிரத்தில், சொரிஉடல் சுரிப்ப - இரத்தத்தைச் சொரிகின்ற தமதுடலழுந்த, வீழ்ந்த-விழுந்தனவாய், குடரொடும் மிதந்த - குட்லோடும் மிதந்தன. எ-று. (அ)

உகக. கண்டிறந்தனர்தணவர்தம்முகத்தலர்முறுவல்
கண்டிறந்தனர்மடந்தையருயிரொடுங்கலந்தார்
பண்டிறந்தனபழம்புணர்வகம்புகப்பன்னிப்
பண்டிறந்தனபுலம்பொலிசிலம்பொலிபனிப்ப. (க)

இ-ள். மடந்தையர் - மகளிர், கண்திறந்தனர் கணவர்தம் முகத்து அவர் முறுவல்கண்டு - கண்விழித்தனராகிய தமது கணவருடைய முகத்தில் லவரது முறுவலைப்பார்த்து, பண்டு இறந்தன பழம்புணர்வு அகம்புகப்பன்னி - முன்னனுபவித்துக்கழிந்தனவாகிய பழையபுணர்ச்சிகள் மனத்தில் வரவெடுத்துக்கூறி, பண்திறந்து அன - நிறை நரம்புள்ள வீணையொலித்தாற்போல, புலம்பொலி சிலம்பொலி பனிப்ப - புலம்பொலியுஞ் சிலம்பொலியு மியம்ப, இறந்தனர்-மரித்தனராய், உயிரொடும் கலந்தார் - அக்கணவருயிரோடுஞ் சேர்ந்தார். எ-று. (க)

உகஉ. கடவுண்மாப்படைதொடுக்கின்மற்றவைமுற்றுங்கடக்க
விடவுமாற்றவும்வல்லனேல்யாரையும்வெல்லும்
தடவுமாற்றலிக்கூற்றையுந்தமையனீப்போலச்
சுடவுமாற்றுமெவ்வுலகையுமவனுக்குந்தோலான். (உக)

இ-ள். கடவுள் மாப்படைதொடுக்கின் - பெருமைபொருந்திய தெய்வவாளிகளை யான்தொடுக்கின், அவைமுழுதும்கடக்க-அக்கணைகளை முழுதும் தீக்கவும், விடவும் - அம்புகளைவிடவும், ஆற்றவும் வல்லனேல் - மிகுதியும் வல்லனாயின், யாரையும் வெல்லும் - எல்லாரையும் வெல்லுவான், கூற்றையும் தலைதடவும்-எமனையுந் தலையைத்தடவுவான், தமையனீப்போல் எவ்வுலகையும் சுடவும் ஆற்றும் - தமையனாகிய ஸ்ரீராமபிரானைப்போல எல்லாவுலகங்களையுஞ் சுடவுஞ்செய்வான், அவனுக்கும் தோலான் - அவ்விராமபிரானுக்குந் தோலான். (உக)

உகக. எய்தவாளியுமேவினபடைக்கலம்யாவுஞ்
செய்யமாதவத்தொருவனைச்சிந்தொழிற்றீயோன்
வைதவைவினிலொழிந்தனவீடனன்மாண்டா
னுய்தலில்லையென்றும்பெருமனமுலைந்தார், (உஅ)

இ-ள். சிறுதொழில் தீயோன் வைதவைவினில் ஒழிந்தனபுன்றொழிலுடைய தீயோன் வைதவை வினைப்போலத் தேகத்திற் படாதொழிந்தன, (உஅ)

கூஉ-வது. களங்காண்படலம்.

வானரவீரர்கள் போர்க்களத்தைப்பார்த்ததைக் கூறுகின்றபடலம்.

விபீடணும்வான வானரவீரர்களுக்குக் காட்டிச்சொல்லியது.

உசுச. காகப்பந்தற்செங்களமெங்குஞ்செறிகாலம்
மோகத்தம்பிற்பொன்றினவேறுமுடலொன்றி
மேகச்சங்கந்தொக்கனவேழும்வெளியின்மை
நாகக்குன்றம்நின்றனகாண்மினமரர்காள். (சு)

இ-ள். நமரங்காள் - நம்மவர்களே, செம்களம் எங்கும் காகப்பந்தல் செறிகாலம் - இரத்தத்தாற் சிவந்த யுத்தகளமெங்கும் காகங்களின் பந்தல் நெருங்கிய இக்காலத்தில், மோகத்தம்பில் பொன்றின ஏனும்-மாயையுடைய அம்புகளால் மரித்தனவாயினும், மேகச்சங்கம் ஏழும் தொக்கு அன வெளி இன்மை - மேகக்கூட்டமேழுமொன்று சேர்ந்தாற்போல வெளியில்லாதபடி, உடல் ஒன்றி - உடல்கள்சேர்ந்து, நாகக்குன்றம் நின்றன காண்மின்-யானைகளாகிய மலைகள் நின்றன பார்மின். எ-று.

இதவுமத.

உகடு. பூவாய்வாளிச்செல்லெறிகாலிப்பரிபொன்றக்
கோவாய்வன்பால்வெண்கொடிதிண்பாயொடுகூட
மாவாய்திண்டேர்மண்டுதலானீர்மறிவேலை
நாவாய்மானச்செல்வனகாண்மினமரங்காள். (கு)

இ-ன். நமரங்காள் - நம்மவர்களே, பூவாய் வாளிச்செல் எறிகாலிப் பரிபொன்ற - கூர்மைவாய்ந்த அம்புகளாகிய இடிகள் விழுகின்றபொழுது (பூட்டிய) குதிரைகள் சாக, கோவாய் வன்பால் வெண்கொடி - ஆகாயத்தையளாவிய வலியதன்மையுடைய வெள்ளிய கொடிகளைக்கட்டிய, மாவாய் திண்தேர்மண்டுதலால்-பெருமைவாய்ந்த வலியதேர்கள் (உதிரவெள்ளத்தில்) செல்லுதலால், நீர்மறிவேலை - அலைமடங்குகின்றகடலில், திண் பாயொடு கூட - வலியபாய்மரத்தோடுகூட, நாவாய் மானச் செல்வன காண்மின் - நாவாயைப்போலச் செல்லுகின்றன பார்மின். எ-று. (கு)

இதவுமத.

உகஉ. கடக்காரென்னப்பொங்குகவந்தத்தொடுகைக
டுடக்காநிற்கும்பேயிலயத்தின்றொழில்பூண்ட
மடக்கோவில்லாவார்படிமக்கூத்தமைவிப்பா
ண்டக்கால்காட்டுங்கண்ணுளரொப்பாம்நமரங்காள். (கக)

இ-ள். நமரங்காள் - நம்மவர்களே, கடம்கார் என்னப் பொங்கு கவந்தத்தொடு - உடல் மேகமென்று சொல்லும்படி கறுத்து மிரைப்பாலாடுகின்ற கவந்தங்களோடு, கைகள் துடக்காநிற்கும்பேய் இலயத்தின் தொழில்பூண்ட-கால்களைப்பிடித்து கிற்கின்ற பிசாசுகள் கூத்தின் றொழிலைக்கொண்டன, மடக்கு இல்லா வார்படி மக்கூத்து அமைவிப்பான்-மூடக்கில்லாத நேர்மைபொருந்திய வெறியாட்டாகிய கூத்தைக் கற்பிக்கும்பொருட்டு, கடம் கால்காட்டும் கண்ணுளர் ஒப்பாம் - அப்பிசாசுகள் நடனத்தைக் காலாற் காட்டுகின்ற கூத்தர்களை யொப்பாகும் பாரீர். எ-று. (கக)

மிரைப்பாலாடுகின்ற கவந்தங்களும் பேய்களுங் கூத்தாட்டுவோரையும் ஆடுவோரையு மொப்பாகுமென்பது கருத்து.

இதவுமத.

உகள. மழுவிற்கூர்வாய்வன்பலிடுக்கின்வயவீரர்
குழுவிற்கொண்டார்காடிடக்கப்பொறிகூட்டத்
தழுவிக்கொள்ளக்கள்ளமனப்பேயவைதள்ளி
நழுவிச்செல்லாவியல்பினகாண்மினமரங்காள். (கஉ)

இ-ள். நம்மவர்களே மழுவாயுதத்தைப்போன்ற கூர்மை பொருந்திய வலிய பல்லிடுக்கினையுடைய வெற்றிபொருந்தியமனித்த வீரர்களாகிய, கூட்டமானவர்களுடைய காடிகள் மிரைத்த் துடக்கப்பொறிகளைச் சேர்க்க, கள்ளமனத்தையுடைய பேய்களை அவ்வீரருடல்கள் தழுவிக்கொள்ள அப்பேய்கள் அவ்வுடல்களைத்தள்ளி, நழுவிச்செல்லாத தன்மையுடையனபார்மின். எ-று. (கஉ)

இதவுமத.

உகஎ. நெடும்படைவானஞ்சிலுழுனிச்சேற்றினுதிரநீர்நிறைந்தகாப்பிற்
கடும்பகடுபிடிதோய்ந்தகடும்பரம்பினின்மள்ளர்பாந்தகையிற்
படுங்கமலமலர்நாறமுடிபரித்தபெருங்கிடக்கைபரந்தபண்ணைத்
தடம்பணையினம்பழனந்தழுவினதெனப்பொலியுந்தகையுங்காண்மின். (உடு)

இ-ள். நெடும்படைவாள் நாஞ்சில் உழ-நெடிய ஆயுதமாகிய வாள்கலப்பையைப்போல வுழ, நிணச்சேற்றின் உதிர நீர் நிறைந்த காப்பில்-நிணமாகிய சேற்றினையுடைய இரத்தப்புனல் நிறைந்த காப்பினையுடைய, கடும்பகடு படிதோய்ந்த - வேகமுடைய எருமையேற்றுக்களைப்போன்ற(யானைகள்) கிடந்த,கடும்பரம் பின் இனமள்ளர் பரந்தகையில்-கடுமையான பரம்படிக்கின்ற தொழிலினையுடைய கூட்டமாகிய் வுழவர்கள் பரந்த இருபுறத்திலும்,படும் கமலம் மலர்நாறும் முடிபரந்த பெரும்கிடக்கைபரந்த பண்ணை-முளைத்த தாமரைமலராகிய நாற்றுமுடிகள் பரந்து கிடந்த மிகுந்த மகளிர்கூட்டத்தையுடைய, கடம்பணையின் நறும்பழனம் தழுவினது என - பெரியவயல்களையுடைய நறுவிய மருதநிலத்தை யொத்ததென்று சொல்லும்படி, பொலியும் தகையும் காண்மின் - பொலிகின்ற தகைமையையும் பார்ப்பீர். எ-று. (உஞ)

கூ-வது. தேரேறுபடலம்.

:o:

இராவணனும் ஸ்ரீராமபிரானும் தேரேறியதைக் கூறுகின்றபடலம்.

இராவணன்ஆடையுடுத்தியதைக்கூறியது.

உகக. மறைவிரித்தன்னமாடுறுமானமாக்கவுழன்
சிறைவிரித்தன்னகொய்சகமருங்குறச்சேர்த்தி
முறைவிரித்தெனமுறுக்கியகோசிகமுறையே
பிறைவிரித்தன்னவெள்ளெயிற்றரவும்பிணித்து. (சு)

இ-ள். மறைவிரித்து அன்ன - வேதப்பொருள்களை விரித்தாற்போன்ற, மாடு உறு மானம் ஆக்கவுழன் - பக்கங்களிற் பொருந்திய பெருமையும் வியப்புமுடைய கருடனது, சிறைவிரித்து அன்னகொய்சகம் மருங்கு உறச்சேர்த்தி - சிறகுகளை விரித்தாற்போன்ற கொய்சகத்தை யிடையிற்பொருந்தச் சேர்த்தி, முறைவிரித்து என முறுக்கிய கோசிகம் முறையே - அக் கொய்சகத்தை முறையாக விரித்தாற்போல முறுக்கிவிட்ட பட்

டாடையை முறையாக, பிறைவிரித்து அன்னவெள் எயிற்று அரவமும் பிணித்து - இளஞ்சந்திரனை விரித்துவைத்தாற்போன்றுள்ள வெள்ளிய பற்களையுடைய பாம்பையும் அப்பட்டாடைவிழாமற் கட்டி. எ-று. (சு)

கருடனது திருமேனிவேதங்களானமையின் மறைவிரித்தன்ன என்றார்.

உஎ0. தன்னகவசத்துருவுதங்கவொருதன்னிற்
பின்னகவசத்தபொருளில்லைபெரியோனே
மன்னகவசத்துறவரித்ததெனவென்கோ
வின்னகவசத்தையுமொசீசனெனலாமால். (கூஅ)

இ-ள். எல்லாவற்றையுந் தன்னிடத்திற் கொண்ட ஸ்ரீராமபிரானைக் கவசந் தன்னிடத்திற்கொண்டமையால் தையுமொரு ஈசனென்று சொல்லலாமென்பது. (கூஅ)

இந்திரனதுதேரைச்சொல்லியது.

உஎக. ஆண்டிரெடுநாளுமிடுகிக்களிவையென்று
மீண்டனவுமேலனவும்விட்டுவிரிதட்டின்
பூண்டனதசாகைமணிப்பொருவுகோவை
நீண்டபுனைதாரினதுநின்றலவுகுன்றின். (கூக)

இ-ள். ஆண்டிரெடு * * * நாளும் இடுகிங்கள் இவை என்றும் - நக்ஷத்திரங்களும் ஒளியைச்செய்கின்ற மதியுமாகிய விலையென்று சொல்லும்படியானவற்றையும், ஈண்டனவும் மேலனவும் விட்டு விரிதட்டின் - ஒருங்குசேர்ந்தனவற்றையும் அவற்றிற்கு மேலுள்ளனவற்றையும் கடந்தகன்ற தட்டில், பூண்டு உள்ளது-அணிந்துள்ளதாகிய, தாரகைபொருவு-நக்ஷத்திரங்களையொத்த, மணி - முத்துக்களாலாகிய, கோவை-வரிசையுடைய, நீண்ட புனைதாரினது - நீண்ட அலங்கரித்த மாலையையுடையது, நின்று உலவுகுன்றின்-நிலைபெற்றுச் சஞ்சரிக்கின்ற மலையினையொத்தது. எ - று. (கூக)

மாதலிஸ்ரீராகவபிரானுக்குச்சொல்லியது.

உஎஉ. கண்ணுமனமும்நெடியகாலுமிவைகண்டார
வண்ணமும்விசையாலுணர்வுபிற்படவோடும்
விண்ணுநிலனும்மெனவிசேடமிலதஃதே
யெண்ணுநெடுநீரினுநெருப்பினையுமெந்தாய். (கூச)

இ-ள். எந்தாய் - எந்தாய், கண்ணும் மனமும் நெடியகாலும் இவைகண்டால் - கண்ணு மனமு நெடியகாற்று மென்னுமிவற்றை நோக்கின், உண்ணும் விசையால் உணர்வு பிற்பட ஓடும்-அவற்றை வெல்லுகின்ற விசையோ டறிவுபிற்பட வேகமாயோடும், விண்ணும் நிலனும் என விசேடம் இலது-விண்ணுல கினு மண்ணுலகினும் அவ்வேகமாயோடுமென்று சொல்லுவது விசேடமிலது, அஃது என்னும் நெடுநீரினும் நெருப்பிடையும் - எண்ணுகின்ற நெடிய புனலினு நெருப்பினும் அவ்வாறேயோடும். எ-று. (நசு)

நச-வது. இராவணன்வதைப்படலம்.

உஎந. கண்டசங்கரனன்முகன்கைத்தலம்
விண்டசங்கிடவண்டம்வெடித்திட
வண்டசங்கத்தமர்த்தமார்ப்பெலா
முண்டசங்கையிராவணனுநிலுன். (உஅ)

இ-ள். கண்டசங்கரன் நான்முகன் கைத்தலம்விண்டு அசங்கிட - யுத்தம்பார்த்த சிவனும் பிரமனுங் கூப்பிய கையிலிருந்து நடுங்கிடவும், அண்டம்வெடித்திட - அண்டம் வெடித்திடவும், அண்டம் சங்கத்து அமரர்தம் ஆர்ப்பு எல்லாம் உண்ட சங்கை இராவணன் ஊதினுன்-விண்ணுலகில் தேவர்கூட்டத்தி லெலி யெல்லாவற்றையுந் தொலைத்த சங்கத்தையெடுத்திராவணனூதினுன். எ-று. (உஅ)

உஎச. தானுடைநிரைபுரைகரமைவைதொறுமக்
கோனுடைமலிகர்சிலியிடைகுறையச்
சேனுடைநிகர்சினசிதறினனுணர்வோ
டேனுடையுயிர்தொறுமுறையுமொருவன். (அச)

இ-ள். உணர்வோடு ஊண் உடை உயிர்தொறும் உறை உறும் ஒருவன் - அறிவோடினவுடைய வுயிர்கள்தோறுமுறை கின்ற ஸ்ரீராமபிரான், தான்உடை நிரைபுரைகரம் அவைதொறும்-தானுடைய வரிசையை யொத்த கரங்களாகிய அவைகள் தோறு மிருக்கின்ற, அக்கோள் உடைமலி நிகர்சிலி இடை

குறைய - அவ்வளவுடைய மலையையொத்த வில்கணிடையிலொடிய, சேண்உடை நிகர்சினை சிதறினன்-நீளமுடையதருநியான அம்புகளை யெய்தனன். எ-று. (அச)

உஎடு. தேயநின்றவன்சிலைவலங்காட்டிலுன்றீராப்
பேயையென்பலதுரப்பித்திகிலன்பிழையாம
லாயதன்பெரும்படையொடுமிகளத்தலிய
மாயையின்படைதொடுப்பனென்றிராவணன்மதித்தான். (கடக)

இ-ள். தேயநின்றவன் - தண்டங்தேய்ந்து நிரப் பார்த்து நின்ற இராவணன், சிலைவலம் காட்டிலுன் - இராமன் தனது தநுவலியைக் காட்டிலுனென்று நினைந்து, தீராப்பலபேயைத் துரப்பது என்-நம்மைவிட்டு நீங்காதவாளிகளாகிய பல பிசாசுகளை விடுவதால் யாதுபயன், (கஅக)

உஎக. பாரிடத்தகொண்டெழுந்தனபரம்பெனும்படிய
பூரிடந்துடர்ந்தெழுந்தனமலையனபடியப்
பேரிடம்பெறலரிதினிவிசும்பெனப்பிறந்த
பேரிடங்கரின்கொடும்குழையணிந்தனபேய்கள். (கஉங)

இ-ன். பாரிடம் - பூதங்கள், பார் இடந்துகொண்டு எழுந்தன பரம்பு என்னும்படிய - புவியைப்பிளந்துகொண்டெழுந்த பரம்புகளென்று சொல்லும்படியனவாயும், மலை அனபடிய-மலைகளையொத்தனவென்று சொல்லும்படியனவாயும், துடர்ந்து எழுந்தன-துடர்ந்தெழுந்தன, பேர் இடங்கரின் கொடும்குழை அணிந்தன பேய்கள் - பெரியமுதலைபோன்ற வடிவினையுடைய வளைந்த குண்டலங்களை யணிந்த பேய்கள், பேர் இடம் பெறல் அரிது இனி விசும்பு எனப் பிறந்த - சஞ்சரிக்குமிடம் புவியிற் பெறுதலுக் கில்லையாக் கினி னிச் சஞ்சரிக்குமிட மாகாயமாகு மென்று தோன்றின. எ-று. (கஉங)

உஎஉ. தாமசத்தினிற்பிறந்தவர்தந்தெறுத்தகையர்
தாமசத்தினிற்செல்லுயிர்சதமுகத்தவற்குத்
தாமசத்திரஞ்செய்பவர்பார்தனர்தாளத்
தாமசத்திரஞ்சித்திரம்பொருந்தினர்தயங்க. (கஉஎ)

இ-ள். தாமசத்தினில் பிறந்தவர் - தாமதகுணத்தோடு பிறந்தவர்களாய், அறம்தெறும் தகையர்-அறங்களையழிக்கின்ற

தன்மையுடையவர்களாய், தாம் - தாங்கள், அசத்தினில் செல்
லுதச் சதுமுகத்தவற்கு - பெரும்மார்க்கத்திற் செல்லுதலில்
லாத பிரமனுக்கு, தாமம் - மகத்துவமுடைய, சத்திரம்செய்ப
வர் - யாகத்தைச் செய்பவர்களாய், பார்த்தனர்-பாவினர்களாய்,
தரளத்தாமசத்திரம் - முத்துமாலையணிந்த கைவேல், தயங்க -
ஒளிர, சித்திரம்பொருந்தினர் - நாலுவகையடைந்தனர். எ-று.

உஎஅ. தாமவிக்குமீதெழுந்தவர்க்கிரட்டியின்றகையர்
தாமவிந்துவின்பிளவன்னதயங்குவாளெயிற்றர்
தாமவிஞ்சையர்சடப்பருந்தகையினர்தரளத்
தாமவிஞ்சையர்துவன்றினர்திசைதொறுந்தருக்கி. (ககஅ)

இ - ள். தாம் அவிந்துமீது எழுந்தவர்க்கு இரட்டியின் தகையர் - முன்னடந்தபோரிற் றுமிறந்து விண்ணிற் சென்றவர்களுக் கிருபங்காகிய பெருமையையுடையவர்களாய், தாமம் இந்துவின்பிளவு அன்னதயங்குவாள் எயிற்றர் - ஒள்பொருந்திய சந்திரனது பிளப்பைப்போல விளங்குகின்ற கூரிய பற்களையுடையவர்களாய், தரளத்தாம விஞ்சையர்சடப்ப அரும்தகையினர் - முத்துமாலைதரித்த வித்தியாதரர்கள் வெல்ல அரிய கவசமுடையவர்களாய், தாம் - தாவுகின்ற, அவிஞ்சையர் - மாயையுடையவர்களாய், தருக்கி - செருக்கி, திசைதொறும் துவன்றினர் - போர்க்களத்தி லெல்லாத்திசைகளிலு நிறைந்தனர், எ - று. (ககஅ)

உஎக. தாமடங்கலுமுடங்குவீயாளியுந்தருவார்
தாமடங்கலுநெடுந்திசையுமெலாந்தகைவார்
தாமடங்கலுங்கடலுமொந்தார்தரும்பகையைத்
தாமடங்கலுங்கொடுஞ்சடர்ப்படையெலாந்தரித்தார். (ககக)

இ-ள். தாமடங்கலும் முடங்கு வீரியும் தருவார் - தாவுகின்ற சிங்கத்தையும் மடங்கிய பிடரிமயிரையுடைய யாளியையு மொப்பவர்களாய், தாம் அடங்கலும் நெடுந்திசை உலகு எல்லாம்தகைவார் - தாங்களெல்லாரும் நெடிய திசைகளுமுலகெல்லாவற்றையும் போரிற்றடுக்க வல்லாராய், தாமடங்கலும் கடலும் ஒத்து ஆர்தரும் பகையை - வலியுடைய வடவைத் தீயையுங் கடலையு மொப்பாகிப் போர்க்களத்தில் நிறைந்

ன்ற பகையை, தாமடங்கலும் கொடும் சுடர்ப்படை எல்லாம் தரித்தார் - வலியுடைய குரலாகிய இடியையுங் கொடிய பிரகாசமுடைய ஆயுதங்களெல்லாவற்றையுந் தாங்கினர். எ-று. (ககக)

மாதலிஸ்ரீராகவபிரானுக்குச்சொல்லியது.

உஉ0. வீக்குவாயயில்வெள்ளெயிற்றரவின்வெவ்விடத்தை
மாய்க்குமாகெடுமந்திரந்தந்ததோர்வலியி
னேய்க்குநோய்தருவினைக்குகின்பெரும்பெயர்கொடியி
னீக்குவாயுனைநினைக்குவார்பிறப்பெனநீங்கும். (கஉஉ)

இ - ள். வீக்குவாய் அயில்வெள் எயிற்று அரவின் வெவ்விடத்தை - கவ்வுகின்றவாயில் கூர்மைபொருந்திய வெள்ளியபற்களையுடையபாம்பினது வெவ்விய நஞ்சை, மாய்க்குமாகெடுமந்திரம் தந்தது ஓர்வலியின் - மாய்க்கும் விதத்தை நெடியமந்திரந் தந்ததாகிய ஒப்பற்றவ்லியா லவ்விடமழிந்தாற்போலவும், நின்பெரும் பெயர் கொடியின்-தினது பெருமைபொருந்தியதிருநாமத்தை யோதின், நோய்க்கும் நோய்தருவினைக்கும் - பிணியையு மப்பிணியைத்தருகின்ற தீவினையையும், நீக்குவாய் உன்னை நினைக்குவார் பிறப்பு என்ன நீங்கும் - போக்குவராயாகிய உன்னைத் தியானிப்பாரது பிறப்பைப்போலவும் அம்மாயநீங்கும். எ - று. (கஉஉ)

உஉச. அறத்தலாற்றறஞானமாக்கடுங்கணைபுடர
வுறத்தலாறுசெல்லாதநல்லறிவுவந்தணுகப்
பிறத்தலாற்றறம்பேதைமைபிணிப்புறத்தம்மை
மறத்தலாற்றத்மாயையின்மாய்ந்ததமாயம். (கஉச)

இ - ள். பிறத்தல் ஆற்றறும் பேதைமை பிணிப்புற-பிறத்தலைச்செய்கின்ற பேதைமையாகிய அஞ்ஞானம் பற்ற, அறத்து அல்லாது செல்லாத நல் அறிவுவந்து அணுக - அறத்தினெறியல்லாதுவேறுநெறியிற் செல்லாத நல்லறிவாகிய ஞானம் வரவும், தம்மைமறத்தல் தந்தமாயையின் - தம்மை மறத்தலைச் செய்த மாயையினைப்போல, துறத்தல் ஆற்றறும் ஞானமாகடும் கணைதுடர - நீக்குதலைச் செய்கின்ற ஞானமாகிய பெருமைபொருந்திய வேகமுடைய வாளி துடர, மாயம்மாய்ந்தது - இராவணன்செய்த மாயம் வீய்ந்தது. எ - று. (கஉச)

உஅஉ. நீலங்கொண்டார்கண்டனுமேம்பட்டையோனு
மூலங்கொண்டார்கண்டசாரிமுடிவிப்பான்
காலங்கொண்டார்கண்டனமுன்னேகழிலிப்பான்
சூலங்கொண்டானண்டரையெல்லாந்தொழில்கொண்டான். ()

இ-ள். மூலம்கொண்டார் - தலைமைபெற்றவர்களாகிய, நீலம்கொண்டு ஆர்கண்டனும் மேம்பட்டையோனும்- கருமை கொண்டுநிறைந்த கண்டமுடையசிவனுஞ் சக்கிராயுதமுடைய நெடியோனும், கண்டகர் ஆவிமுடிவிப்பான்-அரக்கராகிய கண்டகரதுயிரை முடிவிக்கும்பொருட்டு, காலம்கொண்டார்-இக்காலத்தைக் கொண்டாராயினர், அண்டரை எல்லாம் தொழில் கொண்டான்-தேவர்களெல்லாரையுந் தொழில்கொண்ட இராவணன், முன்னேகண்டனகழிவிப்பான் - போர்க்களத்தில் தான் முன்னே பார்த்தசேனையை யழிவிக்கும்பொருட்டு, சூலம்கொண்டான் - சூலத்தைக்கைக்கொண்டான். எ-று. (கஉஏ)

உஅஊ. கண்டாகுலமுற்றுயிரமார்க்கின்றதுகண்ணிற்
கண்டாகுலமுற்றும்பர்பதைக்கின்றதுகண்ணிற்
கண்டார்குலமுற்றுஞ்சுடுமென்றக்கழல்வெய்யோன்
கண்டாவுதன்முன்செல்லவிசைத்துள்ளதுகண்டான். (கஉஐ)

இ-ள்: ஆயிரம் கண்டாகுலம் உற்று ஆர்க்கின்றது - ஆயிரஞ் சிறந்த மணிகள்கட்டி யொலிப்பதாய், உம்பர்கண்டு ஆகுலம் உற்றுபதைக்கின்றது - தேவர்கள் பார்த்துத் துன்பமடைந்து பதைக்கச்செய்வதாய், அக்கழல் வெய்யோன் - வீரக்கழலை யணிந்த அவ்விராவணன், கண்ணில்கண்டார் குலம் முற்றும் சுடும் என்று - கண்ணாற்பார்த்தவரது குலமுழுதையுஞ் சுடுமென்று கருதி, கண்தாவுதல் முன்செல்ல விசைத்துள்ளது - கண் பார்ப்பதற்கு முன் செல்லும்படி விசைத்துள்ளதாய், கண்டான்- அச்சூலம்வர ஸ்ரீராமபிரான் பார்த்தான். எ-று. (கஉசு)

உஅச. சங்காரத்தார்கண்டையொலிப்பத்தழல்சிந்தப்
பொங்காரத்தான்மார்பெதிரோடிப்புகலோடும்
வெங்காரத்தான்முற்றமுனிந்தான்வெகுளிப்பே
ருங்காரத்தாலுக்கதபன்னூறதிராஇ. (கஉஎ)

இ-ள். சங்காரத்து ஆர்கண்டை ஒலிப்ப - கொலைத்தொழிலைப்பொருந்திய மணிகளொலிக்க, தழல் சிந்தப்பொங்கு ஆரத்

தான் - அக்கினிபோலச் சோதிதெற விளங்குகின்ற இரத்தினரத்தையுடைய ஸ்ரீராமபிரானது, மார்பு எதிர்ஓடிப்புகலோடும்- அச்சூலம் மார்பெதிரோடிப் புகுதலோடும், வெங்காரத்தான் முற்றும் முனிந்தான் - வெவ்வியகோவமுடைய அவ்விராமபிரான் முற்றுங் கோவித்து, வெகுளிப்பேர் உங்காரத்தால்-செற்ற கோவமுடைய பெரியவுங்காரத்தால், பல் நூறு உதிர் ஆகி உக்கது - பலநூறு உதிர்களாகிச் சிதறிற்று. எ - று. (கஉஉ)

உஅடு. வென்றேனென்றேயுள்ளம்வியந்தான்விடுசூலம்
பொன்றுனென்னிற்போகலதென்னும்பொருள்கொண்டா
னென்றுமுங்கார்த்திடையுக்கோதெல்காணு
நின்றுனக்காள்வீடணனுர்சொன்னீரவுற்றுன். (கஉஊ)

இ-ள். பொன்றுன் என்னில்-இராமன் சாகானாயின், விடுசூலம்போகலது என்னும் பொருள்கொண்டான் - விட்டசூலம் போகாதென்னும் பொருளேக்கொண்டு, வென்றேன் என்றே உள்ளம் வியந்தான் - வென்றேனென்று மனமுவந்து.எ-று. ()

உஅசு. சிவனேவல்லனனமுகனல்லன்றிருமாலா
மவனேவல்லன்மெய்வரமெல்லாமடுகின்றுன
றவனேவென்னிற்செய்தமுடிக்குந்தானல்ல
னிவனேதானவ்வேதமுதற்காரணனென்றுன். (கஉஎ)

இ-ள். சிவனே அல்லன்-பாதிப்பெண்ணுருமுதலிய குறிகளில்லாமையாற் சிவனுமல்லன், நான்முகன் அல்லன்-நான்குசிரமுதலிய வில்லாமையாற் பிரமனுமல்லன், திருமாலாம் அவனே அல்லன் - சங்குசக்கிரமுதலிய வில்லாமையால் திருமாலாகிய அவனுமல்லன், மெய்வரம் எல்லாம் அடுகின்றுன் - ஆயினும் மெய்யாகப் பெற்ற வரங்களெல்லாவற்றையுமொழிக்கின்றுன். எ-று. (கஉஏ)

உஎள. மாமாத்தார்கையால்வருந்துவாளேயோர்
தோமாத்தாலுயிர்தூலக்கத்தூண்டினன்
ரூமாத்தாற்பொரீததகைகொள்வாட்படை
காமாத்தாற்சிவனகரத்துவாள்கொண்டான். (கஉஐ)

இ-ள். காமாத்தால் சிவன்கரத்து - தான்பாடிய இசைப்பாட்டால் சிவனது கரத்தினின்று, தாம் அரத்தால் பொராத

தகைகொள்-தாவுகின்ற அரக்தா லாவப்படாத பெருமைகொ
ண்ட, வாட்படைகொண்டான் - வாளாயுதத்தை யுருவிய இரா
வணன், மாமரத்து ஆர்கையால் வருந்துவானை - பெருமைபொ
ருந்திய வில்லாகிய மரத்தைப்பற்றிக் கையால் வருந்துகின்ற
மாதவியினது, உயிர் - உயிரை, ஓர்தோமரத்தால் துலைக்கத்தூ
ண்டினன் - ஒருலக்கையாற் போக்கக்கருதி யதனைவிட்டான்.
எ - று.

(கடுக)

உஅ. மஞ்சரங்கியமார்பினுந்தோளினும்
நஞ்சரங்கியகண்ணினுரவினும்
வஞ்சன்மேனியைவார்கணையட்டிய
பஞ்சரம்மெனலாம்வகைபண்ணினான். (கசுஎ)

இ-ள். மஞ்சு அரங்கிய - ஆபரணங்களையணிந்த, வஞ்சன்-
இராவணனது, மார்பினும் தோளினும் - மார்பினையுந் தோளி
னையும், நஞ்சு அரங்கிய கண்ணினும் நாவினும்-விடம்பொருந்
திய விழியினையு நாவினையும், மேனியை - உடலையும், வார்கணை
அட்டிய பஞ்சரம் எனல் ஆம்வகை பண்ணினான் - நீண்டகணை
களை நிறைத்த கூடென்று சொல்லலாரும் விதஞ்செய்தான்.
எ-று.

(கசுஎ)

உஆக. முக்கோடிவாணருமுயன்றபெருந்தவமுழுதல்வன்முன்ன
ரெக்கோடியாராலுமெவலப்படாதெனக்கொடுத்தவரமுமேந்தற்
கிக்கோடுமுலகனைத்துஞ்செருக்கடக்தபுயவலியுங்கின்றமார்பிற்
புக்கோடியுயிர்பருகிப்புறம்போயிற்றிராகவன்றன்புனிதவாளி. ()

இ-ள். எக்கோடி யாராலும் வெலப்படாய் என-எல்லாத்
திக்கிலுமுள்ள வெல்லாராலும் வெல்லப்படமாட்டாயென்று,
முன்னுள் முதல்வன் - முன்னளிற் பிரமன், கொடுத்தவரமும்-
கொடுத்தவரத்தையும், முக்கோடி வாழ்நாளும் முயன்று உ
டைய பெரும்தவமும் - முக்கோடி வாளுனையும் முயன்று பெற்
றுடைய பெரியதவத்தையும், (ககஎ)

உகஎ. தோடுழுதகறங்கெரியற் றொகையுழுதவிலைவண்டின் சுழியத்தொங்
கற், பாடுழுதபடர்வெரினின்பணியுழுதவணிகிளர்ப்பப்பசைக்கையா
னேச், சேடுழுதெடுத்தமும்பின் குலைதழுவியெழுமேகச்குழுவின்
கோலைச், சாடிழுதகொழும்பிறைவிற்கறைகழன்றதிடந்தனபோ
ற்கிடக்கக்கண்டான். (உஎக)

இ-ள். தோடு உழுதகறும் தெரியல்தொகையுழுத - இதழ்க
ள் நெருங்கிய நறுவியமாலைத்தொகையிற் பரவிய, நிலைவண்டின்
சுழியத்தொங்கல் - கூட்டமாகிய வண்டினையுடைய சிகையில
ணிந்தமாலை, பாடு உழுதபடர் வெரினின் - படுதலைச்செய்த
படர்த்தழுதகின், பணிஉழுத அணிநிகர்ப்ப - தொழிலமைந்த
ஆபரணத்தை யொப்பாக, புனைக்கையானை-பருத்த காமுடைய
திசையானைகளினது, கோடு உழுத நெடும் தழும்பின்குவை
தழுவி - கொம்புகளழுந்திய நெடிய தழும்பின் கூட்டத்தைத்
தழுவி, எழுமேகக்குழுவின் கோலைக்காடு உழுத கொழும்பி
றை - நிருண்டெழுகின்ற மேகக்கூட்டத்தின் வரிசையாகிய கா
ட்டிற்பிறந்த கொழுமையான பிறைகள், கறைகழன்று இடந்த
னபோல் - உட்கறுப்பு நீங்கிக் கிடந்தாற்போல, கிடக்கக்கண்
டான்-அக்கோடுகள்கிடக்க ஸ்ரீராமபிரான் பார்த்தான். எ-று.()

பிடிடைழுந்தான்கூற்று.

உகச. வீராதிவீரற்குவிஞ்சையாளருக்குமேலாமன்னன்
போராடுற்றாலோபிறைகூடுமொருவன்றன்புரம்பெற்றாலோ
வாராவுன்னுயிரையஞ்சாதேசொண்டகன்றாதெலாகிற்க
மாராவல்வியாட்டகத்தவிர்த்தாரேகுவிர்ந்தானேமதியமென்பான்.()

இ-ள். ஆர்அண்ணல் உன்உயிரை அஞ்சாது கொண்டு அக
ன்றார் - அண்ணல் ஆருனதுயிரையஞ்சாமற் கொண்டுபோனார்,

கூ-வது. மீட்சிப்படலம்.

:0:

ஸ்ரீராமபிரான் இராவணனைக்கொன்று பிராட்டியோடு திருவயோத்திக்குமீண்டதையுணர்த்துகின்றபடலம்.

பிரமன்தந்தி.

உகஉ. பகுதியென்றுளதியாதினும்பழையதுபயக்த
விகுதியால்வந்தவினைவுமற்றதற்குமேவின்ற
புகுதியாவர்க்குமரியவப்புருடனும்நீயும்
மிந்தியுன்பெருமாயையினுலவந்தவீக்கம். (கஅ0)

இ-ள். பகுதியென்று உளது இயாதினும் பழையது-மூலப்
பிரகிருதியென்று சொல்லப்பட்டதாகிய எதனினும் பழமையா

னது, பயந்த விருதியால் வந்த விளைவு - அம்மூலப்பிரகிருதி தந்த விகாரத்தாலுண்டாகிய சகமுதலாகிய விளைவுகளாம், அதற்குமேல் நின்ற - அவ்விருதிக்குமேனின்ற, புகு-முழுகின்ற, நீ-ஞானமுடைய, யாவர்க்கும் அரிய அப்புருடனும் நீ - எல்லார்க்கு மறிதற்கரிய அந்தப் பரமபுருடனும் நீ, இம்மிருதி உன் பெருமாயையினால் வந்தவிக்கம் - இவ்விளைவு உனது பெரியமாயையினால் வந்த விளைவாம். எ - று. (கஉ0)

பிரமன் துதி.

உகஉ. எனக்குமெண்வகையொருவற்குமிமையவர்க்கிறைவன்
றனக்கும்பல்பெருமுனிவர்க்குமுயிருடன்றழீஇய
வனைத்தினிற்கும்நீயேபாமென்பதையறிந்தார்
விளைத்தவகுடைவீட்டருந்தலைநின்றுமீள்வார். (கஉ2)

இ-ள். விளைத்தவுக்கு உடைவீட்டு அரும்தலை நின்று மீள்வார் - இருவினைத்து வக்குடைய விடுதலரிதாகிய விலங்கினின்றும் நீங்குவார். (கஉ2)

உகஎ. இடையுவாவினிற்சுவேலம்வக்திறத்தெயிலிலங்கைப்
புடையவாவுறச்சேனையவனிப்புடைப்போக்கிப்
படையையீர்வுறுமரக்கர்குலமுற்றும்படித்துக்
கடையுவாவிவிபீடிராவணன்றனையுங்கட்டு. (கஉஅ)

இ-ள். பெளர்ணமியில் சுவேலாசலஞ்சேர்ந்து இலங்கையைச் சூழ்ந்து அரக்கர்குலத்தை முழுதுமடித்து அமாவாசையிலிராவணனையுங் கொன்று, (கஉஅ)

உகஏ. வஞ்சில்லியிவ்வண்டத்தினெனும்படிமடித்த
கஞ்சாண்மலர்க்கையினுயன்னைசொற்காரு
மஞ்சொடஞ்சுநாலொன்றெனுமாண்டுபோய்முடித்த
பஞ்சமிப்பெயர்படைத்தளதிதிபின்றப்யர்த்த. (கஉக)

இ-ள். அன்னைசொற்கு ஆறும் - தாயாகிய கைகேசிசொல்லுக்களவாகிய, (கஉக)

உகஐ. அண்டமேபோன்றதையன்புட்பகமண்டத்தம்ப
ரெண்டருங்குணங்களின்றிமுதலிடையிறின்றுகிப்
பண்டைநான்மறைக்குமெட்டாப்பரஞ்சுடர்பொலிவதேபோற்
புண்டரிக்கண்வென்றிப்புரவலன்பொலிந்தான்மன்னோ. (சஉக)

இ-ள். எண்டரும் குணங்கள் இன்றி - எண்ணத்தக்க தியகுணங்களில்லாமல், (கஉக)

ஸ்ரீராகவபிரான்பிராட்டிக்குச்சொல்லியது.

உகஎ. சிரத்துவாசவண்டலம்பிடுதெரிவைகேள்திசீ
டரத்துவாசவர்வேள்வியர்தண்டகமதுதான்
வரத்துவாசவன்வணங்குறுசித்திரகூடம்
பரத்துவாசவனுறைவிடமிதுவெனப்பகர்ந்தான். (கஎக)

இ-ள். சிரத்து வாசவண்டு அலம்பிடு தெரிவைகேள் - சிரசில் மண்பொருந்திய வண்டுகள் தேனுண்டொலிக்கின்ற பெண்ணைகேள், இது நீள்தரத்து உவாசவர் வேள்வியர் தண்டகம் - இவ்விடம் மிகுந்த வலியுடைய உபாசனை செய்பவர்களும் யாகங்களைச் செய்பவர்களும் வசிக்கின்ற தண்டகவனமாம், அது வரத்துவாசவன் வணங்குறு சித்திரகூடம் - அது சிறப்புடைய இந்திரன் வணங்குகின்ற சித்திரகூடமாம், இது - இவ்விடம், பரத்துவாசவன் உறை இடம் எனப்பகர்ந்தான் - பரத்துவாசமுனிவன் வதிகின்றவிடமெனச்சொன்னன். எ-று. (கஎக)

இதுவென்று மதுவென்றும் பின்பிதுவென்றுஞ் சுட்டிய தென்னை யெனினிதுவென்று சுட்டியதைக் கூறியது வென்று சுட்டியதைக் கூறுங்காலை விமானமவ்விடத்தைக்கடந்து பரத்துவாசவனுறை விடம்போனமை பற்றியென்க.

உகஅ. எட்பகத்தினையளவையுங்கருணையோடிசைந்த
நட்பகத்திலாவரக்கரைநறுக்கிமாமேரு
விட்பகத்தறைகோளரியெனப்பொலிவீரன்
புட்பகத்தினோடுதிகெனநினைந்தனன்புலியில். (சஅஉ)

இ-ள். எண்பகத்தினை அளவையும் கருணையோடு இசைந்த-(அருளுடையோரது) மனங்குலையத்தினையளவுங் கருணையோடு பொருந்திய, நட்பு அகத்து இல்லா அரக்கரை நறுக்கி - அன்பு மனத்திலில்லாத இராவணன் முதலிய அரக்கர்களைத்துண்டஞ் செய்து, மாமேரு விட்பகத்து உறைகோளரியெனப் பொலிவீரன்-பெருமைபொருந்திய மேருமலையினது குகையினிடத்தில் வதிகின்றவலியமைந்த சிங்கம்போல விளங்குகின்ற இரகுநா

தன்; புட்பகத்தினைப் புவியில்பதிகென் நினைந்தனன் - புட்பக விமானத்தைப் புவியிலிறங்குக வென்று திருவுள்ளங்கொண்டான். எ - று. (கஅஉ)

கூசு-வது. திருவபிடேகப்படலம்.

:o:

உகசு. அரியணையனுமன்முங்கவங்கதனுடைவாளேந்தப்
பரதன்வெண்குடைகவிக்கவிருவருஞ்சவரிவீச
விரைசெறிகுழலியோங்குவெண்ணெயூர்ச்சடையன்றங்கள்
மரபுளோர்கொடுக்கவாங்கிவசிட்டனேபுனைந்தான்மௌலி. (கூஎ)

இ-ள். விரைசெறி குழலியோங்க - வாசம் நெருங்கிய அளகத்தையுடைய சானகிபிராட்டியினங்க, (கூஎ)

கூ00. வெள்ளியும்பொன்னுமென்போர்விதிமுறைமெய்யிற்கொண்ட
வெள்ளியநாளினல்லவோரையினுலகமூன்றுந்
தள்ளினர்குளிப்பமௌலிசூடினுன்கடலின்வந்த
தெள்ளியதிருவுந்தெய்வப்பூமியுஞ்சேருந்தோளான். (கூஅ)

இ - ள். வெள்ளியும் பொன்னும் என்போர் - சுக்கிரனும் பிரகற்பதியு மென்போர், (கூஅ)

கூ0உ. பன்னெடுங்காலமோற்றத்தன்னுடைப்பண்பிற்கேற்ற
பின்னெடுங்கணவன்றன்னேப்பிரிந்திடைப்பெற்றமுற்றுந்
தன்விடையாசையாரத்தழுவினுளிருகைதாங்கி
நன்னெடும்பூமியென்னுநங்கைதன்கொங்கையோடும். (கூ0)

இ-ள். பல்நெடும் காலம் நோற்று - பலநீண்ட காலங்கள் தவஞ்செய்து, பின் - பின்பு, தன்னுடைப் பண்பிற்கு ஏற்றதன்னுடைய பொறுமையாகிய குணத்திற்கேற்ற, (கூ0)

கூஎ - வது. விடைகொடுத்தபடலம்.

சுக்கிரீவன்தொடக்க மாயோர்க்கு விடைகொடுத்தனைக் கூறுகின்றபடலம்.

:o:

கூ0உ. அங்கதமிலாதகொற்றத்தண்ணலுமகிலமெல்லா
மங்கதனென்னுநாமமழகுறத்திருத்துமாபோ
லங்கதங்கன்னற்றேரோடுக்கடன்கொடுத்ததேயீக்தான்
அங்கதன்பெருமைமண்மேலாரறிந்தறையகிற்பார். (கஅ)

இ-ள். அங்கதம் இல்லாத கொற்றத்து அண்ணலும்-வசையில்லாத வெற்றியையுடைய ஸ்ரீராகவபிரானும், அகிலம் எல்லாம் - பூமியிலெங்கும், அங்கதன் என்னும் நாமம் அழகுறத் திருத்துமாபோல் - அங்கதனென்னும் பெயர் காரணக்குறியென அழகுபெற அப்பெயரையே திருத்தும் விதம்போல, அவன் - பிசான், கன்னல் தேரோளாற்கு கொடுத்த - இக்குவாகுமகாராசனுக்குக கொடுத்த, அங்கதம் தனை - தோளணியை, ஈந்தான் - அங்கதனுக்குக்கொடுத்தான், அங்கதன் பெருமை மண்மேல் ஆர் அறிந்து, அறையகிற்பார் - அங்கதனது பெருமையைப் புவியில் யாரறிந்து சொல்லுவார். எ-று. (கஅ)

அங்கு அதன்பெருமை - அவ்விடத்தி லத்தோளணியின் மகிமையையெனினுமாம்.

கூ0ங. பதவலிச்சதங்கைப்பைந்தார்ப்பாய்பரிபஞ்சினத்தின்கோட்டு
மதவலிச்சயிலம்பொற்பூண்மாமணிக்கோவைமுத்து
முதலிறிகவவண்றியில்லனவுள்ளவெல்லாஞ்
சதவலிதனக்குத்தந்தான்சதமுகத்தவனேத்தந்தான். (உடு)

இ-ள். சதமுகத்தவனேத் தந்தான் - பிரமனையின்ற ஆதி பகவனுகிய ஸ்ரீராமபிரான், பதம்வல்லிச்சதங்கை-காலிற்கட்டுகின்ற பூங்கொடியையொத்த சதங்கைகளையும், பைந்தார்-பசிய மாலைகளையு மணிந்த, பாய்பரி பஞ்சினத்தின் கோட்டு மதவலிச்சயிலம்-பாய்கின்ற குதிரைகளையும் பருத்தவலிய கொம்பையும் மதத்தையும் வலியையுமுடைய யானைகளையும், பொன்பூண்மா

மணிக்கோவை முத்தும் - பொன்னுலாகிய ஆபரணங்களையும் பெருமைபொருந்திய இரத்தினமாலைகளையும் முத்துக்களையும், உதவலில் தகைவ அன்றி இல்லன உள்ள எல்லாம் - கொடுத்தலிற் றகைவனவன்றி யில்லனவாகிய வுள்ள வெல்லாவற்றையும், சதவலி தனக்குத்தந்தான் - சதவலியென்பவனுக்குக் கொடுத்தான். எ-று. (உடு)

கூஅச. பேசரிதொருவர்க்கேயும்பெருவிலையிதனுக்கேதக்
கோசரியிலதென்றெண்ணுமொளிமணிப்பூணுந்தூசு
மூசரிக்குவமைமும்மைமும்மதக்களிறுமாவுங்
கேசரிதனக்குமீய்ந்தான்கிளர்மணிமுழுவுத்தோளான். (உசு)

இ - ள். கிளர்மணிமுழவுத்தோளான் - விளங்குகின்ற அழகுடைய முழவையொத்த தோளுடைய ஸ்ரீராகவபிரான், இதனுக்கு பெருவிலை ஒருவர்க்கேயும் பேசு அரிது - இதனதுமிக்க விலையை யொருவராலுஞ் சொல்லுதலுக்கரிது, ஈதுக்குசரி இலது என்று எண்ணும் - இதனுக்கொன்று மொப்பிலதென்று மதிக்கின்ற, ஒளிமணிப்பூணும் தூசும் - விளங்குகின்ற மணிப்பூணுகளையும் ஆடைகளையும், மூசரிக்கு உவமை மும்மை மும்மதக்களிறும் - மொய்க்கின்ற அக்கினிக்குச்சினத்தால் மூன்றுமடங்கொப்பமைந்த மூன்றுமதங்களையுடைய யானைகளையும், மாவும் - குதிரைகளையும், கேசரிதனக்கும் ஈய்ந்தான் - கேசரிக்குங் கொடுத்தான். எ - று. (உசு)

கூஅகூ. அறுமலையாலிசேயைச்சாம்பனையருக்கன்றத்த
கனைகழற்காலிஞானக்கருனையங்கடவுணேக்கி
நினைவதற்கரிதும்மைப்பிரிவென்றவீர்வைப்பு
மெனதுகாவற்கின்றெவ்னேவலினேகுமென்றான். (கூஎ)

கூஅசு. இலங்கைவேந்தனுக்குமிவ்வாறினியனையாவுங்கூறி
யலங்கல்வேண்மதகையண்ணல்விடைகொடுத்தருளலோடு
நலங்கொள்பேருணர்வின்மிக்கோர்நலனுறநெஞ்சர்பின்னர்
கலங்கலரேயசெய்தல்கடனெனக்கருதிச்சூழ்ந்தார். (கூஅ)

கூஅஎ. பாதனேயினையகோவைவச்சத்தருக்கனனேப்பண்டை
விரதமாதவனேத்தாயர்மூவரைமிதிலைப்பொன்னே
வாதனேவலங்கொண்டேத்திவணங்கினர்விடையுங்கொண்டே
சாதமாதெறியும்வல்லோர்தத்தமபதியைச்சார்ந்தார். (கூசு)

கூஅஅ. குகனேத்தம்பதியினுய்த்துக்குன்றினைவலஞ்செய்தேரோன்
மகனேத்தன்புரத்தில்விட்டுவாளெயிற்றரக்கர்சூழக்
கனகத்தின்மிசையேயெய்திக்கனைகடலிலங்கைபுக்கா
னகலுற்றகாதலண்ணலலங்கல்வீடணன்சென்றன்றே. (கூடு)

கூஅசு. ஐயனுமவரைநீக்கியடிசெறிதனைவரோடும்
வையகமுழுதுஞ்செங்கோன்மனுநெறிமுறையிற்செல்லச்
செய்யமாமகளுமற்றைச்செகதலமகளுமற்று
நையுமாறின்றிக்காத்தானுலம்புரைகடந்தே. (கூசு)

கூகஅ. உம்பரோடிம்பர்காறுமுலகமோரேழுமேழு
மெம்பெருமானென்றேத்திமிறைஞ்சினின்றேவல்செய்யத்
தம்பியரோடுத்தானுந்தருமமுந்தாணிக்காத்தா
னம்பரத்தனந்தனீங்கியயோத்திவந்திறுத்தகாலை. (கூஎ)

ஆறுவது - யுத்தகாண்டம்

முற்றிற்று.

ஸ்ரீமத்கம்பராமாயண அருங்கவிவிளக்கம்.

முற்றுப்பெற்றது.

காண்டம் ஆறுக்கு ஆகத்திருவிருத்தம் - கஅகூ.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளேசரணம்.

ஸ்ரீசடகோபயதீந்திரமகாதேசிகர்

பொன்னடிகள்வாழ்க.

ஸ்ரீ

உபுத்தகாண்டம்

செய்யுளகராதி.

செய்யுள்.	பக்கம்.
அங்கதமிலா	கஉடு
அங்கடங்கு	கூஎ
அங்கவெ	கஅடு
அங்கங்க	கூஎ
அசும்பு	உஉ
அசையா	கூடூ
அஞ்சினை	கஅசு
அடக்க	டுசு
அடங்கு	கஅடூ
அடலடை	கூசு
அடியம்	உஎ
அடுத்தகா	கசூ
அண்டத்	சசு
அண்டமே	கஉஉ
அண்டம்	கஅஅ
அத்தன்மை	கஉ
அந்தரம்	ககக
அப்புமா	கஅக
அம்பரங்	கஅடு
அம்பரீ	அக
அம்பின்வா	அசூ
அயிருக்	டூடூ
அயின்ம	அசூ
அரியனை	கஉச
அருணச்	உடூ
அல்லிச்	சூச
அன்னியி	கஉ
அறைந்த	டூக
அனுமனை	கஉசூ
—	
ஆகரா	டூ0
ஆண்டி	ககடூ
ஆமாமெ	டுசூ
ஆழியிற	உக
ஆனேயா	கூடு

செய்யுள்.	பக்கம்.
ஆனேபட்	டூஉ
இச்சிரத்த	ச
இட்டார்	கஉ
இடையுவ	கஉஉ
இத்தன்	சூஉ
இந்நுவ	டூ
இராணியனெ	ககச
இரும்பசி	டூஎ
இலங்கையி	கூச
இலங்கைவே	கஉசூ
இழைத்த	உடு
இளையா	அடூ
இறக்க	டூக
இன்றுதி	அடு
—	
உச்சிரத்	உ0
உத்திரவா	கூஎ
உம்பரோ	கஉஎ
உம்பிக்	சஅ
உயிர்ப்பு	கூடூ
உய்வினை	சூஅ
உரகம்	சூ0
உலகினு	கஅஉ
உள்ளமே	உஅ
உறபகை	டூஉ
உற்றவா	டூச
உற்பத்	டூசூ
உன்னெக்	எக
—	
ஊழிமு	உச
ஊழியி	சக
ஊர்னறு	கஅஎ
—	
எட்பகத்	கஉடூ
எயிறலைத்	டூஅ
எய்தவா	கஅசூ

செய்யுள்.	பக்கம்.
எழுச்சிய	ககூ
எழுவாய்	எ0
எறிந்தா	எஅ
எனக்கு	கஉஉ
எனக்குகா	சூ
என்முகம்	சஉ
என்றின்ன	அ0
என்னு	சசூ
—	
ஏகாபு	டுஉ
ஏழித்	சூக
ஏனேயபி	கூடூ
—	
ஐயனு	கஉஎ
—	
ஒட்டிகா	சஉ
ஒன்றே	க
—	
ஒதரோ	க00
—	
கடக்கா	ககக
கடவுண்	க0சூ
கண்ணுதல்	சூ0
கண்ணும	ககடூ
கண்டசன்	ககசூ
கண்டாகு	ககஅ
கண்டிற	க0க
காகமு	அசூ
காந்து	உ0
கருப்பை	டூஉ
கருமமும்	எ0
கல்லன்றே	சூசு
கள்ளரே	உசு
கற்றங்கி	டூடூ
—	
காகப்	கக0

செய்யுள்.	பக்கம்.
காதங்	சுஅ
காம்புற	கூஅ
காய்ப்	சுஅ
காலங்	நுக
காலனு	ச0
கால்வி	அச
காள	க00
காற்ற	நுள
—	
கிழிபட	உள
—	
குக்கீரத்	கஉள
குடர்கி	நுக
குயிற்றிய	ச உ
குரங்கப	நு
குருதியி	அள
—	
கூதிர்று	கநு
கூந்தல்	கூஉ
கூர்மத்	நுச
—	
கேடகங்	ச0நு
—	
கொண்மு	நுக
—	
கோணுத	கஅ
கோத்த	கூஉ
கோளவா	உக
கோளு	நுச
சோனிற	உக
—	
சங்கம்	நுசு
சங்கார	கஉஅ
—	
சாம்பலை	ச0ச
—	
சிந்தா	நு0
சிந்தையிற்	ஙக
சிரத்தலா	கஉங
சிலரே	ஙஉக
சிலையின்க	கநு
—	
சுடர்ச்	க0க
சுற்றிவா	சு0
சுற்றுண்ட	சநு
—	
சூலம்	நூஅ
—	
செஞ்ச	அஅ
செப்பின்	உக
செயிர்ப்	உநு
செய்வா	நுள
—	
சேயகா	உ
சேணைக்	நுங
—	
சையப்	நு0
—	
சொரிந்	அஅ
சொல்லுமா	சு
சொல்லுவ	சநு
சொல்லொ	எநி
—	
ததியா	நூச
தீருமத்	அஉ
தனனகவ	ஙஙந
தன்போ	நுஉ
தின்றுதை	அநி
தின்னெப்	கந
—	
தாகமே	சுஉ
தாணைக்	ச0ச
தாலயி	நுநி
தாலொத்	நுந
—	
தாமசத்	கசநு
தாமடங்	கசசு
தாமவிர்	கஙசு
தாய்தெரி	உசு
தாணத்	எங
—	
திசையி	நுள
தினகர	ச0சு
—	
தீதன்	நு0
தீமொய்	ச0ள
—	
துரக்கும்	சஉ
துரத்தல்	கஙள
—	
தூணுடை	ஙசச
தூண்டரு	நுநு
தூதாக	அங
தூவியம்	க0அ
—	
தேயகின்	கஙநு
தேவருக்	உ0
தேவாதி	சுஅ
தேவர்செ	கூ
தேர்செ	சஅ
—	
தொடித்	கூ0
—	
தோடுழு	கஉ0
தோரண	நூ0
தோளொடி	நூங
—	
நகுவன	சநு
நல்லியல்	நூசு
நற்பெரு	கூஉ
நன்பா	சுநு
நன்றின	உஉ
—	
நாகமே	சுஉ
நாணத்	ச0ச
நாலாயி	நுநு
நாலொத்	நூநு
—	
நீன்முரு	ச0ள
—	
நீலங்கொ	ஙஙஅ
—	
நுவலரம்	உஎ
—	
நூறிர	நுஅ
—	
நெடும்ப	ஙஙச
நென்னற்	உ
—	

செய்யுள்.	பக்கம்.
நோச்செ	சுக
—	
நோயிடை	சசா
—	
பகுவிலி	ச0
பகுதியென்	கஉக
பகைப்புல	கசு
பசும்ப	நுங
படர்ம	கஅ
படுமரி	கசு
பதவழி	கஉநு
பரதவ	கஉசு
பல்லாயி	அக
பல்லார்ப	கநு
பள்ளிய	கூ
பண்ணுசர்	சுசு
பன்னெடு	கஉச
—	
பாணியி	சுங
பாரிடங்	கஙநு
பார்க்கும்	சு0
பார்ப	அக
பாழிவன்	எ
பாறல	ச0சு
—	
பித்தரு	எ
பிறந்தரா	கசு
பின்னின்	நுசு
—	
புல்லறிந்த	சு
புரத்தான்	அஎ
புன்மகன்	சசு
—	
பூசற்று	உ-அ
பூவருமய	கூ
பூவாய்	கச0
—	
பெருமையு	உநி
—	
பேசரி	கஉசு
போரயி	எக
பேழிக	அச

செய்யுள்.	பக்கம்.
பேருமோ	நு
பேரை	கங
பேழை	சக
—	
பொங்கி	க
பொரிசெ	நுஅ
பொன்னிறு	சா
—	
மகிழ்	க
மஞ்சரங்	கஉ0
மண்டலங்	அ
மயிர்த	நுங
மரவமு	நூ
மருக்கொ	அ
மலிகண்	சக
மலைய	நுசு
மழுவிற்	ககக
மறந்தா	எசு
மறுமைக	உக
மன்றவி	ககஉ
மற்றினி	சக
மற்றும்	சங
மற்றொரு	கநி
மன்னுயி	கள
—	
மாக்கூடி	சங
மாசடை	உஅ
மாண்டா	கo
மாமரத்	ககக
மால்வரை	கo.ங
மாவுமி	சo
மாற்கடு	கள
மாவாளி	கள
மானிட	கச
—	
மிடல்ப	நு
மின்மினி	ககக
மின்னகு	கச
மின்னின்	சo
மின்னும்ப	கநு
மின்னுக்க	கசு
—	
மீளாத	எச
மீனியொ	நுங
மீனுராக	உக
—	
முக்கட்	க
முக்கோ	சஉ0
முடிமே	சுள
முந்தைவா	அ
முரண்புகு	கநி
முரபன்	ங0
முனிவர்	க0
முன்பிறங்	அஅ
—	
மூசெரி	உஉ
—	
மெய்ப்பட	கநி
—	
மோதி	ஙக
—	
வானலா	ஙக
வானுறு	உங
வாரணி	சுசு
—	
வகைப்ப	கங
வகுத்த	கங
வஞ்சரி	கஉஉ
வண்டன	ஙக
வந்தான்	சுஅ
வலிய	ஙங
வல்லாரு	நுஉ
வவ்வில	உங
வழங்கு	க0ங
வள்ளல்கா	சநு
வரந்த	ஙங
—	
வாசங்	அ0
வாட்டனி	க0உ
வாழிய	சுக
வானஞ்சு	சள
வாணுள்	எஉ

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
விகடமு	ரூ0	விளக்குவா	டுடு	வீரரை	ரூஉ
விடமெழு	ஙக	வினைவர்	எஎ	—	
விட்டிய	க0சு	—		வெண்கோ	ஙக
விண்ணிடை	ஙசு	வீக்குவா	ஙஎஎ	வெம்மை	சஎ
வில்லாள	ஙஙு	வீரநாடு	ஙஉங	வெள்ளியு	ஙஉச
விற்றொத்தி	ஙசு	வீரொ	ஙஅ	வென்றே	ஙஙரூ

செய்யுளகராதி முற்றிற்று.